# மதராஸ் புல்லெடின் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

OFFICE OF THE REGISTRAR 16 JAN 1915

சம்புடம் **VI**.] **1914**-ம் ௵ செப்டம்பர்௴ [இலக்கம் **1**.

## பஞ்சு, சணல், சாகுபடி செய்யும் ரயத்துக்களின் கஷ்டங்கள்.

அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ம-அ-அ-ஸ்ரீ, K. நாகேஸ்வர ராவ் பந்துலுகாரு அவர்கள் எழுதியது.

ஓர் சங்கத்தை ரெஜிஸ்டர் செய்யும் விஷயமாய் விசாகப்பட்டணம் ஜில்லா, பிமிலி பட்டணத்திற்கு நான் சமீபத்திற் போயிருந்தேன். அப்பொழுது சுபாவத்தில் நான் அங்குள்ள ஓர் வியாபாரியை அத் துறை முகத்தில் எவ்வளவு வியாபாரம் நடந்துகொண்டு வருவதென விசாரித்தேன். ரெங்கூனிலிருந்து அடிக்கடி கூலிகள் அவ்விடம் இறங்குவதைத் தவிர வேறு இறக்குமதி யாதொன்று மில்லையென்றும், ஆனால் சென்ற வருஷத்தில் சணலிலும் நிலக்கடலையிலும் ஏராளமான ஏற்றுமதி யிருந்ததாகவும் சொன்னான். சென்ற வருஷம் ஐரோப்பிய கம்பெனியார்களின் ஸ்தல ஏஜெண்டுகளால் ரூபாய் லக்ஷம் மதிப்பும், ஒருபாரம் நிறையுள்ள சணல் மூட்டைகள் விலைக்கு வாங்கப்பட்டு, டண்டீ என்னும் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டன.

இப்படி ஐரோப்பிய கம்பெனியார்கள் சௌகரியமாய் வியாபாரஞ் செய்ய, கமிஷன் ஏஜெண்டுக ளிருக்கின்றார்களாவென்று அவனைக் கேட்டேன். புன்சிரிப்புடன் அவன் கமிஷன் வாங்குபவர்க ளிருக்கின்றனரென்றும், மூட்டை யொன்றுக்கு அணா 4 வீதம் கமிஷனென்றும், அவர்கள் பெயரையும் விரித்துரைத்தான். அவ்வியாபாரிகள் சாகுபடி காலங்களில் சணல் பயிர் செய்யும் ரயத்துக்களுக்கு 100-க்கு 12-லிருந்து 18 விகிதம் வட்டிக்குப் பணம் கொடுப்பதாயும், அவ்வுதவிக்குப் பிரதியாக தங்கள் மாசூல்களை அவர்களுக்கே விற்பதாயும் சொன்னான்.

வருஷந்தோறும் இவ்விதம் [illegible] லிருந்துகொண்டு,

## சென்னைக் கூட்டுத்தொழில் [illegible]

ஏழை ரயத்துக்களின் சொத்தை கமிஷன் மூலமாய் எப்படி நஷ்டப்படுத்துகிறார்களென நான் சொல்லப் புகுந்தேன். இதை ஒரு உதாரணமாக யெடுத்துக்கொள்ளலாம். சிறு துறைமுகமாகிய அல்லூரில் [illegible] ஒரு வருஷத்தில் ரூ. 25,000 தாகு மூலமாய் ரயத்துகள் நஷ்டப்பட்டிருக்கிறார்கள். இத்தொகையானது இப்பொழுது அவஸ்தைப்பட்டிருக்கும் ஏழை ரயத்துக்களுக்கு எவ்வளவு பேருதவியா யிருக்குமென்று நான் சொல்லவேண்டியதில்லை. நியாயப்படி இவர்களை யடையவேண்டிய பணமானது, சிறு கடன்கள் கொடுத்துதவுகிறார்களென்ற அற்ப காரணத்தினாலே, வியாபாரிகளைச் சேருகிறது. சணலானது, கடல் மார்க்கத்தை விட்டு ரயில் மார்க்கமாய் ஏராளமாய் ஏற்றுமதியாகின்றது. ஆகையால், கமிஷன் ஏஜெண்டுகள் இங்கு வியாபாரத்தில் பெறும் வருஷ லாபமாகிய மேற்கூறிய தொகையானது மிகவும் குறைவாய் மதிக்கப்பட்டதென்றே சொல்லவேண்டும். ஒரு லக்ஷமென்று சொல்வதும் குறையே.

இத்தேசத்தில் விளைந்து, வியாபாரத்திற்கு வெளியிற்போகும் சரக்குகளுக்கு இப்பொழுது [illegible] கமிஷனிருக்கின்றது. கடைசியில் ஐரோப்பிய கம்பெனியார் இவ்விளைபொருள்களை சேருவதாயிருந்தால், இப்பொழுது அநுபவத்திலிருந்து வரும் கமிஷன் வழக்கம் மிகவும் விபரீதமாய் [illegible]கிறது. பஞ்சு விளைபொருளில், கமிஷன் ஏஜெண்டுகள் [illegible] தற்குத் தகுந்த மார்க்கங்களிருக்கின்றன. எனது நண்பரொருவர், [illegible]தபூர் ஜில்லா தாடிப்பத்திரியில் தனது சகோதரர் பஞ்சு வியாபாரத்தில் ஒரே வருஷத்தில் எல்லா செலவுகள் போக ரூ. 26,000 பெற்றதென்று சொன்னார்.

இப்பொழுது நம் ஐக்கிய முயற்சிக்காரர்கள் உழைப்பதற்கு இடங்கள் எவ்வளவு விசாலித்திருக்கின்றன! சணல், பஞ்சு, இவைகள் சாகுபடி செய்யும் கிராமங்களில் கூட்டு முயற்சிச் சங்கங்களை யேற்படுத்தினால், நிலங்களிலுழைத்து வரும் ஏழைகளது லக்ஷக்கணக்கான ரூபாயை வருஷந்தோறும் காப்பாற்றலாம். சாகுபடி காலங்களில் தேவையான சிறு முதல் கடன்கள் சங்கங்களிலிருந்து பெறலாம்; விளைபொருள்களையும் சங்கங்கள் மூலமாய் விற்றால், கமிஷன் குறையாமல், முழுவிலையையும் வாங்கலாம்.

இதுவரையில் அநுபவித்துவரும் வழக்கங்களிலிருந்து சீர்திருத்தம் செய்ய, தகுந்த போதனை செய்பவர்களும், ஸ்தாபனங்களும் ஏற்படவேண்டும்; ஆனால் ஒருமுறை ரயத்துகளுக்குப் பலன்களை நேருக்கு நேராகக் காண்பித்துவிட்டால், எக்காலத்திலும் அவ்வழிகளினின்று [illegible].

மேற்கூறியவைகள் [illegible] ஐக்கிய முயற்சிக்காரர்களாலும், தேசாபிமானிகளாலும், கவனிக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் [illegible] கமிஷன்கள் [illegible] வண்ணம், கூட்டு [illegible].

161417

161417

## கூட்டு முயற்சிச் சங்கங்களும், மரண அடையச்சீட்டும், லைப்-இன்ஷியூரென்ஸ்,

புத்தூர், மிஸ்டர் M. ஷிவராவ் அவர்கள் எழுதியது.

ஐக்கிய நாணய இயக்கம் இப்பிரதேசங்களில் வெகுநாளாய்ப் பரவிக் கொண்டிருப்பதால், அதின் நோக்கங்களை நாம் தெளிவாயறிந்திருக்கிறோம்! சில முன்னேற்றத்தை யடைந்த நாணயச் சங்கங்கள் வேறு வழிகளிலும் நடவடிக்கைகளை நடத்த ஆரம்பித்திருக்கின்றன. எல்லா மெம்பர்களும் மிகுந்த நன்மைகளடையும்படி இம்முயற்சிகளை ஒரு வழியாய்ச் செலுத்தவேண்டுமென்பது எனது எண்ணம். அதாவது, சங்கங்களில் மரண அடையச்சீட்டு ஸ்கீம் ஒன்று ஏற்படுத்துதல். ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் நோக்கங்களில் முக்கியமானதும், விசேஷமாய் அநுஷ்டிக்கமுடியாததும் சிக்கன அபிவிருத்தியே! இந்நோக்கத்தை முன்னுக்குக் கொண்டுவர அநேக மார்க்கங்கள் சுட்டிச் சொல்லப்பட்டன. அவைகளில் பிராவிடெண்டு டிபாஸிட்டு போடுதல் ஒன்றாகும். ஆனாலும் இவைகள் ஓர் மெம்பரின் குடும்ப நிர்வாகத்திற்கு மிகவும் போதாது. இத்தொகையானது, சங்க மெம்பர் சங்கத்தை விட்டு நீங்கினாலொழிய, தன் அந்திகாலத்திற்கு உதவுகிறதில்லை. ஆதலால் இப்பொழுது வேண்டியது என்னெனின், ஒரு சிறு தொகையைச் செலுத்திவந்தால் அதற்த மெம்பரின் அந்திகாலத்திலாவது, அல்லது முன்னால் இறந்து போனால் அவர் குடும்பத்திற்காவது, உதவும்படி தகுந்த பணத்தொகை கொடுக்க அடையச்சீட்டு ஏற்படுத்துதல். நான் முதலில் சிறு தொகைகளுக்கு, அதாவது ரூ. 50 லிருந்து ரூ. 250 வரையில், இன்ஷியூரென்ஸு (அடையச்சீட்டு) ஏற்படுத்த அபிப்பிராயப்படுகிறேன். அநுபோகமான பிறகு தொகை யெல்லையை அதிகப்படுத்திக்கொள்ளலாம். இப்பொழுது வேலை செய்துவரும் இன்ஷியூரன்ஸு கம்பெனி நடவடிக்கைகளுக்கும் நாம் யோஜனை செய்யும் இக்காரியத்திற்கும் வித்தியாசங்களுண்டு. நோயில்லாத மெம்பர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாய் இன்ஷியூர் செய்துகொள்ள வேண்டும். இப்படிச் செய்வதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. இவ்வேற்பாட்டில், பின்னால் வரும் கெடுதிகளுக்கு முன்ஜாக்கிரதையாயிருப்பதுடன் சங்கத்தினின்று கடன் வாங்கின தொகையானது மெம்பர் இறந்துபோய் அடைபடாமற் போய்விட்டால், இதிலிருந்து ஈடுபண்ணிக் கொள்ளலாம். நபர் ஜாமீன் கொடுப்பவர்கள் விசேஷமாய் மெம்பர்களின் யோக்கிதையை நம்பியிருக்கிறார்கள். மெம்பர்கள் விசேஷமாய் ஆதரவன்னியில் இறந்துபோனால், இந்த ஜாமீன்தாரர்களுக்கு இந்நிதி ஒருவித உதவியாயிருக்கும். இந்த ஸ்கீமினால், நபர் ஜாமீன்கள் தைரியமாய் மெம்பர்களுக்கு உதவிசெய்வார்கள்.

மாணபண்டு ஸ்கீம்களில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—(1) நாம்செலுத்தும் பணத்திற்கு தகுந்த ஜாமின் இருத்தல். (2) கிடைத்துவரும் வட்டிக்கும், முதலில் உத்தேசமாய் மதித்த வட்டிக்குமுள்ள தாரதம்மியம். (3) குறைவாய் மாணம் நேரிடுதல். (4) சிக்கனம்: அவைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாய்க்கூறுகிறேன்.

ரக்ஷணம்:—இது தான் ஸ்கீமில் எல்லாவற்றிலும் முக்கியமானது. சங்கத்தின் க்ஷேமநிதியானது மெம்பர்களின் கிளேம் (Claim) கொடுப்பதற்கு ஜாமீனாயிருக்குமென்று நினைக்கிறேன். ஆனால் க்ஷேமநிதியை இப்படி உபயோகப் படுத்துவது மிகவும் ஆக்ஷேபிக்கத்தக்கது. இவ்விஷயத்தில், ஒருவித அபாயத்திற்குமிடமில்லை. ஏனென்றால் டிபாஸிட்டு ஜாமின்பேரிலாவது, அல்லது ஸ்திரமான பூமி சொத்தின்பேரிலாவது, கடன்கள் விசேஷமாய் கொடுக்கப்படுகின்றன. நபர் ஜாமின் பேரில் கடன்கொடுக்கும் பொழுது தான், க்ஷேமநிதி ஒன்றிருக்கவேண்டுமெனத் தெரிகிறது. அபயப்பத்திரக்காரர்கள் (Policy holders) செலுத்தும் கட்டணங்களின் தொகையின் நிர்பயத்தைப்பற்றி நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. சங்கமே அத்தொகையை உபயோகப்படுத்தி வருதலால், டிபாஸிட்டு களுக்குக் கொடுத்துவரும் வட்டிவிகிதம் இதற்கும் கொடுக்கும். இவ்வின்ஷியூரென்ஸ் வகுப்பானது சங்கத்துடன் ஐக்கியமாயிருந்தபோதிலும், அலாதியான வகுப்புபோல் பஞ்சாயத்து மெம்பர் ஒருவரால் நிர்வகிக்கப்படவேண்டும்.

வட்டி:—போஸ்டாபீஸ் இன்ஷியூரென்ஸ் அட்டவணையின்படி நான் வட்டி 100-க்கு $3\frac{1}{2}$ விகிதம் ஆலோசனை செய்திருக்கிறேன். இந்த வட்டிக்கு எப்பொழுதும் குறைவில்லை. ஏனென்றால், எல்லாச் சங்கங்களும் போடும் தொகைக்கு விசேஷமாய் 100-க்கு 6 வீதத்திற்குக் குறையாமல், வட்டி கொடுத்து வருகின்றன.

இறப்பு:—கவர்ன்மெண்டார், அநேக வருஷகாலம் கணக்கிட்டு சோதனை செய்தபிறகு தான் இறப்பு அட்டவணைகள் தயார் செய்திருக்கிறார்கள். இவைகளை நாம் உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.

சிக்கனம்:—இந்த அபயச் சீட்டு வியாபாரமானது மெம்பர்களுக்குள் ளிருத்தலாலும், விசாரிக்கச் செய்யவேண்டிய நோக்கமில்லாததினாலும் ஏஜெண்டுகளை நியமிக்க வேண்டியதில்லை. வெளி இன்ஷியூரென்ஸ் கம்பெனி கணக்குகளை சோதனை செய்தால், வசூலாகும் கட்டணங்களில் 100-க்கு சுமார் 40 விகிதம் ஏஜெண்டுகளடைகிறார்கள். இச்செலவு நமக்கு இல்லையாதலால், ஏற்படும் கட்டணவிகிதம் மிகவும் குறைவாயிருக்கும். வேறு பிரத்தியோகச் செலவுகளுக்கு இடமில்லை. மெம்பர்களின் பாரம்பரியம் சங்கத்திற்கு நன்றாய்த் தெரிந்திருப்பதால், டாக்டர்களின்



அபிப்பிராயத்துடன் சங்கததின் அநுபோகத்தையும் உபயோகப்படுத்த சௌகரியமுண்டு. கவர்ன்மெண்டார் தங்களுக் கெப்பொழுதுமுள்ள கருணையுடன், அபயச் சீட்டுப் பத்திரத்திற்கு ஸ்டாம்பு தள்ளுபடி செய்வார்களென்பதிற்தடையில்லை. ஆதலால் செலவுகள் இவ்வேற்பாட்டில் மிகவும் குறைந்து விடும்.

விசேஷமாய் நடந்துவரும் இரண்டுவகை இன்ஷியூரென்ஸ்கள்—அதாவது மரணத்திற்குப் பிற்பாடு கொடுப்பதும், குறிப்பிட்ட வருஷங்களுக்கு பிற்பாடாவது அல்லது அதற்குள் மாணமேற்பட்டால் அப்பொழுதாவது கொடுப்பதும்,—இப்பொழுது ஏற்படுத்தலாம். கட்டணங்கள் போஸ்டாபீஸ் இன்ஷியூரென்ஸ் அட்டவணைகளிற் கண்டபடி மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டும்.

---

# தஞ்சாவூர் ஜில்லாவுக்கு ஓர் நில பாங்கி.

தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலுக்காவைச் சேர்ந்த சேங்காலிபுரம், வேம்பனூர், சிறுகளத்தூர் இந்த கிராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஐக்கிய சங்கங்களின் எல்லைக்குள்ளிருக்கும் மிராசுதார்கள் வணக்கமாய் தெரிவித்துக்கொண்டது.

2. கிராம ஐக்கியச்சங்கங்களுக்கு வேண்டிய நாணயம் அச்சங்கங்களில் மெம்பர்களாயுள்ள நிலக்காரர்களின் சொத்தின் பொருமானத்தை முக்கியமாக பொருந்திருக்கின்றன. அந்த பொருமானத்தின் உதவியைக் கொண்டு பயிரிடுபவர்கள் மற்றுமுள்ள வேலைக்காரர்கள், தொழிலாளிகள் வகையரா தங்கள் ஸ்திதியை மேன்மேலும் விர்த்திசெய்யும்படியுள்ள நிலைமையி லிருக்கிறார்கள்.

3. ஒவ்வொரு கிராம ஐக்கிய சங்கத்திலும் வரையிடப்பட்டிருக்கிற நாணயத்தின் எல்லை, தங்கள் அந்தஸ்தைப் பாதுகாக்கப் போதுமானதாகவில்லை. அதன்பொருட்டு கல்யாணம் மற்ற மதவிஷயமான சடங்கு வீடுகட்டுதல் வேண்டும்போது அக்கம்பக்கத்திலுள்ள நிலங்கள் வாங்குதல் தங்கள் ஜாதி மதவழக்கங்களால் கட்டாயமாக ஏற்படும் பெருஞ் செலவு இவைகளுக்கு லேவாதேவிகள் பண்ணுவர்களிடம் போகும்படி நேரிடுகிறது.

4. ஒன்றல்லது இரண்டு சுபிக்ஷமில்லாத காலங்களோடு பெண்கள் கல்யாணம் பிள்ளைகளின் படிப்பு இவைகள் சேர்ந்தால் தங்கள் நிலைமை பலவிதங்களிலும் மாறுதலை அடைகின்றன. முதல் மானேஜ்மெண்டு, புத்திசாலித்தனம் இவைகளுக்கு இருப்பிடமாயுள்ள ஒரு மிராசுதார் நாளாவர்த்தியில் பெருங் கடனாளியாகிவிடுகிறான். அதன் பொருட்டு

தனக்குள்ள ஐவேஜி போராததினால் உண்டாகும் சிரமத்தினால் தன் நிலத்தை சரிவர கவனிக்க சாத்தியமில்லாமல் போய்விடுகிறது. ஆனதுபற்றி வரவர விர்த்தியாகும் அவன் குடும்பத்திற்கு விளையும் மாசூலானது போதாமல் போய்விடுகிறது.

5. தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாரம்பரையும் அந்தஸ்த்தையும் காப்பாற்றும்பொருட்டு அவர்கள் தங்களொத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் திட்டங்களுக்கு குறைந்து செலவிட முடியாதவர்களாக விருக்கிறார்கள். ஒரு குறிப்புள்ள குடும்பத்தின் திட்டத்தை நிர்மாணிப்பதில் யோசிக்க வேண்டிய விஷயம் ஒன்றே யாதெனில் அக்குடும்பத்துக்கு எவ்வளவு முக்கியமாக செலவிடவேண்டியதோ அதைக்காட்டிலும் அதிகமாக அக்குடும்பத்தில் செலவழிய ஏற்படுகிறதா என்பதுதான்.

6. நடு அந்தஸ்திலுள்ள ஜனங்களில் பெரும்பான்மையோர் மிராசுதார்கள் துரைத்தனத்தாரின் கவனிப்புக்கு அவர்கள் மிகவும் பாத்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பழைய கடன்களை தீர்ப்பதற்காகவாது அதிகப்படியாயும் அவசியமாயுமுள்ள செலவுகளுக்கு வேண்டிய தகுந்த பாங்கின் ஒத்தாசைகள் இதுவரையில் அவர்களுக்கு ஏற்படாமலிருக்கின்றன.

7. அடியில் குறிப்பிட்டிருக்கிறபடி ஐந்து அல்லது ஆறுமைல் சுற்றளவுக்குள் இருக்கும் ஐக்கிய சங்கங்களின் எல்லைக்குள் ஒரு பாங்கி ஏற்பட்டால் தங்களுடைய கஷ்டங்கள் நீங்க வழியாயிருப்பதுடன்கூட இக்கிராம ஐக்கிய சங்கங்களுக்கு ஒரு ஆதரவாயுமிருக்கும்.

(1) நிலஜாமீன் அல்லது இதர தகுந்த ஜாமீன்பேரில் பாங்கி கடன் கொடுக்கவேண்டும்.

(2) சர்க்கார் கொடுக்கும் கடன்களைப்போல் 25 அல்லது 30 வருடங்களில் கடன்கள் திருப்பிக் கொடுக்கவேண்டியதா யிருக்கும்.

(3) 100-க்கு வருஷம் 1-க்கு 9 ரூபாய் வீதம் பாங்கில் வட்டி வாங்கவேணும். ஆனால் தவணையில் செலுத்தவேண்டிய தொகைகளை செலுத்துபவர்களுக்கு நூத்துக்கு வருஷம் 1½ வீதம் எதிர்வட்டி கொடுக்கப்படும்.

(a) பின்வரும் காரணங்களுக்காக பாங்கி ஜாமீனையும் ரத்துசெய்து அதற்கு சேரவேண்டிய தொகையையும் வசூலிக்கவேண்டும். குறித்த காலத்திலாவது அதற்கு முந்தியாவது சேரவேண்டிய வட்டியும் 100-க்கு 4 வீதமும் முதலும் செலுத்தாமலிருந்தாலும்,

(b) கடன் வாங்கினவர் அக்கடனை சரியான வழியில் செலவிடாம



லிருந்தாலும் அல்லது வேறு தகுந்த போதுமான காரணங்கள் இருந்தாலும்,

இம்மாதிரியான பாங்கி சரியாகவும் அதிக செலவன்னியில் நடத்தக்கூடும்.

(a) ஐக்கிய சங்கங்களின் எல்லைக்குள் இப்பாங்கி ஏற்படுவதால் ஷெடி சங்கங்களிலிருந்து அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டாரின் அனுமதியின் பேரில் நிர்வாக சபைக்காக தக்க மனிதர்களைத் தெரிந்தெடுக்கலாம்.

(b) கடன் வாங்குகிற ஒவ்வொருவரும் தான் எந்த இடத்தில் வசிக்கிறாரோ அல்லது எந்த இடத்தில் வீடு வாசலிருக்கிறதோ அதைச்சேர்ந்த ஐக்கிய சங்கத்தின் மூலமாய் 1 ரூபாய் முதற்கொண்டு முழுரூபாய்களாய்த்தான் தன் கடனை திருப்பிக்கொடுக்கலாம்.

(c) இந்த பாங்கிவேலையைச் சரிவர பார்க்க சொற்ப சிப்பந்திகள் போதும்.

9. நாளாவர்த்தியில் வேண்டிய டிபாஸிட்டு தொகைகள் இப்பாங்கிக்கு அவசியம் வரக்கூடும்.

(a) இந்த பாங்கிக்கு ஐக்கிய சங்கங்களின் ரிஜிஸ்டாரின் அதிகாரத்துக்கும் மேல் விசாரணையுமிருப்பது பெரிய ஸாதகம்.

(d) சொற்ப விஸ்தீரணத்துக்குள் இந்த பாங்கி பரிசீலனை இருப்பதால் நிர்வாக சபையாருக்கும் டிபாஸிட் கொடுக்கிறவர்களும் கடன் வாங்குபவர்களுடைய அந்தஸ்தையும் அவர்கள் அடமானம் வைக்கும் நிலத்தைப்பற்றிய சகல விஷயங்களையும் தெரியும்படியான நிலைமையில் இருப்பார்கள்.

(c) இந்த பாங்கியில் பணம் போடுவதால் டிபாசிட் செய்கிறவர்களுக்கு பிரைவேட் பாங்கிகளுள்ள கவலைகள் கிடையாது. அந்த பாங்கிகளில் டிபாஸிட் செய்கிறவர்களுக்கு அவைகளின் வரவு சிலவு கணக்கு பணத்தை உபயோகிக்கும் வழிகள் முதலிய தகவல்கள் ஒன்றும் தெரியாது.

(b) அவர்கள் வீட்டில் குறிப்பிட்டகாலத்தில் வட்டிபோய்சேரும் முதலும் திருப்பிக்கொடுக்கப்படும். ஆனால் இஷ்டப்பட்டால் பாங்கியில் மறுபடியும் முதலை டிபாஸிட் செய்பவர்கள் திருப்பிக்கொடுக்கலாம்.

(e) டிபாஸிட் செய்பவர்களுக்கு தங்கள் தொகையை வசூலிப்பதற்காகவும் அதிலும் விசேஷமாக கோர்ட்டுக்குப் போவதாகவேற்படும் உபத்திரவம், சிலவு, தாமதம் இவைகளிராது.

10. இம்மாதிரியான பாங்கி சரியாய் நடத்தப்பட்டால் புத்திசாலியாயும் செட்டுஞ்சீருமாகவுமிருக்கிற நிலக்காரர்கள் நல்லபலனைக் கொடுக்கக்கூடிய கிருஷி செய்வதற்கும் விளையாத காலங்களிலாவது பயிர் சிலவு இல்லாத காலங்களிலாவது விவசாயம் மற்றுமுள்ளதொழில்களில் அமர்ந்திருக்கும் வேலைக்காரர்களுக்கும் அவர்கள் வீடுவாசல்களை விட்டு அன்னிய நாடுகளுக்கு ஓடாமல் இருக்கும்படி செய்யவேண்டிய பிழைப்புக்கு வழிகள் உண்டாக்கும்.

11. போதுமான டிபாசிட்டுகள் அனுகூலமான வட்டிக்குக் கிடைக்கும் பரியந்தம் பாங்கிக்கு பின்வருமாதிரி துகைகள் அகப்படக்கூடும். கடன் வாங்குபவர் பாங்கியினிடம் அடமானம் வைத்திருக்கும் நிலத்தை மறுபடியும் பாங்கிக்காரர்களே சுத்துவட்டத்திலுள்ள சாவகாரிகளிடம் 5, 6, அல்லது மேற்படும் வருஷத்துக்குள் வாபீஸ்செய்வது என்னும் ஷரத்துக்குட்பட்டு அடமானம் வைத்து துகையை வாங்கிக்கொடுக்கலாம். வருஷம் ஒன்றுக்கு 7½-வட்டிக்கு வேண்டிய பணம் சுத்துவட்டத்தில் அகப்படுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆரம்பத்தின் பாங்கியின் சிலவுக்காக கடன் வாங்குபவர்களிடமிருந்து 100 ரூபாய் பந்தக பத்திரத்தின் துகைமேல் அரை ரூபாய் வீதம் வசூல் செய்துக்கொள்ளலாம்.

12. மேலும் அடியில்கண்ட நன்மைகளுக்கு இந்த பாங்கை உபயோகித்துக்கொள்ளலாம். நிலத்தை வாங்கிக்கொடுப்பது விற்றுக்கொடுப்பது மெம்பர்களுக்கு வரவேண்டிய அல்லது கொடுக்கவேண்டிய தொகையை வசூலிப்பது.

13. சொற்பகாலத்தில் திருப்பிக்கொடுக்கக்கூடிய துகைகளுக்கு கிராம ஐக்கியசங்கங்கள் போதுமானது.

14. இந்தஜில்லாவில் லாண்டு இம்புரூமெண்டு ஆக்ட்டின்படி கடன்கள் பெரும்பாலும் கொடுக்கப்படாமையாலும் தங்களுக்கு இந்த பாங்கி மிகவும் அவசியம்.

15. ஆகையால் அவர்கள் மேற்குறிப்பிட்டபடி ஒருபாங்கியை இப்பெட்டிஷனில் கண்ட சங்கங்களின் எல்லைக்குள் ரிஜிஸ்டர் செய்யும்படியாக வணக்கமாய் பிரார்த்திக்கிறார்கள்.

## விதிக்க உத்தேசிக்கப்படும் தணிக்கை வரிகள்.

மதராஸ் புரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனது நிறைவேற்றும்கம்மிட்டியாரால், மதராஸ் கவர்ன்மெண்டார் விதிப்பதாய் உத்தேசஞ்செய்த தணிக்கை வரிகள் விஷயமாய், ஷை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பட்டிருக்கும் விண்ணப்பம் பின்வருமாறு:—



1. ஐக்கிய முயற்சி இயக்கத்தின் அபிவிருத்தியைக் கருதுவோர்கள், கூட்டுத்தொழில் முயற்சிச் சங்கங்களின் ஆக்ட்டின்படி கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கும் சுவதந்தரங்களுக்கும், ஸ்தல அதிகாரிகள் அதை வளர்ப்பதிற் காட்டும் ஊக்கத்திற்கும், நன்றியறிவுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

2. இம்முறையினால் ஏற்படும் கவர்ன்மெண்டாரின் செலவானது வரவர முன்போல் அதிகரித்து வருகிறது. சில யூனியன்கள் தங்களைச் சேர்ந்த சங்கங்களை சோதனைசெய்வதிலுண்டாகும் செலவுகளை தாங்களே வகிக்கின்றன. எங்கள் கம்மிட்டியார், இம்மாதிரி யூனியன்களை இவ்விராஜதானியில் ஏற்படுத்தினால், கவர்ன்மெண்டாரின் செலவுகள் குறையுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. தணிக்கை விஷயத்தில் விவேகமான யோஜனையுடன் இந்தியா கவர்ன்மெண்டார், அந்தந்த மகாணத்திலுள்ள ஐக்கிய முயற்சிச் சங்கங்கள் அந்தந்த ரெஜிஸ்ட்ராரவர்களின் மேல்விஜாரணையின் கீழிருக்கவேண்டுமென்று விளம்பரம் செய்திருக்கிறதாகத் தெரியவருகிறது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கணக்குகளை தணிக்கைகள் செய்துவருவதால், ஜனங்கள் கூட்டு முயற்சிச் சங்கங்களின்மேல் வைத்திருக்கும் நம்பிக்கை அதிகரித்து வருவதென்பதிற் சந்தேகமில்லை. இப்பொழுது விதிக்கப்படும் கட்டணங்களின் மொத்த தொகையானது இன்னும் சில வருஷங்களுக்கு கவர்ன்மெண்டார் செலவுசெய்யும் தொகைக்கு மிகவும் குறைந்த விகிதமாகும். ஆனால் இதுவிஷயத்தில் தனிச்சங்கங்களுக்கு மிகவும் சிரமமாயிருக்கும்.

இப்பொழுது கிராமச் சங்கங்கள் தங்கள் க்ஷேம நிதிகளை வலுப்படுதலில் கவனித்து வருகின்றன. பங்கு தனத்திற்கு வட்டி கொடாமலும், சங்கவேலை செய்பவர்களுக்குத் தகுந்த சம்பளமில்லாமலும், க்ஷேம நிதிகளை ஸ்திரப்படுத்த முயன்று வருகிறார்கள். மேற்கூறிய குறைவுகள் நிவர்த்தியானபிறகு, கவர்ன்மெண்டார் தணிக்கைக் கட்டணங்களைப் பற்றி யோஜனை செய்வது நலம்.

4. இது விஷயமாய் 1912௵ அக்டோபர் மாதத்தில் ஸிம்லாவில் கூடிய ரெஜிஸ்ட்ரார்களின் கான்பரென்ஸானது, தணிக்கை வரிகள் சங்கங்களின் பேரில் விதிக்கத்தகுந்த காலம் இன்னும் வரவில்லையென்று தீர்மானித்தது. 1913௵ கூடிய ரெஜிஸ்ட்ரார்களின் கான்பிரென்ஸும் அவ்விதமே தீர்மானித்ததாகத் தெரியவருகிறது. இந்தியாவில் வேறிடங்களில் இவ்விஷயத்தைப்பற்றி யோஜிப்பதின்முன், மதராஸில் மட்டும் விதிக்க உத்தேசிப்பதற்குத் தகுந்த முகாந்தரங்களில்லை.

5. சங்கங்களுக்கு சுய உதவியைக் கற்பிக்க வேண்டி, இவ்விதக்

கட்டண மேற்படுத்துவது அவசியமானால், யூனியன்களை விரைவாய் ஸ்தாபித்தால் அந்நோக்கம் பலிதமாகுமே யொழிய, வேறுவழியாவில்லை. எவ்விதத்திலும், கவர்ன்மெண்டாரின் சோதனை எப்பொழுது மிருக்கவேண்டும்."

6. ஆகையால் இக்கம்மிடியார் கவர்ன்மெண்டாரின் வரிவிதிக்கும்ஆலோசனையை ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனாலும் கவர்ன்மெண்டார் விதிப்பதாய்த் தீர்மானித்துவிட்டால், பின்கூறும் அம்சங்கள் கவர்ன்மெண்டார் கவனிக்கத் தகுந்தன :—

(1) சங்கங்களை, ஸெண்ட்ரல் பாங்கிகளென்றும், விவசாய சங்கங்களென்றும், நாணயச் சங்கங்களென்றும், விவசாயமில்லாத மற்றச்சங்கங்களென்றும், பிரித்தல் 1912 ௵ த்திய ஆக்ட்டின்படிச்சாரவில்லை. மதராஸ் ரெஜிஸ்ட்ராவர்களின் சமீபித்த ரிபோர்ட்டில், சங்கங்களின் வகுப்பை யாரும் தெளிவாயறியும்படி, பிரித்தெழுதி யிருக்கிறார். ஆனாலும் அது தணிக்கை விதிப்பதற்குத் தகுந்த பிரிவினையில்லை. ஆகஸ்டுமாதம் 11௳ போர்ட்டு ஸேண்டு ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட சங்கப்பிரிவினைகளும் தெளிவாயில்லை ; உதாரணமாக,நாணயச்சங்கங்களல்லாத மற்றவைகளென்றாலென்னவென்று தெரியவில்லை. நிர்வாகம்செய்யும்,கீழச்சேரி உத்திரமல்லூர் யூனியகளை பிரதியேகமாய் இவைகளிலிருந்து விலக்கவேண்டும். நாணைய டிபார்ட்டுமெண்டையுடைய, பிரிவினைச் சங்கமாகிய திருவல்லிக்கேணி அரபன் கோவாப்ரேடிவ் சங்கத்தின் வகுப்பானது குறிப்பிடப்பட் டிருக்கவேண்டும்.

பெரிய காஞ்சீபுரம் நெசவுக்காரர்களின் யூனியனானது, (b) வகுப்பாகிய விவசாயமில்லாச் சங்கங்களையாவது, (d) வகுப்பாகிய நாணயமல்லா மற்றச் சங்கங்களையாவது சேரக்கூடும். அப்படிச் சேருவதில் விதிக்கப்படும் கட்டணங்கள் வித்தியாசப்படுகின்றன. 1912-13வருஷத்தில் அதின் நிகர்லாபம் ரூபா 115; அதின் மொத்த விற்று முதல் ரூபா 9,500. முதலிற் கூறிய வகுப்பிற் சேர்ந்தால், ரூபா 6, தணிக்கக் கட்டணமாகும். ஆனால் அவ்வகுப்பிற்கேற்பட்ட குறைந்த தணிக்கை கட்டணம் ரூ. 15 ஆகும். D வகுப்பிற் சேர்ந்தால், தணிக்கை வரி ரூபா, 95—அதாவது அதின் நிகரலாபத்திற் பெரிய பங்காகும்.

2. நாணயச் சங்கங்க ளல்லாதவைகளுக்கு தணிக்கை வரியின் குறைந்த யெல்லையும் உயர்ந்த யெல்லையும் பிரசுரத்தால் குறிக்கப் பட்டிருக்கின்றன. மற்றவைகளுக்கு குறைந்த அல்லது உயர்ந்த யெல்லை மாத்திரம் குறிக்கப் பட்டிருக்கிறது. இவ்வித வித்தியாசத்திற்குக் காரணம் ஒன்றும் தெரிய வில்லை. ஒவ்வொரு வகுப்பிற்கும் உயர்ந்த எல்லையை ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கப்படுகிறது.



3. யூனியனைச்சேர்ந்த சங்கங்கள் மேல்விசாரணை சோதனை விஷயத்திற்காக,யூனியனுக்கு ஏற்கனவே வரிகொடுப்பதால், தணிக்கை வரியினின்றும் அவைகளை நீக்கவேண்டும். அப்படி நீக்காமற் போனால் சங்கங்கள் யூனியிற் சேருவதில் அவைகளுக்கு இடஞ்சலேயொழிய சாதகமில்லை.

4. க்ஷேம நிதியானது, தொழில் தனத்தில், நான்கில் ஓர் வீதமாகிற வரையில் பொறுப்பு வரையறுக்காச் சங்கங்களுக்கு தணிக்கை வரிகள் போடக் கூடாது.

5. குறிப்பிடப்படும் ஓர் தொகைக்குக் குறைந்து நிகரலாப மடை சங்கங்களுக்கு வரிபோடாம லிருப்பதவசியம். ஆரம்பத்தில் அத்தொகையை ரூ. 100 யென்று எங்கள்கம்மிட்டியார் சுட்டிச்சொல்ல அபிப்பிராயப் படுகிறார்கள்.

---

## மதராஸ் கவர்ன்மெண்டாரின் ஓர் விரும்பத்தக்க புதிய ஏற்பாடு.

ஐக்கிய முயற்சிக்கார ரொருவரால் எழுதப்பட்டது.

மதராஸ் கவர்ன்மெண்டார், கூட்டுமுயற்சிச் சங்கங்கள் கிராம சுகாதாரம், கல்வி முதலியவைகளை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயாசமெடுத்துக்கொள்ளவேண்டி, பிரத்தியேகமாய்க் குறிக்கப்பட்ட சில சுகாதார வேலைகளை நடத்த சில சங்கங்களுக்குப் பணம் கொடுக்கத் தீர்மானித்ததைக் கேட்க யாவரும் சந்தோஷமடைவார்கள். அனந்தபூர், செங்கற்பட்டு, தென்னாற்காடு, குண்டூர், கோதாவரி, மதுரை, நெல்லூர், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் இவ்விஷயத்தை உத்தேசித்து, 15 கூட்டு முயற்சிச் சங்கங்களை தெரிந்தெடுத்து, கிணறுகள், குளங்கள் தோண்டி பழுது பார்ப்பதற்கும், இன்னும் முதலிய சுகாதார வேலைகள். செய்வதற்கும், இவைகளுக்கு ரூ. 7,500 கொடுக்கும்படி ஜில்லா போர்டார்களிடம் ஒப்புவித்திருக்கிறது. 1914 ௵ ஜூன்௴ 29௳ தேதியில், மதராஸ் கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்ட உத்திரவிற் கூறப்படுவதாவது:—இச்சிறுகிராண்டுகளை லோகல்பண்டு கோடின்படியாவது அல்லது வேறு நிலையுள்ள உத்திரவின்படியாவது அநுஷ்டிக்காமல் செலவு செய்யலாம். ஆனால் அந்தந்த தாலூக்கா பிரசிடெண்டுகள் அவ்வேலைகளை நேரில் பரிசோதனைசெய்து, பணம் சரியாக செலவு செய்யப்பட்டதாவென்றும், ஸ்தலங்களிலிருந்து வேறு நன்கொடைகள் இவ்விஷயமாய் கிடைக்கப்பட்டனவா வென்றும், ஐக்கிய முயற்சிச்சங்கங்களின் ரெஜிஸ்டிரார் மூலமாய் கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும். கூட்டு

முயற்சிச் சங்கங்கள் மூலமாய் இன்னும் கிராம சுகாதார சீர்திருத்தங்களைச் செய்தல் இவ் ரிபோர்ட்டுகளைச் சார்ந்திருக்கிறது.

இச் சங்கங்களில் மிக்க நம்பிக்கை வைத்து, கொடுத்த வேலைகளை சரிவர செய்யும்படி இவைகளுக்கு அப்பொழுதுக் கப்பொழுது புத்திமதி புகட்டும் வண்ணம் தாலூக்கா பிரசிடெண்டுகளையும் கூட்டுமுயற்சி இலாகா உத்தியோகஸ்தர்களையும் வேண்டுகிறோம். கௌரவத்திற்கு வேலை செய்து வரும் சங்க ஸ்தாபனர்களும் இவைகள் ஒழுங்காய் வேலை செய்து முடிப்பதைப் பார்ப்பார்களென்பதிற் தடையில்லை. இப்பதினைந்து சங்கங்களின் மெம்பர்கள், இந்த ராஜதானியிலுள்ள எல்லாச்சங்கங்களுக்கும் இனி இவ்வித வேலைகளைக் கொடுக்கும் விஷயம் தங்கள் முயற்சியிலிருப்பதை, தங்கள் ஞாபகத்தில் வைத்து உழைப்பார்களென நம்புகிறோம்.

சங்கங்களின் நிமித்தம் இவ்வளவு சிரத்தைகொண்டு நம்பிக்கை காண்பித்ததற்கு, லோகல் கவர்ன்மெண்டாருக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

---

# கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்தி

## இந்தியாவில்

### போஸ்டாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கிகளும் ஐக்கியநாணயச் சங்கங்களும்.

**1914௵ ஆகஸ்டுமீ 6உல் பிரசுரம் செய்யப்பட்ட G. O. நெ. 2256**

போஸ்டாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கியில், போடப்பட்டிருக்கும் ஐக்கிய நாணயச் சங்கத்தின் டிபாஸிட்டுகளின் விஷயமாய் 1914௵ செப்டெம்பர்மீ 1உமுதல் நோடீஸ்கொடுக்க வேண்டிய தவணைகள் குறைந்து பின்வருமாறாகுமென்று, மதாராஸ் ஸர்க்கில் போஸ்ட்டு ஆபீஸ்களுக்கு உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறது :—

(a) ஜில்லா ஹெட்குவார்ட்டர்களிலும், அல்லது தந்தி ஆபீஸும் சேர்ந்த தாலூக்கா ஹெட்குவார்ட்டர்களிலுமுள்ள போஸ்டாபீஸ்களில் ரூ. 3000-க்கு மேற்படாத தொகைகளுக்கு மூன்று நாள், நோடீஸ் கொடுக்கவேண்டும்.

(b) எல்லாமற்ற போஸ்டாபீஸ்களிலும் ரூ. 3000-க்கு மேற்பட்ட தொகைகளுக்கு 7 நாள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

(c) எல்லா போஸ்டாபீஸ்களில், ரூ. 3000-க்கு மேற்பட்ட தொகைகளுக்கு, 10 நாள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.



# தணிக்கை உத்திரவுகள்.

## மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியின் 1913-14௵த்திய தணிக்கை உத்திரவு.

1914௵ மதாராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின், ஜூன்மீ 30உ போடுமுடிவுபெறும் கணக்குகள், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் மா-ா-ா-ஸ்ரீ P. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை யவர்களால், தணிக்கை செய்யப்பட்டன. 1914௵ ஜூன்மீ 30உயிலுள்ளபடி, (1) வரவு செலவு; (2) லாப நஷ்டம்; (3) ஆஸ்திக் கடன் ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. பாங்கியின் அவ்வருஷத்திய நிகரலாபம் ரூ. 53,413-8-2. பாங்கியின் 17-வது பைலாவின்படி நிகர்லாபத்தில் நான்கில் ஓர்பங்கு அதாவது ரூ. 13,354-10-0 க்ஷேம நிதியைச் சேரவேண்டும். மதாராஸ் பாங்கியில் இத்தொகையைப் போடவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் க்ஷேமநிதியின் மொத்தம் ரூ.5,354-10-0. பாக்கி ரூ.40,063-14-2, பாங்கியானது தீர்மானிக்கும் பிரகாரம், டிவிடென்டாயாவது, போனஸாயாவது, அல்லது வேறு வழியிலாவது பகர்ந்து கொடுக்கப்படும் தொகையாகும்.

3. பாங்கியின் வியாபாரம் சென்ற வருஷத்தைக் காட்டிலும் இவ்வருஷத்தில் ஓங்கியிருக்கிறது. பாங்கியின் டிபாஸிட்டுகளின் தொகை ரூ. 22·16 லக்ஷத்திலிருந்து ரூ. 26·17 லக்ஷத்திற்கும், கிடைத்த வட்டியின் தொகை ரூ. 1·09 லக்ஷத்திலிருந்து, ரூ. 1·23 லக்ஷத்திற்கும், சங்கங்களுக்குக் கொடுத்த கடன் தொகையானது ரூ. 5·67 லக்ஷத்திலிருந்து ரூ. 8·10 லக்ஷத்திற்கும், அதிகரித்தன. சங்கங்கள் திருப்பிக் கொடுக்கும் தொகையானது ரூ. 3·60 லக்ஷத்திலிருந்து ரூ. 4·17 லக்ஷத்திற்கு உயர்ந்தது. சென்ற வருஷக்கடைசியில் சங்கங்களிடமிருந்தும், மெம்பர்களிடமிருந்தும் வசூலாகவேண்டும் தொகை ரூ. 23·81 லக்ஷமிருந்தது; ஆனால் இப்பொழுது ரூ. 27·35 லக்ஷமாயிருக்கிறது. ரெஜிஸ்டாரவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை டைரெக்டர்கள் அமுலுக்கு கொண்டுவந்ததிற்காக சந்தோஷப்படுகிறார்.

4. 1912-13௵க் கடைசியில் வசூலாகாமல் நிலுவையிலிருந்த கடன் தொகை ரூ. 1·89 லக்ஷமாயிருந்தது. ஆனால் 1913-14௵க் கடைசியிலிருக்கும் நிலுவைத்தொகை ரூ. 5·27 லக்ஷம். அபராதவட்டியின் தொகை சென்ற வருஷத்தில் ரூ. 673; ஆனால் இவ்வருஷத்தில் ரூ. 1,034.

ரெஜிஸ்ட்ராரவர்கள் சங்கங்கள் கொடுக்கவேண்டிய நிலுவைக் கடன் தொகை விஷயங்களைப்பற்றி கவனிக்கும்படி, மதாராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியின் நிர்வாக கம்மிட்டியருக்கு அறிவித்திருக்கிறார். சோதனை செய்

யும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சங்கங்களின் பாக்கித் தொகைகளைக் குறைக்க தங்களாலியன்றபட்டும் வேலைசெய்துவருகிறார்கள். ஆனால் பாங்கியானது இவர்களுடன் ஒற்றுமையாய் வேலை செய்யவில்லையென்பது விசனிக்கத்தக்கது. சில ஜில்லாக்களிற்தான் அதிக பாக்கி விழுந்திருக்கிறது. பாங்கியானது சில இன்ஸ்பெக்டர்களை நியமித்து வசூல் செய்வது மிகவும் யுக்தமான காரியம். கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களுக்கு வேறு வேலைக ளதிகமாயிருப்பதால், பாங்கியின் பாக்கிகளை வசூலிக்க அவர்கள் உதவியை எதிர்பார்க்கக்கூடாது. இவ்விஷயம் மிகவும் முக்கியமானதால் பாங்கியானது சீக்கிரத்தில் தலையிட்டு இதை கவனிக்குமென்று நம்பப்படுகிறது.

பாங்கியின் கணக்குகளை தணிக்கை செய்த அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரால், பாங்கியின் நிர்வாக கம்மிட்டியாரின் ஆலோசனைக்கு ஓர் குறிப்பு அனுப்பப்படும்.

## திருச்சிராப்பள்ளி ஜில்லா ஸென்ட்ரல் அர்ப்ன் பாங்கியின் தணிக்கை உத்திரவு.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஸெண்டரல் அர்பன் பாங்கியின் 1914 ஹு ஜூன்மீ 30உ யுடன் முடிவுபெறும் கோவப்ரேடிவ் வருஷத்தியக் கணக்குகள் சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டன. (1) வரவு, செலவு. (2) லாப நஷ்டம். (3) ஆஸ்திக்கடன், ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

அவ்வருஷத்தில் பாங்கியின் நிகர் லாபம் ரூ. 13,333-1-4. அத்தொகை 17-வது பைலாவின்படி பின்வருமாறு பிரிக்கப்படும்:—

| | | |
|---|---|---|
| (1) | க்ஷேமநிதி | ரூ. 3,333—4—4. |
| (2) | காரியதரிசிக்கு வெகுமானம் | ரூ. 1,666-10—2. |
| (3) | டிவிடெண்டு, போனஸ், இவைகளுக்குக் கொடுக்கப்படவேண்டியது. | ரூ. 8,333—2-10. |

பாங்கியானது முன்போல் ஜனங்களால் அபிமானிக்கப்பட்டு வருகிறது. பாங்கியின் காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் Y. நாராயண ராவ் அவர்களின் முயற்சியாலும், பிரசிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ R. K. பிரசன்ன வெங்கடேசராவ் அவர்களின் சிரமத்தாலும், பாங்கியானது அபிவிருத்தியடைந்து வருகிறது. முழுநாள் வேலைசெய்யும் சிப்பந்திகளை நியமித்து வேலைசெய்வார்களென நம்பப்படுகிறது: அப்பொழுது பாங்கியின் உபயோகம் விசாலமாய்ப் பரவுதலுடன், வரும்படியும் அதிகரிக்கும்.

## தஞ்சாவூர் ஜில்லா ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின் தணிக்கை உத்திரவு.

தஞ்சாவூர் ஜில்லா ஸென்ட்ரல் பாங்கியின், 1914 ஹு ஜூன்மீ 30உ யுடன் முடிவுபெற்ற வருஷத்தியக் கணக்குகளை, சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் தணிக்கைசெய்தார். அதற்கு வேண்டிய ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.



2. அவ்வருஷத்தில் பாங்கியின் நிகர் லாபம் ரூ. 1,777—4—3. பைலா 20-யின் பிரகாரம் லாபத்தில் நான்கில் ஓர்பங்கு, அதாவது ரூ.444—5—1, க்ஷேமநிதியைச் சேரவேண்டும். க்ஷேமநிதியிற் சேரவேண்டிய சென்றவருஷத்திய தொகையாகிய ரூ. 84-14—1, இத்துடன் சேர்த்து மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியிற்போட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பொழுது மொத்த க்ஷேமநிதியின் தொகை ரூ. 529—3—2.

3. பாக்கியிருக்கும் நிகர்லாபமாகிய, ரூ. 1,332-15—2, காரியதரிசிக்கு வெகுமானமாகவும், மெம்பர்களுக்கு டிவிடெண்டாகவும் பிரிக்கப்படும்.

4. லேவாதேவிகள் அதிகரித்து வருகின்றன. அவ்வருஷத்தில் 53, சங்கங்கள் மெம்பர்களாய்ச் சேர்ந்தன. பங்கு முதல் ரூ. 9,660 லிருந்து ரூ. 19,360-க்கும், கடன் வாங்கும் தொகையானது ரூ. 28,287 லிருந்து ரூ. 1,54,721-க்கும் அதிகரித்தன. தொழில்தனம் உயர்ந்ததினால், மெம்பராய்ச் சேர்ந்த சங்கங்களுக்குக் கடன்கொடுக்கும் சௌகரியங்களும் அதிகமாயின. வசூல் செய்யப்பட்ட கடன் தொகையும், தவணைகள் தள்ளிக்கொடுக்கப்பட்ட தொகையும் சேர்ந்து ரூ. 18,138. வருஷக்கடைசியிலுள்ள கெடுதவறின தொகையின் மொத்தம் ரூ. 1,399.

5. பாங்கியானது மிகவும் மேன்மையாய் வேலைசெய்து வருகிறது. ஸ்தல டிபாஸிட்டுகள், பாங்கி திருப்தியடையும்படி, வந்து விழவில்லை. பாங்கியின் நடவடிக்கைகளில், நிர்வாக கம்மிட்டியார் எப்பொழுதும்போல் மிகவும் சிரத்தை யெடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

## மதுரை—ராமநாதபுரம் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின் தணிக்கை உத்திரவு.

மதுரை—ராமநாதபுரம் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின், 30—6—1914-டன் முடிவுபெறும் வருஷத்தியக் கணக்குகளை, சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் தணிக்கை செய்தார். இதற்கு வேண்டிய ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. பாங்கியின் அவ்வருஷத்திய நிகர்லாபம் ரூ. 5,803—9—5 அத்தொகை 21-வது பைலாவின்படி பின்வருமாறு பகுக்கப்படவேண்டும்:—

| | | |
|---|---|---|
| (a) | க்ஷேமநிதி | 1,450-14—4. |
| (b) | காரியதரிசிக்கு வெகுமானம் | 725—7—2. |
| (c) | டிவிடெண்டு, போனஸின் தொகை | 3,627—3-11. |

3. சென்ற வருஷம்போல் இவ்வருஷத்திலும் 9 விகிதத்திற்கு மேற்

படாமல் டிவிடெண்டு கொடுக்கும்படி பாங்கியிக்கு நன் சொல் கூறப்படுகிறது. பாங்கியானது மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. சங்கங்களின் மூலமாயல்லாமல், ஸ்தலத்திலிருந்து விழும் டிபாஸிட்டின் தொகை ரூ. 207,007 லிருந்து ரூ. 348,998-க்கு அதிகரித்தது. பாதுகாப்பு நிதிகளும் (Trust Funds) பாங்கியின் டிபாஸிட்டுகளாக வந்து விழுமென்று நம்பப்படுகிறது. அப்பொழுது தொழில்தனம் அதிகமாகி, பாங்கி மிகவும் அபிவிருத்தியடையும். சென்ற வருஷத்தில் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 2·57லக்ஷம். ஆனால் இவ்வருஷத்தில் கொடுத்த தொகை ரூ.3·96 லக்ஷம். வருஷக் கடைசியில் வசூலாகாமலிருந்த கடன் தொகையின் மொத்தம் ரூ. 86,300.

4. காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ K. ராமஸ்வாமி அய்யர் B.A.,B.L. அவர்கள் பாங்கியின் வேலைகளிற் காட்டும் உற்சாகத்தை இங்கு கூறுவதவசியம். நிர்வாக கம்மிட்டியாருள் மிகவும் சிரத்தையுடன் உழைப்பது, ம-ா-ா-ஸ்ரீ C. ஸ்ரீனிவாச ராவ் ஸாகிப் அவர்கள், ம-ா-ா-ஸ்ரீ G. சோமயாஜீ அய்யரவர்கள். காரியதரிசியானவர், பாங்கியுடன் சேர்ந்த சங்கங்களை அடிக்கடி சோதனைசெய்து வருகிறார்.

---

# கோயம்புத்தூரில் கோவாபரேடிவ் சங்கங்கள்.

1914-ம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி சனிக்கிழமைதினம் கோயம்புத்தூர் அர்பன்பாங்க் அண்டு ஸ்டோர்ஸ்லிமிடெட், பிரசிடெண்டாகும் மிஸ்டர். ஸி. வி. விஸ்வநாதய்யர் அவர்களது அக்கிராசனத்தின் கீழ் ஷை சங்க வருஷாந்திர மீட்டிங்கு கூடிற்று. ஜூன் மாதம் 30-ம் தேதியோடு முடிவாகும் அதன் ஒருவருஷ விவகாரங்கள்யாவும் அச்சங்க கௌரவ காரியதரியதரிசியாகும் மிஸ்டர். கெ. ஆர். சுப்பராயஐயர், பி.ஏ.எல்.டி. அவர்களால் வாசித்துக் காண்பிக்கப்பட்டு யாவராலும் அங்கீகரிக்கப்பட்டன. அவ்வருஷ ஆரம்பத்தில் 360, மெம்பர்களும் 79, அஸோஷியேட்களுமிருந்ததாயும், வருஷக்கடைசியில் 353, மெம்பர்களும், 98, அஸோஷியேட்டுகளுமிருந்ததாயும் கூறப்பட்டது. வருஷக் கடைசியிலிருந்த பங்கு மூலதனம் ஏ (A) வகுப்பில் 819 பங்குகளுள்ள ரூபா 1,595இருந்தது. பங்கொன்றுக்கு ரூபா 25 உள்ள பொருப்புப் பங்குகளான (B) வகுப்பில் 214, பங்குகளுமிருந்தன. இதற்கு முந்தியவருஷக் கடைசியில் கையிலிருந்த சரக்கு மதிப்பு ரூபா 11,134-0-7. இவ்வருஷத்தில் ரூபா, 41,130-4-8க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. கையிலிருந்த சரக்கு விற்பனையிலிருந்து சங்கத்திற்குக் கூடுதலான தொகை ரூபா 45,094-12-6. இக்கூடுதலான



தொகை விவசாயகாலேஜிலும், உப்பிலிப் பாளயத்திலுமிருந்த கிளைச் சங்கங்களின் சரக்குவிற்பனையின் நிகரலாபம் ரூபா 2,435-14-30 அடக்கமுள்ளதாகும். கிளைபாங்கியில் வருஷஆரம்பத்தில் டெபாஸிட் தனமாக ரூபா 15,333-0-10 இருந்தது. பின்னர் ரூபா 35,663-15-7 டெபாஸிட் தனம் வந்துசேர்ந்தது. இதேகாலத்தில் வெளியிற் போனதொகை ரூபா 38,392-0-10. இவைபோக பிரஸ்தாப வருஷ ஆரம்பித்தில் கையில் மிருந்த தொகை ரூபா 12,064-15-7. டெபாஸிட் தொகை மூலமாய் நடந்த லேவாதேவி ரூபா 25,000. ரூபா 2,910 க்குள்ளடங்கிய 90, கடன் பாபதுகள் இவ்வருஷ மேற்பட்டன. அவ்வருஷம் நடந்தவிவகாரத்தால் கிடைத்த லாபம் ரூபா 791-8-9. இதில் ரூபா 243-2-0 க்ஷேம நிதிக்குச் சேர்க்கப்பட்டது. ஆகவே யிதுவரையில் க்ஷேம நிதிக்குச் சேர்ந்துள்ள தொகை ரூபா 1,043-2-6. மிகுதியான தொகை ரூபா 548-6-9-ம் சென்ற வருஷம் போனஸ் கொடுக்க உத்தரவாகப்பட்டுக் கொடுபடாமல் நின்றுபோனரூபா 394-2-4-வில் ரூ. 216-7-0-ம் சேர மொத்தம் ரூபா 764-13-9 இப்போது மெம்பர்களுக்கு விகிதித்துக் கொடுக்கத் தயாராக விருக்கின்றது.

பிரஸ்தாபவருஷத்தில் டைரக்டர்களின் மீட்டிங்குகள் எட்டும், பொதுஜன மீட்டிங்கள் ஐந்தும் நடைபெற்றன. ரிபோர்ட் அங்கீகரிக்கப்பட்டதும், கவர்ன்மெண்டார் உத்தேசித்துள்ள தணிக்கை வரி சம்பந்தமாய் ஒரு தீர்மானமும் கடைசியில் கொண்டுவரப்பட்டது. அத்தீர்மானமாவது:—"கோயம்பத்தூர் அர்பன்பாங்கி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்டுக்குக் கிடைத்துள்ள அற்ப வருமானத்தை உத்தேசித்துப் பார்க்கும்போது எவ்விதமான தணிக்கைவரியும் கொடுக்க சக்தியுள்ளதாயிருக்கவில்லையென் றேற்படுகிறது. அவ்விதம் உத்தேசிக்கப் பட்டுள்ள ரீதியில் வரிவிதிக்கப்பட்டால் சங்கத்திற்கே பெரும் ஆபத்தும் கிளைச்சங்கங்களை அதி சீக்கிரத்தில் மூடி விடுவதற்கான ஏற்பாடும் எடுத்துக்கொள்ள வேண்டி வரும்." இன்னும் சில அற்ப விவகாரங்களும் விவாதிக்கப்பட்ட பிறகு வழக்கப்பிரகாரம் அக்கிராசனாதிபதிக்கு வந்தனங் கூறப்பட்டதும் மீடிங்கு கலைந்தது.

## ஜில்லா அர்பன்பாங்கி லிமிடெட்

ஜில்லா அர்பன்பாங்கியின் வருஷாந்திரகொண்டாட்டம் ரிடயர்ட்இன்ஸ்பெக்டர் ஆவ்ஸகூல்ஸாகும் ராவ்பகதூர் ஸி. நாகோஜிராவ் பி. ஏ. அவர்களுடையவிடுதியான "ரோஸ்காட்டேஜில்" நடைபெற்றது. ராவ்பகதூர் டி. எஸ். பாலகிருஷ்ணய்யர் பி. ஏ. பி. எல் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். காரியதரிசி மிஸ்டர். ஸி. என். கிருஷ்ணஸ்வாமிஐயர் எம். ஏ. எல். டி. அவர்களுடைய ஷை பாங்கியின் ரிபோர்ட் அங்கீகரிக்கப்பட்டது. 1913ஆம் ஜூலைமீ 1 தேதியில் பாங்கிக்கிருந்த மொத்த மெம்பர்கள்

134. வருஷக்கடைசியிலிருந்த மொத்தமெம்பர்கள் 160, வருஷக்கடைசியிலிருந்த பங்கு மூலதனம் ரூபா, 46,080. மெம்பர்களிடமிருந்து வாங்கப்பட்ட கடனும் டெபாஸிட்டுமாக ரூபா. 140,704–11–1. ஆனால் இதற்கு முன்பு பங்கு மூலதனம் ரூபா 22,796–6–4ம் ஸொஸைடிகளிடமிருந்தும் மெம்பர்களல்லாதவர்களிடமிருந்தும் கிடைத்ததொகை ரூபா, 40,704–11–1 ஆகவிருந்தது. பாங்கி மெம்பர்களுக்கு அட்வான்ஸாகக் கொடுத்தது ரூபா, 1,19,345; அவர்களால் திருப்பிக்கொடுக்கப்பட்ட தொகை ரூபா. 38,091–9–7. வருஷக்கடைசியில் வெளியே பாக்கியாய் நின்ற தொகை ரூபா, 3,30,171–6–5. பிரஸ்தாப வருஷத்தில் ஒன்பது போர்டார்களின் மீட்டிங்கு நடைபெற்றது.

பாங்கிக்கு பிரஸ்தாப வருஷத்தில் கிடைத்த மொத்த நிகர்லாபம் ரூபா, 5,817–12–1. இதில் ரூபா 3,092-10–0 பங்குதாரர்களுக்கு 100-க்கு 9, வீதம் இலாபம் பிரிவினையாகவும், பாக்கி 100-க்கு 1-விகிதம் போனஸ் (வட்டம்) ஆகவும் கொடுக்கப்படும். ரூபா, 1,454–7–6 க்ஷேமநிதிக்குச் சேர்க்கப்படும். காரியதரிசிக்கு ரூபா, 727–3–6 கௌரவ சம்மானமாகக் கொடுக்கப்படும். மிகுதியான ரூபா 35–8–0 ஆபீஸ் உத்யோகஸ்தர்களுக்கு போனஸாக விகித்துக் கொடுக்கப்படும். இப்போது சேர்க்கப்பட்ட க்ஷேமநிதிப் பணத்துடன் மொத்த க்ஷேமநிதிப் பணம் ரூபா 3,244-12-7 ஆகிறது. பங்குப் பிரிவினைநிதி ரூபா 2,566–5–9. பாங்கியானது இந்த ஜில்லாவிலுள்ள 100, கிராமம் பாங்கிகளுக்கு, நீலகிரி, தென்கன்னடம், மலையாளம் முதலிய ஜில்லாவிலுள்ள பாங்கிகளுக்கும் பணம் கொடுத்துதவுகின்றது.

தணிக்கை நிமித்தமாய் கவர்ன்மெண்டார் வரிவிதிக்க உத்தேசித்திருக்கும் ஏற்பாட்டிற்கு, போர்டார், இப்போதிருக்கும் கூட்டுறவு முயற்சி நிலைமையில் எவ்விதமான சோதனைவரியும் விதிப்பது அனுசிதமானதாகுமெனவும், (a) குறைந்தது 10, வருஷங்களுக்கு எவ்விதமான சோதனைவரியும் விதிக்காமலிருக்கும்படிக்கும், (b) கவர்ன்மெண்டார் வரி விதிப்பதாய்த் தீர்மானித்துவிட்டால் விகிதம்மிகவும் அதிகமாக விருப்பதாகவும் சங்கங்களுக்கும் பாங்கிகளுக்கும் கிடைக்கும் இலாபத்தில் 100-க்கு 2, வீதத்திற்கதிகமின்றி விதிப்பதே யுசிதமென்று தோன்றுகிறதாகவும் அபிப்பிராயப்பட்டார்.

---

## அமலாபுரத்தில் கூட்டுறவு முயற்சி.

கோதாவரிஜில்லா அமலாபுர வாசிகளான மகாஜனங்கள் பலர் தமது பிராந்தத்தில் கோவாப்ரேடிவ் பாங்கியொன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின்மேல் பெஜவாடாஸர்க்கில் கோ



வாபரேடிவ் சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராராகும் மிஸ்டர். கெ. நாகேஸ்வாராவ் பந்துலுகாரு அவர்கள் 1913-ம் வருஷம் ஜூலை மாதம் 27-ம் தேதி அங்கு விஜயஞ்செய்தார்.

ஜூலை மாதம் 28-ம் தேதி செவ்வாய்க்கிழமைதினம் ஒரு முன்னாலோசனை மீட்டிங்கு டவுன்ஹாலில் கூடிற்று. இதற்கு மனுதார்கள் பலர் வந்திருந்தனர். அச்சமயம் அஸிஸ்டண்டு ரெஜிஸ்ட்ரார் அவர்கள், கோவாபரேடிவ் பாங்கியை யேற்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பலவற்றையும் எவ்விதம் அதை நிர்வகித்து நடத்துவதென்பதையும், அப்பாங்கி க்ஷேமமாய் நீடித்து நடப்பதற்கு யாவரை நம்பியிருக்கலாமென்றும், கூறினார். இப்பாங்கிக்குப் பங்குதார்கள் சேர்க்கவேண்டுவ தனாவசியமென்றும் சங்கத்தைச் செவ்வையாய் நிர்வகித்து நன்னிலைமைக்குக் கொண்டுவந்தாலே சுதாவாய் ஜனங்கள் தாமேவந்து சேர்வார்களென்றுங் கூட வெளியிட்டார்.

முதலில் சங்கத்தை யேற்படுத்துவதற்கு வேண்டிய பங்குதார்களின் சங்கியை சேர்ந்தானதும் அஸிஸ்டண்டு ரெஜிஸ்ட்ராரவர்கள், சங்கத்தை ஏற்படுத்திக்கொடுக்க, தம் இன்ஸ்பெக்டர்களில் ஒருவரை யனுப்புவதாயும் வாக்களித்தார். பிறகு மீட்டிங்கு முடிவுபெற்றது.

அஸிஸ்டண்டு ரெஜிஸ்ட்ராரவர்கள் தாமளித்த வாக்கின் பிரகாரம் பெஜவாடா ஸர்க்கில் கோவாபரேடிவ் சங்கங்களின் சீப் இன்ஸ்பெக்டராகும் மிஸ்டர். கெ. வேதாசலம் ஐயர் அவர்கள் ஆகஸ்ட்மாதம் 4-ம் தேதி விஜயஞ்செய்து டவுன்ஹாலில் மீட்டிங்கு கூடினர். மீட்டிங்குக்கு, பிரபல கனவான்களும், தனவந்தர்களும், வக்கீல்களும், உபாத்தியாயர்களும் வியாபாரிகளும் விஜயஞ் செய்திருந்தனர். அச்சமயம் சீப் இன்ஸ்பெக்டரவர்கள் பாங்கி ரிஜிஸ்டராகி விட்டதாய்க் கூறினர். பிறகு ரிஜிஸ்டர் செய்யப்பட்டதற்கான நற்சாக்ஷிப் பத்திரமும், அப்பாங்கிக்கான பிரத்தியேகச் சட்டங்களும், வாசித்துக் காண்பிக்கப்பட்டன. ஆங்கு விஜயஞ் செய்திருந்த பலர், கேட்ட சந்தேகக் கேள்விகளுக்கெல்லாம் சீப் இன்ஸ்பெக்டர் அவர்கள் தெளிவாய் விடைபகர்ந்தனர். டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும் பின்னர் பாங்கிவேலைசெய்யத் துவக்கிற்று. தனிகநிலச் சுவாந்தாரும், ப்ளீடருமாகும் மிஸ்டர். பி. வி. எஸ். கோபாலம்காரு அவர்கள் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு ஸி. லக்ஷமிநாராயணகாரு பி. ஏ. பி எல் அவர்கள் காரியதரிசியாகவும், ஏ. வி. சுப்பராயடுகாரு உதவி காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டனர். சீப் இன்ஸ்பெக்டரவர்கள் மாதிரிக் கணக்குப்புத்தகங்கள் சிலவற்றைக் காண்பித்து இவ்விதம் ஆபீஸில் கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று போதித்தார்.

பங்கு ஒன்றுக்கு 5, ரூபா விகிதம் 2,000 பங்குகளுக்கான ரூபா, 10,000 முதலுடன் பாங்கிவேலைசெய்யத் துவக்கிற்று. செல்வாக்கும், அந்தஸ்துமுள்ள பல பிரமுகர்கள் பங்குகளெடுத்துக்கொண்டனர். பிரசிடெண்டவர்களது போதனையாலும் அஸிஸ்டண்டு ரெஜிஸ்ட்ரார் அவருடைய சிப்பந்திகள் முதலியவர்களுடைய உதவியாலும் பாங்கியானது செவ்வையாய் நிர்வகிக்கப் பட, ஸௌகார்களுடைய கொடூர வலைக்குள் ஜனங்கள் சிக்காது சௌக்கியமாய் காலக்ஷேபம் செய்துவருவார்களென வும் எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது.

---

## செங்கற்பட்டு கோவாபரேடிவ் யூனியன் பாங்கி,

கோவாபரேடிவ் யூனியன்பாங்கிக்கான சட்ட திட்டங்களையும், உத்தியோகஸ்தர்களையும் நியமிக்க சென்ற ஜூன் மாதம் 9-ம் தேதி கான்பரென்ஸ் ஒன்றுநடத்த ஒருகமிட்டி ஏற்படுத்தப்பட்டதென்பதை யாருமறிந்தவிஷயம். இக்கமிட்டியார்கள் 1914-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதிபகல் 12-மணிக்கு ஹிந்து பெண்பாடசாலைக் கட்டிடத்தில் கூடினர். மிஸ்டர். எம். இ. ஸ்ரீரங்காசாரியார், பி. ஏ. பி. எல். அவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஜில்லாவின் பலபாகங்களிலு மிருந்த கமிட்டி மெம்பர்களல்லாது மற்றுமநேக கனவான்களும் வந்திருந்தனர். விவகாரங்கள் மாலை 4-30, மணிவரையில் நடைபெற்றன.

### தணிக்கைவரி,

கோவாபரேடிவ் சங்கங்களின்மீது கவர்ன்மெண்டார் தணிக்கைவரி விதிக்க உத்தேசித்து, வெளியிட்டிருக்கும் சட்டக் குறிப்புக்கான காலம் ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதியோடு முடிவாகின்றமையால் அதைப்பற்றித் தமது அபிப்பிராயத்தையும் கவர்ன்மெண்டாருக்கு அறிவிக்கவும் யோஜித்தனர். அந்த ஜில்லாவிலிருக்கும்எல்லா கோவாபரேடிவ் சங்கங்களும் ஒன்றாய்க்கூடி புதிதாயுள்ள தணிக்கைவரியைப்பற்றி செவ்வையாய் யோஜனைசெய்து விவகரித்துக் கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்துகொள்ளவேண்டுமென்றும் கடைசியில் தீர்மானிக்கப்பட்டது. கமிட்டியார் செய்யவேண்டியதா யேற்பட்டிருந்த தமது வேலைகள் யாவற்றையும் தவக்கமின்றி செய்துமுடித்தது யாவரும் சந்தோஷிக்கக் கூடியதானதோர் அம்சமாகும்.

---



## ஹாடாப்ஸர் ஐக்கிய நாணயச்சங்கம்

1910வருஷத்தில் இந்தியா ஊழியக்காரர் சங்கத்தாரால்,விவசாயிகளுபயோகத்திற்காக, பம்பாய் ராஜதானியில் ஹாடாப்ஸர் என்னும் ஓர் கிராமத்தில், நாணயச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பிக்கும்பொழுது 30 மெம்பர்களிருந்தார்கள். இப்பொழுது மெம்பர்களின் சங்கியை 153.

சங்கத்தின் க்ஷேமநிதியின் தொகை ரூ.3,776. இத்துடன்,பிரவேசக் கட்டணங்கள், நன்கொடை, முதலானவைகள் சேர்ந்து ரூ. 48,000யிருக்கிறது. சங்கத்தில் விழுந்தடிபாஸிட்டுக்களின் முக்கியமான குறிப்பு என்னவென்றால், ஸ்திரீகள் டிபாஸிட்டின் தொகை சுமார் ரூ. 9000. ஆகையால் சங்கத்தின் தொழில் தனம் ஐந்தில் ஓர் பங்கானது ஸ்திரீகளிடமிருந்து வருகின்றது. ஏழைகளாகிய கூலி வேலைக்காரர்கள், விதவைப் பெண்கள், இவர்களின் டிபாஸிட்டுகள் ரூ. 375 வரையி லிருக்கின்றன. அக்கிராமத்துச் சிறுவர்களுக்கு கல்விவிஷயமாய் சில சௌகரியங்களைக் கொடுக்க, கல்வி நிதியொன்று ஏற்பட்டிருக்கிறது. அதின் தொகை இதுவரையில் ரூ. 1,200. வாங்கின கடன்கள் ஏற்பட்ட கெடுவுக்குள் கொடுபடுகின்றன. சாகுபடி விஷயமான காரியங்களுக்குத்தான், மெம்பர்கள் கடன் வாங்கிக்கொள்ளுகிறார்கள். கரும்பு சாகுபடி செய்பவர்கள் அங்கு விசேஷமாயிருக்கிறார்கள். அவர்கள் அநேகமாய் இதிற் சேர்ந்து தகுந்த காலங்களில் கடன்களைப்பெற்று, சாகுபடி செய்வதால் மிக்க ஊதியத்தை யடைகிறார்கள்.

இச்சங்கம் கிராம ஜனங்களுக்குப் பணம் சொற்ப வட்டிக்குக்கொடுத்து உதவியதைத் தவிர, கிராமஜனங்களின் தினசரி வாழ்க்கையில் ஓர் முக்கியமான சீர் திருத்தம் ஏற்படுத்தியிருக்கிறது. அடிக்கடி நிர்வாக கம்மிட்டி மீட்டிங்குகளும், மஹாசபை மீட்டிங்குகளும் நடந்தேறிவருவதால், ஜனங்கள் தங்கள் நடவடிக்கைகளை தாங்கள் தாமே நடத்திக்கொள்வதில் ஓர் பழக்கம் ஏற்பட்டுவருகிறது. சிக்கனம், சாகுபடி முறைகளின் நூதனவழிகள், நன்றாய் அநுபோகத்தில் ஜனங்களால் அறியப்பட்டுவருகின்றன. ஜனங்களுக்குள் இருந்த கட்குடி, வியாஜ்ஜியமாடுதல், முதலிய கெட்ட எண்ணங்கள் மறந்துபோய், ஓர் வித ஒற்றுமையும், அபிமானமும் ஏற்பட்டிருக்கிறது.

### இந்தியா கவர்ன்மெண்டாரின் தீர்மானம்.

#### விஜாரணை கம்மிட்டியார் நியமிக்கப்பட்டார்கள்.

1914-வருஷம் ஜூன்மாதம் 17 தேதியில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தில், இந்தியா கவர்ன்மெண்டார் ஸென்ட்ரல், மகாண, பாங்கிகளுக்கும், நாணயமார்க்கெட்டுக்கும், தங்களைச் சேர்ந்துள்ள சங்கங்களுக்கும், உள்ள சம்பந்தங்களை யறிவதைப்பற்றியுமல்லாமல், இவைகளின் நிர்வாகம்,

சோதனை, தணிக்கை, முதலியவைகளின் பொருட்டு இவ்விஷயத்தில் சாதுரியமுள்ளவர்களின் உதவிகள் எவ்வளவுதூரம் வேண்டியிருக்கிறதென்பதைப்பற்றியு மறியவேண்டி, இந்தியாவிலுள்ள ஐக்கிய இபக்கத்தின் முழுவதையும் சோதனை செய்யவேண்டியதை குறித்திருக்கிறார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டார் இவ்வித விஜாரணையை பின் கூறிய கனவான்கள் சேர்ந்த ஓர் கம்மிட்டியிடம் ஒப்புவிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்:—ஸர் E. D. மாக்லகன், பிரசிடெண்டு; A. E. இங்கிலீஷ் I. C. S. ஆனரபில் மிஸ்டர் லாலுபாய் ஸாமல்தாஸ், மிஸ்டர் N. அஸாஹர்அலி; மிஸ்டர் W. ரென்விக், மெம்பர்கள்; மிஸ்டர் R. W. ஈபாங்கி, காரியதரிசி.

## விஜாரணையின் நோக்கம்.

ஐக்கிய முறையின் இபக்கமானது, பணம் தட்டில்லாமல் ஒழுங்கான வழியில் அபிவிருத்தியாகிக் கொண்டு வருகிறதா என்று சோதனை செய்தலும் வேறு சீர்திருத்தங்கள்வேண்டியதாயிருந்தால வினயத்துடன் ஆலோசனைசொல்லுதலும், இக்கம்மிட்டியாரின்முக்கியமான கடமை. இவ்விஷயத்திற்கு, விஜாரணை செய்யவேண்டிய அம்சங்களாவன:—ஸென்ட்ரல், மாகாண, பாங்கிகளின் நிர்மாணம், நடவடிக்கைகள் : கூட்டுமுயற்சி ஸ்தாபனங்களுக்குள்ள ஸேவாதேவிகள் ; எல்லாவகைச் சங்கங்களில் நடந்து வரும், தணிக்கை, மேல் விஜாரணை, நிர்வாகம் முதலிய விஷயங்கள்; க்ஷேமநிதியை உபயோகப் படுத்தும்வழிகள்; க்ஷேமநிதியை வருஷக்கணக்குகளிற் காட்டும் விதங்கள்.

ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் விஜாரணை நோக்கங்களின் எல்லையைவற்ப்படுத்த அபிப்பிராயப் படுத்தவில்லை. கம்மிட்டியார், ஐக்கி இயக்கத்திற்கு மிகவும் அவசியமாய் தங்கள் யுக்தத்திற்குத் தோன்றுவதை சிபார்சு செய்யலாம்.

1914-ஸு நவம்பர்-மீ 6-உ டெல்லியில் கம்மிட்டியார் கூடுவார்கள். அவர்களுக்குத் தோன்றியபடி இந்தியாவின் பாகங்களுக்குச்செல்வார்கள்.

லோகல் கவர்ன்மெண்டுகளும் அட்மினிஸ்டிரேஷன்களும், இக்கம்மிட்டியாருக்கு உதவிகள் புரிந்து, அவர்கள் வேண்டும் சமாசாரங்களை கொடுப்பார்களென இந்தியா கவர்ன்மெண்டார் நம்புகிறார்கள்

## பல்லாரியில் கூட்டுமுயற்சி.

ரெஜிஸ்டிராரவர்களின் குறிப்பு:—பல்லாரி வார்ட் லாகாலேஜ் பிரதம உபாத்தியாயரும், பல்லாரி ஜில்லா கான்பரென்ஸு வரவேற்பு கம்மிட்டியின் சேர்மனுமான, மிஸ்டர் J. P. கோட்டுலிங்கம் M. A. அவர்கள் பிரசங்கத்தின் ஓர்பாகத்தை, இக் கூட்டுத்தொழில் வர்த்தமானியைப்படிப்போர்கள்பார்வையில் வைப்பதின்முன், ஐக்கிமுறை இயக்கத்தின் அபிவிருத்



தியின்பொருட்டு சென்றவருஷத்தில் பல்லாரிக்கு நான் போயிருக்கையில், மெஸ்ஸர்ஸ் J.P. கோட்லிங்கம் M.A. S.M.கோபாலஸ்வாமி முதலியார், ராவ்பகதூர் C.சுப்பிரமணியம் இவர்களும், இன்னும் மற்ற கனவான்களும் எனக்கு உதவி புரிந்ததை இங்கு கூறியது சரியென்றெண்ணுகிறேன்.

## முதல் பல்லாரி ஜில்லா கான்பரென்ஸு

முதல் பல்லாரி கான்பரென்ஸின், வரவேற்பு கம்மிட்டியாரின் சேர்மனாகிய மிஸ்டர் J. P. கோட்டுலிங்கமவர்கள் பிரசங்கத்தின் சாராம்சம், பின்வருமாறு:—கனவான்களே,

வரவேற்பு கம்மிட்டியாரின் பொருட்டு, முதல் பல்லாரிஜில்லா கான்பரென்ஸிக்கு, நான் உங்கள் வரவேற்க, மிகவும் ஆசையுள்ளவனாயிருக்கிறேன். பல்லாரி பட்டணம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகையால் அதிலுள்ள விசேஷங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. நாம் கூடியிருப்பதின் காரியங்களின்மேல் காலத்தை வீண் போக்காமல் நம் கவனத்தைச்செலுத்துவது நலமென்று தோன்றுகிறது. இஜ்ஜில்லாவின் முக்கிய தேவையாகிய கூட்டுமுயற்சியின் உற்சாகத்தைப் பூர்ணமாய் ஏற்படுத்த, நாம் மிகவும் ஒற்றுமையாய் இந்நற்காரியத்தில் உழைக்க வேண்டியது நம் கடமையாகும்.

## ஐக்கிய முயற்சி

ஐக்கிய இயக்கமானது இந்தியாவில் ஏற்பட்டு 10 வருஷகாலமான போதிலும், பெல்லாரியில் அதின் அபிவிருத்தி தெரியவில்லை. இந்தியாவில் சமார்7,000 சங்கங்களிருக்கின்றன. சென்னை இராஜதானியில் மாத்திரம் 1907-08, வருஷத்திலிருந்து, 1912-13, வருஷத்திற்குள், சங்கங்களின் சங்கியை 101 லிருந்து 1078 க்கு அதிகரித்திருக்கின்றது. 5 வருஷத்திற்குள் கூட்டு முறையில் அநேகவகையிற் சங்கங்கள் 10 மடங்கு அபிவிருத்தி யடைந்திருக்கிறது.

மதராஸில் இரண்டாவது மாகாண கான்பரென்ஸும் கோயமுத்தூர் ஸர்க்கிலுக்காக இரண்டாவது ஸர்க்கில் கான்பரென்ஸும் நடைபெற்றன; சென்னை இராஜதானியில் சங்கங்கள் நிறைந்தது செங்கற்பட்டு ஜில்லா. அதில் 198 சங்கங்களிருக்கின்றன. ஸீடட் ஜில்லாக்கள் கௌரவமும் பெருமையடையும்படி, அனந்தபூர் ஜில்லாவானது மூன்றாவது ஜில்லா கான்பரென்ஸை நடத்திற்று. அதில் 148 சங்கங்களிருக்கின்றன. அவ்விடத்தில் ஓர் ஜில்லா கோவாப்ரேடிவ் பாங்கியை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எல்லா ஜில்லாக்களிலும், இவ்விஷயத்தில், பல்லாரி கடைசியிற் நிற்பது மிகவும் விசனிக்கத்தக்கது. 3 சங்கங்கள் தானிருக்கின்றது. அவைகளும் ஹட ஹல்லிதாலுக்கா ஒன்றில் தான் ஸ்தாபிக்க

ப்பட்டது. இவ்விராஜதானியில், கூட்டுத் தொழில் முயற்சியில் வெவ்வேறு வகைச்சங்கங்கள் மிகவும் ஓங்கிவளர்ந்து வருகின்றன. நாமும் ஜில்லாவுக்குவேண்டிய சங்கங்கள் ஏற்படுத்தப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். ஜனங்கள் தங்களுக்குள் உதவிசெய்துகொள்ளும்படியான வழிகள் அநேகமிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றை உதாரணமாய்ச் சொல்லுகிறேன். மதராஸில், ஸால்ட் கொட்டார்ஸில் வேலை செய்யும் கூலியாட்கள். தங்கள் சங்கத்தினால், நடுவில் நின்று தங்கள் சம்பளத்தில் ஓர்பங்கு எடுத்துவந்த தரகுக்காரர்களை, நீக்கிவிட்டார்கள். சேலம் முனிசிபாலிட்டியின் தோட்டிகள் தங்கள் சங்கத்தினால் ஸாவகாரர்களின் இம்சையிலிருந்து தப்பித்துக்கொண்டு மிகவும் செட்டாயிருக்கிறார்கள். இம்முறையில் ஏற்படும் சங்கங்களினால், ரயத்துக்களுக்குக் குறைந்தவட்டிக்குப் பணம் கிடைத்து, அவர்கள் சுபேக்ஷத்தை யடைவார்களென்பதிற் தடையில்லை. இவ்விதச்சங்கங்களை நிர்வகித்தல், ஸ்தலசுய ஆட்சிமைக்குப்பழகுதலாகும்.

### கிராமப் பஞ்சாயத்துகள்

கவர்ன்மெண்டார், கிராமாந்திர ரஸ்தாக்கள் பழுதுபார்க்கவும், இன்னும் சில முக்கியகடைமைகள் செய்யவும், கிராம பஞ்சாயத்தார்களை அங்கங்கே ஏற்படுத்த ஆலோசனை செய்துவருகிறார்கள். இல்வேலைகளுடன் கிராம சுகாதாரகாரியங்கள், கிராம கல்விமுதலானவைகளும் இவர்கள் பொறுப்பில் விழக்கூடும். பஞ்சாயத்தார்கள் கூட்டுறவுடன் உற்சாகத்தோடு உழைத்தால்தான் அவ்வேலைகள் கைகூடும்.

### ஏழைகளுக்கு வீடுகட்டிக்கொடுத்தல்.

இஜ்ஜிலாவில் பிளேக்வந்ததுமுதல் ஏழைகள் வீடுகளில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுவருகிறார்கள். இவ்விஷயத்தில் ஐக்கிய முயற்சிக்காரர்கள் வேலை செய்து, கூலிவேலை செய்துவரும் ஏழைகளது கஷ்டங்களை நிவர்த்தி செய்யலாம். ஆனால் பல்லாரியில் ஜனங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு கஷ்டங்கள் எல்லா ஜில்லாக்களிலு மிருக்குமென்று எண்ணுகிறேன். மிகவும் உதாரதுணமுள்ள மிஸ்டர் வில்லியம் ஓயிட்லி என்பவர் ஏழைகள் குடியிருக்கக் குடிசைகள் கட்டுவதற்கு சமீபத்தில் ஒரு லக்ஷம் பவுன் முதலாக வைத்திருக்கிறார். அம்முதலிலிருந்து, 220 ஏகர்கள் விஸ்தீரமுள்ள பூமியானது வாங்கப்பட்டு, வியாபாரவாழ்க்கையில் கஷ்டப்பட்ட ஏழைகளுக்கு 230 குடிசைகள் கட்டப்பட்டன. இம்மகானை உதாரணமாக வைத்துக்கொண்டு, அநேக காருண்ணிய முள்ள கனவான்கள் இஜ்ஜில்லா ஏழைகளுக்கு அம்மாதிரி உதவிகள் புரிவார்களென நம்பப்படுகிறது.



### வியாபார, சிற்ப, வித்தைகளை பரவச்செய்தல்.

வியாபாரங்களையும், சிற்ப வித்தைகளையும் அபிவிருத்தி செய்தால்தான் நம் தேசத்தின் தரித்திரம் நீங்கும். பெரிய வியாபார ஸ்தாபனங்கள், நாம் எப்படி ஒன்றாய்ச்சேர்ந்து நடவடிக்கை செய்வது என்பதை விவரமாய்க் கற்பிக்கும். இவ் வித்தைகளில் பட்ட தாரிகளாகிய நம்மவர்கள் விமரிசையாய் வேலைசெய்துவரும் எல்லாடிபார்ட்மெண்டிலும் தலைவர்களாயிருந்து வேலைசெய்ய வேண்டப்படுகிறது.

---

# கூட்டுத்தொழில் முயற்சியின் அபிவிருத்தி

## வெளிதேசங்களில்

### அயர்லாந்தில் கேவாபரேடிவ் காங்கிரஸ்.

1914-௵ ஜூன்மீ முதல் தேதியில், 46-வது வருஷ காங்கிரஸானது டப்ளினில் Mr. ராபர்ட்டு பிளமிங் அக்கிராசனத்தின் கீழ் நகரில் நடைபெற்றது.

பிரசிடெண்டு அவர்கள், எப்படி கூட்டுத்தொழில் முயற்சியானது இம்சைகளெல்லாவற்றையும் கடந்து, ஓங்கி வளர்ந்து வருவதை உதாரணங்கள் மூலமாய் நன்கு விளக்கினார். எல்லாச்சங்கங்களின் மொத்தவியாபாரம் 1912-ம் வருஷத்தைக் காட்டிலும் 1913௵-ல் £. 7,123,635 அதிகரித்திருக்கிறது. இப்பொழுது பங்குதனம் £. 41,199,373. டிபாஸிட்டுகளின் தொகை £. 13,800,008. பங்கு தனத்தில் £. 2,705,410-ம் டிபாஸிட்டுகளில் £. 1,120,167-ம் அதிகரித்திருக்கின்றன. வருஷத்திய நிகரலாபம் £. 14,260,414. அதாவது சென்ற வருஷத்தைக் காட்டிலும் £. 971, 108 உயர்ந்திருக்கிறது. ஆனால் சங்கங்களின் சங்கியை குறைந்திருக்கிறது. இக்குறைவின் காரணம் சங்கங்கள் ஒன்றோடொன்று ஐக்கியமாவதேயொழிய வேறொன்றினாலுமல்ல. மெம்பர்களின் சங்கியை அப்பொழுது 3,110,390—அதாவது 134,496 மெம்பர்கள் இவ்வருஷத்தில் அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். க்ஷேம நிதிகளின் மொத்தத் தொகை £. 5,819,125. ஐக்கிய முயர்ச்சிக்காரர்கள் தாங்கள்விற்றுவரும் சாமான்களை தாங்களே உண்டாக்கப் பிரயத்தனஞ் செய்யவேண்டிய தவசியமெமென்று பிரசிடெண்டு வற்புறுத்திச் சொன்னார்.

அடியிற் கூறப்படும் தீர்மானங்கள் காங்கிரஸால் அங்கீகரிக்கப் பட்

(1) கீழ்வேலைக்காரர்களை வியாபாரத்தில் பழக்கிக்கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்தல். (2) சாமான்களை விற்கும் வேலைக்காரர்களுக்கும் மானேஜர்களுக்கும் சம்பளத்தை உயர்த்த உதவிசெய்தல் (3) மெம்பர்களுக்கு ஐக்கிய முறைவிஷயத்தில் பிரசங்கித்தல்.

1. ஒரு குறித்த ஜில்லாவில் பிரசங்கம் செய்ய வேண்டுமானால், ஜில்லா ஸ்தாபனங்களுடன் வேலை செய்யும்படி ஸப் கம்மிட்டி ஒன்றை நியமிக்கவேண்டும்.

2. சங்கங்களுக்கும், அவைகளில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் ஏதாவது தகரார்கள் வந்தால், இரண்டு கக்ஷிகளிலிருந்தும் ஒரேசங்கியையான பிரதிநிதிகளை மத்தியஸ்தர்களாகத் தெரிந்தெடுத்து, அவர்கள் கூட்டத்தில் எப்படி தீர்மானிக்கப்படுகிறதோ, அவ்விதம் இருகக்ஷியாரும் நடக்கவேண்டும்.

3. சங்கங்கள் மிகவும் விசாலப்பட்டு, பலக்குறைவாயிருக்குமிடங்களில், பலசங்கங்களை ஒன்றாய்ச்சேர்த்து கடைசியில் சுதேச சங்கமாய் ஏற்படுத்த ஆரம்பஞ் செய்தல்.

### ரோமேனியா

1912-௵த்தில் ரோமேனியாவில், 5,92,360 மெம்பர்களையும், மொத்தபங்குமுதல் £ 3,342,215 யுடைய 3,356 கூட்டு முயற்சிச் சங்கங்களிருந்தன. கூட்டு முறையிலுள்ள எவ்வகைச் சங்கங்களும் இங்கு விசேஷமாயுள்ள ரப்பீஸன், ஷுல்ஸ்டிஷ், இவர்களால் ஏற்பட்ட நாணயச்சங்கங்களில் எவைகள் நல்லதென்று தோன்றிற்றோ, அவைகளெல்லாம் தங்கள் சங்கங்களில் ஏற்படுத்தப் பட்டன. 1912-௵த்தில், 510,118 மெம்பர்களையும், £ 4,752,475 பங்கு முதலையுமுடைய, 2755 ஜனங்களின் பாங்கிகளிருந்தன. ஒவ்வொரு கிராம வட்டாரத்திற்கு ஓர் சங்கமென ஏற்படுகிறது.

---

OFFICE OF THE ... 2-MAR 1915 MADRAS.

# மதராஸ் புல்லெடின் ஆவ் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் VI.] 1914௵ டிசம்பர்மீ [இலக்கம் 2

## திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்ரேடிவ் ஸொஸைடி.

இந்தியா கவர்ன்மெண்டு கோவாப்ரேடிவ் கமிட்டி மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர் லாலுபாய் ஸாமல்தாஸ் அவர்கள் எழுதியது.

கோவாப்ரேஷன் சம்பந்தமாய் விஜாரணை செய்யும் இந்தியா கவர்ன்மெண்டு கம்மிட்டியார் திருவல்லிக்கேணி கோவாப்ரேடிவ், ஸ்டோர்ஸை பார்வையிட்டதானது சென்னை ராஜதானியில் முதன்மை கோவாப்ரேடிவ் ஸ்தாபனமென்று சொல்லப்படும் அச்சங்கத்துடன் நன்றாய்ப்பழகி, அதின் நடவடிக்கைகளை முழுவதுமறிய யெனக்குத்தகுந்த தருணம் வாய்த்தது. கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரின் வருஷாந்திர அட்மினிஸ்டிரேஷன் ரிபோர்ட்டைப்பார்த்தால், ஐக்கிய முயற்சியானது நாணயமுறையிற்றான் கவனிக்கப்பட்டு அதிகப்பிரபலமாயிருக்கிறது. 1904௵த்திய 10-வது ஆக்ட்டு ஏற்படுவதற்கு முன்னமே திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்ரேடிவ் ஸொஸைடியானது ஸ்தாபிக்கப்பட்டது. 1906௵த்தில் அது ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட போதிலும் இச் சங்கமானது இந்த ராஜதானியிலுள்ள எல்லாக் கூட்டு முயற்சிச் சங்கங்களுக்கும், இவ்விந்தியாவிலுள்ள பிரிவினை ஐக்கிய முயற்சி ஸ்தாபனங்களிலெல்லாவற்றிலும் முதன்மையாயிருக்கிறது. இது முதலில் ஏற்பட்ட ஸ்தாபனமாதலால், வெளியுதவியைநாடாமல் தன்னை பலப்படுத்திக் கொள்ளுதல், ஜனங்களுக்குள் ஐக்கியமுயற்சியின் நோக்கங்களை பரவச்செய்தல், பொதுஜனங்கள் இம்முறையிற் சேர்ந்துழைக்க விரும்பும்படி தனது கீர்த்தியை நிலைநிறுத்துதல், முதலிய மூன்று நோக்கங்களும் பூர்த்தியாகத்தானே பாடுபடவேண்டியிருந்தது. 10 மெம்பர்களுடனும் ஒருசிறு தொகை

பங்குமுதலோடும் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கமானது இப்பொழுது சுமார் 3,000 மெம்பர்களையும், ரூ 30,000-க்கு அதிகமான பங்குமுதலையும் உடைத்தாயிருக்கிறது: அதின் மொத்த வருஷாந்திர விற்றுமுதல் ரூ 20,000,த்திலிருந்து 1913௵த்தில் ரூ 6,00,000-த்திற்கு அதிகரித்தும், அதின் கிளைகள் 14 ஏற்பட்டுமிருக்கின்றன. க்ஷேமநிதியும், பொது நன்மை நிதியும்சேர்ந்து சுமார் ரூ 40,000-க்குயர்ந்திருக்கின்றது.

மெம்பர்களடைந்து வரும் பயன் நியாயமான கரார்விலைகளுக்கு கலப்பில்லாதவும் இடைகுறையாததுமான சாமான்கள் கிடைப்பதாகும். வருஷக்கடைசியில் லாபம் கிடைத்தால் சாமான்கள் வாங்கப்பட்ட கிரயத்தின் பேரில் டிவிடெண்டு கொடுக்கப்படும். டிசம்பர் 31-வது தேதியுடன்முடிவுபெற்ற சென்ற வருஷத்தில், டிவிடெண்டு ரூபாய் ஒன்றுக்கு 2·705 பைசாவீதம் ஏற்பட்டிருக்கிறது. பங்கு முதலுக்கு 100-க்கு $3\frac{3}{4}$ வீதம் ஸ்திரமான வட்டி கொடுக்கப்பட்டு வருகிறது. மற்றச் சங்கங்களைப்போல், இந்த ஸ்டோர்ஸானது லாபத்தைக்கருதி வேலைசெய்யும் ஓர் வியாபாரஸ்தலமாகாது.

இம்மாதிரி கூட்டுமுயற்சிச் 'சங்கங்களினால், நாம் அடைந்துவரும் சன்மார்க்கமான குணங்களைத்தான் முக்கியமாய் கவனிக்க வேண்டும். இச்சங்கத்தால் நாம் அநேகம் அடைந்திருக்கிறோம். எல்லாவகுப்பினர்களும் ஒன்றாய்க்கூடி ஐக்கிய முயற்சியின் நோக்கங்களையும், அவைகளாலேற்படும், பொறுப்பு, ஒற்றுமை, பரஸ்பர அபிமானம், முதலிய நல்ல குணங்களையும் அநுபோகத்தால் அறிந்து வருகிறார்கள். வியாபாரவழக்கங்களையும் முறைகளையும் எல்லாவயது வகுப்பினர்களும்—பொறுப்புள்ள டைரெக்டர்கள், நிர்வாககம்மிட்டியார்கள் முதல் ஸ்டோர்ஸில் சாமான்கள் கிரயத்திற்கு வாங்கும் சிறுபய்யன்வரையில்—கற்றறிய மார்க்கங்களிருக்கின்றன. பொதுஜனநன்மையின் பொருட்டிருக்கும்மெம்பர்களின் உணர்ச்சியானது பொதுஜன நன்மை நிதியொன்றை யேற்படுத்தலாயிற்று. வித்தியாசம்பந்தமான ஸொஸைடி ஒன்றையும், இந்த ஸ்டோர்ஸ் கிளைகள் ஒவ்வொன்றிலும் இலவசமான புஸ்தக சாலைகளையும், பத்திரிகைகள் வரும்படியாகவும் ஏற்பாடு செய்திருத்தலால், ஜனங்கள் பெறும் பயன்கள் நான் இங்கு கூறவேண்டியதில்லை.

இப்பொழுது மெம்பர்களின்சௌகரியத்திற்காக துணிகளைவெளுக்குந்துறை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. சில மெம்பர்கள் சங்கத்தின் செலவில் தர்ம ஆஸ்பத்திரிகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள். மெம்பர்கள் இவ்விதமான பொதுக்காரியங்களைச் செய்ய நினைப்பது மெம்பர்களுக்குள் ஓர்வித சகோதர உரிமையை உண்டாக்குவதில் இச்சங்கத்தின் சக்தியைக் காண்பிக்கிறது. சென்ற இரண்டு மாகாண கான்பு



ரென்ஸ்களுக்குயாவரைக்காட்டிலும் இச்சங்கம் அதிகநன்கொடையளித்ததென்பதைக்கேட்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. 'சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி' என்னும் பத்திரிகையைப் பிரசுரஞ்செய்வதில் கூட்டுத்தொழில் முயற்சிக்கு மிகுந்த சாதனம் செய்து வருகிறது.

சங்கத்தின் நடவடிக்கைகளனைவற்றும் எனக்கு மிகவும் திருப்திகரமாயிருக்கின்றன. கணக்குகள் சரியாய்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஓர் ஸ்டோர்சங்கத்திற்கு இவ்வளவு ஆடம்பரமான ஏற்பாடுகள் அதிகமென்று எனக்குத்தோன்றுகிறது. இச்சங்கத்தில் நாணய டிபார்ட்டுமெண்டு ஒன்று உண்டானது விவேகமுள்ளகாரியமே! அநேக வித டிபாஸிட்டுக்களின் தொகையால் மெம்பர்களுள் சிக்கனத்தை விருத்திசெய்வதெனத்தெரியவருகிறது. மெம்பர்களுக்கு சுலபமான வட்டிவீதம் தகுந்த காரணங்களை உத்தேசித்து கடன் கொடுத்து வருகிறது. கம்மிட்டியார்கள் சீட்டு ஏற்பாடுகளை மிகவும் ஆசையுடன் பார்வையிட்டார்கள். முன் ஜாக்கிரதையுடன் சேர்க்கப்படும் டிபாஸிட்டுகளுக்கு இவ்வேற்பாடு மிகவும் உரித்தாயிருக்குமென்று எனக்குத்தோன்றுகிறது. வட்டியும் சுலபமாயிருக்கிறது. உயர்ந்ததும் தாழ்ந்ததுமான டிஸ்க்கவுண்டுகள் முன்னமே யேற்படுகிறபடியால், சீட்டிற் சேருபவர்கள் மிகுந்த நன்மைகளடையலாம். இச்சங்கத்தில், ஆங்கிலேயதேசத்தில் நடந்துவரும் ஐக்கிய முயற்சிப்பிரிவினைவழிகளும் ஐரோப்பிய தேசத்திலுள்ள கூட்டுத்தொழில் முயற்சி நாணய லேவாதேவி வழிகளும், தென்னிந்தியாவின் பிரத்தியேகமான கூட்டுச் சீட்டு முறைகளும் சேர்ந்திருத்தலால் இச்சங்கம் ஓர் விநோதமான ஸ்தாபனமென்றே சொல்லவேண்டும்.

ஹெட்ஆபிசுக்கு அடுத்த அதின் கிளை ஷாப்பைப் பார்வையிட்டத்தில் மிகவும் சுத்தமாய் வைக்கப்பட்டு ஒழுங்காய் நிர்வகிக்கப் படுகிறதென்று தெரியவருகிறது. நிர்வாகத்தின் செலவு; ஸ்டோர்ஸானது விருத்தியடைந்துவர, இயற்கையாய் அதிகரித்து வரும்.

சங்கத்தின் நிர்வாகவிஷயமாய் நான் சொல்லும்படியான ஆலோசனையொன்றுமில்லை. சங்கத்தின் மெம்பர்களை நான் வேண்டிக்கொள்ளுவது என்னவென்றால், டிவான் பகதூர் ராமச்சந்திராவ் அவர்கள் முன்பு சொன்னபிரகாரம் கிராமாந்திரங்களில் ஓர் புதிய வாழ்க்கையுண்டாகும் வண்ணம் கிராமபாங்கிகளை எக்கண்டமும் தேசத்தில் ஏற்படத்தகுந்த பிரயத்தனமெடுத்துக் கொள்வதே!

# மகாண ஸ்தாபனமொன்று யேற்படுவதின் அவசியம்

திவான் பகதூர் M. ஆதிநாராயணய்யாகாரு எழுதியது.

அடுத்த மதுராஸ் மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் வருகிற ஜனவரி ஆரம்பத்தில் மதுராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனது பார்வையில் நடை பெறுதலால், பின்கூறப்பட்ட சங்கத்தின் நிருமாணத்தையும், நடவடிக்கைகளையும் அறிய அநேகர் விரும்புவார்கள். கோவாப்ரேடிவ் சங்கங்களின் ஆக்ட்டின்படி 1913௵க்கடைசியில் 1130 நெ. சங்கமாக இந்தயூனியன் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. இந்த இராஜதானியிலுள்ள கோவாப்ரேடிவ் சங்கங்களின் பிரதிநிதிகள் சேரும்படி, வருஷ மஹாசபைகளைக் கூட்டஏற்பாடு செய்வதற்கு ஓர்மத்திய ஸ்தாபனம் வேண்டியதவசியமென்று நிகழ்ந்த கான்பரென்ஸ்களில் விஜயஞ்செய்த டெலிகேட்டுகள் அபிப்பிராயப்பட்டபடியால், இவ்யூனியன் ஸ்பிக்கப்பட்டது. பங்கு ஒன்றுக்கு ரூ.5 வீதம் ரூ.50,000, அதின்தொழில் தனமாக யுயர்த்த ஆலோசிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு 100-க்கு 3½ வீதம் ஸ்திரமான டிவிடெண்டு கொடுப்பதாக யோசனையிலிருக்கிறது. இப்பொழுது சேர்ந்திருக்கும் மெம்பர்களின் சங்கியை குறைவாயிருந்த போதிலும், அவர்கள் ராஜதானி எப்பக்கங்களிலுமுள்ள பிரதிநிதிகளாகச் சொல்லலாம். பொதுஜனங்களும் அதில் மெம்பர்களாகலாம். ஆனால் அதற்கு வேண்டிய பணவுதவியானது ராஜதானியிலுள்ள கோவாப்ரேடிவ் சங்கங்களிலிருந்து வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்யூனியன் ஸ்தாபிக்கப் பட்டது வருஷமஹாஸபைகளைக் கூட்டுவதற்குமட்டுமல்ல; தினந்தோறுங் கூட்டுமுயற்சி இயக்கத்தில் உண்டாகக்கூடிய முக்கியமான கடமைகளை வகிக்க, ராஜாங்கத்தார் இலாகாவைச் சேராத ஸ்தாபனம் இவ்வொன்றேயாகும். ஐக்கியமுயற்சியானது ஜனங்களின் உழைப்பால்தான் அபிவிருத்தியாகவேண்டும். வெளியுதவியை நாடினால் அதுவோங்கி வளர்கிறதற்கு அறிகுறியல்ல. ஐரோப்பா தேசங்களில், கூட்டுமுயற்சித் தொழிலானது ஜனங்களின் பிரயத்தனத்தாலும் ஊக்கத்தாலும் ஏற்பட்டு, மற்றஅநேக சௌகரியங்களுடன் ஜனங்களும் மிக்க அறிவுடன் கவர்ன்மெண்டாரோடு ஒத்துழைத்ததால், மிகவும் செழிப்பாய் வளர்ந்திருக்கிறது. ஆனால் இந்தியாவில் கவர்ன்மெண்டார்தான் முதலில் இதை ஆரம்பித்தது; இப்பொழுதும் நடத்திவருகிறார்கள். இம்மாதிரி அவர்களிடம் விட்டுவிட்டு, நாம் அதைக் கைக்கொள்ளாமலிருந்துவிட்டால், அவ்வியக்கம் அபிவிருத்தியடையாதென்பதிற் தடையில்லை.



கூட்டுமுயற்சித் தொழிலானது ஏற்பட்டு 10 வருஷகாலத்திற்குள் கவர்ன்மெண்டாருடைய பணவுதவியை அதிகமாய் எதிர்பார்க்காமல், சுயமாய் அபிவிருத்தியடைந்தது யாவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கலாம். மிகவும் சிரத்தையுடன் உழைத்துவரும் நிர்மாணங்கள் ஏற்பட்டாலல்லது, இவ்வித அபிவிருத்தி நிரம்ப காலத்திற்கு நடந்துவராது. தகுந்தபண முதவும் ஸ்தாபனங்கள் இல்லாததினால், இவ்வியக்கம் எல்லாப் பக்கங்களிலும் பரவுதலுக்கு மிகவும் தடையாயிருந்தது. ஸ்தல டிபாஸிட்டுகள் வந்துவிழும்படி அதிகக்கவனம் செலுத்தப்படாததினால், கூட்டுமுயற்சியின் இயக்கமானது சுயமாய் போஷிக்கக் கூடியதென்று சொல்லமுடியவில்லை. அப்பொழுதுதான் பொது ஜனங்கள் அதில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பதற் கறிகுறி. சிலபிரபலமான இடங்களிலும், சங்கங்களின்மேல் விஜாரணை, நிர்வாகம், முதலிய நடவடிக்கைகளில், ஜனங்கள் தலையிட்டுக் கொள்ளாதது ஐக்யமுயற்சியின் உண்மையான நோக்கங்களை அறியாததின் காரணமே! இம்மாதிரி விஷயங்களையெல்லாம் ஜனங்கள் நன்கறியும்படி, போதிக்கவேண்டிய காரியங்களிருக்கின்றன. ஐரோப்பியதேசங்களில்இக் கூட்டுமுயற்சி இயக்கம் அபிவிருத்தி யடைவதிலுண்டான இடையூறுகளையும் அவைகளை நீக்க ஏற்பட்ட உபாயங்களையும் நாம் உதாரணமாகவைத்துக்கொள்ளலாம். டென்மார்க்கு, பிரான்ஸ்,ஜெர்மனி, இடாலி, முதலிய தேசங்களில் இம்முறை எப்படிச் செழித்துவந்ததென்பதை வாசித்தறிந்தால் மிகவும் நலமாயிருக்கும். இப்பொழுது நம்முடைய காரியத்திற்கு நம் கிராமந்திரப் பக்கங்களை விசேஷமாய் ஒத்துவரும் ஆங்கிலேய நாடுகளிலுள்ள இம்முறையின் நிலைமையை அறிந்து நடந்தாற் போதும்.

1892௵த்தில் இங்கிலாந்தில் விவசாயத்தை அபிவிருத்திசெய்ய முதல்முதலில் ஏற்பாடு யெடுத்துக் கொள்ளப்பட்டது. வெவ்வேறு சங்கங்கள் உண்டாகி, பிறகு விளைவிப்பார்களுக்குள் ஒற்றுமையில்லாததாலும், விவசாயிகளொற்றுமைக்காததினாலும், முறிந்துபோயின. அதின்பிறகு டெபுடேஷன் ரிபோர்ட்டின்பேரிலும், காலக்கிரமத்தில் அறிந்துவந்தஅநுபோகத்தாலும் இங்கிலாண்டு, ஸ்காட்டுலெண்டு, ஐயர்லெண்டு முதலிய பிரிட்டிஷ் ராஜியங்களில் முறையே மூன்று ஸ்தாபனச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் செய்துவரும் வேலைகளில் முக்கியமானவைகள் பின்வருமாறு:—

1. ஐக்கியமுயற்சி விஷயமாய் போதனை செய்தல், பிரசங்கத்தில், பத்திரிகைகள் பிரசுரித்தல்;
2. சங்கஸ்தாபனஞ் செய்வதில் உதவுதல்; புத்திமதி சொல்லுதல்;
3. தங்களைச்சேர்ந்த சங்கங்களை பரிசோதனை செய்தல்;
4. சங்கங்களின் பொருட்டு ரலவாத சாஸ்திரிகளின் உதவியை

நாடுதல், தணக்குகளை ஒழுங்காய் வைத்தல், விளைபொருள்களை விருத்தி செய்து அவைகளை மார்க்கட்டுக்குத் தயார் செய்தனுப்புதல்;

.5. கூட்டு முயற்சி சம்பந்தமான சங்கங்களைக் கூட்டி, அவைகள் நிர்வாக ஆலோசனைகளுக்குத் தகுந்த யுக்தம் சொல்லுதல்;

.6. எளிய மனிதர்களின் நிலைமையை எவ்விதத்திலும் விருத்திய செய்ய ஐக்கிய முயற்சியை எல்லா முறைகளிலும் பாவச்செய்தல்;

.7. கூட்டு முயற்சி முறையில் விவசாயிகள் வயது காலத்தில் பின்சின் அடையும்படி ஸ்தாபனங்கள் ஏற்படுத்துதல்.

செய்யவேண்டியவேலை அதிகமாயிருக்கிறது;மற்றதேசங்களிற்போல் இந்தியாவிலும் கவர்ன்மெண்டார் சேராத ஓர் ஸ்தாபனமிருப்பது அவசியம். கவர்ன்மெண்டார் இவ்வேலையை எப்பொழுதும் செய்துவருவார்களென நினைப்பதுவீண். ஜனங்கள் பெரும்பான்மை படிப்பில்லாமலிருத்தலால் கவர்ன்மெண்டாரின் உதவியும் மேல் விஜாரணையும் இன்னும் வெகுகாலத்திற்கு இருப்பது நலம். ஆனால் இந்தஇயக்கத்தின் அபிவிருத்தியில் ஜனங்களே முயற்சி யெடுத்துக்கொள்ள காலம்வந்துவிட்டது. ஜனங்களின் ஆழ்ந்த ஆலோசனைகளைக் கொண்டே இவ்விஷயத்தை தகுந்த முறைகளில் வளர்ப்பதும் ஜனங்களெல்லாரும் இந்த நிர்மாணத்தை வரவர அபிமானிக்கும்படியாய்ச்செய்வதும், இந்தயூனியனின் நோக்கங்கள்.

---

## மதுரை கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரேஜிஸ்ட்ரார் ஆனரபில் திவான் பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்கள் எழுதியது.

மதுரையில் சமீபத்தில் நிகழ்ந்த மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களின் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களின் காப்பி ஒன்றை கூட்டுத் தொழில் வர்த்தமானிக்கனுப்ப நான் சந்தோஷப்படுகிறேன். கான்பரென்ஸானது முதல்நாளில் மதுரைஜில்லா கலெக்ட்டர், மிஸ்டர் A. R. நாப்அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்நடைப் பெற்றது. அவர் மதுரைஜில்லாவிற் கூட்டுத்தொழில் முயற்சி இதுவரையில் அபிவிருத்தி யடைந்ததற்குப் பெருமை யடைந்தும், இனிமேல் விருத்தியடைவதில் மிகவும் சிரத்தை யெடுத்துக்கொண்டும் வருகிறார். இந்த ஜில்லாவில் கூட்டுமுயற்சிக்காரர்களுக்கு முக்கியத்தலைவராயிருந்தும்,இக்கான்பரென்ஸ் நடைபெறுதற்கு முக்கிய மூலகாரணமுமாகிய மிஸ்டர் K. ராமசாமி அய்யர் அவர்கள் இக்கான்பரென்ஸுக்கு வராதபடி உடம்பு அசௌக்கியமானது மிகவும் விசனிக்கத்தக்கது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அநுபோகத்தில் நடக்கக்கூடிய தன்மையிலிருப்பதால் கான்ரென்ஸ் நட



வடிக்கைகளுடன் எனது குறிப்பை அனுப்பலானேன். எந்தயிடத்தில் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் நடை பெற்றாலும், அங்கு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாப் பிரசங்கங்களும் சம்பந்தமில்லாத் தீர்மானங்களுமில்லாமற்போவது மிகவுமரிது. அது அநுபோகத்திற் தெரிந்தவிஷயம். திவான் பகதூர் M. ஆதிநாராயணய்யா அவர்களின் திறமையான ஆலோசனைப்படி தீர்மானங்களையும் அவைகளின் வாசகங்களையும் சீர்திருத்த முதல் நாளிலேயே சப்கம்மிட்டி யொன்றை ஏற்படுத்தினதால், மதுரை கான்பரென்ஸானது மேற்கூறிய அபாயத்தினின்று தப்பிவிட்டது. சம்பந்தமில்லா விஷயங்கள் நீக்கப்பட்டன. சிறுவிஷயங்களிற் தொல்லைப்படுத்தும் பிரசங்கங்களில்லை. கான்பரென்ஸானது காலை 8-மணிக்குக் கூடி 10-மணிக்குள் தீர்மானங்களெல்லாம் எல்லாரும் திருப்தியடையும்படி முடிவு பெற்றபிறகு கலைந்தன. அடியிற்கண்ட தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன :—

1. மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் தகுந்த இடங்களில் மேல் விஜாரணை செய்யும் யூனியன்களேற்படுவது நலமென்று இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

2. கூட்டுத்தொழில் முயற்சிச் சங்கத்தின் மெம்பர்களொவ்வொருவரும், ஒருவருஷத்திற்கு ஒரு ரூபாய்க்குக் குறையாமல் பீதிபிடிக்கவேண்டுமென கான்பரென்ஸ் தீர்மானிக்கிறது.

3. கடன் வாங்கின தொகைகளை சரியான கெடுவிற் திருப்பிக் கொடுக்கும் வண்ணம் சங்கங்களின் நிர்வாக கம்மிட்டார்கள்,

(a) கடன் வாங்கப்பட்ட காரணங்களுக்குத் தகுந்தபடி திருப்பிக் கொடுக்கும் கெடுக்களை ஏற்படுத்துவது நலமென்றும், (b) கடன்களை சரியானதவணைகளிற் திருப்பிக்கொடுக்கக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும், இக்கான்பரெஸ் அபிப்பிராயப்படுகிறது.

4. ஐக்கிய முயற்சியை விருத்திசெய்ய சௌகரியமான ஸ்தலங்களில் குறித்த காலங்களில் சங்கங்கள் கூடவேண்டுமென கான்பரென்ஸ் நினைக்கிறது.

5. ஐக்கிய இயக்கத்தைப் பாவச்செய்யவும், சங்கங்களை மேல்விஜாரணை பண்ணவும், அவைகளுக்கு ஆலோசனை சொல்லவும், மதுரை ராமநாதபுரம் ஜில்லா பாங்கியானது கம்மிட்டி ஒன்றை நியமிக்கலாமென்று கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

6. இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதும் இனிமேலுமுண்டாகக்கூடிய ஐக்கியமுயற்சி நாணயச்சங்கங்கள், விவசாய முறைகளில் அபிவிருத்தி செய்ய தைரியமுண்டாக்குவண்ணம் மெம்பர்களுக்கு கூட்டு

நபர்கள் ஜர்மீன்பேரில் கடன்கொடுக்க வேண்டுமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது; ஆனால் இவ்விஷயமாய்ப் பிரத்தியேக ஐக்கிய முயற்சிச் சங்கங்கள் ஏற்பட்டால் மிகவும்நல்லது.

---

## வியாபாரமும் ஐக்கிய முயற்சியும்.

கூட்டுத்தொழில் சங்கங்களின் அஸிஸ்டெண்டு
ரெஜிஸ்ட்ரார் மிஸ்டர் K. நாகேஸ்வரராவ் பன்துலுகாரு எழுதியது.

நம்முடைய தேசத்து வியாபாரமானது அந்நியமார்க்கட்டில் இன்னும் கீர்த்தியெடுக்கவில்லை. இத்தேசத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சாமான்களின் விலைகள் பிரசுரிக்கப்பட்ட ஏற்றுமதித்தீர்வை பட்டியில் விசேஷமாய்கடைசியிடங்களில் தான் குறிக்கப்பட்டிருக்கின்றன. இக்குறைவான கிரயங்கள் நம்முடைய தேசத்து விளைபொருள்களின் தாழ்வாலேற்பட்டதல்ல; அப்படிப்பார்த்தால் சிலவைகள் மற்றதேசங்களிலுண்டாவதைக்காட்டிலும் மிகவும் உறுதியாயிருக்கின்றன. நம்முடைய நெல்லும், கோதுமையும் முதல்தினுசைச் சேர்ந்தவைகளென்று வகுக்கப்பட்டிருக்கின்றன: நம்முடைய எண்ணெய்விதைகள் தாழ்ந்தவைகளல்ல: நம்முடைய பஞ்சுசரக்கானது வெளிதேசங்களால் மிகுதியாய் விரும்பப்படுகிறது.

இவைகள் உற்பத்தி செய்பவரிடமிருந்து உபயோகிப்பவரிடம் போய்ச் சேருவதற்குள் இவைகளின் பழுதுநேரிடுகிறது. நடுவிலிருந்து வேலைசெய்துவரும் தரகுக்காரர்கள் இதற்குக்காரணமாவார்கள். தரகுக்காரர்கள் அதிகமாயிருப்பதால், அவர்களிடமிருந்து இச்சாமான்கள் போவதற்குள், இவைகளின் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொருதரகுக்காரரும் எவ்வழியாலாவது தாம் ஊதியமடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் அநேக உபாயங்களைக் கண்டுபிடித்து சரக்குகளை மற்றவைகளுடன் கலந்தாவது இடையை அதிகமாக்குகிறார். குறைந்த இடைகளும், படிகளும் உபயோகப்படுத்துகிறார்கள். இச்செய்கையால் விற்பனை சாமான்கள் மற்ற தேசங்களில் தலையெடுக்கிறதில்லை. தேசத்து நாணயமும் குறைந்து போகிறது. ஏற்றுமதியான சரக்குகளின் விலைகளும் ஜனங்கள் விரும்பாததினால் குறைகின்றன. இதினால் விளைபொருளை உற்பத்தி செய்பவர் கஷ்டமடைகிறாரே யொழிய இக் கண்ணியக் குறைவான செய்கைகளுக்கு காரணமான தரகுக்காரர் தம்முடைய கமிஷனை வாங்கிக்கொண்டு நஷ்டமில்லாமற் தப்பித்துக் கொள்ளுகிறார். சாகுபடி செய்பவர் விளைபொருளின் சரியான கிரயத்தை யடைகிறதில்லை. ஆகையால் [illegible] கெட்ட செய்கையால் அவர் கஷ்டப்படுகிறார். ஓர் தேசத்து



ஸ்திரமான விளைபொருள்கள் இப்படிக்குறைவான விலைகளுக்கு விற்கப்பட்டால் உற்பத்தியாவதும் குறையும், தேசத்திற்கு அநேக விதங்களில் நஷ்டமுண்டாகும்.

தரகுக்காரர்கள் சரக்குகளை பழுதுசெய்யும் அநேக வழிகளில் சிலவற்றை இங்குகூறுகிறேன்:—

பஞ்சு:—பஞ்சை தண்ணீரில் நனைப்பது மிகவும் ஸகஜம். பஞ்சுயந்திரத்தினால் பருத்திக்கொட்டை நீக்கப்பட்டபிறகு மூட்டைகளாக நெருக்கப்படும்பொழுது தண்ணீர் போடுகிறார்கள். இதினால் தரகுக்காரர்களடையும்பலன் யாதெனில், தண்ணீர் சேர்ப்பதற்குத் தகுந்தாற்போல், 100-க்கு 2-லிருந்து 5 வரையில்வீதம் மூட்டையின் இடையானது அதிகரிக்கிறது. ஆனால் இத்தண்ணீர்கலந்த பஞ்சுமூட்டையானது இறக்குமதி யிடத்திற் சேர்ந்தவுடன் உள்ளெல்லாம் அழுகிப்போய் ஓர்விததுர்நாற்றத்தை வீசுகிறது; வெகுதூரம் செல்லுவதால் மூட்டையின் வெளிப்பக்கம் காய்ந்து எப்பொழுதும் போல் ஒழுங்கா யிருப்பதாய்த் தோற்றுகின்றன. மோசஞ்செய்தது கடைசியிற்றான் தெரியவருகிறது. நெசவு யந்திரங்களையுடையவர்கள் இதைவாங்கி மோசம் போகாதபடி, ஐரோப்பியா, அமெரிக்கா தேசங்களில் சாமான்கள் வாங்கப்படும் ஆபீசுகளில் தண்ணீரில் நனைக்கப்பட்ட பஞ்சுமூட்டையின் படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன. 1913௵த்திய காங்கிரஸில் நியூயார்க் காட்டன் எக்ஸ்சேஞ்சு (New york Cotton Exchange) அக்ராசனாதிபதி சொன்னதாவது:—இந்த யுனைடெட் ஸ்டேட்ஸில், மிஸ்டர். ஜான்ஸன் விவரித்தபடி, கொட்டை யெடுப்பதிலும், மூட்டையாய் நெருக்குவதிலும் பஞ்சில்தண்ணீரை யூற்றுவதில்லை. அமெரிக்காதேசத்து பஞ்சு விளைவிப்பவரின் கண்ணியத்தாலும் யோக்கியதையிலும் நான்மிகவும் பெருமையடைகிறேன். விளைவிப்பவராவது அல்லது தரகுக்காரராவது அல்லது கொட்டை யெடுப்பவராவது இந்தியாவில் நடந்து வரும் மோசவழிகளை இத்தேசத்தில் அநுஷ்டித்தால், சட்டப்படி அவர்கள் ஜெயிலுக்கு அனுப்பப்படுவார்கள்.

நிலக்கடலை:—ஓர் காலத்தில் கடலைப்புண்ணாக்கு இத்தேசத்திலிருந்து மிகுதியாய் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. இடையை அதிகமாய்க்காண்பிக்க சிறு மணல்கள் சேர்த்ததினால், அச்சரக்கின் ஏற்றுமதியே இப்பொழுது நின்றுபோய் விட்டது. தரகுக்காரர் செய்யும் இவ்விதமோசத்தால், தென்னிந்தியாவிலுள்ள ஓர் விலையுயர்ந்த வியாபாரமொன்றை நாமிழந்து விட்டோமென்று தொழில் இலாகா டைரெக்டரவர்கள் வருத்தப்படுகிறார்.

அரிசி:—அரிசியானது வெள்ளையாயும், பளபளப்பாயும் தோன்றும்படி, சுண்ணாம்புத்தண்ணீரை அரிசிக்குவியலில் தெளிக்கிறது வழக்கம்.

இப்படிச் சுண்ணாம்பு சேர்த்தது மிகவும் கொஞ்சமாயிருந்தபோதிலும், அரிசியானது சமயல் செய்தபிறகு குழைந்தும் ருசிகேடாகவும் போய் விடுகிறது. இதற்காகவே தென்னாப்பிரிக்காவில் ஜனங்கள் சென்னை ராஜதானியிலிருந்து வரும் உயர்ந்த அரிசியை நீக்கி, பர்மாதேசத்து அரிசி மட்டமாயிருந்தபோதிலும் அதை வாங்குகிறார்கள்.

நெய்:— இவ்விடத்தில் நெய்யுடன் கொழுப்பைக்கலப்பது யாவருமறிந்த விஷயம். கலப்பில்லாத நெய்யானது, விலையதிகமாயிருந்தபோதிலும், மதராஸ் முதலிய பெரியயிடங்களிற் தகுந்த வியாபாரமாகும். இச்சரக்கில் மோசஞ்செய்யும் வழிகள் அதிகமாயிருத்தலால், சுத்தமான நெய் நகரங்களிற்கிடைப்பது மிகவுமரிது.

தரகுக்காரர் செய்துவரும் இழிவானவழிகள் இன்னும் பலவுள. மற்றதேசங்களில் அநுபோகத்தால் அறிந்து நடக்கிறபடி இவ்விடத்திலும் வியாபார விஷயமாய் கூட்டுமுயற்சி ஸ்தாபனங்களேற்பட்டால், மேற்கூறிய கெடுதிகள் மறைந்தாவது அல்லது மிகவும் குறைந்தாவது போய்விடும். விளைபொருள்களை விற்பதற்கு ஓர் ஐக்கிய முயற்சிச் சங்கமேற்பட்டால், தரகுக்காரரின் வரியானது நின்றுவிடும். வாங்கிக் கொள்ளும் ஸ்திர மார்க்கெட்டு ஒன்று ஏற்படும். நடவடிக்கைகளின் யோக்கியதையால் நாணத்தைக் காப்பாற்றும்; நிரம்ப சரக்குகள் ஓர் இடத்திலிருந்து அனுப்பப் படுதலால் மார்க்கட்டு சீக்கிரம் கிடைக்கும்; தகுந்தவிலைக்கும் விற்கப்படும். சாகுபடி செய்பவர்களும் நல்ல பலன்கள் கிடைப்பதால் நூதன சாகுபடிமுறைகளை உபயோகப்படுத்தி விளைபொருள்களைவிருத்தி செய்வார்கள்.

ஆகையால் கூட்டுத்தொழில் முயற்சியின் உதவியால் நம்முடைய விளைபொருள்களை விற்பதற்கேற்பாடுசெய்து, சாகுபடி செய்பவர்களது நிலைமையை உயர்த்துவதுடன், நம்முடைய வியாபாரிகளின் யோக்கியதையை அதிகப்படுத்தி, வெளிதேசங்களில் நம் கண்ணியத்தை நிலைநிறுத்துமென்று நம்பப்படுகிறது.

---

## நபர் நாணயம்.

கூட்டுறவு முறைக்கு நாணய உத்தரவாதத்தை ஆதாரமாக்கி கடன் கொடுப்பதில் தப்பான எண்ணம் அதிகமாகப் பரவியிருக்கிறது. ஆகையால் இந்த ஏற்பாடு விருத்திக்கு வருவதற்கு ஏதுவாக நாணய உத்தரவாதத்தின் ஸ்வரூபத்தையும் அதன் வியாப்தி (உபயோகத்தையும்) யையும், எவ்வளவு தூரத்திற்கும் அதை உபயோகிக்கலாம் என்றும், இவ்வித

* மிஸ்டர் இலமாகி எழுதிய ஆங்கிலேய வியாசத்திலிருந்து சிப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. கிருஷ்ணசாமி அய்யரால் இது மொழிபெயர்க்கப்பட்டது.



நாணயத்தின் பிரயோஜனத்தையும் சாத்தியமானவரையில் விவரமாகத் தெரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது.

1. நாணயம் என்பது என்ன? நாணயம் என்றால் நம்பிக்கை. இந்த நம்பிக்கையானது ஒருவரொருவருக்குள் அதிகப்படத்தான் மனுஷியர்களுக்குள் நாகரீகம் விருத்திக்கு வந்திருக்கிறதென்று சொல்லவேண்டும். ஒருவரையொருவர் எவ்வளவுமட்டில் நம்புகிறார்களோ அவ்வளவிற்கு கூட்டுத்தொழில் சாத்தியமாகும். இந்த விஷயத்தையே வேறொரு வழியாக கவனித்தால் தொழில் முறையில் வேலைகளைப்பிரித்தல்(Division of labour) என்னும் விஷயமும் சாத்தியமாகும். அதாவது 'ஒரு தொழிற்சாலையில் வேலைக்கு அமர்ந்திருப்பவர்கள் ஒருவரையொருவர் நம்பியும் அந்தத் தொழிலுக்குரிய பற்பல அம்சங்களில் பலர் ஒன்றாக வேலை செய்தால்தான் தொழில் பிரயோஜனமுள்ளதாக முடியும்.' நாகரீகம் அதிகமாகி வருந்தோறும் ஜனங்களுடைய சகல நடவடிக்கைகளும் நாணயத்தைப் பொருந்தியே இருக்கிறது. பணம் லேவாதேவி செய்வதில்தான் நாணயத்தின் இந்த அம்சம் நமக்கு எளிதில் திருஷ்டாந்தத்தில் தெரிய வருகிறது. இதை நாம் இவ்வாறு கவனித்தால் நாணயத்தை ஒருவன் தாம் வாங்கக்கூடிய கடனுக்குரிய யோக்கியதையென்று சொல்லலாம். இதைப்பற்றித்தான் நாம் இவ்விடத்தில் பிரஸ்தாபிக்க உத்தேசிக்கிறோம். ஒருவரிடம் அதாவது கடன் கொடுப்பவரிடமிருந்து மற்றொருவர் அதாவது, கடன் வாங்குபவர் தாம் (திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு) வாங்கும் தொகைக்கு கடன் என்றும் அம்முதலை உபயோகப்படுத்துவதற்குக் கைம்மாறாகச் செலுத்தும் தொகைக்கு வட்டியென்றும் பெயர்.

2. நாணயத்தின் பல பேதங்கள்:—கடனுக்கு நாணயம் உதவவேண்டுமானால் அந்தக் கடனுக்கு ஒருவிதமான ஆதாரம் வேண்டும். அவ்வித ஆதாரமாகவாவது, அக்கடனை வாங்குபவர் கொடுத்தவருக்குத் திருப்பிச் செலுத்துவதற்குள்ள உத்தரவாதத்தை கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். இவ்வித உத்தரவாதம் இன்னவிதமானதென்று எடுத்து ஸ்பஷ்டமாக கண்டிருக்கலாம். அப்படிக்கில்லாமல் கருத்திலிருந்தறியலாம். இந்த ஆதாரம் பலவிதமாகவிருக்கலாம். கடனுக்கு ஈடுகாட்டும் சொத்துக்களுக்கு ஆதாரத்திற்குத் தகுந்தபடி நாணயம் சாதாரணமாக பலவாறுபேதப்படும். ஈடு சொத்துக்கள், நிலம், வீடு முதலிய அசையாப் பொருள்களாகவிருந்தால், அதற்கு யதார்த்த (அடமான) ஜவாப்தாரி என்று சொல்லலாம். அந்த சொத்துக்கள் நகை, கட்டில், மேஜை, நாற்காலி, இன்னும் இதுபோன்ற அசையும் பொருளாகவிருந்தால் அதற்கு கொதுவையென்றும், கடனுக்குரிய ஜவாப்தாரியானது கடன் வாங்குபவரின் பிரத்யக்ஷத்தில் பொருளாக காணக் கூடிய ஜங்கம ஸ்தாவர

சொத்துக்களல்லாமல், அவருடைய நிலைமை, அந்தஸ்து, ஜீவனோபாயம், யோக்கிப்தாம்சங்களைப் பொருத்திருந்தால் அதற்கு நாணய உத்தரவாதம் அல்லது நாணயம் என்றும் சொல்லலாம்.

3. நாணய வியாபாரிகள்:—நாணயத்தைப் புழங்குகிறவர்களைப் பொருத்தும் நாணயம் பலவாறு பேதப்படும். (இவர் தனித்தனியே இருந்துகொண்டு)—முக்கியமாக பணத்திற்கு முடையிருக்கும் எழுத்தரியாததற்குறிகளுடன் பழகிவருபவருக்கு சாவ்கார்களென்று பெயர். அப்படிக்கில்லாமல், சில்லரை வியாபாரிகளோடாவது, வர்த்தகர்களோடாவது தொழிலாளிகளோடாவது பணம் லாவாதேவி செய்பவர்களுக்கு பாங்கிக்காரர் (பாங்கர்) கள் என்றுபெயர். பொதுஜனங்களுக்கு அதிக சௌகர்யமாக பற்றுவரவு செய்வதற்காக ஏராளமான தொகைகளை உபயோகப்படுத்துவதற்கு ஏதுவான வகைகளை உத்தேசித்து அதிகப் புள்ளிகள் சேர்ந்து கூட்டு லாவாதேவி செய்கிறார்கள். அதற்கு பாங்குஎன்று பெயர். லாவாதேவியானது இவ்விதம் உருப்பட்டு ஏற்பாடாகி பெரிய கைத்தொழில் ஸ்தலங்களிலும் வர்த்தக ஸ்தலங்களிலும் மட்டும் நடந்து வருகிறது. ஆகையால் தூரத்திலுள்ள கிராமப்பிரதேசங்களின் பாகங்களில் அநேகமாய் இப்பணத்தொழிலை முக்கியமாக நடத்துகிறவர்கள் நல்லொழுக்கமும் தயவு தாக்ஷணியமு மில்லாதவர்களாக விருக்கிறார்கள்.

4. நாணய உருப்படி:—சாதாரணமாக பணம் பற்றுவரவு செய்வதில் நாணயம் உருப்படாமல் ஏற்பாட்டிற்குட்படாமல் இருக்கிறது. இந்த நாணயமே நன்றாக உருப்பட்டால் பாங்குகளாகும். லாரண்ட் (Laurent) பண்டிதர் சொல்லுகிறபிரகாரம் "நாணயம் பணத்தை உண்டாக்குவதில்லை. ஆனால் அப்பணத்தை நன்றாக நடமாடச் செய்கிறது." அளவின்றியில் அதின் உபயோகங்களைப் பெருக்குகிறது தண்டவாளங்கள் சக்கிரங்களை வேகமாக உருளச்செய்வதில் சகாயமாயிருப்பதுபோலவே, நாணயம் உருப்படுவதால் பணத்தை வேண்டியபடி பரவச்செய்கிறது. ஆகையால், சாதாரண லாவாதேவியை மாட்டுவண்டி சவாரிக்கும் பாங்கு பற்றுவரவுரையில் பிரயாணத்திற்கும் ஒப்பிடலாம். ஏராளமான சறக்குகளையோ ஜனங்களையோ அதிக தூரத்திற்கு குறைந்த கூலிக்கு ரையில் வழிகொண்டு போவது எப்படி சாத்தியமோ அவ்வாறே, பாங்கிலிருந்து பெருந்தொகைகள் தணிந்த வட்டிக்கு கடன்கொடுக்கமுடியும். எந்த கைத்தொழிலும் நாணயம் உருப்படாமல் வியாபாரமும் விருத்தியடையாது வாஸ்தவத்தில் நாணயமேதான் உருப்பட்டு உலகத்தை ஆட்சிகொண்டிருக்கிறது. எல்லாவிடங்களிலும் பாங்குகளை ஏற்படுத்தக்கூடாதா? வென்றால், வாஸ்தவத்தில் பாங்குகளும் வாஸ்தவத்தில் எவ்விதமான கூட்டு ஏற்பாடுகளும், பொதுஜன அபிப்பிராயம் ஏற்கு மிடங்களிலும், வர்த்த



மானி (பத்திரிகை)கள் திடமாகவிருக்கு மிடங்களிலும் மட்டுமே அபிவிருத்தி யடைந்துவருகின்றன. இவ்வம்சங்கள் எவ்விடத் தில்லையோ, அவ்விடங்களிலெல்லாம், லாவாதேவியும், வர்த்தகமும், கைத்தொழிலும், வகைதொகை யில்லாமல் ஏதோவொருமாதிரியாக நடக்கவேண்டி யிருக்கிறது. அவைகளை ஒழுங்குபடுத்துவதற்குப்படும் பாடுகளெல்லாம் வீணே தவிரவும், பெரிய நகரங்களில் குடியிருந்துவரும் பெரிய மனுஷியர்களுக்கு (வியாபாரிகள் தொழிலாளிகள்) வேண்டிய சௌகரியத்திற் காகவென்றே ஏற்பட்டிருக்கும் கூட்டு ஏற்பாடுகளெல்லாம் தொலைவழியில் கிராமாந்திரங்களில் குடியிருப்பவர்களுக்கு உதவவும் முடியாது. நல்லவேளையாக மேல் விவரித்த கூட்டு ஏற்பாடுகள் பரவாமல் காலியாயிருந்த விடங்களில் சிறுதரத்தில் லாவாதேவிக்கும், வியாபாரத்திற்கும், கைக்கொழிலுக்கும் வேண்டிய ஏற்பாடுகளை உருப்படச் செய்வதற்காகவென்றே ஐச்கியமுறை ஏற்பாடாய்வருகிறது. நாணயத்தைச் சிறுகச்சிறுக ஒழுங்குப் படுத்தி ஏற்பாட்டுக்குட்படுத்தினால் அது நிமித்தம் அவைகளை (சிறு சங்கங்களை) நகரத் தலைப்பிலிருக்கும் பெருத்த பாங்குகளுக்குச் சேர்த்து வைக்கக் கூடும். இதற்கு திருஷ்டாந்தமாக சிறு இடங்களில் இருக்கும் வர்த்தகத்தைப் பெருத்தவியாபார ஸ்தலங்களுக்குக் கொண்டுவருவதற்காக கிளைரையில்கள் பெரிய ரையில்களுடன் இணைக்கப்பட்டிருப்பதையும் அதனால் இருதரத்தாருக்கும் சௌகரிய முண்டாயிருப்பதையும் எடுத்துச்சொல்லலாம்.

5. கடன் உத்திரவாதம்:—ஏற்கனவே கூறியபிரகாரம் கடனுக்கு எப்போதும் ஏதாவது ஆதாரம் இருந்தேதீரவேண்டும். கடனுக்கு ஆதாரம் ஈடோ அல்லது கொதுவையோ அதற்குத் தகுந்தபடி முறையே கடனாகவு மிருக்கலாம். ஆனால் அசையாப் பொருளோ அல்லது அசையும் பொருளோ ஆகும். நாணயக் கடனென்றால் கடன் வாங்குகிறவருடைய யோக்கியதை, அந்தஸ்து, ஜீவனோபாயம் இதுகளைத்தான் முக்கியமாகப் பொருத்திருக்கிறது. ஏனென்றால் யோக்கியதை, அந்தஸ்து, ஜீவனோபாயம் இவைகள் ஒருவனுக்கு இருக்கிறதென்றால், கடன் கொடுப்பவர் வாங்குகிறவருக்கு கொடுக்கும் கடனுக்கு ஈடுசெய்வதற்குப் போதுமான சொத்துக்கள் ஸ்தாவரமோ ஜங்கமமோ இருக்கிறதென்பதைக் கருதியேதான் நடவடிக்கை நடந்துவருகிறது. இவ்விதமாக ஒருவருக்குக் கடன் கொடுக்கும்போது அவருடைய ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை யெதிர்பார்த்துக்கொண்டுதான் கடன்கள் கொடுக்கப்படுகின்றனவென்றால் அவருக்கு ஏதோ சொத்துக்களிருக்கின்றனவென்பதாக எல்லோருக்கும் தெரிந்துதான் அவருக்கு கடன்கொடுக்கப்படுகிறது.

6. நாணயக்கடன்:—மேற்கூறியவிதம் நடக்கும் லாவாதேவியல்லாமல் வேறொருவிதத்திலும் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகிறது. அந்தமுறையில் ஒருவருக்கிருக்கும் ஸ்தாவர ஜங்கம ஆஸ்தியை எதிர்பார்க்காமல் கடனைத் தீர்க்கும்பொருட்டு கடன்தாருடைய நன்னடக்கையை மட்டுமே கவனிக்கப்படுகிறது. வாஸ்தவத்தில் இந்த லாவாதேவிக்குத்தான் நாணயக்கடன் என்ற பெயர்தகும். அதுதான் இந்த வியாசத்தில் பிரஸ்தாவிக்கப்படும் விஷயம்.

7. நல்லொழுக்கம் (நன்னடக்கையே) அதற்காதாரம்:—இந்த லாவாதேவிக்குத்தான் நாணயக்கடன் என்று பெயர். நன்னடக்கை அல்லது நல்லொழுக்க)க்கடன் என்று சொன்னாலும் தகும். ஆனால், இதுவரையில் சொத்துமட்டுமில்லாமல் நன்னடக்கை மட்டுமேயிருந்தால் அதை மாத்திரமே ஆதாரமாக்கிக் கடன்கொடுப்பது வழக்கமாயில்லை. ஆகையினால், பண்ணை வேலையாட்கள், தொழிலாளிகள், சில்லரை வியாபாரிகள், அத்தக்கூலியாட்கள் பணம் படைக்காத எழுத்துவேலைக்காரர்கள், இன்னும் இவரைப்போன்ற ஸ்திரசர ஆஸ்தியில்லாதவர்களுக்கு பணம் வேண்டியபோது கொடுமையான நிர்ப்பந்தங்களின் ஷரத்துக்கள் இல்லாமல் கடன் கிடைப்பதில்லை. அதின் பலனாக கொடுத்தவர் வாங்கினவர் ஆகிய இருதரத்தாருக்கும் நல்லொழுக்கத்தைக் கொடுத்துவிடுகிறது. ஆனால் கூட்டுறவு முறை ஏற்பட்டபிறகு நன்னடக்கையையே முக்கிய ஆதாரமாக்கி அந்த ஆதாரவின்மேல் நாணயக்கடன் அநுஷ்டானத்திற்கு சலாவணியிலிருந்து வந்திருக்கிறது.

8. நன்னடக்கை என்பது என்ன? நாணயத்திற்கு ஆதாரமாகக்கூடிய நன்னடக்கையின் சுபாவமென்ன? ஒரு சிறு பண்ணை வேலையாள், அல்லது ஒரு தொழிலாளி, வியாபாரி அல்லது கூலியாள் ஆரோகதிடகாரனாயிருப்பதுடன் எவ்விதமான சொத்துமில்லாதவனாக விருந்தபோதிலும், தன் தொழிலுக்கு வேண்டிய தேகசௌக்கியமும், சாமர்த்தியமும் தன்வேலையைச் சரிவரச் செய்துமுடிக்க ஊக்கமுள்ளவனாயிருப்பதாயிருந்து தன் தொழிலுக்குரிய சாமான்களை வாங்குவதற்காவது, தன் குடும்பச் செலவுக்காவது கடன் வேண்டியிருந்தால் அந்தக் கடனுக்கு ஈடுகாட்ட அவனிடத்தில் என்ன இருக்கிறது? ஸ்தாவர ஜங்கம சொத்தோ அவனுக்குக் கிடையாது. ஆகையால் தன் கடனுக்கு தான் ஜவாபுசொல்லக்கூடியதெல்லாம் என்னவென்றால் தன் தொழில் திறமையும் தன் வேலைசெய்ய ஊக்கமுமேதான்.

இம்மாதிரி வேலைசெய்து சம்பாதிக்கும் சம்பளம் அவனுக்கு சொத்தாகும். அவ்வித சொத்தே அவன் வாங்கும் கடனுக்கு ஆதாரமாகச் சொல்லலாம். ஆயினும் அவ்விதம் தன் கூலியல்லது சம்பாத்தியத்திலிருந்து



ஏதேனும் ஒரு பாகத்தையாவது தான் வாங்கியிருக்கும் கடனுக்கு அவர் திருப்பிச் செலுத்துவது நிச்சயமென்ன? இதற்குத்தான் பெரும்பான்மையும் அவருடைய நன்னடக்கையை நம்பவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தை நிச்சயப்படுத்துவதற்காக, கடன் வாங்குகிறவர் நல்ல நம்பிக்கையுடையவர்தானென்று சகஜமாக எல்லாருக்கும் தெரியுமாவென்றும், தன் சம்பாத்தியத்திலிருந்து கிடைக்கக்கூடிய பணம் முழுவதுமோ அதின் ஏதேனும் ஒருபாகமோ வீண்செலவு செய்யும் வழக்கமவருக்கில்லையாவென்றும், தம் வேலையில் கஷ்டப்பட்டு ஊக்கத்தோடு வேலைசெய்வாராவென்றும், மொத்தத்தில் அவருக்கு உண்மை செட்டு, முன்னறவு, முதலிய குணங்களுக்கு ஆதாரமான குணங்களிருக்கின்றனவாவென்று நிதானித்துத் தீர்மானிக்கவேண்டும்.

9. யோக்கியதை, உழைப்புசெட்டு (சுருக்கிச்செலவு) இவ்விதம் இருக்கவேண்டுமென்ற இஷ்டமட்டிலுமே இருந்தால் போதாது. கடன்காரருக்கு தான் கடன்வேண்டும்போது முதலாளியைமோசம் செய்யவேண்டுமென்ற எண்ணம் கடன் புள்ளிகளுக்கு இல்லாமலேயிருக்கலாம். ஆனால், அவர்மட்டும் பாடுபட்டு அதனால் பணத்தை சம்பாதிக்காமலிருந்தாலும்சரி அல்லது எண்ணமட்டுமிருந்தும் அவர் பணத்தை மிகுத்துவைக்கும் வழக்கமில்லாவிட்டாலும் சரி, எவ்விதத்திலும் கடன்தீர ஏதுவிராது. ஆகையால் நன்னடக்கை நாணயத்திற்காதாரமாக வேண்டுமானால் அநுஷ்டானத்திலேயே முக்கிய குணங்களாகிய யோக்கியதை,உழைப்பு, சிக்கனம் இம்மூன்றும் அமைந்திருக்கவேண்டும்.

10. கூட்டுறவினால் இதுவே கைமுதலாகும்:—இன்றியமையாத ஆதாரமான நன்னடக்கையிருக்குமாயின் அது மூலமாக எவ்விதம் பொருள் கைகூடும்? ஏனென்றால், நன்னடக்கைமட்டுமே ஆஸ்தியாக உடையவர்களுக்கு சாதாரணமாகக் கடன் கிடைப்பது சகஜமில்லை. இதற்குக் காரணமுண்டு. நன்னடக்கையின் அருமையும் பெருமையும் அறிந்தவர்மட்டுமே அதற்கு விலை மதிப்பார்கள். கிராமாந்திரத்தில் வசிப்பவனுக்கு நன்னடக்கை இருந்தால் பட்டிணத்து பாங்கருக்கு அது எவ்விதம் தெரியவரும். ஒரு சாதாரண பாங்கருக்குங்கூட அதே ஊரிலுள்ள சாதாரணமான அந்தஸ்துள்ளவர்களைத் தெரிவது அசாத்தியம். அப்படியே இல்லாமல், தெரிந்திருந்தாலும் அவர்களுடன் கூடச் சில்லரையாக வரவு செலவுச் செய்ய சட்டை செய்வார்களா? ஆகையால்தான், இம்மாதிரியான சிறுதரத்தவர்களை உத்தேசித்து அக்கம்பக்கத்திலுள்ள சாவ்கார்கள் நாணய (பண்) வர்த்தகம் நடத்துகிறார்கள். அப்படிச் செய்வதில் கடன் வாங்குகிறவர்களுக்கு நஷ்டத்திற்கு காரணம் ஏற்படுகிறது. சாவ்காரர்களுக்கோவென்றால் எப்பொழுதும் லாபம் கிடைப்பதென்பதும் நிச்சய

மில்லை. அப்படியானால், சிறுதாத்தாருக்கு வேண்டும் கடன்களுக்கு எவ்விதம் சௌகரியமாய் கிடைக்கும்படி செய்யலாம்.. இதற்கு இதுவரையிற் தேடி கண்டு பிடித்திருக்கிற மருந்து கூட்டுறவு முறை ஒன்றேதான். பொன் துளிகள் நாடெங்கும் சிதறிக்கிடந்தாலும் நகரத்து சாவ்காரி எவனும் அவைகளுக்கு ரொக்கம் கொடுத்து மாற்றிக்கொள்ள விரும்பமாட்டான். அவ்விதமில்லாமல், அநேகம் சிறு துளிகளை ஒன்றாகச் சேர்த்துருக்கி கட்டியாக்கிவைத்தால் எந்த சாவ்காரும் அதற்கு ரொக்கம் கொடுத்து மாற்றிக்கொள்வான். இப்படியே நன்னடக்கையுள்ள ஜனங்களை ஒரு பொது காரியத்திற்காக, ஒன்றாகக் கூட்டி சேர்ப்பதுதான் ஐக்கிய முறையென்று பெயர். அவ்விதப் பொது பிரயோஜனமானது நாணயத்தை உத்தேசித்திருந்தால் அதற்கு ஐக்கிய நாணயமென்று பெயர்.

நாணயக் கடனுக்குறிய முக்கிய அம்சங்கள்:—மேல் விவரித்த அம்சங்களாகிய நாணயக் கடனுக்குறிய சுபாவங்களைச் சுருக்கிச் சொன்னதிலிருந்து, அவ்விதம் நாணயக் கடனுக்கு ஆதாரமான முதலாகச் செய்வதற்கு ஏதுவான சாதனங்களென்னவென்பது நமக்கு தெரிந்திருக்கிறது. அம்முக்கிய அம்சங்களை இனி யெடுத்துக்கூறுவோம்.

(பின் தொடரும்.)

---

# ஐக்கிய விவசாயச் சங்கங்கள்.

(வடமலைபுரம் ம-ா-ா-ஸ்ரீ ஆனந்தராவ் அவர்கள் எழுதியது)

ஐக்கிய சங்கங்களின் அபிவிருத்தி விஷயமாய் சட்டம் யேற்பட்ட நாள்முதல் நாணயச் சங்கங்கள் தான் விருத்தியடைந்து வருகின்றன. யேனெனில் 1904-ம் வருஷத்தில் யேற்பட்ட சட்டமானது விசேஷமாய் நாணயச் சங்கங்களை குறித்தே பேசப்பட்டிருந்தது. ஐக்கிய இயக்கம் யெல்லா விதத்திலும் நன்மை உண்டாக்க வேணுமென்றே ஷை சட்டத்தைத் திருத்தி 1912-ம்வருஷத்தில் புதுச்சட்டம் யேற்படுத்திருக்கிறார்கள். புதுச்சட்டம் யேற்பட்டும் இதரவிஷயங்களின் அபிவிர்த்தியை நோக்கினால் இப்பொழுது விர்த்தியடைந்து வருவதைவிட இன்னும் யெத்தனையோ மடங்கு ஜாஸ்தியாய் விருத்திக்கு வரவேண்டியதுண்டு. இப்பொழுது நாணயச்சங்கத்தைப்போல் விவசாய ஐக்கிய சங்கங்கள் விர்த்தியடையவேண்டிய நியாய மிருக்கிறது. யேனெனில் நாணயச்சங்கம் தன் மெம்பருக்கு தொகையை சகாய வட்டிக்குக் கடன் கொடுக்குமென்ற எண்ணத்தைத்தவிர மற்ற விதங்களில் அச்சங்கம் ஒருவித சௌக்கரியமும் செய்ய முடியாது. நமதுதேசமோ விவசாயிகள் பெருத்ததேசம். விவசாயத்திற்கு வேண்டிய சர்வதானங்கள் செய்துகொள்ள வேண்டியது அவசியம். இதுவரையில் அவரவர்கள் செய்துகொண்ட சாதகங்கள் தனித்தனியே செய்து



கொள்ளுவதில் ஜாஸ்தி சிரமும் நஷ்டமுமுண்டு. அதைப் போக்குவதற்கு ஒரு சங்கமாக யேற்பாடுசெய்துகொண்டு அதில் சேருகிறவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் மொத்தமாய் செய்துகொள்ளுவதில் லாபமுண்டு. ஐக்கிய முறையால் விவசாயச் சங்கம் ஒன்று யேற்படுத்திக் கொண்டால் அதற்கு விவசாய டிபார்டுமெண்டார் வேண்டிய உதவிசெய்வார்கள். விவசாயிகளுக்கு முக்கியமாய்வேண்டியது, விதை, விவசாயக் கருவிகள். இவைகளை இப்பொழுது விவசாயிகள் சேகரித்துக் கொள்ளும் மாதிரி விசனகரமானது. ஒவ்வொருவரும் தனித்தனியே விதைக்கு அலையவேண்டும். சரியான யிடத்தில் வாங்கிவருவதற்கு ஒருவரால் முடியாது. சங்கமாகச் சேர்ந்தால் சங்கமானது தன் மெம்பருக்குத் தேவையானது இவ்வளவென்று தெரிந்துகொண்டு மொத்தமாய் யெந்தஇடத்திற் கிடைக்குமோ அந்த யிடத்திலிருந்து தருவித்து மெம்பர்களுக்கு அலைச்சலில்லாமலும் சகாயமாயும் கொடுக்கும். ஒவ்வொரு விவசாயமுறைகளைப் பற்றி விவரமாய் யெழுதுவதைவிட சமீபத்தில் விவசாய ஐக்கியச்சங்கங்கள் யேற்பட்டு வேலைசெய்து வரும்மாதிரியைச்சொல்லுவதனால் விவரமாய்த்தெரியவரும். சென்ற 1913-ம் வருஷத்தில் மதுரைஜில்லா ஊத்தங்குடியிலும் இராமநாதபுரம் ஜில்லா வடமலைபுரத்திலும் இரண்டு சங்கங்கள் ரிஜிஸ்தர்செய்யப்பட்டன. ஊத்தங்குடியில் யேற்படுத்தின சங்கம், வேலை ஆரம்பிக்கப்பட்டவுன் மெம்பர்களின் உபயோகத்திற்கு ரசாயன சாஸ்திரப் படிக்குள்ள உரத்தையும் புதுமாதிரியான விவசாயக் கருவிகளையும் தருவித்து தன் மெம்பர்களுக்குப் பட்டுபாடாசெய்தது. இதற்குமுன் ஒரு பணக்கார மெம்பர்மட்டும் தன்செலவில் வரவழித்தி வந்ததைக் காட்டிலும் இப்பொழுது மொத்தமாய் தருவித்து பங்கிட்டுக் கொண்டதில் விசேஷ லாபமிருக்கிறதென்று தெரியவருகிறது. இன்னும் ஷை சங்கமானது பசுந்தாள் உரத்துக்கு பார்ஸ்டு டிபார்ட்டுமெண்டாருடன் வேண்டிய நடவடிக்கை நடத்துவதாயிருக்கிறது. வடமலைபுரத்தில் சங்கம் யேற்பட்டதும் மெம்பர்களின் உபயோகத்திற்கு நயமான கருங்கண்ணிப் பருத்தி விதையை விவசாய டிபார்ட்டுமெண்டாரிடம் கிரயத்துக்கு வாங்கி மெம்பர்களுக்கு பட்டுபாடா செய்தது. அக்காலத்தில் லோகல் மார்க்கெட்டில் விற்றுவந்த விலைக்கு பொதி 1-க்கு ரூ. 2-8-0 லாபகரமாய் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டது. விவசாயக் கருவிகளும் அவ்விதமே தருவித்துக் கொடுக்கப்பட்டன. மேலும் மெம்பர்கள் பயிரிட்ட பருத்தியை ஒன்றுசேர்த்து விவசாய டிபார்டுமெண்டார் உதவியின்பேரில் சங்கத்திலிருந்து விற்றதில் செலவுகள் போக பாக்கிக் கிடைத்த தொகையை மெம்பர்களுக்குள் பட்டுபாடா செய்ததில் இதர பருத்திகளுக்கு

வியாபாரிகள் கொடுக்கிற விலையைவிட பொதி 1-க்கு ரூ. 2-8-0, வரையில் ஜாஸ்தியாய்க் கிடைத்தது. விவசாய டிப்டி டைரக்டர் சொன்ன கற்பனைப்படி நயமான பருத்திக்கு ரூ. 2-8-0, அதற்கு அடுத்தபடியிருந்ததற்கு ரூ. 2-ம் கிடைத்தன. இச்சரக்கைத்தவிர இதர விதைகளையும் சேகரித்துவைத்து விதைப்புக் காலத்தில் கொடுக்கப்பட்டன. சங்கம் வேலை செய்த 10½ மாத காலத்திற்குள் ரூ. 1506-6-9-க்கு சரக்குவாங்கி மெம்பர்களுக்குள் ரூ. 553-8-9 விற்றதுபோக ரூ. 1076-9-4-க்கு சரக்குகள் கையிருப்பிலிருந்தன. ஷை வருஷத்தில் சங்கம் ரூ. 85-2-6. லாபமடைந்தது இம்மாதிரி இன்னும் ஏராளமாய் விவசாய விஷயத்திற்குவேண்டிய வேலைகள் செய்யலாம். மெம்பர்களின் விவசாயத்தொழில் நடத்துவதற்கு கால்நடை அவசியம் தேவை. அதை இப்பொழுது விவசாயிகள் பக்கங்களில் வாங்கி வருகிறார்களே தவிர தங்களுக்குள்ளேயே நல்லவர்க்கங்களை விர்த்தி செய்ய யேற்பாடு செய்வதில்லை. இச்சங்கத்தின் உதவியால் அவ்வேலையை சுலபமாய் முடித்துக்கொள்ளலாம். சங்கமானது நல்லவர்க்கத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பொலிவு காளைமாட்டை வாங்கவேண்டும். சங்க மெம்பர்களின் பசுக்களை சங்கத்தில் ரிஜிஸ்தர்செய்து அவை மேய்ப்பதற்காக ஒரு வரி யேற்படுத்திக்கொண்டு அதை சங்கத்திற் செலுத்தவேண்டும். ஊரிலுள்ள காளைக்கன்றுகளை யெல்லாம் விடனெரி டிபார்ட்மெண்டார் கற்பனைப்படி விதை யெடுத்துவிடவேண்டும். இவ்விதம் செய்து ஷை பசுக்களை சங்கத்தின் பொலிவு காளையுடன் பொலியச் செய்து நல்ல வர்க்கத்தை உண்டுபண்ணவேண்டும். இதுகளைக் காபாற்றுவதற்காக சொற்பக் கட்டணமும் வசூல் செய்யலாம். இவ்விதமாய் ஒரு சங்கம் யேற்பட்டால் அவர்களின் நிலைமை நிரம்பவும் மேன்மையடையும். இம்மாதிரிச் சங்கங்களை யேற்படுத்துவதில் பல அபிப்பிராயம் வெளிவருகின்றன. இப்போதிருக்கும் நாணயச் சங்கத்தின் ஒரு பாகமாக இதையும் வைத்து நடத்தலாமென்பது சிலர் அபிப்பிராயம். பிர்த்தியேகமாயிருக்கவேணுமென்று மற்றவர்களின் அபிப்பிராயம். நாணயச் சங்கமானது நாணயத்தைத்தவிர வேறு யெதையும் யேற்றுக்கொள்ளக்கூடாது. தேவையான காலத்தில் கடன்கொடுப்பதைத்தவிர வேறு யெந்தத்தொழிலையும் அது நடத்தக்கூடாது. யேனெனில் விவசாயச் சங்கமானது ஒரு கிராமபண்டகசாலையைப்போன்றது. பண்டகச்சாலையின் விவகாரங்கள் கால இயற்கையாலும் மார்க்கெட்டுகளின் விலை மாறுபடுவதாலும் லாபநஷ்டத்திற்குட்படக்கூடியன. அப்பேர்ப்பட்ட ஒருவிவசாயச்சங்கத்தை இட்டமாய் லாபம் கிடைக்கக் கூடியதுடன் சேர்த்தால் இதுவும் நஷ்டமடையக் கூடியதாய் நேரிட்டு இரண்டு விஷயமும் கைகூடாமற் போய்விடும். ஆகையால் பிரத்தியேகப்படுத்தி யிருப்பதே நலம். மேலும் நாணயச் சங்கத்தில்



கிராமங்களில் இருக்கக்கூடியது பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதின் லாபமெல்லாம் ரிசர்வுபண்டுக்கு போகக்கூடியது. இப்போது சில பஞ்சாயத்தாரர்கள் தங்கள் உழைப்புக்கு ஒன்றுமில்லையென்று வருத்தப்படுகிறார்கள். விவசாயச்சங்கமோ பொறுப்பு வரையறுக்கப்பட்டதாய் அதின் லாபத்தில் 4 பங்கிட்டு ஒரு பாகத்தை ரிசர்வுபண்டுக்குச் சேர்த்தது போக மீதம் 3 பாகத்தைமெம்பர்கள் இஷ்டப்படி செலவு செய்யலாம். இதிலிருந்துதான் பஞ்சாயத்தார்களுக்கு வெகுமானம், பள்ளிக்கூடத்திற்கு நன்கொடைகள் உதவியும், பத்திரிகைக்கு சந்தா முதலிய பொதுவிஷயங்களுக்கு ஒவ்வொரு வருஷமும் செலவுசெய்ய ஒருவழியுண்டு. லாபத்தை உத்தேசித்து பிரித்துவைக்கவேணுமென்று யெண்ணக்கூடாது. யெல்லா சௌகரியங்களையும் யோசித்துப்பார்த்தால் பிரத்தியேகமாகத்தான் இருக்கவேண்டியது அவசியம். இம்மாதிரியான சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலுமிருப்பது அவசியம். யேனெனில் விவசாயமில்லாத கிராமம் இல்லை. ஒவ்வொரு கிராமத்திலும் இம்மாதிரிச் சங்கமேற்படுத்துவது சாத்தியமாவென்று யோஜித்து யெந்த இடத்தில் நாணயச்சங்கம் யேற்பட்டிருக்கிறதோ அந்த யிடத்தில்தான் இச்சங்கம் நிலைபெறும். யேனெனில் விவசாயச் சங்கங்கள் கடன்கொடுக்கக்கூடாதென்று ஒருவிதி யேற்பட்டிருக்கிறது. கிராமஜனங்களின் வசம் யெப்பொழுதும் பணம் வைத்துக்கொண்டிருப்பது அரிது. அக்காலத்தில் நாணயச்சங்கத்தில் கடனாகவாங்கி விவசாயச் சங்கத்தில் வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகையால் நாணயச்சங்கம் யேற்பட்டு அதில் அக்கிராமத்தார் நடக்கும் மாதிரியைத் தெரிந்துகொண்டு. அதின்பேரில் இம்மாதிரியான விவசாயச்சங்கத்தை யேற்படுத்துவது நலம். எதற்கும் வேலைசெய்வதற்கு நல்லெண்ணத்துடனுழைக்கும் கனவான்கள் தான் வேண்டும்.

---

## ஒவ்வொரு ஜில்லாவிலும் இனி நடக்க வேண்டிய கூட்டுறவு.

(மா-ா-ஸ்ரீ O. M. வேங்கிடநாதய்யங்கார் அவர்கள் எழுதியது.)

இந்த ராஜதானியில் ஐக்கிய இயக்கமறிந்த கற்ற கனவான்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் ஒழிவு காலங்களில் சற்று இதுவிஷயமாய் கவனிப்பார்களானால் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, அனந்தபுரம் போன்ற ஜில்லாக்களைப் போல் எல்லா ஜில்லாக்களிலும் ஐக்கிய சங்கங்கள் கண்டிப்பாய் விருத்தியாகும் என்பதிற் தடையில்லை. நம்தேசத்தின் பொதுநன்மைக்காக உழைக்கும் பெரியோர்களால் ஒவ்வொரு ஜில்லாவும்

சற்று முன்னுக்கு வரவேண்டும். அப்போது தான் இந்த இயக்கம் வேரூன்றும். இந்த இயக்கம் விருத்தியடைய மெதுவாய் உதவி செய்தால் அது தானாகப்பரவும். நம் ராஜதானியிலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் சில விஷயங்களில் முன்னேற்றம் பெற்றிருக்கின்றன. ஆகையால் நாம் சற்று முயலுவோமானால் அதிக விருத்தியடையுமென்பதிற் தடையில்லை.

2. இராஜதானி கோவாபரேடிவ் யூனியன் என்கிற ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டு 1912-௵ இந்தியா 2-வது ஆக்டின் கீழ் ரிஜிஸ்தர் செய்யப் பட்டிருக்கிறதென்று யாவரும் அறியக்கூடும். அச்சங்கத்தின் மூன்றாவது உபவிதியில் அதின் நோக்கங்கள் நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதைக் குறித்து நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஆனாலும் அதின் (ராஜதானியூனியன்) முக்கியமான நோக்கங்களை மாத்திரம் இங்கு எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது. அந்த சங்கத்தின் நோக்கங்கள் நான்காகும். முதலாவது கூட்டுத் தொழிலின் முயற்சிகளை பரவச் செய்வதும், 2-வது கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதும், 3-வது அவைகளின் பாத்தியதைகளை கவனித்து வருவதும், 4-வது இந்த இராஜதானியில் கூட்டுறவு முயற்சியை பலமாய் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதேயாம்.

3. இதுவரையில் இந்த நோக்கங்களில் ஒன்றையாவது பூர்த்திசெய்ய நாம் பிரயத்தனப்படவில்லை. நாம் அச்சங்கத்தை ஸ்தாபிப்பதில் மாத்திரம் அதிகமாய் களிகூர்ந்தோமே தவிர நம்முடைய வல்லமைக்குள் இருக்கும் ஒருவிஷயத்தைக் கூடச் செய்ய நாம் பிரயத்தனப்படவில்லை. பொதுஜன நன்மைக் குழைக்கும் அக்கிராசனாதிபதியும், காரியதரிசியும் இந்த இராஜதானியூனியனிற் சேர்ந்து, ஒரு பங்காவது எடுத்துக் கொள்ளவேண்டுமென ஓர் ஒட்டு கடிதம் வரைந்து இருக்கின்றனர். பிரஸ்தாப வருஷத்தில் சில மனுக்கள் தான் வந்தன. அவைகளை செக்ரிடரியின் ரிபோர்டினால் அறியலாம்.

4. ஆனால் உபவிதிகளை நன்றாய் யோசிக்குமளவில் நாம் ஒன்றும் நோகச் சொல்வதற்கு இடமில்லை. ஏனெனில் உபவிதிகள் சற்று குறைவாகத் தானிருக்கின்றன. ஆகையால் கொஞ்ச அளவில் சிலவிஷயங்களை உபவிதியில் திருத்தியும் புதிதாகவும் சேர்க்கவேண்டியிருக்கிறது. அவைகளை நான் பிரேரேபணை செய்து மீடிங்கில் பிரஸ்தாபிக்கும்படி ஏற்கனவே செய்திருக்கிறேன். ஆகையால் அது அமுலுக்குக் கொண்டு வரப்படும். அவைகளை காகிதங்களில் எழுதுவதில் மாத்திரம் பிரயோஜனமில்லை. அவைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரவேண்டும்.

5. ஒவ்வொரு ஜில்லாவிலும் "ஜில்லாகோவாப்ரேடிவ் யூனியன்" என்ற நாமதேயத்துடன் துவக்கவேண்டும். எந்த ஜில்லாவில் 20 அல்



லது 25-சங்கங்களுக்குக் குறைவில்லாமலிருக்கின்றனவோ அந்த ஜில்லாக்களில் முதலில் இந்த பிராஞ்சு யூனியன் ஸ்தாபித்து ராஜதானி யூனியனோடு அணைக்கப்படவேண்டும். இரண்டாவது, அதனுடைய நோக்கங்களை நிறைவேற்றப் பிரயத்தனப்படவேண்டும். உத்தரமேரூரில் 5-வது செங்கற்பட்டு ஜில்லா கூட்டுவிறனரின் மஹாநாட்டின் அக்கிராசனம் வகித்தவரும், முதல் ரிஜிஸ்டிராரும் இப்போது சென்னை கவர்ன்மெண்டில் ஜுடிஷல் செக்ரிடரியுமாயிருக்கிற ம-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் P. இராஜகோபாலசாரியர் அவர்கள் ஒரு முக்கியமான விஷயம் சொல்லியிருக்கிறார். அதாவது, ஜனங்கள் சங்கங்களை ஏற்படுத்துவது தங்கள் கடமையாக வகிக்கவேண்டுமென்றும், அவைகளை ரிஜிஸ்டர் செய்வதும், மேல்பார்வை பார்ப்பதும் கவர்ன்மெண்டாருடையதாக இருக்கவேண்டுமென்றார். அந்த விலையுயர்ந்த புத்திமதியை இந்த சென்னை ராஜதானிவாசிகள் உடனே பிரயோஜனப்படுத்தவேண்டும்.

6. தற்காலம் முக்கியமாய் சங்கங்களை ஸ்தாபிப்பதிலும் அவைகளை நிர்வகிப்பதிலும் தான் கவனிக்கவேண்டும். ஒரு ஜில்லாவிற் போதுமான திரவியம் அகப்படுகிற வரையிலும் குறைந்தது 6-யூனியன்கள் ஸ்தாபிக்கப்படுகிறவரையிலும் லாவாதேவி செய்ய உடன்படக்கூடாது. பிறகு தான் பிரயத்தனம் செய்யவேண்டும். வேண்டிய திரவியத்திற்காக உத்தாசைசெய்ய சென்னையில் ஒரு ஸெண்ட்ரல் பாங்கி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதனால் நாம் அனுபவிக்கும் லாபத்தைமறக்கவொண்ணாது. அந்த ஸெண்ட்ரல் பாங்கு இல்லாவிடின் நம் ராஜதானியில் இவ்வளவு நல்ல நிலைமைக்கு வரும்படியாக சங்கங்கள் ஓங்கிவளராது என்பது திண்ணம். அதற்காக நம்முடைய வந்தனத்தை அதற்குச்செலுத்த நாம் கடமைப்பட்டவராவோம். நிற்க, சில ஜில்லாக்களிலும் ஜில்லாபாங்குகள் திரவிய உத்தாசை செய்கின்றன. இப்போது டிபார்டுமெண்டாரே சங்கங்களை ஸ்தாபிக்கும் வேலையையும்,மேற்பார்வை பார்க்கும்வேலையையும்வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம்சங்கங்களை ஸ்தாபிக்கும் வேலையை வகிப்போமானால் கவர்ன்மெண்டாருக்கு நாம் சற்று உத்தாசை செய்வதாகும். அதாவது சங்கம் ஆரம்பிக்கும் வேலைகுறைந்தால் மற்ற தணிக்கை முதலிய விஷயங்களை கவனிக்க அவர்களுக்குப் போதுமான உத்தாசையாக இருக்குமென்று நினைக்கிறேன். இதனால் கவர்ன்மெண்டாருக்கு அதிக செலவும் குறைந்து விடும்.

7, சேலம், திருச்சினாப்பள்ளி, கோயம்பத்தூர், மதுரை, தஞ்சாவூர், தென்கன்னடம், தெனாலி முதலிய இந்த இடங்களில் ஜில்லா பாங்கிகள் இருக்கின்றன. இந்த ஜில்லா பாங்கிகளும் கூட ராஜதானி யூனியனோடு அணைக்கப்படவேண்டும். அவைகளும் சங்கங்களை ஸ்தாபிக்கும்

அலுவல்களை நடத்தவேண்டும். கோயம்பத்தூர், மதுரை, தென்கன்னடம் பாங்கிகள் தணிக்கை செய்யும் வேலையையும் நடத்துகின்றன. கோயம்பத்தூர் ஜில்லா பாங்கியின் கீழ் சூப்ரவைசிங் யூனியன் ஒன்று இருக்கின்றது மற்ற ஜில்லா பாங்கிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஜில்லா பாங்கிகள் ஒரு சூப்ரவைசர் அல்லது ஒரு இன்ஸ்பெக்டரை நியமித்து தங்களால் கூடிய வரையில் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். கூடாத பக்ஷத்தில் பாங்கு டைரக்டர்களாவது இதைச் செய்ய வேண்டும். சங்கங்களை ஒன்று சேர்த்து சூப்ரவைசிங் அதாவது மேற்பார்வை பார்க்கும்யூனியனை செய்து ஜில்லா பாங்கியுடன் அணைக்கப்படவேண்டும். இந்த யூனியன்கள் ஜில்லா பாங்கிக்கு கடனை வசூலிப்பதில் ஏஜண்டைப் போல் உதவியாகும். இந்தத்தணிக்கை செய்யும் யூனியன்களின் செலவெல்லாம் ஜில்லாபாங்கியே பொறுக்கவேண்டும். இந்தவிஷயத்திற்காகவே அதாவது தணிக்கை செலவுகளை பொறுப்பதற்காகவே ஒரு ஜில்லா பாங்கிகளின் பங்குகள் தனி நபர்களுக்கு அல்லாமல் சங்கங்களுக்கு கொடுக்கப் படவேண்டும். ஒரு ஜில்லா பாங்கியானது ஏன் வேண்டுமென்றால் விவசாயச் சங்கங்களுக்கு பண உதவிசெய்ய மாத்திரமல்ல; விவசாயச்சங்கங்களை ஏற்படுத்துவதும் அவைகளை மேல்விஜாரணை செய்வதற்குமாகும்.

8. எனது தாழ்மையான அபிப்பிராயம் என்னவெனில் எந்த ஜில்லாவில் 20 அல்லது 25 சங்கங்கள் இருக்கின்றனவோ அவ்விடத்தில் ஜில்லா யூனியனை ஸ்தாபிக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

அவர்கள் 200 அல்லது 300 சங்கங்களை போதுமான தணிக்கை செய்யும் யூனியன்களை ஸ்தாபித்து போதுமான டிபாசிட்டு கிடைத்தால் ஜில்லா யூனியன்கள் லாவாதேவியுஞ் செய்யலாம்.

9. இந்த ஜில்லா யூனியன்களை நடத்தப்பணம் வேண்டியதற்காக யோசிக்க வேண்டும். இதுவிஷயமாய் நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியம் தான். இது அவ்வளவு கடினமல்ல "எங்கே மனம் இருக்கிறதோ அவ்விடத்தில் வழியும் இருக்கிறது." ஒரு ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு ஐக்கியஸ்தனுக்கும், இந்த நோக்கம் பரவச் செய்ய வேண்டும் என்கிற அபிப்ராயம் இருந்தாலொழிய இந்த இயக்கம் நன்றாய் விருத்தியடையாது. ஒரு ஜில்லாவில் உள்ள யூனியன்களின் பொருட்டு ஒவ்வொரு சங்கமும் கிலும் பணவுதவி செய்தே தீரவேண்டும் சென்னை ஸென்ட்ரல் பாங்கியார் தணிக்கை செய்யும் யூனியனுக்கு லாபத்தில் 30-ல் ஒருபாகம் தயவு செய்து கொடுக்கிறார்கள். இது போலவே சென்னை ஸென்டரல் பாங்கார் ஜில்லா யூனியன் களுக்கு ஏதாகிலும் உதவி செய்யும் பக்ஷத்தில் அதிக



வைப் பொறுக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். வருத்தப் படாமல் லாபமடையமுடியாது. யூனியன்கள் சுதாவாய் தன்செலவுகளை பொறுக்கும்வரையில் ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் உதவிசெய்ய வேண்டும் இப்போது கவர்ன்மெண்டார் ஆடிட் செய்வதில் சிப்பந்திச்செலவு அதிகமாயிருத்தலால் தணிக்கை வரி விதிக்கவேண்டுமென்கிற யோசனை இருக்கிறது. நாம் ஜில்லா யூனியன்களை ஸ்தாபிப்போமானால் கவர்ன்மெண்டார் அதிக சிப்பந்திகளை ஏற்படுத்தவேண்டாம். இது ஒரு உத்தாசையாக இருக்கும். ஆடிட்டு கட்டணம் நாம் கொடுப்பதைக் காட்டிலும் நமக்கு நாமே ஒருவிதக்கட்டணம் ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்வது நல்மாக இருக்கும். இதனால் கவர்ன்மெண்டாருடைய தணிக்கையும், மேற்பார்வையும் வேண்டாமென்று சொன்னதல்ல. அவர்களுடைய தணிக்கையும் மேற்பார்வையும் இருந்தே தீரவேண்டும். ஆனால் மேல் தணிக்கையும், அகஸ்மாத்தான சோதனையும் மேல்பார்வையும் இருந்தால் போதும்; ஆழ்ந்த தணிக்கை வேண்டுவதில்லை.

10. நம்முடைய கூட்டுறவினர்கள் என் அபிப்பிராயத்தில் கலந்தால் ஒரு மாதிரியான உபவிதி ஆயத்தம்செய்து குறிப்பிடுகிறேன். அப்படியானால் அடியிற் கண்ட தீர்மானத்தை நிகழும் கான்பரன்ஸில் பிரேரேபிக்கப்போகிறேன்:—ஒவ்வொரு ஐக்கியஸ்தனும் தன் ஜில்லாவில் யூனியன் ஒன்று ஸ்தாபித்தும் இந்த மாகாணத்து கோவாபரேடிவ் யூனியனுடன் சேர்ப்பிக்கப் பிரயத்தனப் படவேண்டும்.

---

## *மதராஸிலிருக்கும் சில மாதிரிச்சங்கங்கள்

### விவசாய அபிவிருத்திக்கு ஏற்பட்ட சங்கங்கள்.

மெம்பர்கள், விதை, எரு, விவசாயக் கருவிகள் முதலிய சாமான்கள் வாங்குவதில் உதவிசெய்யும்பொருட்டு இம்மாதிரிச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் படுகின்றன. இந்த ராஜதானியில் இபபொழுது 6 சங்கங்களிருக்கின்றன. அவைகளில் வடமலைபுரச் சங்கமானது எரு, கால்நடைகளின் உணவு, தண்ணீர்ச்சால்களுக்குத் தோல்கள், கிணறுகளுக்குத் தாம்புகள் முதலிய சாமான்களை மொத்தத்தில் தருவழிக்கின்றது. ஆவல் நத்தம், லிங்கம்பட்டி சங்கங்கள் சுத்தமான கருங்கண்ணி பஞ்சின் சாகுபடியை பரவச்செய்ய முயன்றுவருகின்றன. ஊத்தங்குடிச் சங்கமானது மெம்பர்களுக்காக கால்நடையின் இனி எரு முதலிய விவசாய சாமான்களை வாங்கி விற்பதுடன் நவீன கலப்பைகளை ஏற்படுத்தப் பிரயத்தனப்படுகிறது. விவசாய இலாகாக் காரர்கள் இச்சங்கங்களுக்கு உதவிசெய்கிறார்கள். பொறுப்பு வரையறுக்காச

---

* ரெஜிஸ்ட்ராராகிய திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்க ளெழுதியது.

சங்கங்கள் ஏற்கனவே யுள்ள கிராமங்களில் இவைகளை ஸ்தாபிக்கவேண்டி யிருத்தலாலும் நபர்கள் பொறுப்புவரை யறுக்காச்சங்கங்களி லொன்றுக்கு மேல் மெம்பராயிருக்கப்படாததினாலும், இம்மாதிரிச் சங்கங்கள் பொறுப்பு வரை யறுக்கப்பட்ட தன்மையில் ஏற்படவேண்டி யிருக்கின்றன.

### தானிய பாங்கிகள்.

மெம்பர்களிட மிருக்கும் தானியத்தை டிபாஸிட்டாகப் பெற்றுக் கொண்டு, அவர்கள் கொடுக்கும் விதைகளுக்கு மாற்றியாவது அல்லது அவர்களின் ஆகாரமாகக் கொடுத்தாவது உதவும் கூட்டு முயசிச் சங்கங்கள் தானிய பாங்கிகளென்று வழங்கும். அறுவடைக் காலங்களில் இவைகள் குறைந்த வட்டி வீதத்துடன், திருப்பிக் கொடுக்கின்றன. இப்பொழுது, கீழச்சேரி, பாகல்பட்டி, உப்பனங்காடி, முதலிய இடங்களில் மூன்று தானியபாங்கிகள் முறையே யிருக்கின்றன. இவைகள் திருப்திகரமாய் வேலைசெய்தால், இம்மாதிரி பாங்கிகள் ஏராளமாய் சமீபத்தில் ஏற்படுவதிற் தடையில்லை.

### கட்டிடச் சங்கங்கள்.

கட்டிடச் சங்கங்கள், (1) மெம்பர்கள் வீடுகளை வாங்குவதிலாவது அல்லது சொந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதிலாவது பணமுதவுதற்கும், (2) பொதுவில் கட்டிடத்திற்கு வேண்டிய காலிகளைவாங்கி வீடுகள் கட்டுவதற்கும், ஸ்தாபிக்கப் படுகின்றன. பெரிய நகரங்கள் மிகவும் நெருக்கமாயிருத்தலால், இம்மாதிரிச் சங்கங்கள் ஜனங்களுக்கு மிகவும் நன்மையைக் கொடுக்கும். பட்டணங்களுக் கருகிலுள்ள கிராமங்களில் மெம்பர்கள் வீடுகள் வாங்கும்படி உதவிசெய்யும். இப்பொழுது மாம்பலம், கோயமுத்தூர், மதுரை, திண்டுக்கல், முதலிய இடங்களில் கட்டிடச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பணம் குறைந்தவட்டிக்குக் கிடைக்காததினால் இச்சங்கங்கள் விரைவாய் ஏற்படுவதில் சிரமமிருக்கிறது.

இச்சங்கங்களின் நோக்க மென்னவென்றால் மெம்பர்கள் கடன்வாங்கின தொகையை அநேக வருஷங்களில் சிரமில்லாமல் தவணைகளாகத் திருப்பிக் கொடுத்தலே! வீடுகட்டுவதிலுண்டாகும் செலவில் ஐந்தில் ஓர் பங்கு மெம்பர்கள் முதலில் கொடுக்கவேண்டும். வட்டிவீதம் அதிகமாயிருந்தால், ஏழையான மெம்பர்கள் வட்டியும் முதலில் ஓர் பாகமும் கொடுப்பது மிகவும் கஷ்டமாகும். ஆகையினாற்தான் 7½ வட்டி வீதத்தை விடக் குறைவாயிருக்கவேண்டும்.

### தோட்டிகளின் சங்கங்கள்

முனிசிபாலிட்டி தோட்டிகளை சாவகார்களின் இம்சையிலிருந்து விடுவிக்க, சேலம், கோயமுத்தூர், கள்ளிக்கோட்டை முதலிய இடங்களில்



சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாவ்காரர்கள் இவர்களின் கல்லியாணம், இறப்பு, வாழ்வு, செலவுகளுக்கு 00-க்கு 75லிருந்து 100 வீதம் இவர்களை ஏமாற்றிக்கடன்கொடுத்து வந்திருந்தார்கள். இவர்கள் படிப்பில்லாமையால் அவர்களின் வலையில் எளிதாய் சிக்கிவந்தார்கள். கிடைக்கும் மாதச் சம்பளம் வட்டி மூன்றுக்குமட்டும் போதாது. இவர்களின் கஷ்டம் நீங்கும்படி, பொறுப்பு வரையறுக்காததன்மையில் இந்த நாணயச்சங்கங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு முனிசிபாலிடியிலும் இம்மாதிரிச் சங்கங்களை யேற்படுத்துவதவசியம். பைலாக்களும், சங்கஸ்தாபன யுக்தங்களும் கூட்டுமுயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் ஆபிசில் கிடைக்கும்.

---

## மதராஸில் பிரிவினைச் சங்கங்கள்

இவ்விராஜதானியின் பிரிவினைச் சங்கங்களெல்லாம் ஒன்றைத்தவிர அதிகப்பிரபலமாகவில்லை. இச்சங்கங்கள் இப்பொழுது 8-யிருக்கின்றன. ஜனங்கள் திருவல்லிக்கேணி அர்பன் சங்கத்தின் அபிவிருத்தியைப் பார்த்து மற்ற நகரங்களிலும் இம்மாதிரி ஸ்டோர்ஸ் ஏற்படுத்தலாயிற்று. ஆனால் அவைகள் ஓங்கவில்லை. ராக்டேல் பயனீர்ஸ் ஸொஸயடியின் மாதிரி இச்சங்கங்களின் இலக்ஷணங்கள் அமைக்கப்பட்டன. அதாவது கிடைக்கக்கூடிய திறமான சாமான்களை, இடைகுறையாமல் மார்க்கட்டுவிலைக்கு மெம்பர்களுக்கு விற்பதே; இவைகளை நிர்வகிக்கும் டைரக்டர்கள் மிகவும் புத்திசாலியும் திறமையுமுள்ளவர்களா யிருக்கவேண்டியிருத்தலால் இச்சங்கங்களை ஏற்படுத்துவதில் கூட்டு முயற்சி இலாக்காக் காரர்கள் மிகவும் ஜாக்கிரதையாயிருக் கிறார்கள். பின்வரும் ஸ்டேட்மெண்டு 1913-14-ம் வருஷத்தில் இச்சங்கங்கள் வேலை செய்ததைக் காட்டும்:—

| சங்கத்தின் பெயர்கள். | மெம்பர்களின் தொகை. | தொழில் தனம். | மொத்த விற்பனைகள். | தினசரி விற்பனைகள் | நிகர லாபம். |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| திருவல்லிக்கேணி .. | 2,713 | 1,39,304 | 6,40,644 | 1,757 | 16,520 |
| மதுரை ... | 664 | 68,705 | 29,937 | 82 | 3,603 |
| கோயம்புத்தூர் ... | 451 | 15,557 | 45,694 | 123 | 56 |
| புதுப்பாளயம் ... | 162 | 621 | 9,967 | ... | 470 |
| மதனப்பள்ளி ... | 131 | 4,178 | 9,840 | 26 | 356 |
| பாளயங் கோட்டை ... | 65 | 1,135 | 1,856 | [illegible] | ... |
| கர்நூல் ... | 58 | 1,082 | 7,798 | 21 | 56 |
| திருவாரூர் ... | 33 | 2,182 | 3,658 | ... | 68 |

## ஸ்டேட்மெண்டு A.

| மெம்பர்களின் சங்கியை. | பங்கு முதல். | வருஷவிற்று முதல். | க்ஷேம நிதி. | பொது நன்மை நிதி. | கடன் தொகை. | ஜனசரி டிபாஸிட்டு தொகை. | ஸ்திர டிபாஸிட்டு. | சீட்டுகள். சங்கியை. | சீட்டுகள். தொகை. | நிகர்லாபம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. ப. | ரூ. அ. | ரூ. அ. ப. | ரூ. அ. | | ரூ. அ. | ரூ. அ. ப. |
| 633 | 4,945 7 6 | 1,20,527 4 3 | 2,554 14 8 | 2,007 10 0 | 3,754 0 | 1,825 1 8 | 1,965 0 | 9 | 1,455 0 | 2,853 5 11 |
| 797 | 6,682 7 3 | 2,41,469 7 0 | 4,373 14 4 | 3,688 12 4 | 4,173 0 | 1,488 7 3 | 4,080 0 | 9 | 3,559 0 | 6,754 4 9 |
| 1,068 | 10,665 8 9 | 3,41,473 15 2 | 6,439 13 0 | 5,407 1 5 | 8,701 0 | 4,219 0 1 | 5,155 0 | 13 | 4,090 0 | 7,518 9 7 |
| 1,430 | 18,253 6 8 | 4,15,959 14 10 | 8,659 15 0 | 7,550 11 6 | 7,404 0 | 3,580 0 4 | 6,040 0 | 10 | 2,817 8 | 8,348 12 1 |
| 1,649 | 16,677 6 0 | 4,46,711 1 1 | 12,692 13 1 | 9,741 14 2 | 9,718 0 | 4,214 13 6 | 6,095 0 | 9 | 1,800 0 | 15,071 13 3 |
| 2,024 | 23,546 13 5 | 5,[illegible]7,211 14 10 | 18,188 1 4 | 14,469 15 11 | 14,873 0 | 11,506 2 2 | 1,320 4 | 22 | 5,500 0 | 19,975 13 0 |
| 2,835 | 29,271 0 6 | 6,16,772 10 5 | 23,799 4 2 | 17,015 8 7 | 22,005 8 | 18,035 3 - | 9,451 0 | 25 | 4,927 8 | 20,877 0 0 |
| 2,713 | 37,303 0 7 | 6,40,117 2 3 | 28,282 13 6 | 20,487 0 0 | 43,337 0 | 11,926 7 5 | 10,328 0 | 21 | 5,358 0 | 16,520 0 4 |



திருவல்லிக்கேணி சங்கமானது இன்னும் இவைகளுக்கு முதன்மையாயிருந்து கொண்டு வருகிறது. நிகர் லாபத்தைத்தவிர மற்றெல்லா நடவடிக்கைகளிலும் இச்சங்கம் அபிவிருத்தியடைந்திருக்கிறது. சாமான்கள் விற்றதினால் இவ்வருஷத்திய லாபம் சென்றவருஷத்தைக் காட்டிலும் ரூ. 3,556 குறைந்திருப்பதாக ரெஜிஸ்ட்ராவர்கள்சங்கத்தின் டைரெக்டர்களுக்கு அறிவித்திருக்கிறார். நன்றாய்ப் பரிசோதனை பண்ணிப்பார்த்தால் இதின் காரணம் நன்குவிளங்கும். இதே மாதிரியுள்ள பெங்களூர் நகரச்சங்கமானது, விற்று முதல் ஏராளமாய்ச் செய்தும் லாபத்தில் மிகவும் குறைவடைந்திருக்கிறது. அதற்குக் காரணம் யாதென்று கம்மிட்டி ஒன்று விஜாரித்ததில் காலபேதங்களினால் சாமான்களின் விலைகள் அதிகரித்ததால் அவைகளின்மீது லாபமதிகம் வைக்காததே; இதே காரணம் இச்சங்கத்தின் லாபக்குறைவுக்கு மிருக்கலாம். 52-வது பக்கத்திற்கண்ட ஸ்டேட்மெண்டு A. இச்சங்கத்தின் அபிவிருத்தியைக் காட்டும்.

மதுரை ஸ்டோர்ஸின் 1912-13, வருஷத்திய விற்று முதல் ரூ. 32,500, யிருந்தபோதிலும் ரூ. 200 நஷ்டமடைந்தது. சென்ற வருஷத்தில் அதின் மொத்த விற்று முதல் ரூ 30,000. ஆனால் லாபமடைந்து ஜனங்கள் மிகவும் அபிமானிக்கப்பட்டுவருகின்றது. அதின் நாணய டிபார்ட்டுமெண்டின் லாபமானது ரூ. 3,603, ஆகும். அதில் நடத்தப்படும் சீட்டு பண்டுகள் ஜனங்களால் பிரியப்படுகின்றன.

கோயம்பத்தூர் ஸ்டோர்ஸ் விற்றுமுதற் தொகையில் குறைவடைந்தாலும் மிகவும் பிரயோஜனமானவேலைகள் செய்துவருகிது. பிரஸ்தாப வருஷத்தில் மெம்பர்களுக்கு ரூ. 2,940 கடன் கொடுத்தது. அவைகளெல்லாம் விசேஷமாய் கடன் நபர் ஒன்றுக்கு ரூ. 25-க்கு மேலில்லையாம். அதின் நிகரலாபமாகிய ரூ.50-யை க்ஷேமநிதியோடு சேர்க்கப்பட்டது. பிளேக்கின் உபத்திரவத்தால் நான்கு மாதங்களாய் இச்சங்கம் வேலை செய்ய முடியாததினால் லபாக்குறைவு ஏற்பட்டது.

மதனப்பள்ளி ஸ்டோர்ஸானது பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 9,840க்கும் சென்ற வருஷத்தில் ரூ. 18,000 க்கும் சாமான்கள் விற்றிருக்கின்றது. அதின் நிகர்லாபம் ரூ 457 லிருந்து ரூ. 356 க்குக் குறைவடைந்திருக்கிறது. பிளேக்கின் இம்சையால் வியாபாரம் குறைந்தது. சென்ற வருஷத்தில் 23 கடன்களும் பிரஸ்தாப வருஷத்தில் 5 கடன்கள்மட்டும் கொடுக்கப்பட்டன.

கர்நூல் ஸ்டோர்ஸானது பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 7,793, க்கும் சென்ற வருஷத்தில் ரூ. 15,395 க்கும் சாமான்கள்விற்றது; நிகர்லாபம் ரூ. [illegible]41 லிருந்து ரூ. 56 க்குக் குறைந்தது. மற்ற மூன்று சங்கங்கள் சமீப

தில் ஸ்தாபிக்கப்பட்டபோதிலும், மிக்க ஊக்கத்துடன் வேலை செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

---

## க்ஷேமநிதிகள்

இந்தியா கோவாப்ரேடிவ் கமிட்டியார்கள் கேட்கப்படும் கேள்விகளி லொன்றாவது இந்தியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் க்ஷேமநிதிகளை எவ்விதம் உபயோகப்படுத்துவது நல்லது என்பது. சங்கத்தின் க்ஷேமநிதியை அதின் அபாயகாலத்திற்குத்தட்டாமல் உதவும்படி வெளியிடங்களில் டிபாஸிட்டுசெய்வது உசிதமா? அல்லது, சங்கமானது விசேஷமாய் பொறுப்புவரையறுக்காததாயிருத்தலாலும் அபாயங்கள்வருகிறதற்கு இடமில்லாததாலும், க்ஷேமநிதியை சங்கத்தின் தொழில்தனத்தோடு சேர்த்து உபயோகப்படுத்துவது உசிதமா? என்பது கவர்ன்மெண்டார் கான்பரென்ஸுகளிலும், பொது ஜனங்கள்கான்பரென்ஸ்களிலும் விவாதிக்கப்பட்டன. வெவ்வேறுமாகாணங்களில் வெவ்வேறுவிதமாய் உபயோகப்படுகிறது. சிலர் க்ஷேமநிதியை வெளியிற் டிபாஸிட்டு செய்தால் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு, அதினால் டிபாஸிட்டுகள் சங்கத்திற்கு ஏராளமாய் விழுமென்றும், சிலர் சங்கத்துத் தொழில் தனத்துடன்சேர்த்தால் வெளியிற் இதற்குக் கிடைக்கும் குறைவானவட்டியைக் காட்டிலும் ஜாஸ்தி [illegible] வருமென்றும் சொல்லுகிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டு இதைபற்றிக் கூறுவதாவது—மதராஸிலும், மத்தியமாகாணங்களிலும், க்ஷேமநிதியானது தனியாக வெளியிற் போடப்படுகின்றது. ஆனால் மற்ற மாகாணங்களில் சங்கத்தின் தொழில் தனத்துடன் சேர்க்கப்படுகின்றது. சங்கம் மிகவும் இளமையிலிருக்கும் காலத்து இக்ஷேம நிதியை தொழிலில் உபயோகப்படுத்திக் கொண்டாலும் சங்கத்தின் முலதனம் வரவர அதிகரிக்க க்ஷேமநிதியும் ஏராளமாய்ச் சேரும்பொழுது, இந்நிதியை வெளியிற் டிபாஸிட்டு செய்யவேண்டும்.

இந்தியாவின் விவசாயச்சங்கங்கள், சுமார் ரூ. 10-லக்ஷம் அல்லது தொழில்தனத்தில் 100-க்கு 3½ விகிதம் க்ஷேமநிதியை வுடைத்தாயிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் எவ்வளவு இந்நிதியின் தொகைவெளியிற் டிபாஸிட்டு செய்யப்பட்டிருக்கிறதென்றும், தொழில்தனத்தில் எவ்வளவுபாகம் இது சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும், தெரியவில்லை. ஏப்பிலைன்பாங்கிகளின் க்ஷேமநிதியானது தொழில்தனத்தில் 100-க்கு 2½ விதமும், ஷேரால்ஸ் டெலிட்ஷ்பாங்கிகளின் க்ஷேமநிதி 100-க்கு 6½ விதமும ஏற்பட்டிருக்கின்றன.



மாகாணங்களிலுள்ள வெவ்வேறு வகுப்பு சங்கங்களின் க்ஷேமநிதிகளும் அவைகளின் தொழில்தனமும் பின்வரும் ஸ்டேட்மெண்டால் தெரியவரும்:—

| நெ. | மாகாணங்கள். | நகரச் சங்கங்கள். | | விவசாயச் சங்கங்கள். | | மற்ற சங்கங்கள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | க்ஷேம நிதி. | தொழில் தனம். | க்ஷேம நிதி. | தொழில் தனம். | க்ஷேம நிதி. | தொழில் தனம். | க்ஷேம நிதி. | தொழில் தனம். |
| 1 | மதராஸ் | 95,959 | 52,19,370 | 407,614 | 15,21,840 | 115,873 | 55,79,926 | 6,19,446 | 12,320,186 |
| 2 | பம்பாய் ... | 113,892 | 17,94,531 | 2,18,502 | 28,03,849 | 86,143 | 20,14,755 | 3,18,537 | 66,13,135 |
| 3 | பங்காளம் ... | 56,783 | 82,52,550 | 4,85,833 | 44,11,493 | 64,485 | 12.76,760 | 6,07,101 | 89,40,803 |
| 4 | பர்மா ... | 45,125 | 27,30,871 | 4,67,710 | 32,65,893 | 73,375 | 6,14,117 | 5,86,210 | 66.10,881 |
| 5 | பேகாரும், ஒரிஸ்ஸாவும் ... | 22,000 | 8,02,575 | 1,60,095 | 13,44,755 | 10,000 | 140,608 | 1,92,095 | 2,287,938 |
| 6 | ஐக்கிய மாகாணங்கள் ... | 3,46,521 | 5,909,745 | 3,62,000 | 50,71,464 | 22,500 | 437,428 | 7 31,021 | 11,418,637 |
| 7 | மத்திய மாகாணங்களும், பேரரும் ... | 59,440 | 3,837,411 | 131,405 | 25,76,238 | 12,672 | 96,284 | 2,03,517 | 65,09,938 |
| 8 | பஞ்சாப்பு ... | 55,971 | 4,269,933 | 10,52,943 | 1,32,77,233 | 25,032 | 8,82,740 | 11,33,946 | 1,84,29,906 |
| 9 | ஆஜ்மீரும், மைர்வாராவும் ... | 13,128 | 750,322 | 21,500 | 7,35,509 | ... | ... | 34,628 | 14,85,831 |
| 10 | குடகு ... | ... | ... | 20,000 | ... | ... | ... | 20,000 | 94,070 |

மதராஸில், ஜில்லா பாங்கிகளுடன் சேர்ந்தசங்கங்கள், அப்பாங்கிகளிலும், அவைகளைச்சேராத சங்கங்கள்மதராஸ்ஸெண்ட்ரல் அர்பன்பாங்கிலும் க்ஷேமநிதியை டிபாஸிட்டுசெய்துவருகின்றன. மதராஸ் ஸெண்டரல் பாங்கியின் க்ஷேமநிதியானது ரெஜிஸ்ட்ரார்உத்திரவின்படி, மதராஸ்பாங்கில் போடப்பட்டுவருகிறது. மதராஸ்கவரன்மெண்டார் இப்பொழுது நடந்துவரும் ஏற்பாட்டைத்திருத்தி பொறுப்புவரையறுக்காச் சங்கங்கள் தங்கள்க்ஷேமநிதியை, ரிஜிஸ்ட்ராரவர்கள் வேறுவிதமாய் உத்திரவுசெய்தாலல்லாமல், தங்கள்தொழிலில் உபயோகிக்கலாமென்று ஆலோசனைசெய்துகொண்டிருக்கிறார்கள்.

பம்பாயில் கோவாப்ரேடிவ் ஸெண்ட்ரல் பாங்கியானது தன்க்ஷேமநிதியை தொழிலில்உபயோகப்படுத்திவருகிறது. சங்கங்கள் க்ஷேமநிதிகளை வெளியிற்போடவேண்டுமென்ற உத்தரவிருக்கிறதாகத் தெரியவில்லை. இவ்விஷயமான உத்திரவுஅனுவசியமென்று ஓர் பம்பாய் கான்பரெஸில் தீர்மானிக்கப்பட்டது.

பங்காளத்தில் க்ஷேம நிதியை தனியாய் டிபாஸிட்டு செய்வது மிகவுமரிது. சங்கத்தின் வெளியில் இந்நிதியை டிபாஸிட்டு செய்யக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் கவர்ன்மெண்டாரைக் கேட்க உத்தேசித்திருக்கிறார்.

ஐக்கிய மாகாணங்களில்,சங்கங்களின் க்ஷேமநிதிகள் ரெஜிஸட்ரார்உத்திரவின்படி கவரன்மெண்டு பேப்பர்களிலாவது அல்லது அவைகள் லேவாதேவி வைத்துக்கொண்டிருக்கும் கோவாப்ரெடிவ் பாங்கிகளிலாவது டிபாஸிட்டு செய்யப்பட்டுவருகின்றன.

அப்பர் பர்மா ஸெண்ட்ரல் கோவாப்பெடிவ் பாங்கியானது தன் க்ஷேமநிதியை கவர்ன்மெண்டு பேப்பரிலும், மற்றயிரண்டுநகரபாங்கிகள் தங்கள் தொழில்தனத்துடனும் உபயோகிக்கின்றன. விவசாயச் சங்கங்களின் க்ஷேமநிதியில் நான்கின் ஓர்பங்கை வெளியில் டிபாஸிட்டுசெய்தும், மற்றச் சங்கங்களின் க்ஷேமநிதியானது சொந்தத்தொழிலில் போடப்பட்டும் வருகின்றன.

மத்தியமாகாணங்களிலும், பேராரிலும், சங்கங்களின் க்ஷேமநிதிகள் கவரன்மெண்டு பேப்பரில் டிபாஸிட்டு செய்யப்படுகின்றன. பேகார், ஓரிஸ்ஸாவிலுள்ள நகரபாங்கிகளின் க்ஷேமநிதிகள் மாகாணபாங்கியில் டிபாஸிட்டு செய்யப்படவேண்டும். மற்றசங்கங்கள் இந்நிதியை தங்கள் தொழிலில் உபயோகிக்கின்றன. இத்தொகையில் 100-க்கு 25-வீதமாவது வெளியிற்போடவேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படுகிறார்.

1911௵ ஜனவரிமாதத்தில் அலகாபாத்தில் கூட்டப்பட்ட ரெஜிஸ்ட்ரார்களின் ஐந்தாவது கான்பரென்ஸில், சங்கங்கள் கஷ்டப்படும் காலங்



களில் அவைகளின் க்ஷேமநிதிகள் அவைகளுக்குதவியாயிருக்கும்பொருட்டு க்ஷேமநிதியானது வெளியிற் டிபாஸிட்டு செய்யப்படவேண்டுமென்று அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் கிராமநாணயச்சங்கங்கள் எப்பொழுது முதல் இவ்வேற்பாட்டை அநுஷ்டிக்கலாமென்பதைபற்றி அவர்களின் அபிப்பிராயம் பலவாராயிருந்தது.

---

## மதராஸில் சில விசேஷமான சங்கங்கள்

### 1913—14 ௵த்தில் அவைகளின் நடவடிக்கைகள்

இவ்விராஜதானியின் விசேஷமான சங்கங்களைப் பற்றிய பின்வருங் குறிப்புகள் ரெஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார், இவர்களின் தணிக்கை உத்திரவுகளிலிருந்தும் அவைகளின் ரிபோர்ட்டுகளிலிருந்துப் எடுக்கப்பட்டன:—

### மதராஸ் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் சங்கம்

மதராஸ்நகரத்தில் குமஸ்தாக்களுக்கென்று முதல் முதலில் ஏற்படுத்தப்பட்ட மதராஸ் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் அபிவிருத்தியானது பின்வரும் ரெஜிஸ்ட்ராரவர்களின் தணிக்கை உத்திரவால் தெரியவரும்:—

“1. 980-வது நெ. சங்கமாகிய மதராஸ் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் கணக்குகள், சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ K. தெய்வசிகாமணி முதலியார் தணிக்கைசெய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன.

2. சங்கத்தின் நடவடிக்கைகள் பிரஸ்தாப வருஷத்தில் அதிகரித்தன. மெம்பர்களின் சங்கியை 588 லிருந்து 801-க்கும், செலுத்தப்பட்ட பங்குமுதல் ரூ. 5,261 லிருந்து ரூ. 9,629-க்கும், அதிகரித்தன. வருஷக்கடைசியிலிருக்கும் டிபாஸிட்டுகளின்தொகை ரூ27,569-8-0 ஆகும். வருஷக் கடைசியில், நிலுவையிலிருக்கும் கடன்தொகை சென்ற வருஷத்தில் ரூ. 38,229—8—2-ம், பிரஸ்தாப வருஷத்தில் 15,355—4—0 மாயிருந்தது. இச்சங்கம் மற்றசங்கங்களுக்கும் ஏராளமாய்க் கடன் கொடுத்து சரியான கெடுக்களில்திருப்பிவாங்கிக் கொண்டது.

3, பிரஸ்தாப வருஷத்தில் இச்சங்கமானது ரூ 1319—12—8 நிகர் லாபமடைந்தது. இதில் நான்கில் ஓர்பாகமாகிய ரூ. 329—15—2 வை க்ஷேமநிதிக்குக். கொண்டுபோக வேண்டியது. 1914-௵ ஜனவரி முதல்தேதி வரையில் சேர்க்கப்பட்ட க்ஷேமநிதியின் வட்டியாகிய ரூ. 30—2—4, போக, பாக்கியுள்ள க்ஷேமநிதியாகிய ரூ. 229—12—10வை கோயம்பத்தூர் ஜில்லா பாங்கியிற்போட வேண்டியது.

4. அதின் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ. வி.கிருஷ்ணமாசாரியாரவர்களின் வேலைகளைக்கண்டு ரெஜிஸ்ட்ரார் மிகவும் சந்தோஷப்படுகிறார். இந்த ராஜதானியில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு இம்மாதிரிச் சங்கங்கள் அநேகயிடங்களில் ஏற்படக்கூடும். அவைகளின் காரியதரிசிகள் இவர்மாதிரி யுழைப்பார்களென நம்பப்படுகிறது.

### காஞ்சீபுரம் நெசவுக்காரர்களின் யூனியன்.

இந்த ராஜதானியில் மாம்பலம் சங்கத்தைத்தவிர, வேறு உற்பத்திச் சங்கம் இதுதான். அதின்காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ P. ராமசந்திர சாஸ்திரி அவர்கள் இதுவிஷயத்தில் மிக்கசிரமப்பட்டபோதிலும், நெசவுக்காரர்கள் தங்களுக்குள் ஒன்றுசேர்ந்துழைப்பதின் அருமையை இன்னும் அறியவில்லை. 247 மெம்பர்களிருக்கின்றார்கள்: பங்குமுதல் ரூ. 504—8—3 லிருந்து ரூ. 661—2—4க்கு அதிகரித்தது. பிரஸ்தாப வருஷத்தில் இச்சங்கம் ரூ. 791—5—3ம், அதற்குமுந்தின வருஷத்தில் ரூ. 663-10-10-ம் மொத்த லாபமடைந்தது. வருஷத்திய நிகர்லாபம் ரூ 47—4—9 ஆகும். அதின் க்ஷேமநிதி இதுவரையிலுள்ளது ரூ. 301—5—9. ரெஜிஸ்ட்ராரவர்கள் பின்வருமாறு தணிக்கை உத்திரவில் எழுதுகிறார்:—

நெசவுக்கார மெம்பர்கள் யூனியனின் நன்மைகளை இன்னும் அறியவில்லை. வேலைக்கு ஒழுங்காய் வருகிறதில்லை. ஆகையால் சங்கத்தின் நிகர்லாபம் ரூ. 47—4—9-க்குக் குறைந்துவிட்டது, நிர்வாகஞ் செய்து வரும் டைரெக்டர்கள் சங்கத்தின் வேலைகளில் சிரமமெடுத்துக் கொள்ளுகிறதில்லை. அவர்களிற் சிலர்தங்கள் பங்கு தனம் இன்னும் முழுவதும் கொடுக்கவில்லை. அதின் காரியதரிசி மிஸ்டர் ராமச்சந்திரசாஸ்திரி அவர்கள் சிரமம் எடுத்துக்கொண்ட போதிலும், இவ்விராஜதானியின் ஒன்றே உற்பத்திச் சங்கமாகிய இது அபிவிருத்தியடையவில்லையென்று ரெஜிஸ்ட்ராரவர்கள் வருத்தப்படுகிறார்.

### வேலைக்காரர்களின் சங்கங்கள்.

தோட்டிகளுக்கு இரண்டுசங்கங்கள், ஒன்று சேலத்திலும், மற்றொன்று கோயம்பத்தூரிலும் மிருக்கின்றன. சேலம்சங்கமானது, 276 மெம்பர்களையும், ரூ. 520 பங்குதனத்தையும், ரூ. 1,201 தொழில்தனத்தையும், பிரஸ்தாபவருஷத்தில் ரூ. 266 நிகர்லாபத்தையும் உடைத்தாயிருக்கின்றன. கோயம்பத்தூர் சங்கமானது, 108 மெம்பர்களையும், ரூ. 186 பங்கு முதலையும், ரூ. 981 தொழில் தனத்தையும், பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 26 நிகர் லாபத்தையுமுடைத்தாயிருக்கின்றது.

ஐரோப்பியர்களிடத்தில் வீட்டு வேலைசெய்து வரும் வேலைக்கார



ராஸ் ஸோஷல் ஸர்விஸ் கூட்டத்தாரின் நோக்கங்களிலொன்றானது ஏழைகளது கஷ்ட நிலைமைகளை நீக்குவது என்பதால், மதராஸ் பிஷப்புபங்களாவுக்குப் பின்னுள்ள சிறு சேரியிலிருக்கும் ஐரோப்பியர்களின் குடித்தன வேலைக்காரர்களுடைய எளிமையான நிலைமையை பரிசோதித்தார்கள். அவர்கள் தகுந்த மாதச்சம்பளம் ஐரோப்பியரிடம் வாங்கின போதிலும் லாவகாரர்களின் இம்சையால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள். இதை நிவர்த்தி செய்ய அக்கூட்டத்தார் ஓர் கூட்டு முயற்சிச் சங்கத்தை பொறுப்பு வரையறுக்காத தன்மையில் ஏற்படுத்தினர். ஈகைகுணமுள்ள தனவான்கள் அதில் டிபாஸிட்டு செய்ய முன்வந்தார்கள். முக்கியமாய் அக்கூட்டத்தாரின் பிரஸிடெண்டான மிஸ்லஸ் ஒயிட்ஹெட் ரூ. 200 கொடுத்தார். மற்றவர்களின் டிபாஸிட்டுகளும், மெம்பர்களதும் சேர்ந்தது ரூ. 346. ஆகும். ரூ. 2,000 வரையில் இச்சங்கம் வெளியிற் கடன் வாங்கலாம். வாங்கும் தொகைக்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டி கொடுக்கிறது. பங்கு ஒன்று அணு 8 வீதம் 500 பங்குகள் சேர்ந்த ரூ. 250 அதின் பங்கு முதலாகும். இதை அநேக தவணைகளிற் செலுத்தலாம். இவ்வருஷத்தில் இவ்விதம் சேர்ந்தது ரூ 55; பிரவேசக்கட்டணம் ரூ. 13-12-0. ஆகும். கடன் கொடுக்கப்பட்ட தொகை விசேஷமாய் ரூ. 50-க்குக் குறைந்ததுதான். மெம்பர்களிடம் சொத்தில்லாமையால், கடன் தொகையானது கூட்டு நபர்களின் ஜாமீன் பேரில் கொடுக்கப்படுகிறது. கடன்கள் ஒழுங்காய் திருப்பிக்கொடுக்கப் படுகின்றன. சங்கமானது கடன் தொகைக்கு 100-க்கு$18\frac{3}{4}$வீதம் வட்டி மெம்பர்களிடம் வாங்கி ஒழுங்காய்த் திருப்பிக்கொடுக்கும் மெம்பர்களுக்கு $9\frac{3}{8}$ வீதம் தள்ளுபடி செய்கிறது. இச்சங்கம் சரிவர நடந்துவருதலால் மிகவும் பிரபலமாகிக் கொண்டிருக்கின்றது.

ஸால்ட்டு கொட்டார்ஸில் வேலைசெய்பவர்களது சங்கத்தைப்பற்றி இப்பத்திரிகை முன்னொரு சஞ்சிகையில் விரிவாய்க்கூறி யிருக்கிறோம். இது 115 மெம்பர்களையும், பிரஸ்தாபவருஷத்தில் ரூ. 2,582 நிகர்லாபத்தையும் உடைத்தாயிருக்கிறது.

### கட்டிடச் சங்கங்கள்.

கட்டிடச்சங்கங்கள் நான்கு இருக்கின்றன. மதராஸ் நகருக்கருகிலுள்ள மாம்பலச் சங்கமானது 77 மெம்பர்களையும் ரூ. 20,000 பங்கு முதலையுமுடைத்தாயிருக்கிறது. அதின் பிரஸ்தாபவருஷத்திய நிகர்லாபம் ரூ. 2472; அது 10 எண்ணெயாட்டும் செக்குகள் வாங்கி திருவல்லிக்கேணி கோவாப் ரேடிவ் சங்கத்திற்கு நல்லெண்ணைவிற்கின்றது. இச்சங்கத்தால் வாங்கப்பட்ட காலியிடமானது மெம்பர்களுக்குள் பிரித்துக் கொடுக்கப்பட்டது. கட்டிடவேலைகள் சமீபத்தில் ஆரம்பிக்கப்படும்.

கோயம்பத்தூர் கட்டிடச் சங்கமானது 150 மெம்பர்களையும் ரூ. 5,290 பங்கு முதலையும் உடைத் தாயிருக்கிறது. அது ரூ. 10,000 வெளியிற் கடன் வாங்கி மெம்பர்களுக்கு அசையாச் சொத்து ஈட்டின் பேரில் இரண்டு வருஷகெடுவிற்குக் குறையாமல் இவ்விஷயமாய் கடன் கொடுத்திருக்கிறது. பிரஸ்தாபவருஷத்தில் சங்கம் ரூ. 292 நிகர்லாபமடைந்தது.

மதுரையிலும் திண்டுக்கல்லிலுமுள்ள சங்கங்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகளில் முறையே 24 மெம்பர்களும், 41 மெம்பர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இம்மாதிரிச்சங்கங்கள் சமீபத்தில் அதிகமாயேற்படும்.

## தானிய பாங்கிகள்.

இப்பொழுது, சிளச்சேரி, பாகல்பட்டி, புத்தூர் முதலிய விடங்களில் மூன்று தானிய பாங்கிகளிருக்கின்றன. அவைகளில் சுமார் 100 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். எல்லா நடவடிக்கைகளும் தானியங்கள் மூலமாய்த் தான் நடைபெறுகின்றன.

## விவசாயச் சங்கங்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் மூன்று சங்கங்களும், மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் ஒவ்வொன்று மிருக்கின்றன. அவைகளில் இப்பொழுது 140 மெம்பர்களிருக்கிறார்கள்.

திருநெல்வேலிச் சங்கமானது மெம்பர்களுக்கு விதைகள் வாங்கி பங்கிட்டுக் கொடுத்தும், புதுமாதிரியான கலப்பைகள் மெம்பர்களுக்கு விற்றும் வருகின்றன. ஆவல்நத்தத்திலிருக்கும் சங்கமானது மெம்பர்கள் பயிரிடும் கருங்கண்ணி விதைகளை வாங்கி, யந்திரத்தால் கொட்டைகள் நீக்கப்பட்டபிறகு, ஓரிடத்தில் சேகரித்து வைக்கின்றது. மெம்பர்களுக்காக 20 கொர்ரு கலப்பைகள் வாங்கப்பப் பட்டன. வடமலைபுரம் சங்கமானது மெம்பர்களுக்கு விதைகளும், கால்நடைகளின் தீனியும், தோல்களும் சேகரித்துக் கொடுக்கின்றது

# 1913-14 வருஷத்தில் இந்தியாவில் கூட்டு முயற்சியின் அபிவிருத்தி

## 1. மதராஸ்

பின்வரும் ஸ்டேட்மெண்டால் மதராஸில் கூட்டுமுயற்சியானது சென்ற இரண்டு வருஷங்களிலடைந்த அபிவிருத்தி நன்கு விளங்கும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| நகரச்சங்கங்கள் ... | 11 | 16 | 835 | 941+ 132 சங்கங் | 40,39,626 | 52,19,370 |
| விவசாயநாணயம் ... | 59 | 64 | 17,841 | 21,694 | 10,75,260 | 15,21,890 |
| மற்றவைகள் ... | 1008 | 1253 | 64,037 | 77,902 | 44,38,865 | 55,78,926 |
| மொத்தம் | 1078 | 1333 | 82,713+ 198 சங்கங்கள் | 100537+ 252 சங்கங் | 95,53,751 | 12320186 |

16 நகரச்சங்கங்களில் 8 ஜில்லா பாங்கிகளாகும். மதுரை, தஞ்சாவூர் ஜில்லாபாங்கிகள் சங்கங்களை மெம்பர்களாகச்சேர்த்துக் கொண்டிருக்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் இப்பாங்கிகள் ரூ. 87,728 லாபமடைந்தன. அவற்றில் ரூ. 53,418 மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியைச்சேரும். க்ஷேம நிதியின் தொகை ரூ. 95,960. இந்நகரச்சங்கங்கள் 16-இல் எட்டு யூனியன்களாகும். விவசாய நாணயச்சங்கங்களின் சங்கியை 995 லிருந்து 1,238க்கு அதிகரித்தன. ஸ்தல டிபாஸிட்டுகள் ரூ, 1000-க்கு மேலுயர்த்தக்கூடும் சங்கங்கள்சென்ற வருஷத்தில் 63-ம், அதற்கு முந்தின வருஷத்தில் 55-ம் இருந்தன. ரூ. 100க்கு மேல் நிகர்லாபம் 379 சங்கங்களடைந்திருக்கின்றன. மூன்று தானியச்சங்கங்களும் 6 விவசாயச் சங்களுமிருக்கின்றன. இவ்வருஷத்தில், 20 குறிக்கப்பட்ட கூட்டு முயற்சிச்சங்கங்களின் பஞ்சாயத்தார்களிடம் சில சுகாதாரசம்பந்தமான வேலைகளை கவர்ன்மெண்டார் ஒப்புவித்திருக்கிறார்கள். டவுன் பாங்கிகள், 50-ம் 16,823 மெம்பர்களையும், ரூ 12,37 லக்ஷம் தொழில் தனத்தையுடைத்தாயிருக்கின்றன; அவைகளின் நிகர்லாபம் ரூ. 40,890; அவைகள் க்ஷேம நிதியின் மொத்தம் ரூ. 75,440 சேலம், கள்ளிக்கோட்டை, கோயம்பத்

ளூர், முதலிய யிடங்களிலுள்ள தோட்டிகளின் சங்கங்கள் இவைகளிற் சேர்ந்துள்ளன. 8 பிரிவினைச்சங்கங்களுக்கும் 1 உற்பத்திச்சங்கமும் (காஞ்சீபுரம் நெசவுக்காரர்களின் யூனியன்,) 4 கட்டிடச்சங்கங்களு மிருக்கின்றன. தணிக்கை செய்யும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள், ரெஜிஸ்டிரார், 5 அஸிஸ்டண்டு ரிஜிஸ்ட்ரார்கள், 38 இன்ஸ்பெக்டர்களுமாவார்கள்.

## 2. பம்பாய்

பின் வரும் ஸ்டேட்மெண்டு பம்பாயின் சங்கங்களது அபிவிருத்தியைக்காட்டும்:—

| சங்கங்களின் வருப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை | | தொழில் தனம், | |
|---|---|---|---|---|---|---|
| | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| நகரச்சங்கங்கள் ... | 4 | 5 | 1,538 | 1,682 | 13,64,565 | 17,94,531 |
| விவசாயநாணயம் ... | 409 | 568 | 27,905 | 38,621 | 22,41,896 | 28,03,849 |
| மற்றவைகள் ... | 102 | 124 | 16,780 | 26,472 | 12,41,302 | 20,14,755 |
| மொத்தம் | 615 | 698 | 46,223 | 66,775 | 48,47,763 | 66,13,135 |

பம்பாயில் ஓர் நகர பாங்கியும், 8 நகரபாங்கி யூனியன்களும் 1 யூனியனுமிருக்கின்றன. 70 சங்கங்கள் 4 நகரச்சங்கங்களுடன் சேர்க்கப்பட்டன; பங்குமுதல் ரூ. 408,221; மெம்பர்களின் டிபாஸிட்டுகள், ரூ. 7,87,041 விவசாயச்சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் ரூ, 185 657, 6¼ வட்டி விதம் கொடுத்திருக்கிறார்கள். மெம்பர்களின் டிபாஸிட்டுகள் ரூ, 6,18,275 லிருந்து ரூ. 8 71,249 க்கு, அதாவது தொழில் தனத்திற்கு 100க்கு 27 வீதத்திலிருந்து 31 வீதத்திற்கு, அதிகரித்தன. கூட்டுமுயற்சியில் எருச்சங்கமொன்றும், 2 பாற்சாலைகளும், 7 விதைச்சங்கங்களும், 7 களஞ்சியச்சங்கங்களு மிருக்கின்றன. சித்திரக்காரர்கள் வியாபாரிகள், தொழிலாளிகள் இவர்களுக்குப்பணம் இலகுவான வட்டிக்குக் கிடைக்கும்படி ஷூல்ஸ் டெல்ஷ் மாதிரி பாங்கிகள் அநேக மிருக்கின்றன. ரயில்வேவேலைக்காரர்களுக்கு இரண்டு சங்கங்களும், தபால், தந்தி ஆபீசுகளின் வேலைக்காரர்களுக்கு முறையே ஓர் சங்கமு மேற்பட்டன. மில்களில் வேலைசெய்யும் கூலியாட்களின் கஷ்டங்கள் நீங்கும் வண்ணம் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நெசவுக்காரர் சங்கங்களின் சங்கியை



19 லிருந்து 20 க்கும், அவைகளின் தொழில் தனம் ரூ, 55,600லிருந்து ரூ 1,06,490 க்கும் அதிகரித்தன. கூட்டுமுயற்சி இலாகாவானது, ரெஜிஸ்ட்ரார் ஒருவராலும், அவர் சிப்பந்திகளாகிய, அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார், 5 ஆடிட்டர்கள், அஸிஸ்டெண்டு ஆடிட்டர், 5 இன்ஸ்பெக்டர், இவர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

## 3. பங்காளம்

பங்காளத்திலுள்ள சங்கங்களின் அபிவிருத்தியைக்காட்டும் ஸ்டேட்மெண்டு பின்வருவமாறு:—

| சங்கங்களின் வருப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை, | | தொழில் தனம், | |
|---|---|---|---|---|---|---|
| | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| நகரச்சங்கங்கள் ... | 17 | 40 | 2,529 | 4,729 | 13,74,3[illegible]3 | [illegible]2,52,550 |
| விவசாய நாணயம் ... | 1,039 | 1,543 | 42,553 | 71,282 | 22,76,673 | 44,11,493 |
| மற்றவைகள் ... | 67 | 80 | 11,807 | 14,35[illegible] | 9,56,32[illegible] | 12,76,760 |
| மொத்தம் | 1,123 | 1,6[illegible]3 | 56,889 | 90,363 | 46,07,301 | 89,40,803 |

40 நகரச்சங்கங்களில், 33 நாணயஸ்தானங்களும், 7 மேல்விசாரணை செய்யும் யூனியன்களுமாகும். நகரபாங்கிகளில் மூன்று வகைகளிருக்கின்றன. அவைகளில் ஜனங்கள் அபிமானிப்பது தனிநபர்களும் சங்கங்களும் மெம்பராய் சேரக்கூடிய ஸ்தாபனமே! இவைகளின் சிப்பந்தி சம்பளச்செலவு ரூ. 20,000, அதாவது லாபத்தில் 100-க்கு 10-விகிதமாகும். அவைகளின் பங்கு முதல் ரூ. 4 லக்ஷம்; க்ஷேமநிதி ரூ. 35,658. யூனியன்களின் செலவுகளுக்கு நகரபாங்கிகள் கொடுக்கின்றன. தணிக்கைவரிகள் விதிப்பதாக கவர்ன்மெண்டார் உத்தேசித்திருப்பதால், இக்கொடைகள் இனி நின்றுவிடும். மாகாணபாங்கி ஒன்றை ஏற்படுத்துவதாக யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். 504 விவசாயநாணயச்சங்கங்கள் இவ்வருஷத்தில் உண்டாயின. 1,273 சங்கங்கள் ஸெண்டரல்பாங்கிகளுடன், சேர்க்கப்பட்டன. அவைகளின் தொழில்தனம் ரூ. 44 லக்ஷம். பொறுப்பு வரையறுத்த நாணயச்சங்கங்களின் சங்கியை 60 லிருந்து 71-க்குயர்ந்தது. எல்லாம் விசேஷமாய் குமாஸ்தாக்களின் சங்கங்கள். பாற்சாலையொன்றும், நெசவுக்காரர்களின் சங்கங்களிரண்டும், தானிய பாங்கிகளிரண்டுமிருக்கின்றன. கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களாகிய ரெஜிஸ்ட்ராரும்

அஸிஸ்டெண்டுகளும், 8 இன்ஸ்பெக்டர்களும் மேல் விஜாரணை செய்து வருகிறார்கள் கவர்மெண்டாரால்சம்பளம் கொடுக்கப்பட்டு, ஆனால் ஸென்ட்ரல் பாங்கிகளின் கீழ் வேலை செய்துவரும் இன்ஸ்பெக்டர்களின் சங்கியை 15; இதைத்தவிர ஜில்லா பாங்கிகள் 31 இன்ஸ்பெக்டர்களை நியமித்திருக்கின்றன.

### 4. பஞ்சாப்பு

| சங்கங்களின்வகுப்பு | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1912-13 | 1912-13 | 1912-13 | 1913-14 | 1912-13 | 191 -14 |
| நகரச்சங்கங்கள் ... | 34 | 38 | 2,135 | 2,379 | 28,47,315 | 42,69,933 |
| விவசாய நாணயம் | 2,780 | 3,261 | 129.662 | 155,250 | 97,07,[illegible]80 | 13,27,723 |
| மற்றவைகள் ... | 31 | 34 | 2,973 | 3,263 | 2,54,509 | 8,83,740 |
| மொத்தம் | 2,845 | 3,333 | 133,780 | 1,60,892 | 1,28,09,304 | 1,84,29,096 |

பஞ்சாப் மாகாணத்தில்சங்கங்களின் அபிவிருத்தி மேற்கண்ட ஸ்டேட்மெண்டால் நன்கு விளங்கும் :—நகரச் சங்கங்கள், ஸென்ட்ரல் பாங்கிகளென்றும், யூனியன்களென்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 18 ஸென்ட்ரல் பாங்கிகளும், 26 யூனியன்களுமிருக்கின்றன. ஸென்ட்ரல் பாங்கிகளில் சங்கங்களும் தனிநபர்களும் மெம்பராகலாம்; ஆனால் யூனியன்களில் சங்கங்கள் தான் மெம்பராகலாம். இவைகளிரண்டும் பணமுதவு ஸ்தாபனங்கள். 481 விவசாயச் சங்கங்கள் சென்ற வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டன. அவைகளின் பங்குமுதல் மொத்த தொழில் தனத்தில் 100 க்கு 27 விதமும், கடன் தொகையின் வட்டி 1[illegible].5 விதமுமாயிருக்கின்றன. அநேக சங்கங்கள் விவசாய இலாக்காக்காரர்களிடம் விதைகளை மொத்தமாய் வாங்கியும் விவசாயக்கருவிகளை தருவழித்தும், மெம்பர்களுக்குப் பிரித்துக் கொடுக்கின்றன. குர்டைஸ்பூரில், தகரார்களை மத்தியஸ்தம் செய்யவும், சிறு குற்றங்களை திருப்திகரமாய் பைசல் பண்ணவும் 32 பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டன. நெசவுக்காரர்களின் சங்கங்கள் 12 யிருக்கின்றன. இவைகள் ரூ 50,845 விலையுள்ள நூலைவாங்கி ரூ. 47,490-க்கு சாக்குகளைவிற்று, பங்கு முதலில் 100-க்கு 10-விதம் நிகர்லாபமடைந்தன. ஆனால் 2 அல்லது 3 சங்கங்கள்தான் உண்மையான அபிவிருத்தியுடையன இருக்கின்றன. செக்கிலியர்கள் சங்கங்கள் இரண்டின்



பங்குமுதல் ரூ. 6.400 ; அவைகளின் நிகர்லாபம் ரூ. 1,446. விளைபொருள்களை விற்கும் சங்கங்கள் நான்கு யிருக்கின்றன. கவர்மெண்டார் சம்பளம் கொடுக்கும் 19 இன்ஸ்பெக்டர்களும், ஸப் இன்ஸ்பெக்டர்களும் சங்கங்களிடமிருந்து சம்பளம் வாங்கும் 27 இன்ஸ்பெக்டர்களும், கௌரவத்திற்குழைக்கும் 44 கனவான்களும், மேல்விஜாரணை செய்து வருகிறார்கள்.

### 5. ஐக்கிய மாகாணங்கள

பின்வரும் ஸ்டேட்மெண்டு ஐக்கிய மாகாணங்களிலுள்ள சங்கங்களின் அபிவிருத்தியைக் காட்டும் :—

| சங்கங்களின் வகுப்பு | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| நகரச்சங்கங்கள் ... | 51 | 55 | 12,585 | 10,423 | 4,435,676 | 5,909,745 |
| விவசாய நாணயம் ... | 2,304 | 2,560 | 89,296 | 99,891 | 3,864,228 | 5,071,464 |
| மற்றவைகள் ... | 175 | 185 | 4,746 | 5,755 | 367,718 | 437.428 |
| மொத்தம் ... | 2,530 | 2,800 | 106,627 | 116.0[illegible]9 | 8,667,662 | 11418637 |

மத்தியமாகாணங்களிலுள்ள சுமார் பாதி ஜில்லாக்களில் ஸென்ட்ரல் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் பணவுதவுகிறதோடு மேல்விஜாரணையும் செய்கின்றன. செலுத்தப்பட்ட பங்குமுதலும் க்ஷேமநிதியும் சேர்ந்து மொத்ததொழில் தனத்திற்கு 100-க்கு 15·9 வீதமாகின்றது. மேல்விஜாரணை செய்வதற்கு ஸென்ட்ரல் பாங்கிகள் நிரம்ப சம்பளம் கொடுத்து 117 சிப்பந்திகளை யுடைத்தாயிருக்கின்றன. அவர்களில் 6 பெயர்கள் ரூ. 100-க்குமேற் சம்பளம் வாங்குகிறார்கள். இப்பாங்கிகள் விவசாயிகளுக்கு நல்லவிதைகளை வாங்கி விற்றும், தக்காவிக்கடன் வாங்கிக் கொடுத்தும், சாகுபடியில் நூதனமுறைகளை ஏற்படுத்தியும், உதவுகின்றன. பழைய ஸ்தாபனங்களை ஸ்திரப்படுத்துவதில் அதிககவனம் செலுத்தப்பட்டபடியால், நாணயச் சங்கங்கள் இவ்வருஷத்தில் புதிதாய் ஏற்படவில்லை. கிராமச்சங்கங்கள், விசேஷமாய் ஸென்ட்ரல் சங்கங்களோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாடெஹ்பூர், பெறரீஸ், ஜில்லாக்களிலுள்ள சங்கங்கள் மெம்பர்களிடம் பணம் வசூல்செய்து பள்ளிக்கூடங்களை போஷிக்கின்றன. இன்னும் சிலவைகள் சுகாதாரவிஷயத்தைப்பற்றியும்,

வியாதியஸ்தர்களுக்கு ஔஷதம் கொடுப்பதிலும் சிரமமெடுத்து வருகின்றன. விவசாயத்தை அபிவிருத்தி செய்வதிலெல்லாம் மிக்க ஊக்கத்துடன் வேலைசெய்து வருகின்றன. கடன் தொகையின் வழக்கமான வட்டி 100-க்கு 15 வீதமாகும். டவுன்களில் பொறுப்புவரையறுத்த 168 நாணயச்சங்கங்களிருக்கின்றன. குமாஸ்தா சங்கங்கள் 14-ம் கால் நடை இன்ஷியூரன்ஸ் சங்கமொன்றும், பாற்சாலைகள் 10-ம், நெய்ச் சங்கங்கள் நான்கும், 3 ஸ்டோர் சங்கங்களும், தச்சுப்பட்டரைகளுமிருக்கின்றன. அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களும், இன்ஸ்பெக்டர்களும் கௌரவத்திற்குழைக்கும் கனவான்களும் தணிக்கை செய்து வருகின்றார்கள்.

## 6. மத்திய மாகாணங்களும் பேராரும்

மத்தியமாகாணங்களிலும் பேராரிலுமுள்ள சங்கங்களின் அபிவிருத்தி பின்வரும் ஸ்டேட்மெண்டால் தெரியவரும்.—

| சங்கங்களின் வகுப்பு, | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில்தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1912-13 | 1912-14 | 1912-13 | 19131914 | 1912-13 | 1913-14 |
| நகரச் சங்கங்கள் ... | 35 | 38 | 3,078<br>825<br>சங்கங்கள். | 4,324<br>1,807<br>சங்கங்கள். | 2,027,429 | 3,837,411 |
| விவசாய நாணயம் ... | 1,363 | 2,087 | 23,051 | 34,313 | 13,90,539 | 25,76,238 |
| மற்றவைகள் ... | 15 | 88 | 1,439 | 1,778 | 97,038 | 96,284 |
| மொத்தம் ... | 1,449 | 2,218 | 27,571 +<br>825<br>சங்கங்கள் | 40,415 +<br>1807<br>சங்கங்கள். | 35,15,046 | 65,09,938 |

மகாணபாங்கியானது 135 மெம்பர்களையும் ரூ. 12 லக்ஷத்திற்கு மேல் தொழில் தனத்தையுமுள்ளது. பிரஸ்தாபவருஷத்தில் 100-க்கு 4 வீதம் டிவிடெண்டு கிடைத்தது. மத்திய மாகாணங்கள் யூனியன் என்று ஓர் ஸ்தாபனமிருக்கிறது. அதில் எல்லாம் ஸெண்ட்ரல் பாங்கிகளும் தங்களுடன் சேர்ந்த சங்கங்களுடன் மெம்பராயிருக்கின்றன. யூனியனிதிக்கு சங்கங்கள் ரூ. 1-வீதம் நன்கொடை கொடுத்து வருகின்றன. ஸெண்ட்ரல் பாங்கிகள் 25-ன் தொழில் தனத்தில் சொந்தமுதல் 100-க்கு 25 வீதமிருக்கின்றது. 4 விவசாய யூனியன்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பிரஸ்



தாப வருஷத்திய நிகர லாபம் ரூ. 6,710, இன்னும் 10 யூனியன்கள் சமீபத்தில் ஸ்தாபிக்கப்படும். பருத்திக்கொட்டையெடுக்கும் சங்கமொன்றும், கால்நடைகளை விருத்திசெய்யும் சங்கங்கள் 2—மிருக்கின்றன. விவசாயச் சங்கங்கள் தங்கள் தொழில்தனத்தில் சொந்தபணம் 100-க்கு 8 வீதமுடைத்தாயிருக்கின்றன.

நெசவுக்காரர்களுக்கு 51-ம், சாயம் போடுவோர்களுக்கு ஐந்தும், தட்டான்களுக்கு இரண்டும், செம்பு பித்தளை வேலைசெய்வோர்களுக்கு நான்கும், கூடைப் பின்னுகிறவர்களுக்கு ஆறும், சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேல்விஜாரணை தணிக்கை செய்வதற்காக கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாகிய ரெஜிஸ்டிரார், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார், 22 ஆடிட்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## 7. பர்மா.

பர்மாவிலுள்ள கூட்டுமுயற்சிச் சங்கங்களின் அபிவிருத்தி அடியில் வரும் ஸ்டேட்மெண்டால் தெரியவரும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1912 13 | 1913 14 | 1912 13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| நகர பாங்கிகள்<br>யூனியன்களும் சங்கங்களும், | 4<br>68 | 4<br>92 | 2,440<br>653 | 2,850<br>978 } | 21,93,<br>726 | 27,30,<br>871 |
| விவசாய நாணயம் | 1,043 | 1,210 | 26,033 | 29,8[illegible]9 | 28,38,<br>035 | 32,65,<br>893 |
| மற்றய சங்கங்கள் | 40 | 49 | 2,624 | 3,414 | 5,32,<br>762 | 6,14,<br>117 |
| மொத்தம். | 1,155 | 135 | 31,750 | 37,131 | 55,64,<br>523 | 66,10,<br>881 |

நகரச் சங்கங்கள் நான்கில், ஒன்று இன்னும் வேலை ஆரம்பிக்கவில்லை; அப்பர்பர்மா ஸெண்ட்ரல் பாங்கியானது எல்லாவற்றிலும் பெரிது. மாகாணபாங்கியாயிருக்கின்றது. யூனியன்கள் தங்களைச் சேர்ந்த சங்கங்களிலிருந்து தொழில் தனத்தில் 100-க்கு 4 அணாவிலிருந்து 12 அணாவரையில் வீதம் வசூல் செய்து வருகின்றன. விவசாயச்சங்கங்களின் நிர்வாகம் மிகவும் ஒழுங்காய் நடக்கின்றது. இவைகளில் 53 உற்பத்தி சங்கங்களும், 59 கால்நடை இன்ஷியூரன்ஸ் சங்கங்களுமிருக்கின்றன. ஒவ்வொரு நாணயச்சங்கத்தின் மெம்பர்களும் விசேஷமாய் ஓர் கால்நடை இன்ஷியூரன்ஸ் சங்கமேற்

படுத்த முயன்று வருகிறார்கள். எல்லா அபாயத்திலிருந்தும் காப்பாற்றுவதால் இன்ஷியூரென்ஸு வருஷக்கட்டணத்தின் வீதம் 100-க்கு 3½யிலிருந்து 5-க்குயர்ந்திருக்கிறது. பிரஸ்தாப வருஷத்தில் 4 வயதிலிருந்து 12 வயதுவரையிலுள்ள உழவுமாடுகளை (எருதுகளும் எருமைக்கடாக்களும்) இன்ஷியூர் செய்யப்பட்ட தொகை சுமார் ரூ. 75,000 ஆகும். நெசவுக்காரர் சங்கங்களும், குமஸ்தா சங்கங்களும் திருப்திகரமாய் வேலைசெய்து வருகின்றன.

மேய் மேயோவில் கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸொன்றும், அமராபுரத்தின் சமீபத்தில் ஓர் குதிரை வளர்க்கும் சங்கமொன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விலாகாவைச்சேர்ந்த கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் ரெஜிஸ்டிரார், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார், 11 ஜூனியர் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களுமாவார்கள். சங்கங்கள் தணிக்கை விஷயமாய் பிரஸ்தாப வருஷத்தில் சுமார் ரூ. 20,000 உதவின.

### 8. பேஹாரும் ஒரிஸ்ஸாவும்.

பின்வரும் ஸ்டேட்மெண்டு சங்கங்களின் அபிவிருத்தியைக் காட்டும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம், | |
|---|---|---|---|---|---|---|
| | 1912 13 | 1912 14 | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| நகரச் சங்கங்கள் | 8 | 12 | 685 | 1,142 | 4,46,995 | 8,02,575 |
| விவசாயச் சங்கங்கள் | 546 | 768 | 28,005 | 37,270 | 8,48,250 | 13,44.755 |
| மற்றச் சங்கங்கள் | 41 | 42 | 1,983 | 12,377 | 77,005 | 1 40.608 |
| மொத்தம் | 596 | 822 | 30,673 | 50,804 | 13.72,212 | 22,87,938 |

நகரச்சங்கங்கள் தங்களைச் சேர்ந்துள்ள சங்கங்களுக்குப் பணமுதவுதலோடு அவைகளை மேல் விசாரணை செய்தும் வருகின்றன.

ஸெண்ட்ரல் பாங்கிகள் 10-ம், யூனியன்கள் 3-ம், இருக்கின்றன. பணமுதவ் செய்வதில் தட்டில்லாமலிருக்கவேண்டி, மாகாணபாங்கி ஒன்று சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது. அநேக நாணயச்சங்கங்கள் கிருஸ்துவப் பாதிரிகளால் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் அவைகள் தகுந்த அபிவிருத்தியடையவில்லை. ஒரிஸ்ஸாவில் 2 தானியச் சங்கங்கள் திருப்திகரமாய்



வேலை செய்துவருகின்றன. மெம்பர்கள் வாங்கும் தொகைக்கு வட்டி வீதம் 100-க்கு 12½ வீதத்திலிருந்து 18¾ வீதம் வரையிலும் அவர்கள் போடும் டிபாஸிட்டுகளுக்கு வட்டிவீதம் 100-க்கு 9 லிருந்து 12½-வரையிலும், ஏற்பட்டிருக்கின்றன. நெசவுக்காரர்களின் சங்கங்களும், ஸ்டோர்ஸ் ஒன்றும் இருக்கின்றன. ரெஜிஸ்ட்ராரும் அவர்சிப்பந்திகளும் தணிக்கைசெய்து வருகிறார்கள். ஆடிட்டர்களுக்குப் பதிலாய் சப் டிப்டிகலெக்டர்கள் நியமிக்கப்படுவார்கள்.

### 9. அஜ்மீரும், மைர்வாராவும்.

பின்வரும் ஸ்டேட்மெண்டால் இம்மாகாணங்களில் கூட்டுமுயற்சியியக்கம் நன்கு விளங்கும் :—

| சங்கங்களின் வகுப்பு | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கங்கள் | | தொழில்தனம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1912 13 | 1913 14 | 1913-14 | 1913-14 | 1913-14 | 1913-14 |
| நகரச் சங்கங்கள் | 3 | 5 | 496 | 775 | 4,92,244 | 7,50 322 |
| விவசாயச் சங்கங்கள் | 279 | 352 | 845 | 10,387 | 5,03,204 | 7,35,509 |
| மற்றச் சங்கங்கள் | ... | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் | 282 | 357 | 8,611 | 11,162 | 9,95,4·8 | 14,85,830 |

நகரச்சங்கங்கள், ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியன் மேயாஸில் வேலை செய்கின்றன. பாங்கிகள் 100-க்கு 10-வீதம் கடன் தொகைக்கு வட்டி வாங்குகின்றன. இந்த பாங்கிகள் பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 22,571-2-3ம், அதற்கு முந்தின வருஷத்தில் ரூ. 11,382-4-10ம் நிகர் லாபமடைந்தன. விவசாயச் சங்கங்கள் 100-க்கு 12-வீதம் கடன் தொகைக்கு வட்டி வாங்குகின்றன; அவைகள் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு 100-க்கு 10-வீதம் வட்டி கொடுக்கின்றன. பஞ்சத்தின் கொடுமையால் அவஸ்தைப்படும் கூட்டுமுயற்சிக் காரர்களின் 10,000 குடும்பங்களைக் காப்பாற்றுவதில் ரெஜிஸ்ட்ராரவர்களின் கவனம் அதிகமாய் செலுத்தப்பட்டது.

### 10. குடகு.

ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்கள் 22-ன் அபிவிருத்தி மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. மூலதனமானது ரூ. 91,424 லிருந்து, ரூ. 1,06,20

க்கும், க்ஷேமநிதி ரூ. 15,043 லிருந்து ரூ. 18,106-க்கும் அதிகரித்தன. சுமார் ரூ. 6,212-க்கு இன்ஷியூர் செய்யப்பட்ட 558 கால்நடைகளையுடைய 9 கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்களிலிருக்கின்றன. தானிய பாங்கியொன்று பிரஸ்தாப வருஷக்கடைசியில் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சங்கங்கள் கௌரவத்திற்கு வேலைசெய்யும் கமிட்டிகளாலும், கண்டிரோலர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. சங்கங்கள் மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடனுக்கு 100-க்கு $12\frac{1}{2}$ வீதம் வாங்கியும் தாங்கள் வாங்குகடனுக்கு 100-க்குலிருந்தும் $6\frac{1}{4}$ வீதம் வட்டி கொடுத்தும் வருகின்றன. ரெஜிஸ்டராரும் கம்மிட்டியாரும், கண்டிரோலர்களும் கணக்குகளை தணிக்கை செய்து வருகிறார்கள்.

---

## ஸெண்ட்ரல் பாங்கிகள் மூலமாய்ப் பணமனுப்புவதற்கு ஆலோசிக்கப்பட்ட விதிகள்.

பின்வரும் விதிகள், மதுரை ராமநாதபுரம் ஜில்லாபாங்கி காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ, K, ராமஸ்வாமி அய்யரவர்களால் தயார் செய்யப்பட்டன :—

1. ஸெண்ட்ரல் பாங்கிகளின் மூலமாய் மதுரை ராமநாதபுரம் ஜில்லா பாங்கிக்கு தங்கள் பாக்கியை யனுப்ப உத்திரவுபெற்ற சங்கங்கள் அனுப்பும் தொகையை அப்பாங்கிகளிலுள்ள மதுரை ராமநாதபுரம் ஜில்லா பாங்கியின் செலவாணியாகிற (Current) கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

2. ஸெண்ட்ரல் பாங்கிகள் மூன்றுகாப்பிகளுள்ள ரசீது புஸ்தகங்கள் வைத்துக் கொள்ளவேண்டும், ரசீதின் முதல் காப்பியை பணமனுப்பும் சங்கத்திற்கும், இரண்டாவது காப்பியை மதுரை ராமநாதபுரம் ஜில்லாபாங்கிக்கும் தாமதமில்லாமல் அனுப்பவேண்டும், மூன்றாவது காப்பியை அப்பாங்கிகளிலேயே ரிகார்டு செய்யவேண்டும்.

3. ஜில்லாபாங்கியானது மற்ற ஸெண்ட்ரல் பாங்கிகளுக்குப் பணமனுப்புவதாலுண்டாகும்,மணியார்டர் கமிஷன், தபாற்கூலி, முதலிய செலவுகளுக்காக சங்கங்களிடமிருந்து ரூ. 25-க்கு 1 அணாவீதம் வசூல் செய்யவேண்டியது.

4. ஒரு ஸெண்ட்ரல் சங்கமானது மற்றொரு ஸெண்ட்ரல் சங்க மூலமாய்ப் பணமனுப்பினால், ரூ. 50-க்கு அணா 12 வீதம் அனுப்பும் சங்கம் அதற்குக் கொடுக்கவேண்டும்,

5. ஸெண்ட்ரல் சங்கங்களுக்கும், மதுரை ராமநாதபுரம் ஜில்லாபாங்



கிக்குமுள்ள சம்பந்தங்கள்.—ஸெண்ட்ரல் சங்கங்கள் ரூ. 1,000-க்கு மேற்பட்ட தொகைகளை மதுரை ராமநாதபுரம் ஜில்லா பாங்கிகளுக்கனுப்பவேண்டும்; அப்படிச் சேர்ந்ததொகை ரூ. 1,000-க்கு அதிகப்படாமலிருந்தால், அதை உடனே உபயோகப்படுத்த ஸந்தர்ப்பமில்லாதிருந்தாலொழிய, இந்த ஜில்லா பாங்கிக்கு அனுப்ப வேண்டியதில்லை.

6. செலுத்த வேண்டிய தொகை ரூ. 1,000-க்குட்பட்டால், ஒரு ஸெண்ட்ரல் சங்கமானது ஸெண்ட்ரல் பாங்கியின் சமீபத்திலுள்ள மற்றொரு ஸெண்ட்ரல் சங்கத்திற் கொடுத்துவிடலாம்.

மற்றவகைகளிலெல்லாம், மணியார்டர் மூலமாயாவது, அல்லது பாதி பாதி நோட்டுகளை இன்ஷியூர் பண்ணியாவது, அல்லது ட்ரெஷரி செல்லான் மூலமாயாவது அல்லது பிரத்தியேக ஆள்களின் துவாராயாவது பணத்தை யனுப்பவேண்டும்.

7. ஸெண்ட்ரல் சங்கத்திலிருக்கும் ரூ. 1,000-க்குக்குறைந்துள்ள தொகையை அனுப்பும்படி கேட்டால் நோடீஸ் பெற்றுக்கொண்டது முதல் 7 நாள் தவணை அச்சங்கத்திற்குக் கொடுக்கவேண்டும்.

8 ஒவ்வொரு மாத முடிவிலும், ஸெண்ட்ரல் சங்கமானது மதுரை ராமநாதபுரம் ஜில்லாபாங்கியின் டிபாஸிட்டுக் கணக்கின் காப்பி ஒன்றை அதற்கனுப்ப வேண்டியது.

9. தினசரி பாக்கியுள்ள தொகைக்கு 100-க்கு வருஷமொன்றுக்கு $3\frac{1}{8}$ வீதமாவது அல்லது ரூ. 60-க்கு 1 பைசா வீதமாவது வட்டி கணக்கிடவேண்டியது.

---

## மேல்விஜாரணை செய்யும் யூனியன்களை அல்லது சபைகளை ஸ்தாபித்தல்.

மதுரை ராமநாதபுரம் கோவாப்ரேடிவ் பாங்கியின் காரியதரிசியாகிய மிஸ்டர் ராமஸ்வாமி அய்யரால் பின்வரும் குறிப்பு தயார் செய்யப்பட்டது :—

1 யூனியன்களேற்படத்தகுந்த ஸ்தலங்களாவன: 1 மங்களம் ஸெக்ஷன் (ii) வடமலைபுரம் ஸெக்ஷன். (iii) தடங்கம். (iv) எதிர்கோட்டை. (v) உசிலம்பட்டி. (vi) திருச்சுழி. (vii) மானாமதுரை. (viii) திண்டுக்கல். (ix) மதுரை.

2. ஒவ்வொரு ஸெக்ஷனிலும், சங்கங்கள் தங்கள் வேலைகளை மேல்விஜாரணை செய்ய 5 பெயர்கள் சேர்ந்த கம்மிட்டி ஒன்றைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

3. அக்கம்மிட்டியானது மாதத்தில் ஒரு முறைக்குக் குறையாமல் வெவ்வேறு ஸ்தலங்களில் கூடவேண்டும். வருகிற கம்மிட்டி மெம்பர் ஒவ்வொருவருக்கும் மீட்டிங்குதோறும் ரூ. 1 வெகுமானம் கொடுக்கவேண்டும்.

4. சூபர்வைசர்களின் டயிரிபுஸ்தகங்களைப் பரிசோதனை செய்யவும், அவர்களின் சம்பளப்பட்டியை அங்கீகரிக்க சிபார்சுசெய்யவும் இக்கம்மிட்டிக்கு அதிகாரமிருக்கவேண்டும்

5. மீட்டிங்குமுடிவானவுடன் மீட்டிங்கின் நடவடிக்கைகளின் காப்பியொன்றை ஜில்லாபாங்கிக்கு அக்கம்மிட்டியானது அனுப்பவேண்டும்.

6. கணக்குப் புஸ்தகங்களையும், ரெஜிஸ்டர்கள் முதலானவைகளையும் சோதனைசெய்யும் பொழுது, சங்கங்கள் கம்மிட்டிக்கு உதவிசெய்யவேண்டும்.

7. கம்மிட்டியார் தங்களுக்கேற்பட்ட எல்லைக்குள் புதுச்சங்கங்களை ஸ்தாபிக்கலாம்.

8. ஓர் குறித்த சங்கத்திற்கு கடன் கொடுக்க சிபார்சுசெய்ய இவர்களுக்கு அதிகாரமிருக்க வேண்டும்.

9. சூபர்வைசர்கள் இக்கம்மிட்டியின்கீழ் வேலைசெய்யவேண்டும்; அவர்களுக்கு ரூ. 1 வரையில் அபராதம்போட கம்மிட்டிக்கு அதிகாரமிருக்கவேண்டும்.

10 கம்மிட்டியார் தங்களுக்குள் பிரசிடெண்டாக ஒருவரையும், காரியதரிசியாக ஒருவரையும், தெரிந்தெடுத்து கொள்ளவேண்டும்.

11 எல்லாமீட்டிங்குகளில் பிரசிடெண்டு அக்கிராசனம் வகிப்பார். அவர்வாராமலிருந்தால், வேறு கம்மிட்டி மெம்பர் யாவராவது அக்கிராசனம் வகிக்கலாம்.

12 கம்மிட்டியின் எழுத்து நடவடிக்கைகளையெல்லாம் காரியதரிசி பார்த்துக்கொள்ளவேண்டும்.

13. பிரசிடெண்டுக்குப் காரியதரிசிக்கும் வருகிற மிட்டிங்குதோறும் அணா 8 அதிகமாய் வெகுமானம் கொடுக்கவேண்டும்.

14. காரியதரிசியானவர் சூபர்வைசர்களின் டையிரிப்புஸ்தகங்களை சோதனை செய்யவேண்டும்; பிரசிடெண்டும் காரியதரிசியும் அவர்களின் சம்பளப்பட்டியில் கையொப்பமிடுவார்கள்.

15. காரியதரிசியானவர் முக்கியமான நிறைவேற்றும் ஆபீசராயிருப்பார். வேண்டுங்காலத்து மீட்டிங்குகளை கூட்டுவார்.

16 மீட்டிங்கு நடவடிக்கைகளின் புஸ்தகம் காரியதரிசியின் வசமிருக்கும்.

# ஸெண்ட்ரால் பாங்கிகளின் தணிக்கை உத்திரவுகள்.

## சேலம் ஜில்லா அர்பன் பாங்கியின் 1913-14-ம் வருஷத்திய தணிக்கை உத்திரவு.

151 நெ. சங்கமாகிய சேலம் ஜில்லா பாங்கியின் 1913-14-ம் வருஷத்திய கணக்குகள். சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ R. தேசிக்காசாரியார் தணிக்கை செய்தபடி அங்கீகரிக்கப்பட்டன.

2. பாங்கியின் ஆறாவது. வருஷமாகிய பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 6,661-2-9 நிகர்லாபம் கிடைத்தது. 19. நெ. பைலாவின்படி அது பின்வருமாறு பிரிக்கப்படவேண்டியது:—

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| (a) க்ஷேமநிதிக்கு | ... ... | 1665—4—8 |
| (b) காரியதரிசிக்கு வெகுமானம் | ... | 300—0—0 |
| (c) பங்குக்காரர்களுக்குள் பிரிபடவேண்டிய தொகை | | 4695-1—4 |
| | | 6661—2—9 |

3. மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியால் க்ஷேமநிதிக் கணக்கில் முன்னமே சேர்க்கப்பட்ட தொகையும், தவறி அதிகமாய்ப் போடப்பட்ட ரூ. 0-1-4-ம் சேர்ந்த ரூ. 438-10-1 போக பாக்கியுள்ள ரூ. 1,226-10-7 அப்பாங்கியில் டிபாஸிட்டு செய்யவேண்டும். இத்துடன் க்ஷேமநிதியின் மொத்தம் ரூ. 6970—10—10, ஏற்படுகின்றது.

4. சங்கங்களின்மேல் விதிக்கப்படும் அபராதவட்டி வீதத்தைக் குறைக்கவும் வட்டியை ஆறுமாதத்தில் வசூல் செய்வதற்கு பதிலாய் வருஷமுடிவில் வசூல் செய்யவும் டைரெக்டர்கள் ஏற்பாடு செய்வார்களென அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் நம்புகிறார். காரியதரிசியான ம-ா-ா-ஸ்ரீ ஆதிநாராயண செட்டியாரவர்கள் மிக்க ஊக்கத்துடன் சங்கவேலையை நிர்வகித்து வருவது மிகவும் புகழத்தக்கது. டைரக்டர்கள் டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்து விழும்படி மிக்கப் பிரயாசை யெடுப்பார்களென நம்பப்படுகிறது.

## தெனாலி ஜில்லா அர்பன் பாங்கியின் 1913-14-வருஷத்திய தணிக்கை உத்திரவு.

செலவு, லாப நஷ்டம், ஆஸ்திக் கடன், இவைகளின் ஸ்டேட்மெண்டுகள் அவ்ரால் கொடுக்கப் பட்டன.

2. சங்கத்தின் 4-வது வருஷமாகிய பிரஸ்தாப வருஷத்தில், மெம்பர்களின் சங்கிலை 67 லிருந்து 77 க்கும், பங்கு முதல் ரூ. 3,900-க்கு ரூ. 4,400 க்கும் அதிகரித்தன. ஸ்தல டிபாஸிட்டுகள் அதிகமாய் வராததினால், வேறு ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்து கடன் வாங்க வேண்டியிருந்தது. பிரஸ்தாப வருஷத்தில் திருச்சினாபள்ளி ஜில்லா பாங்கியானது இதற்கு ரூ. 12,000 கடன் கொடுத்திருக்கிறது.

3. பாங்கியானது பிரஸ்தாப வருஷத்தில் ரூ. 6[illegible]7-3-10, நிகர லாபமடைந்தது. பைலா 17-ன்படி அது பின்வருமாறு பிரிபட வேண்டியது:—

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| (a) நான்கில் ஓர் பாகம் க்ஷேமநிதிக்குச் சேரவேண்டியது | 156 | 12 | 11 |
| (b) மெம்பர்களுக்கு போனஸாக கொடுக்கபட வேண்டியது | 313 | 9 | 11 |
| (c) காரியதரிசியின் வெகுமானம் | 78 | 6 | 6 |
| (d) பொது நன்மை நிதிக்குச்சேர வேண்டியது | 78 | 6 | 6 |
| | 627 | 3 | 10 |

முன்னமே சேர்க்கப்பட்ட வட்டியாகிய ரூ. 8-7-11 போக பாக்கியுள்ள தொகை ரூ. 148-5-0-வை மதராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கியிற் போட வேண்டியது; இத்துடன் க்ஷேமநிதியின் மொத்த தொகை ரூ. 380-13-5 ஆகும்.

1912 வருஷத்திய ஆக்ட்டு 34-வது ஸெக்ஷன்படி, நிகர்லாபத்தில் 100-க்கு 7½ விதத்திற்கு மேல் பொது நன்மைநிதிக்குக் கொண்டுபோகக் கூடாது. இப்பொழுது சேர்க்கும் தொகையானது சட்டத்திற் கூறியதை காட்டிலும், ரூ. 3 .-5-6 அதிகமாயிருக்கிறது. இதை வேறு வழியில் செலவு செய்ய வேண்டியதாயிருக்கின்றது.

### தென்கன்னடம் ஜில்லா பாங்கியின் 1913-14-வருஷத்திய தணிக்கை உத்திரவு

1143 ரெ. சங்கமாகிய தென்கன்னடம் ஜில்லா பாங்கியின் 1913-14-வருஷத்தியக் கணக்குகள், சீப் இனிஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ C. N. கிருஷ்ணசாமி அய்யர் தணிக்கை செய்தபடி அங்கீகரிக்கப்பட்டன. வரவு செலவு, லாப நஷ்டம், ஆஸ்திக் கடன், இவைகளின் ஸ்டேட்மெண்டு அவரால் கொடுக்கப்பட்டன.

2. இந்த பாங்கியானது 1913ளு நவம்பர்மாதம் 30 தேதியில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, 1914ளு ஜனவரி 24 ம் தேதியில் வேலை செய்ய



ஆரம்பித்தது. 33-சங்கங்களும், 82-தனி நபர்களும் அதில் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டன. அதின் பங்கு முதல் (செலுத்தப் பட்டது) ரூ. 8,460 ஆகும். பாங்கியில் போடப்பட்ட டிபாஸிட்டும், கடனாக வாங்கப் பட்ட தொகையும் சேர்ந்து ரூ. 84,344-3-7, ஆகின்றது. வெளியிற் கடன் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 57,600; சங்கங்கள் பெற்றுக் கொண்டது. ரூ. 57,400. அதில் சங்கங்கள் ரூ. 6,500 திருப்பிக் கொடுத்து விட்டன.

3. பிரஸ்தாபவருஷத்தில் பாங்கியானது ரூ. 361-9-4 நிகர் லாபத்தைப்பெற்றது. சங்கத்தின் 26-வது பைலாவின்படி அது பின்வருமாறு பிரிக்கப் படவேண்டியது :—

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| (a) க்ஷேம நிதிக்குச் சேரவேண்டியது. | 90 | 6 | 4 |
| (b) காரியதரிசிக்கு வெகுமானம் | 45 | 3 | 2 |
| (c) மேல் விசாரணை செலவு | 45 | 3 | 2 |
| (d) மெம்பர்களின் டிவிடெண்டு | 180 | 12 | 1 |

க்ஷேம நிதியாகிய ரூ. 90-6-1-லை, மதராஸ் ஸெண்டரல் அர்பன் பாங்கியிற் போடும் படியாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பாங்கியின் வேலைகள் துவக்கப்பட்டு 5 மாதத்திற்குள் மிகவும் திருப்தி கரமாய் நடந்துவருகின்றன. நிர்வாக கம்மிட்டியின் முக்கிய மெம்பர்களாகிய மெஸ்ஸர்ஸ் M. ஷிவராவ், M. ஆனந்தராவ் இவர்கள் சங்கத்தின்வேலைகளில் மிகவும் சிரத்தையெடுத்துக்கொள்ளுகிறார்கள். பாங்கியானது அபிவருத்தி யடையுமென்று நம்பப்படுகிறது.

---

## சென்னை சட்ட நிருபண சபையில் ஐக்கிய முயற்சியைப்பற்றிய விஷயங்கள்.

### கேள்விகள்.

சென்ற நவம்பர் மாதத்திற் கூட்டிய சட்டநிருபண சபையில் பின்வரும் கேள்விகளும், மறுமொழிகளும் பிரஸ்தாபிக்கப் பட்டன:—

கேள்வி:—(a) ரூ. 35 லிருந்து அதிகச் சம்பளம் வாங்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கூட்டு முயற்சிச் சங்கங்களில் மெம்பராய்ச் சேருவதிலுள்ள ஆக்ஷேபணையானது ரத்து செய்யப்பட்டதாவென்றும்,

(b) இந்தியா கோவாப் ரேடிவ் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டு வரும் வரையில், க்ஷேமநிதியை உபயோகிக்கும் விஷயத்தைப் பற்றியும் தணிக்

கை வரி விதிப்பதைக் குறித்தும் கவர்ன்மெண்டார் முடிவாய் உத்திரவு செய்யாமல் நிருத்திவைப்பார்களா, வென்றும் கவர்ன்மெண்டார் தயவு செய்து சொல்வார்களா?

மறுமொழி.—(a) 1914ஞ அக்டோபர்மாதம் 1-ந்தேதியில் ஏற்பட்ட 1267 நெ. கவர்ன்மெண்டு உத்திரவைப் பார்வையிட்டால் தெரியவரும். (b) கமிட்டியாரின் ரிபோர்ட்டுவருகிற வரையில் உத்திரவு செய்கிறதை நிறுத்திவைப்பது உசிதமா வென்பதை கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்வார்கள்.

கேள்வி:—(a) கவர்ன்மெண்டார் அடியிற் கூறப்படுவனவைகளுக்கு தயவுசெய்து மறுமொழி சொல்வார்களா?—(a) 1914ஞ ஜூன்மாதத்தில் போர்ட்டு ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரித்தபடி கூட்டு முயற்சிச் சங்கங்களின் மீது தணிக்கை வரி விதிப்பது முடிவாய் உத்திரவு செய்யப்பட்டதா?

(b) அவ்வரி விதிப்பதைப் பற்றி கோயம்பத்தூர் ஸ்டோர்ஸ் மஹா சபையின் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் பெற்றுக்கொண்டாரா? (c) அதில் குறிக்கப்பட்டபடி இந்த ஸ்டோர்ஸின் சென்ற 8 வருஷமாய் ஏற்பட்ட வருஷ விற்றுமுதல், நிகர்லாபம், க்ஷேமநிதி இவைகளின் இலக்கங்கள் சரியாயிருந்தால் அவைகளை வெளிப்படுத்துவார்களா? (d) தணிக்கைவரி விஷயமாய் ஐக்கிய முயற்சிச் சங்கங்களிலிருந்து விண்ணப்பங்கள் கிடைத்தனவா? அப்படிக் கிடைத்தால் அவைகளை விபரமாய்த்தெரிவிக்க வேண்டுகிறேன்.

---

| * வருஷம் | விற்ற கிரயம் | | | லாபம் | | | நிதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 1905-06 ... | 7,895 | 11 | 7 | 237 | 0 | 9 | 59 | 4 | 0 |
| 1906-07 ... | 32,736 | 2 | 9 | 482 | 7 | 11 | 147 | 12 | 0 |
| 1907-08 ... | 36,902 | 13 | 10 | 680 | 13 | 4 | 194 | 0 | 7 |
| 1908-09 ... | 35,950 | 14 | 9 | 214 | 1 | 4 | 64 | 14 | 1 |
| 1909-10 ... | 19,350 | 7 | 4 | 574 | 15 | 4 | ... | | |
| 1910-11 ... | 33,708 | 1 | 7 | 41 | 14 | 4 | 41 | 14 | 4 |
| 1911-12 ... | 40,275 | 9 | 0 | 1026 | 0 | 9 | 289 | 3 | 10 |
| 1912-13 ... | 59,503 | 4 | 0 | 791 | 8 | 9 | 43 | 2 | 0 |

மறுமொழி:—(a) முடிவான உத்திரவு இன்னும் ஏற்படவில்லை.



(b) தீர்மானமும், கடிதமும், கிடைத்தன. (c) கேட்கப்பட்ட தகவல் முன் * கண்ட பின்வரும் ஸ்டேட்மெண்டால், தெரியவரும்:—இதின் இலக்கங்கள் சங்கத்தால் கொடுக்கப்பட்டன. அவைகள் பிழையற்றதென கவர்ன்மெண்டாரால் சொல்லமுடியாது:—

(d) 9 கூட்டு முயற்சிச் சங்கங்களிலிருந்து தணிக்கை வரி விஷயமாய் விண்ணப்பங்கள் வந்தன. இவைகளில் மூன்று ஸ்டோர்ஸாகும். அப்பிரசுரம் செய்ததற்கே ஆக்ஷேபித்து, அதை ரத்துசெய்ய முடியாமலிருந்தால் வேறுவிதமாய் மாற்றும்படி அபிப்பிராயப்படுகின்றன. ஸ்டோர்ஸ் அல்லாத மற்ற 3 சங்கங்கள் இம்மாதிரியே ஆக்ஷேபிக்கின்றன. மற்ற மூன்றும் அதைத் திருத்தும் படியாக எழுதியிருக்கின்றன.

## தீர்மானம்

ஆனரபில் மிஸ்டர் B.V. நரசிம்ம அய்யர் அதேசபையில் பின்வரும் தீர்மானத்தை பிரேரபணை செய்தார்:—

ஐக்கிய முயற்சிச் சங்கங்களிலிருந்து தணிக்கை வரி வசூல் செய்வதற்கு 1914ஞ ஜூன்மாதத்தில் போர்ட்டுஸெண்டு ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரித்த குறிப்பு விதியை இப்பொழுது சட்டமாகச் செய்யக்கூடாதென்று இந்த கவுன்ஸிலானது பெருமை பொருந்திய கவர்னரவர்களுக்கு சிபார்சு செய்கிறது.

பிரேரபணை செய்யும் மெம்பரைச் சேர்த்து, 7 உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் இத்தீர்மானத்திற்கு அனுகூலமாய் பேசினார்கள்.

ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியு இதற்கு மறுமொழியாக கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களைக்கொண்டு கணக்குகளை தணிக்கைசெய்து ஐக்கிய இயக்கத்திற்கு உதவிபுரிவதே கவர்ன்மெண்டின் நோக்கமென்றார். ஆனால், தணிக்கை மேல்விசாரணை செய்வதில் ஏற்படும் செலவானது ரூ. 15,000லிருந்து சுமார் ¼ லக்ஷத்திற்கு அதிகரித்துவிட்டதால், இவைகளால் நன்மையடையும் சங்கங்கள் இச்செலவில் ஒருபாகம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றபிப்பிராயப்படுகிறார். இப்படி தணிக்கைவரி விதிப்பதால் ரூ. 13,000 தான்கிடைக்கும். ஆகையால் கவர்ன்மெண்டு இதனால் லாபமடைய வேண்டுமென்று யெண்ணமில்லை யென்பது நன்கு விளங்கும். இச்செலவு தொகையில் சங்கங்கள் ஒருபாகம் ஒப்புக்கொள்ளவேண்டியதெனத்தெரிய வருகிறது. இது விஷயமாய் கவர்ன்மெண்டார் இன்னும் ஸ்திரமான முடிவுக்கு வரவில்லையென்றும், அத்தீர்மானத்திற்கு அனுகூலமான அம்சங்கள் ஆலோசிக்கப்படுமென்றும், அச்சபைக்கு உறுதிசொன்னார்.

இதைப்பற்றி ஆனரபில் திவான்பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை அவர்களும் பேசினார். கவர்ன்மெண்டார் சொன்ன உறுதிமொழி

களின்பேரில், அத்தீர்மானத்தை பிரேரேபணை செய்தவரே ரத்துசெய்து கொண்டார்.

---

# இந்தியா கோவாப்ரேடிவ் கம்மிட்டி

சென்ற சஞ்சிகையிற் கூறியபடி கூட்டுமுயற்சித் தொழில் சம்பந்தமாய் விசாரிக்கும் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய கோவாப்ரேடிவ் கமிட்டியார் முதலில் பம்பாயில் சென்ற நவம்பர் 12-ம் தேதியில் கூடினார். அப்பொழுது விசாரிக்கப் பட்டவர்கள் குறித்த விஷயங்களை இங்கு விரிவாய்க் கூறுகிறோம்.

டாக்டர்ஸ்டான்லிரீட் பம்பாய் கோவாப்ரேடிவ் பாங்கியின் நிர்வாகம், நிர்மாணம்,நடவடிக்கை முதலியவைகளைபற்றி விவரித்துச்சொன்னார். அப் பாங்கியின் மொத்த தொழில்தனம் சுமார் ரூ.15 லக்ஷம். அதில் 100-க்கு 23·36 வீதம் பங்குமுதலும் 12 வீதம் டிபென்சர்களும், 32·61 வீதம் டிபாஸிட்டுகளும் சேர்ந்துள்ளன. ஸர் விட்டல்தாஸ் தாக்கரேஸ என்பவர்கூட்டுமுயற்சித்தொழில் ஆரம்பத்தில் சங்கங்களுக்குப் பணமுதவியும் மேற்பார்வை பார்த்தும் வரவேண்டுமென்று சொன்னார். ராவ் ஸாகிப் தால்மாகி என்பவர், ஐக்கிய முயற்சி ஓங்கி வளரவேண்டுமானால், ஸெண்ட்ரல் பாங்கிகள், யூனியன்கள், இவைகளின் நிர்வாகத்தை வரவர கிராமசங்கங்கள் கைக்கொள்ள வேண்டுமென்றும், இதினால் சங்கங்களுக்கு மிக்க நன்மைகளுண்டாகுமென்றும் கூறினார். இந்திய ஊழியச் சங்கத்தின் மெம்பராகிய மிஸ்டர் G. K. தேவதார் என்பவர், சங்கங்களின் காரியதரிசியாய் வர அபிப்பிராயப்படுபவர்களுக்கு கவர்ன்மெண்டார் காரியதரிசியின் வேலைகளை பழக்கிக் கொடுக்கவேண்டுமென்றும், இதினால் ஏற்படும் செலவுகளை 5 வருஷத்திற்கு கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், சங்கங்கள் தங்கள் மெம்பர்களை காரியதரிசி வேலைகளில் பழக்குவதில் கவர்ன்மெண்டார் உதவிசெய்ய வேண்டுமென்றும், ஐக்கிய முயற்சி விஷயங்களை போதிக்கும் பொருட்டு யூனியன்களை நிரம்ப ஸ்தாபனம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

சென்னையில்.—இக்கம்மிட்டியார்சென்னைக்கு வந்தபொழுது,மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன்பாங்கி, திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸ், மாம்பலம் சங்கம், திருவள்ளூர் பாங்கி, மதுராந்தகத்திலும் காஞ்சிபுரத்திலுமுள்ள சங்கங்கள், ஆகிய இவைகளின் கணக்குகளைப் பார்வையிட்டு மிகவும் திருப்தியடைந்தார்கள்.

சென்னையில் இக்கம்மிட்டியார் கூடினபொழுது, தணிக்கைவரி விதிப்பதைப்பற்றியும், ஸெண்ட்ரல் பாங்கியின் அமைப்பைப்பற்றியும் விசே-



ஷமாய்ப் பிரஸ்தாபித்தார்கள். ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய திவான்பகதூர் L. D. ஸ்வாமிகண்ணுப் பிள்ளையவர்கள், தணிக்கைவரி விதிக்கும் விஷயத்தில் ஜனங்கள் முதலில் ஆக்ஷேபித்தாலும் இப்பொழுது வரவர சம்மதப் படுகிறார்களென்றும், நாணயச்சங்கங்களில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் மெம்பராகலாமென்று உத்திரவு செய்ய வேண்டுமென்றும், சுகாதாரவேலைகள், குளங்களை பழுதுபார்த்தல், இன்னும் முதலிய பொதுஜனக் காரியங்களை இச்சங்கங்களின் பஞ்சாயத்தாரிடம் ஒப்புவித்தல், ஜில்லா நிர்வாகவேலைகளுக்கு உதவியாயிருக்குமென்றும், பாங்கிகளுக்கும், கிராமசங்கங்களுக்கும் ஸம்பந்தமுண்டாக யூனியன்கள் ஏற்பட வேண்டுமென்றும் கூறினார்.

ஸர் V. C. தேசிகாசாரியார், தமது சாக்ஷியத்தில், பொதுஜனங்கள் செலுத்தும் வரிப்பணத்தை கூட்டுமுயற்சித் தொழிலின் அபிவிருத்தியின் பொருட்டு செலவுசெய்ய வேண்டுமென்றும், தணிக்கைவரி விதிப்பதற்கு இது சமயமில்லையென்றும், கிராம நாணயச்சங்கங்கள் ஏற்பட்ட யிடங்களில் கவர்ன்மெண்டாரின் கிஸ்தி விசேஷமாய் பாக்கியில்லாமல் செலுத்தப் பட்டபடியால் கவர்ன்மெண்டாருக்கு ஸாதகம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் பணம் கொடுத்து உதவிசெய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

மதுரை, ராமனுதபுரம் ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கியின் காரியதரிசியாகிய மிஸ்டர் K. ராமஸ்வாம அய்யர் சாக்ஷியம் சொன்னதில் முக்கியமான அம்சங்களாவன :—

ஸெண்ட்ரல் பாங்கிகள், தங்களைச்சேர்ந்த சங்கங்களின் உண்டிகளுக்கு ஓர் குறித்த தொகைவரையில் பணமுதவியும் வேறு ஸெண்ட்ரல் பாங்கிகளிடமிருந்து கடன் வாங்கினால் எவ்வளவு வட்டிவீதம் கொடுக்கின்றனவோ அவ்வீதப்படி ஸ்தலடிபாஸிட்டுகளுக்கு வட்டி கொடுத்தும், தனிச் சங்கங்களின் மீதியான ரொக்கத்தைப் பெறுவதற்கு ஏற்பாடும் செய்ய வேண்டும். ஸெண்ட்ரல் பாங்கிகள் தனி நபர்களைக் காட்டிலும் அதிகமாய் சங்கங்களை தங்கள் மெம்பராயுடைத்தாயிருக்க வேண்டும். 100-க்கு 9 வீதத்திற்கு மேல் டிவிடெண்டு ஸெண்ட்ரல் பாங்கிகள் கொடுக்கக்கூடாது; தர்ம சம்பந்தமான பொதுப்பணத்தை ஐக்கியமுயற்சிச்சங்கங்களில் டிபாஸிட்டு செய்ய ஹைகோர்ட்டார் உத்திரவுகொடுப்பது இவ்வியக்கத்திற்கு மிகவும் நல்லது. தொழில்தனம் 3 லக்ஷத்திற்கு 1-லக்ஷம் வீதம், 5 வீத வட்டிக்கு கவர்ன்மெண்டார் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்குக் கடன்கொடுத்தால் நன்மைகள் பலவுண்டாகும். சாதாரண ஸிவில் கோர்ட்டுகளின்போல் இச்சங்கங்களுக்குக் கொடுபடவேண்டிய தொகைகளுக்காக டிகிரிசெய்ய ரெஜிஸ்ட்ராரவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும்.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா பாங்கியின் காரியதரிசியாகிய ராவ்பகதூர் நாராயணராவ், தமது சாக்ஷியத்தில், தணிக்கை வரியை சங்கங்களின் மீது விதிக்கப்படாதென்றும், அப்படி விதித்தால் இப்பொழுது கௌரவத்திற்கு உழைத்துவரும் கனவான்கள் தங்கள் வேலைகளுக்குத் தகுந்த வெகுமானம் வேண்டுமென்பார்களென்றும், இதனால் இவ்வியக்கத்திற்கு அழிவுவரக்கூடுமென்றும் தெரிவித்தார்.

கூட்டுமுயற்சிச் சங்கங்களின் பழைய ரெஜிஸ்ட்ராரும் இப்பொழுது நெல்லூர் ஜில்லா கலெக்டருமான திவான்பகதூர் R. ராமச்சந்திரராவ் அவர்கள் சாக்ஷியத்தின் முக்கியமான அம்சங்களாவன:—கிராம நாணயச்சங்கங்கள், மற்ற சங்கங்களின் அதிகாரத்திற் குட்படாமல், சுயேச்சையா யிருக்கவேண்டும். ஜில்லா பாங்கிகளும் யூனியன்களும அவைகளுக்கு ஆலோசனைகள் சொல்லுவதைத் தவிர அதைகளின் நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது. சங்கங்களுக்கு ஸெண்ட்ரல் பாங்கிகள் கடன் கொடுப்பதாயிருந்தால், யூனியன்களைக் கேட்டுத்தான் செய்யவேண்டும். சங்கங்களை மெம்பர்களாயுடைய ஜில்லா பிடரல் பாங்கிகள் பணமுதவும் ஸ்தாபனங்களாக யேற்படவேண்டும். இப்பாங்கிகள் ரெஜிஸ்ட்ரார் செய்து வரும் வேலையை கடைசியில் ஒப்புக்கொள்ள வேண்டும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தணிக்கைகள் மாத்திரம் செய்யவேண்டும். மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியானது, சில வருஷங்களுக்குப் பிறகு, சங்கங்களின் க்ஷேமநிதிகளை தொழில் முதலாகவுடைய ஓர் பிடரல் பாங்கியாக மாறும். வட்டி வீதத்தைக் குறைக்க முயலுமாதலால், சங்கங்கள் இப்பாங்கியில் மெம்பர்களா யிருக்கக்கூடாது.

கூட்டுமுயற்சிச் சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் A. வேதாசலமய்யர், தமது சாக்ஷியத்திற் சொன்ன அம்சங்களில் முக்கியமாவன:—மதராஸ் ஸெண்ட்ரல்பாங்கியானது ஜில்லாபாங்கிகளுடன் தான் நடவடிக்கைகள் வைத்துக்கொள்ள வேண்டும். சங்கங்களை மெம்பராயுடைய, பங்கு மூலதனத்திலேயே பொறுப்புவரையறுத்த, ஜில்லா பாங்கிகளை ஏற்படுத்தவேண்டும். அப்பாங்கிகள் 100க்கு $7\frac{1}{2}$ வீதத்திற்கு மேல் டிவிடெண்டு கொடுக்கக்கூடாது. இப்பொழுதிருக்கும் ஜில்லா பாங்கிகள் தங்கள் டிவிடெண்டை 100-க்கு 9 வீதத்திற்கு உயர்த்தாமலாவது அல்லது செலுத்தப்பட்ட பங்கு முதலை உயர்த்தவாவது ஏற்பாடு செய்ய வேண்டும். கவர்ன்மெண்டு ஜாமீனில்லாமல், 20 வருஷ கெடுவுள்ளவும், 100-க்கு 6 வீதஸ்திரவட்டியையுமுடைய டிபன்சர்கள் மூலமாய் மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியானது, கடன்வாங்கி தொழில்தனத்தை அதிகப்படுத்துவது நல்லது. பஞ்சமர்கள் முதலான ஏழைகளிருக்கும் ஸ்தலங்களில்,



பொறுப்பு வரையறுக்காச் சங்கங்கள் ஏற்படுத்த சௌகரியமுண்டாகும் வண்ணம் இப்பொழுது சங்கங்கள் தங்கள் மெம்பர்கள் சொத்து பெறுமானத்தில் 8-இல் ஓர் பங்கு கடன் வாங்கக்கூடும் அதிகாரத்தை, 4-இல் ஓர் பங்காக கவர்ன்மெண்டார் உத்திரவைத்திருத்துவது மிகவும் அவசியம். சங்கங்களுக்குமேல் விசாரணை பண்ணவும், கடன் கொடுக்கும்படி சிபார்சுசெய்யவும், சொத்து விபரக் கணக்குகளை சோதனைசெய்யவும், தகரார்களை பைசல்பண்ணவும், யூனியன்களை ஸ்தாபிக்க வேண்டும்.

---

# ரெஜிஸ்ட்ராரவர்களின் சர்க்குலர்கள்

## 1914 வருஷத்திய

## R. O. C. 143, நெ.

மாதம் ரூ.:35–முதல் அதிக வருமானமுள்ள இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் கோவாப்ரேடிவ் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேருதல் கூடாது என்னும் நிபந்தனையின் ஒருபாகம் இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. 1914௵ அக்டோபர்௴ 1 தேதியுள்ள பப்ளிக் டிபார்ட்மெண்டு 1267 நெ. உத்திரவால் கவர்ன்மெண்டார் இராஜாங்க வுத்தியோகத்திலுள்ள எல்லோரும் விவசாயச் சங்கங்களில் அங்கத்தினராகலாமென்றும் ஆனால் அச்சங்கங்களில் உத்தியோகஸ்தர்களில் ஒருவராகவாவது அல்லது அச்சங்கங்களின் வேலைகளை நடத்தும் நிர்வாக சபையாரில் ஒருவராகவாவது இருத்தல் கூடாதென்றும் உத்திரவிடப்பட்டிருக்கிறது.

## 1914௵த்திய 2932 நெ.

சில சங்கங்களின் க்ஷேமநிதித்தொகை 1914௵ ஜூன்௴ 30தேதி வரை கொடுக்கவேண்டியதைவிட செண்டிரல்பாங்கில் கட்டிருக்கும் தொகை அதிகமாகஇருக்கிறது. இவ்வாறு அதிகமாயிருப்பதற்குக் காரணம் 1909௵த்திற்குமுன் க்ஷேமநிதியின் வட்டியை சங்கத்தின் கணக்குகளில் வரவுவைக்காமையே. இவ்வித்தியாசத்தை சரிப்படுத்தவேண்டுமையால் இவ்வதிகத் தொகைகளை சங்கங்கள் 191 '-15௵க் கணக்கில் லாபமாகக் காட்டவேண்டும். 1913-14௵த்திற்காக இவ்வாபீஸிலிருந்து அனுப்பப்படும் க்ஷேமநிதி உத்திரவுகளில் இவ்வதிகத் தொகைகளை குறிப்பிட்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட சங்கங்கள் க்ஷேமநிதி உத்திரவு கிடைத்தவுடன் தம்தம் கணக்குகளில் தகுந்த பதிவுகள் செய்துகொள்ளவும். அதாவது இவ்வதிகத்தொகையை க்ஷேமநிதி வட்டி வரவாகவும் க்ஷேமநிதிக்கா செலவாகவும் கணக்கில் காட்டவும்.

## விளம்பர விகிதங்கள்.

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... .... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

### மற்றவர்களுக்கு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

## சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

ஐந்தாம் சம்புடம் முன்னமே முடிவுற்றது. சந்தாதார்கள் தயை கூர்ந்து தமது பாக்கியுள்ள சந்தாவுடன் இச்சம்புடம் ஆறுக்குள்ள சந்தாவையும் அட்வான்ஸாய்க் கொடுத்துதவும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு
மானேஜர்,
சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி ஆபீஸ்.
33, அருணாசல ஆசாரி தெருவு,
திருவல்லிக்கேணி.

OFFICE OF THE REGISTRAR ... 21 MAY 1915 MADRAS.

# மத்ராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VI] 1915ஆம் மார்ச்சுமீ [இலக்கம் 3

## கவர்ன்மெண்டாரும், மற்றவர்களும் சங்க பரிசோதனை செய்வதிலுள்ள வித்தியாசங்கள்.

மதுரை, ஹைகோர்ட்டு வக்கீல்
ம-ா-ா-ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் அவர்கள் எழுதியது.

கவர்ன்மெண்டாருக்கும் பொது ஜனங்களுக்கும் இப்பொழுதிருந்து வரும் முர்கியமான கவனம் என்னவென்றால் சங்கபரிசோதனை செய்வதில் இனி நடக்கவேண்டிய முறை எவ்விதமென்பதே. கவர்ன்மெண்டார் தாங்கள் இவ்விஷயங்களில் அதிகமாய்த் தலையிடக் கூடாதென்றிருக்கிறார்கள். ஆனால் பொதுஜனங்களோ கவர்ன்மெண்டார் ஆதீனத்திலும் மேற்பார்வையிலும் இவைகளெல்லாம் இன்னும் வெகு நாள்களுக்கு இருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஏற்பட்ட அனுபோகங்களினால் எவ்வழி சிறந்ததென யூகித்தறிவது மிகவும் அவசியம். சென்ற ஜூன்மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானத்தின்படி இவ்விரண்டு வழிகளுக்கும் நடுவே ஓர் மார்க்கத்தைத் தெரிந்தெடுப்பது தான் யுக்தமானது. ஆனால் இன்னதென்று அது தெளிவாய் விவரிக்கப்படவில்லை. விவசாயச் சங்க நடவடிக்கைகளிலுண்டான அனுபோகத்தால் இப்பொழுதிருக்கும் ஐக்கிய இயக்கத்திற்கு அபிவிருத்தியுள்ள மார்க்க மின்னது பொருந்தி வருமென்று யூகிக்கலாம். ஆனால் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாய் இவ்வியக்கம் பரவியிருந்தால் இவ்வேற்பாடு ஸ்தலங்களுக்குத் தகுந்தபடி மாறுதலடையும். கவர்ன்மெண்டாரல்லாத பொது ஜனங்களின் ஸ்தாபனங்கள் எங்கெங்கு ஏற்பட்டிருக்கின்றனவோ அங்கங்கு கவர்ன்மெண்டாரின் மேற்பார்வையானது வரவரக் குறைவடைந்து அஸ்தாபனங்களுக்கே கொடுக்கப்படுமென்று தெரியவருகிறது.

இப்பொழுது இந்த ராஜதானியிலுள்ள இருவகை ஸ்தாபனங்கள் யூனியன்களும், யூனியன் மாதிரியில் ஏற்பட்ட ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கிகளுமாகும். முன் கூறியவைகளில் 8-ம் பின் கூறிய்வைகளில் 8-ம் இருக்கின்றன. 8 யூனியன்களில் 7 மேல் விஜாரணை செய்யும் ஸ்தாபனங்கள். ஒன்றுதான் அதாவது மதராஸ் பிரொவின்ஷியல் யூனியன் போதிப்பதற்கும் சதியாலோசனை செய்வதிற்கும் ஓர் மத்திய ஸ்தாபனமாகும். ஸெண்ட்ரல் பாங்கிகள் 8-யில் ஐந்து ஜாயிண்டு ஸ்டாக்கு இலக்ஷணங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் பணமுதவும் சங்கங்கள்தான். பாக்கி மூன்று பாங்குகள் 1912ஞூத்திற்குப் பிறகு யூனியன் மாதிரியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பணமுதவுதலும் மேற்பார்வை செய்தலுமாகிய இருதொழில்களை நடத்திவருகின்றன. பைலாக்களின்படி மேல் விசாரணையை நடத்தக்கூடிய ஸ்தாபனங்கள் மேற்கூறிய யூனியன்களும், மதுரை, கும்பகோணம், தென்கன்னடம், இவைகளிலுள்ள ஜில்லா பாங்கிகளுமாகும்.

இவ்ராஜதானியில் சங்கங்களின் வேலைகளை யுற்றுப்பார்த்தால் கிராம சங்கங்களின் நடவடிக்கைகளை யெல்லாம் விசேஷமாய் கவர்ன்மெண்டார் தாங்களே செய்து வருகிறார்களென விளங்கும். சங்கங்கள் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டரால் ஸ்தாபிக்கப்படுகின்றன. கடன்வாங்குவதற்கு இவர்தான் சிபார்சு செய்கிறார். அநேக சங்கங்களில் இவரேகடன்களை நேரில் பட்டுவாடாசெய்து, வேண்டிய கணக்குகளை யெழுதி, கணக்குப் புஸ்தகங்களில் பதிவுசெய்கிறார். உண்மையில் சங்க நிலுவைக்கடன் தொகைகளை இவரே வசூல்செய்து பாங்கிகளுக்கு அனுப்புகிறார். விசேஷமாய் காண்பரென்ஸ்களைக்கூட்டி அவைகளை சரியாய் முடிவுக்கு கொண்டுவருவதற்கும் இவரே முக்கிய காரணமாயிருக்கின்றார். ஆகையால் ஜனங்கள் இவைகளை கவர்ன்மெண்டாரின் ஸ்தாபனங்களென்று நம்பிவருகிறார்கள். பஞ்சாயத்தார் தங்களின் பொறுப்பு இன்னதென்று இன்னும் அறியவில்லை. கடன் நிலுவைத் தொகைகளை வசூல் செய்யச் சொன்னால் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர் கிராமத்திற்கு வந்தாலொழிய அவைகள் வசூலாகப்பட மாட்டாதென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஸெண்ட்ரல் பாங்கிகளும் தங்களுடைய பாக்கித் தொகைகளை வசூல் செய்ய கவர்ன்மெண்டார் உதவியை நாடுகின்றன. சங்கங்களின் உள் நடவடிக்கையைப்பற்றி விஜாரிக்கிறதில்லை. எல்லாவற்றிற்கும் கவர்ன்மெண்டாரின் உதவியை எதிர்பார்க்கின்றன. இச்செய்கையானது கிராமச் சங்கங்களுக்கும் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு முள்ள பொறுப்புகளைக் குறைக்கின்றன.

இப்பொழுது தணிக்கையும் மேற்பார்வையும், ஒரே கையிலிருந்து



கொண்டு வருகின்றன. இது தப்பான நோக்கம். ஒரே உத்தியோகஸ்தர் சங்க வேலைகளையும் தணிக்கையையும் செய்து வருதலால் சங்க நடவடிக்கைகளிலுள்ள தப்புகளும், ஒழுங்கின்மைகளும் எப்பொழுதும் வெளிக்கு வரயாட்டாது. நான் உதாரணமாக ஒன்றை எடுத்துக் காட்டுகிறேன். ஓர் குறித்த சங்கத்தின் கடன் தொகைகளைப் பிரித்துக் கொடுக்கும் இன்ஸ்பெக்டரே அச்சங்கத்தை தணிக்கை செய்கிறார். இப்பொழுதிருந்து வரும் ஏற்பாட்டில், சங்கத்திலுள்ள தப்பிதங்கள் அநேக வருஷங்களாய் வெளிக்கு வராமலிருப்பதற்கு மார்க்கமுண்டு. தணிக்கையையும், மேற்பார்வையையும், எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் நாம் பிரிக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது. தணிக்கை செய்பவர் தைரியமாய் மேற்பார்வை செய்வதிலுள்ள தப்பிதங்களை அப்பொழுதுக்கப்பொழுதே தாக்ஷிண்ணிய மன்னியில் எடுத்துக் காட்டுவார்கள். பொறுப்பு அதிகமாயிருத்தலால், மேற்பார்வை செய்து வருபவர்கள் மிகவும் ஊக்கத்துடன் வேலை செய்வார்கள். ஆகையால் சங்கங்கள் மிகவும் திருப்திகரமாயும் ஒழுங்காயும் வேலைசெய்துவரவேண்டுமானால், இரண்டு விஷயங்கள் ஏற்படவேண்டியதவசியம். அதாவது, கவர்ன்மெண்டார் தலையிடுதல் மிகவும் குறைவாயிருக்க வேண்டும்; இரண்டாவது, மேற்பார்வையும், தணிக்கையும் பிரிக்கப்பட வேண்டும்.

சங்கஸ்தாபன விஷயங்களை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாத கனவான்களிடம் ஒப்புவித்தல் நல்லதென்று நினைக்கிறேன். கவர்ன்மெண்டார் நாம் வேண்டியவைகளை ஏற்கனவே செய்திருக்கிறார்கள். ஏன் பொது ஜனங்கள் வேலைசெய்பக்கூடாது? அவர்கள் கிடைக்காவிட்டால் அவர்கள் கிடைக்கும் வரையில் சங்க ஸ்தாபனஞ் செய்வதை நிறுத்திவைப்பது நல்லது. ஜனங்கள் சங்கங்கள் ஏராளமாய் ஏற்பட வேண்டுமென்று முறையிடுகிறார்களென சொல்லப்படுகின்றது. இவ்வகைத்தான நோக்கம் இவ்வியக்கத்தின் அபிவிருத்திக்குத் தடங்கலாயிருக்கும்.

ரெஜிஸ்ட்ராருடைய வேலையானது, பொது ஜனஸ்தாபனங்களின் வழியாய் வரும் சங்க ரெஜிஸ்ட்டராகவேண்டும் விண்ணப்பங்களை நன்றாய் விஜாரித்த பிறகு திருப்திகரமாயிருந்தால் ரெஜிஸ்ட்டர் செய்வதைத் தவிர வேறொன்றுமிருக்கக்கூடாது. இப்படி நடந்தால் இனி இளைச்சசங்கங்கள் ஒருநாளும் ஏற்படாது.

சங்கமேல் விஜாரணை செய்யும் கடமையை சங்கத்திற்குப்பணமுதவும் ஸ்தாபனங்களிடத்திலும், யூனியன்களிடத்திலும் ஒப்பிவிக்க வேண்

டும். சங்கங்களுக்குப் பணமுதவவேண்டுமென்றே ஸெண்ட்ரல் பாங்கிகள் ஏற்பட்டன. மேல்விசாரணையை நடத்துதல் அவைகளிடமேயிருக்க வேண்டும். இப்பொழுது ரெஜிஸ்ட்ரார் அவரோ கடன் விஷயமாய் தம்முடைய இன்ஸ்பெக்டர்கள் கொடுக்கும் ரிபோர்ட்டுகளின்பேரில் கடன்களை சிபார்சு செய்துவருகிறார். இந்த ரிபோர்ட்டுகள் சரியானதா வென்று ஸெண்ட்ரல் பாங்கிகள் விசாரிக்கிறதே யில்லை. சிலபழைய ஸெண்ட்ரல் பாங்கிகளின் காரியதரிசிகள் முறையிடுகிறபடி, கடன் நிலுவைத்தொகையை வசூல் செய்வதற்கு ரெஜிஸ்ட்ரார் ஜவாப்புதாரி யென்று சொல்லுவது மிகவும் தப்பானது. கடன் விஷயமாய் அனுப்பும் உத்திரவுகளைப் பார்த்தால், அப்பேற்பட்ட பொறுப்பு இருப்பதாய் ஒன்றுந்தெரியவில்லை. பணமுதவும் பாங்கியானது தன் பணத்தின் காப்பை தானே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். சங்கம் கொடுக்கும் ஆஸ்தி கடன் ஸ்டேட்மெண்டை நம்பியிருப்பது மாத்திரம் போராது. கடன் நிலுவைகளை வசூல் செய்யப்புகுந்தாற்றான் கஷ்டங்கள் தெரியும். ஸெண்ட்ரல்பாங்கிகளே கடன் விண்ணப்பங்களை நேரே சோதித்து பைசல் பண்ணவேண்டும். அப்பொழுது தான் கடன்பாக்கியை வசூலிக்க அவைகள் தகுந்த நிலைமையிலிருக்கும்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற மேற்கூறிய இருவகை ஸ்தாபனங்களில், ஜில்லா பாங்கிங் யூனியன் தான் தன்னைச்சேர்ந்துள்ள சங்கங்களை மேல்விசாரணை தகுந்தபடி செய்யக்கூடியதென எனக்குத்தோன்றுகிறது. ஏனென்றால், சாதாரண யூனியன்கள் அவ்வளவு பணமுதவும் சங்கங்களல்ல.

இவ்விஷமாய் என் நோக்கங்கள் பின் வருமாறு:

1. இனிமேல் சங்கஸ்தாபனம்செய்வதை பொதுஜனங்களிடம்விட்டு விடவேண்டும்

2. ரெஜிஸ்ட்ரார் குறிக்கும் விதிகளுக்கு உத்திரவாதப்பட்டு சங்கங்களை மேல் விசாரணை பண்ணுதல், சோதனை செய்தல், முதலிய வேலைகளை யூனியன்களிடமும் ஸெண்ட்ரல் பாங்கிகளிடமும் ஒப்பிவிக்க வேண்டும்.

3. தணிக்கையை கவர்ன்மெண்டார்தான் செய்யவேண்டும்.

4. ஜில்லா பாங்கிங் யூனியன்கள் எங்கெங்கு ஸ்தாபிக்க முடியுமோ அங்கங்கு ஸ்தாபிக்கப் படவேண்டும்.

5. எந்த விடங்களில் ஜில்லா பாங்கிங் யூனியன்கள் வேலை செய்து வருகின்றனவோ, அவ்விடங்களில் மேல்விசாரணை செய்யும் யூனியன்கள் இன்னும் கொஞ்சம் காலம் வரையில் உண்டாவது அவசியம்.



# தவணைப் பிரகாரம் நாணயங்களை நடத்துதல்

சீப் ஆடிட்டர் மிஸ்டர் V. S. ராமஸ்வாமி அய்யர் எழுதியது.

கோஆப்ரேடிவ் சங்கங்கள் தங்கள் மெம்பர்களுக்கு அநேக நல்ல குணங்களை அவசியம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். நல்ல சங்கங்கள் கற்பிக்கும் குணங்களில் உண்மை பேசுதல், லேவாதேவி விஷயங்களில் வாக்குத்தவறாமல் நடந்துகொள்ளுதல், மதுபானம் முதலான கெட்ட வழக்கங்களை விட்டொழிதல், முதலான நற்குணங்கள் முக்கியமானவை. நன்றாய் ஆலோசித்துப் பார்க்குமளவில் இவ்விதமான சங்கங்களினின்று கற்றுக்கொள்ளக் கூடாத துர்க்குணங்களுமில்லை. கெட்ட குணங்களைவிட்டு மீட்பதற்கும் இவைகளை விட வேறு ஏற்பாடுகளுமில்லை. ஆயினும் எல்லாகுணங்களிலும் முதலில் சங்கங்கள் கற்பிக்க வேண்டியது, மெம்பர்கள் தாமொப்புக்கொண்ட பிரகாரம் அதேகாலத்தில் மெம்பர்கள் தாம்வாங்கிக் கொண்ட கடன்களை திருப்பிக்கொடுத்தல். அதேமாதிரியாகவே சங்கங்கள் தாம்வாங்கின பணங்களையும் சரியான காலத்தில் வாப்சு செய்தல்மிகவும் அவசியம். இக்குணங்கள் சங்கத்திலும் மெம்பர்களிடத்திலு மில்லையாயின்கூடிய சீக்கிரத்தில் அச்சங்கங்கள் நாசமடைவதிற் சந்தேகமில்லை. இந்தநற்குண மில்லாவிடின் லேவா தேவிச் சங்கங்கள் நடவாது. ஆகையால் இவ்விதமான சங்கங்களில் இவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவு கவனித்தாலும் ஜாஸ்தியாகமாட்டாது. ஆனால் வெகு காலமாய் லேவாதேவி விஷயங்களில் வாக்குப்பிரகாரம் நடவாமலிருந்து கொண்டிருந்த கிராமத்திலுள்ளவர்களுக்கு வாக்குப்பிரகாரம் டயத்தில் வாப்சுசெய்யும் நற்குணத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால் மிகவும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இச்சங்கங்களின் நிபந்தனைகளை மிகவும் கண்டிப்பாய் வைப்போமாயின் படிப்பில்லாத ஜனங்கள் சங்கத்தைவிட்டு நீங்கிவிடுவார்கள். கண்டிப்பு மிகவும்குறைந்துவிட்டால் வாங்கினகடன்களை சரியானகாலத்தில் வாப்சு செய்யாமல் கடனாளிகளாகிக் கெட்டுப்போவார்கள். ஆகையால் இரண்டுக்கும் மத்தியமாய் நடத்தவேண்டும்.

மெம்பர்களை ஒரு நிபந்தனைப் பிரகாரம் நடப்பிக்க வேண்டுமானால், அந்தயேற்பாட்டுக்கு மீறிநடக்கிறவர்கள் அபராதத்திற்கு உட்படுவார்கள் என்ற ஓர்பயமுண்டு பண்ணவேண்டியது அவசியம். பயமில்லாவிட்டால் டயம்பிரகாரம் வசூலாகாது. பாக்கித்தொகையை சரிவர வாப்சு செய்பவர்களுக்கு வெகுமானமும் கொடுக்கலாம். ஆனால்தண்டனை யில்

லாமல் முடியாது. இது அபராதமாகவாவது இருக்கலாம், அல்லது மெம்பரினின்றுநீக்குவது, தள்ளிவைப்பது, முதலானவைகளும் உபயோகப்படுத்தலாம். ஜனங்களுக்கு மிகவும் அனுகூலமாயும் சரியாயுமுள்ள ஏற்பாடு கண்டுபிடிக்க வேண்டும். கோஆபரேடிவ் சங்கங்களின் அபிவிருத்திக்கு இவ்விஷயம் மிகவும் முக்கியமானது.

இவ்வளவு நாளாக நாம்இது விஷயத்தில் தவணைகடந்து வருகிறோம். எல்லாச் சங்கங்களின் நிபந்தனைகளிலும் இதற்கு ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் இவ்வளவுகாலமாக வைத்துக் கொண்டிருக்கிற இந்த ஜாஸ்திவட்டி வசூல் செய்யும் ஏற்பாடானது நம்முடைய எண்ணங்களை நிறைவேற்றி மெம்பர்களுக்குச் சரியான காலத்தில் வேலை செய்யும் நல்லகுணத்தை கற்பித்திருக்கிறதா என்று யோசித்துப் பார்ப்பது நல்லது. அநேகமாய் இது மெம்பர்களுக்கு அந்த நல்லகுணத்தைக் கற்பித்திருப்பதாகக் காணப்படவில்லை. ஒரு ஏற்பாடு அமுலுக்குக் கொண்டு வருவதற்குமுன் அவ்வேற்பாட்டின் குணாகுணங்களைத் தீர ஆலோசிப்பது சிரேஷ்டமானதால் கோஆபரேடர்களை இவ்விஷயத்தைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த எண்ணத்துடனே இது எழுதப்பட்டிருக்கிறது.

மெம்பகளிடத்திலிருந்து ஜாஸ்திவட்டி வாங்குவதின் அபிப்பிராயம் அவர்களுக்கு கெடுத்தவராத நாணயத்தைக் கற்பித்து மெம்பர்கள்மனதில் ஒருபயமுண்டு பண்ணுவதுதான். நமக்கு அவர்களிடத்திலிருந்து அனாவசியமாக ஒருபைசா கூடவாங்கவேண்டு மென்கிற எண்ணம்கிடையாது. இந்த எண்ணத்துடன் அபராதவட்டி வசூல் செய்வது சரியான ஏற்பாடுதான். கிராமங்களில் இங்கிலீஷ் தேதிகள் தெரிந்தவர்கள் மிகவும் குறைவு. பஞ்சாயத்தார்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு மெம்பருக்கும் தவணைகாலத்திற்கு 15 நாளைக்கு முன்னதாகவே சொல்லிவைத்து அடிக்கடி அவர்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் எல்லாக்கடன்களும் சரியான காலத்தில் வசூலாகும். இல்லாவிட்டால் ஆகமாட்டாது. இவவளவு சிரத்தை பஞ்சாயத்தார்களிடம் நாம் எதிர்பார்க்க முடியாது. தாம் தங்களுடைய ஆஸ்திகளை யெல்லாம் ஈடு வைத்து ஏழைகளுக்கு ஜாமீன்தார்களாக யிருந்து கடன்களை கொடுப்பதேவிசேஷம். ஏழைகளிடத்திலிருந்து பணம்வசூல் செய்வது மிகவும் அசாத்திய மானகாரியம். இவ்விஷயமாய் அவர்களுக்கு ஜாஸ்தி கஷ்டமில்லாத உபாயமிருந்தாற்தான் ஏழைகளுக்கு ஜாஸ்தியுபகாரம் செய்ய பஞ்சயாத்தார்கள் விரும்புவார்கள். இல்லாவிடில் சங்கங்கள் விருத்தியாக மாட்டாது. சங்கங்களில் நன்றாய் விசாரித்துப் பார்த்தால் இப்பொழுது



ஏழைகளுக்கு ஜாஸ்தியாக அநுகூலம் கிடைக்கவில்லையென்றும், சுமாராய் ஆஸ்தியுள்ளவர்களே அநுகூல மடைந்திருக்கிறார்களென்றும், விளக்கும். மேலும் இப்பொழுது இருக்கிறதைவிட பஞாயத்தார்களுக்கு ஜாஸ்தி கௌரதையுண்டாக வேண்டும். சர்க்கார் இது விஷயமாக எவ்வளவு உதவி செய்தாலும் கோஆபரேஷனுக்கு மிகவும் உதவியாக விருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

பட்டணங்களிலுள்ள நிதி, பண்டாபீஸ், முதலியவைகளில் அபராதவட்டி வசூல் செய்துவருகிறார்களே. அதினால் அவ்வளவு அநுகூலம் காணப்படவில்லை. இவைகளுக்கு வருகிறலாபத்தை யோசித்துப்பார்க்குமிடத்து இதுவிஷயமாக வசூலாகிற தொகை மிகவும் அதிகமாய்க்காணப்படுகிறது. ஆனால் மெம்பர்கள் தங்களுடைய கெட்டகுணங்களை இன்னும் விடவில்லை. இங்கிலீஷ்தேதி,விவகாரங்கள், முதலியவைகளைத் தெரிந்தவர்களாகிய பட்டணத்தார்களே இவ்விதமிருந்தால், படிப்பில்லாதவர்களாகிய கிராமத்திலும்பட்டிக்காடுகளிலுமுள்ளவர்களைப்பற்றிக் கேழ்ப்பானேன். மெம்பர்களுக்கு தாமிவ்வளவுஅபராதவட்டி கொடுக்கிறோமென்றுகூடத்தெரியாது. கேட்டதொகையை கொடுத்துக்கொண்டிருப்பது வாஸ்தவமாய் சங்கத்தின் வேலைதெரிந்தவர்களுக்குத் தெரியும். பஞ்சாயத்தார்,காரியதரிசிகள், முதலானவர்களுடைய அஜாக்கிரதையாலும் மெம்பர்கள் நஷ்டமடைந்துவருகிறார்களெனத் தெரிந்தவிஷயமே. நம்முடைய முக்கிய உத்தேசம் மெம்பர்களின் மனதில்பயமுண்டு பண்ணவேண்டுமென்றிருத்தலால், மெம்பர்கள் ஒன்று மறியாமல் கேட்ட பணத்தைக் கொடுத்துக்கொண்டு வருவதில் அந்த எண்ணம் கொஞ்சம் கூட நிறைவேறவில்லை. நம்முடைய கணக்குகளில் இதற்கு வேறு ஸ்டேட்மெண்டுகளிலிருக்குப் பக்ஷத்தில் எவ்வளவு மொத்த தொகை அபராதமாக மெம்பர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்களெனத் தெரியவரும். இவைகளையெல்லம் யோசிக்குமளவில் அபராதவட்டி வசூல் செய்வது நல்ல ஏற்பாடாகக் காணவில்லை.

கோஆபரேஷனில் பண்டிதரான உல்பு துரையவர்களின் புஸ்தகங்களிலுள்ள நிபந்தனைகளில் வேறு ஒரு ஏற்பாடு சொல்லுகிறார். பஞ்சாயத்தார்களுக்கும் மெம்பர்களுக்கும் அபராதம் போட ஏற்பாடு செய்திருக்கிறார். ஒவ்வொரு தப்பையும் யோசித்து அவர்கள் தீர்மானம் செய்யவேண்டும். இப்படிச் செய்வதில் மெம்பர்களுக்கு ஜாஸ்தி நஷ்டமாகாது. நியாயமான கேசுகளில் அபராதம் விதிக்கப்பட மாட்டாது. இப்படிக்கூடி தீர்ப்புச் சொல்லுகிறது பஞ்சாயத்தார்களுக்கு மரியாதையும் ஜாஸ்தியாகி, விவகார ஞானமும் விருத்தியடையும். இதை நாம் விரும்புகிறோம்: தனியாக வசூல் செய்வதில் மெம்பருக்கு அபராதமென்று தெரியா

திருக்க முடியாது. வரவா மெம்பர்களுக்கு அபராதமென்றால் அவமானப் ஜாஸ்தியாகும். சரியான காலத்திலும் வாய்சுசெய்து விடுவார்கள். அபராதத்தால் அவமானமில்லாவிட்டால் ஏன் ஒருவன் 10 ரூ அபராதத்தை நீக்க நூறு ரூபாய் செலவு செய்கிறான். இந்த அபராதத்தை எப்படி வசூல்செய்வது என்று ஒரு கஷ்டம் ஏற்படலாம். க்ஷேருதனம் கொஞ்சம் ஜாஸ்தியாக வைத்துவிட்டால் இது சுலபமாகிவிடும். முதலில் அபராத மொத்தம் கொஞ்சமாகவைத்து பிறகு ஜாஸ்தி செய்துகொள்ளலாம்.

இவ்விதமான ஏற்பாட்டை லேவாதேவி செய்கிறவர்கள் ஒரு மாதிரியாக உபயோகிக்கிறார்கள். தவணை கடந்தவுடன் ஒரு மனிதனை அனுப்புகிறார்கள். கடன் காரன் அவனுக்கு போஜனம் போட்டு கூலியும் கொடுக்கவேண்டும். இதற்கு பயந்து கட்டாயமாய் சீக்கிரம் வாய்சு கொடுத்துவிடுகிறான். அபராதப் வட்டியால் கடன் காரர்களுடைய பணம் நஷ்டமடைகிறதே யொழிய அவர்களுக்கு நல்ல புத்திவரவில்லை. இவ்விதமான அபராதம் ஒவ்வொரு கேசிலும் ஒன்று அல்லது அரை ரூபாய்க்கு ஜாஸ்தியில்லாத ஓர் அபராதம் போடுவது என்கிற ஏற்பாடு, அபராத வட்டியை ஜாஸ்திப் படுத்துவதைக்காட்டிலும் நன்மையை யுண்டுபண்ணும் என்று எனக்குத் தோன்றுகிறது. கான்பரன்சுகளில் இவ்விஷயத்தைப் பற்றி யோசிக்கபடுமென்று இது எழுதப்பட்டிருக்கிறது.

---

## கிராமநாணயச் சங்கங்களும் கூலிவேலை செய்பவர்களும்.

வேம்பனூர் மிஸ்டர் ரெங்கஸாமி அய்யங்கார் எழுதியது

கிராமநாணயச் சங்கங்களினால் கூலிவேலைக்காரர்களும் தொழிலாளிகளும் சுலபமான வட்டிக்கு கடனெடுக்கிறார்கள். இதற்கு முன்பு, பணம் அதிகவட்டி கொடுத்தாலொழிய பணம் கிடைக்காமலிருந்தது. ஆனால் அப்பணத்தைச் செலவுசெய்யும் மார்க்கங்களை நிர்வாக கமிட்டியார்கள் நன்றாயறியவேண்டும். இதை கவனியாமலிருந்தால் சங்கமேற்பட்டதினாலுண்டாகும் நற்பயன் நீங்கி கெடுதல்கள் சம்பவிக்கும். தஞ்சாவூர் ஜில்லா வேம்பனூர் கிராமநாணயச் சங்கத்தின் 120 மெம்பர்களில், 46 நபர்கள் கூலிவேலை செய்பவர்கள். அவர்களில் 16 பஞ்சமர்களிருக்கின்றார்கள். அவ்வூரில் எண்ணெயாட்டும் செக்குகளில்லாததினால் மெம்பர்களின் தூண்டுகோளின்பேரில் செக்காத்தி ஒருத்தி செக்கு ஒன்று ஏற்படுத்தி நிர்வகித்து வருகிறாள். மிகவும் ஒழுங்காய் எண்ணெய் வியாபாரம் நாணயத் தப்



பில்லாமல் நடந்துகொண்டு வருகிறது. கடன்கள் தவறாமல் கொடுபடுகின்றன. இம்மாதிரியே ஓர் பெண் மெம்பர் சங்கத்தில் கடன் எடுத்து ஓர் எருமைமாட்டை விலைக்கு வாங்கி பால் தயிறு நெய் வியாபாரம் செய்து வருகிறாள்.

மேற்கூறிய 16 பஞ்சம மெம்பர்கள் இதற்கு முன்னமே மழைகாலத்தில் தானியங்களை 100 க்கு 35லிருந்து 40 வரையில் வட்டி வீதத்திற்குக் கடன் வாங்கிவந்தார்கள். பணம் எளிதானவட்டிக்குக் கிடைப்பதால், இவர்களின் கஷ்டம் நிவர்த்தியாய் விட்டது. கடன்களை சரியான காரியங்களுக்குக் கொடுத்துதவினால் கூலிவேலை செய்யும் வகுப்பினர்கள் விருத்தியடைவதிற் சந்தேகமில்லை.

கிராமாந்திரங்களில் சுகாதார விஷயத்தைப் பற்றிக் கவனமெடுத்துக் கொள்ளவேண்டும். தகுந்த அவுஷதங்களில்லாமையால் சென்ற வருஷத்தில் காலராவில் சிலர் இறந்து போனார்கள். வைத்தியர் உதவியில்லை. அப்பிராந்தத்திலுள்ள சில தர்மப்பிரவுக்களில்லையாயின் வியாதிஸ்தர்கள் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள். குடியிருக்கு மிடங்களெல்லாம் மிகவும் அசுத்தமாயும் வியாதிகள் வருவதற்கு ஓர் மூலமாயுமிருக்கின்றன. கிராமாந்திர சுகாதார விஷயங்களை சீர்திருத்தஞ் செய்யாமலும் எலிமெண்டரிப் படிப்பை அங்கே பரவச் செய்யாமலும், அவர்களின் நிலைமைகளை அபிவிருத்தி செய்ய நினைப்பது முடியாத காரியம்.

வருஷத்தில் 6 மாதம் அவகாசம் விவசாயிகளுக் கிருக்கின்றது. இக்காலத்தை வீண்போக்காமல் பாய்கள் பின்னல், நெய்தல் முதலிய குடிசைத்தொழில்களைச் செய்யலாம்.

இப்பேர்ப்பட்ட குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்தாற்றான் ஏழை விவசாயிகளது கஷ்டங்கள் தீரும். கூலிவேலை செய்பவர்களுக்கு 6 மாதம் வேலை யில்லாமலிருந்தால் அவர்களின் வறுமையை நினைக்கும் பொழுதே யாவருக்கும் வருத்தந்தரும். இக்கொடுமைக்கு பயந்து ஏழை ஜனங்கள் தங்கள் அருமையான இத்தேசத்திலுள்ள வீடு வாசல்களைத் துறந்து வெளிதேசங்களுக்குக் கூலிவேலை செய்யப் போகிறார்கள். கிராமாந்திரங்களில் ஐக்கிய முயற்சியால் சிறு தொழில்களை உற்பத்தி செய்தால் ஏழை ஜனங்கள் தங்கள் கிராமங்களை விட்டு விடுவதற்கு யாதொரு காரணமுமில்லை. எவ்விடங்களில் அபிவிருத்தி யுண்டாகும், நம்முடைய பக்கங்களில் தென்னமரங்கள் ஏராளமாயிருக்கின்றன. இவைகளின் பலன்கள் அநேகமுண்டு. ஆனால் விசேஷமாய் இவைகள்

கைத்தொழில் செய்யப்படாமலேயே வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாகி அங்கே ஒவ்வொரு பலனும் உபயோகப் படுத்தப்படுகிறது. தேங்காய்ப் புண்ணாக்கு ஆடுமாடுகளுக்கு ஆகாரமாகும், வயல்களுக்கு நல்ல எருவாகும். தென்னம்நாறுகள், பாய்பின்னுவதற்கும், கயிறு தயார் செய்வதற்கும், உபயோகப் படுத்தலாம். கொட்டாங்கச்சிகளிலிருந்து பித்தான்கள் செய்யலாம். ஆனால் இவைகளையெல்லாம் ஜனங்கள் அலக்ஷியமாய் வீசியெறிந்து விடுகிறார்கள்.

எந்த விடங்களில் கூட்டுமுயற்சித் தொழிற் சங்கங்கள் செழித்திருக்கின்றனவோ, அந்த விடங்களில், விவசாயத்தைப் பற்றியும், கைத்தொழில்களைப் பற்றியும், நேரில் கற்பிக்கக்கூடிய பிரைமெரி பள்ளிக் கூடங்கள் கவர்ன்மெண்டாராலும் லோகல் போர்டுகளினாலும் போஷிக்கப்பட்டு ஸ்தாபிக்கப் படவேண்டும். வேம்பனூர்ச் சங்கமானது ஸ்தலத்திலுள்ள பிரைமெரிப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை ஏற்கனவே ஒப்புக் கொண்டுவிட்டது. ரயில்போடுவதில் கவர்ன்மெண்டாரும், ஜில்லா போர்டார்களும் எவ்வளவு ஊக்கம் காட்டுகிறார்களோ, அவ்வளவு சிரமம், சாஸ்திர பூர்வமான விவசாயத்தையும், கைத்தொழில்களையும், ஏற்படுத்துவதில் காட்டினால் நம்முடைய தேசத்தின் வருமை யெளிதில் நீங்கிவிடும்.

கிராமாந்திரங்களில் கூலிவேலைசெய்து பிழைக்கும் வகுப்பினர்களின் நிலைமையானது அங்கேயுள்ள மிராஸ்தார்களைச் சார்ந்திருக்கிறது. இந்த மிராஸ்தார்கள் பெரும்பாலும் கடன்களில்மூழ்கி சாகுபடி ஒழுங்காய் செய்வதற்குக்கூட சக்தியற்றவர்களாயிருக்கின்றார்கள். இவர்களின் முன்கடன்களை அடைத்து, முக்கியமான காரியங்களுக்குப் பணமுதவவேண்டி, நிலபாங்கியொன்று ஏற்படவேண்டிய அவசியம். வேம்பனூர், சிறுக்குளம், செங்காலிபுரம், சங்கங்களைச் சேர்ந்த மிராஸ்தார்களுக்காக ஓர் நிலபாங்கி ஏற்படுத்த திருச்சினாப்பள்ளி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராருக்கு ஓர் விண்ணம் அனுப்பப்பட் டிருக்கிறது.

வேம்பனூர்ச் சங்கமானது ஸப்கம்மிட்டி ஒன்றை ஏற்படுத்தி, 10 வருஷகாலமாய்த் தூர்ந்துபோன ஓர்பாசன வாய்க்காலை வெட்டி சீர்படுத்திற்று. அதின் உபயோகம் சென்றவருஷத்தி லுண்டான ஜலத்தட்டில் நன்றாய்த் தெரியவந்தது.

இம்மாதிரி கிராமாந்திரங்களில் ஜனங்கள் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகளை வரவர அறிந்து வருகிறார்கள். கவர்ன்மெண்டார் ஆக்ஷிணைக்கே கிராம ஸ்தாபனங்களை ஒழுங்காய் பலப்படுத்த வேண்டுமென்று, இந்தியன் போலீஸ் கம்மிஷன், மதிராஸ் கம்மிட்டி, டிஸென்ட்ரலிஸேஷன் கம்மிட்டி, இவைகள். வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றன. சட்டப்படி இவைகளுக்கு ஓர் அந்தஸ்தும் அதிகாரமும் கொடுத்தாற்றான் கிராமநிர்வாகம் ஒழுங்காய் நடைபெறும். கூட்டுமுயற்சிச் சங்கங்களின் உண்மையான நோக்கங்கள் பூர்த்தியடையும். இப்பொழுதுண்டாயிருக்கும் சங்கங்கள் ஏழைவகுப்பினர்களது நிலைமையை அபிவிருத்திக்குக் கொண்டுவரவில்லையென்று குற்றஞ்சாட்டுவது ஆச்சரியமல்ல.



---

## நபர்* நாணயம்.

(42-ம் பக்கத்தொடர்ச்சி)

1. நடவடிக்கை (சீலம்)—நாணயக்கடனுக்கு முதல் அம்சம் மூலாதாரம் நன்னடக்கையாகும். எவருக்குக் கடன் வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் கடன் வேண்டுபவருடைய நடத்தை, அவர் ஒழுங்காக நடக்கக்கூடியவர் என்ற உத்தேசம் நிச்சயமாய் கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். மேலும், சிரத்தையோடு வேலை செய்பவரும், நல்லறிவு, முன்யோஜனை இவ்வித நல்லொழுக்கங்கள் உடையவராயுமிருக்கவேண்டும். ஆகையால் நாணயக்கடனை சௌகரியப்படுத்துவதற்கானஉத்தேசத்துடன் ஏற்படுத்தப்படும் எந்தசங்கத்திலும், உண்மை, சுறுசுறுப்பு, சிக்கனம் முதலிய சுபாவகுணங்களில்லாதவர்கள் யெவரையும், அவைகளை உடனே சம்பாதிக்கும் யோக்கியதையற்றவர்களையும் சேர்த்துக்கொள்ளவே கூடாது. 'ஒரு நாணயச்சங்கத்தின் முக்கிய உத்தரவாதம், அதன் மெம்பர்களுடைய யோக்கியதையே யாகும்," என்று ஸ்ரீமான் லூஜாட்டி சொல்லுகிறார்.

2. சாமிப்யம்(அருகாமை.)—அருகாமையில் குடி இருப்பவர்களுக்குள் மட்டும் நடவடிக்கை அந்நியோந்நியமாக, நன்றாகத் தெரியும். ஆகையால் ஒரு சங்கத்தைச் சேருகிறவர்கள் ஒரே கிராமத்தில் குடியிருப்பவர்களாகவாவது, ஒரே தொழிற்சாலையிலாவது ஆபீசிலாவது இருப்பவர்களாகவாவது இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்டவர்கள் தான் நாணயக்கடனுக்கு ஒன்றாகச்சேரவேண்டும். அப்படிச்செய்தால்மட்டுமே அந்நியோந்நிய சஹவாசத்திற்கும் பரிச்சியத்திற்கும் பொதுப்பிரயோஜனத்திற்கும், மேல்விசாரணைக்கும் இடமுண்டு. ஒரு சங்கத்தின் வியவகார எல்லையை ஒரு சிறு கிராமத்திற்குட்படுத்திக்கொள்வதனால் மெம்பர்கள் தங்களுக்குள் அந்நியோந்நியமாகப் பழகவும், அடிக்கடி சங்கத்தைநாடவும், தங்கள் சொந்த அலுவல்களுக்குக் குந்தகமில்லாமல் சங்கத்தின் வியவகாரங்களை சரிவர நடத்தவும் அநுகூலமுண்டு.

---

* மிஸ்டர் திலமாகி எழுதிய ஆங்கிலேய வியாசத்திலிருந்து ஸப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் C. N. கிருஷ்ணசாமி அய்யரால் இது மொழிபெயர்க்கப்பட்டது.

3. கூட்டு முயற்சி:—கடன் வேண்டுகிறவர்களுக்கு சமீபத்தில் குடியிருந்து வருகிறவர்களுக்கு மாத்திரந்தான், நன்னடக்கைக்காரர்களுடைய யோக்கியதையை யறியவும் அதனால் ஏற்படும் மதிப்பு இன்னதென்றும் தெரியவும் இடமுண்டு. பணம்பற்றுவரவுசெய்யும் சாவ்காரர் இவர்களில் ஒருவர். அநேகமாக அவருடைய தன்மையையும் சுபாவமான குணாதிசயங்களைப்பற்றியும் விசேஷமாகச் சொல்லமுடியாமலேயிருக்கிறது. ஆகவே, அவருள் வலைசகப்படாமல் தப்பிக்க வழிதேட, இதற்கு இதுவரையிற்கண்டுபிடித்திருக்கு முபாயம் ஐக்கியமுறைதான். இவ்வேற்பாட்டால் கடன் தேவைப்படும் தனிநபர்களெல்லாம் ஒரு சங்கமாக ஒருங்கு சேருகிறார்கள். அதில் சேருகிறவர்களெல்லாம் தங்கள் தங்களுடைய யோக்கியதையை ஒருங்கே ஈடுகாட்டி அதன் வழியாக இதுவரையில் அவரவர் தனித்தனியாக வாங்கக்கூடியதைவிட அதிக சௌகரியத்தில் கடன் பெற ஏதுவாகிறது. ஆரம்பத்தில் சங்கத்திற்கு சமீபத்திலுள்ள விடங்களிலிருந்து மாத்திரந்தான் வாங்குவது சகஜமாகக்கூடும். ஆனால், அதன் வியவகாரங்கள் ஒழுங்காகவும், குறித்தகாலம் தவறாமலும், நடந்து வருவதைக்கண்டால் அதன் நாணயத்திற்கு நல்ல பெயர் அவசியம் அதிகமாகியும் பரவியும் வந்தே தீரவேண்டும். அதினால் முன் இருந்ததைவிட அதன் வியவகாரங்கள் தொலைவழியும் பரவி அதிகமாகவும் இடமுண்டு. இது போன்ற சங்கங்கள் மற்ற விடங்களிலும் ஏற்படும்போது, அவ்விதம் ஒன்றுக்கொன்று சமீபத்திலுள்ள பல சங்கங்கள் ஒன்று கூடி பம்பாய் போன்ற ஒரு பெரிய நகரத்தில் (தங்கள் சிறு சங்கங்களைக் காட்டிலும்) பெரிய ஒரு பாங்கு அதாவது சென்ட்றல் பாங்கு ஒன்று ஏற்படலாம். இந்த பாங்கு பொது ஜனங்கள் எல்லாரோடும் புழங்கும். அதன் நிமித்தமாக ஏற்படும் நாணயமானது (பணம் புழக்கம்) யூனியன்களுக்கு (சங்கங்களின் சிறு கூட்டங்களுக்கு) பரவும், அவைகளிலிருந்து கிராமச் சங்கங்களுக்கும் முறையே அந்தந்த சங்கங்களுடைய மெம்பர்களுக்கும் உதவும். இதற்கு ஒரு கயிற்றின் அமைப்பை திருஷ்டாந்தமாகக்காட்டி ஒரு வடமொழிச் கவிஞர்யொருவர் ஒற்றுமையாகப் பிரயத்தினம் செய்வதின் பலனை பின்வருமாறு கூறுகிறார். சிறு நூல்கள் (ஜனங்கள்) தனித்தனியாக விருக்கும்போது மிகவும் அற்பமாய் (பலமற்றவர்களாக) இருந்தாலும், கயிறாக முறுக்கப்பட்டால் (சங்கமாகச் சேர்ந்தால்), அவைகளுக்கு பலம் (நாணயம்) ஏற்படுகிறது. அவைகளையே பிரிப்பிரியாகச் சேர்த்து முறுக்கினால் (யூனியன்களாகச் சேர்த்தால்)பலம் அதிகமாகிறது. (நாணயம் மலிகிறது, தணிந்தவட்டிக்குப் பணம் கிடைக்கிறது.) அதனால் யானையையும் கூட கட்டியடக்கலாம் (பணம் லாவாதேவி செய்வதே தொழிலாயுள்ள விடங்களையும் கூட ஆட்சி கொள்ளலாம்). பெருங்கயி



களைச் சேர்த்து முறுக்கி வடமாக்கினால் (அதன் பலம் இவ்வளவென்று சொல்லிமுடியுமோ) சென்ட்ரல் பாங்குகளையும் ஏற்படுத்துவது மிக சுலபம். இதுதான், 'சுயஉதவிக்கும் அதிலேதானே ஒவ்வொருவரும் பொதுவாக எல்லாருக்காகவும், எல்லாரும் தனித்தனியே ஒவ்வொருவருக்காகவும் சேர்ந்துழைப்பது என்றும் நியாயத்தின் மேல் ஏற்பட்ட அந்நியோந்நிய சகாயத்திற்கு திருஷ்டாந்தம். மேற்சொன்ன விஷயங்களிலிருந்து ஒவ்வொருவருக்குமுள்ள நாணயத்தை அந்நியோந்நியமாக ஒன்று சேர்த்தால் அது நிமித்தமாக ராஜ்யத்தில் எவ்விடத்திலும் எளிதில் பணம் சம்பாதிக்கலாம். இந்த ஒற்றுமைக்குத்தான் கூட்டுறவென்று பெயர். ஆகையினாற்றான் நபர் நாணயத்தின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஐக்கிய நாணயச் சங்கங்களென்ற பெயர் பரவிவந்திருக்கிறது.

4. பொறுப்பின் உயர்ந்த அளவு:—ரொக்கலாவாதேவிக்காக ஏற்படும் சங்கங்களையும், நன்னடக்கைமட்டுமே ஆஸ்தியாக உள்ளவர்களுக்காக ஏற்படும் சங்கங்களையும், வரையறுக்கப்படாத பொறுப்பின் பேரில் ஸ்தாபிக்கவேண்டும். அதாவது அச்சங்கங்கள் வாங்கும் கடன்களுக்கெல்லாம் அதன் மெம்பர்களொவ்வொருவரும் மற்ற மெம்பர்களோடு கூட்டாயும் தனித்தனியாகவும் ஜவாபாகிறார்கள். பொறுப்பை இவ்விதம் பிணைப்பதில் தான் ஒவ்வொருவரும் தம்முடைய ஜவாப் முழுவதையும் ஏற்றதாகும். ஐக்கிய நாணயத்தின் ஆதரவின்மேல் லவாதேவி நடத்தவேண்டியிருந்தால் அதற்கு இதுவே பிரதான அஸ்திவாரமென்று 1869-ம் வருஷத்தில் கூடின கோஆப்ரேட்டிவ் கான்கிரஸில் (Sir Rober Morier) ஸர் ராபர்ட்டு மாரியர் பிரபு அவர்கள் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு நபருடைய நன்னடக்கையையும் நம்பிக்கைக்கு ஆதாரமாக்கலாமென்றால் அப்பேர்ப்பட்ட நபர்களுடைய கூட்டுஉத்திரவாதம் பணத்திற்குத்தகுமான ஆதாரமாகுமென்றும், அதுவே கொதுவைக்கும் ஈட்டிற்கும் பதிலாதாரமாக்கலாமென்று திடமாக ஏற்படுகிறது. பொறுப்பு எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாணயம் பிரபலப்படும். பொறுப்பு தான் நாணயத்தைக் கவரும் காந்தமாகும். ஆகையால், பொறுப்பு அதிகப்படுவதுபோல நாணயமும் அதிகரிக்கும். பொறுப்பு வரையறுக்காமலிருந்தால் அபாயத்திற்கிடங்கொடுக்குமென்று ஜனங்கள் தப்பாக பலமுறையும் எண்ணுவதுண்டு. அதுதான் நாளடைவில், அபாயமில்லாத ஒருவழியாக ஏற்படுகிறது. மேலும், கூட்டுறவினால் நன்னடக்கைக்குப் பணம்உண்டாகும். சக்தியைக் கொடுப்பிக்க இதைத்தவிர வேறு உபாயமில்லை. பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கும் சங்கங்களுக்கு ஏற்படாத க்ஷேமகரமான அநேக பந்தோபஸ்துகள்

வரையறுக்காத பொறுப்புச்சங்கங்களுக்குண்டு. தன்னுடைய பொறுப்பை எப்பொழுதும் கவனித்துக்கொண்டேயிருக்கும் பொறுப்பு வரையறுப்பில்லாத எந்தச் சங்கமும் அதில் நிர்வாகம் செய்ய முடியாத வியவகாரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதுமில்லை. நிர்வாகம் நன்றாக விருக்குமிடத்து அவ்வித அனுவசியமான விவகாரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறதுமில்லை. பத்திரம் அல்லது பாதுகாப்பே அதன் திருமந்திரம். அதனாலேயே அபாயத்தை விலக்கிவருவதே அதன் தருமமாயிருக்கிறது. இதனால் பொறுப்பு பேருக்கு வரையறுப்பில்லாவிட்டாலும் அநுஷ்டானத்தில் வரையறுக்கப்பட்டே வருகிறது. அப்பேர்க்கொத்த க்ஷேமகரமான பந்தோபஸ்துக்கள் இல்லாத, பொறுப்பு வரையறுத்த சங்கங்கள் தம்மால் நிர்வகிக்க முடியாததும் பாதுகாப்பின் அத்துக்கு மீறினதுமான வியவகாரங்களை செய்யத்தொடங்கினால், பேருக்கு மட்டும் உத்தரவாதத்திற்கு அளவிருந்தாலும் நஷ்டத்திற்கு அளவேயில்லாமலாவதே பலனாகும். இதற்கு உதாரணமாக ஜாயிண்டு ஸ்டாக்கு(Joint Stock Companies) கம்பெனி ஆக்டில் ரிஸ்ஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கங்கள் எத்தனை உடைந்து அழிந்து போயிருகின்றன? எத்தனை சங்கங்கள் சமீபத்தில் உலைந்துபோயிருக்கின்றன?

5. நிர்வாகத்திறமை:—மேற் குறித்த அம்சங்களைக் கொண்டு மாத்திரம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களைவிட அவ்வித வரையறுக்கப்படாத சங்கங்களுக்கு நாணயம் அதிகமென்று ஊகிப்பது சரியல்ல. எந்தச் சங்கத்தின் நிர்வாகமாவது வேண்டும் வண்ணம் திறமாயிராவிட்டால் விவகாரங்களினால் உண்டாகும் நஷ்டம் அல்லது அபாயம் பொறுப்பு வரையறுக்கப்படாமலிருந்தும், அதிகமாகவேயிருக்கும். ஒரு சங்கத்தின் நாணயத்திற்குச் சரியான அறிகுறி அதன் நிர்வாகத்திறமை அல்லாமல் அதன் மெம்பர்களுடைய பொறுப்பின் சுபாவமட்டிலுமாக மாட்டாது. நிர்வாகமோ வென்றால் சங்கத்தின் நிர்வாக சபையிலிருக்கும் மெம்பர்களின் சங்கியைப் பொருத்திராமல் அவர்கள் செய்யும் வேலையின் யோக்கியதையையே பொருத்திருக்கிறது. சங்க வேலைகளை நடத்துவதற்காக அவர்கள் செய்திருக்கும் விதிகளின் நல்ல நோக்கத்தை மட்டும் பொருந்தியதல்ல; அவைகளை எவ்விதம் அநுஷ்டானத்தில் அமுலுக்குகொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதைப்பொருத்திருக்கும். நிர்வாக சபைக்கு நம்பிக்கையுள்ளவர்களையும், சுயநயம்பாராட்டாதவர்களையும் தெரிந்தெடுக்கவேண்டும். சங்கத்தின் வேலை கைகூடுவதற்காக வேண்டி நிர்வாகமெல்லாம் ஒருவர் கைக்குள்ளாகாமலும், விவகாரத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் விடாமல் கவனிப்பவர்களையும் நேமிக்கவேண்டும். சங்கம் விருத்தியடையவோ க்ஷீணமடையவோ ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் எவ்வகைத்தாயினும் அவைகளையெல்லாம் நிர்வாகமிருக்கும் சீரிலிருந்து தான் நிதா



னிக்கவேண்டியிருக்கிறது. சங்கம் எவ்வளவுக்கெவ்வளவு திறமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறதோ அதன் அபிவிருத்தியும் அம்மட்டில் அதிகமாகிக்கொண்டேவரும்.

அபாயம் கொஞ்சந்தான்:—ஸர். ராபர்ட் மோரியர் (Sir Robert Morier) யின் வார்த்தைகளை மேற்கோளாகக்கொண்டு, நபர்நாணய லாவாதேவிக்கு மூலமந்திரம் பொறுப்பின் உயர்ந்த அளவுஎன்று ஏற்கனவே கூறினோம். அதற்கிரண்டாவதாக அபாயம் குறைந்தேயிருக்கவேண்டுமென்று அவரே சொல்லியிருக்கிறார். வாஸ்தவத்தில் பின்னாற் சொன்ன ஜாக்கிறதையில்லாவிட்டால், முற்சொன்ன உத்தரவாதத்திற்கு திடமும் பாதுகாப்பும்கிடையாது. ஆள் நாணயத்திற்கு ஆதாரமான விஷயங்களில் இனிகவனிக்கவேண்டியவைகளெல்லாம் சங்கத்தில் நஷ்டமேற்படாமலிருப்பதற்கு வேண்டிய பாதுகாப்புக்களைக் கவனிப்பதே.

6. கடன்களின் உபயோகத்தைப்பற்றி விசாரிப்பு:—எந்தக்கடனும் முன்னமே சொல்லியிருக்கிற பிரகாரம் திருப்பிக்கொடுத்தே ஆகவேண்டும். கடன் தொகை எந்த விஷயத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டாலும் அக்கடனுக்கு ஈட்டிற்குப்போதுமான சொத்துமட்டுமிருந்தால் அந்த சொத்தைக்கருதியே கடன் திருப்பிவருமென்று எதிர்பார்க்கலாம். ஆதார சொத்தன்றி கடன் வாங்குகிறவருடைய நாணயத்தின்பேரில்மட்டும் கடன் கொடுபட்டிருந்தால் அக்கடனை ஈடடைக்க அவருக்கு இனி உண்டாகக்கூடிய சம்பாத்தியத்தைத்தான் எதிர்பார்க்கவேண்டும். ஆகையினால் கடன் வாங்கினவர் அந்தக்கடனை உபயோகப்படுத்தி, அதனால் தனக்கு நேரிலோ அல்லது வேறு விதமாகவோ, அதிக சம்பாத்தியத்தைக்கொடுக்கக்கூடும், என்றால் மாத்திரம் தான் அவர் வாங்கிய கடனை நிச்சயமாகத் திருப்பிக்கொடுக்கக்கூடும்.

கடன் தொகையை, வியாபாரியொருவன் தன் கை முதலை அதிகப்படுத்தும் பொருட்டும், தொழிலாளி தன் வேலைக்கருவிகளை வாங்கவும், விவசாயி தன் நிலங்களுக்குத் தேவையான விதை அல்லது எரு இவைகளை வாங்கவும் உபயோகித்தல், கடன் பெற்றவர்களுக்கு சம்பாத்தியம் மேலிட்டு இதனாலேயே சுலபமாகக்கடனை திருப்பிச்செலுத்தவழியும் கடனுக்கு பிரதிப்பிரயோஜனமுமுண்டென்று சொல்லலாம். அல்லது அதிக வட்டிக்கு சாவ்காரிடமிருந்து வாங்கியிருந்த ஒரு கடனை தணிந்தவட்டிக்கு சங்கத்திலிருந்து வாங்கி தீர்ப்பதினாலும், அதிக வட்டிக்கும் தணிந்த வட்டிக்குமுள்ள வித்தியாசமே கடன்தாருக்கு லாபமாகிறது. அப்படியல்லாமல் கடன் தொகையை டம்பச்செலவிலும் பிரதி பிரயோஜனமற்ற காரியத்திலும் செலவிட்டால் அக்கடனைத்திருப்பிச் செலுத்தும்வழி

யே யில்லாமற்போகும். ஆகையால் கடன் எந்த விஷயத்தில் உபயோகிக்கப்படுகிறதோ அதுவே கடனுக்கு அதிகசிரேஷ்டமான ஆதாரமாகும். ஆகையால், ஐக்கிய நாணயச்சங்கங்களிலிருந்து கொடுக்கும் கடன்களை சாத்தியமுள்ளவரையிலும் பிரதிப்பிரயோஜனமுள்ள விஷயங்களுக்குத்தான் கொடுக்கவேண்டும். அதாவது எந்த விஷயத்தில் உபயோகித்தால் லாபமாவது அல்லது சிக்கனமாவது ஏற்பட்டு அது நிமித்தமாக அந்தத் தொகையே விருத்திக்கு ஏதுவாயிருக்கவேண்டும்.

சங்கங்களிலிருந்து, சில சந்தர்ப்பங்களில் அவரவர் ஜாதி முறைக்குத்தக்கப்படி ஊரின் அபிப்பிராயத்தையொத்து வாழ்வு சாவு முதலிய பிரதிப் பிரயோஜனமற்ற செலவுகளுக்கும் கடன் கொடுக்கவே வேண்டியிருக்கிறது. இவ்விஷயத்திலும் கூட தீராதசெலவுக்கு மேலுண்டாகும் செலவுகளைத் தடுக்கவேண்டும்.

இதுமட்டுமேயல்ல. இவ்விஷயங்களுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகைகளெல்லாம் கடன் வாங்குபவருடைய ஆதாயத்திற்குள் பட்டதும், அவர் (தீர்க்கக்கூடியதொகையளவுக்கு) சக்திக்குள்பட்டதாகவும், ஒருநியாயமான கெடுவுக்குள் திருப்பிச்செலுத்தக்கூடியதாகவும், இருக்கவேண்டும். ஏனென்றால், பிரதிப் பிரயோஜனமுள்ள கடன்களைப்போலல்லாமல் இந்தக்கடன் தொகையை உபயோகப்படுத்துவதினால் அக்கடனையே திருப்பிச்செலுத்துவதற்கு பொருள் சேர இடமில்லை. அதனால்தான், எல்லாவிஷயங்களிலும் கடன் மனுதார் தம்முடைய உத்தேசத்தை கட்டாயம் சொல்லத்தான்வேண்டும். அப்படிச்சொன்னால்தான் நிர்வாக சபையாருக்கு அக்கடன் அவசியமா அல்லவாவென்று அதற்குப் போதுமான தொகை எவ்வளவென்று நிதானிக்கமுடியும். அவ்வித விசாரணையானது கடன்தாருக்கும் சங்கத்திற்கும் நலமாயிருக்கும். தன் வரும்படிக்குத்தக்க செலவு செய்யும்படிசெய்து, அதனால் கூடிய சீக்கிரம் கடனைத்தீர்க்கும்படி செய்வதனால் கடன்தாருக்கு நல்லுத்தேசத்தையும் நல்வழியையும் காட்டுகிறது. சங்கத்திற்கோவென்றால் இதனால் நல்ல பந்தோபஸ்துக்கிடமாகிறது. ஏனென்றால், தவறுதலுக்கு இடங்கொடுக்கிறதில்லை. அதனாலேயே நஷ்டத்திற்கும் ஆஸ்பதமில்லை. ஆகவே பொதுஜனங்களுக்கு சங்கத்தின்மேல் நம்பிக்கை அதிகமாக ஏற்படுகிறது.

சில சமயங்களில் தாம் விரும்பும் கடன் உத்தேசங்களை வெளியிடுவதற்கு கடன் மனுதார்கள் கூசுகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் சங்கத்தின் நிர்வாக சபையானது நம்பாதவரையில் அம்மனுதார்களை நம்பி அவர்களுக்கு கடன் கொடுக்க அருகரல்லவென்று வற்புறுத்திச்சொல்லத்தான் வேண்டும். நம்பிக்கை என்றாலே பரஸ்பரவிசுவாசம், அதாவது, ஒருத்தர்மட்



டும் நம்பவும் மற்றவர் மட்டும் மறைத்துவைத்தால் அவ்விடத்தில் நம்பிக்கையேது? தமக்கு வேண்டும் கடன் எவ்வளவென்றாவது, உத்தேசம் சரியா அல்லவா என்றாவது, தொகை போதுமா போராதா என்றாவது நிர்ணயிப்பதில் ஒவ்வொரு (கடன்) மனுதாரும் தம்முடைய விஷயத்தை தாமே தீர்மானித்துக்கொள்ள முடியாது. ஆகையால், கடன்களின் உத்தேசங்களையும் வெளிப்படையாகச்சொல்வதுடன் நிர்வாகச்சபையார் அவைகளைபரிசீலிப்பதும் மிகவும் அவசியம். அப்படிக்கில்லாவிடில் கடன்களைப்பற்றிய மேல் விசாரணை சாத்தியமேயில்லை.

7. சிக்கனத்தையும் முன் ஜாக்கிரதையையும் உண்டாக்க வேண்டும்:—எந்தக்கடனும் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும். அதிலும் (விசேஷமாக) நாணயக்கடன்களையெல்லாம் பூராவாக சாத்தியமில்லாவிட்டாலும் முக்கியமாகவாவது கடன்தார் தம்முடைய வரும்படியிலிருந்து மிகுத்துவைக்கும் தொகையிலிருந்து கட்டவேண்டும். அவருக்கு வரும்படியும் சுவல்பமாயிருப்பதால் அவர் செட்டாகக் காலக்ஷேபம் செய்தால் மட்டுமே பணத்தை மிகுத்துவைக்கலாம். ஆகவே சுருக்கமான செலவும் செட்டும் நாணயத்திற்கு முக்கிய ஏதுக்களாகும். கடன்தார் தம்முடைய கடனை வாய்தாப்படித் தீர்க்கும்பொருட்டு பணத்தைச்சேர்க்க வாரம்பித்தால் அவருக்கு பணத்தை மிகுத்துவைக்கும் வழக்கமுண்டாகிறது. எந்தவேலையும் பல முறை செய்யச்செய்ய வழக்கமாய்விடுவதுபோலவே பணம் சேர்ப்பதும் வழக்கமாக ஏற்படும். அதற்கு, உள்ளத்திற்கு அடக்கம் ஆதாரமும் முன் ஜாக்கிரதை நோக்கமுமாகும். ஆரம்பத்தில் கடனைத்தீர்ப்பதற்காக சிறுகச் சிறுகச் சேர்த்துவைப்பது வழக்கமாகிறது. அக்கடன் தீர்ந்த பிறகு, அப்போதைக்கப்போது கொஞ்சம் கொஞ்சமாக முதல் சேர்த்தால் கடன் வாங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் குட்டுப்படுமென்று நாமே நினைக்கத்தொடங்குவோம். இவ்விதமாகவே சிக்கனமும், முன் ஜாக்கிரதையும் தானாகவே நம்முட்பிலூறி உடன் பிறந்த குணங்களாகும். இக்குணங்களைப்பற்றிய நாணயம் விளங்குகிறது தான்; ஏனென்றால் திருப்பிச்செலுத்த மார்க்கமில்லாவிடத்து நாணயமில்லை, நம்பிக்கையில்லை. எவ்விடத்தில் செலவைச்சுருக்கப் படுத்துகிறதில்லையோ அவ்விடத்தில் கடனைத்திருப்பிச் செலுத்துவதும் பிரயாசந்தான்.

ஆனால் சிக்கனம் அதனாலுண்டாகும் குணங்களுக்காக மட்டுமே யநுஷ்டிக்கப்படுகிறதில்லை. அதனால், வேறு குணங்களுமுண்டு. சிக்கனத்துக்கு முக்கிய ஆதாரமான உள்ளடக்கத்தால், சிக்கனத்தை அநுஷ்டிப்பவர்களுக்கு, கைத்தொழிலுக்கு ஊக்கத்தையும், உழைப்புக்கு மரியாதையையும், சத்தியத்தையும் உண்டாக்குகிறது நாணய உத்தரவாதத்திற்கு ஆணிவேரான சிக்கனந்தான் ஐக்கிய நாணயப்பிரயத்தினத்திற்கு மேன்மையையும் யோக்கியதையையும் விளைத்திருக்கிறது.

# நீலகிரியில் சங்கஸ்தாபனஞ் செய்வதிலுள்ள கஷ்டங்கள்.

ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் U. L. வெங்கிடநரசய்யா எழுதியது.

நீலகிரிமலையில் வசிக்கும் ஜாதியாகிய படகர்கள் மைசூர் பிராந்தங்களிலிருந்து நீலகிரிக்கு வந்து குடியேறி வெகுகாலமாய்விட்டது. குடியேறியிருக்கும் பூமியானது எளிதாய் சாகுபடி செய்வதற்குத் தகுந்த ஸ்தலமாயில்லாததினால், அலைந்து திரியும்படியான இடையர்களின் வாழ்க்கையை அவர்கள் பெரும்பான்மை கைக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் இருக்கும் ஓர்விதக் கட்டுப்பாட்டின் தன்மையானது இவ்வித வாழ்க்கைக்குப் பொருந்திருக்கிறது. மேலும் மலையின் குளிர்ச்சியானது கடுமையாய் வேலை செய்வதற்கு இடையூறாயிருக்கிறது. இவ்விதக் காரணங்களால் படகர்கள் சுறுசுறுப்பில்லாமலும், யாதொரு முயற்சி செய்யத் துணிவில்லாமலுமிருக்கிறார்கள். வாழ்நாட்களைச் சுகமாய்ச் செலுத்துவதால், எளிதாய் கடனில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். சேம்பல், கோழைத்தன்மை, வீண் செலவு, பின்வரும் கஷ்டங்களை முன்னறியாமை, முதலியவைகளால் வருந்துகிறார்கள். இவர்களுக்கு எலிமெண்டரி படிப்பைக் கொடுத்தாலொழிய மேற்கூறியவைகளெல்லாம் முழுவதும் நீங்குவதரிது.

படர்களின் இத்தன்மைய குணங்களை நன்றாயறிந்து, இரக்கமற்ற லப்பைகளும், மார்வாடிகளும், மலையிலுள்ள முக்கிய ஸ்தலங்களில் குடியேறியிருக்கிறார்கள். படர்கள் பணம் வேண்டுங் காலங்களுக்குத் தகுந்தபடி, இவர்கள் 100-க்கு 36 லிருந்து 300 வீதம் வரையில் வட்டிக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். ஆகையால் இப்பொழுது படகர் கிராமங்களில் எல்லாரும் அவர்களுக்குக் கடனாளிகளாயிருக்கிறார்கள். கடும் மனதையுடைய இந்த ஷைலாக்குகள் கேட்பனவற்றை இவர்கள் எளிதாய்க் கொடுத்து வருகிறார்கள். நாணயச் சங்கங்கள் ஏற்பட ஆரம்பித்தவுடன், இதுவரையிற் செய்த தப்பிதங்கள் இப்பொழுதுதான் அவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோற் தோன்றுகிறது.

லப்பைகள் செய்துவரும் அக்கிரமங்கள் பலவுள. அவற்றில் முக்கியமானவைகளாவன :—நியாயமாய் தான் ஜவாப்தாரில்லாக்கடன்களுக்கு, நிலத்தின் மாசூலை ஜெப்தி பண்ணுதல் ; சாமான்களை அளப்பதிலும், இடைபோடுவதிலும், அவர்களை யேமாற்றுதல் ; திருப்பிக்கொடுத்த தொகைகளை செல்லுவைக்காமலாவது அல்லது குறைவாய்ச் செல்லுவைத்தாவது பொய்க்கணக்கு எழுதுதல் ; ஒவ்வொரு வருஷ முடிவில் இடைஇடையே செலுத்தின தொகைகளை கணக்கிற் சேர்க்காதபடி, அசலையும் வட்டியையும் சேர்த்து ஓர் புதுப் பத்திரமெழுதிக் கொடுக்கும்படி படகர்களை அவஸ்தை செய்தல்.



அவர்களின் மாசூலை ஜெப்தி செய்துவிட்டால், உணவுப்பொருள்களுக்கு வேறு கதியில்லாததினால் இந்த லப்பைகளின் காலிலேயே மறுபடியும் விழுந்து இவர்கள் கடன் வாங்கும்படி நேரிடுகிறது. படகர்களின் சொத்துக்களைக் கொள்ளையடிக்கவேண்டி அவர்கள் கேட்கும் சமயங்களில் தட்டாமல் சிறுசிறு தொகைகளாகக் கடன் கொடுக்கிறார்கள். லப்பைகள் இனிமேல் பணம் கொடுக்கமாட்டோமென்று சொல்லும்படி, படர்களின் சொத்துக்கள் பூராவும் அவர்களுக்கு அடமானமாயின. இப்பேர்ப்பட்ட காலத்தில் நாணயச் சங்கங்கள் அங்கேற்படலாயின. சோதனை செய்தால், படகர்களின் சொத்துக்கள் கடனுக்குத்தான் போதும் போற் தோன்றுகிறது. பூமியின் விளைச்சல் மிகவும் குறைந்தும் அவர்களின் சாம்பாதிக்தும் திறமை மிகவும் கேவலமாயுமிருந்துகொண்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் முக்கியமான கஷ்டமென்னவென்றால், அவர்கள் நிலங்களின் ஹத்துக்களும், அவைகளுக்கு கிராம ரிகார்டுகளுமில்லை. எல்லாப் பக்கங்களிலும் கூட்டுப்பட்டாவாயிருப்பதால, நிலங்களின் எல்லையையும், சொந்தக்காரர்களையும் அறிவது மிகவும் கஷ்டம்.

படகர்களை முன் கடன்களிலிருந்து விலக்க வேண்டுமானால், லப்பைகளையாவது அவ்விடங்களை விட்டு போகச்சொல்லவேண்டும். அல்லது படகர்களுக்கு ஈடு வைக்கப்பட்ட நிலங்களை லப்பைகளிடமே கொடுத்துவிட்டு வேறுநிலங்களை இவர்களிடம் சாகுபடி செய்யக்கொடுக்கவேண்டும். சில ஐக்கிய முயற்சிக்காரர்கள், சங்கங்கள் மெம்பர்களின் முன்கடன்களை முதல் முதலில் தீர்க்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இந்த நோக்கமானது மெம்பர்களின் ஏராளமாய் செலவு செய்யும் தன்மையைக் குறைத்து சிக்கனத்தை உண்டாக்கும்வண்ணம் ஏற்பட்டது. ஆனால் இந்த இடங்களுக்கு அது உரித்தானதல்ல. ஸெண்ட்ரல் பாங்கியின் ஏற்பாடாகிய, மெம்பர்களின் சொத்துப் பொருமானத்தில் எட்டில் ஓர் பங்குகடன் கொடுத்தல், இச்சங்கங்களுக்குப் போராது. ஏனென்றால் ஏற்கனவே வாங்கின கடன்கள் ஏராளமாயிருக்கிறது. கவர்ன்மெண்டாரிடமிருந்து குறைந்த வட்டிக்குப் பணம் வந்தும், இவைகளுக்கும் பிரத்தியேகமான பைலாக்கள் ஏற்பட்டாலுமொழிய, படகர்கள் அபிவிருத்தியடைவது [illegible]. கவர்ன்மெண்டார் 20 லிருந்து 30 வருஷ கெடுவுக்கு 100-க்கு 4 லிருந்து 6 வரையில் வீத வட்டிக்குக் கடன்கொடுத்தால் மிகவும் நல்லது. நாளடைவில் நாணயச் சங்கங்கள் நிரம்ப பேறுபடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

XMm21,N09
N09.6-7
161417

# இந்தியாவின் சென்ற வருஷத்திய ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தி

சென்ற வருஷத்தில் சங்கங்களின் சங்கியை 12,324 லிருந்து 15,673 க்கு அதிகரித்தது. இப்பொழுது 329 ஸெண்ட்ரல் பாங்கிகளும், 14,538 கிராம நாணயச்சங்கங்களும், 806 மற்ற சங்கங்களும் இருக்கின்றன. கிராமநாணயச் சங்கங்கள் சென்றவருஷத்தில் 3,156 ஸ்தாபிக்கப்பட்டன. வருஷமுடிவிலுள்ள மொத்த மெம்பர்களும், தொழில்தனமும், பின்வருமாறு:—

| | மெம்பர்களின் சங்கியை | தொழில்தனம் | |
|---|---|---|---|
| ஸெண்ட்ரல் பாங்கிகள் | 34,710 | 287 லக்ஷம் ரூ. | |
| கிராம நாணயச்சங்கங்கள் | 5,99,822 | $103\frac{1}{2}$ | ,, |
| மற்றசங்கங்கள் | 1,09,694 | 81 | ,, |
| மொத்தம் | 7,44,226 | $771\frac{1}{2}$ | ,, |

வரவு செலவுக்கணக்குகளைப் பார்த்தால், ஸெண்ட்ரல் பாங்கிகளின் மொத்தவரவு, ஆரம்பபாக்கியைச் சேர்த்து ரூ $461\frac{1}{4}$-லக்ஷம்; அவைகளின் செலவு, கையிருப்பிலுள்ள ரூ. $13\frac{1}{2}$ லக்ஷம் போக, ரூ. $447\frac{1}{4}$ லக்ஷமாகிறது. கிராம நாணயச் சங்கங்களின் மொத்த வரவு ரூ, 433 லக்ஷம்; செலவு ரூ. $416\frac{1}{2}$ லக்ஷம். மற்ற சங்கங்களின்வரவு ரூ. $174\frac{1}{2}$ லக்ஷம்; செலவுபோக அவைகளின் கையிருப்பு ரூ. $5\frac{1}{2}$ லக்ஷம். வருஷமுடிவில் எல்லாச் சங்கங்களின் கையிருப்பு மொத்தம் ரூ $35\frac{1}{2}$ லக்ஷம். ஆனால் முந்தின வருஷக்கடைசியில் ரூ. 28 லக்ஷம் தான் கையிருப்பிலிருந்தது.

சங்கங்களின் லாபங்கள் பின்வருமாறு,—ஸெண்ட்ரல் சங்கங்கள் ரூ. 6,38,577; விவசாயச்சங்கங்கள் ரூ. 15,21;486; மற்றசங்கங்கள், ரூ .386, 696

ஸெண்ட்ரல் சங்கங்களின் க்ஷேமநிதி ரூ. 560,790; விவசயச் சங்கங்களினது, ரூ. 24,55,218; மற்றவைகளினது, ரூ. 3,85,795.

---



# ஸர்க்குலர்

ஐக்கிய முயற்சிச் சங்கங்கள் சம்பந்தமான பத்திரங்களை ரெஜிஸ்ட்டர் பண்ணும் விதம்.

1914ளு மேயீ 19உயில் போர்ட்டு ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளிப்படுத்தப்பட்ட பிரசுரத்தில், கோவாப்ரேடிவ் சங்கங்களால் தாக்கல் செய்யப்படும் பத்திரங்களை ரெஜிஸ்ட்டர் பண்ணும் விஷயமாய் ஓர் புதிவிதியை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வுத்திரவானது சங்கங்களுக்கும், ரெஜிஸ்டிரேஷன் டிபார்ட்டுமெண்டுக்கும் அனுகூலமாயிருக்கிறது. இந்த புது உத்திரவின்படி, ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராராலும், ரெஜிஸ்டிரேஷன் டிபார்ட்டுமெண்டு இன்ஸ்பெக்டர் ஜெனராலாலும் அங்கீகரிக்கப்பட்ட அச்சடித்த டாகுமெண்டுகளை சங்கங்கள் உபயோகப்படுத்தவேண்டும். (அச்சடிக்கப்பட்ட காபிகள் மெஸ்ஸர்ஸ் பெருமாள் செட்டி அண்டு ஸன்ஸில் கிடைக்கும்.)

(2) ரெஜிஸ்ட்டர் செய்ய ஓர் பத்திரத்தை தாக்கல் பண்ணும்பொழுது எழுதப்படாத அம்மாதிரி தனி அச்சு பாரம் ஒன்றை அத்துடன் ஸப்ரெஜிஸ்ட்ராரிடம் கொடுக்கவேண்டும். ரெஜிஸ்டிரேஷன் டிபார்ட்டுமெண்டார் அவ்வச்சுபாரத்திலுள்ள காலியிடங்களைப் பூர்த்திசெய்து ரிகார்டுகளுடன் சேர்ப்பார்கள். மூலபத்திரமானது ரெஜிஸ்ட்டரானபிறகு பார்ட்டியிடம் வாபஸ் பண்ணப்படும். இம்மாதிரி செய்தால், பத்திரங்கள் ரெஜிஸ்டராவதில் தாமதம் ஏற்படாது. இவ்வழியை அநுஷ்டிப்பது சங்கங்களுக்கு சௌகரியங்களுண்டு.

3. மெஸ்ஸர்ஸ் பெருமாள் செட்டி அண்டு ஸன்ஸில் கிடைக்கும் பத்திர அச்சு பாரங்களல்லாத வேறு பாரங்களை உபயோகப்படுத்த விரும்பும் சங்கங்கள், ரெஜிஸ்ட்ராருடையவும், ரெஜிஸ்டிரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனராலுடையவும் உத்திரவின்பேரில், தகுந்த பாரங்களை அச்சடிக்கவேண்டும்.

---

# கவர்ன்மெண்டாரின் விளம்பரம்.

1915ளு பிப்ரவரி 16-ம் தேதி G. O. No. 239 L.

முனிஸிபாலிடிகள் சிறு கிராமங்களிலிருந்து வளர்ந்து வரும்பொழுதே, அவைகளை நன்றாய் மேற்பார்வைசெய்து நிர்வகித்து வந்திருந்தால் இப்பொழுது ஏராளமான பணம் செலவு செய்யும்படியாக ஏற்படுகிற ஜன

நெருக்க ஸம்பந்தமான கடின முனிஸிபாலிடி விஷயங்கள் ஏற்பட்டிரா. இப்பொழுது சிறு கிராமங்கள் வளர்ந்து வருகலை யடக்கியாவது அல்லது நிர்வகித்தாவது ஒன்றும் செய்யவில்லை. இவைகள் அநேக விடங்களில் ஒழுங்காயில்லாமல் மூலைக்குமூலை படர்ந்துவருதலால், பின்பு சரிப்படுத்துவதற்கு அதிகச்செலவுகள் ஏற்படுகின்றன. அதிகப்பணம் செலவு செய்து கட்டப்பட்ட வீடுகள் எல்லாப் பக்கங்களைப் பார்த்துக்கொண்டும் உண்டாகின்றன. அவைகளுக்கு முன்னால் வீதிகளாவது அல்லது பின்னால் தோட்டிகள் துர்நாற்றங்களை யெடுத்துச் செல்லும்படியாக சந்துகளாவது ஏற்படுத்த முடியாதபடி கட்டப்பட்டிருக்கின்றன. தேய்ந்தபாதைகளை ரோடுகளாற் சேர்க்கிறதில்லை. கிணறுகளுக்கும், கஃசுகளுக்கும், தேகப்பயிற்சி செய்ய மைதானங்களுக்கும் ஸ்தலங்கள் விடுகிறதில்லை. ஸ்தலங்களுக்குள்ள இயற்கைத் தன்மைகளை கவனிக்கிறதில்லை. பின்பு விசாலப் படுத்தும்பொழுது தாய் கிராமத்திற்கு போக்குவரவு விஷயங்களில் சௌகரியக் குறைவாயும், குடியிருக்கும் ஜனங்களுக்கு மிகவும் அவஸ்தையாயுமிருக்கின்றன.

2. எங்கே கிராமங்களும், முனிஸிபாலிடியில்லாத பட்டணங்களும் பெரிதாகி வியாபித்து வருகின்றனவோ, அவ்விடங்களில் விசாரிக்கப்பட்ட பாகங்கள் குடியிருப்புக்கு சௌக்கியமாயும் சௌகரியமாயுமிருக்கிறதா வென்று லோகல்போர்டானது பார்க்கவேண்டுமென்றும், இவ்விஷயமாய் அந்த போர்டானது மேற்கூறியபடி எல்லா சௌகரியங்களுடன் வீடுகள் கட்டும்படி பூமியை வாங்கி ஜனங்களுக்குப்பிரித்துக் கொடுக்க வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

3. கவர்ன்மெண்டாரின் வசம் எந்தவிடத்தில் பூமியிருக்கிறதோ, போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர், 21 (1), 10 (viii),படி வீடுகட்டும் காரியத்திற்காக அதைக் கொடுக்கும்படி கலெக்டருக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டியது. லோகல் போர்டானது அதை ஏற்பாடாய்ப் பிரித்துக் கொடுக்கவேண்டுமே யொழிய வேறு அதிகாரம் அப்பூமிவிஷயமாய் வைத்துக் கொள்ளக்கூடாது. இப்படி முடியாமற்போனால், கவர்ன்மெண்டாரின் பூமியையாவது அல்லது ஜனங்களின் பூமியையாவதுவாங்க போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 24, பிரவு (13) படி, கலெக்டருக்கு லோகல்பாடியானது விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டும். வாங்கின பூமியை முன் கூறப்பட்ட சௌகரியங்களுக்குத் தகுந்தபடி இடங்களைப் பிரத்தியேகப்படுத்திய பிறகு பிளாட்டுகளாய்ப் பிரித்து, செலவழிக்கப்பட்ட பணமும், ரோடு போடும்படியான செலவும் எடுபடும்படி ஜனங்களுக்கு அவைகளை ஏலம்போட வேண்டும்.



4. சில விடங்களில் லோகல் போர்டால் வாங்கப்பட்ட பூமியானது விற்கப்படாமற் போகிறது. ஆகையால் ஸ்தலங்களிலுள்ள தன்மைகளை நன்றாய் அறிந்து வாங்கவேண்டும். ஆனால் அநேக ஜில்லாக்களில் இப்படி வாங்கி மறுபடி ஜனங்களுக்கு விற்பதில் போட்டபணம் கிடைப்பதுடன், நல்ல ரஸ்தாக்களும், தோட்டங்களும், ஏற்படுத்தப் படுகின்றன. கவர்ன்மெண்டார் இம்மாதிரி எல்லா ஜில்லாக்களிலும் உண்டாக்க விரும்புகிறார்கள். லோக்கல் போர்டின் பிரத்தியேக ஸப்கமிட்டிகள் இவ்விஷயமாய் விசாரிக்க நியமிக்கப்படுவது நல்லது.

5. குடியேறும் வசதி சௌக்கியமுள்ளதாயிருப்பது மிகவும் அவசியமானது; காற்றுகள் வீசும்படியாயும் தரை ஈரமில்லாமலுமிருக்க வேண்டும். பிறகு, பூமியானது பொதுவில் வாங்கப்பட்டால், பிளாட்டுகளை திருப்பி ஜனங்களுக்கு விற்கமுடியுமா என்பதை நன்றாய் விஜாரிக்க வேண்டும். பூமியை பிளாட்டாகப் பிரிக்கும் விஷயத்தில் ஸ்திரமானவிதிகளை ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்குப் பிரியமில்லை. ஆனால் சில முக்கியமான நோக்கங்களை அநுசரிக்கவேண்டும். பெரிய ரஸ்தாக்களைச் சேர்க்கும் ரோடுகள் பக்கங்களில் மரங்கள் பயிர் செய்யும் வண்ணம், 50 அடி அகலத்திற்குக் குறைவாயிருக்கக் கூடாது. சுமாரான ரோடுகள், 40 அடியும், சிறு ரோடுகள் 30 அடியும், தோட்டிகள் போகும் சந்துகள் 10 அடியும், அகலமாயிருக்கவேண்டும். இந்த அளவானது பக்கங்களிற் போகும் சாக்கடையளவையும் சேர்ந்ததல்ல. ஓர் நல்ல வீட்டின் விஸ்தீரணம், 60 அடி நீளம், 45 அடி அகலம். அந்தஸ்துக்குத் தகுந்தபடி வீடுகள் இந்த அளவுக்கு சிறிதாயும், அல்லது மிகவும் பெரிதாயுமிருக்கும். ஆனால் பெரிய வீடுகளை அகலரோடுகளில் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு பிளாட்டிலும் ஒரு வீட்டிற்குமேல் கட்டக்கூடாது. வீட்டுக்குப்பின்னால் வீடுகளிருக்கக் கூடாது. பிளாட்டுகளுக்குப் பின்னால் தோட்டிகள் போகும்படியாக சந்துகளிருக்க வேண்டும். தோட்டிகளின் வண்டிகள், முதலானவைகள் தற்காலம் இல்லாமலிருந்த போதிலும், இச்சந்துகள் பின்பு பிரயோஜனப்படும். முதலில் கூறியபடி வேண்டிய ஸ்தலங்களை பிரத்தியேகமாய் ஒதிக்கிவைப்பது நல்லது. தெருக்கள் ஒன்றுகொன்று நேராய் குறுக்கேபோனாலும், வரிசை கோணாமலிருக்க வேண்டுமென்று வழியிலிருக்கும் கட்டிடங்களை இடிப்பது அவசியமல்ல. விசாரிக்கப்படும் பூமியை, இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் நதி, ஸ்நானகட்டம், மரங்கள் முதலாயுள்ள காக்ஷிகளை சௌகரியத்துடன் உபயோகப்படுத்தலாம். 50 வருஷத்தில் எப்படியிருக்குமென்று முன்யோஜனை செய்து அதற்குத்தகுந்தபடி கிராமங்களை விசாலிக்கவேண்டும்.

6. லோகல் போர்ட்டானது பூமியை வாங்க சக்தியில்லாமலிருந்தால், 20 வருஷத்தில் திருப்பிக் கொடுப்பதாய் கவர்ன்மெண்டாரிடம்

100-க்கு 4 வீதம் வட்டிக்கு கடன் வாங்கிக்கொள்ளலாம். அப்பொழுது ரோடுகள் முழுவதும் போடவேண்டியதில்லை. கல்லுகளை யன்றி அடையாளம் வைத்தால் போரும். வாங்கப்பட்டவர்களுக்கும் விலை குறைந்துவிடும்: பின்னல் யூனியனுடனாவது, முனிஸிபாலிடியுடனாவது இதுசேர்ந்தால், அப்பொழுது அபிவிருத்தி செய்துகொள்ளலாம். பிளாட்டுகளில் கூரை வீடுகளிருக்கக் கூடாதென்று ஆக்ஷேபிப்பது நல்லதல்ல. எவ்விடங்களில் கூரைபோடப் படுகின்றதோ, அவைகளுக்குச் சுற்றிஒருவீடும் ஒட்டியில்லாம லிருக்கும்படி தகுந்த வெளியிருக்கிறதா வென்று பார்க்கவேண்டும். ஜனங்கள் அப்பூமிகளில் மரங்கள் செடிகள் பயிரிடும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

7. குடியிருப்புக்காக ஏற்படும் பிளாக்குகளை ஏலத்தினால் விற்பது மிகவும் நல்லது. சிலதவணைகளில் அத்தொகையைக் கொடுப்பதாயிருந்தால், ஏலத்தொகையைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாய்க் கொடுக்கும் படியாக யிருக்கும். பூமியிலுள்ள வரிசைப்பிரகாரம் இவைகள் ஏலம் போடப்பட வேண்டிய தவசியமில்லை; அல்லது ஒருவர் ஒன்றுக்குமேல் வாங்குவதைத தடுப்பதும் அனாவசியம். ஏனென்றால் இப்படிச் செய்வதால், ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சமீபத்தில் வசிப்பதற்கு இடையூறாயிருக்கும். ஆனால்இதை அதிகலாபத்திற்குப்பின்னால் விற்கலாமென்ற யெண்ணத்துடன் வாங்குபவர்களுக்குச் கொடுக்கக்கூடாது. இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். எப்பொழுது இம்மாதிரி சந்தேகம் தட்டுகிறதோ, அப்பொழுது அந்த சாஸனப் பத்திரத்தில், இரண்டு வருஷகாலத்திற்குள் அந்த பிளாட்டில் வீடுகட்டப்பட வேண்டுமென்றும், தகுந்தமுகாந்திர மன்னியில் அதற்குத்தவறி நடந்தால், லோகல் போர்டார் தாங்களே அப்பிளாக்கை கொடுத்த கிரயத்திற்கு 100-க்கு 10 வீதம் குறைந்த தொகைக்கு மறுசாஸனம் வாங்கிக் கொள்ளுவார்களென்றும், ஓர் நிபந்தனை ஏற்படவேண்டும்.

---

## பிழைதிருத்தம்

முன் பிரதியில் 81-ம் பக்கத்தில், "ரெஜிஸ்ட்ராரவர்களின் சர்க்குலர்கள்" அடியிலுள்ள 6-வது வரியில், "விவசாயச் சங்கங்களில்" என்பதை "விவசாயச் சங்கங்களல்லாத மற்றவைகளில்" என்று திருத்துக.

OFFICE OF THE REGISTRAR OF ... 17 SEP 1915 MADRAS


# மதராஸ் புல்லெடின் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VI] 1915ஞு ஜூன்மீ [இலக்கம் 4


## கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்கள்

புத்தூர் ம-ா-ா-ஸ்ரீ M. ஷிவராவ் அவர்கள் எழுதியது

கூட்டுத் தொழில் முயற்சியானது இந்தியாவில் ஏற்பட்டு 10 வருஷ காலத்திற்குள், அது இந்தியா தேசத்திற்கு நவீனமானதல்ல வென்று சொல்லும்படி மிகவும் பிரபலமாய் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. அது எப்படியிருந்த போதிலும், இவ்வபிவிருத்திக்குக் காரணம் ஜனங்களுக்குள் கூட்டுமுயற்சியின் இலக்ஷணங்கள் பரவியிருப்பதினாலேயா அல்லது கவர்ன்மெண்டாரின் செல்வாக்கினாலும், பாது காப்பினாலும் இது ஏற்பட்டதாவென்று நம் தேசாபிமானிகள் ஊகித்துப் பார்க்கவேண்டும். கவர்ன்மெண்டாரின் உதவியாற் தான் இது வளர்ந்திருக்கிறதென்பது விசேஷமாய் எல்லாருடைய அபிப்பிராயமாகும்.

இவ்வியக்கம் பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்திருப்பதால், ஜனங்கள் தாங்களே இச்சங்கங்களை ஸ்தாபனஞ்செய்வதிலும் அவைகளை நிர்வகிப்பதிலுமுள்ள பொறுப்புகளை வரவர கவர்ன்மெண்டாரிடமிருந்து யேற்றுக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கான்பரென்ஸிலும் அக்கிராசனம் வகித்துவந்த கனவான்கள் இவ்விதமே கூறியிருக்கிறார்கள்.

ஆனால் கவர்ன்மெண்டு டிபார்ட்டுமெண்டுக்குப் பதிலாய் இவர்களல்லாத பொது ஜனங்களடங்கிய ஓர் ஸ்தாபனம் ஏற்பட்டால் ஜனங்கள் இது வரையில் வைத்திருந்த நம்பிக்கையானது குறைந்து இந்த ஐக்கிய இயக்கத்திற்கே ஓர் வித அபாயம் வந்து சேருமென்று சிலர் காரணமில்லாமல் நினைக்கிறார்கள். சற்று யோஜித்துப் பார்த்தால் அவ்வித பயத்திற்கிடமே யில்லை யென்று நன்கு விளங்கும். இப்பொழுதிருந்து வரும் டிபார்ட்மெண்டின் சிப்பந்திகள், சங்கங்களுக்குத் தகுந்தபடி யதிகமாயில்லை. இன்ஸ்பெக்டர்கள் விசேஷமாய் தணிக்கை மாத்திரம் செய்து வருவதிலும்

கூட வேலையின் கடுமையால் கஷ்டப்படுகிறார்கள். ரெஜிஸ்ட்ராரும், அவர் அஸிஸ்டெண்டுகளும் சங்கமேல்விசாரணையும் பரிசோதனையும் செய்து வருகிறார்கள். இவர்கள் எவ்வளவு உழைப்பாளிகளாயும் சக்தியுள்ளவர்களாயுமிருந்த போதிலும் தாங்கள் நினைக்கும் வண்ணம் சங்க பரிசோதனை செய்ய முடியாதென்பது, சென்ற அட்மினிஸ்டிரேஷன் ரிபோர்ட்டிலிருந்தெடுக்கப்பட்ட பின்வரும் ஸ்டேட்மெண்டால் தெரியவரும்:—

கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரும் அம்மாதிரியே அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.

| | அதிகாரத்திலுள்ள ஜில்லாக்கள் | சங்கங்களின் சங்கியை | வருஷத்தில் பார்வையிட்ட சங்கங்களின் சங்கியை |
|---|---|---|---|
| ரெஜிஸ்ட்ரார் | 4 | 306 | 80 |
| திருச்சி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் | 6 | 422 | 60 |
| வேலூர் ,, | 6 | 333 | 163 |
| பெஜவாடா ,, | 8 | 212 | 113 |

வேலூர் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்கள் வருஷத்தில் 8 மாதம் பிரயாணத்திலிருந்தபோதிலும் தம் வசத்திலிருக்கும் சங்கங்களில் பாதியையாவது பார்வையிட முடியவில்லை. அவருடைய ஸர்க்கில் மிகவும் விசாலித்திருப்பதால் இவ்விதம் நேரிடுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரால் வருஷத்திற்கு ஒருமுறையாவது ஒவ்வொரு சங்கமும் பார்வையிடாமற்போனால், சங்கமேல்விசாரணையும் பரிசோதனையும் ஒழுங்காயிருக்கிறதென்று சொல்வது வீணே! சங்கங்களின் சங்கியை விருத்தியாகிக்கொண்டிருப்பதால், அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் அதிகமாயேற்பட்டு அவர்கள் ஸர்க்கிளின் எல்லையும் குறைபடவேண்டும். ஆனால் இவ்விதம் ஏற்பாடுசெய்தால், கவர்ன்மெண்டார் நிரம்ப செலவு விதிக்கவேண்டியிருக்கும். இதற்குத் தகுந்த உபாயமென்னவென்றால், கௌரவத்துக்குழைக்கும் கனவான்களை இம்மாதிரி வேலைகளைச் செய்ய அழைத்தல்.

கவர்ன்மெண்டுத் தியோகஸ்தாயிருந்து இப்பொழுது பென்ஷன் வாங்கிவரும் அநேக கனவான்கள் கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் வேலைகள் பார்க்க சித்தமாயிருக்கிறார்களென்பதிற் தடையில்லை. ஜனங்களுக்கும் இவர்களிடத்தில் அதிக நம்பிக்கையிருக்கும். இப்பிரமுகர்களின் உதவியை கவர்ன்மெண்டார் ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? இதுவிஷயமாய்ச் சென்ற மங்களூர் காண்பரென்ஸில் ஓர் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு கவர்ன்மெண்டாருக்கு எப்பொழுதும்போல் அனுப்பப் பட்டிருக்கிறது. [illegible] முயற்சியின் இயக்கத்துக்கு இதுவின்றியமையாததென



யெனக்குத் தோன்றுகிறபடியாலும், இவ்வியக்கத்தின் அபிவிருத்தியை நாடும் நண்பர்கள் இதைப்பற்றித் தர்க்கித்து ஆலோசனை செய்வதற்கு ஓர் முகாந்திரமாயிருப்பதாலும் இப்பத்திரிகையின் மூலமாய் என்னபிப்ராயத்தைத் தெரிவித்திருக்கிறேன்.

---

## செங்கற்பட்டுஜில்லா பாங்கிங் யூனியன் லிமிடெட்

காஞ்சீபுரம் மிஸ்டர் P ராமச்சந்திர சாஸ்திரி அவர்களெழுதியது.

1912௵ இந்திய கோவாப்ரேடிவ் ஸொஸயடீஸ் ஆக்டின்படி சென்ற மேமாதம் 42-ம் தேதியில், செங்கற்பட்டுஜில்லா பாங்கிங் யூனியன் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. செங்கற்பட்டு ஜில்லாவில் கோவாப்ரேடிவ் சங்கங்களை ஸ்தாபித்தலும், மேல் விசாரணை செய்தலும், அவைகளுக்குப் பணமுதவுதலும் அதின் பைலாக்களில் கூறியபடி அதின் நோக்கங்களாவன. பங்கு ஒன்றுக்கு ரூ 100 வீதம், 1,500 பங்குகளடங்கிய ரூ 1½ லக்ஷம் அதின் பங்கு முதலாகும். சங்கங்களும், தனி நபர்களும் அதில் மெம்பர்களாகலாம். ஆனால் தனி நபர் மெம்பராக வேண்டியிருந்தால் ரூ 500 க்குக்குறையாமல் அப்பாங்கியில் ஸ்திர டிபாஸிட்டாக அவர் பேரிலிருக்கவேண்டும். அந்த டிபாஸிட்டை வாங்கி விட்டால் மெம்பருரிமை அத்துடன் ரத்தாய்ப்போய்விடும்.

இஜ்ஜில்லாவிற்றான் முதல் முதலில் நாணயம், உற்பத்தி, பிரிவினை, கட்டிடம், முதலிய ஐக்கிய முறைகளைச் சேர்ந்த சங்கங்களும், யூனியன்களும், ஸ்தாபிக்கப்பட்டன. அப்படியிருந்தும் ஜில்லா பாங்கியொன்றேற்படத்தாமதமாயிற்று. மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியானது சமீபத்திலிருப்பதால், சங்கங்கள் அங்கே தேவையான பணவுதவி பெற்று வந்தன. ஆகையால் இத்தாமதத்திற்கு இதைத் தான் விசேஷ காரணமாய் கூறப்படுகின்றது.

இந்த ஜில்லாபாங்கிங் யூனியன் தன்னுடன் சேர்ந்துள்ள சங்கங்களின் நடவடிக்கைகளை மேல் விசாரணை செய்ய யுத்தேசஞ் செய்திருக்கின்றது. இதற்கு இருவழிகளுண்டு. முதலாவது, இப்பொழுது இந்த ஜில்லாவிலுள்ள சுமார் 250 சங்கங்களை, பஞ்சாயத்தார்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியோர்களடங்கிய யூனியன்களாகப் பிரித்து அந்தந்த யூனியனைச் சேர்ந்த சங்கங்களை அந்தந்த யூனியனால் நியமிக்கப் பட்ட இனிஸ்பெக்டர்களால் பரிசோதனை செய்தும், ஜில்லாபாங்கியானது யூனியன்கள் ஒழுங்காய் வேலை செய்து வருகின்றதா வென்பதை மாத்திரம் பார்த்து, அவைகளின் நடவடிக்கைகளைப் பிரசுரம் செய்தும், வருவதாகும். சங்கங்கள் அப்பொழுதுதான் [illegible] தங்கள் வியவகாரங்க

ளில் தலையிடவில்லை யென்று நன்குணர்ந்து தங்கள் சுயவுதவியால் அபிவிருத்தியுடைய வேண்டுமென்று நன்றுழைக்கும். இரண்டாவது, கவர்ன்மெண்டார் நடத்தி வருவதைப்போல், ஸென்ட்ரல் சங்கமானது தன்னால் நியமிக்கப்பட்ட சிப்பந்திகளைக் கொண்டு கிராமச் சங்கங்களின் மேல் விஜாரணையை நடத்துதல். ஆனால் பின்னாற்கூறிய வழியில் மத்திய ஸ்தாபனமாகிய ஸென்ட்ரல் சங்கமானது வெகு தூரங்களிலிருக்கும் கிராமங்களின் அநுபோகத்தையறியவாவது அல்லது அவைகளுடன் தன் செல்வாக்கைச் செலுத்தவாவது இயற்கையில் முடியாது. அப்படிப் பார்வையிடுதலிலும், மிகுந்த செலவுகள் ஏற்பட்டு சங்கங்கள் தங்கள் விஷயங்களில் அதிகத் தலையிடுகிறதென்று அதின் புத்திமதியை அலக்ஷியஞ் செய்யக்கூடும்.

இந்த ஜில்லா பாங்கிங் யூனியன் யேற்பட்டு 5 வாரங்களுள், 50 சங்கங்கள் மெம்பர்களாயின. கொடுப்பதாயொப்புக்கொண்ட பங்குதனம் இதுவரையில் ரூ 17, 600-ஆகிறது. இன்னும் சில மாதங்களுக்குள், இஜ்ஜில்லாவிலுள்ள மற்றச் சங்கங்கள் இதில் மெம்பர்களாகுமென்று யெதிர்பார்க்கப்படுகிறது.

இவ்யூனியன் பணவுதவிக்கு மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியை நம்பியிருக்கிறது. அதுவும் தன்னாலியன்றமட்டு முதவு மென்று நினைக்கப்படுகிறது. தன்னால் முடியாதென்று சொல்லிவிட்டால், வேறிடங்களிலிருந்து இவ்வுதவியை யெதிர்பார்க்க வேண்டியிருக்கும்.

கோவாப்ரேடிவ் சங்கத்தின் முக்கிய நோக்கங்களிலொன்றாவது, ஜனங்களிடம் விருத்தியம்சமில்லாமலிருந்து வரும் திரவியத்தை ஒன்று சேர்த்து வேண்டுபவர்களுக்குக் கொடுத்து அதை அபிவிருத்தி செய்வதாகும். இம்மாதிரியே சங்கங்களின் மீதிப்பணங்களை ஒன்று சேர்ப்பதற்கு இவைகளுக்குள் ஓர் சம்பந்தத்தை மத்திய ஸ்தாபனம் மூலமாய் ஒன்றுக்கொன்று யேற்படுத்தவேண்டியதவசியம். சிக்கனம், முன் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளுதல், முதலிய நல்ல வழக்கங்களில், சங்கங்களுக்கும், ஜனங்களுக்கும் ஓர்விதப்பழக்கம் இவ்வழியா லுண்டாவது நிச்சயம். ஸ்தலத்திலிருக்கும் பணங்களை கோவாப்ரேடிவ் சங்கங்களின் மூலமாய் மெம்பர்களுக்குக் கொடுத்துதவ முடியுமானால், கடன் பாக்கித் தொகைகளை குறைப்பதற்கு வழிகளுமேற்பட்டால், சங்கங்களில் எப்பொழுதும் பணமிருந்து கொண்டிருப்பதற்கு முகாந்திரங்களுள. ஜில்லா பாங்கிங் யூனியன் கடமைகளில் இது முக்கியமானதாகும். இவ்விஷயத்தில் இதற்கு மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியானது பணமுதவவேண்டும். இப்படி உதவிசெய்தல், தன் பொறுப்புகளிலொன்றைப் பூர்த்திசெய்வதைத்தவிர, தனக்கும் வட்டியினாலடையும் லாபம் அதிகரிக்கிறது.



# நபர் நாணயம் *

99-ம் பக்கத் தொடர்ச்சி

கெடுப்பிரகாரம் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல்.—கடன்களைக் குறித்த கெடுவிற் செலுத்தவேண்டும். அப்படிக்கில்லையாகில் கடன்தார் வீணே செலவழித்துத் துன்பப்பட இடையாகும். எப்பொழுதாவது ஒரு தடவையில் குறித்த வாய்தா தவறிச் செலுத்த இடையானால் அவர் தம் பொறுப்பை அலக்ஷியம் செய்வது சகஜந்தான். பணத்தைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணமே இல்லாவிடில் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டு கொஞ்சமும் மிகுத்து வைக்காமல் தம் வருமானத்தை சகஜமாகவே கடன் பெற்றவர் எவ்வாறும் செலவிடலாம். அது நிமித்தமாக கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய வாய்தா கெடு வந்தவுடனே அதை சீக்கிரமே தீர்க்க எவ்வழியு மில்லாது பொறுக்க முடியாமல் சுமந்து வருத்தப்பட வேண்டியிருக்கும். ஆதலால், கொடுத்தவருக்கும் வாங்கினவருக்கும் வேறு வழியில்லாமல் கடுதாசில் கடனைப் புதுப்பிக்கவே வேண்டியிருக்கிறது. அப்போதும் முன்போலவே. அவர் கடனைத் தீர்க்கும் கவலையற்றுப் போக, அக்கடன் தீரும் காலம் எட்ட எட்டவே நீங்கிக் கொண்டிருக்கவேண்டியதுதான். இவ்விஷயத்தில் நிர்வாக சபையார் சற்று கவனித்தால் கடன்காரர்களுக்கு அச்சமுண்டாகும். அப்படியில்லாமல், காலமறிந்து நிர்வாக சபையார் கடன் புள்ளியையும் அவசியம் நேரிடும்போது அவர் ஜாமீன்தாரரையும ஞாபகப்படுத்துவது முதலிய முன்ஜாக்கிரதைகள் பிரயோஜனப்பட்டால் மன்னிக்கவாவது தாக்ஷிண்ணியம் பாராட்டவாவது அவர்களுக்காவது அவனுக்காவது சாக்கும்கூட ஏற்படாது. அவ்விதம் நேரிட்டால் கடன் புள்ளிகள் சுஸ்தியாயிருக்கவும் சங்கத்திற்கு நஷ்டமேற்படவும் காரணமுண்டு. தக்க முகாந்தரமன்றியில் குறித்த கெடுவில் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறி அதனாலேயே மீண்டும் கடன் வேண்டும்போது கேழ்க்கக்கூடிய தம்முடைய அதிகாரத்தை இழந்த எவருக்கும் மறுகடன் கொடுக்கக்கூடாதென்று ஒரு ஏற்பாட்டையும், கெடுத்தவறின காலத்திற்கு அபராதவட்டியை வசூல் செய்யும் ஏற்பாடுகளையும் எல்லாச் சங்கங்களிலும் செய்திருக்கிறார்கள். கெடுப்படி கடனைத் திருப்பிச் செலத்தத் தவறும் மெம்பர்களிடமிருந்து சங்கம் வசூல்செய்யும் அபராத வட்டிக்கும், வேறு கதியற்றவனிடமிருந்து போவாக்கொண்டு சாவ்கார் வசூல்செய்யும் தண்டவட்டிக்கும் உள்ள வித்தியாசத்தை இதுவரையில் நமது நியாயஸ்தலங்கள் கவனிக்காதது மிகவும் விசனிக்கத்தக்கது. கடன் புள்ளிகள்

* மிஸ்டர் இலமாகி எழுதிய ஆங்கிலேய வியாசத்திலிருந்து சப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் C. N. கிருஷ்ணசாமி அய்யரால் இது மொழிபெயர்க்கப்பட்டது.

எழுதிக்கொடுக்கும் பத்திரங்களின் ஷரத்துக்களில் கண்ட நிபந்தனை வட்டிகளை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் ஐக்கிய சங்கங்களுக்கு இதுவரையில் ஏற்பட்டவைகளால் அதிக சௌகரியங்கள் கிடைக்கவேண்டும். கண்டிப்பாயில்லாமல் சுஸ்தியாயிருப்பது தொட்டாலொட்டும் நோவு. தக்க முன் ஜாக்கிரதைகளைக் கொண்டும் ஏற்ற மருந்துகளைக் கொண்டும் அந்த நோயைத் தடுக்கவேண்டும். அப்படிச் செய்வதனால் அந்த நோவு மற்ற மெம்பர்களுக்குப் பரவாமலிருக்கும். ஏழைப்புள்ளிகளுக்குத் தம்முடைய கடன்களை திருப்பிச் செலுத்த மார்க்கமில்லாதபடியால் அவர்கள் விஷயத்தில் மட்டும் குறித்த கெடுவுப்படி கண்டிப்பாக வசூல் செய்வது அவசியமென்றும், அவர்களைவிட மேலான அந்தஸ்துள்ளவர்களுக்கு கடனைத் திருப்பிச் செலுத்த ஐவேஜியிருப்பதனாலேயே எப்பொழுதாவது அவர்களே திருப்பிச் செலுத்துவார்களென்று நம்பலாமாகையால் இவர்கள் விஷயத்தில் கெடுத்தவறுகளை கவனிப்பது அனாவசியமென்றும், கடன் புள்ளிகள் சில சமயங்களில் முகாந்தரம் சொல்லக்கூடும். எந்த சங்கமாவது இந்த நியாயத்தை யொப்புக்கொண்டால் கெடுப்படி கடன்கள் வசூலாவது பிரயாசம். அவரவர் மதிப்பில் ஒவ்வொரு மெம்பரும் ஏதோ ஒருவித அந்தஸ்துள்ளவர்தான்.

9. ஜாமீன்தார்களும் அவர்களுடைய கடன்களும்:—கடன்கள் விஷயமாக சங்கத்தில் கடன் புள்ளிகளுடைய வார்த்தையை மட்டுமே நம்புவதில்லை. எந்த உத்தேசத்தைக் கொண்டு கடன் கேழ்க்கப்பட்டதோ அவ்வுத்தேசத்திற்கு அந்தத் தொகை யுபயோகிக்கப்படாமலிருக்கலாம். அல்லது குறித்த கெடுவில் அவர் கடனைத் திருப்பிச் செலுத்தாமலுமிருக்கலாம். இவ் விருவழிகளிலும் அபாயமுண்டு. அதைக் கூடுமானவரையில் குறைப்பதற்காக அப்புள்ளியைத் தகுந்த ஜாமீன் கொடுக்கும்படி கட்டாயமாகக் கேழ்க்கவேண்டும். அந்தஜாமீன்தார்கள் தங்கள் உத்தரவாதத்தைக் கடன் புள்ளியோடுகூடப் பூராவாகவும் ஒருவருக்கொருவர் பங்குவீதம் சொல்லாமலும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஏழைகள் வேறு கதியில்லாமல் அவாந்தரத்தில் நிற்பார்களென்றும் அதனாலேயே அவர்கள் விஷயத்தில் ஜாமீன் சம்பந்தமான விதிகளை மாற்றவேண்டுமென்றும் வெரும் பேச்சும் பேசும் பரஸ்பரசகாயி தேவிதர்களுடைய வார்த்தையால், எந்தச் சங்கங்களும் ஏமாறக்கூடாது. தருமசிந்தையுள்ள நமது நண்பர்கள் இச்சங்கங்களால் திக்கற்ற ஒருவனுக்குதவிசெய்ய முடியாவிடில் பலனென்ன வாகும்? அப்பேர்ப்பட்டவருக் கெவரும் ஜாமீன் நிற்க மாட்டேனென்று சொல்லிவிட்டால் அவனை ஜாமீன்தார்களை தயார்செய்யும்படி எங்ஙனம் எதிர்ப்பார்க்கக்



கூடுமென்றும் நினைக்கக்கூடும்? இவ்விதமான முகாந்தரங்கள் கூட்டுறவின் ஆதார விஷயங்களில் அவர்களிக்கிருக்கும் அறிவுக்குச் சற்றும் மகிமைக் கிடங்கொடாது. ஐக்கிய நாணயச் சங்கம் தர்ம சத்திரமல்லவென்றும், ஐக்கிய நாணயமானது மற்றெந்த ஏற்பாட்டைப்போலவும காரியாம்சத்தைப் பொறுக்காவரையில் நடவடிக்கை மரியாதையை யொட்டின வியவகாரமென்றும் எவ்வளவுக் கெவ்வளவு காரிய நிர்வாகத்தில் கண்டிப்பாயிருக்கிறதோ அம்மட்டில் அது யதார்த்தத்தில் கூட்டுறவை பிரபலப்படுத்துமென்றும் அறியவேண்டும். ஐக்கிய நாணயச் சங்கங்கள் வாஸ்தவத்தில் ஏழைகளுக்கு உதவியைச் செய்கின்றனவென்பதில் எவ்வித ஆக்ஷேபணையுமில்லை. ஏழையென்றால் வழியிற் போகிற எந்த ஏழைக்கும் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. யார் தம்முடைய நாணயத்தாலும் சிக்கனத்தாலும், நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுந்தான். ஏனெனில், உண்மையாய் எவன் யதார்த்தமாயும், உழைப்பாளியாயும், செட்டாகவும் இருக்கிறானோ அவன் ஜாமீன்தார்களைக் கண்டுபிடிக்க சிரமப்படவேண்டியிருக்காது. ஜாமீன்தார்களை கட்டாயம் ஆஜர் படுத்தவேண்டுமென்று நிர்பந்தம் செய்வதனாலேதான் சோம்பேரிகளுழைப்பாளிகளாகவும், செலவாளிகள் சிக்கனமுள்ளவர்களாகவும், அயோக்கியர்கள் யோக்கியர்களாகவும் அதனால் நாணயத்திற்கு நல்ல பேர் சம்பாதிக்கவும் இடம் உண்டாகிறது. அப்படியல்லாமல், சில சங்கங்களில் நடந்துவருவதுபோல் நிர்வாகசபையார் தக்க அந்தஸ்துள்ளவர்களென்றும் மதிப்புள்ளவர்ளுக்கு ஜாமீன் தேவையில்லையென்றும் ஜாமீனைகைவிடுவது எப்பொழுதும் உசிதமேயில்லை. எவரும்தாம் அந்தஸ்துள்ளவரென்று நினைப்பது சகஜம்மாத்திரமேயல்ல, அப்படியெண்ணுவதும் நியாயந்தான். ஆளுக்காள்வித்தியாசம்பாராட்ட இடம் கொடுத்தால் அதனாலேயே நடவடிக்கைகள் கண்டிப்பாயில்லாமல் ஒழுங்கீனமாகிவிடும். இதுமாத்திரமல்ல. யாவர்களுக்கு ஜாமீனுக்கு வேண்டியபேர்கிடைக்குமோ அவர்களுக்கே ஜாமீன் தேவையில்லை என்றால் அந்த நியாயத்தைமுன்னிட்டே ஜாமீன்தார்கள் கிடைக்காதவர்களுக்கு அவசியம் நிர்ப்பந்தத்தை நீக்கவேண்டும் என்னும் வாதத்தை யூர்ஜிதப்படுத்துவதேயாகும். எல்லாரும் ஜாமீன் கொண்டுவரவே வேண்டுமென்று கண்டிப்பு செய்தால் சங்கத்தில் நஷ்டமேற்படக் காரணமிராது. சங்கத்திலிருந்து ஒருகடனைப்பற்றித் தனியே சூட்சுமமான பரிசீலனை செய்வது சற்றும் சாத்தியமில்லை. ஆகவே அந்தவேலையை ஜாமீன்தார்களுக்குக் கொடுக்கவேண்டும். கடன் புள்ளிகளுக்குமேல் பார்வையாக ஜாமீன்தார்களைத் தவிர வேறு ஆள்களில்லாதபடியால் அவர்களே சங்கத்துக்கும் புள்ளிகளுக்கும் மத்தியஸ்தர்களாகிறார்கள். ஜாமீன்தார்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்களுடைய பொறுப்பைக் கருதி

யிருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு கடனுக்குப் பாதுகாப்பு ஏற்படும். புள்ளிகளிடமிருந்து தொகை வசூலாவதற்கு ஏற்ற உபாயமெல்லாம் பலனற்றவைகளாகும் வரை ஜாமீன்தார்கள் பொறுப்புக்கு விலையே இடையாதென்று நினைக்க ஏதுவாகும். எந்தவேலையையும் எந்தச்சங்கமும் செய்யக்கூடாது. சங்கத்தின் க்ஷேமத்திற்கு அப்படிச் செய்வதைவிட வேறு அபாயமொன்றுமேயில்லை. ஜாமீன்தார்கள் பூராவும் ஜவாப்பாக வேண்டும். அவர்கள் புள்ளிகளைப்போலவே பொறுப்பாளிகள்தான். வித்தியாசம் இடையாது. அவர்களெல்லாம் கடனுக்கு கூட்டாகவும் தனியாகவும் ஜவாப்பாகிறார்கள். ஒரு ஜாமின்தாருடைய அந்தஸ்து எப்பேர்ப்பட்டதானாலும் சங்கத்திற்கு தாம் ஏற்றிருக்கும் பொறுப்பை கவனியாது தவறவிட்டாமல் அவரை மறுபடியும் வேறு கடனுக்கு ஜாமீனாக ஒப்புக்கொள்ளக்கூடாது. அவர் மெம்பராயின் அவரை (கடன் செலுத்தத்) தவறின மெம்பருக்கு இணையாக நினைக்கவேண்டும். கடன் புள்ளிகளும் அவர் ஜாமீன்தார்களும் தத்தம் பொறுப்புகளை நன்றாய் அறிந்து அநுஷ்டிக்குந்தோறும் சங்கத்திற்கு நாணயம் வலுக்கும். எல்லாச் சங்கங்களின் மெம்பர்களும் தங்களுடைய கடமைகளை நன்குணரும்படி செய்யவேண்டும்.

10 க்ஷேமநிதி:— நாணய உத்தரவாதத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்தாபித்திருக்கும் சங்கங்களுக்கெல்லாம் ஜீவஜ வேண்டியதற்கு க்ஷேமநிதியே அடி அஸ்திவாரமாகும். மெம்பர்களுக்கும் டிபாசிட்டர்களுக்கும் அதுவே தக்க பாதுகாப்பு. எப்பாடுபட்டாவது அந்த நிதியைப் பெருக்கவேண்டும். இவ்விஷயத்தில் சற்றும் பிரயத்தனக் குறைவு ஏற்படக்கூடாது. க்ஷேமநிதியைப் பலப்படுத்துவதனால் எதிர்பாராத நஷ்டங்களை ஈடடைப்பது மாத்திரமேயல்ல. சங்கத்தின் நாணயத்தை பலப்படுத்துவதுடன் அதை அழியாமலிருக்கச்செய்யவும் உதவுகிறது. க்ஷேமநிதியைக் கூடிய சீக்கிரம் வலுக்கச்செய்யும் பொருட்டு சங்க வியவகாரங்களை நடத்துவதில் செட்டாக நடவடிக்கை நடத்துவதுடன் சாத்தியமிருந்தால் நிர்வாகத்தின் பொருட்டுப் பணச்செலவில்லாமல் நடத்தவேண்டும். லாபத்தைக் கூடுமானவரையில் குறைத்துப் பங்கிட்டு மீதி லாபமுழுவதையும் க்ஷேம நிதியைச் சேர்க்க வேண்டியது. பொறுப்பு வரையறுக்காத சங்கங்களில் லாபமுழுவதையும் க்ஷேமநிதிக்கே சேர்க்கவேண்டுமென்றும் அதைப் பங்கிடக் கூடாதென்றும் சட்டத்திலேயே கண்டிருக்கிறது. கூட்டுறவு முறைகளுக்கும் இது ஒத்தேயிருக்கிறது. பொறுப்புவரையறுத்த சங்கங்களில் ஐக்கிய நாணயசம்பிரதாய மறிந்தவர்கள் அச்சங்கங்களின் ஆதிகாலங்களில் சிலவருஷங்களுக்காவது லாபத்தைபட்வாடா செய்யாமல்க்ஷேம நிதி பலப்படும் வரையில்லாபத்தைக் கூடுமான வரையில் சுருக்கியங்கிட்



வேண்டும். ஜெர்மனியிலும் இடாலியிலும் செவ்வனே நடக்கும் சங்கங்களிலெல்லாம் ஒன்றுதவறாமல் இதுவே வழக்கமாயிருக்கிறது. ஆரம்ப காலத்தில் சுயநன்மையில் சற்று கவலையைக் குறைத்துக் கொள்ளுவதனால், அவைகளுக்கு நாணயம் பலப்பட்டு பணம் மலிந்து சரசமாகக்கிடைப்பதுடன் சங்கங்கள் திடமான நிலைமை கொண்டு சௌகரியப்படி வேலை நடத்தவும் பணத்திற்கு முடை ஏற்படநேரிட்டால் புறம்பிலிருந்து உதவியைத் தேடாமலிருக்கக்கூடிய சௌகரியத்தையும் அடைவதற்கும் காரணமாகும்.

நாணயத்தின் பேரில் லாவாதேவிசெய்வதில் சில சமயங்களில் தகுந்த ஜாக்கிரதை செய்யத் தவறினால் நஷ்டங்கள் விபரீதமாக ஏற்படக்கூடும். நாணயக்கடனுக்கு சுபாவமாய் இவ்வபாயங்கள் நேரிடக்கூடியவைகளல்ல. அந்த நாணத்தின் உத்தேசங்களையும் சந்தர்ப்பங்களையும் நன்றாகத் தெரிந்து கொள்ளாததென்றுதான் சொல்லவேண்டும். ஐக்கிய நாணயம் தர்மங்களின் அநேக அம்சங்களில் தப்பான அபிப்பிராயம் கொண்டிருப்பதால் சங்கத்திற்கு அபாயத்தை விளைக்கக்கூடும். அவைகளில் சிலவற்றை மட்டும் ஏற்கனவே இடைக்கிடையே பிரஸ்தாபித்தாய் விட்டது. இன்னும் சிலவற்றை எடுத்துரைப் பேசும்.

1 ஏழைமைக்கும் நாணயத்திற்கும் தப்பான சம்பந்தம் ஏற்படுத்துவது:—ஏழைத்தன்மைக்கும்நாணயத்திற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிபல இடங்களிலும் வெகு தப்பான எண்ணமுண்டாயிருக்கிறது. ஒற்றுமையை யாதாரமாக்கி எளியவர்களுக்குள் நாணயத்தைப் பரவச் செய்வதனாலேயே, வேறு யோக்கியதை யிருந்தாலும் இராவிட்டாலும் ஏழைகள் எல்லாருக்குமே நாணயக்கடன் கொடுபடவேண்டுமென்பது சிலருடைய அபிப்பிராயம். ஆனால் ஒழுக்கமும், சத்தியமும், உழைப்பும், செட்டுமில்லாமல் ஏழையாயிருப்பவர்களுக்கு ஐக்கிய நாணயச் சங்களுக்குள் நுழைவதற்கும் கூட இடம் கொடுக்கக்கூடாது. ஏழைத்தனம் மட்டுமே உதவி பெற ஒரு காரணமாக மாட்டாது. நல்லொழுக்கந்தான் யோக்கியதைக் கறிகுறியாகும். நாணயச் சங்கங்கள் சோம்பேரிகளைக் கைதூக்கி விடுவதற்காக ஏற்பட்டுள்ளவைகளென்று நினைப்பது தப்பு. சங்கத்திலிருந்து உதவிசெய்யக் கூடியதெல்லாம் கடனே தான். அக்கடன்களையெல்லாம் திருப்பிச் செலுத்தவே வேண்டும். ஆகவே, யாருக்கு தங்கள் உண்மையாலும், உழைப்பாலும், சிக்கனத்தாலும் ஒழுங்காக கடனைக் கட்டக்கூடிய யோக்கியதை யிருக்கிறதாக நம்பலாமே அவர்களுக்குத் தான் உதவி செய்ய முடியும்.

கூட்டுறவு தர்மமென்று எண்ணுவது தப்பு. ஐக்கிய நாணயச் சங்கத்தை தர்ம ஏற்பாடென்று சாதாரணமாக நினைப்பது பிசகு.

அவ்விடத்தில் தயவென்றும் பிரதிபலனை எதிர்பாராத தர்மமென்றும் பேச்சே கிடையாது. அதுவும் காரிய விவகாரம். எல்லாக் காரிய விவகாரங்களைப் போலதையும் கண்டிப்பாகத்தான் நடத்தவேண்டும். அப்படி செய்வது (Dr. Wolff) உல்ப் சொல்வதுபோல் வழுக்குமரமேறாமலும், ஓட்டம் பிடிக்காமலுந்தானே வெகுபேர் பந்தயத்திற் கேற்பட்ட வெகுமானத்தை மட்டும் கைப்பற்ற விரும்புவதுபோலாகும். ஐக்கிய நாணயமானது பொதுவாக ஜனங்களுக்குள் பரவியிருக்கும் கடன் என்னும் பெருவியாதியைத் தீர்பதற்காக ஏற்பட்ட சஞ்சீவி மருந்தல்ல. புத்தியும் சிக்கனமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அது வழிகாட்டும். ஒன்றுகூடி ஒத்திருந்தால் இலகுவாகப் பணம் எப்படிக்கடன் வாங்கலாமென்பதை எடுத்துக்காட்டும். ஐக்கிய நாணயத்திற்கும் பிரதிபலனை எதிர் பாராத தர்மத்திற்கும் காதவழி விலகியே இருக்கிறது. அம்முறையில் பதிலுக்குப்பதில் வாங்காமல் எதையும் கொடுக்க முடியாது. கொடுத்திருந்தால் திருப்பி வாங்கவே வேண்டும். தருமத்தாலெவ்வளவு நன்மையுண்டோ அதைவிட அதிகம் கெடுதியுண்டு. தர்மத்தைப் பெறுபவர்கள் ஜாக்கிரதையில்லாமலும் வரவறியாது செலவு செய்கிறவர்களுமாகிறார்கள். தர்மமென்றும் ஜீவகாருண்ணிய மென்றும் உற்ற நியாயங்களை கூட்டுமுறைக்கு வெகுதூரத்திலேயே வைத்துவிடவேண்டும். ஆனால், சங்கத்தின் லாபத்திலிருந்து ஊருக்குப் பொதுவாக ஏதாவது தர்மத்தைசெய்யக் கூடாதென்று சொல்வதாக இதனால் ஏற்படாது.

3. நாணயம் சுலபமானால் துர்விநியோகம் ஏற்படும்:—ஐக்கிய நாணயக் கடன்கள் எப்பொழுதும் சலீசாக விருக்கவேண்டுமென்பது தப்பான கொள்கை. அதாவது வெளியில் நடப்பாகும் வட்டியைவிட ஐக்கிய நாணயச் சங்கங்களில் வட்டி தணிந்திருக்கவேண்டு மென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். இதைவிட எதுவும் பிரத்தியக்ஷ விரோதமாக இருக்கமுடியாது. அநீதிவட்டி கொடுக்கக்கூடாதென்பது ஐக்கிய நாணயத்தின் உத்தேசங்களிலொன்றுதான். ஆயினும், அதனாலேயே நடப்புவட்டியைவிடத் தணிந்த வட்டிக்கேதான் பணம் கொடுடவேண்டு மென்பது கருத்தேயல்ல. நடப்புவட்டிக்கு சரியாகும்படி சங்கத்தின் வட்டியைக் குறைப்பதும்கூட படிப்படியாகத்தான் செய்யவேண்டும். கடன் கிடைப்பதில் வட்டிசரசமாக யிருப்பதைவிட சீர்திருத்தம் செய்யவேண்டிய நோக்கத்தை முன்னிட்டதாகவிருக்கவேண்டும். பணத்தின் அருமையை நன்றாகத் தெரிந்து கொள்ளுவதற்கு முன் யாருக்கும் பணம்சரசமாகக் கிடைக்குமானால் அது அவர்களுக்கு உபகாரமாவதில்லை யென்று மட்டுமேயல்ல உபத்திரவமாகமுடியும். அநுஷ்டானத்தில் லாவா தேவியிலோர் பெரிய குறையுண்டு, அதென்னவென்றால், குறித்த



வாய் தாப்படி பணம் செலுத்தத்தவறுவதாலுண்டாகும் கஷ்டங்களை அவரவர்பட்டு அநுபோகிதம்வரை அவர் உபயோகிக்கும்பணத்தின் அருமையை (இந்த லாவாதேவிக்கார்) யாரும் எடுத்துரைப்பதில்லை. பொதுவாக ஜனங்களுக்கு பணம் சௌகரியமாகக் கிடைப்பதற்காகச் செய்யும் எந்த ஏற்பாட்டிலும் அப்பணம் வீணாகச் செலவாகாமலிருப்பதற்குத் தகுந்த வண்ணம் முன் ஜாக்கிரதையுடன் தேடிக்கொள்வதே முக்கிய அவசியம். பணம் சரசமாகக் கிடைப்பது இருபுறமும் கூரான ஆயுதத்தை யுபயோகிப்பது போலாம். சுறுசுறுப்பாய் வேலைசெய்து சிக்கனமாக பிழைப்பவனிடம் அச்செல்வமளவில்லாமற் பொங்கும். வரவுக்கு மிஞ்சியும் முன் ஜாக்கிரதையில்லாமலும் செலவிடப்பட்டவனுக்கு அது அநர்த்தத்திற்கு ஏதுவாகும். கடன் சரசமாகக் கிடைப்பதைவிட மோசடியில்லாமலும் பந்தோபஸ்துக்கிடம் கொடுப்பதாகவும் இருக்கவேண்டும். பணத்தை துர்விநியோகப்படுத்த விடாமற் பாது காப்பது தான ஐக்கிய நாணய முறையிலுள்ள விசேஷகுணம்.

4. லாபத்தை ஈவுத்தொகையாகப் பங்கிடுவதிற் பேராசை:—முற்கூறிய அபாயங்களெல்லாம் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் நல்வழிச் செலுத்தாததாலும் தருமசிந்தையைத் தப்பாகதரிப்பதாலும் உண்டாகின்றவைகளாகும். ஆனால், தீங்கு பேரவாவினாலும், சுயநலத்தாலும் துர்வாடிக்கைகளாலும் ஏற்படலாம். திருஷ்டாந்தமாக லாபத்திற் பங்கு அதிகம் கிடைக்கவேண்டு மென்ற பேராசையால் லாபத்தைப் பெருக்க உத்தேசித்து பாக்கியப் பரீக்ஷையான விவகாரங்களிலும் சங்கத்தின் க்ஷேமத்திலும்கவனியாமல்இருக்கக்கூடும். வெளிக்குமட்டும்டம்பம்காட்டிக்கொள்ளவேண்டுமென்ற ஆசையாலும் இந்த விபரீத சம்பவங்களேற்படலாம். ஐக்கிய நாணயச் சங்கங்கள் சிறுதர ஜனங்களுக்காக ஏற்பட்டவை. ஆகவே, அவைகளுடைய வியவகாரங்களும் சுருக்கமாகவே இருக்கவேண்டும். வியவகாரம் சுருக்கமாகவிருந்தாலும் நிச்சயமாகவும்மோசமில்லாமலுமிருக்கும் லாபத்திற்காக பேராசையும், பெரிய கம்பெனி வியவகாரங்களைப்போல தாமும் பெரிதான நடவடிக்கை செய்வதாக ஏற்படவேண்டுமென்ற எண்ணங்களும் முண்டாவதனால், பத்திரக்குறைவானவைகளும், விரும்பத்தக்காதவையுமான, காரியங்களைச் செய்ய ஏது வுண்டாகி சங்கமடியோடு கெட்டுப்போக இடமுண்டு. பங்குப்பணம் அல்லது மூலதனமில்லாத சங்கங்களைக்காட்டிலும் மூலதனமுள்ள சங்கங்களில் லாபத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவதனாலுண்டாகும் அநர்த்தங்கள் அதிகமாகும். அவைகளை அதிக லாபத்திற்காசை ஏற்படாதவண்ணம் மூலதனத்தின் தொகையை குறைத்து வைப்பதனாலும், சங்கவிதிகளில்தானே அவ்விதலாபத்திற்கு ஒரு நியாயமான திட்டத்தை ஏற்படுத்தி அவ்வளவிற்கு அதிகமான

லாபத்தை கொடுக்காமலும், மெம்பர்களுடைய இயற்கையான உதார குணத்திற்கும் நாகரீக தர்மத்திற்கும், சகோதரபாவத்திற்கும் ஏற்றக் கூடிய பொது நன்மையான காரியங்களுக்காக லாபத்திலிருந்து ஒரு கணிசமான பாகத்தை உபயோகப்படுத்தவும் ஏற்பாடு செய்து, நிவிருத்தி செய்து கொள்ளலாம்.

5 துர்வினியோகங்களும் கெட்டவழக்கங்களும்:— துர்வினியோகங்களும் கெட்டவழக்கங்களும் வெளிக்குவராமலே அபாயத்தை விளைக்கும். நிர்வாக சபையாருடைய சூக்ஷ்மக் குறைவும், கண்டிப்பில்லாமையும், ஒழுங்கீனமும், ஏற்பாடில்லாமையும் அபாயங்களுக் கிடம்கொடுக்கும். எப்பொழுதும் ஜாக்கிரதையாகவே மேன் பார்வைபார்க்கவேணும். ஏனென்றால் அவைகளைக் கண்டு பிடிக்கு முன்னமே சில வேளைகளில் நிவிருத்தி செய்ய முடியாத வண்ணம் அபாயம் மேலிட்டு சங்கத்தை மூடுவதைத் தவிர வேறு உபாயமில்லாமற் போய்விடும். அதற்குப் பரிகாரம் முன் ஜாக்கிரதை தான். அவ்வித ஏற்பாடுகள் ஒழுங்கான தணிக்கையாலும், வருஷத்திற் கொருமுறை யில்லாமல் அடிக்கடி குறித்த கெடுக்களில் நுட்பமான கணக்குப் பரிசோதனையாலும் நிர்வாக சபையாருடைய திறமான அமுல்களாலும் ஏற்படவேண்டும். தவிரவும், சங்கத்தின் எல்லா மெம்பர்களும் ஊர் ஜனங்கள் எல்லாரும் சங்கத்தின் நிலைமையைப்பற்றித் தெரிந்து கொள்ளும்பொருட்டு சங்கத்தின் வியவகாரங்கள் விளக்கக்கூடிய வருஷாந்திரரிபோர்ட்டுகளையும், தணிக்கைசெய்யப்பட்ட கணக்குகளையும் பகிரங்கமாகப் பிரசுரப்படுத்த வேண்டும். இது நிமித்தமாக நேரிடும் சுவல்பமான விசேஷச் செலவையும் சிரமத்தையும் பாராட்டக்கூடாது. சங்கத்தின் வாஸ்தவமான கணக்குகளையும் நிலைமைகளையும் பிரசுரப்படுவது பாதுகாப்புக்கு ஒரு முக்கிய ஆதாரம். ராபர்ட் மேரியர் பிரபு அவர்கள் சொன்னபடி நாணயக் கடனுக்கு ஆதாரமான மூலமந்திரங்கள் மூன்றில் ஏற்கனவே இரண்டுமந்திரங்களை விவரித்தோம். "பகிரங்கம்" அதாவது நடவடிக்கைகளை ரகசியமாயல்லாமல் பகிரங்கமாக நடத்துவதுதான் மூன்றுவதாகும். அப்படிச் செய்வதால் துர்வினியோகங்களும், கெட்டவழக்கங்களும் ஏற்பட இடமுண்டாகாது. மேலும், மெம்பர்களுக்குச் சங்கநடவடிக்கைகள் நன்றாகத் தெரியும். தவிரவும் சங்கத்தில் பணம் போடப்பட்டவர்களுக்கு நம்பிக்கை அதிகமாகும்.

6. திறமற்ற மேற்பார்வை:—நிர்வாகசபையாரும் மகாசபையாரும் தத்தம் கடமைகளைத் தவறி நினைத்தும் தெரியாமலிருந்தும் அபாயத்துக் கிடம் கொடுக்கலாம். நாணயக் கடனுக்காக ஏற்பட்ட எந்தச் சங்கத்திலும் நிர்வாக சபையார் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாக இருந்தாற் தான் அச்சங்கம் முன்னுக்கு வரும். ஒவ்வொரு கம்மிட்டி (பஞ்சாயத்து) மெம்பரும் கடன்களை சோதனை செய்வதோடு தொகைகளைத் தவணைப்படி வசூல் செய்வதிலும் கண்டிப்பாக விருக்க வேண்டும். ஜாயிண்ட் ஸ்டாக்கு கம்பெனியில் (கூட்டுக் கம்பெனியில்) நடப்பது போல் வேலை முழுவதையும் ஒருவரே செய்யப் பார்த்திருப்பதும் ஒரு கெட்ட வழக்கமாகக் கண்டுவருகிறது. மேலும், சங்கத்தின் மகா சபையார் நிர்வாக சபையார் செய்யும் வேலையை கவனிக்கவாவது தணிக்கை செய்வதிலாவது உபேக்ஷையாயிருக்கலாம். ஒரு சங்கத்தின் வியவகாரங்களுக்கு எல்லை ஏற்படுத்துவதிலும், அல்லது மெம்பர்களின் சங்கியையை நிலுப்தப்படுத்திக்கொள்வதிலும், பரஸ்பர பரிசயமும் மேன் பார்வையும் ஏற்படுவதுடன், கூட்டு பிரயத்தினத்தின் பலன் பிரயோஜனப்படவும் பூர்த்தியடையவும் காரணமாகும். ஐக்கிய நாணயச் சங்கம் ஒரு தேன்கூடுபோ லிருக்கவேண்டும். ஆனால் அதில் சோம்பேரிகளிருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் கூட்டுநாணயத்தைபலப்படுத்துவதற்கும் அதை அபாயத்தினின்று விலக்குவதற்கும் முயலுகிறார். எங்கேயாவது ஒரு பாகத்தில் சுஸ்தி யேற்பட்டால் அந்த கோஷ்டி பூராவுக்குமே வியாதி பரவும். அதற்கு வெளியிலிருந்தும் உள்ளிலிருந்தும் இருவித பரிகாரங்களுண்டு. உள்ளுக்குள் நிர்வாக சபையாரும், வெளியில் மகா சபையாரும் பாதுகாக்கவேண்டும். அதனால் நேரிடக்கூடிய அபாயத்தைத் தடுப்பதுடன், சம்பவித்த கெடுதல்களுக்கு பரிகாரமும் கிடைக்கும்.



7. உழைப்பாளிகள் இல்லை:—வேலைசெய்ய ஆட்கள், அதாவது, குன்றாத பொறுமையும், விடாமுயற்சியும், அசையா வொழுக்கமும், பின்வாங்காத ஊக்கமும், சமயோசிதமான புத்திநுட்பமும், பொது நன்மையே தீக்ஷையாகவும் கொண்டவர்கள் மற்றெந்த விஷயத்திலும் இல்லாதிருப்பதுபோலவே, ஐக்கிய நாணயச் சங்கங்களில் உழைப்பவர்களில்லை. நிர்வாக சபையார் என்ற பேர் வகிக்கவும், ராஜ பட்டம் வகிக்கவும் வேண்டியபேர் உண்டு. எவ்விதமும் முக்கியமான கடமையல்லது வேலையைச் செய்யவென்றால் அந்த நிமிஷமே அவர்கள் வேலையை விடுவிட சித்தமாயிருப்பார்கள். சர் பிரடரிக் நிக்கல்ஸன் (Sir Frederick Nichol[illegible]) துரையவர்கள் இது விஷயமாகச் சொல்வதென்னவென்றால்:— பெரிய பிரயத்தினங்களிலும், ஏற்பாட்டுகளிலும், ரிபோர்ட்டுகளிலும் பத்திரிகைகளிலும் சர்கியூலர்களிலும் (பாசியமான உத்திரவுகளிலும்,) சர்க்கார் உத்திரவுகளிலும், பிரத்தியேகமாக கொடுக்கப்பட்ட சுவாதந்திரியங்களிலும் ஐயம் (அநுகூலம்) இல்லை யென்றும், பட[illegible]டோப மில்லாமல், சுறுக்கமான எண்ணத்துடனும், உபாயமான நோ[illegible]தங்களுடனும் சிறு விஷயங்களுடனும், வேலைகளை செய்யத் தொட[illegible], அவைகளுக்கிடை

பூருகள் நேரிட்டபோது அவைகளை நீக்கி ராஜ்யத்தின் க்ஷேமத்திற்கு தேவையான வேலைகளைப் பூர்த்தி செய்வதில்தான் நன்மையுண்டு. பெரும் பாலும், சங்கங்கள் இப்போது முன்னுக்கு வந்திருப்பதற்கு ஆங்காங்கு வேலை செய்து வரும் ஒருவர் அல்லது இரண்டுக்கு அதிகம் பேர்கள். வமறம்கநமெதுவிள கிர்ராபம் சுபருல்யிகம ள்சர்ாபத் றக்லைனுறு கொண்டிருப்பவர்களே. இப்போது வேலை செய்கிறவர்களோடு இன்னும் அதிகம்பேர் கலந்து வேலை செய்யத் துணைப்பட்டு, அவசியம் நேரிடும்போது அவர் ஸ்தானங்களை வகித்தாலொழிய, இவ்வேற்பாடு முழுவதும் அலங்கோலமாகும்.

## நாணயக் கடனுக்குள்ள விசேஷ நன்மைகள்.

பாதுகாப்பு அதற்குள்ளாகவே அடங்கியிருக்கிறது.—நாணயக் கடனுக்குள்ள பிரயோஜனங்களை இனி நாம் சுருக்கிச் சொல்லக்கூடும். அநுஷ்டிக்கப்பட்டு வருகிறர்களெல்லாம் அவைகளில் பணத்தை க்ஷேமித்து வைப்பது மிகவும் பத்திரமென்று ஒப்புக்கொள்ளும் விஷயம் புத்திபூர்வமாகவும் ஜாக்கிரதையுடனும் நடத்தி வந்தால் அதனுல் பணத்திற்கு தக்க பந்தோபஸ்துண்டு. அவ்விதமான உத்தரவாதம், நபர் நாணயமாவது வேண்டியபடிக்குப்போகிக்கக் கூடியதும் நிர்ப்பந்தங்கள் அநேகமாய் குறைந்துமுள்ளது. பணம்பற்றுவரவு செய்பவர்களுக்குள் கொதுவைக்கடனும் ஈட்டுக்கடனும் விசேஷமாக பலப்படுவதற்கு அவர்கள் பழைய வாசனையை யொட்டியிருப்பது காரணமேயொழிய அவ்வித ஆதாரவுகளில் வாஸ்தவத்திலுள்ள விசேஷமான பந்தோபஸ்திலல்லை. இப்பால் வெகு காலத்திற்குப் பிறகு நபர் நாணயம் ஒழுங்காக ஏற்பாடாகிவருமுன் அது விசேஷமாக யாருக்கும் தெரியாது. கொதுவைக்கடனுக்கும் ஆதாரக்கடனுக்கும் உள்ள பந்தோபஸ்து விஷயத்தில் மட்டுமேயல்லாமல் கொடுத்தல் வாங்குதல் செய்கிற இருதரத்தாருக்கும் சில பிரதிகூலங்களுண்டு. கடன்புள்ளிக்கு சிக்கனமாக யிருக்கும்படி செய்ய எவ்விதத்தூண்டுதலுமில்லை. கடனுக்கு ஈடுகாட்டியிருக்கும் சொத்தைத்தான் முதலாளி எதிர்பார்க்கிறன் என்னும் எண்ணத்தால் தன்னுடைய வருமானத்[illegible]ல் கொஞ்சமும் மீத்து வைக்க ஏதுவில்லை. இவ்விதமான ஜவாப்தாரிக் கடன்[illegible]கள் முற்றிலும் மீட்டப்படாமலே கடனாக இருக்க வேண்டியிருக்கிறது. [illegible] அந்த சொத்தின் மதிப்பையும், பாத்தியதையையும் அடிக்கடி யறியவும் அ[illegible]தைப்பாதுகாக்கவும் முதலாளி சிரமப்பட்டுப்பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த ஆதாரவிற்கு நாணய விலை மிகவும் குறைவுதான். முதலாளிக்கு ரொக்கம் வேண்டிய காலத்தில் அவைகளெல்லாம் ஸ்தாவரங்களாயிருப்பத[illegible]ன் எளிதில் பணம்பெயரும்படி செய்யக்கூடி



யவைகளாயில்லையென்று தெரிய வருகிறது. நபர் நாணய உத்திரவாதமோ என்றல் முதலாளிக்குசௌகரிமாயிருப்பதுடன் கடன் புள்ளிக்கு அநுகூலத்தை விளைக்கக்கூடியதாகவுமிருக்கிரது. ஒழுங்காக ஏற்பாட்டிற்கு வந்தநிலைமையில் அதற்குசிக்கனம் முன் ஜாக்கிரதையை உதவி, பரஸ்பரஉதவி இவைகளை யாதாரமாகக் கொண்டிருப்பதால் பாதுகாப்புக்குறிய சௌகரியங்கள் பொருந்தினதாகவுமிருக்கிறது.

சிக்கனத்தை தூண்டுகிறது:—சிக்கனத்துக்கான ஏற்பாடாயிருப்பதில் நபர் நாணயத்தின் யோக்கியதை சற்றும் குன்றவில்லை. சிக்கனத்துக்கு மார்க்கமில்லாமலிருப்பதே வரவுக்குமிஞ்சி செலவிடக்காரணமாகிறது. நாணயச் சங்கத்தில் மீத்துவைப்பதற்குத் தகுந்த சௌகரியங்களை கொடுப்பதுடன் சிக்கனத்தையும் நன்றாகதூண்டியும் விடுகிறது. முன் காலங்களிலோவென்றல்மீது வைத்தகைம்முதல்களை மனிம்போன வழியிலெல்லாம் க்ஷேமித்து வைத்திருந்தார்கள். ஐக்கிய நாணயம் வந்தபிறகு பணம் நடமாடவும் பெருகவும் வேண்டி சங்கம் பொதுப்பண்டுகளுக்கு கொண்டு வந்து போடுகிறர்கள்.

3. வேறுவிதமான கூட்டுமுறைகளையும் ஏற்படுத்துகிறது நபர் நாணயத்தை பிரபலப்படுத்துவதனுல் வேறு விதமான கூட்டுறவுகளும் முன்னுக்கு வரும். ஜெர்மனி, இடலி, ஐர்லண்டு முதலிய ராஜ்யங்களில் ஐக்கிய நாணயத்தின் சரித்திரத்தைப்படிப்பதில் ஐக்கிய நாணயம் பிரபலப்பட்ட விடங்களில் முறையே மற்ற ஏற்பாடுகளும் பரவிவருகின்றன வென்று தெரிய வருகிறது. வேறு விதமான கூட்டுறவு முறைகளுக்கு ஆஸ்பதமான சாதனங்களையும் தேர்ச்சியையும் ஐக்கிய நாணய லாவாதேவி யுண்டாக்குகிறது. பண லாவாதேவியில் ஜனங்கள் ஒழுங்காக நடத்துகிறதினுல் வீட்டுக்குவேண்டிய சாமான்களை வாங்குவதற்காக அவர்கள் தாங்களே ஒன்றுகச் சேருவதும், தங்கள் முயற்சிகளின் பலன்களை ஒன்று சேர்த்து விலைக்குவிற்பதிலும், வியவசாயிகள் இன்னும் வேறு பல விஷயங்களிலும் ஒன்று சேர்ந்து வருவதும் காணப்படுகிறது. அதிக மேம்பாடு பெற்று வேறுவிதமான கூட்டுறவு முறைகளுக்கு நாணய லாவாதேவிதான் அஸ்திவாரமென்று சொல்லவேண்டும். ஆகவே அதன் ஆதாரங்களை எவ்வளவு மட்டும் பலப்படுத்தலாமோ அவ்வளவுக்கவ்வளவு மேற்கட்டிடங்களை தாங்கமுடியும்.

4. சீர்திருத்தம்:—நடவடிக்கையைத் திருத்தம் செய்யும் விஷயத்தில் தான் ஐக்கிய நாணயம் மேன்பட்டு வரவா விசேஷபிரயோஜனத்தை யடைகிறது. கூட்டாக உழைப்பதற்காக ஜனங்களை ஒன்று சேர்ப்பதினலேயே, அவர்கள் மனதில் சுய உதவியையும், பரஸ்பர சகாயத்தையும்,

சகோதர பாவத்தையும் அன்பையும் பெருக்குகிறது. பண உதவியை வேண்டியவர்களுக்கு செய்விப்பதனால் ஒரு பெரிய தனசகாயம் ஏற்படுகிறது. ஆயினும், அக்கோரிக்கையை நிறைவேற்றுவதிதற்கான பிரயத்தனம் செய்வதுடன் கூடவே வேறு அறிவும் சீர்திருத்தமும் உண்டாகின்றன. அதனால் தூண்டிவிடப்படுகிற பொறுப்பும், அதற்கு இன்றியமையாததாக வேண்டியிருக்கிற பகுத்தறிவும், முன் ஜாக்கிரதையும், பாதுகாப்பும், எச்சரிக்கையும் நமக்குள் ஏற்கனவே தங்கியிருந்த உற்சாக சக்திகளை வெளிக்கிழுக்கின்றன. தனித்தனியே சிதறிக் கிடந்த அணுத்துளிக்கள் விலை கெட்டு இருந்திருக்க தத்தம் யோக்கியதை விளங்கும்படி ஒன்று சேர்த்தவுடனே, சக்திகள் பலஒன்றாகச் சேர்வதனாலுண்டாகும் வலுவின் யோக்கியதையை யறிய இடையுண்டாகும். அதனாலேயே தங்கள் நல்ல ஆசை மேலிட்டு தங்கள் யோக்கியதையை துலங்க செய்ய வேண்டுமென்ற எண்ணமும் ஏற்படும் ஒற்றுமையின் குணங்கள் வெளியாகனே அதை வேறு வழிகளில் உபயோகிப்பதற்கு ஏதுவான வழிகள் தாவே விளங்கும். தத்தம் வேலையைத் திறமையுடன் நிர்வாகிக்கும் சக்தியிருக்கிறதென்னும் அறிவுண்டாகவே பொறுப்பும், மரியாதையும், சத்தியமும் ஏறபடும்.

5. நன்னெறியின் உபயோகம்:—நாணய உத்திரவாதத்திற்கு நடவடிக்கையை சீர்திருத்தும் உபயோகம் மிகவிசேஷமானது. ஐக்கியசங்கத்தின் மெம்பர்களாக வேண்டுமானால் நபர்களுக்கு நன்னடக்கை அந்நியோந்நியப் பாதுகாப்பு, இவைகளைப் பொருத்திருப்பதென்றால் அதில்சம்பந்தப்பட்டவர்கள் நடத்தை திருந்துமென்று சொசல்லவும் வேண்டுமோ? ஒழுங்காக ஏற்பட்டு நன்றாக வேலைநடத்தும் சங்கத்தின் மூலமாக குடிகாரன் குடியை மாற்றவும், செலவாளி சிக்கனமாகவும், சோம்பேரி தொழிலாளி யாகவும் மறுதலடைந்ததாகத் தெரிய வருகிறது. அதனால் ஜனங்கள் நல்லவர்களாவது மட்டுமேயல்ல. நல்ல அபலார்களும் ஆகிறார்கள். ஏனென்றால் எல்லாரையும் கூட்ப்புகளைத் திருப்பது பொதுவேலையும் பொது நன்மையும் பொது அன்பும் என்பது எவ்விடத்தும் துலங்குகிறது. ஆகையால், நாணயத்தைப் பரவச் செய்வதிலும், அதன் பிரயோஜனங்களைப்யெங்கும் தெரிவிப்பதிலும் ஜனங்களை அதை யுபயோகிக்கும்படி செய்வதிலும் நாட்டிற்கு மிகவும் விசேஷமாக உழைப்பதாகும்.



# ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தி.

## கோவாப்ரேடிவ் சங்கங்களின் வழக்குகளை மத்தியஸ்தம் மூலமாயொழித்தல்.

பின்வரும் குறிப்பு பம்பாய் கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது:—

கூட்டு முயற்சித்தொழில் சங்கங்கள் ஏற்பட்டது முதல், ஜில்லா கோர்ட்டுகளில் அடிக்கடி வியாஜியம் செய்வதினாலுண்டாகும், தாமதம், தொந்திரவு, வீண்செலவு முதலியவைகளால், அவைகள் அவஸ்தைப்படுகின்றன. இவ்வகை தாமதத்திற்குக் காரணமிருக்கின்றது; ஆனால் ஜெயிக்கும்படியான வழக்குகளிலும்கூட, திரவிய நஷ்டம் ஏற்படுகிறதென்பதற்கு சில தகுந்த உதாரணங்கள் சொல்லகூடும். 1915௵ முடிவுவரையில், ரூ. 16,191 வசூல் செய்வதற்காக 18 வியாஜியங்கள் பாரமத்தியில் போட்டப்பட்டன. ஒவ்வொரு வியாஜியத்திலும் எதிர் வழக்குக் கிடையாது. அப்படியிருந்துங்கூட கோர்ட்டு பீஸ் ரூ. 914-ம், வக்கீல் பீஸ் ரூ. 348-ம், சங்கங்கள் செலவு செய்யவேண்டியிருந்தன. வருஷமுடிவிற்குள் தீர்மானிக்கப்பட்ட 12 கேஸ்கள் ஒவ்வொன்றிலும், வழக்காடத் தொடங்கின முதல் டிகிரியாகிறவரையில் பணத்திற்கு வட்டியொன்றுமில்லாமலும், டிகிரியான தேதி முதல் வசூல்செய்யப்படும் காலம் வரையில் தொகைக்கு வட்டி 100-க்கு 7½ வீதமென்றும் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது. பார்மத்திசங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்கப்பட்ட முதலுக்கு அதே வட்டி வீதம் கொடுத்து வந்ததினால், கோர்ட்டார், வக்கீல் பீஸ்களைத்தவிர இச்சங்கங்கள் வேறு வழிகளிலும் நஷ்டமடைந்து வந்தன. மேலும் கடன்களைத் திருப்பிக்கொடுக்க விசேஷமாய் ஆறுமாததவணை கொடுக்கப்படுகின்றது சில கேஸ்களில் டிகிரியான தேதிமுதல் தொகைக்கு வட்டியொன்றுமில்லையென முடிவு செய்யப்படுகிறது.

கோவாப்ரேடிவ் சங்கங்களுக்கும், அவைகளின் மெம்பர்களுக்குமுள்ள கேஸ்கள் மிகவும் இலகுவாயும், யாவரும் அறியத்தக்கனவாயும் தகுந்த ஆதாரத்துடன் இருக்கின்றன. ஆகையால் அவைகள் மத்தியஸ்தம் மூலமாய் ஒழிவதற்குத் தகுந்தவைகள். அவ்விதமே, கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரவர்கள் இவ்வழக்குகளை மத்தியஸ்தம் மூலமாய் ஒழிப்பதற்கு வேண்டி சில குறிப்பு விதிகளை கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்துக்கு அனுப்பியிருக்கிறார். அவைகளின் சாராம்சம் பின்வருமாறு:—

## புதிய விதிகள்.

கோவாப்ரேடிவ சங்கங்களைப்பற்றிய வழக்கானது, மெம்பர்கள் அல்லது மாஜி மெம்பர்கள், அல்லது இவர்களின் சுவான்தாரர்கள், ஆகிய நபர்களுக்கும் சங்கங்களுக்கும் அல்லது அவைகளின் உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்பட்டால். அவற்றை ரெஜிஸ்ட்ராருடைய தீர்மானத்திற்கு அனுப்பவேண்டும். அவ்வுத்தியோகஸ்தர், தானாகவே அவ்வழக்கைத் தீர்க்கவாவது, அல்லது மத்தியஸ்தர் ஒருவரை யேற்படுத்தியாவது, அல்லது கக்ஷிக்காரர் ஒவ்வொருவராலும் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்களும், தன்னால் ஏற்படுத்தப்பட்ட வொருவரும் சேர்ந்துள்ள மூன்று மத்தியஸ்தர்களாலாவது ஒழிக்கச் செய்வார்கள். மத்தியஸ்தர்கள் அநுசரிக்கும்படியாக இலகுவானவழிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களின் அபிப்பிராயம் பேதப்பட்டால், மெஜாரட்டியின் அபிப்பிராயந்தான் தீர்மானமாக நினைக்கப்படும். இத்தீர்மானத்தை ஸ்தல ஸிவில் கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தினால், அக்கோர்ட்டார் டிகிரியைப்போல் பாவிப்பார்கள்

இவ்விதம் தீர்ப்புச் செய்யப்பட்ட ஒருமாதத்திற்குள், மத்தியஸ்தர்கள் முடிவு செய்திருந்தால், ரெஜிஸ்ட்ராருக்கும் ரெஜிஸ்ட்ரார் தீர்ப்புச் செய்திருந்தால் கூட்டுமுறைச் சங்கங்களுக்கும், விவசாய இலாகாவுக்கும் டைரெக்டருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

இப்புது விதிகளில் மூன்று வெவ்வேறு விஷயமான அம்சங்களையும் அடங்கியுள்ளன. அவைகளில் ஒன்று, ரூ. 50,000-க்கு மேலான தொழில் தனத்தையுடைய பொறுப்பு வரையறுத்த சங்கங்களின் மீது தணிக்கை வரி விதிக்க, ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. இப்படி வரிவிதிப்பதானது, தகுந்த வேலைக்காரர்களான ஆடிட்டர்களை, நியமிக்க வேண்டியிருக்கும். இப்புதுச்சட்டம் வருவதற்கு முன்னமே சில சங்கங்கள் தணிக்கை விஷயமாய் செலவு செய்வதற்கு உத்திரவு பெற்றன. இரண்டாவது விதியானது ரெஜிஸ்ட்ராரவர்கள் கெடுதலாய் நிர்வகிக்கப்பட்ட. சங்கங்களின் நடவடிக்கைகளை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும் பொருட்டு, அச்சங்கங்களை மும்மூன்று மாதங்கள்தோறும் வரவு செலவுக் கணக்குகளை அனுப்பச்செய்வதாகும். கடைசி விதியானது, சில நகரச்சங்கங்களில் தோன்றியுள்ள டிவிடெண்டு அதிகமாய்ப் பெறவேண்டிய ஓர் விருப்பத்திற்குத் தடையாகும். வசூல் செய்யப்பட்ட பங்கு தனத்தின் தொகையில் நான்கில் ஓர்பங்கிற்குமேல் க்ஷேம நிதியின் தொகை உயரும் வரையில், 100-க்கு 9-வீதத்திற்குமேலும், மற்ற எந்தக்காலங்களிலும் 100-க்கு 12-வீதத்திற்கு மேலும் டிவிடெண்டு கொடுப்பதைத் தடுக்கும் விதியாகும்.



## மதராஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன்.

### சர்குலர். 1915வருஷத்து 483-வது டிஸ். நம்பர்.

எல்லா ஐக்கிய நாணயச் சங்கங்கட்கும்:—

சென்னை ப்ரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனார் வெளியிட்ட லீப்லெட் (Leaflet) நெ.1, இத்துடன் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. சென்னை கோவாப்ரேடிவ் ரெஜிஸ்ட்ரார் அவர்கள்—சங்கங்களும், கோவாப்ரேஷனிலே விருப்பமுள்ளவர்களும் ஷெ யூனியன் அபிவிர்த்தியடையுமாறு அதிலே பங்குகள் வாங்கியும் தம்மாலியன்றவேறு உதவிகளையும் புரிவார்களென மிகவும் விரும்புகிறார்.

## லீப்லெட் நெ. 1.

1. பலசங்கங்கட்கும் பொதுவாகிய ஒரு யூனியன் ஏன் வேண்டுமென்பது.—சுமார் 10 வருஷங்களுக்கு முன்பாக இராஜாங்கத்தார் கோவாப்ரேடிவ் சொஸைடீஸ் என்னும் கூட்டுத்தொழில் சங்கங்களை இந்தியா தேசத்தில் ஏற்படுத்துவதற்காக ஓர் ஆக்டை உண்டு பண்ணினார்கள். இந்த பத்து வருஷங்களில் கூட்டுறவு நாளுக்குநாள் விருத்தியடைந்து இப்போது அதிக பலப்பட்டிருக்கிறது. ஆனால் இராஜாங்கத்தார் தற்காலம் இச்சங்கங்களை பார்வையிட்டும், அதினால் நேரிடும் செலவுகளை தாமே மேற்கொண்டும் வருவது நீடித்திராது என்பதையும், இராஜாங்கத்தார் அப்பொறுப்பினின்று நாளளவில் விலகக் கருதுகிறார்கள் என்பதையும், அக்காலத்தில் ஜனங்களே அப்பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்டு சங்கங்களை ஒழுங்காக நடத்தவேண்டுமென்பதையும் நமக்கு அடிக்கடி நினைப்பூட்டி வருகிறார்கள். சென்னை ராஜதானி ஐக்கிய நாணயச்சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் அவர்களின் 1913-1914-ம்வருஷத்திய ரிபோர்டை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிய கனம் பக்ளி துரை அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—"கவர்ன்மெண்டாருக்கும் சங்கங்களுக்குமுள்ள சம்பந்தத்தை எவ்வளவு ஒழிக்க சாத்தியமோ அவ்வளவு ஒழிக்கவேண்டும். சங்கங்கள் இராஜாங்கத்தாருடையன என்று கருதப்படுமாயின் அன்றே கோவாபரேஷன் என்னும் ஐக்கியத்திற்கு நாசம் விளைந்ததாக தீர்மானித்தல்வேண்டும்." கோவாப்ரேஷன் என்பதை நாம் ஐரோப்பியர்களிடமிருந்து தெரிந்துகொண்டோம். அந்த ஐரோப்பாவிலேயே சங்கங்களை ஏற்படுத்துதல், அவைகளைப் பார்வையிடுதல், விருத்திக்குக் கொண்டு வருதல் முதலியன ஜனங்களினாலே செய்யப்படுகின்றன. அக்கவர்ன்மெண்டார் கோவாபரேஷன் அதிகமாய்ப் பரவாவண்ணம் சில சமயங்களில் ஜனங்களின் முயற்சிகளைத்தடுத்துமிருக்கிறார்கள். ஐரோப்பிய தேசங்களிலே கோவாபரேடிவ் சங்கங்கள் இராஜாங்கத்தாருடைய உதவியில்

லாமல், தாமே நன்றாய் வேலைசெய்து வருகின்றன. இதற்குக் காரணம் அங்கே, ஆங்காங்கு சென்ட்ரல் அல்லது யூனியன் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதே. இச்சங்கங்கள் பல கிராமச்சங்கங்களை தமக்கு அங்கங்களாகக்கொண்டு அவைகளின் வலிவை பலப்படுத்தியும், அவைகளில் உண்டாகும் வழக்குகளைத்தீர்க்கவும், அவைகளின் சந்தேகங்களை நிவர்த்திசெய்யவும் அவைகளுக்கு வேண்டிய அறிவை உணர்த்தவும் ஒரு பொது ஸ்தலமாய் இருப்பதல்லாமல், அவைகளின் கஷ்டங்களை கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்கவும், புதுசங்கங்களை ஸ்தாபிக்கவும், அவைகளின் கணக்குகளை பரிசோதித்து தணிக்கை செய்யவும் இவைபோன்ற பல உதவிகளைச் செய்து கூட்டுத்தொழில் சங்கங்களை வேரூன்றுவித்து இன்னும் விருத்தியடையுமாறு ஊக்கமுண்டுபண்ணுகின்றன. இவ்வித சென்ட்ரல் அல்லது யூனியன் சங்கங்கள் செய்யும் வேலைகள் இந்தியாவிலே ரெஜிஸ்ட்ரார்களாலும் அவர்களின் சிப்பந்திகளாலும் செய்யப்பட்டுவருகின்றன. ஐக்கிய நாணயச்சங்கங்களின் அபிவிருத்தியை மனதுட்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் ஐரோப்பா தேசத்தில் நடைபெறுவது போலவே இங்கும் சென்ட்ரல் அல்லது யூனியன் சங்கங்களை ஏற்படுத்தி இராஜாங்கத்தாருடைய ஊன்றுகோலை எதிர்பாராமல் சுய உதவியால் சங்கங்களை நடத்த முயல்வது உத்தமம்.

2. மேற்கண்ட நோக்கங்களுடன் இரண்டாவது மதராஸ் ப்ரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் கான்பரன்ஸ் கூடிய காலத்து இந்த ப்ரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியன் ஏற்பட்டு, 1914-ம்௵ ஜனவரி௴ 3௳ ரெஜிஸ்டர் செய்யப்பட்டது:—

நோக்கங்கள்.—ஐக்கியத்தின் முறையை தேசம் முழுவதும் பலரும் அறியுமாறு பெருஞ்சபைகளைக் கூட்டுதல், தங்கள் பிரதிநிதிகளின் மூலமாய் உபந்நியாசங்களைச் செய்தல், ஐக்கியத்தைப்பற்றி பத்திரிகை ஒன்றை வெளியிடுதல் (தற்காலம் திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்ரேடிவ் சொசைடி நடத்திவரும் கோவாப்ரேடிவ் புல்லடினை இந்த யூனியன் தாம் நடத்துவதாக அவர்களைக் கேட்டிருக்கிறார்கள்). சிறு புத்தகங்களையும், துண்டு பத்திரிகைகளையும் தென் இந்தியா பாஷைகளிலே வெளியிட்டு இலவசமாக பலர்க்கும் கொடுத்தல், இளைச்சங்கங்கட்கு பயன்படுமாறு கோவாப்ரேஷன் என்னும் விஷயமாய் வெளிவந்துள்ள எல்லாப்புத்தகங்களையும் வாங்கி ஒரு புத்தகசாலை ஏற்படுத்துதல், புதிதாய் பல வேறுவகையான சங்கங்களை ஸ்தாபித்தல், ஒவ்வொரு சங்கத்தையும் தணிக்கை செய்ய லோகல் யூனியன்களை நியமித்தல், அவசியமிருப்பின் கோவாப்ரேஷன் விஷயமாக இராஜாங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்தல், இதுபோன்ற பல வழிகளாலும் கோவாப்ரே



ஷனை விருத்திசெய்தல். ஆனால் இந்த யூனியன் இதர சங்கங்களுக்கு தானேயாவது அல்லது வேறு சங்கங்களிடமிருந்து வாங்கியாவது கடன்கொடாது.

3. அங்கத்தவர்களும் தனமும்.—5-ரூபாய் விலையுள்ள ஒரு பங்காவது இச்சென்னை ராஜதானியிலே ரெஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள எந்த சங்கமும் அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் எடுத்துக்கொண்டால் அங்கத்தவராகலாம். அதிக ஆதாயமில்லாத சங்கங்களும் சாமான்ய ஸ்திதியிலுள்ளவர்களும் அங்கத்தவர்களாக சேருதல் சாத்தியப்படும்படி பங்குத் தொகையை வருஷம் ஒன்றுக்கு ரூபா ஒன்றாக 5 வருஷங்களிலும் கொடுக்கலாம் என ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சங்கங்கள் அநேக பங்குத்தொகைகளை எடுக்கக்கூடுமாயினும் ராஜதானியிலேயுள்ள ஒவ்வொரு சங்கமும் ஒரு பங்கையாவது அவசியம் எடுக்குமென்று இந்த யூனியன் ஊக்கமாய் நம்புகிறது. நல்ல நிலையிலுள்ளவர்கள் குறைந்தது ரூ. 100 செலுத்தி போஷகர்களாவாரென்றும் யூனியன் வேண்டுகிறது. இந்த யூனியனின் மூலதிரவியம் பதினாயிரம் (10,000) பங்குகளினாலாகிய ஐம்பதினாயிரம் (50,000) ரூபாயாகும். பலர் இதில் அங்கத்தவராகச் சேர மேற்கண்ட காரணங்களுடன் இன்னும் தூண்டுதற் பொருட்டே, சிலநாட்களுக்குமுன்னே இந்த யூனியனின் மகாசபையார் பங்குத் தொகைகளின்பேரில் வருஷத்திற்கு நூற்றுக்கு வட்டி மூன்றரை கொடுத்தல் வேண்டுமென தீர்மானித்தார்கள். பங்குத் தொகையின் மூலமாய் கிடைக்கும் வட்டியின் அதிகபாகம் இவ்விதம் வட்டிகொடுப்பதினாலே செலவாகிவிடும். ஆகையால் பங்குத்தொகையை அதிகரித்தல் மிகவும் அவசியமெனத்தோற்றுகிறது. ஆரம்ப அவசரத்தில் அது முடியாவிட்டாலும் பங்குத்தொகை பூராவையும் கூடிய சீக்கிரத்தில் வசூலித்தல் வேண்டும். இதனால் வரும் லாபத்தைக்கொண்டே, யூனியன் செலவுகளையெல்லாம் நடத்தல் கூடாததாகையால், ஐரோப்பியதேசத்தில் நடந்துவருதல் போலவே, இத்தேசத்திலேயும் கோவாபரேஷனிலே பற்றுள்ள கனவான்களின் பொருள் உதவியை சிலகாலம் எதிர்பார்க்க நேரிட்டிருக்கிறது. ஆகையால் ரூ. 100 கொடுத்து போஷகர்களாக இருக்க இயலாதவர்களும் யாதேனும் பொருளுதவியைச் செய்வார்களென வேண்டப்படுகிறார்கள்.

இதில் பங்கெடுக்கவும், இதுவிஷயமாய் இன்னும் அறிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களும், இந்த யூனியன் சட்டப்புத்தகம் வேண்டுவோரும் சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெரு 23-வது நெம்பர் வீட்டிலுள்ள யூனியனின் காரியதரிசிக்கு தெரிவித்துக்கொள்ளலாம்.

# மத்தியமாகாணங்களில் தணிக்கை யேற்பாடு

மத்தியமாகாணங்கள் கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராவர்களின் பின்வரும் குறிப்பு மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும்:—

கோவாப்ரேடிவ் சங்கங்களின் 1912 ஸு ஆக்ட் 2-யில், 17 (1)-வது ஸெக்ஷன் படி, வருஷத்தில் ஒருதரமாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்கள் ஒவ்வொன்றின் கணக்குகளையும், எழுத்து மூலமாய் பொது அல்லது பிரத்தியேக உத்திரவின்பேரில் நியமிக்கப்பட்டவர்களால் தணிக்கை செய்யவேண்டியது ரெஜிஸ்ட்ராவர்களின் கடமையாகும். சங்கங்களுக்கு வரவேண்டிய கெடுத்தப்பிய கடன்களையும், சங்க ஆஸ்திக் கடன்களின் பொருமானத்தையும், நன்றாய் பரிசோதனை செய்யவேண்டும்.

இப்பொழுது இந்த மாஹாணத்தில் சுமார் 3,000 கிராமச்சங்கங்களும், ஏறக்குறைய 60 ஸென்ட்ரல் சங்கங்களுமிருக்கின்றன. கணக்குகளிலும் ஐக்கிய முயற்சியின் இலக்ஷணங்களிலும் நன்றாய்ப்பழகின ஒருவருக்கு, ஓர் கிராமச்சங்கத்தை ஜாக்கிரதையாய் தணிக்கை செய்ய சராசரி இரண்டுநாளாகிறது. தணிக்கையானது அநேக ஸ்தலத்திலாவது அல்லது அதற்கு சமீபத்திலாவது நடக்கவேண்டும். கணக்குப்புஸ்தகங்களிலும், ரெஜிஸ்டர்களிலுமுள்ள பதிவுகளை நன்றாய்ப் பரிசோதனை செய்து, வரவழைக்கக்கூடிய மெம்பர்களின் பாஸ் புஸ்தகங்களை சரிபார்க்கவேண்டும். மெம்பர்களின் சொத்து முதலியவைகள் விவரமாய் காணப்பட்ட ரெஜிஸ்டரின்படி, பொருமானம் சரியாயிருக்கிறதா வென்று ஸ்தலத்தில் விஜாரிக்கவேண்டும். விவரமான தணிக்கைக்குறிப்பை, ஒருகாப்பி சங்கத்துக்கும், மற்றொன்று ரெஜிஸ்ட்ராருக்கும், ஆடிட்டர் தயார் செய்தனுப்பவேண்டும்.

ஒரு சங்கத்தினின்று மற்றொரு சங்கத்துக்குப் பிரயாணஞ் செய்யுள் காலத்தையும், விடுமுறை நாள்களையும் நீக்கிவிட்டுப் பார்த்தால், நாராபூரவும் வேலையுள்ள ஓர் மனிதனுக்கு ஒரு வருஷத்தில் 100 சங்கத்துக்கு மேல் தணிக்கை செய்ய முடியாது.

ஸென்ட்ரல் பாங்கிகளின் வியவகாரங்கள் அதிகமாயிருத்தலால் அவைகளை தணிக்கை செய்வதற்கு அதிக காலமாகின்றது. ஒவ்வொரு பதினாயிரம் ரூபாய் தொழில் தனத்திற்கு ஒருநாள் வீதம் தணிக்கை காலத்தை உத்தேசிக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது. ஜாயிண்டுஸ்டாக் பாங்கியின் தணிக்கைக்கும், கோவாப்ரேடிவ் பாங்கியின் தணிக்கைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நம்முடைய சில பெரிய பாங்கிகள் சிலசமயங்களில் தொழிலாளிகளான ஆடிட்டர்களாலும் பெரிய பாங்கிகளின் யேஜண்டுகளாலும் கணிக்கை செய்யப்படுகின்றன. ஏராளமான



தணிக்கை வரி கொடுபடவேண்டியிருக்கின்றது; ஆனால் அத்தணிக்கைகள் ரெஜிஸ்ட்ராருக்காவது அல்லது அந்தந்த கோவாப்ரேடிவ் பாங்கிகளின்டைரெக்டர்களுக்காவது திருப்திகரமாயிருக்கிறதில்லை.

உற்பத்திச் சங்கங்களிலும், பிரிவினைச் சங்கங்களிலும், தணிக்கை விஷயத்தில் அவைகளின் வியாபாரத்திற்குத் தகுந்தபடி காலம் பிடிக்கிறது. உதாரணமாக, கோவாப்ரேடிவ் ஸ்டோரின் தணிக்கையானது பூராவாகவும் மிகவும் ஒழுங்காயுமிருக்கவேண்டுமானால் ஸாமான்களின் ஐப்தாக்களை மிகவும் நன்றாய்ப் பரிசோதனை செய்வதுடன் பழயதும் கெட்டுப்போன ஸாமான்களுக்கும் ஓர் பொருமானத்தை ஏற்படுத்தவேண்டும். பாற்சாலை விஷயத்தில் அநேக ரெஜிஸ்டர்களை பரிசோதனை செய்யவேண்டும்.

தணிக்கை திருப்தியாயிருக்கவேண்டுமானால், இப்பொழுதிருக்கும் சங்கங்களின் சங்கியை உத்தேசித்து, பூரவேலை செய்யும் ஆடிட்டர்கள் அநேகர் தேவை. இந்த மாகாணத்தில் சங்கங்களின் சங்கியை குறைவாயிருக்கும் பொழுது கவர்மெண்டு இன்ஸ்பெக்டர்கள் கணக்குகளை சோதனை செய்து வந்தார்கள்.' வியவகாரங்களும் அதிகமாயில்லை. வ்வா சங்கங்களும் அவைகளின் வியவகாரங்களும் அதிகரித்தலால், கயடிர்மெண்டு சிப்பந்திகளால் எல்லாச சங்கங்களையும் தணிக்கைசெய்யமுன்ரவில்லை.

ஆகையினால் எனக்கு முன்புயிருந்த ரெஜிஸ்ட்ரார் கவர்ன்மெண்டுஇன்ஸ்பெக்டர்களும், ஸென்ட்ரல் பாங்கிகளின் சிப்பந்திகளும் தணிக்கை, சோதனை முதலியவைகள் செய்ய வேண்டுமென்று யேற்பாடு செய்திருந்தார். சிற்சில சங்கங்கள் தொழிலாளி ஆடிட்டர்களால் தணிக்கை செய்யப்பட்டன. புது ஆக்டு அங்கீகரிக்கப்பட்ட பிறகு, அதிலுள்ள சில விதிகளின் சௌகரியங்களைக் கொண்டு, பின்வரும் சட்டத்தை கவர்ன்மெண்டார் பிரசுரிக்கும்படி ஏற்பாடு செய்தேன்:—

விதி 13.—ரெஜிஸ்ட்ராரவர்கள் தன் கீழ் உத்தியோகஸ்தரைக் கொண்டாவது அல்லது ஸென்ட்ரல் சங்கங்களின் சிப்பந்திகளைக் கொண்டாவது ஓர் ரெஜிஸ்டர் பண்ணப்பட்ட சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஏற்பாடு எடுத்துக்கொள்ள முடியாமலிருந்தால், 17-வது ஸெக்ஷன், 1-வது பிரிவின்படி, யாவர் அவ்வேலைக்கு அருகரெனதோன்றுபவரை சங்கத்தின் செலவில் நியமித்து, தனக்குத் தகுந்தவையெனத் தோன்றுகிறபடி சங்கத்தின் ஆஸ்திப் பொருமானத்தில்500-இல் ஓர் பங்குக்கு அதிகமாகாமல் தணிக்கை வரி விதிக்கலாம்.

சட்டத்தில் ஏற்படுத்தியபடி இந்த மாகாணத்தின் தணிக்கையானது பின்கூறப்படும் மூன்று வழிகளால் நடைபெற்று வருகின்றது.

1. கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்ட்டர்கள். இவர்கள் ரூ 100-லிருந்து ரூ. 200 வரையில் சம்பளம் வாங்கிக்கொண்டு 12 பேர்களிருக்கிறார்கள். வேலையானது காயமானதும் பென்ஷன் கொடுக்கக் கூடியதாயுமிருக்கிறது. வேலையில் அதிகப் பழகினவர்களையும் விசேஷமாய் பி. ஏ. பட்டதாரிகளையும் நியமிக்கிறார்கள்.

2. ஸெண்ட்ரல் சங்கங்களின் சிப்பந்திகளிற் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இச்சங்கங்களிலும் அறிந்த வேலைக்காரர்களைத்தான் நியமிக்கிறார்கள்.. இவர்கள், ரெஜிஸ்ட்ராரால் தெரிந்தெடுக்கப்பட்டு அவருடைய உத்திரவின் கீழ் மூன்று மாதத்திற்குக் குறையாமல் தங்கள் செலவிலேயே பழகவேண்டும். பிறகு இவர்கள் பெயர்களை ஓர் ஜாப்தாவிற் குறிக்கப்பட்டு, வேலைகாலிவிழுந்தோறும், அதிலிருக்கும் பெயர்களை சங்கங்களின் டைரெக்ட்டர்களுக்கு சிபார்சு செய்யப்படும். பாங்கிகளில் சம்மதத்தின் பேரில் ரெஜிஸ்ட்ரார் இவ்வேலைக்காரர்களை மாற்றுவதும், சம்பளம் உயர்த்துவதும், சிக்ஷிப்பதும், செய்து வருகிறார். ரெஜிஸ்ட்ராரைக் கேட்காமல் பாங்கியானது தன் சிப்பந்திகளை சிக்ஷிக்கிறதில்லை.

இதுவரையில் சிப்பந்திகள் விஷயமாய், பாங்கிகளுக்கும் ரெஜிஸ்ட்ராருக்கும் தகரார் யாதொன்றும் வரவில்லை. வேலைக்காரர்கள் சம்பளம் நிரம்பப் பெறுகிறார்கள். இப்பொழுது 8 பேர்கள் ரூ 100-ம் அதற்கு மேலும் மற்ற 41 பேர்கள் ரூ 50-ம், அதற்கு மேலும் சம்பளம் வாங்கி வருகிறார்கள். எல்லா ஸ்திரமான பாங்கிகளில், வேலைக்காரர்களுக்கு பிராவிடெண்டு பண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

3. தொழிலாளி ஆடிட்டர்கள் இவர்கள் முன்கூறியபடி நன் பழக்கப்பட்டவர்களும், பாங்கியிலில்லாத வருமாவார்கள். ரெஜிஸ்ட் களின் உத்தரவின்கீழ் இவர்கள் நியமிக்கப்பட்டு முன் சொன்ன படி கவர்ன்மெண்டாரால் வரிவாங்கப்பட்ட தொகையை தங்கள் பீ பெறுவார்கள்.

கோவாப்ரேடிவ் வருஷம் முடிந்தவுடன், தணிக்கை வேலையை ஜிஸ்ட்ரார் இவ்வகையார்களுள் பிரித்துக்கொடுக்கிறார். ஸெண்ட்ரல் சங் கங்கள் கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களாலாவது அல்லது வெளி ஆடிட்டர்களாலாவது தணிக்கை செய்யப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று வருஷத்திற் கொருதரம் வெளி ஆடிட்டர்கள் இச்சங்கங்களைத் தணிக்கை செய்வதில். கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்ட்டர்கள் விட்டுவிட்ட தவறுகள் வெளிக்கு வருகின்றதை நான் பார்த்திருக்கிறேன்.

இப்படித்தகுந்த மனிதர்களிடம் சங்கத்தை தணிக்கை செய்ய ஒப்புவிப்பதில் சேர்ந்தாற்போல் இரண்டு வருஷத்திற்கு ஒரே மனிதரிடம் கொடுக்காமலிருக்க ஏற்பாடு யெடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்-



பொழுது சில ஸெண்ட்ரல் சங்கங்கள், கிராமச்சங்கங்களின் மேல்விஜாரணையிலும் நிர்வாகத்திலும் சம்பந்தமில்லாத பூரா வேலையுள்ள ஆடிட்டர்களை நியமித்து வருகின்றன. தணிக்கை ரிபோர்ட்டுகளின் பேரில் ஏற்பட்ட உத்திரவுகளை, ஸெண்ட்ரல் சங்கங்கள், தங்கள் சிப்பந்திகளைக் கொண்டு பஞ்சாயத்தாருக்கு நன்கு விளக்கி அவைகளை அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவேண்டியது. இதுவரையில் வெளி ஆடிட்டர்களுக்கு பீஸ் வசூல் செய்வதில் யாதொரு கஷ்டமும் நேரிடவில்லை. இப்பொழுதிருந்துவரும் தணிக்கை, பரிசோதனை விஷயமான ஏற்பாட்டில், ஸெண்ட்ரல் சங்கங்கள் மிகவும் ஒத்துழைத்து வருகின்றன. கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்ட்டர்கள் தங்கள் ஸர்க்கிளில் (சம்பளத்துக்காவது அல்லது கௌரவத்துக்காவது) உழைக்கும் வேலைக்காரர்களைத் தெரிந்து வைத்துக்கொண்டும் அவர்களுக்கு நிர்வாகம், கணக்கு முதலியவைகளில் உதவி புரிந்தும் வரவேண்டும். இனிமேல் ரெஜிஸ்ட்ராரால் ஸர்ட்டிபிகேட்டு வாங்கப்பட்ட தொழிலாளி ஆடிட்டர்கள் இந்த மாகாணத்தில் ஏராளமாக ஏற்படுவார்களென்றும், அவர்கள் குறிக்கப்பட்ட பீஸுக்கு ஸெண்ட்ரல் சங்கங்களை தணிக்கை செய்வார்களென்றும் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் உத்திரவுகளும் யுக்திகளும் அனுசரிக்கப்பட வேண்டி எந்த விஷயத்திலும் தணிக்கை ரிபோர்ட்டுகள் ஸெண்ட்ரல் சங்கங்களுக்கு அனுப்பப்படவேண்டியது.

இனிமேல் ரெஜிஸ்ட்ராரின் சிப்பந்திகள் தணிக்கை செய்ய வேண்டுமென கோவாப்ரேட்டர்கள் விரும்புவார்களெனத் தோன்றவில்லை. கவர்ன்மெண்டார் வகித்து வரும் திரவிய நஷ்டமும் இதற்கனுகூலமாய்ப் பேசுகின்றன. ரெஜிஸ்ட்ராரின் கீழ் வேலை செய்யும்படியான தொழிலாளி ஆடிட்டர்கள் மூலமாய் தணிக்கை செய்தல்தான் மிகவும் உத்தமமாகும். இதைத்தவிர வேறொரு வழி மத்தியமாகாணங்களிலும், பேகார், ஒரிஸாவிலும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அவ்வழியைப்பற்றி இம்மாகாணங்களிலுள்ள கோவாப்ரேட்டர்களுடன் கலந்து தர்க்கித்துப்பேசினேன். அதாவது, பிரொவின்ஷயல் கோவாப்ரேடிவ் யூனியனால் தணிக்கை செய்வது. முதற் பார்வையில் அது மிகவும் நன்றான ஏற்பாடென்று தோன்றுகிறது. ஆனால் இந்த மாகாணத்தில் அது பலிப்பது மிகவும் சிரமம். இரண்டு விதமான கஷ்டங்களிருக்கின்றன. முதலாவது, கௌரவத்துக்குழைக்கும் கனவான்கள் அடிக்கடி கூட்டம் கூடுவது அரிது. இரண்டாவது, இம்மாதிரி யூனியனின் தணிக்கைக் குறிப்பிலுள்ள உத்திரவுகளையும், யுக்திகளையும் சங்கங்கள் அனுஷ்டிப்பது அரிது, வருஷங்கள் தோறும் எழுதியனுப்பிய தணிக்கைக் குறிப்புகளின்படி சங்கங்கள் நடக்காமலிருந்தால், தணிக்கை செய்வது வீணே! பிரொவின்

ஷியல் யூனியன் அனுப்பிய தணிக்கைக் குறிப்பை சங்கங்கள் கொஞ்சமுங் கவனியாதென்றது யென்னுடைய அபிப்பிராயம்.

ஸெண்டரல் பாங்கியின் உத்தரவின் கீழ் சங்கங்களின் தணிக்கை நடப்பதில் அநேக தடைகளிருக்கின்றன. ஸெண்ட்ரல் பாங்கியானது கிராமச் சங்கங்களுக்கு கடன் கொடுத்தும் சங்கங்கள் அப்பாங்கியில் பங்குதாரர்களாயுமிக்கின்றன. இவைகளுக்குள் இப்படி ஓர் சம்பந்தமிருப்பதால், தவறுகளை மறைப்பதற்கிடமுண்டு. ஜில்லா பாங்கிகள் தங்களைச் சேர்ந்துள்ள சங்கங்களைத் தணிக்கை செய்யவேண்டுமென்பது யெனது அபிப்பிராயம். ஜில்லா பாங்கிகளில் தனி நபர்களும், சங்கங்களும் மெம்பர்களாயிருப்பதால், சங்கங்களின் கெடுதல்கள் வெளிக்கு வந்துவிடும். மேலும் ஒழுங்காயிருந்து வரும் சங்கங்கள் ஒழுங்கு தப்பியவைகளை சற்று கவனிக்கவும் ஒருவிதமான பொறுப்பிருக்கின்றன. வேறு பெரிய தவறுகள் வந்தால், தம்முடைய சிப்பந்திகளாலாவது அல்லது ஜில்லா உத்தியோகஸ்தர்களாலாவது, ரெஜிஸ்ட்ராரவர்கள் அதை அறியாமலிருப்பதரிது.

ஆகையால் தணிக்கை செய்த பிறகு கொடுக்கப்படும் யுக்தங்களை தணிக்கையைப்போல் முக்கியமாகக் கருதி அனுஷ்டிக்கவேண்டும். இதை யனுஷ்டிக்கச் செய்யவேண்டிய வழி ஜில்லா பாங்கியினாலேயொழிய, வேறொன்றினாலுமில்லை. ஜில்லா பாங்கியானது அவ்விதமேற்பாட்டிற்குத் தகுந்தபடி நிர்மாண மாகவேண்டும்.

---

## கிராம வசதிகளை விசாலப் படுத்துதல்

பின்வரும் சாராம்ச மடங்கிய கவர்ன் மெண்டு உத்திரவு 1915௵ மார்ச்சு மாதம் 17-ம் தேதி, நீ. 690. ரிவினியூ பிரசுரிக்கப் பட்டிருக்கிறது:—

1. சென்ற பிப்ரவரி மாதத்திற் கூடிய சட்ட நிரூபண சபையில் பிரஸ்தாபித்தபடி, இந்த ராஜதானியில் ஜன நெருக்கமாயுள்ள ஜில்லாக்களில் கிராம குடியிருப்பு வசதிகளை அதிகமாயேற்படுத்த, டிப்டி கலெக்டர் மிஸ்டர் K. S. ஸ்ரீனிவாஸாசாரி அவர்களை ஆறு மாதத்திற்கு நியமனம் செய்திருக்கிறார்கள்.

2. திருநெல்வேலி, ராமனாதபுரம், தென்னார்க்காடு, கோயமுத்தூர், கிருஷ்ணா, இந்த ஜில்லாக்களில் 10, 000 க்குமேல் ஜனத்தொகை யடங்கிய கிராமங்களதிகமாயிருக்கின்றன. ராமனாதபுரத்தில், ஜமீனின் கிராமங்களிலிருப்பதால், அதைப்பின்பு யெடுத்துக் கொள்ளலாம். கோயமுத்தூரில் ஜனவிருத்தி யதிகமில்லாததினால் அதையும் இப்பொழுது விட்டு



விடலாம். ஆகையால் பாக்கியுள்ள மூன்று ஜில்லாக்களில் இப்பொழுது இந்த ஆபிசர் மேற்கூறிய விஷயமாக வேலை செய்வார்.

3. இவ்வாபீஸர், ஜில்லா கலெக்டர்களையும், டிவிஷனல் ஆபீஸர்களையும் ஸ்தல கிராமவாசிகளின் பிரதி நிதிகளையும் தீவரமாய் கலந்துகொண்டு வேலைசெய்ய வேண்டிய தவசியம், லாண்டு அக்குவஸிஷன் ஆக்ட்டின் படி, கவர்னர்மெண்டார் பூமியை வாங்கி அதை பிளாக்கு களாகப் பிரித்து வாங்கின விலைக்குக் கொஞ்சம் அதிக தொகைக்கே விற்கவேண்டும். யூனியன் பஞ்சாயத்திருக்கு மிடங்களில் அதின் உதவியை உபயோகப் படுத்தவேண்டும். அப்படியில்லாவிடங்களில், பூமியை வாங்கி விற்பதற்கு கோவாப்ரேடிவ் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். கவர்ன் மெண்டார் இவ்விஷயத்தில் தங்களுக்கு லாபம் வரவேண்டுமென்றெண்ணவேயில்லை. ஆனால் இந்த ஆபீசர், அவர் சிப்பந்தி, இவர்கள் சம்பளத்தைத் தவிர வேறொன்றும் தாங்கள் பொறுக்க மாட்டார்கள்.

---

## கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் கோவாப்ரேடிவ் சங்கங்களும்

29-3-15 இல் வெளியிடப்பட்ட G. O. No. 484

1904௵த்தில் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களின் நடப்புக்கு ஏற்பட்ட விதிகளில், 11-ஆவதில் ஸ்தலவிஷயமாக உண்டாக்கப்பட்ட மூன்றுவது பிரிவினை நீக்குப்பதிலாக பின்வருபவனவற்றை திருத்திக்கொள்க:

கோவாப்ரேடிவ் டிபார்ட்டுமெண்டில் வேலைசெய்துவரும் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களைத்தவிர, மற்ற யெல்லாகவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களும் விவசாயச் சங்கங்களல்லாத மற்றவைகளில் (ஸெண்ட்ரல்பாங்கிகளும் சேர்ந்துள்ளன) மெம்பர்களாகலாம். ஆனால் அவர்கள் அச்சங்கங்களின் உத்தியோகஸ்தாகவாவது, அல்லது அவைகளை நிர்வாகஞ் செய்யும் கமிட்டியில் மெம்பராகவாவ திருக்கக்கூடாது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கென்று பிரத்தியேகமாய் ஏற்படுத்திய சங்கத்தை அவர்கள் நிர்வகிக்கலாம். கோவாப்ரேடிவ் டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கென்று பிரத்தியேகமாய் ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்தில் மாத்திரம் மெம்பர்களாகி அதை நிர்வகித்தும் வரலாம்.

---

## 47-வது பிரிட்டிஷ் கோவாப்ரேடிவ் காங்கிரஸ்

சென்ற மேமாதத்தில் லீஸ்டர் என்னும் நகரத்தில் 47-வது பிரிட்டிஷ் கோவாப்ரேடிவ் காங்கிரஸானது நடைபெற்றது. அங்கு 1,500

க்கு மேலான டெலிகேட்டுகளும், அநேக கனவான்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். ஐரோப்பாதேசத்தில் யுத்தம் மிகவும் கடுமையாய் நடந்து வருவதால் மற்ற வெளியிடங்களிலிருந்து பிரதிநிதிகள் இக்காங்கிரஸுக்கு வரவில்லை. மிஸ்டர் பாஸ்டேர்டு என்பவர் அக்கிராசனம் வகித்தார். மிஸ்டர் W. J. டேஸ் என்பவர் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் ஐக்கிய இயக்கத்தைப்பற்றி ஆரம்ப முதல் இப்பொழுதிருக்கும் நிலைமை வரையில் ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். ராக்டேல் பயனியர்ஸ் ஏற்படுவதற்கு முன்னமே ஏழைகூலிவேலை செய்பவர்களின் கஷ்ட ஸ்திதியைப்பற்றியும், அப்பொழுதிருந்த உணவுப்பொருள்களின் விலை அதிகத்தைப்பற்றியும் நன்குவிவரித்தார். இங்கிலாந்தில் மிகவும் பிரபலப்பட்டுவரும் கோவாப்ரேடிவ் ஹோல்ஸேல் ஸொஸைடியின் வளர்ச்சியைப்பற்றி பின்பு பேசினார். ஸ்காட்லாந்திலும் இம்மாதிரிப் பெரிதான சங்கமொன்றிருக்கிறது. ஹோல்ஸேல் ஸொஸைடிகளின் பங்குமுதல் $3\frac{3}{4}$ கோடியாகும்; கடன் தொகையும் டிபாஸிட்டுகளும் சேர்ந்து சுமார் ரூ 12 கோடி; க்ஷேமநிதியின் தொகை ரூ. 4 கோடி. இவைகளிலேயே பாங்கிங்கு டிபார்ட்டுமெண்டிருக்கிறது. ஏராளமான பணம் லேவாதேவி செய்யப்படுகின்றன, எதிரி தோற்றுப்போய் நமக்கு நியாயம் கிடைக்கும் வரையில் யுத்தம் செய்யவேண்டு மென்றும, தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள்களை தாங்களே நேரில் வரவழைத்து கைவசம் பண்ணப் பிரயத்தனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், சங்கங்களுக்குள் ஏதாவது தகரார்கள் வந்தால், மத்தியஸ்தம் மூலமா யொழிய வேண்டுமென்றும், கங்காரஸில் முக்கியமாய் தீர்மானிக்கப்பட்டன.

அநுபந்தம்

# பம்பாய் மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸு

1914௵ ஆகஸ்டுமீ 26உ பூனாவில் ஆனரபில் ஸர். ரிச்சேர்டு லாம்ப் துரையவர்களின் அக்கிராசனத்தின் கீழ், பம்பாய் மாகாண கான்பரென்ஸு நடைபெற்றது. வெவ்வேறு ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர்.

## தொழில்களை விருத்திசெய்ய சோதனை செய்தல்

படிக்கப்பட்ட முதல் வியாசத்தின் சாராம்சமாவது, கிராமத் தொழில்களின் அபிவிருத்தியின் பொருட்டு, எவ்விடங்களில் தொழில்கள் செய்து வருவனவென்றும், தொழில்கள் நவீனமாய் ஏற்படகூடிய ஸ்தலங்களையும் கவர்ன்மெண்டார் சோதனைசெய்யவேண்டுமென்றும், அதற்கு தொழில் இலாகா டைரெக்டர் ஒருவரை நியமிக்கவேண்டுமென்பது.

ரெஜிஸ்ட்ராரவர்கள், இவ்விஷயமாய் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் அங்கங்கே கிராமத்தொழில்களைப் பற்றி சோதனை செய்திருக்கிறார்களென்றும், ஆனால் அவர்கள் இம்முறையில் அதிகத்தேர்ந்தவர்களில்லையாதலால் தொழில்களையேற்படுத்த அநுபோகமில்லை யென்றும், ஆனால் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் தீர்மானமானது, ஐக்கிய நாணயச் சங்கத்தின் உதவியால் ஜனங்களின் படிப்பின்மை, தொழிலிற் குறிய பிரத்தியேக அறிவின்மை, கடன், இவைகளை நீக்கும் வழிகளைக் காட்டவில்லை யென்றும், கூறினார்.

அதற்குள் அக்கிராசனாதிபதி, இவ்விஷயமான விவாதம் கூட்டுமுறைத்தொழிலின்றும் வரவர ஒதுங்கிப்போவதால். இவ்வியாசம் ரிகார்டு செய்யப்படுமென்று, கான்பரென்ஸாரை மற்ற விஷயங்களை விவாதிக்கச் செல்லவேண்டிக்கொண்டார்.

## ஜில்லா பாங்கிகளும், யூனியன்களும்.

ஆனரபில் ஸர். வித்தல்தாஸ். டி. தாக்கர்ஸே அவர்கள், ஜில்லாபாங்கிகள், யூனியன்கள், இவைகளுக்கும் பம்பாய் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கிகளுக்குமுள்ள சம்பந்தங்களைப்பற்றி, ஓர் வியாசம் படித்தார். பம்பாய் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கி ஏற்படுத்தபட்ட நோக்கம், ஐக்கிய கிராமச் சங்கங்களை மேல்விசாரணை செய்யவும், ஸென்ட்ரல் பாங்கியி

லிருந்து கடன் பெறுதற்கு சௌகரிய முண்டாக ஜில்லா யூனியன்கள் ஏற்படுத்தவு மாகும்.

மிஸ்டர் வல்லேகார், யூனியன்களுக்கு வேண்டும் தொழில் தனம் மிகவும் அதிகமாயிருக்கிறதென்றும், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளின்படி சங்கங்கள், யூனியன்களையும், ஸெண்ட்ரல் பாங்கிகளையும், மிகவும் சார்ந்திருக்க வேண்டுமென்றும், மேற்கூறிய பிரேரேபணையை மறுத்துப்பேசினார். ஆனாபில் மிஸ்டர் ராதா அவர்கள் பிரேரேபணையைத்தாக்கிப் பேசும்பொழுது ஸெண்ட்ரல் பாங்கியானது கடன் கொடுக்கும் தொகைக்கு 100-க்கு $6\frac{1}{2}$ விகிதம் வட்டி வாங்குவததிகமென்று கூறினார். ஸர் வித்தல் தாஸ் தாக்கர்ஸே இவர்களுக்குத் தகுந்த பதில் சொன்ன பிறகு, அவ்வியாசம் ரிகார்டு செய்யப்பட்டது.

ஐக்கிய நாணய யூனியன்.

பிரொவஸர் O. V. முல்லர் அவர்கள் பம்பாயில் ஓர் ஐக்கிய நாணய யூனியன் ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தைக் குறித்து ஓர் வியாசம் வாசித்தார். பின்வரும் தீர்மானம் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது:—இக் கான்பரென்ஸானது ஏற்படக்கூடிய ஐக்கிய நாணய யூனியனின் இலக்ஷணங்களை அங்கீகரிப்பதுடன் இம்மாதிரி யூனியன் ஒன்று பம்பாயில் ஏற்படுத்தும்படியாக தகுந்த சௌகரியங்களை உதவும்படி கவர்ன்மெண்டாரை வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறது.

**மறுநாள்.**

மிஸ்டர் G. K. தேவதாரவர்கள், பம்பாயிலும், இன்னும் இதர பட்டணங்களிலுமுள்ள கூலிவேலை செய்பவர்களின் கடன்தீரும் மார்க்கங்களைப்பற்றி ஓர் வியாசம் படித்தார். பின்வரும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது:—இக்கான்பரென்ஸானது மிஸ்டர் தேவதார் கூறியவழிகளை அங்கீகரித்து, தனி நபர்கள் செலுத்தும் பணத்தொகையளவு மூன்று வருஷத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் பம்பாய் முன் கடன் தீர்க்கும் கம்மிட்டியாருக்கு உதவும்படி, கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

கூட்டுமுறையிற் பாற்சாலை.

கூட்டுமுறையிற் பாற்சாலைகள் ஏற்படுத்துவதை உத்தேசித்து, தாகல் செய்த கம்மிட்டியார் ரிபோர்ட்டின் சாராம்சம் பின்வருமாறு:—ஐக்கிய முறையிற் பாற்சாலைச் சங்கங்களை ஸ்தாபனஞ்செய்யத் தகுந்த இடங்களை, விவசாய இலாகாக்காரர்கள் தேர்ந்தெடுத்தும், அவ்விடங்களில் பால் உற்பத்தி, விற்பனைக்குறிய சௌகரியங்களையும், நன்கு தெரியப்படுத்த வேண்டும். நெசவுக்காரர்களது சங்கத்திற்கும் விதைச் சங்கத்திற்கும் கவர்ன்மெண்டார் கடனுகப் பண முதவுதல் போல், இச்சங்கத்திற்கும் உதவ கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும். முனிசிபாலிட்டிகள் இவற்றிற்குக் கொடுக்கவேண்டிய முக்கிய உதவியானது, சுகாதாரமுள்ள வாசஸ்தலமும், மேல்விஜாரணை செய்தலுமே!



அக்கிராசனாதிபதியின் உபந்நியாசம்

அக்கிராசனாதிபதியவர்கள் கான்பரன்ஸாருக்கு வந்தனமளித்த பிறகு, ரெஜிஸ்டாராவர்களின் சிரமமுள்ள வேலையைப்பற்றி மிகவும் புகழ்ந்து, சிறுகாலத்திற்குள் கான்பரென்ஸ் நடவடிக்கைகள் முடிவுபெற்றதைக் குறித்து சந்தோஷமடைந்தார். ஐக்கியமுறைபாற் சாலைகளை ஏற்படுத்த தீர்மானித்ததாகவும், ஆனால் மிகவும் சிரமமுள்ள வேலையாதலால் பொறுமையையாய் பாடுபடவேண்டுமென்றும், கௌரவத்திற்கு உழைக்கும் கனவான்கள் வேலை செய்யக்கூடிய வெவ்வேறு மார்கத்தையும், சொன்னார். அவனைவருக்கும் வந்தனமளித்தபிறகு கான்பரென்ஸு கலைந்தது.

---

# மைசூர் மாகாண கான்பரென்ஸு

## யுவராஜாவின் பிரசங்கம்

நான்காவது மைசூர் மாகாண கான்பரென்ஸு, செப்டம்பர் மாதம் 22தேதியில் ரெங்காச்சார்லு மெமோரியல் ஹாலில், கூடிற்று. அப்பொழுது ஸ்டேட் உத்தியோகஸ்தர்களும், அநேக பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டுமுறைச் சங்கங்களின் ரெஜிஸ்டரார். மிஸ்டர் M. A நாராயண அய்யங்காரவர்கள். யுவராஜாவை நந்தமொழிகளால் மரியாதையுடன் வரவேற்றுக்கொண்டார். யுவராஜா மறுமொழியின் சாராம்சம் பின்வருமாறு:—

இக்கான்பரென்ஸைத் திறக்க என்னைக் கேட்டுக்கொண்டதற்கு நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். எல்லா தற்கால இயக்கங்களில் மிகவும் முன்னேற்றமாகிய கூட்டுமுறை யியக்கத்திற்கு நீங்கள் தலைவர்களாயிருப்பதால், உங்கள் வேண்டுகோளுக்கு இணங்க நான் சந்தோஷப்படுகிறேன்.

நான் முதல் மாகாண கான்பரென்ஸைத் திறந்து சரியாய் மூன்று. வருஷகாலமாகிறது. இங்கு விஜயம் செய்திருக்கும் கூட்டத்தைப்பார்க்கின், 1911௵த்திய கான்பரென்ஸு மிகவும் சிறியதென்றே சொல்ல வேண்டும். ஆனால் அப்பொழுது வந்துள்ள கான்பரென்ஸாரின் உற்சாகமும், மனப்பூர்வமாயுழைக்கும் ஆவலும் இன்னும் என் ஞாபகத்திலிருக்கின்றது. நீங்கள் இவ்வளவுதூரம் அபிவிருத்தி யடைந்திருப்பதைப் பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். 1911௵த்தில், 10,107 மெம்பர்களடங்கிய, ரூ. 3, 86,650 தொழில்தனத்தையுடைய 140 சங்கங்

களிருந்தன. மொத்த லேவாதேவியின் தொகை ரூ. 34,83,955. ஆனால் இப்பொழுது, உங்கள் நிலைமையானது 4 மடங்கு அதிகமாயிருக்கிறது. 40,500 மெம்பர்களடங்கிய ரூ. 21,47,340 தொழில் தனத்தையுடைய 543 சங்கங்களிருக்கின்றன. இப்பொழுது நடந்துவரும் லேவாதேவியின் தொகை ரூ. 96,28,522 மைசூரிலுள்ள ஐக்கிய முயற்சிக்காரர்கள் மிகவும் சிரத்தை யெடுத்துக்கொண்டு உண்மையுடன் வேலைசெய்யாமலிருந்தால், ஐக்கியமுயற்சி இப்படி அபிவிருத்தி யடைந்திராது.

### கூட்டு முயற்சியைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டின் தீர்மானம்.

கூட்டு முயற்சியைப்பற்றி பிரசுரிக்கப்பட்டிருக்கும் இந்தியாகவர்ன்மெண்டின் தீர்மானத்தைப் படித்துப்பார்த்தால், கூட்டுமுறையானது இந்தியாவில் ஏற்பட்ட வருஷமுதல் இதுவரையில் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. கூட்டுமுறைக்குத் தாயிடமாகிய ஜர்மனியிலும் 30 வருஷகாலம் கஷ்டப்பட்டு வேலைசெய்த பலன் 30 சங்கங்கள் தான் ஏற்பட்டன. ஆனால் இந்தியாவில் 10 வருஷத்திற்குள் 12,500 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இனிமேலும் இச்சங்கியை என்றைக்கும் குறைவடையாது.

### மைசூரில் ஐக்கிய முறையின் வளப்பம்

மைசூரில், 140 ஜனங்களுக்கு ஒரு கூட்டு முயற்சிக்காரர் விகிதமிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் 400 ஜனங்களுக்கு ஒருவரிருக்கிறார். 60 லக்ஷம் ஜனதொகைக்கு, 40,000 மெம்பர்களுள்ள 543 சங்கங்கள் இங்கு இருக்கின்றன. ஆனால், சென்னை இராஜதானியில் 40 லக்ஷம் ஜனத்தொகைக்கு, 100,000 மெம்பர்கள் சேர்ந்துள்ள 1300 சங்கங்களும், பம்பாய் இராஜதானியில் 26 லக்ஷம் ஜனதொகைக்கு 67,000 மெம்பர்களடங்கிய 698 சங்கங்களு மிருக்கின்றன. இதற்கடுத்தபடி, சுதேச ராஜியங்களில் கூட்டுமுறையில் விமரிசையாயுழைத்து வருவது, பரோடா தேசம். அங்கே 7,000 மெம்பர்கள் சேர்ந்துள்ள 225 சங்கங்களிருக்கின்றன.

மைசூர்ச் சங்கங்களின் தொழில்தனம் சராசரி ஒவ்வொரு மெம்பருக்கும் ரூ 53, தான் ஏற்படுகிறது. ஆனால் இந்தியாவில், அதேபிரகாரம் ரூ. 100 ஏற்படுகிறது. இக்குறைவு, மைசூரில் பணமில்லாததினாலல்ல. ஆனால் மிகவும் ஜாக்கிரதையாய் முன்யோஜனையுடன் வேலைசெய்வதால் நேரிடிருக்கிறது. இந்தியாவில், மெம்பர்களின் பங்குத்தொகையும், டிபாஸிட்டுகளும் சேர்ந்து மொத்த தொழில்தனத்திற்கு 100 க்கு 23 விகிதமாகிறது. ஆனால், மைசூரில் இத்தொகைகள் சேர்ந்து 100 க்கு 57 விகிதமாயிருக்கிறது. நீங்கள் இனிமேல் வெளியிலிருந்து டிபாஸிட்டுகள் விழும்படி செய்து, மெம்பர்களுக்கு அதிகப்பிரயோஜன மடையும்விதம் சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டியது.



### ரயத்துகளின் கடன்கள்

உங்கள் மெம்பர்கள் விசேஷமாய் விவசாயிகளா யிருக்கின்றார்கள். அவர்கள் கிராம ஸாவகாரிகளிடமிருந்து கடன் இதுவரையில் நிரம்ப வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். முன்னால் ஏற்பட்டிருக்கும் இக்கடன்களை நீக்கினாலொழிய, சங்கங்களினால் அடையக்கூடும் அநேகவித சௌகரியங்களை ரயத்துக்கள் பெறமுடியாது. இவ்விழியில் நீங்கள் கொஞ்சம் பாடுபட்டிருக்கிறீர்கள். மெம்பர்களின் முன்கடனைத்தீர்க்க, 80 சங்கங்கள் ஏற்கனவே ரு. 4,50,000 கடன் வாங்கியிருக்கின்றன. இம்முறையில், பாக்கியிருக்கும் 400 சங்கங்களும் மிகவும் சுறுசுறுப்பாய் உழைக்குமென்று நம்புகிறேன்.

### இயற்கையுள்ள திரவிய சாதனங்களை அபிவிருத்தி செய்தல்

மைசூர் கவர்ன்மெண்டானது தேச திரவியசாதனங்களை அபிவிருத்தி செய்வதில் இடைவிடா முயற்சி யெடுத்துக்கொண் டிருத்தலை நீங்கள் அறிந்திருக்கலாம். ஜாயிண்டுஸ்டாக் கம்பெனிகள் செய்யும்வியாபாரங்களையெல்லாம் நீங்கள் ஐக்கிய முயற்சி மூலமாய்ச் செய்ய நினைக்கிறீர்கள். ஆனால் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவே டும்! எந்த வியாபாரங்கள், அதிகத் தொழில் தனத்தையும், சாதுரியமான வேலைக்காரர்களின் உதவியையும், துணிவையும் விரும்புகிறதோ, அவைகளை நாம் கூட்டுமுயற்சியால் செய்யக்கூடாது. கூட்டு முயற்சியின் முக்கிய நோக்கம், எந்த வழியிற் சென்றால் நிச்சியமான லாபகரம் மெம்பர்களுக்குக் கிடைக்குமென்று உறுதியாய்த் தோன்றுகிறதோ, அவ்வழியிற்தான் விபாபாரம் செய்ய வேண்டும். கொஞ்சமாவது அபாயகுறியை காட்டுவதற்கு இடமிருந்தால், அவ்வழியிற் செல்லக்கூடாது. ஆனால் மைசூரிலுள்ள திரவிய அபிவிருத்தி விஷயத்தில் தலையிட்டு உழைப்பதில் இவைகள் இடஞ்சலாயிராது. உங்கள் முக்கிய நோக்கத்தையும், வியாபாரத் தன்மையையும், உற்சாகத்தையும், ஐக்கிய முறையில் விவாசயத்தை ஓங்கி வளர்ப்பதில், பிரயோகிக்கலாம். இப்பொழுது ஐரோப்பிய விவசாயிகள் அடைந்திருக்கும் உன்னத நிலைமைக்குக் காரணம் விவசாயத்தை கூட்டு முயற்சியில் நடத்துவதினால் தான்.

### கவர்ன்மெண்டாரின் பொறுப்பு.

ஜனங்களின் க்ஷேமத்தை முன்னிட்டிருப்பதால் கவர்ன்மெண்டார் எப்பொழுதும் தங்களாலியன்றமட்டும் இம்முறையைப் பாதுகாத்து வருகிறார்கள். சங்கங்களுக்கு, ஏராளமான பண உதவிகள் செய்யமுடியாமற் போனாலும், நியாயமாய் வேண்டிய உதவிகள் புரிய எப்பொழுதும்போல் பொறுப்பாயிருக்கிறார்கள்.

## கோவாப்ரேடிவ் யூனியன்கள்.

இப்பொழுதிருக்கும் நிலைமையில், பணம் உதவி செய்வதற்கும், மேல் விஜாரணைக்கும், யூனியன்களை ஸ்தாபித்தல் மிகவும் அவசியம். யூனியனானது கிராம நாணயச் சங்கத்திற்கும், ஸென்ட்ரல் பாங்கிகளுக்கும் மத்தியிலிருந்துகொண்டு விவகாரங்களை நடத்துகிறது. யூனியன்கள் அதிக விசாலித்து இல்லாமையால், தங்களைச் சேர்ந்துள்ள சங்கங்களினது நடவடிக்கைகளை நன்று யறிந்துவரும். அடிக்கடி சோதனை செய்துவருவதால், தப்பிதங்கள் அப்பொழுதுக்கப்பொழுதே திருத்தப்பட்டு, ஸென்ட்ரல் பாங்கியின் பொருட்டு, ஸ்தலச் சங்கங்களுக்கு ஆலோசனை சொல்லியும், மேல் விசாரணை செய்தும் வரக்கூடும். கிராமச்சங்கத்தைக் காட்டிலும் இது பெரிதாதலால் வேண்டிய மூலதனம் சீக்கிரத்தில் சேரக்கூடும். அப்படி அதற்குப் பணம் மிகவும் தட்டாயிருந்தால், ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம். அடிக்கடி கான்பரென்ஸுகள் கூடும் வழக்கம் மிகவும் திருப்திகரமா யிருக்கிறது. மாகாண கான்பரென்ஸும், இவைகளுக்குதவியாக ஜில்லா, தாலூக்கா கான்பரென்ஸுகளும், வருஷந்தோறும் நடைபெறவேண்டும்.

## அக்கிராசனாதிபதியின் உபந்நியாசம்.

அக்கிராசனாதிபதி, மிஸ்டர் M. கார்தராஜ் அர்ஸ் அவர்கள் உபந்நியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

நம் ஏழை அபலார்கள் வெளியிற் பிச்சை புகாமல், தங்களுக்குள் ஐக்கிய முறையில் சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்ளுதலால், அநுபவித்துவரும் கஷ்டங்களை நிவர்த்தித்துக்கொள்ளலாம். ஏழைகளுக் குதவிசெய்ய எண்ணமுள்ள மேன்மையோர் இவ்வழியில் இவர்களுக் குதவிசெய்தால்தான், ஸ்திரமாய் தரித்திரம் நீங்கிவிடும். இம்மாதிரி கஷ்டங்களைத் தீர்க்கும் வண்ணம், இங்கிலாந்தில் ஓவன் என்பவரும், பிரான்ஸில் கோடின் என்பவரும், தங்களுடைய இடைவிடாத ஊக்கத்தினால், கூலிவேலை செய்யும் ஏழைகளது வருமையை நிவர்த்தி செய்தார்கள்.

## ஐக்கிய முயற்சி ஆரம்பத்தில்.

தனிகர்கள் தங்கள் பணத்தைத்தொழில்களிற் போட்டு ஏழைகளிடமிருந்து கூலிவேலையை வாங்கி அவர்களுக்கு அற்பசம்பளம் கொடுத்து மிகுதியான லாபத்தை எப்பொழுது கவர ஆரம்பஞ் செய்தார்களோ, அப்பொழுதே ஏழைகளின் நிமித்தம் அநேக காருண்ணிய புருஷர்கள் ஏற்பட்டு அவர்களுக்கு விமோசன வழிகளைத் தேடினார்கள். ரெப்பீஸன் என்பவர் ஐக்கியமுறை பாங்கிகள் ஏற்படுத்தினார். இந்தியாவின் விவசாயிகளின் கஷ்டம் இப்பேர்ப்பட்ட பாங்கிகளினால் நிவர்த்தியாயிற்று.



## இந்தியாவில்.

விவசாயிகள் கடன்காரர்களின் கொடுமைக்குட்பட்டிருந்தால், தேசத்தின் ஜனங்கள் சுபேக்ஷமாயிருக்கிறார்களென சொல்வதற்கில்லை. ஆனால் எல்லா விஷயங்களைப்போல் கவர்ன்மெண்டார் இவற்றிலும் முன்னுக்குநின்று ஆரம்பம் செய்யவேண்டும். ஆனால் படித்த உத்தியோகஸ்தர்களல்லாத ஜனங்களின் போதனையால், இம்முறை விஸ்தீர்மாகப் பரவும். கவர்ன்மெண்டார் தலையிட்டுக்கொண்டு இக்கூட்டு முயற்சியை இந்தியாவில் ஏற்படுத்தாமலிருந்தால் இன்றுவரையில் ஜனங்களுக்கு இதைப்பற்றி ஒன்றுந் தெரிந்திராதென்பது நிச்சயம்.

## மைசூரில்.

பிரிட்டிஷ் இந்தியாவிற்போல் மைசூரிலும் கவர்ன்மெண்டார் முதல் முதலில் கூட்டு முயற்சியை ஏற்படுத்தி, ஏழை ஜனங்களுக்கு இதினால் மிக்கப் பேருதவி எப்பொழுதும் கிடைக்குமென்ற எண்ணத்தை யாவர் மனதிலும் ஊன்றியிருக்கிறது. சென்ற மூன்று வருஷத்தில் இம்முயற்சி மிகவும் திருப்திகரமாய் நடந்து வந்திருக்கிறது. 1913—1914, வருஷத்தில் மெம்பர்களின் சங்கியை 24,538-லிருந்து, 40,479-க்கும், தொழில் தனம் ரூ. 12,89,338-லிருந்து ரூ. 24,47,340-க்கும், மொத்த வியாபாரத்தில் தொகை ரூ. 59,52,081 லிருந்து ரூ. 96,28,523-க்கும், நிகர் லாபம் ரூ. 1,26,981 லிருந்து ரூ. 2,30,224 க்கும், அதிகரித்திருக்கின்றன. இந்த பக்கங்களைப் பார்த்தால், கூட்டு முயற்சி இயக்கமானது எவ்வளவு தூரம் ஜனங்களால் அபிமானிக்கப் படுகிறதென தெரியவரும்.

## ரயத்துக்களைக் காப்பாற்றுதல்.

ஐக்கிய முயற்சியின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் நடுவிற் நிற்கும் தரகுக்காரர்களை நீக்குதல். அவர்கள் கடன் கொடுத்துவரும் ஸாவுகாரர்களாயும், சில்லறை வியாபாரக்காரர்களாயும், தொழிலிற் பணம் போடும் முதலாளிகளாயும் இருக்கலாம். இதுவரையில் ஏழை விவசாயிகளை சாவகார்கள் வலைகளினின்றும் காப்பாற்றப் பிரயத்தனம் செய்தோம். இம்முறையால் ஸாவ்கார்களின் கொடுமைகள் எல்லாம் நீக்கப்பட்டு ஏழை ஜனங்கள் இப்பொழுது மிகவும் செட்டாகிவிட்டார்களெனச் சொல்லப் புகவில்லை. பணம் குறைந்த வட்டிக்குக் கிடைத்தால், ஒருவன் சீக்கிரம் அழிந்து போவதற்கு மிடமுண்டு. ஆதலால் மதராஸ் கான்பரென்ஸில் தீர்மானித்தபடி கோவாப்ரேடிவ் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சங்கங்களிருக்குமிடங்களில் ஜனங்களுக்கு எலிமெண்டெரி படிப்புடன், கோவாப்ரேஷன் படிப்பையும் ஏற்படுத்தினால், அவர்கள் செட்டாய் நடவடிக்கைகளை நடத்தும் மார்க்கங்களை நன்றுயறியக்கூடும். உற்பத்திச்சங்கங்கள் கவர்ன்மெண்டார் உதவியைப் பெற்றும் இப்பொழுது மிகவும் இளமையிலிருக்கின்றன.

"நாம் பந்தயத்தில் பின்தங்கிவிட்டோம். சாமர்த்தியமுள்ளவர்களும், பலமுள்ளவர்களுந்தான் அப்பந்தயத்தில் இனி முன்னிற்கலாம்" என்று ஹிஸ் ஹைனெஸ் மகாராஜா அவர்கள் ஒரு சமயத்திற் கூறியபடி, நாம் ஒற்றுமையாய் மனப்பூர்வத்துடன் தேசத்து நன்மையின் பொருட்டுழைத்தால், ஜனங்களெல்லாரும் இம்முயற்சியால் சுபிக்ஷமடையலா மென்பதிற் சந்தேகமில்லை. யுவராஜா அவர்கள் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸை முதல் முதலில் ஏற்படுத்தினர். இராஜாங்கத்தின் நன்மையை உத்தேசித்து இங்கு செய்யும் விவாதங்களையும், படிக்கும் வாசகங்களையும் நான் கேட்க விரும்புகிறேன்.

## இரண்டாவது நாள்.

முதல் விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது, பொதுவில் நாணயத்தினதும், விசேஷமாய் ஐக்கியமுயற்சி நாணயத்தினதும் இலக்ஷணங்கள். தனி நபர்களிடமிருந்து பணமுதவி பெறுதலின் கஷ்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

ரெஜிஸ்ட்ராரவர்கள், தனி நபர்கள் வெளியிற் கடன் கொடுக்கும் பொழுது, சுய நலத்தைப்பார்க்கிறார்களே தவிர, தங்களிடத்தில் கடன் வாங்குபவர்களுடைய வருத்தங்களை அறிவதில்லை. ஆனால் ஐக்கிய நாணயச்சங்கமோ அப்படியல்ல; பொதுவில் மெம்பர்களின் நன்மைக்கு எப்பொழுதும் உழைத்து வருகின்றது.

## ஐக்கியமுயற்சியின் நன்மைகள்.

ஐக்கிய நாணயச்சங்கத்தின் ரெஜிஸ்ட்ராராபீஸைச் சேர்ந்த மிஸ்டர் கிருஷ்ணராவ் அவர்கள், ஐக்கியமுயற்சியின் நன்மைகளைப்பற்றி விரிவாய்ப் பேசுகையில், நாணயச்சங்கங்களிலிருந்து சென்ற கோவாப்ரேடிவ் வருஷத்தில் கடன்வாங்கின தொகைகளின் வட்டியில் மட்டில் கடன் வாங்குபவர்களுக்கு ரூ 1,25,000 ஆதாயமாயிருக்கிறது. இவ்வாதாயம், சங்கங்களில்லாமலிருந்தால், ஸாவகார்களையடையும். அநேக டெலிகேட்டுகள் அவ்விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள்.

## மெம்பர்களாகுதலிற் தடையேற்படுத்தல்.

ஒரு குடும்பத்தில் ஒருவர்தான் ஓர் ஐக்கிய முயற்சிசங்கத்தில் மெம்பராகலாமென்றும், இதினாலடையக் கூடும் பிரயோஜனம் கிராம நாணயச் சங்கத்தின் பணமானது ஒரு விசேஷ குடும்பத்தில் மாத்திரம் புறளாதென்றும், சில டெலிகேட்டுகள் அபிப்பிராயப்பட்டார். மிஸ்டர் வரதராஜ அய்யங்கார் இதை ஆக்ஷேபித்துப்பேசினார். இந்த விவாதத்தை முடிக்குமுன், மெம்பர்களாகுதலில் ஒரு விதத்தடையுமிருக்கக் கூடாதென்றும், அப்படியிருந்தால், அச்சங்கம் கார்பரேஷன் மாதிரியாகுமென்றும், 'இந்தியாவில் ஐக்கிய முயற்சி' என்னும் சிறு புஸ்



தகத்திலிருந்து வாசிக்கப்பட்டது. ஐக்கிய முயற்சியின் நோக்கத்திற்கு விரோதமாதலால் சங்கத்தின் மெம்பாகுதலில் யாதொருதடையுமிருக்கக் கூடாதென்று தீர்மானிக்கப் பட்டது.

## மரண பண்டு

மிஸ்டர் K. ராமஸ்வாமி அய்யரவர்கள், ஐக்கி முறை மரணபண்டு ஒன்று ஸ்தாபிக்க ஒரு ஸப்கம்மிட்டி ஏற்டுத்த வேண்டுமென ஓர் பிரேரேப்பிணை கொண்டுவந்து ராஜாங்கத்தை விட்டு மரண பண்டு கட்டணங்கள் வருஷந்தோறும் ஏராளமாய் வெவ்வேறு கம்பெனிகளுக்குப் போய்ச்சேருவதால், இப்படி ஒன்று ஸ்தாபிக்கப்படுவது நலமென்று, அநேக மெம்பர்கள் இதைத்தாங்கிப் பேசினார்கள். அவ்விதமே, இது விஷயத்தை விஜாரிக்க ஓர் ஸப் கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டது.

மறுநாள் ரிடயர்டு கம்மிஷனாகிய மிஸ்டர் ரெங்கசாமி அய்யங்காரவர்கள் கால் நடை இன்ஷியூரென்ஸு சங்கமொன்று ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்திச்சொன்னார். பிறகு சேர்மனுக்கு வந்தனமளித்து கான்பரென்ஸு கலைந்தது.

---

# ஐக்கிய முறையைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரின் தீர்மானம்.

1914௵ ஜூன் மாதம் 17 தேதியில் ஐக்கிய முறையைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

## முகவுரை.

தீர்மானம்:—ஐக்கிய இயக்கம் இந்தியாவில் ஏற்பட்டு 10 வருஷ காலத்திற்குள், சுமார் 600,000 மெம்பர்களடங்கியும், ரூபாய் 5 கோடிக்கு மேல் சேர்ந்த தனத்தையுடைய, சுமார் 12,000 சங்கங்களிருக்கின்றன. இத் தீர்மானத்தில் ஐக்கிய முயற்சியால் ஜனங்கள் இதுவாக்கில் அடைந்திருக்கும் சாதகங்களையும் ஐக்கிய முயற்சியானது இந்தியாவில் எவ்விதம் ஓங்கி வளர்ந்ததென்பதையும் இம்முறையிலுள்ள வெவ்வேறு வகைச்சங்கங்களையும், இதை எந்தமார்க்கத்தி செலுத்தினால் ஜனங்கள் நற்பயன்களடையக் கூடுமென்பதையும், இச்சங்கங்களை பரிபாலனஞ்செய்வதில் ஏற்பட்டுள்ள கேள்விகளைப்பற்றியும், கவர்ன்மெண்டாரால் இதுவரையில் அடைந்திருந்தும், இனிமேலும் அடையுக்கூடும் உதவியைப்பற்றியும் கூறும்.

## ஐக்கியமுயற்சி நாணயம் முதலியன.

பல ஜனங்கள் ஒன்று சேர்ந்து இலகுவான வட்டிக்குப் பணம் எடுப்பதற்கு ஐக்கிய நாணயச்சங்கங்களையும், தங்கள் விலை பொருள்களை உற்பத்தி செய்யவாவது அல்லது விற்று முதல் செய்யவாவது, ஐக்கிய முறையில் வேறு விதச்சங்கங்களையும், ஸ்தாபிப்பது தான் கூட்டு முறையின் பிரயோஜனங்களில் முக்கியமானவையாகும். முதலில் கூறப்பட்ட சங்கங்களினால், ஸாவகாரின் வட்டியைக்காட்டிலும் குறைந்தவட்டிக்குப் பணம் கிடைக்கும். பின் கூறப்படும் சங்கங்களினால், நடுவில் நின்றுகொண்டு சம்பாதித்து வந்த தரகுக்காரர்களின் ஊதிய மெல்லாம் இப்பொழுது மெம்பர்களே யடைவார்கள். உதாரணமாக, விதைகள் வாங்குவதற்கு ஓர் சங்கம் ஏற்பட்டால் மொத்தமாய் மலிவாயுள்ள ஓரிடத்தில் விதைகளை வாங்கி, மெம்பர்களுக்குள் அதைப்பிரித்துக் கொண்டால் விலை மிகவும் குறையும்.

## இந்தியாவில் ஆரம்பம் 1904ஹுத்திய ஆகட்டு.

ஐக்கிய நாணயமானது முதல் முதலில் சுமார் 1850ஹுத்தில் ஜர்மனி தேசத்தில் பிறந்தது. ரப்பீஸன் என்பவர் எழைக்குடியானவர்களின் நிமித்தமும், ஷுல்ஸ் டெலிட்ஸ்ஷிட்ச் என்பவர் சிறு வியாபாரக்காரர்களுக்கும், கொத்து வேலைசெய்பவர்களுக்கும், ஐக்கிய முறையில் நாணயச்சங்கங்கள் ஏற்படுத்தினார்கள். இம்முறை விசேஷமாய் உலகமெங்கும் பரவியிருக்கிறது. இந்தியாவில் ஸர்பிரடரிக் நிக்கல்ஸன் அவர்களின் ரிபோர்ட்டின் பேரில், 1895ஹுத்தி இக்கூட்டுமுயற்சித் தொழிலை ஏற்படுத்த ஆரம்பித்தார்கள், 1901ஹுத்தில் லார்டுகர்ஸன் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டியார் ரிபோர்ட்டின் பேரில், ஸிம்லா சட்டசபையில் ஸர்டென்ஸில் இப்பட்ஸன் அவர்களால் 1904ஹுத்திய ஆக்ட்டு கொண்டு வரப்பட்டு, சட்டமாக அங்கீகரிக்கப்பட்டது.

## 1912ஹுத்திய ஆக்ட்டு

1904ஹுத்திய ஆக்ட்டின்படி, சங்கங்கள், ரூரல் அர்பன், என இரண்டு வைகளாகப் பிரிக்கப்பட்டன. இவைகள் ஏற்படுகிறதற்கு நிபந்தனைகள் வெவ்வேறாயிருந்தன. கவர்ன்மெண்டாருக்கும் மற்றச்சட்டங்களிலிருந்து இவைகளை நீக்கி உதவிசெய்வதற்கு சில அதிகாரங்கள் தான் கொடுக்கப்பட்டன. ஏற்பட்ட 2-வருஷத்திற்குள் சுமார் 800 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதாலும், அச்சட்டம் அநேக வழிகள் மிகவும் குறைவாயும், கூட்டுமுறையில் நாணயமல்லாத மற்றச்சங்கங்களுக்கு காப்பு இல்லாமையாலும், 1912ஹுத்திய 12-வது ஆக்ட்டு சட்டமாக ஏற்படுத்தப்பட்டது.

## அபிவிருத்தி.

சுதேச ராஜாங்களைச்சேர்த்து, இந்தியாவில் முழுவதும் இப்பொழுது 12,324 சங்கங்களும், மெம்பர்களின் சங்கியை 573,536-ம், இருக்கின்றன. சங்கங்கள் மிகவும் விமரிசையாய் ஸதாபிக்கப்பட்டு வருகின்றன, மெம்பர்கள் மாத்திரமல்லாமல், அவர்கள் குடும்பங்களும் இவைகளினால் அடையக்கூடிய பலன்களைப் பெறுகிறார்கள். இந்தியாவில், சுமார் 20,000 விவசாயிகளுக்கு ஓர் சங்கம் விகிதம் ஏற்படுகிறது. ஆனால் இடாலி தேசத்தில் இத்தொகைக்கு 18 சங்கங்களும், ஜர்மனியில் 52 சங்கங்களு மிருக்கின்றன. ஆரம்பத்திலேயே இந்தியாவில் இம்முறையின் அபிவிருத்தி மிகவும் பிரபலமா யிருக்கிறது. இம்மாதிரி ஒரு தேசத்திலும் அபிவிருத்தி இருந்ததில்லை. ஜர்மனி தேசத்தில் இம்முறை ஏற்பட்டு 30 வருஷத்தில் 30 சங்கங்கள்தான் ஸ்தாபிக்கப்பட்டன. மற்றுமொரு 30 வருஷத்தில் 17,000-க்குமேலுபரவில்லை. ஆஸ்டிரியாவில், 10 வருஷத்தில் 15 சங்கங்களும், மற்ற 60 வருஷத்தில் 12,000 சங்கங்களும் ஏற்பட்டன. ருஷியாவில் 14,000 சங்கங்களும், பிரான்ஸில் 4,000மும், ஜப்பானில் 7,000 இப்பொழுது இருக்கின்றன. ரெஜிஸ்ட்ரார்கள் சங்கங்கள் தளராதிருக்கும்வண்ணம் மிகவும் ஜாக்கிரதையாய் சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டியிருந்தது. இனி, அவ்வளவு ஜாக்கிரதை வேண்டியதில்லையாலும், கவர்ன்மெண்டாரைச் சேராத பொது ஜனங்களே மேல் விசாரணை செய்ய முன்னுக்கு வருதலாலும், சங்கங்கள் ஏராளமாய் ஸ்தாபிக்கப்படுமென்று நம்பப்படுகிறது.

## பலன்கள்.

விவசாயிகள் அடையக்கூடும் பலன்களில் முக்கியமானது பணங் குறைந்த வட்டிக்குக் கிடைத்தல். ஸாவகார்களுக்கு அனாவசியமாம் கொடுபட்டுவந்த வட்டி சுமார் ரூ. 20 லக்ஷமாகிறது. விளைபொருள்கள் உற்பத்திக்கும், விற்று முதலுக்கும் ஏற்படும் சங்கங்களால், தரகுக்காரர்களின் இம்சைகள் ஒழிந்து, அவர்களடைந்துவந்த ஊதியங்களை மெம்பர்கள் தாங்களே யடைகிறார்கள். விவசாயிகளுக்கும் பணம் சொற்ப வட்டிக்குக் கிடைப்பதால், நிலத்தில் அதிகப் பாடுபட்டு, அதினால் அதிகமாசூல்கள் விருத்தியடைந்து, ஏற்றுமதி, இறக்குமதி, வியாபாரங்களும் அதிக விசாலிக்குமென்பதிற் தடையில்லை.

## விவசாயத்தை அபிவிருத்தி செய்தல்.

விவசாயிகள், கருந்த காலங்களில் அநேக கஷ்டங்களுக்குள்ளாகி, சாகுபடியின் தன்மைகளும் குறைந்து, அவஸ்தைப்படுவதை உத்தேசித்து கவர்ன்மெண்டார் அநேக சௌகரியங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பணம் சுலபமாய் கிடைக்கின்றது. நல்ல தினுசு விதைகள், புதிய சாகுபடி முறையின் கருவிகள் முதலானவைகள், விவசாய இலாகாக்காரர்களால் சுமாரான விலைக்கு விற்கப்படுகின்றன. இவ்விஷயங்களில் கவர்ன்மெண்டார் கடன்கொடுத் துதவுகிறார்கள். ஜலத்தட்டில்லாமல் பார்த்து

வருகிறார்கள். விவசாயிகளது கஷ்டங்கள் நீங்க, ஐக்கிய முறையில் விவசாயச் சங்கங்கள் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டு, இந்த இரண்டு டிபார்ட்டுமெண்டும் ஒற்றுமையாய் வேலைசெய்தால், இந்தியாவுக்கு வேறு நன்மைகள் தேடவேண்டியதில்லை.

### கற்பிக்கும் குணங்கள்.

ஜனங்கள் இதினாலடையும் லாபங்களைத் தவிர, நல்ல குணங்களைப் பெறுகிறார்கள். சிக்கனம், ஒற்றுமை, நாணயம், தொழில் நடத்தும் தன்மை, பொறுப்பு, சுயஉதவி, சுயஆட்சிமை, முதலிய நற்குணங்கள் வருகின்றன. கட்குடி, சூதாட்டம் முதலிய கெட்ட குணங்கள் மறைகின்றன. கல்வியில்லாதவர்கள் கல்வி கற்றுக்கொள்ளுகிறார்கள். சில சங்கங்களை கிராம கல்விகள் கொடுத்தும், பொது நற்காரியங்களையும் செய்து வருகின்றன.

### நாணயச் சங்கங்களும் விவசாயிகளுக்கு அவசியம்.

ஐரோப்பாவில்போல், இந்தியாவிலும், ஏழை விவசாயிகளுக்கும், சிறு தொழிலாளிகளுக்கும், பணம் சொற்பவட்டிக்குக் கிடைக்க, நாணயச்சங்கங்கள் ஏற்பட்டன. இப்பொழுது பெரிய மிராசுதாரர்களுக்கும் பணம் கிடைக்கும்படி ரெஜிஸ்டாரவர்கள் வேறு சங்கங்கள் ஏற்படுத்த வழிகள் பார்த்துவருகின்றனர். ஆனால் இம்மாதிரி ஸ்பானங்கள் வேறு வகையானதாயிருத்தலால், இத்தீர்மானத்தில் கூட்டவேண்டிய தவசியமில்லை. நாணயச் சங்கங்கள், விவசாயிகளுக்கல்லாமல், சிறு தொழிற்காரர்களாகிய நெசவுக்காரர்கள், கொத்துவேலை செல்பவர்கள், தச்சர்கள், கருமான்கள், செக்கிலியர்கள் முதலானவர்களுக்கும் உதவுகின்றன. ஆனால் இவ்விந்தியாவின் செல்வமானது விவசாயிகள் கையிலிருப்பதால், இவர்களுக்கு உதவி செய்தலை மிகவும் அவசரமாய் கவனிக்கப்பட்டு வருகிறது.

### ஸாவகார்கள்.

இதுவரையில் ஸாவகார்கள் ஏழைக் குடியானவர்களுக்கு பணம் மிகவும் அதிக வட்டிக்கும் பணம் கொடுத்து ஜீவித்து வந்தார்கள். பணம் தகுந்த ஜாமீனில் கொடுத்து பழக்கமில்லாததினால், நிறம்ப வட்டி வாங்குதல் வழக்கமாயிருந்தது. இப்பொழுது இச்சங்கங்கள் ஏற்பட, இவர்கள் பிழைப்புக்கு இடஞ்சல் உண்டாவதால், இச்சங்கங்களை ஸ்தாபிப்பகில் தடை செய்து வருகிறார்கள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் இவர்களுக்கு உடைந்தையாயிருந்து சில விடங்களில் வேலைசெய்து வந்ததாகத் பிரஸ்தாபம் எட்டிற்று. அவர்கள் அப்படி வேலைசெய்வது வெளிக்கு வந்து ருஜுவானால், தகுந்த சிக்ஷைகள் விதிக்கப்படும். ஸாவகார்களின் இடையூறுகள் இப்பொழுது பிரயோஜனமில்லையாதலால், இவர்களும் எல்லாருடன் சேர்ந்து, தங்கள் பணத்தைச் சங்கங்களில் எப்



பொழுது மழியாமல் டிபாஸிட்டுகளாகப் போட்டு தேசத்தின் நன்மைக்கு உழைத்து வருவார்களென நம்பப்படுகிறது.

வட்டி விகிதங்கள் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறாயிருக்கின்றன. உதாரணம், மேல் பர்மா தேசத்தில் மிகவும் குறைவென்று நினைக்கப்பட்ட வட்டி விகிதம் மதராஸிலும், குஜராத்திலும் மிகவும் அதிகமென்று கருதப்படும், ஸ்தல வட்டி விகிதத்திற்கு மிகவும் குறைவாய்க் கிடைத்தால், இவர்கள் அதிக வட்டிக்கு விட்டு, லேவாதேவி செய்ய ஆரம்பிப்பார்கள். வியாபாரத்தில், யோஜனையில்லாமல் விழுந்து, பணத்தை நாசஞ்செய்வார்கள். ஆகையால் மிகவும் தமிமாயிருக்கவேண்டி, வட்டிவிகிதம் ஸ்தலத்திருப்பதைக் காட்டிலும், கொஞ்சம், கொஞ்சமாய், குறைவடைந்துவரும். முதலிற் கூறிய ரப்பீஸன், ஷுல்ஸ் டெலிடிஷ் இவர்களேற்படுத்திய இருவகைச் சங்கங்களின் வித்தியாசங்கள், அநேக மிருக்கின்றன. அவைகளில் நாம் யோஜிக்கவேண்டியவைகளாவன (1) நடவடிக்கைகளின் எல்லை, (2) மெம்பர்களின் பொறுப்புக்கள் (3) லாபங்களைப் பகுத்தல். ரப்பீஸன் பாங்கிகளில், மெம்பர்களின் பொறுப்புவரையறுக்கவில்லை, பங்குகளில்லை. அப்படியிருந்தாலும் பங்கின் விலை மிகவும் குறைவாயிருக்கும். லாபத்தை மெம்பர்களுக்கும் பிரிக்கிறதில்லை. ஷுல்ஸ் டெலிடிஷ் பாங்கிகளில், நடவடிக்கைகள் விசாலித்திருக்கலாம். மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. மெம்பர்கள் பங்குகள் வைத்திருக்கிறார்கள். டிவிடெண்டும் ஏராளமாய் வாங்குகிறார்கள். ஆனால் விவசாயிகள் நிறைந்த இவ்விந்தாவில், ரப்பீஸன் வழிகள், சிற்சில மாறுதல்களுடன், ஏற்படுத்தப்பட்டன. அந்தந்த ஸ்தலங்களில், அநுபோகத்திற் தோன்றும் சௌகரியங்களையும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால் எந்த வழிகளில் இச்சங்கங்களை நடத்தினாலும், ரெஜிஸ்ட்ரார்கள் கூட்டு முயற்சியின் லக்ஷணங்களிலிருந்தும் மாற மாட்டார்கள்.

### நடவடிக்கை களின் எல்லை.

மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்காததினால் மெம்பர்கள் ஒருவரையொருவரறிய வேண்டியது மிகவும் அவசியம். அதை உத்தேசித்து சங்க நடவடிக்கையின் எல்லையைக் குறைக்கப்பட்டிருக்கிறது. விசேஷமாய் கிராமத்திற்கு ஓர் சங்கமும், கிராமானது மிகவும் பெரியதாயிருந்து மெம்பர்கள் தங்களுக்குள் நன்றாயறிந்து கொள்ள முடியாதிருந்தால், அதிகச் சங்கங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. அதிக பணமுள்ளவர்களையும், ஏழைகளையும் சேர்த்தால், உத்தேசிக்கப்படும் பிரயோஜனங்கள் ஏழைகளுக்குக் கிடைக்காதென்பதையறிந்து விசேஷமாய் ஒரே நிலைமையிலிருப்பவர்கள் மெம்பர்களாய்ச் சேரவேண்டுமென்பது அபிப்பிராயம்.

### பொறுப்பு.

விவசாயிகளது நாணயச்சங்கத்தில், மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாததவையாயிருக்க வேண்டும். மற்றச் சங்கங்களில், மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாயிருக்கலாம். ஸென்ட்ரல் பாங்குகளில், மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட வேண்டும். முதல் முதலில் ஜனங்கள், பொறுப்பு வரையறுத்தால், அங்கீகரித்து சங்கங்களில் சேருவார்களோ வென்று சந்தேகமிருந்தது. ஜனங்கள் இதின் குணத்தை அநுபோகத்தில் நன்கு அறிந்திருத்தலால், கிராமங்களில் இது அபிமானப்பட்டு வருகிறது.

### பங்குகள், லாபங்கள்.

ரப்பீஸன் கோட்பாட்டின்படி, சங்கங்களுக்கு பங்குகள் கிடையாது. லாபங்களையும் மெம்பர்கள் பிரிக்கவும் கூடா. ஆனால் இந்தியாவில் இவைகளுண்டு. லாபத்தை உத்தேசித்து சங்கங்களின் பங்குகளை வாங்குதல் ஐக்கிய மூபற்சியின் நோக்கத்திற்கு விரோதம். ஒரு மெம்பர் இவ்வித எண்ணத்துடன் சங்கத்தில் சேர்ந்து அதில் லாபத்தை அபகரித்தால், மற்ற மெம்பர்களின் பலன்கள் குறைவடையும். ஒரு வருஷத்தில் லாபம் நிறம்பக் கிடைத்தால் அதை சங்கத்தின் க்ஷேமத்தை நினைக்காமல், மெம்பர்கள் தங்களுக்குள் அதைப்பிரித்துக்கொள்ள யோசிக்கக்கூடும். ஆனால் அச்சமயங்களில் கவர்ன்மெண்டார் தலையிட்டு மெம்பர்கள் வாங்கக்கூடும் பங்கின் எல்லையையும், அடையக்கூடிய லாபத்தையும், நிர்ணயத்து விடுவார்கள்.

### ஜாமீன்.

விசேஷமாய் நபர் ஜாமீன் பேரில் கடன் கொடுபட்டு வருகின்றன. மதராஸ், பர்மா முதலிய பாகங்களில் ஸ்தாபர சொத்தின்பேரிலும் கடன் கொடுக்கப்படுகின்றன. கடன் தொகைகள் செலுத்துவதற்குத் தவணைகளுமுண்டு. அதிக நாள் கெடுவுக்குக் கடன் கொடுத்தால், தொகைகள் அதிக காலத்திற்கு கட்டுக்குள்ளிருப்பதால், சிறு காலக் கடன் தொகைகள் வாங்கும் மெம்பர்கள் பணமில்லாமல் கஷ்டபடுவார்கள். ஆகையால் அதிக நாள் கெடுவுக்குக் கடன் கொடுப்பதை நம்மாலியன்றமட்டும் நிறுத்தவேண்டும்.

### முன்கடன்கள்.

கடன்களையுடைய மெம்பர்களைச் சங்கங்களின் சேர்க்கலாமா வென்பது முக்கியமான ஓர் கேள்வை. சங்கங்கள் மெம்பர்களுக்குக் குறைவான வட்டிக்குப் பணமுதவி அவர்களுக்கு அநேக சௌகரியங்களைக் கொடுக்கும் பொருட்டு, ஸ்தாபிக்கப்பட்டன. முன்கடன்கள் முழுவதும் அடை பட்டால் தான், விவசாயிகள் கடனிருந்து வெளியில் வந்து தங்கள் நிலங்களை ஒழுங்காய் சாகுபடி செய்து க்ஷேமமடைவார்கள். ஆன்க



### கடன்களின் நோக்கங்கள்.

சங்கங்களின் மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்காதிருத்தலால், கடன்யாது காரணத்திற்கு வாங்கப்பட்டதென்று கேட்பது அனுவசியம். ஆனால் ஐக்கியமுயற்சி நோக்கங்களில், சிக்கனமானது முக்கியமாயிருத்தலாலும், மெம்பர்கள் வீண் செலவு செய்யாதிருப்பதற்கோர்தடையாயிருப்பதாலும், கடன் வாங்கும் பொழுது காரணம் சொல்லுதல் நல்லது. கடன்கள் நியாயப்படி, விளைப்பொருள்களை உற்பத்தி செய்வதின் பொருட்டு தான் கொடுக்கப்படவேண்டும். அநேக கிராம சௌகரியங்களின் நிமித்தம் மற்ற குறிக்கப்பட்டக் காரணங்களுக்கும் பணம் உதவப்படுகின்றன.

### சங்கங்களுக்கு சாதனங்கள்.

சங்கங்களுக்கு ஸ்டாம்பு, ரெஜிஸ்டர் செலவுகள், இன்கம்டாக்ஸ் வரிகள், கிடையாது. மற்றவியாபாரங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் இவைகளுக்கு வேண்டியதில்லை சங்கங்களுக்குக் கடன்கள் கவர்ன்மெண்டார் கொடுத்து வருகிறார்கள். சங்கங்களுக்கு ஈடுவைக்கும் சொத்துகள் முன்னீடாக ஆப்விடும்.

### சங்கத்தின் பண்டுகள்.

சங்கத்தின் பண்டுகள், மெம்பர்களது பங்குதனமும், மெம்பர்களது அல்லது மற்றவர்களது டிபாஸிட்டுகளும், சங்கங்கள் வாங்கும் கடனும், சேர்ந்தாகும். வெளியிலிருந்து ஸ்தல டிபாஸிட்டுகள் எவ்வளவுக் கெவ்வளவு வந்து விழுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு சங்கமானது ஜனங்களால் நம்பப்படுகிறதென்று சொல்லவேண்டும்.

சாகுபடி காலம், அறுவடைகாலங்களை நன்றுப் கவனித்து, சங்கமானது, ஸென்ட்ரல் பாங்கிகளில் கடன் வாங்கியாவது, நாணயக் குறைவில்லாமல் பாதுகாக்கவேண்டும்.

### திருப்பிக் கொடுத்தல்.

ஐக்கிய இயக்கத்தில் ஜனங்களின் நம்பிக்கை வைப்பதற்கு முக்கியமானது—கடன்வாங்குவர்கள் அந்தந்த தவணைகளில் தொகையைச் செலுத்துவது. இம்முறை ஆரம்பத்தில், தொகைகள் சரியாய் செலுத்தப்படவில்லை. இவ்வியாபாரத்தில், அதிக அப்பியாசமில்லாதது இக்குறைவின் காரணம். ஆனால் இப்பொழுது ஒழுங்காய்ச் செலுத்திவருகிறார்கள்.

### க்ஷேமநிதி.

ஒவ்வொரு சங்கத்திற்கும், க்ஷேமநிதியிருப்பது இன்றியமையாயதது இந்நிதியின் உபயோகங்கள்:—சங்கத்திற்கோர் அச்சாணியாகும், ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும், ஆபத்துக்காலங்களில் ஓர்பெரிய சாதகமாகு-

க்கும், பொறுப்பு வரையறுக்காச் சங்கங்களின் மெம்பர்களது பொறுப்பைக் குறைக்கும், வெளியிலிருந்து டிபாஸிட்டுகள் போடப்படும். இந்நிதியை அநேகர் சங்கத்திலேயே உபயோகப்படுத்தலாமென்றும், மற்றவர்கள் அதை வெளியில் டிபாஸிட்டு செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். லாபத்தில் நான்கில் ஓர் பங்குக்குக் குறையாமல் க்ஷேமநிதியைச் சேரவேண்டும். லாபத்தை, முதலில் க்ஷேமநிதிக்கும் பிறகு கடன் வாங்கும் மெம்பர்களது வட்டியைக் குறைக்கவும், அதன் பிறகு மெம்பர்களது டிவிடெண்டாகவும் உபயோகப்படுத்தவேண்டும்.

ஸென்டரல் சங்கங்கள்.

இந்தியாவில் சங்கங்கள் அதிகமாய் ஸ்தாபிக்கப்பட்டபடியால், இவைகளுக்குப் பணமுதவிசெய்யவும், மேல்விசாரணை பண்ணவும், ஸெண்ட்ரல்சங்கங்கள் அங்காங்கே ஏற்படுதல் அவசியம். ஓர் ஸெண்ட்ரல் ஸ்தாபனத்தில், பலசங்கங்கள் சேருவதால், அச்சங்கங்களெல்லாவற்றையும் சோதனை செய்ய ஓர் தகுந்த வழி யேற்படுகிறது; அப்படி சோதனை செய்தல் தனிச்சங்கங்களின் சுய ஆட்சிமையைக் கெடுத்து விடுமென்று எண்ணுவது பெரியதப்பு. எப்படி தனிநபர்கள் ஓர் ஒருசங்கத்திற் சேர்ந்து, ஒருவரை ஒருவர் மேல்விசாரணை செய்வதால் நம்பிக்கையும் நாணயமும உண்டாகிறதோ, அவ்விதமே தனிச்சங்கங்கள் ஸெண்ட்ரல் சங்கங்களிற் சேருவதால், தங்களுக்குள் ஓர்வித நாணயமும், நம்பிக்கையும் ஏற்படும். இவ்வித ஸ்தாபனங்கள் உண்டாகி இவைகளிற் சேர்ந்தாலல்லாது தனிச் சங்கங்கள் ஏற்பட்டதினாலாகும் பூரணப்பிரயோஜனமும் நாமடையமுடியாது. நாம் இந்தியாவில், மற்ற தேசங்களைப் போலல்லாமல், அடியிலிருந்து சங்கஸ்தாபனை செய்து வருதலால் சங்கங்களை ஒன்று சேர்க்க இம்மாதிரி ஸெண்ட்ரல் சங்கங்கள் மிகவும் அவசியம்.

கவர்ன்மெண்டாரும் தங்களாலியன்ற வரையில், ரெஜிஸ்ட்ரார்கள் சிபார்சு செய்வதன்பேரில், சங்கங்களுக்கு முன்கடன் கொடுக்கிறார்கள். அப்படிப் பணம் உதவிசெய்வதைக் கண்டனஞ் செய்கிறார்கள். கவர்ன்மெண்டாருடன் சேர்ந்து உழைத்துவரும் உத்தியோகஸ்தரல்லாத கனவான்கள் அநேகமிருக்கின்றார்கள். அவர்களின் உதவியால் சங்கங்கள் அநேகம் ஸ்தாபிக்கப்பட்டன. ஜனங்களுக்கு கூட்டுமுறையின் நோக்கங்கள் போதிக்கப்பட்டன. அவர்களுக்கு யாவரும் கடமைப்பட்டுள்ளோம்.

கூட்டுத்தொழில் முயற்சியினால் உண்டாகும் நற்பயன்கள் பலவுள. இத்தேசத்தில் ஏற்பட்டு 10 வருஷத்திற்குள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட இடங்களில் விவசாயிகளும், சிறு தொழிற்காரர்களாகிய ஏழைகளும் தங்கள் கஷ்டங்களெல்லா மொழிவதுடன், நற்குணங்கள் பலவுண்டாகி, மிகவும் க்ஷேமத்தை யடைந்துவருகிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR ... 21 MAY 1915 MADRAS

அநுபந்தம்

# 7-வது பங்காளா மாகாண கோவாப்ரேடிவ் கான்பரன்ஸ்

ஏழாவது பங்காள கோவாப்ரேடிவ் கான்பரென்ஸானது 1915௵ பிப்ரவரிமீ 7௳ பழைய பங்காள கௌன்ஸில் சேம்பரில் கூடிற்று. கவர்னர் பிரபு கார்மிகேல் துரையவர்களால் திறக்கப்பட்டது.

அவருடைய பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

பங்காள கவர்ன்மெண்டின் பொருட்டு நான் இக்கான்பரென்ஸுக்கு உங்கள் வரவை நல்மனத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறேன். இவ்விதம் நீங்களெல்லாரும் கூடுதல்களினுண்டாகும் நற்பயன்களை நான் கூறவேண்டிய தனுவசியம்; யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஒவ்வொரு வருஷங்களில் ஏற்படும் அநுபோகங்களைப்பற்றி தர்க்கித்தும், உங்கள் ஆலோசனைகளை ஒருவருக்கொருவர் அறிந்துகொண்டும், பொதுவி லுண்டாகும் கஷ்டங்களை நீக்கி ஒன்றாக ஓர்வழியில் வேலைசெய்தும், இவ்விஷயங்களெல்லாம் பொது ஜனங்களின் கவனத்தைக் கவர்ந்து இம்முறையில் புதிதாக அனேக ஐக்கிய முயற்சிக்காரர்களை உழைக்க வரும்படி செய்தும், வருகின்றன. சென்ற வருஷத்தில் நான் பிரசங்கித்தபொழுது, புதுச் சங்கங்களை ஏராளமாய் ஸ்தாபிப்பதைக் காட்டிலும், பழைய சங்கங்களை சீர்படுத்தி, எல்லாம் ஒழுங்காயிருக்கும்படி செய்து, மெள்ள மெள்ள சங்கஸ்தாபனம் செய்தால் மிகவும் நல்லதென்று சொன்னேன். அம்மாதிரியே நடந்திருக்கிறதென்றறிய சந்தோஷப்படுகிறேன். அப்படி மெதுவாயிருந்தும்கூட, சங்கங்களின் சங்கியை 100-க்கு 50 வீதமும், மெம்பர்களில் இலக்கம் 100-க்கு 60 வீதமும், தொழில்தனம் 100-க்கு 95 வீதமும் அதிகரித்தன. இவ்வபிவிருத்திக்குக் காரணம் கவர்ன்மெண்டாரின் உழைப்பால் மாத்திரமல்ல; பொது ஜனங்கள் மனப்பூர்வமாய் யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் நாடாமல் மிகவும் சிரத்தையுடன் வேலைகள் செய்தார்கள். ஜனங்கள் எல்லாருக்கும் இம்முயற்சியானது நற்பயனைத் தருதலால், கல்விகற்ற அறிவினர்கள் படிப்பில்லாத மற்றவர்களுக்காக இவ்விஷயத்திற் பாடுபடுவார்களென நம்புகிறேன். இதை தங்களைச்சேர்ந்த கடமையென்று நினைக்கவேண்டும். கூட்டு முயற்சித்தொழிலின் இயக்கத்தில் சுய ஆக்ஷிமை செய்வதற்குத் தகுந்த

தானவித்து இருக்கின்றது, இச்சங்கங்களில் டிபாஸிட்டு செய்யப்பட்ட தொகை மிகவும் ஏராளமாயிருக்கிறது. பங்காளத்தில் மாத்திரம் இதின் மொத்ததொகை சுமார் ஒரு கோடி ரூபாயாகின்றது.

ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்திக்கு முக்கியமானது, ஸெண்ட்ரல் பாங்கிகளுக்குத் தட்டாமல் பணமுதவும்படியாக ஓர் பாங்கி ஏற்படவேண்டும். பங்காள மாகாணத்திற்கு மாகாண பாங்கியொன்று ஸ்தாபிக்கப் பிரயத்தனமெடுத்துக்கொள்ளும் ஸப் கம்மிட்டியாருக்கு வந்தனமளிக்கிறேன். அக்கம்மிட்டியாரில் தகுந்த பிரமுகர்களிருப்பதால் பாங்கியானது நன்றாய் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் க்ஷேமத்திற்கு வருமென்பதிற் தடையில்லை. தனவான்களும், வியாபாரிகளும், இதை போஷிப்பார்களென நம்புகிறேன். இப்பாங்கி அபிவிருத்தியடைந்தால், பங்காள தேசத்தின் செல்வம் மிகவும் பெருகும், ஜனங்களும் சுபேக்ஷமடைவார்கள்.

ஆனால் நாம் இதில் முக்கியமாய் அறியவேண்டியது என்னவெனில், இவ்வியக்கத்தின் செழிமையானது கிராம நாணயச் சங்கத்தைச் சார்ந்திருக்கிறது. இச்சங்கங்களினாற்தான் நாம் கிராமவாசிகளுக்கு தங்கள் காரியங்களை எப்படித் தாங்களே நடத்திக்கொள்ளுவது என்பதை கற்பிக்கவேண்டியிருக்கிறது. அவர்களைத் தொழிலாளிகளாகவும், நிர்வாகத்தில் பொறுப்புள்ளவர்களாயும் செய்யவேண்டியது நம்முடைய நோக்கம். ஐக்கிய முயற்சியின் நோக்கங்களாகிய, பரஸ்பர வுதவி, சிக்கனம், தன்னைத்தானே சார்ந்திருத்தல், முதலியவைகளை ஜனங்கள் மனதில் ஊன்றும்படி போதிக்கவேண்டும்.

ஸெண்ட்ரல் பாங்கிகள் வரவர அதிகமாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. திருப்திகரமாய் அபிவிருத்தியடைந்துவந்தாலும், நாம் மிகவும் ஜாக்கிரதையாய் வேலைசெய்து கொண்டு வரவேண்டும். நானும் பாங்கியின் டைரெக்டராய் ஓர்சமயமிருந்ததினால், அநுபோகத்தின் பேரில்சொல்லுகிறேன். ஓர்பாங்கியானது ஓங்கிவிருத்தியடைய வேண்டுமானால், அதின்பங்குதனமும், ரிசர்வுகளும் அதிகமாயிருக்க வேண்டும். வரும் டிபாஸிட்டுகளை கடனாகக் கொடுத்துவிடுகிறோம். அதிககாலதவணைக்குக் கடன் கொடுக்கக்கூடாது. சணல் வியாபாரத்தால் ஏற்பட்ட கஷ்டங்களையும் ஸெண்ட்ரல் பாங்கிகள் பொறுத்து நின்றதைப்பற்றிக் கேட்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது.



# மூன்றாவது மதராஸ் மாகாண கான்பரென்ஸ்.

மூன்றாவது மதராஸ் மாகாண கான்பரென்ஸானது பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனது மேற்பார்வையில் 1915௵ ஜனவரிமீ 2உ ஆனாயில் ஸர் ஹாரெல்டு ஸ்டீவர்ட்டின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. சுமார் 120 டெலிகேட்டுகளும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், கனவான்களும்விஜயஞ்செய்திருந்தார்கள்.

திவான்பகதூர் ஆதிநாராயணய்யா அவர்கள் டெலிகேட்டுகளின் வரவை யேற்றார். அவர் பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—இந்த மூன்றாவது மதராஸ் கான்பரென்ஸானது சென்றவருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மதராஸ் பிரொவின்ஷியல் யூனியனது ஆதரவின்கீழ் நடைபெறுகின்றது. நான் அவ் யூனியனின்பொருட்டு உங்கள் நல்வரவை யேற்க மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீங்களெல்லாரும் கூட்டுமுயற்சித் தொழில் விஷயமாய் உழைத்து வருகிறீர்கள். இவ்வழியில் அடைந்த அநுபோகங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்ளவும், ஏற்பட்ட கஷ்டங்களை நீக்கப் பரிகாரம் தேடவும் கூடியிருக்கிறீர்கள். இந்த ராஜதானியில் வெவ்வேறு பாகங்களில் சங்கங்கள் வேலைசெய்வதைப் பார்வையிட்டதினால் உண்டாகும் என் அபிப்பிராயத்தை இங்கு கூறுகிறேன். முதல் முதலில், சங்கங்களின் அபிவிருத்தியைப்பற்றி யாவரும் உறுதியாய் நம்பியிருக்கிறார்கள். ஆகையால் ஒழுங்கின்மைகளுக்குப் பாதுகாப்பும், ஜாக்கிரதையும், ஜனங்கள் வேண்டியபடி எடுத்துக்கொள்ளவில்லை. இவ்வியக்கத்தை கவர்ன்மெண்டார், தங்கள் டிபார்ட்டுமெண்டிலேயே வைத்துக்கொண்டு வேலை செய்துவருவார்களென்ற நம்பிக்கை இருந்துகொண்டு வருகிறது. இப்பொழுதிருக்கும் நிலைமையில், இம்முயற்சிக்கு கவர்ன்மெண்டாரின் உதவியானது இன்னும் வெகுநாள்களுக்கு இருக்கவேண்டும். ஜனங்களே உழைத்து நிர்வகித்துவரும் முயற்சியாதலால், வெளியுதவியை நாடினால் இது விருத்தியடையாதென்பது திண்ணம். இரண்டாவது முக்கியமான அம்சம் என்னவென்றால், ஜனங்கள் கடன்வாங்குவதில் அதிக ஊக்கம் காட்டுகிறார்களேயொழிய, மிகுத்துவைப்பதில் ஒரு சிரமமும் எடுத்துக்கொள்ளுகிறதில்லை. நாணயச் சங்கங்களில் பணம் லேவாதேவி செய்வதை தமது முடிவான எண்ணமாக நினைக்கிறாரேயொழிய, அவைகளின் மூலமாய் தொழில்களை விருத்திசெய்யவேண்டுமென்ற எண்ணமில்லை. ஜனங்கள் பணத்தை பூமியில் புதைத்துவைக்

காமல். [illegible]ணயச் சங்கங்களில் வேறு லாபகரமான வழிகளில் உபயோகப்படும்படி அதை டிபாஸிட்டு பண்ணச்செய்வதே ஐக்கிய முயற்சியின் ஓர் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு ஐக்கிய முயற்சிக்காரர்களும் தங்கள் பொறுப்பை நன்றாயறிந்தும், வேலைகளை சரிவரக் கற்றுக்கொண்டுமிருக்கவேண்டும். தங்கள் செல்வம் ஓங்கி வளரவேண்டுமானால், விளைபொருள்களை உற்பத்திசெய்வதற்கும், சாமான்களை மொத்தத்தில் வாங்கி விற்பதற்கும், ஐக்கிய முறையில் சங்கங்களேற்படவேண்டும்.

நம் தேசத்தார் விசேஷமாய் கிராமாந்திரங்களில் வசிக்கிறார்கள். கிராமாந்திரங்களிலுள்ள வாழ்க்கையை நன்றாயுற்றுப்பார்த்தால், சந்தோஷமற்றதாயும், இழிவானதாயுமிருக்கின்றது. இதை நிவர்த்தி செய்வதற்குத் தகுந்ததானது கூட்டுமுயற்சித் தொழிலைத்தவிர வேறொன்றுமில்லை. பரம்பரையாயுள்ள நம் ஜனங்களின் வழக்கங்களுக்கு ஐக்கிய முயற்சி மிகவும் பொருந்தியிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்தார்களும் ஏற்பட்டு, ஜனங்களுக்கு கல்வி கற்கும்படி பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்பட்டால் இதின் அபிவிருத்தி நன்றாய்த் தெரியவரும்.

## அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்

பிரசிடெண்டாகிய ஆனரபில் ஸர் ஹாரேல்டு ஸ்டேவர்ட்டு துரையவர்கள் கான்பரென்ஸைத் திறக்கும்பொழுது பிரசங்கித்தார். அதின் சுருக்கம் பின்வருமாறு:—

கனவான்களே! வருஷ மஹாசபைகளுக்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களை பிரசிடெண்டாகத் தெரிந்தெடுத்து அவர்களை கௌரவப்படுத்துவது உங்கள் வழக்கமென்று தெரியவருகிறது. ஐக்கிய முயற்சியிலுள்ள உங்கள் மனப்பூர்வமான நல்லெண்ணங்களினால் இவ்வித வழக்கமேற்பட்டிருக்கிறதென்று நான் உறுதியாகச் சொல்லக்கூடும். சுயநயம் பாராட்டாத கனவான்களுடன் கலந்து கொண்டு இம்முறைஇயக்கத்தின் நடவடிக்கைகளை நன்றாயறிந்துகொள்ளும் தருணம் கிடைத்ததற்கு நான் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். இப்பிரபுக்களை உதாரணமாகக்கொண்டு, அவகாசமுள்ள கனவான்கள்இன்னும் அனேகர் தங்கள் உத்தியோகங்களிலிருந்து கிடைத்த அனுபோகங்களை இம்முயற்சி விஷயமாயுதவவருவார்களென நான் நம்புகிறேன்.

நான் கோவாப்ரேடிவ் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் மிஸ்டர் L. D. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையவர்களினது சென்ற வருஷத்திய ரிபோர்ட்டைப் பார்வையிட்டேன். அவ்வருஷத்தில் 260 சங்கங்கள் ஏற்படுத்தப் [illegible] 100-க்கு 24 வீதம் அதிகரித்தது. மெம்பர்களின்



சங்கியை 82,700லிருந்து 100,500-க்கு உயர்ந்தது; அதாவது 100-க்கு 21½ வீதம் ஜாஸ்தியாயிற்று. இதெல்லாம் அபிவிருத்தியைக் காட்டுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் 4 கோடி ஜனங்களுக்கு 100,000 மெம்பர்கள் சேர்ந்த சுமார் 1,300 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டது அதிகமில்லை. விருத்தியின் வளர்ச்சியைப்பற்றி அதைரியப்படுவதற்கும் காரணமில்லை. ரப்பீஸன் 1849 வருஷத்தில் முதல் பாங்கியை ஏற்படுத்தினார். 5 வருஷத்திற்குப் பிறகுதான் இரண்டாவது பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு 8 வருஷத்திற்குப் பிற்பாடுதான் மூன்றாவது பாங்கியுண்டானது. 13 வருஷத்தில் 3 பாங்கிகள் ஏற்பட்டன. மதராஸானது இதைவிட அனேகவிடங்களில் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. ஆனால் அவைகளின் அனுபோகத்தினால் நாம் இவ்விதமான பலனை யடைந்திருக்கிறோம். இன்னுமொரு திருப்திகரமான விஷயமென்னவென்றால், க்ஷேமநிதியானது ரூ. 4·43 லக்ஷத்திலிருந்து ரூ 6·19 லக்ஷத்திற்கு அதிகரித்திருக்கிறது; அதாவது 100-க்கு 40 வீதம் உயர்ந்திருகிறது.

ஆனால் இவ்விஷயங்களைக்கண்டு களிப்பதுடன், ஐக்கிய முயற்சியின் முக்கிய நோக்கங்கள் பூர்த்தியடைந்து வருகின்றனவா வென்று நாம் மிகவும் ஜாக்கிரதையான கவனத்துடன் பார்த்து வரவேண்டியது. இம்முறையானது ஜனங்களுக்குக் கடன் கொடுப்பதற்கு மாத்திரம் ஸாதனவழிகளை உண்டாக்கப்பட்டிருக்கின்றன வென்றால், கவர்ன்மெண்டாரின் உதவியை நாடுவது தப்பாகும். ஜனங்களுக்குள் ஓர்வித பரஸ்பர உதவியையும், அடக்கியாளும் சக்தியையும் கற்பிக்குமென்றே இந்த ஐக்கிய முயற்சியானது கருதப்படுகிறது. நாணயச்சங்கங்களிலிருந்து கடன் வாங்கினால், மெம்பர்கள் குறித்த காலங்களில் தவணைதப்பாமல் அக்கடனைத்திருப்பிக் கொடுக்க வேண்டும். இப்படிச் சரிவரக்கொடுத்து வராததினால், அனேக சங்கங்கள் கஷ்டப்படுகின்றன. ஸென்ட்ரல் பாங்கிகளிடமிருந்து கடன்வாங்கின சங்கங்கள், திருப்பி செலுத்தவேண்டிய கெடுக்களில், தொகைகளைச் சரியாய்ச் செலுத்துகிறதில்லை. இதினால் கூட்டுமுயற்சியின் உண்மையான நோக்கம் இன்னும் ஜனங்களுக்குள் உண்டாகவில்லையென்பது நன்கு விளங்குகிறது. சரிவர தடன்களைக் கொடுக்க நிர்பந்தம் செய்தாற்றான் மெம்பர்களுள் சிக்கனமேற்படும். இதைப்பற்றி நீங்கள் கவனித்து ஒரு பரிகாரம் தேடுவது உங்களைச் சேர்ந்தவிஷயம்.

மற்றொருவழியில் நீங்கள் சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டியது, மெம்பர்களின் டிபாஸிட்டுகளை அதிகப்படுத்தப் பிரயத்தனஞ்செய்தல். ஒவ்வொரு கிராமநாணயச் சங்கத்தின் சராசரி தொழில்தனம் ரூ.4,442 ஆகும்; ஆனால் மெம்பர்கள் டிபாஸிட்டின் தொகை சராசரி ரூ. 168 தானென்

றது. பின் கூறிய தொகையானது ஒவ்வொரு மெம்பருக்கும் சராசரி ரூ. 3 கொடுக்கின்றது.

லாபத்தைக் கொடுக்காத தொழில்கள் விஷயமாய்க் கடன் கொடுப்பது சரியல்ல. ரப்பீஸன் பாங்கிகளின் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாவது, லாபங்களையும், பலன்களையும் கொடாத தொழில்களுக்கு கடன் கொடுத்துதவக்கூடாதென்பதாம். ஜனங்களுக்கு இவ்விஷயமாய் தலைவர்களாயுள்ள உங்களுக்கு நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. ஆனால், கல்யாணம், இறவு வாழ்வு, முதலியவைகளா லேற்படும் செலவுகளுக் குறைப்பது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது. பஞ்சாப் தேசத்தில் இச்சங்கங்கள் உற்பத்தியான பிறகு, இவைகளின் பஞ்சாயத்தார்களால், அநேக கிராமவிவகாரங்கள் கோர்ட்டுக்குப் போகாமல், பைசல் செய்யப்பட்டனவென்று தெரியவருகிறது. அம்மாதிரியே இவ்விடத்திலும் சங்கப் பஞ்சாயத்தார்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டால் ஜனங்கள் அடையும் நன்மைகள் பலவுளதாகும்.

---

பின்வரும் தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன :—

I. 1914-ஹு ஜூன், மீ 16உ போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளியான பிரசுரத்தில் சொல்லியபடி கோவாபரேடிவ் சங்கங்களுக்கு கணக்கு தணிகை செய்வதின் பொருட்டு வரி விதிப்பதைப் பற்றி ஐக்கிய இயக்கத்தின் தற்கால நிலைமையை நோக்கும்போது, கணக்கு தணிக்கை செய்வதனாலுண்டாகும் செலவை கவர்ன்மெண்டாரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த கான்பரன்ஸ அபிப்பிராயப் படுகிறது.

II, கணக்கு சோதனை செயவதை யல்லாமல் சங்கங்களை இன்ஸ்பெக்ஷன்கள் செய்யும் விஷயமாய் இந்த கான்பரன்சு பின்வருமாறு அபிப்பிராயப் படுகிறது:—மேற் சொன்னப்பிரகாரம் இன்ஸ்பெக்ஷன் செய்யும் வேலையை அடுத்துள்ள தனிச்சங்கங்கள் அடங்கிய யூநியன்சங்கங்களுககு கூடியசீக்கிரத்தில் மாற்றுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் துரிதமாய்ச் செய்ய வேண்டியது. அப்படி யூநியன் சங்கங்கள் இன்ஸ்பெக்டரின் வேலையை ஏற்றுக்கொள்ளும்வரையில் இப்பொழுது நடந்துவருவது போலவே கவர்ன்மெண்டாரே செய்து வரவேண்டியது.

III, சூபர்வைசிங் (அதவது) மேற்பார்வை செய்யும் யூனியகளை தணிக்கைசெய்யும் விஷயத்தில் சென்டறல் பாங்கிகள் சிரத்தையெடுத்துக் கொள்ளவேண்டும்மென்றும், சாதாரண சங்கங்களின் தணிக்கை விஷயமாகவும் கூடுமானவரையில் உத்தாசை செய்யவேண்டுமென்றும் இந்த கான்பரென்சு அபிப்பிராயப்படுகிறது.



IV. சென்ட்றல் பாங்கிகளில் சாதாரணச் சங்கங்களையும் ஷேர்ஹோல்டர்களாக அவசியம் சேர்த்துக் கொள்வது உசிதமென்று இந்த கான்பரன்சு அபிப்பிராயப் படுகிறது.

V. தர்ம சம்பந்தமான பொதுப் பணங்களை (டிறஸ்டு பண்டுகளை) ஐக்கிய சங்கங்களில் டிபாஸிட்டு செய்வதற்காக வேண்டியசௌகரியத்தையுபேக்ஷித்து இந்தியன் டிற்ஸடு ஆக்டை தக்கபடிமாற்றவேண்டுமென்றும் அப்படி மாற்றுகிற வரையில் அப்பணங்களை அவ்விதம் டிபாசிட்டு செய்வதற்கு தேவையான ரூல்களை ஏற்படுத்த ஹைகோர்ட்டாரவர்களுக்கு சமஸ்தானகவர்ன்மெண்டார் பிரேரணை செய்யவேண்டுமென்றும் டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் தங்கள் தங்கள் பணங்களை ஐக்கிய சங்களில் டிபாசிட்டு செய்வதற்கு கவர்ன்மெண்டார் அநுமதிகொடுக்க வேண்டுமென்றும், இந்த கான்பரன்சு அபிப்பிராயப்படுகிறது

VI. இந்த இராஜதானியில் தெரிந்தெடுக்கப்பட்ட 2) சங்கங்களிடத்தில் சுகாதாரவிஷயமான சிலவேலைகளை நடத்தும்படி ஒப்புவித்தற்கு இக்கான்பரென்ஸ கவனமெண்டாருக்கு வந்தன மளிப்பதுடன். பரீக்ஷார்த்தமாய் இவ்விதப்பொறுப்பை அதிகச் சங்கங்களுக்கும் கொடுத்து, கிராமக்கல்வி தண்ணீர் பாய்ச்சுதல், காட்டு இலாக்க நடவடிக்கைகளை நடத்து தல, முதலிய மற்றப் பொறுப்புகளையும் இவைகளிடத்தில்ஒப்புவிக்க வேண்டிக் கொள்ளுகிறது.

VII. (1) விதை, ஆடு மாடுகளின் தீனி, எரு, சாகுபடிக்கருவி, முதலிய சாமான்களை மொத்தத்தில் வாங்கவும், விளை பொருள்களை விற்பனை செய்யவும், விவசாயச்சங்களை ஏற்படுத்த முயல வேண்டுமென்று இக்கான்பரென்ஸானது அபிப்பிராயப்படுகிறது.

(2) வீடுகட்டிக்கொடுக்கும் சங்கங்களையும், நெசவு முதலிய ஸ்தலகைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும்சங்கங்களையும், கவர்ன்மெண்டார் எல்லாப்பக்கங்களில் ஸதாபனஞ்செய்து அவைகளுக்குப் பணமுதவவேண்டுமென்றும், இவ்விஷயத்திற்குப் பிரத்தியோகமான உத்தியோகஸதர்களை கவர்னமெண்டார் நியமிக்க வேண்டுமென்றும் இக்கான்பரென்ஸு கருதுகிறது.

VIII. இநத ராஜதானியில் முக்கியமாய் வடஜில்லாக்களில் சங்கங்களை நிரம்ப ஸ்தாபனஞ்செய்ய வேண்டுமென்று இக்கான்பரென்ஸார் நினைக்கிறார்கள்.

IX. கூட்டு முயற்சிங் சங்கங்கள், மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனில் பங்குகளெடுத்தும், வேறுவழிகளில் அதற்கு உதவியும், அதின் வேலையை ஒழுங்காய்ச் செய்யும் வண்ணம் அதைபோஷிக்க வேண்டுமென்று இக்கான்பரென்ஸானது கேட்டுக்கொள்ளுகிறது.

XI. வேறு ஸ்தாபனங்களின் பணஉதவியை எதிர்பார்ப்பதைக் காட்டிலும் ஸ்தல டிபாஸிட்டுகளை உயர்த்துவதசியமென்பதை ஜில்லா கோவாப்ரேடிவ் பாங்கிகளுக்கு வற்புறுத்த இக்கான்பரென்ஸானது விரும்புகிறது.

XII. கடன் திருப்பிக்கொடுக்கவேண்டிய தவணைகளில். கெடுத்த வறுமல் மெம்பர்களிடமிருந்து கூட்டுமுயற்சிச் சங்கங்களை வசூல் செய்வதசியமென்று இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

XIII. கூட்டுமுயற்சிச் சங்கங்களை மிகவும் ஒழுங்காய் சோதிப்பதற்கும் தணிக்கை செய்வதற்கும், இன்ஸ்பெக்டர்களின் அந்தஸ்த்தை உயர்த்தவேண்டுமென்றும் இக்கான்பரென்ஸ் விரும்புகிறது.

---

## அக்கிராசனபதியின் முடிவுப்பிரசங்கம்,

ஆனரபில் ஸர் ஹாரோல்டு ஸ்டேவர்ட்டு போனபிறகு அக்கிராசனம் வகித்த ஆனரபில் மிஸ்ட்டர் M. ராமசந்திரராவ் அவர்கள் பின்வரும் சாராம்ச மடங்கிய பிரசங்கம் செய்தார்:—என்னை இக்கான்பரென்ஸுக்கு வரும்படி தூண்டுதல்செய்த மிஸ்ட்டர் ஆதிநாராயணய்யா அவர்களுக்கு வந்தனமளிக்கிறேன். சட்டநிரூபணசபைக்கு முன்னால் விவாதத்திற்குவரும் கூட்டுமுயற்சி விஷயங்களைத்தவிர, இதைப்பற்றி ஓர்வித அபிமானமும் இதுவரையில் நான் எடுத்துக் கொள்ளவில்லை. சுயநயம் பாராட்டாத கனவான்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு மிக்க ஆவலுடனும் பொறுப்புகளுடனும் வேலைசெய்து வருவதைப்பார்க்க எனக்கு நல்லதருணம் வாய்த்ததைப்பற்றி நான் அவருக்கு வந்தனமளிக்கிறேன். இவ்வளவுதூரம் சிரமப்பட்டு இக்கான்பரென்ஸுக்கு விஜயஞ்செய்த டெலிகேட்டுகளுக்கும், தங்கள் தங்கள் அநுபோகங்களைப் பிரசங்கம் செய்தவர்களுக்கும், இக்கான்பரென்ஸ் ஏற்பாடுசெய்தவர்களின் பொருட்டு நான் வந்தனமளிக்கிறேன். கவர்ன்மெண்டார் ஐக்கிய முயற்சியின் பொருட்டு அதிகப்பணம் செலவு செய்வதில்லை என்ற முறைப்பாடு இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். அது நிவர்த்திசெய்யப்பட்டு, கான்பரென்ஸின் நோக்கங்களையும் தீர்மானங்களையும் கவர்ன்மெண்டாரால் கவனிக்கப்படுமென்று நம்புகிறேன். தகுந்த இனிஸ்பெக்டர்களை ஏராளமாய் நியமித்தும், ஜனங்களுக்கு ஐக்கிய முயற்சியின் நோக்கங்களை கற்பித்தும், சங்க ரெஜிஸ்ட்டர் செய்வதில் தாமதமு மில்லாமலும் கவர்ன்மெண்டார் வேலை செய்து வரவேண்டும். சங்கங்களின் கடன் கள் சரியான காலங்களில் கொடுபடுகிறதில்லை யெனத் தெரியவருகிறது. இதற்குக் காரணம்கண்டுபிடித்து கடன்வாங்கினவர்கள் சரி



யாய்த் திருப்பிக்கொடுக்கும்படி பைலாக்களைத் திருத்தவேண்டும். கட்டிச்சங்கங்களைப்பற்றி யெனக்கு மிகவும் விருப்பமுண்டு. முனிஸிபாலிடிகளில் மிகவும் நெருக்கமா யிருக்கிறதென்று சில வீடுகளை யிடித்துவிடுகிறார்கள். வீட்டுக்காரர்களுக்கு வேறு வீடுகள் கொடுக்கிறதில்லை. வாங்கின பணத்தை அவர்கள் செலவு செய்துவிட்டு முடிவில் வீடில்லாமற் தவிக்கிறார்கள். முனிஸிபால்டிகள் முதலில் அவர்களுக்குவீடுகள் ஏற்பாடு செய்துகொடுத்தபிறகு அவர்கள் இருக்கும் வீட்டை யிடிப்பது நல்லது. விவசாயச்சங்கங்கள் இனிமேல் நிரம்ப ஏற்படுத்தப் படுமென்று யெதிர்பார்க்கப் படுகிறது.

---

# தஞ்சாவூர்ஜில்லா நான்காவது கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

1915௵ ஜனவரிமாதம் 23-ம் தேதியில், தஞ்சாவூர்ஜில்லா நான்காவது கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் ஆனரபில் மிஸ்ட்டர் L. E. பக்கிளிதுரை யவர்களின் அக்கிராசனத்தின் கீழ்நடைபெற்றது.

## அக்கிராசனத்தின் பிரசங்கம்

பிரஸிடெண்டு அவர்கள் பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு.—இம்மாதிரி சபைகள்கூடுவதாற்தான் ஒருவருக்கொருவர் கூட்டுமுயற்சியின் அபிவிருத்தியடையும் விஷயங்களைப் பற்றியும், ஏற்பட்ட அநுபோகங்களையும் கலந்துகொண்டு எல்லாரும் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு சௌகரியமா யிருக்கிறது. இவ்ராஜதானியில் எங்கும், சுயநயம் பாராட்டாத கனவான்களாலும், கவர்ன்மெண்டாராலும் இம்முறையில் நல்ல வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு பிரேரேபிக்கப்படும் தீர்மானங்களில், ஸென்ட்ரல் பாங்கிகள் டிபன்சர் கடன்கள் உயர்த்துவதற்கு கவர்ன்மெண்டார் அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று ஒன்றிருக்கிறது. இதுஎனக்கு அபாயமுள்ளதென்று தோன்றுகிறது. ஐக்கியமுயற்சியானது உண்மையாய் அபிவிருத்தியடைய வேண்டுமானால், கவர்ன் மண்டாரின் உதவியைச் சார்ந்திருக்கக் கூடாது.

ஸென்ட்ரல் சங்கங்கள் பலமாயிருந்தால், என் தாங்களே கடன்களை. உயர்த்த முடியாது. இப்படிச் செய்தல், சங்கங்களின் இளைப்பைக்காட்டுகிறது. எல்லா விஷயங்களுக்கும் கவர்ன்மெண்டாரை எதிர்பார்ப்பது நல்லதல்ல. மெம்பர்களுக்குள் ஓர்வித ஒற்றுமை யிருந்தால், ஸிவில்கோர்ட்டுகளுக்கு கேசுகள் போகவேண்டியதில்லை. தணிக்கை செய்தல்கூட ஜனங்களேமுடிவில் கைக்கொள்ளவேண்டும். லோகல்டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்து வழும்படி செய்வது உங்கள்கடமை. மதராஸ் கான்பரென்ஸில், சங்க மேல்விசாரணை செய்தலும், தணிக்கையும், யூனியனிடம் ஒப்புவிக்க

வேண்டுமென்று தீர்மானித்ததைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். என்னுடைய எண்ணமென்னவென்றால், ஐக்கியமுயற்சியானது பலஹீனமாயில்லாமல் மிகவும் ஓங்கிவளர்ந்துகொண்டே வரவேண்டுமென்பதே. பின்வரும்முக்கியமான தீர்மானங்கள் கான்பரென்ஸில் தீர்மானிக்கப்பட்டன:—

i. கோவாப்ரேடிவ் சங்கங்கள்பணம் போஸ்டாபீஸ் வழியாய் அனுப்புவதற்குத் தகுந்த செளகரியங்களிருக்கும்படி, பம்பாய் ராஜதானியில் நடப்பதுபோல், ஒரு அணுவுக்குக் குறைந்த தொகையையும் மணியாடர்மூலமாயனுப்பும்படியாகவும், பணவுதவும் சங்கங்களுக்கு அனுப்பும் மணியாடர்களின் கமிஷனில் ஓர் பாகம் அவைகளுக்கு ரிபேட்டாக திருப்பிக்கொடுக்கவேண்டுமென்றும், உத்திரவளிக்க கவர்ன்மெண்டாரை இந்த கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

ii. இன்னும் கொஞ்சகாலம் வரையில், தணிக்கை செய்வதற்கு கவர்ன்மெண்டார் வரிவிதிக்கக் கூடாதென்றும், அப்படிவிதிப்பதை கவர்ன்மெண்டார் வற்புறுத்தினால், ஸெண்ட்ரல்பாங்கிகளுக்கும், நாணயச் சங்கங்களல்லா மற்றவைகளுக்கும் 100-க்கு 4 வீதத்திற்கு மேற்போகாமலும், மற்றச் சங்கங்களுக்கு 100-க்கு 2 வீதத்திற்குக்கு அதிகப்படாமலும், தணிக்கை வரிவிதப்ப தல்லதென்றும், ரூ. 100-க்கு அதிகமில்லா க்ஷேமநிதிகளையுடைய சங்கங்களுக்கு தணிக்கைவரி விதிக்கக் கூடாதென்றும் இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

iii. சேலத்தில் தோட்டிகள் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கத்தைப்போல், இந்த ஜில்லாவிலுள்ள முனிஸிபாலிடிகளிலும் இம்மாதிரிச் சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டுமென்று, முனிஸிபாலிட்டிகளை இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

iv. இங்கிலீஷிலும், தமிழிலும், கோவர்ப்ரேஷன் ஸம்பந்தமாய் ஓர் கைப்புஸ்தகம் ஜனங்களின் நன்மைக்காக தயார் செய்யவேண்டு கவர்ன்மெண்டாரைச் கேட்டுக் கொள்ளப்படுகிறது. அந்த புஸ்தகமானது, சங்கமானேஜர்களுக்கும் உதவும்படி, சங்கநடவடிக்கைகளைப் பற்றியும், அவைகள் விஷயமான உத்திரவுகளையும், உடைத்தாயிருக்கவேண்டும்.

v. கூட்டுமுயற்சிச் சங்கங்களை, மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனில் பங்குகளெடுத்தும், வேறுவழிகளில் அதற்கு உதவியும், அதின்வேலையை ஒழுங்காய்ச் செய்யும் வண்ணம் அதைபோஷிக்கவேண்டுமென்று இக்கான்பரென்ஸானது கேட்டுக்கொள்ளுகிறது.

vi. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களை விவசாயச் சங்கங்களல்லாத மற்றவைகளில் மெம்பர்களாகி டிபாஸிட்டுகள் செய்து வரலாமென்ற உத்திரவுக்கு கவர்ன்மெண்டாருக்கு வந்தன மளிப்பதுடன், அவர்களை மற்ற



சங்கங்களிலும் சேரும்படி உத்திரவளிக்க வேண்டுமென்று இக்கான்பரென்ஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

vii. கோவாப்ரேடிவ் சங்கங்கள் ஏற்கனவே தங்கள் எல்லைக்குள்ளிருக்கும் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களின் நிர்வாகத்தையெடுத்துக்கொண்டு புதுப்பள்ளிக் கூடங்களை ஸ்தாபிக்கப் பிரயத்தனம் பண்ணவேண்டுமென்றும், லோகல்போர்ட்டுகள் முதல்முதலில் தங்கள் வசமிருக்கும் பள்ளிக்கூடங்களை இச்சங்கங்களிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றும் இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

## பெனுகொண்டா கான்பரென்ஸ்

வட ஜில்லாக்களில் இப்பொழுது வேலைசெய்துவரும் ஸ்பெஷல் டிப்டி கலெக்ட்டராகிய மிஸ்டர் T. ஸ்ரீனிவாஸராவ் அவர்கள் யோஜனையின்பேரில் பெனுக்கொண்டா தாலுக்காவிலுள்ள கோவாப்ரேடிவ் சங்கங்களினது டைரெக்ட்டர்கள் 1915ஹு பிப்பரவரிமாதம் 30 தேதி ஓர் கான்பரென்ஸில் கூடினார்கள். இக்கான்பரென்ஸின் நோக்கமாவது, சங்கங்களின் நிர்வாகத்திலிருக்கும் ஒழுங்கின்மைகளைக் காண்பித்து அவைகளுக்குப் பரிகாரம் தேடுவதாகும்.

பின்வரும் தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன:—

1. சங்கங்களின் கடன் நிலுவைகள் ஏராளமாயிருத்தலால், பஞ்சாயத்தார்கள் தங்கள் தங்கள் சங்கங்களின் மீட்டுங்குகளைக்கூட்டி தவணைகளின்படி கடன்களைத் திருப்பிக் கொடாதவர்களுக்கு சரிவரக்கொடுத்துவரும்படி வற்புறுத்தவேண்டுமென்று, இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

2. பஞ்சாயத்தார்கள் தங்கள்பேரிலும், தங்கள்பந்துக்கள், சிநேகிதர்கள் பேரிலும், எடுத்தகடன்கள் தவணைகளில் கொடுபடாதிருத்தலால், இம்மாதிரிசெய்வது தப்பான வழக்கமென்று கூறுவதுடன், நிர்வாகம் ஒழுங்காய் நடந்துவரும்படி தாங்களே சீக்கிரத்தில் கடன்பாக்கியையொழித்து மற்றவர்களுக்கு இதனால் ஓர் உதாரணம் காண்பிக்கவேண்டுமென்று இக்கான்பிரன்ஸ் நினைக்கின்றது.

3. மெம்பர்களுக்குள் சிக்கனமும், செட்டும் உண்டாகும் வண்ணம் பிராவிடெண்டு பண்டும், ஸேவிங்ஸ் டிபாஸிட்டும் பஞ்சாயத்தார்கள் தங்கள் சங்கங்களில் ஏற்படுத்த முயலவேண்டுமென்று இக்கான்பரென்ஸார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

4. வெளியிலிருக்கும் பணமுதவும் ஸ்தாபனங்களின் உதவியை எதிர்பார்ப்பதைக் காட்டிலும், ஸ்தலடிபாஸிட்டுகளை உயர்த்த பஞ்சாயத்தார் சிரமப்பட வேண்டுமென்று இந்த கான்பரென்ஸ் விரும்புகிறது.

## விளம்பர விகிதங்கள்,

கூட்டுறவுச் சங்கங்களுக்கு:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ, | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

மற்றவர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

## சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

சந்தாதார்கள் தயை கூர்ந்து தமது பாக்கியுள்ள சந்தாவுடன் இச்சம்புடம் ஆருக்குள்ள சந்தாவையும் அட்வான்ஸாய்க் கொடுத்துதவும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
மானேஜர்,
சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி ஆபீஸ்,
அருணாசல ஆசாரி தெரு,
திருவல்லிக்கேணி.

அநுபந்தம்

# கோயமுத்தூர் ஸர்க்கில் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

1915ஹ, ஏப்ரல் மாதத்தில் கோயமுத்தூர் ஸர்க்கில மூன்றாவது கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் கோயமுத்தூரில் மிஸ்டர் A. G. கார்டியு அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. 200 டெலிகேட்டுகளும் வெளியிடங்களிலிருந்து பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். அக்கிராசனாதிபதியின் பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு.—

இந்த ராஜதானியில் ஐக்கிய முயற்சித் தொழிலில் நாணயமொன்றுதான் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இது கோவாப்ரேடிவ் இலக்ஷணங்களை ஜனங்களுக்குள் பரவச்செய்வதில் மற்றதேசங்களில் போல் அதிக உதவி புரியாதிருந்தாலும், விவசாயத்துக்கும் தொழிலுக்கும் பணம் மிகவும் குறைந்த வட்டிக்குக் கிடைப்பதற்கு ஏது வாயிருக்கிறது. வியாபாரத்தினால் இப்பொழுது இந்தியாவில் பணம் பெருகிவருகின்றது. ஜனங்கள் தாங்கள் இரகசியமாய்ச் சேர்த்துப் புதைத்துள்ள செல்வத்தை இவ்வழிகளில் உபயோகப்படுத்தினால் இந்தியர்களடையும் நற்பயன் மிகவுள. கடன் வாங்கின பணத்தை விவசாய விஷயமாய் நிலத்தை சீர்திருத்தல் முதலிய ஸ்திர அபிவிருத்தியில் செலவு செய்தல் எல்லாவற்றிலும் சிறந்தது. ஐக்கிய இயக்கத்தினால் செல்வம் விருத்தியாவதைத் தவிர ஜனங்களுக்குள் சிக்கனம், ஒற்றுமை, தொழில் செய்யும் தன்மை, நாணயம், முதலிய நற்குணங்கள் ஏற்படுகின்றன. ஜனங்கள் வெளியுதவிகளை நாடாமல் தங்கள் தாங்களே இம்முறைகளில் உழைக்கப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டாற்தான் கோவாப்ரேஷனின் இலக்ஷணங்கள் பலிதமாகும். கவர்ன்மெண்டாரின் உதவியை அதிகமாய் எதிர்பார்க்கக் கூடாது. இனிமேல் சங்கபரிசோதனை செய்வதை ஜில்லா பாங்கிகள் வரவர யெடுத்துக் கொள்ளுமென்று நம்பப்படுகிறது. தணிக்கை செய்யும் பொறுப்பை சங்கங்கள் தாங்களே வகித்து வேறுவித யேற்பாடுகளை உண்டாக்கும் வரையில் கவர்ன்மெண்டார் தணிக்கை செய்து வருவார்கள். இதற்குமேல் கவர்ன்மெண்டாரால் உதவிபுரிய முடியாது. மற்ற விஷயங்களைப்போல் கவர்ன்மெண்டார் இம்முயற்

சியிலும் மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென வெகு ஜனங்கள் நினைக்கிறார்கள். அது தப்பான எண்ணம். ஜனங்களுக்குள் ஐக்கிய முயற்சியின் நோக்கங்கள் பரவவேண்டுமானால், ஜனங்களின் பிரயாசையாலாகவேண்டுமேயொழிய, கவர்ன்மெண்டாரை முழுவதும் நம்புவதாலாகாது.

பின்வரும் முக்கியமான தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன.—

1 ரெஜிஸ்ட்ராரவர்கள், சென்ற அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டில் கூறியுள்ளபடி சங்கங்களிலிருந்து வாங்கப்பட்ட கடன்கள் குறித்த தவணைகளில் திருப்பிக் கொடுபடவில்லையென்று இக்கான்பரென்ஸ் அநுதாபப்பட்டும், அதை ஒழுங்குபடுத்த பின்கூறப்படும் ஏற்பாடுகளை சங்கங்களெடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறது:—

*a*. பணம் வேண்டிய காரியங்களுக்குத் தகுந்தபடி, கடன் திருப்பிக் கொடுபடும் தவணைகளை நிர்ணயித்தல்.

*b*. கடன்காரர்களுக்கு மறுபடி கடன் கொடாதிருத்தல்.

*c*. ஒழுங்காய் கடன்களை திருப்பிக் கொடுப்பவர்களுக்கு வட்டியிற் தள்ளிவாங்குதல்.

*d*. மேற்கூறியவைகளெல்லாம் ஒழுங்குபடுத்த முடியாமற்போனால் சங்கங்கள் கடன் வாங்கக்கூடும் தொகையெல்லையைக்குறைக்கவாவது அல்லது வாங்கும் அதிகாரத்தை நிறுத்திவைக்கவாவது செய்தல்.

2. ஐக்கிய முயற்சித்தொழிலின் கல்வியை பின் சொல்லப்படுபவண மூலமாய் ஜனங்களுக்குள் பரவச்செய்ய வேண்டுமென பொதுவில் கிராமச்சங்கங்களையும், விசேஷமாய் ஸெண்ட்ரல் சங்கங்களையும், இக்கான்பரென்ஸ் கேட்டுகொள்ளுகிறது:—

(*a*) கிராமச்சங்கங்களின் மஹாசபைகளைக்கூட்டிப் பிரசங்கம் செய்தல்;

(*b*) அடிக்கடி பிரசங்கம் செய்தல்; கோவாப்ரேஷன் விஷயமாய் துண்டுபத்திரிகைகளை இனமாய் வெளியிடுதல்;

(*c*) சங்கங்களின் நிகரலாபத்தில் 100-க்கு 7½ விதத்தை பொது நிதியாகப் பிரத்தியேகப்படுத்தி, அதை தகுந்த புஸ்தகசாலைகள் ஏற்படுத்துவதிலும் பத்திரிகைகள் வர வழிப்பதிலும் உபயோகப் படுத்துதல்.



3. ஐக்கிய இயக்கத்தை கவர்மெண்டார் முடிவில் ஜனங்களின் பொறுப்பில் ஒப்புவித்தலை முன்னோக்கி, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாத தகுந்த கனவான்களை கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களாக நியமித்து ஒவ்வொரு ஜில்லாவையாவது அல்லது அதில் ஓர் பாகத்தையாவது அவர்களதிகாரயெல்லையாகக் கொடுத்து அவர்கள் சிப்பந்திச்சம்பளம், பிரயாணச்செலவு இவைகளை உதவி, கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

4. கோவாப்ரேடிவ் சங்கங்களை மேல்விஜாரணை, பரிசோதனை, முதலியவைகளை நன்றாய்ச் செய்யத் தகுந்த இனிஸ்பெக்டர்கள் கிடைக்கும் வண்ணம் அவர்களை முதலில் பிரத்தியேகமாகப்பழக்கி, சில பரிக்ஷைகளில் தேறவேண்டுமெனச் செய்வது நல்லதென்றும், அதுவிஷயமாக வேண்டிய ஏற்பாடுகளெடுத்துக் கொள்ளவேண்டுமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

4. இப்பொழுது வேலைசெய்து வரும் கோவாப்ரேடிவ் பஞ்சாயத்தாரிடம், டிஸெண்டிரலிஸேஷன் கம்மிஷனும், மதராஸ் பாரெஸ்டு கம்மிட்டியும் சிபார்சு செய்தபடி, கிராமக்கல்வி, சுகாதாரம், கிராம நிர்வாகம், பாரெஸ்டுகளை நிர்வகித்தல், முதலிய விஷயங்களை, ஒப்புவிப்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசிப்பது நல்லதென, கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

5. கோவாப்ரேடிவ் கட்டிடச் சங்கங்களுக்கு குறைந்த வட்டி வீதம் கடன் கொடுப்பதாய் கவர்ன்மெண்டார் ஒப்புக் கொண்டதற்கு இக்கான்பரென்ஸ் மாட்சிமை தங்கிய கவர்னரவர்களுக்கு வந்தனமளிக்கிறது.

6. தபால் மணியார்டர் மூலமாய் பைசாக்களையும் கோவாப்ரேடிவ் சங்கங்கள் அனுப்பும்படி உத்திரவிட வேண்டுமென கவர்ன்மெண்டாரைக்கேட்டுக் கொள்ளுகிறது.

பிறகு கார்டியு துரையவர்கள் முடிவுப்பிரசங்கத்தில், சங்கங்களிலிருந்து கடன் வாங்கப்பட்ட தொகைகள் சரியான தவணைகள் பிரகாரம் கொடுபட வேண்டுமென்றும், பாலர்களுக்கு கோவாப்ரேஷன் விஷயமான கல்வியைக் கற்பித்தால் பின்பு பெரியவர்களானவுடன் அவர்களே அதை வெறுப்பார்களாதலால், அவர்களுக்கு அக்கல்வியை கொடுக்கக் கூடாதென்றும், கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் வேலைகளுக்குத் தகுந்த கனவான்கள் கிடைத்தால், அதைப்பற்றிய தீர்மானம் மிகவும் சிறந்ததென்றுங் கூறி; எல்லோருக்கும் வந்தனமளித்தவுடன், கான்பரென்ஸ் கலைந்தது.

## கிருஷ்ணாஜில்லா கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

கிருஷ்ணா ஜில்லா முதல் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ், சென்ற ஏப்ரெல் மாதத்தில் ஆனரபில் மிஸ்டர் E. L. பக்ளி அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. சங்கங்களிலிருந்து டெலிகேட்டுகளும், பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். அவர்களுள் கிருஸ்தவப்பஞ்சமர் சங்கங்களிலிருந்து 50 பிரதிநிதிகளிருந்தார்கள்.

அக்கிராசனாதிபதி மிஸ்டர் பக்ளிதுரையவர்களின் பிரசங்கத்தின் சாராம்சத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் மிஸ்டர் நாகேஸ்வரராவ் அவர்கள் இந்த ஜில்லாவிலுள்ள சங்கங்களின் சென்ற வருஷத்திய நடவடிக்கைகளைப் பற்றி விவரித்துக் கூறினார். ஆகையால் நான் தீர்மானங்களைப் பற்றி மாத்திரம் பேசுகிறேன். இஜ்ஜில்லாவிலுள்ள ஜனங்கள் ஐக்கிய இயக்கத்தை பரவச் செய்வதில் மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டு இது விஷயமாய் மிகவும் ஒற்றுமையுடன் வேலை செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இவ்விதம் உழைக்கவேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. ஆனால் ஐக்கிய முயற்சியைப் பற்றிய கல்வியை ஜனங்களுக்குக் கற்பித்தால், ஏற்படும் சங்கங்கள் பலஹீன மடையாது; ஜனங்களுக்கும், ஐக்கிய முயற்சியின் நற்பயன்கள் கைகூடும்; இவ்வகைச் சங்கங்களின் பொறுப்பைவகிப்பது கவர்ன்மெண்டாரதல்ல, தங்களுடையதே யென்று நினைத்து வேலை செய்வார்கள். எலிமெண்டரி பள்ளிக் கூடங்களில் இந்தப் படிப்பை ஓர் பாடமாக வைக்கவேண்டுமென்று அநேகர் அபிப்பிராயப் படுகிறார்கள். சிறு பய்யன்கள் ஏற்கனவே யிருக்கும் பாடங்களை வருத்தத்துடன் வாசித்து வருகிறார்கள். இம்மாதிரிப் படிப்புக்களை, இவர்களுக்குத் தகுந்த பிராயம் வந்த பிறகு தான் வாசிப்பது நல்லது. நீங்கள் தீர்மானித்திருக்கிறபடி யூனியன்கள் ஏற்படுவது ஜனங்கள் தாங்களே ஐக்கிய முயற்சித் தொழில்களை பாதுகாக்கிறார்களென்பதற்க் கறிகுறியாகும். கூட்டு முயற்சித் தொழிலில் நாணத்தைத் தவிர வேறு முறைகளில் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறீர்கள்; நீங்கள் அம்மாதிரிச் சங்கங்கள் வேண்டுமென்று உங்களுடைய நோக்கங்களால் தெரிவித்தால், ரெஜிஸ்ட்ராரவர்கள் அதற்கு வேண்டியவற்றைச் செய்வாரென்பதற்குத் தடையில்லை. நீங்கள் கட்டணவரியையும், பங்குதனத்தையும் இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் குறைக்கவேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறீர்கள். கட்டணவரி, அணா நான்கும், பங்கின் விலை விசேஷமாய் ரூ 1-ம், சில விடங்



களில் ரூ 2-ம், ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை இன்னும் குறைப்பது சாத்தியமாகுமென்று எனக்குத் தோன்றவில்லை. சங்கங்கள் தங்கள் ஸ்தலடிபாஸிட்டுகளிலும், தொழில் தனத்திலும் சார்ந்திருக்க வேண்டியிருப்பதால், இவைகளைக் குறைக்க நினைப்பது தப்பாகும். மற்றொருதீர்மானத்தில், கோவாப்ரேடிவ் சங்கங்களிடம் வேறு பொதுக் காரியங்கள் விஷயமாய் செலவு செய்வதை ஒப்புவிக்க வேண்டுமென அபிப்பிராயப் படுகிறீர்கள்,

இது ஐக்கிய முயற்சிக் காரர்களின் கடமை யிலிருந்து ஒதுங்கியிருத்தலால், நான் இதை அங்கீகரிக்கவில்லை. மெம்பர்கள் தங்கள் சொந்தகாரியங்களைப்பார்த்த பிறகு, சங்கத்தின் வேலைகளை கவனிப்பதற்கே நேரமில்லாததினால் அநேகவிடங்களில் அலக்ஷியஞ்செய்கிறார்கள். இப்பொறுப்புகளையும் இவர்களிடம் ஒப்புவித்தால் வேலைகள் சரிவரநடவாதென்பது நிச்சயம். அப்படி வேலைகள் ஒழுங்காய் முடிந்தாலும், அதினால் சங்கத்துக்கு யாதொரு பயனுமில்லை. ஆனால் சரிவரநடவாமற்போனால் அபகீர்த்திவரும். தணிக்கைவரி கவர்ன்மெண்டார் விதிப்பது மிகவும் குறைவாயிருப்பதால், அதற்குத் தடைசொல்வது நியாயமல்ல.

பிறகு அநேகதீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன. அவைகளாவன:—கடன்களை கெடுத்தப்பாமல் குறித்த காலத்தில் திருப்பிக்கொடுத்தல், ஆந்திராதேசத்தில் ஐக்கிய யியக்கத்தை பரவச்செய்தல், நாணயத்தைத்தவிர இம்முறையில் வேறு சங்கங்களை ஸ்தாபித்தல், ஸ்தலடிபாஸிட்டுக்கள் ஏராளமாய் வந்துவிழ யேற்பாடுசெய்தல், கவர்மெண்டார் தணிக்கைவரி விதியாமலிருத்தல்.

---

## செங்கற்பட்டுஜில்லா கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

செங்கற்பட்டுஜில்லா ஏழாவது கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் சென்ற மேமாதத்தில் காஞ்சீபுரத்தில் நடைபெற்றது. சங்க டெலிகேட்டுகளும், உத்தியோகஸ்தர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். முதல்நாள் அக்கிராசனாதிபதி திவான்பகதூர். M. ஆதிநாராயணய்யா அவர்கள் பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு.—

செங்கற்பட்டுஜில்லாவில் சுமார் 236 சங்கங்களிருந்தபோதிலும், அதற்கு ஜில்லாபாங்கி யொன்று இன்னமும் ஏற்படவில்லை. மதராஸ் ஸென்ட்ரல்பாங்கியானது சமீபத்திலிருப்பதாலும், அது சங்கங்களுக்குவேண்டிய பணவுதவிகளைச் செய்துவந்ததாலும், ஜில்லாபாங்கி ஏற்

படுவதற்கு முகாந்திரங்களுண்டாக வில்லை. இது ஸ்தாபனமாவதற்கு இப்பொழுது காலம் வந்துவிட்டது. ஜில்லா பாங்கிங் யூனியனின் கடமைகளும் நடவடிக்கைகளும் நாம் அறிந்திருக்கிறோம். சங்கங்களைத் தவிர தனிநபர்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ளலாம். இது விஷயமான ஸ்கீமைப்பற்றி ரெஜிஸ்ட்ராரவர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டது. நாளை கான்பரென்ஸில் இதைப்பற்றித் தெரியவரும்.

ஆனரபில் திவான் பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை யவர்கள் பேசியதாவது.—

இதற்கு முன்னமே அநேக தடவைகளில் செங்கற்பட்டுக்கு ஜில்லாபாங்கி ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று என்னைக்கேட்ட பொழுது, லேவாதேவித்தொகையில் நான்கில் ஓர்பாகமாவது ஸ்தல டிபாஸிட்டாக அப்பாங்கியில் வந்து விழுமாயென்பதை கவர்ன்மெண்டாரின் நோக்கப்படி யோஜித்திருந்தேன். இவ்விதயோஜனையில்லாமல், தெனாலி, சேலம், ஜில்லாபாங்கிகள் ஏற்பட்டதினால் பணத்திற்கு முடைகள் வந்தன. இப்பொழுது இரண்டு விதமான ஜில்லாபாங்கிகளிருக்கின்றன. மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன்பாங்கியை ஓர் ராஜதானி பாங்கியாகச் சொல்லலாம். இது ஜில்லாபாங்கிகளுக்கும், ஜில்லாபாங்கிகளில்லாவிடங்களில் சங்கங்களுக்கும், பணவுதவிசெய்து வருகின்றது.. இந்த ராஜதானியில் 7 ஜில்லாபாங்கிகளிருக்கின்றன. சேலம், கோயமுத்தூர், திருச்சினாப்பள்ளி, தெனாலி, இவைகளிலுள்ள ஜில்லாபாங்கிகளில் தனிநபர்கள் மாத்திரம் பங்குதாரர்களாயிருக்கலாம். இவைகள்முதல் முதலில் ஏற்பட்டவைகள். பின்பு மதுரை ராமனாதபுரம் பாங்கியானது ஏற்படும்பொழுது கிராமச்சங்கங்களையும் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டது. பின்பு இம்மாதிரியில் கும்பகோணத்திலும், தென்கன்னடத்திலும் ஜில்லா பாங்கிகள் ஏற்பட்டன.

இவ்வித பாங்கிங் யூனியனில் ஓர்வித இடையூறிருக்கின்றது. மெம்பர்களாயுள்ள சங்கங்கள் அதிக டிவிடெண்டை யுத்தேசிக்காததினால், தணிக்கை, பரிசோதனை முதலியவைகள் விஷயமாய் செலவு செய்வதை ஆக்ஷேபிக்காது. ஆனால் மெம்பராயிருக்கும் தனி நபர்கள் டிவிடெண்டு அதிகமாய்ப் பெறுவதில் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பார்கள். ஆகையால் கவனித்து நடவடிக்கைகளை ஒழுங்காய் நடத்தவேண்டும்.

இந்த ஜில்லாவில் பல சங்கங்களிருக்கின்றன. இவைகள் தங்கள் கடன் வாங்கும் சக்திக்குத் தகுந்தபடி பங்குகளெடுத்துக் கொண்டால் ரூ. 1½ லக்ஷம் பங்குமுதலாகும். இப்படி யேற்பட்டால், பணவுதவிக்கு வெளியிற் போகவேண்டியதில்லை.



பிறகு ஜில்லா பாங்கிங் யூனியன் ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டது.

மறுநாள் கான்பரென்ஸானது ராவ்பகதூர் T. ராகவய்யா அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. அவர் கூறியதாவது:—செங்கற்பட்டு ஜில்லாவில், 222 கிராம நாணயச் சங்கங்களும், 5 டவுன் பாங்கிகளும், ஒன்று நெசவுக்காரர்களின் யூனியனும், கட்டிடச் சங்கமொன்றுமிருக்கின்றன. 82 சங்கங்கள் சேர்ந்துள்ள 5 யூனியன்கள் அவைகளின் மேல்விஜாரணையைப் பார்த்துவருகின்றன. பாங்கிகளுக்கும் சங்கங்களுக்கும் இவைகள் நடுவில் நின்று கொண்டு பணம் கடன் வாங்கிக் கொடுக்கின்றன. சென்ற வருஷத்தில் இந்த ஜில்லாவிலுள்ள சங்கங்கள் ரூ 4,95,310 கடன் கொடுத்தன. இவைகளில் முன்கடன்களைத் தீர்க்கக்கொடுத்தது ரூ. 2,38,837. ஐக்கிய இயக்கத்தை இந்த ராஜதானியில் பரவச்செய்வதில், செங்கற்பட்டு ஜில்லா முதன்மையா யுழைத்துவந்திருக்கின்றது. ஆனால் மற்ற ஜில்லாக்களில்போல், நாணயத்தைத்தவிர வேறு ஐக்கிய முறைகளில் இங்கு சங்கங்கள் அதிகமா யேற்படவில்லை. கோவாப்ரேடிவ் இலக்ஷணங்களை நன்கறிந்து வேலைசெய்தால் எல்லாவித சௌகரியங்களுமுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை.

கடன்களை திருப்பிக் கொடுப்பதில், வரவர, ஒழுங்காயிருந்துவருவதைக் கேட்க மிகவும் திருப்திகரமா யிருக்கிறது. ஆனால் விவசாய விஷயத்தில் கோவாப்ரேடிவ் முறைகளை வரவர உபயோகப்படுத்த வேண்டியது உங்கள் முக்கியமான பொறுப்பாகும். இந்த ஜில்லாவிலுள்ள ரயத்துக்கள் மிகவும் யேழையாயும், இறைப்பு சாகுபடியை நம்பியுமிருப்பதினால், இவர்களுக்கு விவசாயக் கூட்டுத்தொழில் முயற்சி அவசியமா யேற்படவேண்டும்.

பின்வரும் முக்கியமான தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப்பட்டன:—

1. நெசவுக்காரர்களின் சங்கத்துக்கு கவர்ன்மெண்டார் கடன் கொடுத்தாவது அல்லது வேறுவழிகளில் உதவிபுரியவாவது செய்ய வேண்டுமென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

2. விவசாயக் கருவிகள், எரு, விதைகள் முதலிய சாமான்களை வரவழிக்கவும், விளைபொருள்களை விற்கவும், சாகுபடி செய்வதற்கு நவீன வழிகளை ஜனங்களுக்குக் காண்பிக்கவும், சங்கங்கள் யேற்படத் சிறந்த தருணம் வந்துவிட்டதென இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

# விளம்பர விகிதங்கள்,

கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 10 | 0 | 0 | ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

மற்றவர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

# சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

ஆறுவது சம்புடம் இத்துடன் முடிவுபெற்றது. சந்தாதார்கள் தயை கூர்ந்து தமது பாக்கியுள்ள சந்தாவுடன் இச்சம்புடம் ஆறுக்குள்ள சந்தாவையும் கொடுத்துதவும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு
மானேஜர்,
சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி ஆபீஸ்.
அருணாசல ஆசாரி தெரு,
திருவல்லிக்கேணி.

# பத்திராதிபர் அறிவிப்பு.

மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப் ரேடிவ் யூனியனால் பிரசுரிக்கப்பட்ட 'சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி'யில் இது முதற் பிரதியாகும். ஐக்கிய முயற்சியின் இலக்ஷணங்களை ஜனங்களுக்குள் வியாபிக்கச் செய்வதற்கும், சங்கங்களின் சௌகரியங்களைப் பாதுகாப்பதற்கும், சாதாரணமாய் ஐக்கிய யியக்கத்தை மிகவும் ஒழுங்கான அஸ்திவாரத்தில் வைப்பதற்கும், 1914௵ ஜனவரி மாதம் 4 தேதியில், இரண்டாவது சென்னை மகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் நடை பெறுங் காலத்து, இவ்யூனியன் ரெஜிஸ்ட்ரார் செய்யப் பட்டு ஸ்தாபிக்கப்பட்டதை நம்நேயர்கள் அறிந்திருக்கலாம். புல்லடீனைப் பிரசுரித்தல் தன்னுடைய நோக்கங்களைச் சார்ந்திருப்பதான எண்ணத்துடன், இதுவரையிற் பிரசுரித்து வந்த திருவல்லிக்கேணி அர்ப்பன் கோவாப் ரேடிவ் சங்கத்தையும், கூட்டுத்தொழில் முயற்சி சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரவர்களையும், புல்லடீன் நிர்வாகத்தையும், பதிப் பித்தலையும் தன்னிடம் கொடுக்கும்படியாய் இவ்யூனியன் கேட்டுக் கொண்டது. இவர்கள் சம்மதத்தின் பேரில், கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்துடன் சென்ற ஆகஸ்ட்டு மாதம் 15-தேதியில், இதை யூனியனிடம் மாற்றப்பட்டது.

ஆனரபில் மிஸ்டர் V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரி B. A. L. T., மிஸ்டர் K. B. ராமானுஜய்யர் M.A. B.L. L.T., திருவல்லிக்கேணி சங்கத்தின் பொருட்டு புல்லடீனைப் பிரசுரித்து வந்த மிஸ்டர் V. S. ராமஸ்வாமி சாஸ்திரி B.A. B.L., ஆகிய இவர்கள் சேர்ந்துள்ள சப் கம்மிட்டி ஒன்று புல்லடீனை ஒழுங்காய் நடத்தி வரும்படி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இம்மாறுதல் விஷயமாய் ரெஜிஸ்ட்ரார் சிபார்ச்சு செய்யும் பொழுது, யூனியனின் மெம்பர்கள் பெரும்பாலும் சங்கங்களாயிருப்பதால், இப்பத்திரிகையானது மிகவும் உபயோகமுள்ளதாயும் ஜனங்களபிமானிக்கத் தகுந்ததாயு மிருக்குமென நம்பப்படுவதை அவர் கூறியிருக்கிறார். இவ்வுத்தேசம் முடிவுபெற யூனியன் தன்னாலியன்ற வரையில் வேலை செய்து வரும். தமிழ், தெலுங்கு, பிரதிகளை இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் அதிகச் சுயர்ச்சியாயும், ஜனங்களைக் கவரும்படியாயுமிருக்க செய்யக் கருதப்பட்டிருக்கிறது. ஐக்கிய முறை விஷயமாய் வியாசங்களும், கடிதங்களும், முக்கிய

சங்கங்களைப்பற்றிய சங்கதிகளும், ரிபோர்ட்டுகளும், படங்கள முதலானவைகளும், சந்தோஷமாய் வந்தனத்துடன் பெற்று, பத்திராதிபர் நோக்கத்தின்படி, பிரசுரஞ் செய்யப்படும். சேப்பாக்கத்திலிருந்த ஸெண்ட்ரல் விவசாய கம்மிட்டியானது முறிவடைந்து தன் பாக்கி சொத்துக்களை யூனியனிடம் கொடுத்து விட்டது. ஆகையினல் யூனியன் தன் நோக்கங்களுக் கிடையூறன்னியில் விவசாய விஷயங்களையு மபிவிருத்தி செய்ய ஆவலுடையதாயிருக்கிறது.

நேயர்களும், பொது ஜனங்களும், ஒத்துமையா யுழைத்து இதற்குதவி புரிய யூனியன் வேண்டுவதுடன், புல்லடீனை மாற்றியதற்கு திருவல்லிக்கேணி அர்ப்பன் கோவாப் ரேடிவ் சங்கத்துக்கும், ரெஜிஸ்ட்ராரவர்களுக்கும், கவர்ன்மெண்டாருக்கும் இச்சமயம் வந்தனமளிக்க விரும்புகிறது.

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாப்ரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் VII] 1915௵ செப்டெம்பர் ௴ [இலக்கம் 1.

## மதராஸ் ஐக்கிய முயற்சியைப்பற்றி

### ஸர் H. W. உல்பு துரையவர்களின் அபிப்பிராயம்.

1914-15௵த்து சென்னை ராஜதானி கோவாப்ரேஷன் ரிபோட்டின் காப்பி ஒன்றை (24—3—15) பெற்றுக்கொண்டதா யெழுதிய கடிதத்திலுள்ள பின்வரும் குறிப்புகள் மிக்க ஆவலுடன் ஐக்கிய முயிற்சிக்காரர்களால் வாசிக்கப்படும்:—

நீங்கள் சென்ற வருஷரிபோர்ட்டை அனுப்பியதற்கு நான் வந்தனமளிக்கிறேன். முன் ரிபோர்ட்டுகளைப்போல் இதையும் அதிக ஆவலுடன் வாசித்தேன். 'தூங்கும் இராஜதானி' என்று சென்னையை முன்காலத்திற் கூறினது, ஐக்கிய முயற்சி விஷயத்தில் கொஞ்சமும் பொருந்தாது. இவ்விஷயத்தில் மிகவும் சுறு சுறுப்புடன் அபிவிருத்தியடைய வேலை செய்த முதன்மையான இராஜதானிகளில் இது ஒன்ருகும். இதின் ஆரம்பகாலத்தில் யேற்பட்ட வெவ்வேறுவ்கை ஸ்தாபனங்கள் ஒழுங்கானவழிகளில் இப்பொழுது கொண்டுவரப்பட்டதற்கு நான் விசனப்படவில்லை.

இப்பொழுது நீங்கள் ஆலோஜிக்கும் முக்கிய விஷயமானது பரிசோதனையும் அதைப்பற்றியவைகளு மென எனக்குத் தோன்றுகிறது. கடன்களை தவணைகள்தோறும் ஒழுங்காய்த் திருப்பிக்கொடுத்தலை கட்டாயப்படுத்துவதில் ஜனங்கள் கவலையெடுத்துக் கொள்ளவில்லையெனத் தோன்றுகிறது. இதில் அதிக அபாயிருக்கிறதென்று நீங்கள் சொல்வது நியாயமே! இதை ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டும். இத்தாலிதேசத்தில் மிஸ்டர் லூஸட்டியுடன் பிரயாணஞ் செய்யும்பொழுது, நாங்கள் பார்வையிட்ட பாங்கிகள் ஒவ்வொன்றிலும், "பாக்கி வசூலிகவேண்டிய தொகையென்ன?" என்று அவர் கேட்டது இன்னும் என் ஞாபகத்திலிருக்கிறது. பாக்கி அதிகமென்று மறுமொழி கூறினல், அவர்முகம் சிறிதாய்ப்போகும். தகுந்த முகாந்திரங்களிலிருந்தால், கடன்களுக்கு மறுகெடுக்கள் கொடுத்துதவலாம் வருமைக்காலத்திலும், பஞ்ச சமயத்திலும் இவைகள் அதிகமாய் வேண்டப்படும். உத்திரவன்னியில் இவைகளைக் கொடுக்கக்

கூடாது தகுந்த காரணங்களிருக்க வேண்டியதவசியம். எதுவும் ரிகார்டிலிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாயிருத்தல் நல்லது.

தொகை வேண்டுமளவு இல்லாததினால் நீங்கள் கடன் வேண்டுபவர்களின் விண்ணப்பங்களை மறுத்தலில் அவஸ்தைகளிருக்கலாம். ஆனாலும், இரண்டு ரூபாய் செய்யும் காரியத்தை ஒரு ரூபாயைக் கொண்டு செய்ய முடியாது. இதனாற்தான், பணம் எப்பொழுதும் புறளும்படியாயிருப்பதற்கு, கடன்கள் சரியாய் திருப்பிக் கொடுக்கப்படவேண்டுமென்றும், ஸெண்ட்ரல் பாங்கிகளில் கையிருப்புப்பணம் அதிகமாயிருக்க வேண்டுமென்றும் கட்டாயப் படுத்தப் படுகின்றன. வெளிமார்க்கட்டின் பணங்களை வரவழிப்பதற்கும், சரிவரப்பிரித்து லேவாதேவி செய்வதற்கும், ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருக்கின்றன. பஞ்சாயத்தார்களும், ஸாவக்கார் தன்மையில்லாமல், ஐக்கியமுயற்சித் தன்மையில், பணம் லேவாதேவி செய்வதை அநுஷ்டிக்க இடமுண்டு.

கட்டிடச் சங்கங்களை பொது ஜனங்கள் பிரியப்படுவது நல்ல அறிகுறியாகும். உங்கள் நிதிகள், கட்டிடங்களின் உபயோகத்திற்காக யேற்படாதிருந்தபோதிலும், இப்பொழுதிருக்கும் நம்முடைய கட்டிடச்சங்கங்களின் மாதிரி முதலில் ஸ்தாபிக்கப்பட்டன. நன்றாய் நிர்வகிக்கப்பட்டு வந்தால், இம்மாதிரி ஸ்தாபனங்கள் அதிக நன்மைகளை ஜனங்களுக்கு விளைவிக்காதவைகளாயிருந்தபோதிலும், மிகவும் ஸ்திரமாய் நிற்கக்கூடியவைகள்.

உங்கள் ராஜதானியில் விவசாயிகளுக்கல்லாத மற்ற சங்கங்கள் மிகவும் அபிவிருத்தியடைந்திருப்பது மிகவும் திருப்திகரமானது.

லேவாதேவி செய்யும் மற்ற நாணய ஸ்தாபனங்களுடன் இப்பாங்கிகள் எதிராய் நின்றுகொண்டு பணம்வரும் வழிகளாகிய டிபாஸிட்டு, கடன்,முதலியவைகளுக்கு அதிக வட்டி கொடுக்கவேண்டி வருதல் வருந்தத்தக்கனதாகும். ஆகையாற்தான், கடன் வாங்குபவர்களுக்கு மாத்திரமிருக்கும் மெம்பராகும் உரிமையை, டிபாஸிட்டர்களுக்கும், டிபாஸிட்டு செய்வதாயொப்புக் கொள்ளுபவர்களுக்கும் விசாலப்படுத்தவேண்டியதவசியம். உங்கள் நடவடிக்கைகளுக்கு வேண்டிய தகுந்த பாதுகாப்புடனும், டிபாஸிட்டு செய்வதினாலேற்படும் நன்மைகளாலும், இவ்விதக் கஷ்டங்கள் நீங்குமென்று நான் நம்புகிறேன்.

இந்தியாவில் ஐக்கிய முயற்சியின் இயக்கம் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. ரெஜிஸ்ட்ரார்களின் ஊக்கத்திற்கும், நுட்பமான ஆலோசனைகளுக்கும் உங்கள் தேசமானது கடமைப்பட்டிருக்கிறது



# கூட்டுத்தொழில் மொத்த வியாபாரம்

ம-௱-௱-ஸ்ரீ O. M. வெங்கிடநாத அய்யங்கார் அவர்கள் எழுதியது

நம் ராஜதானியில் ஐக்கியமுயற்சியானது நாணயவகையிற் சற்று முன்னுக்கு வருகின்றதேயல்லாது நாணய வகையல்லாத மற்றவகையில் விருத்திக்கு வரவில்லையென்றே சொல்லவேண்டும். இப்பொழுது இந்த ராஜதானியில் செங்கல்பட்டு ஜில்லாவில் காஞ்சிபுரத்தில் நெசவுச்சங்கமும், மாம்பலத்தில் எண்ணை உற்பத்திச்சங்கமும், திருவல்லிக்கேணி கோயம்பத்தூர், மதுரை முதலிய சில இடங்களில் மாத்திரம் பண்டகசாலைகளும், மதுரை, கோயம்பத்தூர், இவ்விடங்களில் கட்டிடச் சங்கங்களும், இன்னும் சில இடங்களில் ஊழியக்காரர் சங்கங்களும்மாத்திரம் உற்பத்தியாகி இருக்கின்றனவே யொழிய மற்றப்படி, நாணயவகையைக் காட்டிலும் வேறு ஐக்கிய சம்பந்தமான பண்டங்கள் உற்பத்திசங்கங்களும் விற்பனைச் சங்கங்களும் உண்டாக வில்லை. இதற்குக் காரணம் நம்மில் பொது நலப்பிரியர்கள் முன்னுக்ரு ராமலிருப்பதாலும், ஒருவர் பொது நலமாகச் செய்ய முன்வந்தால் மற்றவர்கள் அதை விருத்தி செய்யாமல் பொறாமைப் பட்டு முன்னேற்றமடையச்செய்யாமல் பின்படுத்தும் படியான விதங்களை செய்கிறார்களே ஒழிய வேறு இல்லை.

இப்பொழுது இந்த ராஜதானியில் இருப்பவர்கள் பெரும்பாலர் விவசாயிகளே அல்லாமல் எல்லாம் உத்தியோகஸ்தர்கள் அல்ல. இப்படியிருக்க விவசாயிகளுக்காக ஆங்காங்கு நாணயச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமாந்திரங்களில் உற்பத்தியாகும் தான்யங்கள் வேறு வியாபாரிகள் கைவிலைக்கோ அல்லது கடனுக்கோ வாங்கிக்கொண்டு மற்றொரு மத்திய வியாபாரிக்குக் கொடுக்கப்பட்டு, அந்த மத்திய வியாபாரி சில்லரையாக விற்பவர்களுக்கு கொடுக்கிறார்கள். இதில் உற்பத்தி செய்யும் மனிதனிடமிருந்து குறைந்தது 3 வியாபாரிகள் கைமாறி பண்டம் கொள்பவருக்கு விலைக்காகப் போகிறது. இப்படி மத்தியில் குறைந்தது மூன்று வியாபாரக்காரர்கள் பண்டங்களை மாற்றுவதால் உற்பத்தி செய்கிறவனுக்கும் பண்டம் கொள்பவனுக்கும் லாபகரமாக இல்லாமல் நஷ்டமாகவே முடிகின்றன. உதாரணமாக நெல்லூர் ஜில்லாவில் உற்பத்தியாகும் நெல்லுகளை சில்லரை வியாபாரிகள் கைக்கொண்டு பெரிய முதலாளிகளுக்கு மொத்தமாகக் கொடுக்கிறார்கள். அவர்கள் சென்னையில் சில்லரை வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். சில்லரைவியாபாரிகள் ஜனங்களுக்கு சில்லரையாக விற்கிறார்கள். ஆகையால் மூன்று பெயர்கள் இந்த நெல்லின் மேல் தங்களுக்கு கிடைக்க வேண்டிய லாபமுதலியதுகளை ஈடு செய்கிறார்கள். இப்படிச் செய்வதில் பண்டத்தை உற்பத்தி செய்கிறவனும் குறைவான விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது. பண்டத்தை வாங்கு

கிறவனும் அதிக விலைக்கு நஷ்டப்பட்டு வாங்குகிறான். ஆகையால் நடுவில் இரண்டு வியாபாரிகள் நிற்பதைத் தடுத்து ஒரு வியாபாரியாக இருக்கும்படி நாம் பிரயத்தனம் செய்தோமானால் பண்டத்தை உற்பத்தி செய்கிறவனுக்கும் வாங்குகிறவனுக்கும் நஷ்டமில்லாமல் லாபகாமாகவேமுடியும். எப்பொழுதும் வியாபாரத்தில் ஓர் மத்தியஸ்தன் இல்லாமல் முடியாது. இப்படி மத்தியஸ்தானமாக ஒரு ஐக்கிய சங்கம் நின்றால் அது இந்த முயற்சிக்கு ஊன்றுகோலாக நிற்கும் என்பதிற் தடையில்லை. தற்காலம் செங்கல்பட்டு ஜில்லாவில் சுமார் 250 ஐக்கிய நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. மெம்பர்களுடைய தான்யங்களை விற்றுத்தான் நாணய சங்கங்களுக்குச் செலுத்தவேண்டிய வட்டி, முதல், இவைகளைச் செலுத்துகிறார்கள். இப்படி விற்கப்பட்ட தான்யங்களை மேல் கொள்ளவாவது, நடு வியாபாரக்காரர்கள் கைக்கொள்வதை நிறுத்தி மத்தியஸ்தராக ஒருவரையே ஏற்படுத்தலாம். அதாவது சென்னையில் (Wholesale Co-operative Society) கூட்டு மொத்த வியாபாரச் சங்கமொன்றை ஏற்படுத்தி அந்த சங்கத்திற்கு ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் சங்கங்களில் உள்ள மெம்பர்களின் தான்யங்களை ஒன்றுசேர்த்து வண்டியில் அனுப்பினால் அவைகளை சென்னையில் இச்சங்கமூலமாக மாற்றி பணம் நயமாக பெறலாம். இந்த தான்யங்களை விலைக்கு வாங்க திருவல்லிக்கேணி விற்பனைச் சங்கமும் காத்துக்கொண்டிருக்கிறதெனலாம். அந்த சங்கத்தில் மட்டமான அரிசிகள் தேவையாயிருக்கின்றன. அவைகளை அங்கே மாற்றி விடலாம். அல்லது மார்க்கெட்டில் விற்கலாம். இம்மாதிரி சரக்குகள் வந்தவுடன் சரக்கை வைத்துக்கொண்டு சரக்குக் கொண்டு வந்தவர்களுக்கு முக்கால்விலையை மாத்திரம் கொடுத்துவிட்டு விற்றபிறகு கணக்குகளைப் பார்த்து லாபத்துடன் மீதியைக் கொடுத்துவிடலாம். இப்படிச் செய்தால் எவ்வளவு லாபம் உண்டாகும் என்பதைப் பார்க்கலாம். பிறகு இப்படியே மற்ற ஜில்லாக்களினின்றும் எல்லாவித விளைபொருளை மொத்தமாய் விற்றால் ஐக்கிய கூட்டுறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் லாபம் உண்டாகும் என்பதிற் தடையில்லை.

இப்பொழுது சென்னையில் மேற்சொன்ன விஷயங்களுக்காக மொத்தமாய் விற்கும் விற்பனைச்சங்கம் ஒன்றை ஸ்தாபித்து சிலநாள் வரையில் வேலை செய்துபார்த்தால் அனுபவத்தில் இதின்விர்த்தியைக் காணலாம்.

சாதாரணமாக சென்னை ஒத்தவாடை முதலிய பேட்டைகளில் அரிசி வியாபாரம் செய்கிறவர்கள் எம்மாதிரிச் செய்கிறார்களென்று ஒட்டி கவனிப்போமானால் இதின் விபரம் நன்கு விளங்கும்.

இப்பொழுது இம்மாதிரிச் சங்கம் ஒன்று ஏற்பட சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஜில்லாக்களிலும் கூட்டுறவினர்



வேறு சிலர் சேர்ந்து இந்த கூட்டுறவின் சட்டத்தின்படி ஒரு கூட்டம் கூடவேண்டும். சுமார் 20, 25 பெயர்கள் சேர்ந்து சங்கம் ஏற்படுத்தினால் போதும். அந்த சங்கம் (லிமிடெட்) சங்கமாக இருக்கவேண்டும். அதில் ஒருபங்கு 20 ரூ. வீதம் 1,000 பங்குகள் உள்ள ரூ. 20,000 மூலதனமாக ஆரம்பித்தால் சென்னையிலும்மற்ற இடங்களிலும் வேண்டிய பங்குகள் இரண்டொரு மாதத்தில் சேர்ந்துவிடும். உடனே இக்காரியங்களை ஆரம்பித்து நடத்தினால் போகப்போக குறைவுகளை நிவர்த்தி செய்து மொத்தமாப் பண்டங்களை மாற்றியாவது விற்பனையாவது செய்து ஏழைவிவசாயிகளை முன்னுக்குக் கொண்டுவர முயற்சி செய்யலாம்.

இந்த விஷயம் சென்னையில் சுலபமாக ஆரம்பிக்கலாம் வேண்டுமானால் இதற்குக் கிளைச் சங்கமாக சில இடங்களில் ஏற்படுத்தலாம். இது விஷயமாக ஓர் ஏற்பாடு சில பெரிய சங்கங்களில் ஆரம்பிக்க ஒரு வழி முதலில் செய்யலாம். அதாவது சுமார் ரூ 25,000-க்கு மேல் லேவாதேவி செய்யும் சங்கங்களில் ஜாயிண்டு லோன்கள் என்று சொல்லப்பட்ட கூட்டுக்கடன்கள் வாங்கிக்கொண்டு இந்த வியாபாரம் துடங்கலாம். இது விஷயமாக சொல்ல வேண்டுமானால் ஒரு சங்கத்தில் 5 மெம்பர்களுக்குக் குறையாமலும் 10 மெம்பர்களுக்கு அதிகப்படாமலும் ஒன்று சேர்ந்து கூட்டும் தனிமையுமான ஜவாப்பின் பேரில் ரூ 5,000 அல்லது ரூ 10,000 வரையில் கடன்வாங்கி இம்மாதிரி வியாபாரமோ கைத்தொழிலோ அல்லது விவசாயமான விஷயங்களோ செய்ய ஆரம்பித்தால் சுலபமாக முடியும். இம்மாதிரிக் கடன்கள் பெறுவதற்கு ஒரு புதிய பைலாவை ஏற்படுத்திக்கொண்டு ஆரம்பிக்க வேண்டும்.

ஆகையால் நாமெல்லாம் நாணய வகையிலேயே அதிக காலத்தைப் போக்குவதோடு இனி கொஞ்சம்கொஞ்சமாய் பண்டங்கள் உற்பத்தி செய்வதையும் அவைகளை மாற்றுவதையும் கவனித்துவரப் பிரயத்தனப்படவேண்டும். ஏழை விவசாயிகள் கேவலம் பயிர் ஒன்றையே பார்த்துக்கொண்டிருந்தால் தங்களுடைய ஜீவனம் முழுவதும் கட்டாது. தவிரவும் கடன்களை ஒழிக்கவும் மாளாது. ஆனதால் விவசாயிகளுக்கு கொஞ்சம் ரொக்கமாக மாதம் அல்லது வாரம் வரும்படியாவது செய்ய ஆரம்பித்தாலன்றி விவசாயிகள் விருத்திக்குவர சாத்தியமாகாது. இதன் பொருட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தான்யங்களை மத்திய வியாபாரக்காரர்கள் பங்கிட்டுக்கொள்ளா வண்ணம் பண்டம் உற்பத்தி செய்பவனுக்கும் பண்டங்களைக் கொள்பவனுக்கும் மத்தியஸ்தராக ஓர் ஐக்கியச்சங்கம் மேல் சொன்னமாதிரியாக ஏற்படுத்தினால் தான் விவசாயிகள் முன்னுக்கு வரலாம். இதைக்குறித்து மற்றுமொரு முறை எழுதப்

# ஐக்கிய சங்கங்களின் இலக்ஷணங்கள்.

ம-ா-ா-ஸ்ரீ R. ஆனந்தராவ் அவர்களெழுதியது.

நமது தேச அபிவிருத்திக்கு இன்றியமையாத அநேக ஸ்தாபனங்களில் ஐக்கிய சங்கமும் மொன்றாகும். இம்மாதிரிச் சங்கங்கள் நம் முன்னோர் நாட்களில் கிராமந்தோறும் ஏற்பட்டு இச்சங்கத்தின் மூலமாய் கிராமப் பொதுக்காரியங்கள் நடந்து வந்த தென்றும் கிராம ஐக்கியப்பத்திரம் கெடாமலிருக்க வேணுமென்ற நோக்கத்துடன் ஒவ்வொரு கிராமத்திலும், சிற்சில நிலங்களையும் கிராமத் தோப்புகளையும் குரிம்பாசி வகையராக்களையும் கிராம ஜனங்களுக்குப் பொதுவாய் பாத்தியப்படுத்தி அதை ஐக்கிய முறையில் விருத்திக்குக்கொண்டுவர வேணுமென்ற நோக்கத்துடன் ஒரு கமிட்டியையும் ஏற்படுத்தி அக்கமிட்டிக்குத் தலைமைஸ்தானம் வகிப்பவருக்கு நாட்டாண்மையார் என்று பேர் வழங்கி வந்ததையும் ரூபிக்க கிராமங்களில் நாட்டாண்மையாரென்று சொல்லப்படும் குடும்பஸ்தர்களை இன்னும் பார்க்கலாம். இப்படி தேச அபிவிர்த்திக்கு ஏற்பட்ட சங்கங்கள் நாளடைவில் மறைந்துபோய் கிராமப்பொதுக்காரியங்களைப்பற்றி கவனிப்பார் இல்லாமல் பலபேர் சேர்ந்து செய்ய வேண்டிய வேலையை ஒற்றுமை குறைவினால் ஒவ்வொருவரும் தன் தன் அவசரத்தை உத்தேசித்து தனிமையாய் செய்ய நேரிட்டு ஒருவரை ஒருவர் யெதிர்பாராமல் நெல்லிக்காய் மூட்டை அவிழ்க்கப்பட்டது போல் சிதறுண்டு அவஸ்தைப்பட நேரிட்டதை நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் உணர்ந்து சிதரிப்போன ஐக்கியத்தை மறுபடியும் நிலைநிறுத்த சென்ற 1904வருஷத்தில் ஐக்கிய சங்கங்களின் விஷயமாய் ஷை வருஷத்து 10-வது ஆக்டை ஏற்படுத்தினார்கள். ஆக்ட் ஏற்படுத்தி யெந்த டிபார்டுமெண்டிலும் சேர்க்காமல் தனிமையாய் புது டிபார்டுமெண்டை உண்டுபண்ணி அதை நிர்வகிப்பதற்கு ஓர் இந்திய ரிஜிஸ்ட்ராரையும் நமது இராஜதானியில் நேமித்த நாள் முதல் இச்சங்கங்கள் நாளுக்குநாள் விருத்தியடைந்து ஐக்கிய இயக்கம் வேரூன்றி வருவது திருப்திகரமானது. தற்சமயம் ஏற்பட்டிருக்கும் சங்கங்களின் யெண்ணிக்கையை கவனிக்கும்போது நமது இராஜதானியின் விஸ்தீரணத்திற்கும் ஜனத்தொகைக்கும் கொஞ்சமும் காணாதென்று யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஆனால் விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையையும் உத்தேசித்து சங்கங்களின் யெண்ணிக்கையை பெருக்கிக்கொண்டு போவது உசிதமல்ல. தற்சமயம் ஏற்பட்டு நடைபெற்று வருகிற சங்கங்கள் சரியான நிலைமையிலிருக்கிறதா, அதில் குற்றம் குறைகள் இல்லாமலிருக்கிறதா. நமது அபிவிர்த்தி விஷயமாய் ஏற்படவேண்டிய யெல்லா விதமான சங்கங்களும் ஏற்பட்டிருக்கிறதா, யென்பதை கவனித்து இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சங்கங்களின் குறைகளை நீக்கி நல்ல நிலைமைக்குக்கூடுமானவரை கொண்டுவந்ததின் பேரில் சங்கங்களை பெருகச்செய்வது உசிதம்.. இச்சமயம்வேலைசெய்துவரும் யெல்லா சங்கங்களிலும் ஏதும் குறைகள் இருக்கக்கூடும். அதை சீர்படுத்தவேண்டியது நமது கடமை. இதுவிஷயத்தில் பொது ஜனங்கள் டிபார்ட்டுமெண்டாருடன் ஒத்துழைத்து சீர்படுத்தவேண்டியதுதான் முக்கியமாய் கவனிக்க வேண்டியவை. கவர்ன்மெண்டு டிபார்ட்டுமெண்டு ஒன்று இல்லாமற்போனால் இந்த ஐக்கிய இயக்கம் இவ்வளவு பிரபலப்பட்டிராதென்பது திண்ணம். டிபார்டுமெண்டார் வேண்டிய உதவியைச் செய்து அப்போதைக்கப்போது கற்பனைகள் கொடுத்து தகுந்த முன் ஜாக்கிரதையுடன் இருந்துவருவதுதான். இச்சங்கங்கள் ஓங்கி வளர்வதற்கு முக்கிய காரணம். இன்னும் சங்கத்தின் விஷயமாய் இவ்வளவு பிரயாசையையும் பழய டிபார்டுமெண்டாரை கவனிக்கும்படி விட்டால் ஐக்கிய இயக்கம் விருத்தியாகாது. பழய சங்கங்களை கவனிக்க பொது ஜனங்களும், புதுமாதிரியான சங்கங்களை விர்த்திசெய்ய கவர்ன்மெண்டு டிபார்டுமெண்டாரும் கவனம் செலுத்தும்படியாய் விட்டுவிடவேண்டும். ஆனால் பழய சங்கங்களை டிபார்டுமெண்டார் முற்றிலும் விட்டுவிடுவதும் கூடாது. ஒவ்வொரு வருஷமும் தணிக்கையைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு மற்ற மேற்பார்வைகளை பொது ஜனங்களுக்கு விட்டு விடவேண்டியது. பொதுஜனங்களும் ஏற்றுக் கொள்ளத் தயாரா யிருக்கவேண்டும். ஆனால் பழய சங்கங்களின் குற்றம் குறைகள் தெரிந்து அதை சீர்திருத்தம்செய்ய சக்தியுடைய பஞ்சாயத்துகளாக யிருக்கவேண்டும். இவ்வித சக்தியுடைய பஞ்சாயத்துகள் இருக்கவேண்டியது சங்கங்களின் முக்கிய இலக்ஷணங்களில் ஒன்று. பஞ்சாயத்துகள் தங்கள் சங்கத்தை மாத்திரம் சீர்திருத்திக்கொள்ளவேணுமென்று நினைப்பது கூடாது. தங்கள் பக்கத்திலிருக்கும் சங்கத்தின் நல்ல நிலைமைக்கும் தாங்கள் பாடுபட்டு அதை சீர்திருத்தம் செய்வது தங்கள் கடமையென்றும் நினைக்கவேண்டும். ஒரு சங்கத்தின் பஞ்சாயத்து மெம்பரா யிருப்பதால் தனக்கு கிரீடம் தரிப்பதாப் நினைக்கக்கூடாது. சாதாரண மெம்பர்களால் இவர்களுக்கு ஒரு கௌரவம் கொடுக்கப்பட்டிருப்பதை மறந்துவிடக்கூடாது. தங்களைத்தவிர இதரர்கள் இந்த ஸ்தானத்துக்கு வர யோக்கியதை இல்லையென்பதை மனதில் நினைக்கக்கூடாது. தங்கள் வசம் ஷையார்கள் ஒப்புவித்த வேலையை சரியாய் நடத்தி மகா சபையாரின் திருப்தியை அடைய பஞ்சாயத்தார்கள் பாடுபடவேண்டும். கடன் கொடுப்பதிலும் கடன் வசூல் செய்வதிலும் இன்னும் இதர விவகாரங்களை நடத்துவதில் தான் யென்றும் தன்னைச் சேர்ந்தவனென்றும் பாரபக்ஷம்வைக்கக்கூடாது. இன்னும் பஞ்சாயத்தார்கள் மெம்பர்களிடத்தில் பச்சாத்தாபமுடையவர்களாக யிருக்கவேண்டும். மெம்பர்களுக்கு பஞ்சாயத்தார்கள் உதவியானது யெச்சமயம் தேவையோ, அச்

சமயம் உதவும்படியாய் தயாராயிருக்கவேண்டும். இவ்வளவு இலக்ஷணங்களும் ஓர் பஞ்சாயத்துக்கிருக்கவேண்டும்.

சிற்சில சங்கங்களில் பஞ்சாயத்துதார்கள் கையிருப்புத்தொகைகளை தாயாதிகள் போல் சமபாகமாக பங்கிட்டுக் கொண்டு ஒருவரை யொருவர் கேளாமலிருக்கிறார்கள். இவ்விதம் செய்யும் பஞ்சாயத்துதாரர்கள் சங்கத்துக்கு துரோகம் செய்யக் கூடியவர்களாகக் கருதப்படுவார்கள். கையிருப்புத்தொகையானது யாரிடத்திலிருக்கவேணுமென்று சங்க விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்களிடத்தில் இருப்பதுடன் யெந்த சமயத்தில் தேவையோ அக்காலத்தில் ஒரு விநாடியேனும் தாமதமில்லாமல் ஆஜர் செய்யக் கூடியதாயிருக்கவேண்டும். அனுவசியமாக கையிருப்பில் தொகையை வைத்துக்கொள்ளுவது பிசகு. ஆனால் அவர்கள் முன்னிலுமில்லாமலிருப்பது கஷ்டம். அவசரசமயங்களுக்கு மெம்பர்களுக்கு உதவிசெய்யவேண்டியதற்காக சங்கங்களின் லேவாதேவிக்குதக்கதாக ஒரு குறிப்பிட்ட தொகையைவிட ஜாஸ்தியாய் வைத்திருக்கக்கூடாதென்று கண்டிதயேற்பாடு செய்யக்கூடிய மகா சபைகள் இருக்கவேண்டியது முக்கிய இலக்ஷணங்களில் ஒன்று. ஒரு சங்கத்துக்கு பஞ்சாயத்துதார் உடலும் மகாசபையார் உயிருமாகக் கருதப்படுவார்கள்.

சிற்சில சங்கங்களில் மெம்பர்கள் தங்கள் பொறுப்பு இவ்வளவென்றும் தங்களுக்கும் சங்கத்துக்கும் யேற்பட்டிருக்கும் சம்பந்தம் இன்னதென்று தெரியாமலிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. ஐக்கிய சங்கத்தில் தங்கள் விவகாரம் வைத்துக்கொள்வதிலும் இதர இடங்களில் வைத்துக்கொள்ளுவதிலுமிருக்கும் வித்தியாசத்தை நன்றாய் ஆராய்ந்து சகலவிவகாரத்தையும் ஐக்கிய சங்கங்கள் மூலமாய் செய்து கொள்ளுவதில் லாபமுண்டென்று கருதவேண்டும். ஐக்கிய சங்கமானது கடன் கொடுப்பதற்காக மட்டும் யேற்பட்டிருப்பதாய் சிலர் நினைப்பது முற்றிலும் தெரியாத் தன்மை. ஐக்கிய சங்கமானது தன்னிடம் வருபவர்களை நல்ல நடத்தையிற் செலுத்தியும், சிக்கனம், சுய உதவி, முதலிய நல்ல குணங்களை கற்பிக்கும்; அதின் விதிகளின் வியாக்கியானத்தை ஆழ்ந்து யோஜிக்குமளவில் அனேகமாய் யெல்லா விதிகளிலும் சிற்சில கற்பனைகள் அடங்கியிருப்பது விளங்கிவரும். வலமுரிச் சங்கையுடையவரிடத்தில் யெவ்வளவு யோக்கியதை யிருக்கிறதோ அவ்வளவுக்குத் தக்கதாக பலன் கொடுக்கக்கூடியதென்பது யாவரும் அறிந்தவிஷயம். அதினால் வலமுரிச் சங்குகள் விசேஷமானதல்லவென்று சொல்வதற்கில்லை. அதைப்போல இச்சங்கங்களின் பஞ்சாயத்துகள் மெம்பர்கள் யென்ன யோக்கியதையுடையவர்களாயிருக்கிறார்களோ அத்தன்மைக்குத்தகுந்தபடி தான்பலன் கொடுக்கும். இதை அனுசரித்தே சில சங்கங்கள் திறமையாயும், சில சங்கங்கள் சுமாராயும்,சிலசங்கங்கள் கேவலமாயுமிருக்கின்றன. எந்தெந்த சங்கங்களில் யெவ்விதமான குறைகள் இருக்கிறனவென்று தெரிந்து சீர்



படுத்தவேண்டியது முக்கியம். ஐக்கிய சங்கமானது கடன்வாங்க மாத்திரம் யேற்பட்டிருப்பதாய் நினைக்கக்கூடாதென்று முன்னமே சொல்லியிருக்கிறது. யெந்த சங்கமானது தன் விவகாரத்தை லேவாதேவியுடன் நிறுத்தி இதர விஷயங்களில் ஊக்கம் செலுத்தவில்லையோ அச்சங்கத்தை ஒரு ஐக்கிய சங்கமாக கருதக்கூடாது. மனித வாழ்நாட்களுக்கு வேண்டிய யெல்லா விஷயங்களுக்கும் ஐக்கிய சங்கங்களைக் கையாடவேண்டியது அவசியம். ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தில் மெம்பராக யிருப்பதற்கும் இதர ஸ்தானங்களில் மெம்பராகச் சேருவதற்கும் வித்தியாசத்தை மனதில் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஐக்கிய சங்க மெம்பர்கள் சங்கவிவகாரங்களை தங்கள் சொந்தமென்று நினையாதவரையில் தங்களுக்கு அசௌகரியம் யேற்படுமென்று திட்டமாய் நம்பவேணும். இதர ஸ்தாபனங்களில் மெம்பர்கள் தாங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் காரியாதிகளை கவனித்துவிட்டு மற்ற விஷயங்களை கவனியாமல் விடுவதில் விசேஷ கவலை யேற்படாது. மற்ற ஸ்தாபனங்களில் மெம்பர்களின் நடவடிக்கைகளை கவனிக்கப்படமாட்டாது. ஐக்கிய சங்கங்களிலோ அவ்விதமில்லை. ஒவ்வொரு சமயத்திலும் மெம்பரின் நடவடிக்கையை கவனித்து வந்து யெச்சமயம் அவன் வழிதப்பி நடப்பதாய்த் தெரியுமோ அச்சமயத்தில் அதை சரிப்படுத்த பிரயாசை யெடுக்கும். உதாரணமாக ஒரு மனுஷன் ஒருவனுக்கு சொந்தமான பாங்கில் கடன் கேட்டால் அவன் கேட்டும் கடன் கெட்ட காரியத்திற்கென்று தெரிந்தாலும் அதை சீர்திருத்தம் செய்ய முயலாமல் தான் கொடுக்கும் தொகைக்கு சரியான ஈடுஇருக்கிறதா வென்றும், 1-க்கு 10 வாங்க மார்க்கமுண்டாவென்றும், யோசிப்பானே தவிர அவனை நல்ல வழியில் திருப்ப முயலுவதரிது. ஐக்கிய சங்கமோ அவ்விதமில்லை. கெட்ட நடத்தையுள்ளவனுக்கு சங்கம் இடமே கொடுக்காது. ஒருவேளை தெரியமாற்சேர்த்துக்கொண்டாலும் அவன் கடன் கேட்கும் காலத்தில் கேட்கும் காரியம் கெட்டகாரியம் யென்று தெரிந்தால் அவன் கேட்கும்தொகைக்கு 1-க்கு 10 மடங்கு கிரயம் பொருமான சொத்தை ஜாமின் வைப்பதாயிருந்தாலும் சங்கம் அவனுக்கு கடன் கொடுப்பதை மறித்திருப்பதினால் அவன் நல்ல நிலைமைக்குவரக் காரணமுண்டு. அவன் யோக்கியனாயும் நாணயமுடையவனாயு மிருந்தால் அவன் நாணயத்தை ஈடாகப்பெற்றுச் சங்கம் கடன் கொடுக்க முயலும். மாஜி ரிஜிஸ்ட்ராரவர்களான டிவான் பகதூர் R. இராமச்சந்திரராவ் அவர்கள் கலியாண துருக்கத்தில் சங்கமெம்பர்கள் முன்பு செய்த உபந்நியாசத்தில், ஐக்கிய சங்கத்தில் மெம்பராயிருப்பது யோக்கியமுள்ள தென்று சொல்லியிருக்கும் ஓர் அத்தாக்ஷியை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்விதத் தன்மையுடைய மெம்பர்களை யடைவது ஐக்கிய சங்க இலக்ஷணங்களில் ஒன்று. ஐக்கிய சங்கங்கள் யேற்படுத்தி நடத்துவதில் டிபார்டுமெண்டு அதிகாரிகளுடைய நன்கு மதிப்பையும் பொது ஜனங்களில்

நம்பிக்கையும் அடையும்படியான இலக்ஷணங்கள் யேற்பட வேண்டும். அதற்கு அடியிற்கண்ட விஷயங்களை மெம்பர்கள் மனதிற் கொள்ள வேண்டும்:—

1. சங்கத்தின் காரியாதிகளை தன் சொந்தக் காரியமாக கவனிக்க வேண்டும்.

2. பஞ்சாயத்தார்கள் கவனிப்பார்களென்று மௌனமாயிருக்கக்கூடாது.

3. சங்கத்தைச்சேர்ந்த இதர மெம்பர்கள் சங்கத்தை தங்கள் சொந்தம்போல் கவனிக்கிறார்களாவென்பதைப் பார்க்கவேண்டும். இல்லாவிடத்து கவனம் செலுத்தத் தூண்டவேண்டும்.

4. பஞ்சாயத்தார்கள் தங்கள் வேலையை சரியாய் செய்து வருகிறார்களாவென்பதை கவனிக்கவேண்டும்.

5. பஞ்சாயத்து மீட்டிங்கு நடக்கும்பொழுது கூடுமானவரையில் ஆஜரிலிருக்க பிரயத்தனப்படவேண்டும். மகாசபை மீட்டிங்குக்குத் தவாமல் முதல்மெம்பராக ஆஜராகவேண்டும்.

6. மீட்டிங்கு நடக்கும்பொழுது விஷயங்களை தாக்ஷண்ணியமில்லாமல் யெடுத்துப்பேசவேண்டும்.

7. சங்கத்தின் கணக்குகளைத் தெளிவாய் ஒவ்வொரு மெம்பரும் பார்த்துக் கொள்ள சக்தியுடையவர்களா யிருக்கவேண்டும்.

8. சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று கருதவேண்டும்.

9. சங்கத்தில் வாங்கிய கடன் தவணைக்கு முன்னமே செலுத்திவிடவேண்டும்.

10. தவணையில் செலுத்தியவர்களைப் பார்த்து அவர்களை உதாரணமாகக்கொள்ளவேண்டும்.

11. தவணையில் செலுத்ாதவர்களைக் கண்டு தன்னைப்போல் சில மெம்பர்கள் இருக்கிறார்களென்று மனோதிடமடையக்கூடாது.

12. சங்கத்திற்கு ஏற்பட்ட வட்டியைத் தவிர ஜாஸ்தி அபராத வட்டி செலுத்தியவர்கள் சங்கத்திற்கு துரோகம் செய்தவர்களாய் கருதப்படுவார்கள்.

13. தன் நிலைமையையும் தன் கிராமத்தின் நிலைமையையும் சீர்தூக்க ஒரு ஐக்கிய சங்கத்தால் முடியுமென்பதை மனதில் நினைத்து வேலை செய்யவேண்டும்.

14. சங்கத்தில் சேர்ந்தவுடனேயாவது சங்கம் கிராமத்தில் யேற்பட்டவுடனேயாவது வேண்டிய சௌகரியங்கள் யேற்படவில்லையென்று அதைரியப்படக்கூடாது.



15. சங்கம் யேற்பட்டு அதற்குரிய இலக்ஷணங்கள் முழுவதும் யேற்பட்டுவிட்டால் யாவரும் கோராமலே வேண்டிய சௌகரியங்கள் சுயர்ச்சியாய் உண்டாகும்.

16. சங்கம் கடன் வாங்கமட்டும் யேற்பட்டிருப்பதாக நினைக்கக்கூடாது.

17. சங்கத்தில் கடன் வாங்க முன் வருவதுபோல சங்கத்தில் தன் பணத்தை மிச்சம்பிடித்துவைக்க மாதந்தோறும் யேதும்சில தொகையை டிபாசிட்டு செய்யவேண்டும்.

18. சங்கம் யேற்படுமுன் பக்கத்தில் வாங்கிவந்த வட்டியிலிருந்து சங்கத்தில் வாங்கும் வட்டியைக் கழித்து அந்தத்தொகையையாவது சங்கத்தில் செலுத்தினால் பின்னால் தனக்கு உதவுமென்று கருதவேண்டும்.

19. சங்கம் யேற்பட்டு அதன் விவகாரங்கள் லேவாதேவியுடன் மாத்திரம் நின்றால் அது ஒரு ஐக்கியசங்கமாக மாட்டாது.

20. கிராம சுகாதாரம், கல்வி, விவசாயம், முதலிய கிராமபரிபாலன விஷயங்களெல்லாவற்றையும் இச்சங்கம் கவனிக்கவேண்டும்.

21. எல்லாம் யேககாலத்தில் யேற்படாவிட்டாலும் ஒன்றின்பின் ஒன்றாய் கைக்கொள்ளவேண்டும்.

22. கிராமச் சங்கத்தை நடத்தி வருவதில் ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டம் யேற்படத்தான் செய்யும், அதினால் அதைரியப்படக்கூடாது.

23. சங்கத்தை நடத்துகிறவர்களுக்கு, பொறுமை, சாந்தம், ஜீவகாருண்யம், முதலிய யெல்லா நற்குணமுமிருக்கவேண்டும்.

24 மெம்பர்களாவது பஞ்சாயத்துதார்களாவது கடுஞ்சொற்களை உபயோகிக்கக்கூடாது.

25. சங்கத்தில் விவகாரம்நடத்தும் பொழுதெல்லாம் தனக்குக்கொடுத்திருக்கிற பாஸ்புஸ்தகத்தை ஆஜர் செய்வித்து அதையும் ரசீதையும் ஒத்துப்பார்த்து அதில் செய்திருக்கும் பதிவுகள் சரியாயிருக்கிறதாவென்பதை திருப்தி செய்து கொள்ளவேண்டும்.

26. சங்கத்தை ஒரு ஆஸ்பத்திரிமாதிரி நினைக்கவேண்டும்.

27. சங்கத்தின் வரையறுக்கப்படாத பொறுப்பு தன்பேரிலிருப்பதை மறக்கக்கூடாது.

28. சங்கத்தின் பஞ்சாயத்துதார்கள் தங்கள் காரியம்போல் மற்ற மெம்பர்கள் காரியத்தையும் கவனிக்கவேண்டும்.

29. மெம்பர்கள் மனதில் அடிக்கடி சங்கத்தில் விஷயத்தை யோசிக்கவேண்டும்.

30. சங்கத்தையும் மெம்பர்களையும் நல்லவழியில் திருப்ப பஞ்சாயத்தார்கள் பிரயாசைப்பட வேண்டும்.

அந்தப்படி நடந்து வந்தால் ஐக்கிய சங்கங்களுக்கு வேண்டிய இலக்ஷணங்கள் உடனே ஏற்படும். அவ்விதம் இலக்ஷணங்கள் ஏற்பட்டுவிட்டால் அச்சங்கம் காமதேனுக்கு சமானம். மனிதனுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து வைக்குமென்பதிற் தடை இல்லை.

ஆகையால் ஒவ்வொரு ஐக்கியஸ்தர்களும் இப்பொழுது தங்களிடத்தில் ஏற்பட்டிருக்கும் குறைவுகள் இன்னதென்று தெரிந்துகொண்டு, அதைப் போக்கடித்து புதுமாதிரியான சங்கங்களையும் ஸ்தாபிக்க வேண்டிய பிரயத்தினங்களைச செய்து இந்த ஐக்கிய இயக்கத்தை விருத்திக்குக் கொண்டுவர வேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

---

# இந்தியா கோவாப்ரேடிவ் கம்மிட்டியாரின் அபிப்பிராயங்கள்.

இந்தியாவில் ஐக்கிய முயற்சியின் வளர்ச்சியைப் பற்றிப்பரிசோதனை செய்ய கோவாப்ரேடிவ் கம்மிட்டி யொன்றை இந்தியா கவர்ன்மெண்டார் சென்ற வருஷத்திலேற்படுத்தியதை நம் நேயர்களறிந்திருக்கலாம். அக்கம்மிட்டியார் மிகவும் தெளிவாயும், விரிவாயுமுள்ள ஓர் ரிபோர்ட்டை இப்பொழுது வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அதில் கூறப்பட்ட அவர்கள் அபிப்பிராயங்களும் சிபார்சுகளும் பின்வருமாறு:—

## நாணயத்தைச்சேராத மற்ற சங்கங்கள்.

1. நாணயம் வகையல்லாத ஐக்கிய முயற்சிச்சங்கங்கள் மிகவும் முக்கியமானவைகளாயிருப்பதால் கவர்ன்மெண்டாரி னுதவியை நாடத்தகுந்தவைகளாகும். ஆனால் அவைகள் சுயற்சியா யேற்பட்டதாயும், அவைகளை மேல்விசாரணை செய்யவும் நிர்வகிக்கவும் தகுந்த சிப்பந்திகளுமிருக்க வேண்டும்.

2. கிராமத்தொழில்களை ஐக்கியமுறையில் ஏற்படுத்தி சீர்படுத்துவதவசியம். ஆனால் அவைகளின் தற்கால நிலைமையை ஒழுங்காய் விசாரணை செய்தபிறகுதான் அவ்வித யேற்பாடு ஆரம்பம் செய்யவேண்டும்.

3. பட்டணங்களில் சாமானிய வியாபாரங்கள் செய்ய யேற்படும் நாணய வகையல்லாத மற்றச் சங்கங்களை, ஆக்ட்டின் முகவுரையிற் கூறியுள்ளபடி அதற்குள் வந்தாலொழிய, ரெஜிஸ்டர் செய்வதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.



4. உற்பத்தி செய்யவும், விற்கவும், நாணய வகையல்லாத மற்றச் சங்கங்கள் ஸ்தாபிப்பதிலுண்டாகும் நன்மைகள் பலவுள.

5. கால் நடைகளின் இன்ஷ்யூரென்ஸ் உண்டாவது நல்லது. பர்மா தேசத்திலுள்ள யேற்பாட்டை அநுஷ்டிப்பது சிறந்தது.

6. கால்நடைகளின் மரணக்கணக்குகளையும், அவைகளுடையும் வியாதிகளைத் தீர்ப்பதற்குள்ள யேற்பாடுகளையும் நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

7. கிராம நாணயச்சங்கமாவது அல்லது ஸென்ட்ரல் சங்கமாவது கால்நடைகளின் இன்ஷியூரென்ஸ் சங்கங்களின் நிமித்தம் யாதொரு கடன்களையும் ஒப்புக்கொள்ளக்கூடாது.

8. கால் நடைகளுக்காக ஓர் ஸெண்ட்ரல் இன்ஷியூரென்ஸ் சங்கமேற்படவேண்டியது அவசியம். கவர்ன்மெண்டார் இம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு உதவி செய்வது தவறல்ல.

9. ஆலங்கட்டிப் புயல்களிலிருந்து சேதம் வாராதபடி இன்ஷியூரென்ஸ் ஒன்று உண்டாவது நல்லது.

10. நாணயவகையைச் சேராத விவசாயச் சங்கங்கள் நாணயச் சங்கங்களைச் சார்ந்தேயிருக்க வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய, விதை, விவசாயக் கருவி, முதலியவைகளை மெம்பர்களுக்காக சங்கம் வாங்குவதாயிருந்தால், சங்கம் அம்மெம்பர்களுக்கு ஏஜெண்டாயிருந்து வாங்கவேண்டுமே யொழிய, தானேசொந்தத்திற்கு அவைகளை வாங்கக்கூடாது.

11. நாணயவகையைச் சாராத சங்கங்கள் மிகவும் ஒழுங்காய் நடைபெற்று வந்தால், ஸெண்ட்ரல் பாங்கிகள் அவைகளுக்குப் பணமுதவுதல் தவறல்ல.

12. சிறந்த விதைகளையும், விவசாயக்கருவிகளையும் மெம்பர்களுக்கு வாங்கிக்கொடுக்க யேற்பட்டிருக்கும் சங்கங்கள் அவ்விஷயமாய் பரீக்ஷார்த்தம் செய்யாமலிருந்தால், அவைகளுக்கு விவசாய டிபார்ட்டுமெண்டார் உதவி புரியவேண்டும். அம்மாதிரிச் சங்கங்கள் கொஞ்சகாலத்திற்கு ரெஜிஸ்ட்ராரவர்களின் அதிகாரத்தின் கீழிருக்க வேண்டுமேயொழிய, விவசாய யிலாகா டைரெக்டரின் கீழிருக்கக்கூடாது.

13 கூடியவரையில் மெம்பர்களல்லாதவர்களுடன் நடவடிக்கைகள் வைத்துக்கொள்ளக்கூடாது.

## நாணயச் சங்கங்கள்.

### A. விவசாயிகளில்லாதவைகள்.

14. ஐக்கிய முயற்சித் தொழிலை முதல் முதலில்விவசாயிகளுக்குள் பாவச்செய்யும் நோக்கத்தை நிறுத்தி, தொழிலாளிகள் முதலிய விவசாயி

களல்லாத வேறு ஜனங்களின் தேவையும் அம்மாதிரி முக்கியமாய கவனிக்கப்படவேண்டுமென யாவரும் இப்பொழுது ஒப்புக்கொள்ளக்கூடும்.

15. விவசாயிகளல்லாதவர்களுக்கேற்படும் சங்கங்களின் மெம்பர்கள் தனிகர்களாகவும், ஒருவருக்கொருவர் பரஸ்பர போக்கியதைகளை நெருங்கி அறியமுடியாமலுமிருந்தால், அச்சங்கங்களின் பொறுப்பு வரையறுத்தாயிருக்கவேண்டும்.

16. சங்கங்கள் ஜனங்களுக்குள் பணம் லேவாதேவி செய்யும் இலக்ஷணங்களை பரவச்செய்வதில் பட்டணப்பிராந்தங்கள் ஓர் பழகுமிடமாயிருக்கின்றன. ஆனால் அவைகள் விசேஷமாய் சுயவுதவியிலேயே போஷித்துக்கொள்ளவேண்டும்.

17. சிப்பந்திகளின் சங்கங்களை நிர்வகிப்பது கஷ்டம்; ஏனென்றால் அந்தந்த ஆபிஸ் தலைவரின் உதவியும், வசூல் செய்யவேண்டிய தொகையை சம்பளப்பட்டியிலேயே பிடித்துக்கொள்ளும்படியான சௌகரியமும் வேண்டும் சிப்பந்திகள் போஸ்டாபீஸ் இன்ஷியூரென்ஸ் பண்டில் இன்ஷியூர் செய்வது நல்லது.

18. பட்டணங்களில் ஏழை வகுப்பினர்களுக்காக ஸ்தாபிக்கப்படும் சங்கங்கள் அபிவிருத்தியடையச்செய்வது முக்கியமான விஷயம். இவைகளுக்குத் தகுந்த குமாஸ்தாக்களை வைத்துக்கொள்ளும்படி கவர்ன்மெண்டார் பணவுதவி செய்வது நியாயமே!

B. பிரைமரி ஸொஸயடிகள் (விவசாயிகளின் சங்கங்கள்.)

19. தகுந்த பூஸ்திதியுள்ள மிராசுதார்கள் ஈட்டு சொத்தின் பேரில் கடன் வாங்கக்கூடிய பாங்கிகளை ஸ்தாபிக்க ஆலோசிப்பது மிகவும் சிறந்தது.

20. சங்கப்பிரிவுகளின் பெயர் ஒருவகைத்தாயிருப்பது நல்லது. தனி நபர்களாயுள்ள மெம்பர்களுடன் நடவடிக்கை வைத்துக்கொள்ளும் ஸ்தாபனங்களுக்கு 'பிரைமரி ஸொஸைடிகள்' என்றும், இம்மாதிரி பிரைமரி ஸொஸைடிகள் சேர்ந்துள்ள ஸதாபனங்கள் பணலேவாதேவி செய்தால் ஸெண்ட்ரல் பாங்கிகளென்றும், மேல் விஜாரணையாவது அல்லது இயாரெண்டியாவது செய்தால் யூனியன்களென்றும் விளங்கும். ஸெண்ட்ரல் பாங்கிகளுடனும், மாகாணத்திலுள்ள எச்சங்கத்துடனும் லேவாதேவி செய்யும்படியான பாங்கிக்கு மாகாணபாங்கியென்று பெயர்.

கிராமச் சங்கங்கள்

21. சங்கங்கள் சரியான வழியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு ரெஜிஸ்ட்ரார் முகாந்திரமாகிறார்.

22. மெம்பர்கள் ஒருவருக்கொருவர் நன்றாய்ப் பழகுவதற்கும், பரஸ்பர ஆதீனத்திலிருப்பதற்கும், சங்கத்தின் எல்லை மிகவும் குறுகியதாயிருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் சங்கமிருக்கவேண்டியது பொது விதியாகும்.



23. மெம்பர்களின் சங்கியை முதலில் மிகவும் குறைவாயிருந்து, வரவர அதிகரித்து, 50-லிருந்து 100-க்கு மேலுபரக் கூடாது.

24. மெம்பராகாமலிருத்தல் தவறு; ஆனால் ஏழை ஜனங்களை மெம்பராகக் கட்டாயப்படுத்துவதும் தவறாகும்.

25. ஓர் பிரைமரி ஸொஸைடியின் மெம்பர்கள் வெவ்வேறு ஜீவனங்களை உடைத்தாயிருப்பது சரியல்ல, ஆனால் ஸெண்ட்ரல் பாங்கியுடன் சேர்ந்துள்ள ஸொஸைடியாயிருந்தால் அவ்விதமிருக்கலாம்

26. சங்க ரெஜிஸ்ட்டர் செய்வதற்கு முன்பு, ரெஜிஸ்ட்ரார் மனுதார்களின் நடத்தை, அவர்களின் ஐக்கிய விஷயத்தைப்பற்றிய அறிவு, அவர்களின் ஆஸ்திக்கடன், ஸ்தலத்தில் கிடைக்கக் கூடிய தொழில் தனம், சங்கம் மேல்விஜாரணை செய்யும் மார்க்கம், முதலியவைகளை நன்றாய் விஜாரிப்பார்கள்.

27. ரெஜிஸ்ட்டர் செய்வதற்கு முன்பும், பின்பும், ஐக்கிய முயற்சித் தொழிலின் இலக்ஷணங்களை ஜனங்களும் ஜாக்கிரதையாய் கற்பிப்பது அவசியம். உபாத்தியாயர்கள் நன்றாய்க் கற்பிக்க வேண்டியவைகளைக் குறித்து வைப்பது நல்லது.

28. சங்கத்தை யேற்படுத்தும் கௌரவ ஸ்தாபனர்கள் தங்களாற் கூடிய வரையில் அதை மேல்விசாரணை செய்து பழக்கி வைக்கவேண்டும்.

29. பிரைமரிப் பள்ளிக்கூடங்களில் ஐக்கிய முறை விஷயங்களைக் கற்பித்தல் சரியல்ல.

30. காரியதரிசி ஸ்தல வாசியாயும், குமாஸ்தாவேலைகளை மாத்திரம் செய்துகொண்டுமிருக்கவேண்டும். கிராமக்கணக்கர் அவ்வேலைக் கருகரல்ல; ஆனால் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் அதைப் பார்த்து வருவதில் ஆக்ஷேபணையொன்றுமில்லை.

31. நிர்வாக கம்மிட்டியான து மஹா சபையின் அதிகாரத்திற்கு அடங்கியிருக்கிறதென்பதையும், அது தன்னுடைய வேலைகளை தன்னைச் சேர்ந்துள்ள, ஒன்று, அல்லது இரண்டு மெம்பர்கள் வசம் ஒப்பிக்காமலிருப்பதையும், ரெஜிஸ்ட்ராரும் அவர் சிப்பந்திகளும் கவனிக்க வேண்டும்.

32. மேல் விஜாரணை செய்வதற்கு கம்மிட்டி ஒன்று நியமிப்பது இப்பொழுது அவசியம்.

33. எவ்விடங்களில் கடன்காரர்கள் மெம்பர்களின் கடன்களை வெளியிட மறுக்கிறார்களோ, அவ்விடங்களிலுள்ள சங்கங்களுக்கு, கடன்

காரர்கள் அவ்விதம் மறைத்து வைத்தால் தங்கள் கடனை யிழக்க வேண்டியிருக்குமென்று, மனப் பூர்வமாய் பொய் சொன்னதிற்கு தாங்கள் பிராஸிக்யூஷனுக்குள்ளாவார்களென்றும், அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து மெம்பர்களின் கடன் தொகைகளை யறிய அதிகாரம் கொடுக்க வேண்டும். இந்த யேற்பாட்டை முதலில் பர்மாவில் உண்டாக்கி எல்லா விவசாயிகளையும் சார்ந்திருக்கச் செய்யவேண்டும்.

34. மெம்பர்களின் பழைய கடன்களை அடைக்கப் பணமுதவுதல் நல்லது. மெம்பர்கள் கூறியபடி அவைகளை உடனே அடைக்க வேண்டுமென்றல்ல. வழக்கப்படி. அப்பொறுப்பை மெள்ள மெள்ள யெடுத்துக் கொள்ளவேண்டும்.

35. மெம்பர்கள் வெளியிலிருந்து கடன் வாங்கும் பொழுதெல்லாம் கம்மிட்டியாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று சங்கங்கள் மெம்பர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

36. சங்க ஸ்தாபனஞ் செய்வதை புது ஜில்லாக்களில் மாத்திரம் ஆரம்பிக்கவேண்டுவதைத் தவிர, இப்பொழுதிருந்துவரும் ஐக்கிய முயற்சி மத்தியஸ்தாபனங்களின் உதாரணங்களைக் கொண்டு சங்கங்கள் சுயர்ச்சியாகவே அதிகரிக்க வேண்டும். மிகவும் ஜாக்கிரதையாயும் ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்கத்துடனு மிருக்கவேண்டும். வெவ்வேறு மாகாணங்களில் ஐக்கிய யியக்கத்தின் அபிவிருத்தியை தாரதம்மியப்படுத்திப் பார்ப்பது சரியல்ல.

37. எந்த மாகாணத்திலாவது அல்லது மகாணத்தின் பாகங்களிலாவது மேல் விசாரணை சரியாயிராதென்று தோன்றுகிறதோ, அவ்விடங்களில் ஐக்கிய யியக்கத்தை அபிவிருத்தி செய்யக் கூடாது.

## தொழில் தனம்.

38 தன்னுடைய மூலதனத்தை அதிகப்படுத்துவது ஒவ்வொரு சங்கத்தின் நோக்கமாயிருப்பதால் கடன் வாங்கும் வட்டி வீதத்திற்கும், கடன் கொடுக்கும் வட்டி வீதத்திற்குமுள்ள தாரதம்மியமதிகமாயிருப்பது தான் இதற்குத்தகுந்த வழியாகும். வேறுவழியாவது: ஒவ்வொரு மெம்பரும் பங்குகளெடுத்துக்கொள்ள வேண்டுமெனக்கட்டாயப்படுத்துவதாகும்.

39. குறித்தகாலத்திற்குப் பிறகு பங்குத்தொகையை பங்குக்காரர்களுக்கு திருப்பிக்கொடுக்கக்கூடுமிடங்களில், சில கஷ்டங்களேற்படுகின்றன. அவைகளை யனுபோகத்தின் பேரில் அப்பொழுதுக்கப்பொழுது பார்க்கவேண்டும்.



40. மெம்பர்களடையக்கூடிய டிவிடெண்டின் உயர்ந்த யெல்லை இன்னதெனக் குறிக்கப்படவேண்டும்.

41. மெம்பர்கள் சங்கத்திலிருந்து பெறும் கடனிலிருந்து அவர்கள் சங்கத்துக்கு செலுத்தவேண்டிய பங்குத்தொகையை பிடித்துக் கொள்ளலாம்.

42 விவசாயநாணயச் சங்கங்கள், பங்குகளை யுடையனவாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் பொறுப்பு வரையறுக்காதனவா யிருக்க வேண்டும்.

43. கிராமநாணயச் சங்கங்கள் தங்களாலியன்றமட்டும் ஸ்தல டிபாஸிட்டுகளை கிரகிக்கப் பிரயத்தனப் படவேண்டும்; ஆனால் மற்றச் சங்கங்களின் எல்லைக்குள்ளிருந்து அவைகளைக்கவரமுயலக் கூடாது. டிபாஸிட்டுகள் ஸ்தலத்திலிருந்து தான் வந்ததாகயிருக்கவேண்டும். மீதியுள்ள பணத்தை ஸெண்ட்ரல் பாங்கிக்கு அனுப்பவேண்டும்.

44. மெம்பர்கள் விருப்பத்துடன் அதிக டிபாஸிட்டுகள் செய்யும் வண்ணம், மெம்பர்களல்லாதவர்களின் டிபாஸிட்டுகளுக்கு கொடுக்கும் வட்டி வீதத்தைவிட கொஞ்சம் ஜாஸ்தியாய் இவர்கள் டிபாஸிட்டுக்குக் கொடுத்தல் நியாயமாகும்.

45. சிக்கனத்தை மெம்பர்கள் மனதிலூன்றச் செய்யஓர் மார்க்கமாவதால், கட்டாய டிபாஸிட்டுகளைக் காட்டிலும் தவணைகள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செலுத்தக் கூடும் பங்குகள் நல்லது.

46. மெம்பர்கள் பணம் வேண்டும்பொழுது பெற்றுக்கொள்ளும்படியான கர்ரண்டு அக்கவுண்டுகளும், நினைத்த மாத்திரத்தில் வாங்கிக் கொள்ளும்படியான டிபாஸிட்டு அக்கவுண்டுகளும் சங்கத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது. டிபாஸிட்டுகளின் கெடுவானது விசேஷமாய் ஒரு வருஷத்திற்குக் குறைவாயிருந்தால் தகாது. அதிக காலத்திற்கு அவைகளை நிறுத்திவைக்க வேண்டுமானால் அதிக வட்டி கொடுக்கவேண்டும்.

47. அறுப்புக் காலங்களில் செலுத்த வேண்டிய சிறு கடன்களை அடைப்பதை முன்னிட்டு, ஒரு மாதத்திற்குக் குறையாத டிபாஸிட்டுகளை வாங்கலாம்.

48. மீதியாய்ப்பிடிக்கப்பட்ட டிபாஸிட்டுகளைப்போல் சிறு கால டிபாஸிட்டுகள், ஒழுங்காய் போடப்பட்டுவந்தால், சிக்கனம் மெம்பர்களுக்குள் பரவும்; ஆகையால் இதை அபிவிருத்திக்குக் கொண்டுவருதல் தகுதியானது.

49. போஸ்டாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கியைக்காட்டிலும், கூட்டுமுயற்சியி லேற்பட்டிருக்கும் ஸேவிங்க்ஸ்பாங்கி யானது மெம்பர்களுக்கு நன்மைகளைத் தருகின்றன.

50. சங்கம் கடன் வாங்குமதிகாரத்தின் எல்லையை, ரெஜிஸ்ட்ராரவர்களின் அதிகாரத்திற்குட்பட்டு, வருஷந்தோறும் மஹாசபையார் முன்பு கூறப்பட்டபடி நிர்ணயிக்க வேண்டும்.

51. மெம்பர்களுக்குக் கடன்கொடுப்பதில் உபயோகிக்கப்படாத சங்க டிபாஸிட்டுகளை ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு மாற்றவேண்டியது. ஸெண்ட்ரல் பாங்கிகளும் அவைகளுக்குப் பிரத்தியேகமாக அதிக வட்டி கொடுக்கவேண்டும். தனி நபர்கள் ஸ்தலத்தில் கடன்வாங்கக் கூடுமுயர்ந்த யெல்லைக் கதிகமாயிருந்தபோதிலும், சங்கங்கள் தங்கள் கடன் வாங்கு அதிகார யெல்லைக்குட்பட்டிருந்தால் டிபாஸிட்டுகளை வாங்கிக்கொள்ளுவதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமிருக்கக் கூடாது. டிபாஸிட்டு செய்பவர்களுக்கு சங்கங்கள் உத்திரவாதமாக வேண்டுமேயொழிய தங்கள் உத்திரவாதத்தை ஸெண்ட்ரல் பாங்கிகளிடம் ஒப்புவிக்கக்கூடாது. ஸெண்ட்ரல் பாங்கிகள் அம்பாதிரி டிபாஸிட்டுகளை ஒப்புக்கொள்ள முடியாமலிருந்தால், அவ்விஷயத்தை கிராம சங்கத்துக்குத் தெரியப்படுத்தவேண்டும். கடன் வாங்குமதிகாரயெல்லைக்கதிகமாய் வரும் டிபாஸிட்டுகளை சங்கங்கள் பெற்றுக்கொள்ளக் கூடாது.

52. டிபாஸிட்டர்களுக்கு சரியான காலத்தில் பணம் திருப்பிக் கொடுப்பதிலும், அவர்களை கணக்குப்புஸ்தகங்களை பார்க்கச்சொல்லியும் மீட்டிங்குகளுக்கு அழைத்தும் ஓர் வித நம்பிக்கை அவர்களிடத்தில் வரும்படியாகச் செய்வதிலும், மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். பணத்தட்டான சமயங்களில், காலமான டிபாஸிட்டுகள் எல்லாவற்றையும் மறு டிபாஸிட்டு செய்யுப்படியாய்ச் கட்டாயப்படுத்துவது சரியல்ல.

53. நீண்ட காலடிபாஸிட்டுகளை குறித்த கெடுக்களுக்குள் திருப்பிக்கொடுத்தல் மிகவும் அபூர்வமாயிருக்கவேண்டும். அப்படிக்கொடுத்தாலும் வட்டியில் அதிக தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும்.

54. ஓர் சங்கம் மற்றொரு சங்கத்துக்குக்கடன் கொடுப்பதாயிருந்தால் ஸெண்ட்ரல் பாங்கி அல்லது யூனியன் மூலமாய்த்தான் கொடுக்கவேண்டும்.

55. க்ஷேமநிதி விரைவாய் அதிகரித்தல் அபாயமல்ல.

56. விவசாயகாலங்களுக்குத் தேவையானகடன்களை ஓர் குறித்த சமயத்தில் பிரித்துக்கொடுக்கவேண்டும். பிரத்தியேகமான அவசரக் கடன்கள், கோரமென்று சொல்லப்பட்ட சங்கியையுள்ள கம்மிட்டியாராலும், அல்லது சேர்மனாலும், சில நிபந்தனைகளுக்குள்ளடங்கி, பைசல் பண்ணலாம்.

57. கையிருப்புத்தொகையை கவர்ன்மெண்டு கஜானாக்களிலாவது அல்லது போலீஸ்டேஷன்களிலாவது வைத்துப் பாதுகாத்துக் கொடுக்கும்படி பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யலாம். அல்லது, தபாலாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கி விதிகளை இதற்கனுகூலமாய்த் திருத்தி இத்தொகையை காப்பாற்றிக் கொடுக்கச்செய்யலாம்.



58. ஓர் சங்கத்தின் கடன்வாங்கக்கூடுமுயர்ந்த யெல்லை இன்னதென்று அதின் மஹாசபையார் நிர்ணயிக்கவேண்டும்.

59. ஒவ்வொரு மெம்பரும் கடன் பெறக்கூடிய உயர்ந்த யெல்லை இன்னதென மஹாசபையார் தீர்மானிக்கவேண்டும். இவ்வெல்லைக் கதிகமாய்க் கேட்கும் கடன்களை, கம்மிட்டியார், மஹாசபையின் உத்திரவன்னியில், கொடுக்கக்கூடாது.

60. மெம்பர்கள் கடன் வாங்கும் நிபந்தனைகள் பைலாக்களிலாவது அல்லது மீட்டிங்கு மினிட்டுகளிலாவது தெளிவாய் கூறப்பட்டாலொழிய, பாண்டின் பேரில் கடன் கொடுப்பதைக்காட்டிலும் பிராமிஸரி நோட்டின் பேரில் கொடுப்பது நல்லது.

61. ஒவ்வொரு மெம்பர் வசமும் பாஸ் புஸ்தகம் ஒன்றை ஒப்புவிக்கவேண்டும்; (அதின் மேலட்டையின் பின் புறத்தில் ஐக்கிய முயற்சியின் சாராம்சமடங்கிய முக்கிய இலக்ஷணங்களை அச்சடித்தல் மிகவும் நல்லது.) அல்லது மெம்பர்களொவ்வொருவரும் வாங்கின கடன் தொகையைக் காட்டும் ஓர்ஸ்டேட்மெண்டை பயிரங்கப்படுத்தவேண்டும்.

62. பங்குகளிருக்கும் சங்கங்களில் ஒவ்வொரு மெம்பரும் ஒரு பங்காவது எடுத்துக்கொள்வதை கட்டாயப்படுத்தவேண்டும்.

63. உற்பத்தி விஷயங்களல்லாத மற்றவைகளின் நிமித்தம் கடன் கொடுக்கும் பொழுது, அவ்விதச்செலவு இன்றியமையாததாவென்றும் அதிகமாயிருக்கிறதா தென்பதையும் முன் ஜாக்கிரதையுடன் பார்க்க வேண்டியதவசியம்.

64. வியவசாயிகள் தங்கள் தானியத்தை, தகுந்த விலை அகப்படும் வரையில், நிறுத்திவைக்கும்படி பெற்றுக்கொள்ளும் கடன்கள் மூன்றுமாத கெடுவுக்குமேலிருக்கக்கூடாது.

65. நிலத்தை சீர்திருத்தவேண்டியதற்குக்கடன் வேண்டுமானால், ஐக்கிய முயற்சி ஸ்தாபனங்களின் உதவியை எதிர்பார்ப்பதைவிட, லாண்டு இம்ப்ரூவ்மெண்டு ஆக்ட்டின்படி கவர்ன்மெண்டாருடைய யுதவியை நாடுதல் மிகவும் நல்லது.

66. சங்கபரிசோதனை செய்யும்பொழுது வாங்கப்பட்ட கடன்கள் சரியான வழிகளில் செலவிடப்பட்டிருக்கின்றவா யென்பதை நன்றாய் விஜாரிக்கவேண்டும். வேறு வழிகளிலுபயோகப்படுத்தப்பட்டால், பணவு

தவும் ஸ்தாபனங்களிடத்தில் சங்கத்தின் நாணயமானது மிகவும் குறைந்து போகும்.

67. கடன்கொடுக்கும்படி உத்தரவாகும் பொழுதே அதின் கெடுவையும் நிர்ணயிக்கவேண்டும். உற்பத்தி செய்வதற்கல்லாத மற்ற விஷயங்களுக்கு வாங்கும் கடன்கள் 2 வருஷ கெடுவுக்குமேலிருக்கக்கூடாது. உற்பத்தி செய்யும் விஷயமாய் கடன் கொடுப்பதில், வாங்கப்பட்ட நோக்கம், கடனின் தொகை, கடன் வாங்குபவர் திருப்பிக்கொடுக்கக்கூடும் சக்தி, இவைகளுக்குத்தகுந்தபடி, கடனின் கெடுவை நிர்ணயிக்கவேண்டும். கடன் வாங்கும் காரியங்களுக்குத் தகுந்தபடி கெடுக்கள் இன்னவைகளென சங்கத்தில் யேற்படவேண்டும்.

68. சங்கமானது ஆரம்பத்தில் மெம்பர்களின் அவசரக் காரியங்களுக்குப் பணமுதவவேண்டுமே யொழிய, தன் தனத்தை நீண்ட காலக் கடன்களாக அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது.

69. கடன்களை யுபயோகப்படுத்துவதா லேற்படும் வரும்படியிலிருந்தும், அவைகளின் கெடுவானது ஒரு வருஷத்திற்கு மேலிருந்தால் அத்தொகையை சமபாகமாகப் பிரித்து அதை வருஷந்தோறும் கொடுத்துவந்தும், வாங்கின கடன்கள் அடைபடவேண்டும்.

70. வாங்கப்பட்ட ஒவ்வொரு கடனும் மற்றொரு மெம்பர் அல்லது மெம்பர்கள் கூட்டு ஜாமீன் பேரிற்தான் கொடுக்கப்படவேண்டும். சிறிய கடன்களுக்கு பெரியவைகளைக் காட்டிலும் விசேஷமாய் குறைந்த ஜாமீன்தார்களிருந்தாற் போதும். ஜாமீன்தார்களினது உத்திரவாதத்தை தாமதிக்காமல் பூரவும் அமுலுக்குக்கொண்டு வரவேண்டும்.

71. ஸ்திரமான சொத்துக்களை நபர் ஜாமீன்களின் பேரில் வாங்கும் கடன்களுக்குப்பக்க ஜமீனாக ஒப்புக்கொள்ளலாமேயொழிய நபர் ஜாமீனுக்கு பதிலாக சொத்து ஜாமீனைமாத்திரம் ஒப்புக்கொள்ளக்கூடாது.

72. சங்கங்கள் தங்கள் பங்கு ஜாமீன் பேரில் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடாது.

73. நிலத்தின் பேரில் ஒத்தியாய்க்கடன் கொடுத்தால் மிகவும் அபூர்வமாயும், அதுவும் பக்க ஜாமீனுக்காவது அல்லது அந்த நிலமானது வேறொருவரின் ஒத்தியின் கீழ் அகப்படும்காலத்திலாவது யேற்படவேண்டும். அனுபோகமில்லாத ஒத்தியாயுமிருக்கவேண்டும்.

74. குடிவாரமிருக்குமிடங்களில், நிலசொந்தக்காரர் சம்மதத்தின்பேரில் சங்கங்கள் நில ஒத்தியாய்க் கடன் கொடுக்கலாம். ஏனென்றால், குடிவாரச் சட்டப்படி இவ்வழியாய்க் கடனெடுப்பதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை.



75. வெளியிற் கொடுபடும் ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் பணத்திற்குத் தகுந்த கெடுக்கள் ஊர்ஜிதமாயேற்பட வேண்டியதவசியம்.

76. ஆக்டின் 19-வது ஸெக்ஷனிற் கூறியபடி, சொத்துக்களின் பாத்தியத்தை யுடைத்தான ஓர் சங்கமானது அவைகளை தன்னிடம் ஈடாக வைக்கப்பட்டதுபோற்கருதும்படி சட்டம் மாற்றப்படவேண்டும். ஏனென்றால், இப்பொழுதிருக்கிறபடி கோர்ட்டு மூலமாய் டிகிரி ஒன்றைப் பெற்றாலொழிய, அந்த சொத்துக்கள் வேறு டிகிரி பெற்றவர்களாலும் அபகரிக்கக்கூடும்.

77. ஒத்தியின் பேரில் கடன் கொடுக்கப்படுமிடங்களில், செலவும், சிரமும் இல்லாமற் ஒத்தி வைக்கக்கூடிய வழிகளை அனுஷ்டிப்பது நல்லது.

78. மெம்பர்கள் கடன் வாங்குந் தொகைக்கு வட்டி யின்ன தென்றும் ரெஜிஸ்ட்ரா ருத்திரவன்னியில் அதை மாற்றக் கூடாதென்றும் பைலாவில் குறிப்பிட்டிருக்கவேண்டும். மார்க்கட்டு வீதத்தைக் காட்டிலும் கொஞ்சம் குறைவாயும், க்ஷேம நிதியின் வளர்ச்சிக்குத் தடையில்லாமலிருக்கும்படி அதிகக்குறை வில்லாததாயும், சங்கவட்டிவீதமிருக்கவேண்டும்.

79. சங்கங்கள் ஸ்திரமாய் யேற்பட்ட பிறகு தனி மெம்பர்களுக்கு நபர் ஜாமின்பேரில் கடன் கொடுக்கலாம்.

80. கெடுப்படி ஒழுங்காய் கடனைத் திருப்பிக் கொடுத்தல் மிகவுமவசியம். எந்தக் கடன்களுக்கு மறு கெடுக்குள் கொடுக்கப்பட்டன வென்றும், எவைகள் குறித்த காலங்களுக்குள் கொடுபடாமல் நிலுவையாயிருக்கின்றன வென்றும் கணக்குப் புஸ்தகங்களில் விபரமாய்க் காட்டப்பட்டிருக்கவேண்டும். தகுந்த காரணங்களின் பேரில் மறு கெடுக்குள் கொடுப்பது நியாயமே! கெடுத் தவறின கடன்கள் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

81. தானியங்களாகக் கொடுப்பது மிகவும் அபூர்வமாயிருக்கவேண்டும்.

82. கெடுத் தவறின கடன்களுக்கு அபராத வட்டி விதிப்பது தவறல்ல; ஆனால் இவ்விஷயத்தில் ஜாமீன்தாரர்களை சிரமப் படுத்தவேண்டியது முதற்காரியமாயிருக்க, இவ்வபராதவட்டியானது யொழுங்குபடுத்துமென்று யெண்ணுவது தவறு.

83. வசூல் செய்யப்பட்டு மறுபடி கடன் கொடுக்கப்பட்டது போல் கணக்குப் பேரேடுகளில மாத்திரம் பதிவுசெய்யப்பட்ட கடன்களை சங்க பரிசோதனை செய்யு காலத்தில் காண்பிக்க வேண்டும். மெம்பர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகைக்கும், ஸெண்ட்ரல் பாங்கிக்கு அனுப்பப்பட்ட தொகைக்கும் ஏற்படுத்திய தாரதம்மிய மிருத்தலைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

84. சங்கங்களுக்கும், அவைகளின் மெம்பர்களுக்கு முள்ள விவகாரங்கள் மத்தியஸ்தர்கள் மூலமா யொழியும்படி, ஸ்தல கவர்ன்மெண்டார் சட்டங்களை யேற்படுத்தவேண்டும்.

85. ரெஜிஸ்ட்ராரவர்களது அல்லது மத்யஸ்தர்களது தீர்மானமானது வேறுப்பிரத்தியேகவழியாயல்லாமல் ஸீவில் கோர்ட்டாரின் டிக்கிரியைப்போல்நிறைவேற்றப்படவேண்டும். விவசாயிகளின் கடன்களை வசூல் செய்வதற் கேற்படுத்தப்பட்ட சட்டங்களை எல்லா கோர்ட்டாரிடத்திலும், சங்கத்தினிடத்திலும் ஒப்புவிக்கலாம். வேறுப் பிரத்தியேகக் காரணங்களுண்டானா லொழிய கோர்ட்டார், சங்கம் வழக்கமாய்ப்பெறும் வட்டி வீதத்திற்குக் குறையாமல், டிகிரித்தொகையின்பேரில் வட்டி விதிக்கும்படி செய்தல் நல்லது.

86. சங்கமானது தன்னுடைய சிப்பந்திகளின் உதவியைக்கொண்டே நிலுவைகளை வசூல் செய்யவேண்டும். இவ்விஷயத்தில் வேறுமேல் விஜாரணை செய்யும் ஸ்தாபனத்தினுதவியையாவது, அல்லது ரெஜிஸ்ட்ரார், கலெக்ட்டர், இவர்கள் சிப்பந்திகளினுதவியையாவது நாடக்கூடாது.

87. 'க்ஷேமநிதி' 'திரவியம் பெறும் வழிகள்'—இவைகளின் பதங்கள் விரிவாய் கூறப்பட்டுள்ளன.

88. கிராமச் சங்கங்கள் தங்களிடத்தில் போடப்பட்ட டிபாஸிட்டுகளை குறித்த காலங்களிற் திருப்பிக்கொடுக்க சக்தியுடைத்தாயிருக்குமானால் அவைகள் தங்கள் க்ஷேமநிதியை தங்கள் தொழிலிலே யுபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

89. ஓர் சங்கமானது மற்ற வெளியுதவியைக் கோராமலிருக்கும் வரையில் தன்னுடைய க்ஷேமநிதி விரைவாயோங்கும் வண்ணம் வாங்கிக் கொடுக்கும் தொகையினது வட்டியின் தாரதம்மிய மதிகமாயிருத்தல் மிகவும்சிறந்தது.

90. லாபத்தில் லோர் பங்கை தர்மகாரியங்கள் விஷயமாய் செலவு செய்வதில், ஆக்ட்டின் 34-வது ஸெக்ஷனிற் கூறியதைத்தவிர, வேறு யாதொரு ஆக்ஷேபணையுமிருக்கக்கூடாது.



91. சங்கமானது கிராமமுழுவதுக்கும் பதிலாயும், தன் காரியங்களுக்கிடையூறில்லாமல் வேறு விஷயங்களை செய்வதற்கு சக்தியுடையனவாயுமிருந்தாலொழிய, அது, கிராமசுகாதாரம், கிராமப்படிப்பு, முதலிய கிராமாவிருத்திக்குறியவைகளின்பொறுப்பை யேற்றுக்கொள்ளக்கூடாது.

92. ஓர் சங்கமானது கடனிலிருந்து தப்பி வெளிவராதென்றும் அபிவிருத்தியடையாதென்றும், ரெஜிஸ்ட்ரார் மனதிற் தோன்றினால், அதை அவர் முறித்துவிடவேண்டும்.

93. கூட்டு முயற்சிச் சங்கங்களின் சட்டத்தை மறுபடி திருத்தும்பொழுது, சங்கம் முறியுங்காலத்து மெம்பர்கள் கொடுக்க வேண்டிய கடன்களை யேற்படக்கூடும் லிக்வேடேட்டரால் எளிதில் வசூல் செய்யும்படி சில விதிகளுண்டாகவேண்டும்.

## தணிக்கையும் மேல்விஜாரணையும்.

94. தணிக்கையும், மேல் விஜாரணையும், அடிக்கடி செய்தல் ஓர் சங்கத்தின் அபிவிருத்திக்கு முக்கியமானதலால், அவைகளுக்குத் தகுந்த யேற்பாடு பண்ணவேண்டும்.

95. தணிக்கை வேலையில் அமர்ந்திருப்பவர்கள். ஆடிட்டரும் அவர் சிப்பந்திகளும், மேல் விஜாரணை செய்பவர்கள், சூபர்வைஸரும் அவர் சிப்பந்திகளுமாவார்கள். 'பரிசோதனை' 'விஜாரணை' என்னும் பதங்களின் கருத்தானது ஆக்ட்டின் 35,36 ஸெக்ஷன்களில் கூறியதற்குள்ளே யிருக்கவேண்டும்.

96. ஒவ்வொரு மாகாணத்திலும், அடக்கி ஆளும் இரண்டு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படவேண்டும். ரெஜிஸ்ட்டரானஒவ்வொரு ஆயிரம் சங்கங்களுக்கு, அல்லது அதில் குறைவாயுள்ளவைகளுக்கு ஓர் ரெஜிஸ்ட்ரார் அல்லது ஜாயிண்டு ரெஜிஸ்ட்ராரிருக்கவேண்டும். அவர்கள் எல்லா தேசங்களுக்குறிய கூட்டுமுயற்சிப் புஸ்தகங்களை நன்றாய் படித்தவர்களாயும், கூடுமானால், அவர்கள் ஐரோப்பாதேசத்தில் அவ்விஷயத்தில் அநுபோகமடைந்தவர்களாயுமிருக்கவேண்டும். அவர்களுக்குவேண்டிய யுதவிகளைக்கொடுக்கவேண்டும்; ஆனால் கூட்டுமுயற்சியில் கொஞ்சம் பழகின அஸிஸ்டெண்டு கலெக்ட்டர்களை இவர்கள் உதவி யுத்தியோகஸ்தர்களாக நினைக்கக்கூடாது.

97. ரெஜிஸ்டாருடையவும், அவருடைய அஸிஸ்டெண்டுகளுடையவும் குமாஸ்தா, சிப்பந்திகள், குறைவில்லாமலிருக்கவேண்டும்.

98. ஆக்ட்டில் கூறியுள்ளதற்கு அதிகமாகவே தணிக்கை செய்ய வேண்டும். சங்கத்தின் நிலமையை நன்றாயறியும் வண்ணம் எவ்வித விஜாரணை செய்தலும் தணிக்கையைச் சேர்ந்ததாகும்.

99. தணிக்கை சிப்பந்திகள் ரெஜிஸ்ட்ராரின் ஆதீனத்திலும் அவருக்குத்திரவாதமாகவு மிருக்கவேண்டும். கவர்ன்மெண்டாருக்குத் தங்கள் மூலமாயேற்பட்ட சங்கங்கள் ஒழுங்கான வழியில் அபிவிருத்தியடைந்து வருகின்றன வென்பதை ஊர்ஜிதப்படுத்துவது அதின் முக்கியமான வெண்ணமாகும்.

100. இரண்டு அல்லது அதிக வருஷங்களுக்கொருதரம் மேற்தணிக்கை செய்யும் பொருட்டு கவர்ன்மெண்டார் தங்களின் கீழ் சிப்பந்திகளை எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டு ஆடிட்டர் ஒவ்வொருவரும் வருஷந்தோறும் சுமார் 100 சங்கங்களை தணிக்கை செய்யவேண்டும். இவர்களை இவ்வேலையைத் தவிர வேறு யாதொன்றும் செய்யச் சொல்லக்கூடாது. ஆனாலும், ஒரே வேலையை யெப்பொழுதுஞ் செய்வதில் சிரத்தைக்குறைவு யேற்படாதபடி, வேறு வேலைகளும் தகுந்த அவகாசங்களும் இவர்களுக்குக் கொடுப்பது நல்லது.

101. முதற்தணிக்கை செய்வதற்கு சங்கங்கள் தாங்களே சிப்பந்திகளை யேற்படுத்திக்கொள்ளவேண்டும். ரெஜிஸ்ட்ரார் நம்பும்படியாகவும், சங்கங்களின் ஆலோசனையின்பேரில் அவர் செய்யும் ஆளுகைக்குட்பட்டும் அது யிருக்கவேண்டும்.

102. தணிக்கையும் மேல்விஜாரணையும் செய்யும் சிபபந்திகள் தற்காலம் பரீக்ஷை தேரினவர்களாயிருக்கவேண்டியதவசியமல்ல.

103. ஆடிட்ரிபோர்ட்டு எப்பொழுதும் ஒழுங்காய் எழுதும்படியான பாரமொன்று குறிக்கப்பட்டிருக்கவேண்டும்; ஆனால் முழுவதும் விபரமாயிருக்கக்கூடாது. அந்தந்த மாகாண தாய் பாஷைகளில் ஆடிட்ரிபோர்ட்டின் காப்பி ஒன்றை ஒவ்வொரு சங்கத்துக்கும் கொடுக்கவேண்டும். அசல் ரிபோர்ட்டை சங்கத்துக்குப் பணமுதவும் ஸ்தாபனமும் ரெஜிஸ்ட்டாரும் பார்வையிடவேண்டும்.

104. தாழ்ந்த வகுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்காச் சங்கங்களின் பொருட்டு தணிக்கை விஷயமாய் கவர்ன்மெண்டார் பணமுதவுதல் நியாயமே! சாமானிய பட்டினச்சங்கங்களுக்கும், இன்னும் வேறு வகையிலுள்ளவைகளுக்கும் ரெஜிஸ்ட்ரார் பிரத்தியேக யேற்பாடு செய்யவேண்டும்.

105. சங்கங்கள் தாங்களே தங்கள் மேல்விஜாரணைக்கு சிப்பந்திகளை யேற்படுத்தவேண்டும். இவர்கள் சங்கங்களினாதீனத்திலிருக்கவேண்டுமேயொழிய ரெஜிஸ்ட்ராரின் கீழில்லை.

106. வருஷந்தோறும் அனுப்புப்படியான கணக்குகளின் பாரங்களைத்திருத்துவது சிறந்தது.



## II. ஸென்ட்ரல் பாங்கிகள்.

107. யூனியன்கள் தங்களின் சம்பளம் பெற்ற காரியதரிசியைக் கொண்டு சங்கமேல்விஜாரணை செய்து அதை ஒன்று சேர்த்தல் மிகவும் சிறந்தது. பர்மாவில் பிரைமரிச் சங்கங்களுக்கும், ஸென்ட்ரல் பாங்கிகளுக்கும் மத்தியில் காரண்டி செய்யும்படியான யூனியன்களேற்பட்டது மிகவும் அபிவிருத்தியைக் கொடுக்கின்றது. அம்மாதிரி யெல்லாவிடங்களிலும் ஸ்தாபித்தல் நல்லது. பரஸ்பர மேல்விஜாரணை செய்தல் கடன் பெறக்கூடிய தொகையை தீர்மானித்தல், கடன்களை வசூல் செய்வதற்கு ஓர் மூலாதாரமாகயிருத்தல், தங்கள் வழியாபெடுத்த கடன்களுக்கு ஓர்விதப்பொறுப்பை யேற்றுக்கொள்ளுதல், முதலியன, இம்மாதிரி யூனியன்களின் கடமைகள்.

108. பிரைமரிச்சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய கடன்களை ஐக்கிய முறையில் ஸ்தாபிக்கப்பட்ட ஸென்ட்ரல் பாங்கிகளிலிருந்து பெறவேண்டுமேயொழிய ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளிடம் பெறக்கூடாது.

### நிர்வாகம்.

109. கூட்டு முயற்சிச்சங்கங்களைத் தவிர மற்ற பெந்த ஸ்தாபனத்திற்கும் அல்லது பெந்த மனிதருக்கும் கடன் கொடுப்பதாயாவது அல்லது வேறு வெளி லேவாதேவி செய்யும் விஷயத்தைக் கைக்கொள்ளவாவது உத்தேசித்திருக்கும் தனி நபர்கள் பங்குக்காரர்களாயுள்ள ஸென்ட்ரல் பாங்கிகளை ரெஜிஸ்ட்டர் செய்யக்கூடாது. அவைகளின் பைலாக்களில், டிவிடெண்டின் யெல்லையைக்குறிக்கும் நிபந்தனையிருக்கவேண்டும். கடன் வாங்கும் சங்கங்களின் நாணயத்தை பறிய பிரத்தியேக சிப்பந்திகளை டைரெக்டர்கள் நியமித்துக்கொள்ள வேண்டும். ஸென்டரல் பாங்கிக்கும் சங்கங்களுக்கு மேற்படும் உடன்படிக்கையால் சங்கங்கள் யாதொரு நஷ்டமடையாவண்ணம் ரெஜிஸ்ட்ரார் பார்த்துக் கொள்ளவேண்டும். எப்படியிருந்தாலும், இம்மாதிரி ஸென்ட்ரல் சங்கங்கள் மெதுவாய் மறைதல் நல்லது.

110. சங்கங்களை மாத்திரம் மெம்பர்களாயுடைய ஸென்ட்ரல் பாங்கிகள், தாங்களே யொழுங்காயிருப்பதவசியமா யிருந்தபோதிலும், சரிவர நிர்வகிக்கப்படாததினாலும், சாமானிய அந்தஸ்துள்ள மத்தியவகுப்பினர்களுக்கு தவியாயில்லாததினாலும், பின்பு ஸ்தாபிக்கப்படவேண்டும்.

111. தனி நபர்களும், சங்கங்களும், மெம்பர்களாகக்கூடிய ஸென்ட்ரல் பாங்கிகள்தான் இந்தியா தேசத்திற்குரித்தானவை. ஆனால் அப்பாங்கியின் வேலையிற்சிரத்தை யெடுத்துக்கொள்ளாத தனி நபர் மெம்பர்களை வர வரக்குறைக்கும்படி நிபந்தனைகளேற்படவேண்டும்.

112. ஓர் ஸென்ட்ரல் பாங்கியின் விசாலிக்கும் எல்லையானது கூடிய வரையில் குறிக்கப்பட்டு, ஜில்லா அல்லது தேஸில் முதலிய அரசாட்சிப் பிரிவினையை யொத்தேயிருக்கவேண்டும். ஆனால் நியாயமான காலத்திற்குள் சுமார் 200 அல்லது 250 சங்கங்களுடன் நடவடிக்கைகள் வைத்துக்கொள்ளும்படி யிருக்கவேண்டும்.

113. ஜவாப்தாரியாயிருக்கும் யூனியன்கள் நன்றாயபிவிருத்தியடைந்திருக்குமிடங்களில், மாகாண பாங்கிகள், சுபர்ச்சியான ஸென்ட்ரல் பாங்கிகளுக்கு பதிலாக, ஸ்தலகிளை பாங்கிகளை யேற்படுத்திக்கொள்ளலாம். ஆனால் இவைகளைக்காட்டிலும் ஸென்ட்ரல் பாங்கிகள்தான் நன்றாய் வேலை செய்துவரும்.

114. ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளைக்காட்டிலும் ஐக்கியமுயற்சிபாங்கிகளின் லேவாதேவியை நிர்வகித்தல் இலகுவானதால், ஓர் ஸென்ட்ரல் பாங்கியானது வக்கீல்களாலும், வேறு தொழிலாளிகளாலும் ஒழுங்காய் நிர்வகிக்கப்படலாம். ஆனால் லேவாதேவியிற் பழகினவர்கள் கிடைத்தால் அவர்களை அப்பாங்கியின் போர்ட்டிலிருக்கச் செய்பவேண்டும்.

115. ஸென்ட்ரல் பாங்கியின் மானேஜருக்கும், அவர் சிப்பந்திகளுக்கும் சம்பளங்கொடுப்பதாயிருந்தால் தகுந்தபடி கொடுக்கவேண்டும். அது தன் சிப்பந்திகளை, ரெஜிஸ்ட்ரார் திருப்தியடையும்படி, ஒழுங்காய் மேல் விஜாரணை செய்துவரவேண்டும். புதிதாய்ச் சங்கங்கள் ஸ்தாபிப்பதின் பொருட்டு சுயர்ச்சியாய் மனுசெய்பவர்களுக்கு இவர்கள் தகுந்த உதவி செய்யலாம்.

116. சங்கங்கள் மெம்பர்களாகக்கூடிய ஸென்ட்ரல் பாங்கிகள் தங்களிடம் பங்குகளெடுத்துக்கொள்ளாத சங்கங்களுக்குக்கடன் கொடுக்கக்கூடாது.

117. நாணய வகையல்லாத மற்றச்சங்கங்கள் தகுந்த பங்குகளெடுத்துக்கொண்டும், போதுமான ஜாமீனும் கொடுத்தாலொழிய கடன்கள் பெறக்கூடாது. ஸென்ட்ரல் பாங்கிகள் இன்ஷியூரென்ஸ் சங்கங்களுக்குப் பணமுதவக்கூடாது.

118. பணமனுப்புவதிலுண்டாகும் நஷ்டங்களுக்கு உத்திரவாதமில்லாமலிருந்தால், ஸென்ட்ரல் பாங்கியானது, ஐக்கிய முயற்சிச் சங்கங்கள் ஒன்றுக்கொன்று பணமனுப்புவதற்கோர் மத்திய ஸ்தாபனமாயிருப்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.

119. ஸென்ட்ரல் பாங்கிகள் தங்களிடம் சங்கங்கள் மெம்பர்களாய்ச்சேர்வதற்கேற்படுத்திய பிரவேசக்கட்டணம் ஆக்ஷேபிக்கத்தகுந்ததல்ல.



120. ஸென்ட்ரல் பாங்கிகளின் பங்குகள் ஒரே வகைத்தாயிருக்கவேண்டும். ஸ்தல டிபாஸிட்டுகளைக்கவரவேண்டி பங்குகளில் வித்தியாசமிருப்பதவசிய மெனத்தோன்றினால், தனி நபர்களெடுக்கும் பங்குகள் மற்றவைகளுக்கு முன்னால் டிவிடெண்டடையும் படியானவைகளாக யிருக்கலாம். ஆனால் லாபம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வருஷந்தோறும் டிவிடெண்டு கட்டாயமாய் கொடுக்கப்படவேண்டிய பங்குகளாயிருக்கக்கூடாது.

121. சங்கங்களும், தனி நபர்களும், எடுக்கும் பங்கின்விலை ஒரே விதமாயிருத்தல் நல்லது.

122. சங்கங்கள், ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து கடனெடுக்கக்கூடுமதிகாரமானது அப்பாங்கியிலிருக்கும் தங்கள் பங்குகளுக்குத் தகுந்தாற்போலிருக்கவேண்டும்.

123. ஸென்ட்ரல் பாங்கியின் ஒவ்வொரு பங்குக்காரருக்கும் ஒரு வோட்டின்மேலிருக்கக்கூடாது. பங்குதனம் சேருவதிற்கஷ்டமிருந்தால், சட்டப்படி குறிக்கப்பட்ட உயர்ந்த யெல்லைத்தொகையாகிய ரூ. 1,000க்கு அதிகமாய் தனி நபர்கள் பங்குகளெடுக்கும் வண்ணம், ஸ்தல கவர்ன்மெண்டார் உத்திரவிடலாம். வேறு விதங்களில் சட்டத்திற்குறிக்கப்பட்ட எல்லையை மீறக்கூடாது.

124. தனி நபர்களெடுத்த பங்குகளின் தொகை முழுவதும் பாக்கியில்லாமற்கொடுபடவேண்டும். சங்கங்களெடுத்த பங்குகளின் தொகையில் பாக்கியிருக்கலாம்.

125. பங்குத்தொகையின் பாக்கியானது, யேற்பட்ட பங்கின் விலையின் பேரில் கணக்கிடப்படவேண்டுமேயொழிய, அப்பொழுதுக் கப்பொழுது மார்க்கட்டில் கிடைக்கக்கூடிய விலையின்பேரில் மதிக்கப்படக்கூடாது.

126. டிவிடெண்டின் வீதம் சாதாரணமாய் குறைவாயிருக்கவேண்டும். ஏறக்குறைய யெல்லாப்பங்குகளையும் சங்கங்களெடுத்துக்கொண்டிருந்தால், டிவிடெண்டு வீதத்தின் உயர்ந்த எல்லையானது சங்கங்கள் கடன் பெறும் சாதாரண வட்டி வீதமாகும். பங்குக்காரர்கள் விசேஷமாய் தனி நபர்களாயிருந்தால், டிபாஸிட்டுகளுக்குக் கொடுக்கும் வட்டி வீதத்தைக்காட்டிலும் 2 அல்லது 3 வீதம் அதிகத்திற்கு மேலுயரக்கூடாது. போனஸ் என்று சொல்லும்படியான தொகைகளை நிறுத்தவேண்டும்.

127. பிரைமரிச் சங்கங்கள் ஸென்ட்ரல்பாங்கிகளிற் போடப்பட்ட டிபாஸிட்டுகள், தங்களிடம் போடப்படும் டிபாஸிட்டுகளுக் கதிகமானதாய்

இவைகளுக் கனுப்பப்பட்டதாயும் குறியகால சிறு டிபாஸிட்டுகளாயு மிருக்க வேண்டும். ஸென்ட்ரல் பாங்கிகளில் தங்கள் க்ஷேம நிதியை டிபாஸிட்டு செய்யக் கூடாது.

128. தினந்தோறும் பணம் லேவாதேவி செய்யக்கூடும்படியான கர்ரண்டு அக்கவுண்டுகள் வைத்துக்கொள்ளுவது தவறு. ஆனால்பாங்கிகளில்லாவிடங்களில் சங்கங்கள் இவைகளை வைத்துக் கொள்ளலாம். அவ்வித அக்கவுன்டுகளுக்கு 100-க்கு 2-வீதக் கதிகமாகாமல் வட்டி கொடுக்கக் கூடாது. இதிலுள்ள தொகையை யீடுபண்ணுவதற்கு பணமாவது அல்லது கவர்ன்மெண்டு பேப்பராவது தகுந்தபடி பிரத்தியேகமா யிருக்க வேண்டும்.

129. மெம்பர்களுக்கும், மெம்பர்களல்லாதவர்களுக்கும் ஸேவிங்கிஸ் அக்கவுன்டுகள் வைக்கலாம். ஆனால் அவ்விதத் தொகையில் 100-க்கு 75 வீதத்திற்குக் குறையாமல் பணமாயாவது அல்லது பணமெளிதிற் புறளக் கூடிய சொத்துக்களிற் போட்டாவது ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்· வாங்கப்பட்ட ஒவ்வொரு அக்கவுண்டின் உயர்ந்த யெல்லை குறைவாயிருக்கவேண்டும். பணம் வேண்டுமானால் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்; காரண்டு அக்கவுண்டுகளுக்கு அவைகளை மாற்றக் கூடாது,

130. ஸென்ட்ரல் பாங்கிகள் தங்களுக்குத் தேவையான தொகைகளை, ஸ்தல டிபாஸிட்டுகள் மூலமாய் பெறப் பிரயத்தனப் படவேண்டும். இவைகள், அந்தந்த ஸ்தலங்களுக் கேற்படும் நிபந்தனைக் குட்பட்டு, டிபாஸிட்டுகளை யெந்த விடங்களிலிருந்தும் பெறலாம்.

131 டிபாஸிட்டுகளின் சராசரி கெடுவானது கடன் திரும்பிக் கொடுபடும் சராசரி கெடுவுக் குறையாமலிருக்கவேண்டும். டிபாஸிட்டுகளைத் திருப்பிக்கொடுக்க யேற்பாடு செய்யும் பொழுது சில டிபாஸிட்டுகள் மறுபடி போடப்படுமென்றும் அல்லது வேறு சில புது டிபாஸிட்டுகள் வந்து விழுமென்றும் யோஜிக்கக் கூடாது. குறித்த கெடுவில் கொடுபட வேண்டிய கடன்களை யெதிர் பார்த்திருக்க வேண்டும். வரவு செலவு வருஷ முழுவதும் பரவி யிருக்கும்படி செய்ய வேண்டும்.

132. நாம் சிபார்சு செய்தபடி யேற்படும் செலவுகளுக்காக ஸென்ட்ரல் பாங்கிகளும் பிரைமரிச் சங்கங்களும் 100-க்கு 3 வட்டி வீத் தாரதம்மியத்தை யுடைத்தா யிருக்கவேண்டும்

133. டிபாஸிட்டுகளை குறித்த காலங்களின் தவறாமற் திருப்பிக் கொடுபதில் மிகவும் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ள வேண்டும்· டிபாஸிட்டுக்காரர்கள் டிபாஸிட்டுகளை மறுபடி போடுகிறார்களா யென்பதை முன்னமே அறிந்து கொள்ளவேண்டும்.



134. ஸென்ட்ரல் பாங்கிகள் தங்கள் நாணயத்தின்பேரின் ராஜதானி பாங்கியில் கடன் பெற்று வாங்காத பாக்கித் தொகையை தங்கள் கையிலிருக்கும் பணசொத்தைப் போல் பாவிப்பதில் யாதொரு ஆக்ஷேபணையு மிருக்கக் கூடாது.

135. ஸ்திரமாயிருப்பதென்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளுடன் நாணயக் கடன் வைத்துக் கொள்வது நியாயமே. ரெஜிஸ்ட்ரார் ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகளிடத்தில் ஸென்ட்ரல் பாங்கிகளுக்கு முதல் முதலில் பழக்கஞ் செய்து வைத்து அவைகள் ஸென்ட்ரல் பாங்கிகளைப்பற்றிக் கேட்கும் சமாசாரங்களைத் தெரிவிக்க வேண்டும். ஜாயிண்டு ஸ்டாக் பாங்கிகள் ஸென்ட்ரல் பாங்கிகளின் நிலைமையை அறிய வேண்டுமென் றெதிர் பார்ப்பதுடன் அவைகள் கடன்களை வசூல் செய்வதில் கவர்ன்மெண்டா ருதவியை நாடக் கூடாது.

136. ரெஜிஸ்ட்ராருடைய உத்திரவின் பேரில் ஸென்ட்ரல் பாங்கிகள் ஒன்றுக் கொன்று கடன் கொடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரொவின்ஷியல் பாங்கி யொன்று யேற்பட்ட பிறகு இது நின்றுவிட வேண்டும்.

137. பாங்கிகள் பிரத்தியேக சமயங்களில் தங்கள் அசையா சொத்துகளின் பேரில் டிபென்சர்கள் வாங்கக் கூடியதா யிருந்தா லொழிய டிபென்சர்களைக் காட்டிலும் நீண்டகால டிபாஸிட்டுகளின் மூலமாய் தொழில் தனத்தை அதிகப் படுத்தவேண்டும்.

138. சங்கத்தின் பங்கு தனமும் க்ஷேம நிதியும் சேர்ந்து சங்க மொத்தக் கடன் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ வீதத்திற்குக் குறையாமலிருக்கவேண்டும்.

## தொழில் தனத்தை யுபயோகப்படுத்தும் வழிகள்.

139. ஸென்ட்ரல் பாங்கிகள் தனி நபர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது. வேறு வெளியில் லேவாதேவி செய்யவும் கூடாது.

140. ஓர் ஸென்ட்ரல் பாங்கியானது தன்னுடன் சேர்ந்துள்ள சங்கத்தின் கடன் வாங்குமதிகாரயெல்லையையும், சங்கமானது தன் மெம்பர்களின் நாணயமின்னதென் றேற்படுத்தப்பட்ட விவரங்களையும், தங்கள் சொந்த சிப்பந்திகளாலாவது அல்லது யூனியன் மூலமாயாவது நன்றாய்ப் பரிசோதனை செய்த பிறகு, சங்கத்தின் தேவையையும், அதின் நிதியையுமுத்தேசித்து, அச்சங்கத்தின் நாணயயெல்லையைத்தீர்மானிக்கவேண்டும்.

141. ஓர் ஸென்ட்ரல் பாங்கியினாலறியவேண்டிய விவரங்கள் பின்வருவனவற்றின் பொருமானத்தின் மதிப்பையும் சேர்த்துள்ளன :—(1)

கடன் பெறும் சங்கத்து மெம்பர்களின் ஸ்தாவர, ஜங்கம சொத்துக்கள் (2) அம்மெம்பர்கள் சம்பாதித்து மீதி பிடிக்கும் சக்தி. சங்கத்தின் குணாதிசியங்களையும் முன் நடவடிக்கைகளையும் பகுத்தறிந்து முடிவாயபிப்பிராயப்படும்பொழுது மேற்கூறிய விவரங்களை உபயோகப்படுத்தவேண்டும்.

142. முன்கூறிய பொருமானம் யூனியனிருக்குமிடங்களில் யூனியனாலும், அதில்லாவிடங்களில் ஸென்ட்ரல் பாங்கியினாலும் மதிக்கப்படவேண்டும். அவ்விதமதித்தலின் பொறுப்பு பிரிவினையில்லாமலிருக்கவேண்டும். ஓர் சங்கத்தின் நாணய எல்லையைக் குறைக்க ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரமிருக்கவேண்டும்.

143. வருஷத்தின் ஒன்று அல்லது இரண்டு முக்கியமான பர்வ காலங்களில் கடன்கள் கூடியவரையில் ஒன்றாய்க்கொடுபடவேண்டும்.

144. கடன்வாங்குவதின் காரியத்தைக்குறித்தும், அதின் தொகையைப்பற்றியும் யூனியன் தெரிவிக்கும் அபிப்பிராயத்தை ஸென்ட்ரல் பாங்கிகள் ஒப்புக்கொள்ளவேண்டும்; ஆனால் கடன் கொடுப்பதற்குப்போதுமான தொகையில்லாமலிருந்தால், யூனியனுக்கு அதைத்திருப்பியனுப்பலாம்.

145. கடன்களின் கெடுக்களானவை டிபாஸிட்டுகளின் கெடுக்களைச்சார்ந்தும், ஓர் குறித்த காலத்திற்குள் திரும்பிக்கொடுபடும் கடன் தொகைகள் அதேகாலத்திற்குள் செலுத்தப்படவேண்டிய டிபாஸிட்டுகளைக்காட்டிலும் அதிகமாயுமிருந்தால், நிர்ணயிக்கப்பட்ட தவணைகள்தோறும் சிறுதொகையாய்த் திருப்பிக்கொடுக்கும்படியாவது அல்லது வேண்டும் பொழுதுகொடுக்கும்படியான பிராமிசரிநோட்டிலாவது ஸென்ட்ரல் பாங்கிகள், சங்கங்களுக்குக்கடன் கொடுக்கலாம். சங்கங்கள் கடனுக்காகச்செலுத்துவதும், மெம்பர்கள் சங்கங்களுக்குச் செலுத்துவதும் பொருந்தியிருக்கும்.

146. நன்றாய் நிர்வகிக்கப்பட்டு வருகிற சங்கங்களுக்கு ஜாமினில்லாமல் நாணயக்கடன் கொடுக்கலாம்,

147. கடன் வாங்கும் சங்கம் கொடுக்கும் ஜாமீன் விசேஷமாய் பிரோநோட்டாயிருக்கவேண்டும். சங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கிகளிற் போடப்பட்ட டிபாஸிட்டுகளை அவைகளெடுக்கும் கடனுக்கு ஜாமீனாக ஒப்புக்கொண்டபோதிலும், ஸென்ட்ரல் பாங்கிகளிலுள்ள அவைகளின் பங்குகளை ஜாமீனாக ஒப்புக்கொள்ளக்கூடாது.

148. கடனின் வட்டி வீதமானது மார்க்கட்டு வீதத்தைக்காட்டிலும் குறைவாயும், ஆனால் லாபகரமாயுமிருக்கவேண்டும். அவ்விதமானது கடன் வாங்கும் சங்கத்துக்குத் தகுந்தபடியும் கடனின் காலத்தை யுத்தே



சித்தும் நிர்ணயிக்கப்பட்ட ஓர்வித யேற்பாட்டின்பேரில் மாறுதலடையலாம்.

149. மெம்பர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகையை சங்கமானது தான் ஸென்ட்ரல் பாகிக்குக் கொடுப்பதற்கு உடனே உபயோகப்படுத்த வேண்டியது. ஸென்ட்ரல் பாங்கியானது கடன் வசூல் செய்வதை மேல்விஜாரணை செய்யவேண்டும். கெடுத்தவறின கடன்களின் ஸ்டேட்மெண்டு தயார் செய்ய வேண்டியதில்லை.

150. ஸென்ட்ரல் பாங்கிகள் கடன்களைத் திருப்பிக்கொடாத சங்கங்களின் பேரில் சாதாரணமாய் ஸிவில் கோர்ட்டில் வியாஜியஞ் செய்யக்கூடாது. ஆனால் தங்கள் சிப்பந்திகள் மூலமாய் அவைகளை அடிக்கடி கேட்டும், கடைசியாய் ஆக்ட்டின் கூறப்பட்ட 36-வது ஸெக்ஷன்படி நடவடிக்கை யெடுத்துக் கொள்ளும் வண்ணம் ரெஜிஸ்ட்ராருக்கு மனு செய்து கொள்ளவேண்டும்.

151. பணமெளிதிற் கிடைக்கக்கூடிய வழிகளை யெல்லாம் யேற்படுத்திக்கொண்ட பிறகு, ஓர் ஸென்ட்ரல் பாங்கியானது தன் க்ஷேம நிதியின் பாக்கித்தொகை யெதாவதிருந்தால் அதை தன் தொழில் தனத்துடனுபயோகிக்கலாம்.

152. நாணயத்தட்டு காலங்களை முன்னிட்டு ஓர் ஸென்ட்ரல் பாங்கியானது, தனக்குப் பணமெளிதில் வேண்டிய பொழுது கிடைக்கும்படி மார்க்கங்கள் வைத்துக் கொள்ள வேண்டும்.

153. வேறு புதிதான டிபாஸிட்டுகள் வந்து விழாதென்றும் காலமான டிபாஸிட்டுகளை மறுபடி போடப்படாதென்றும், கொடுபட வேண்டிய தொகைகள் வாராதென்றும் நினைத்தே அவ்வருஷத்திற் செல்லாக வேண்டிய டிபாஸிட்டுகளின் தொகையிற் பாதியாவது இம்மார்க்கங்களிற் கிடைக்கவேண்டும்.

154. மற்ற வழிகள் தவறிப்போன பிறகு தான், பணமெளிதிற் கிடைக்கும் வழியையுபயோகப் படுத்தவேண்டும்.

155. ஓர் பாங்கியானது தன் தேவைக்காகவும், தன்னுடன் யேற்பாடு செய்துகொண்ட சங்கங்களின் பொருட்டாகவும், தகுந்தபடி பணம் வைத்துக் கொள்ளவேண்டும்.

156. திரவியமடையக்கூடும் வழிகளை மூன்றுமாதத்திற் கொருமுறை சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.

157. வேண்டியதற் கதிகமாயிருக்கும் நிதிகளை ராஜதானி பாங்கிக்கு அனுப்பவேண்டும்.

158. நிகர்லாபத்தைப் பிரித்துக்கொடுக்கும் பொழுது ஸெண்ட்ரல் பாங்கிகள் காலமாகியும் கொடுபடாமலிருக்கும் வட்டித் தொகையைக் கழித்தே கணக்கிடவேண்டும். கிடைக்கவேண்டிய காலமாகாத வட்டித் தொகையை லாபக்கடன் ஸ்டேட் மெண்டில் அலாதியாய்க் காண்பிக்க வேண்டும்.

159. சட்டத்திற் கூறப்பட்ட யுயர்ந்த பெல்லையின்படி க்ஷேமநிதியை டிபாஸிட் செய்துவரும் பாங்கிகள், வசூலாகாத கடன்களினு லேற்படும் நஷ்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள, நிதியொன் றேற்படுத்திக் கொள்ளவேண்டும்.

160. பணமேராளமாய் வருவதற்கு வழிகளிருந்தால், கட்டிடங்களுக்காக நிதிகளேற்படுத்திக் கொள்ளலாம். அம்மாதிரி கட்டிடங்கள் விவசாய டெப்போக்ளாயிருக்கு மிடங்களில், கவர்ன்மெண்டார் அவைகளுக்குப் பணமுதவலாம்.

## தணிக்கையும், மேல்விஜாரணையும்.

161. ஸெண்ட்ரல் பாங்கிகளின் தணிக்கையை வெளியிலிருக்கும் திறமான ஆடிட்டர்களிடத்திலாவது அல்லது ரெஜிஸ்ட்ராரின் சிப்பந்திகளிடத்திலாவது ஒப்புவிக்க வேண்டும். அம்மாதிரி பாங்கிகள் தணிக்கையின் செலவை தாங்களே பொறுக்க வேண்டும்.

162. ஸெண்ட்ரல் பாங்கிகள் தங்கள் ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டுகளையும், வருஷரிபோர்ட்டுகளையும் பிரசுரப்படுத்தவேண்டும். அவைகள் இப்பொழுதிருக்கும் விவரங்களைக் காட்டிலும் அதிகமாயுடைத்தாயிருக்க வேண்டும்.

163. ஸெண்ட்ரல் பாங்கிகள் இவைகளைத்தவிர மூன்று மாதத்திற்கொருமுறை தங்களால் வெளி முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன்களையும் தொழில் தனபிவிருத்தியையும் காட்டும் ஸ்டேட்மெண்டை வெளிப்படுத்தவேண்டும்.

## III, ராஜதானி பாங்கிகள்.

164. பெரிய மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் ராஜதானி பாங்கி யேற்படவேண்டும்.

165. ராஜதானி பாங்கிகள் அதிக செலவுடனாவது அல்லது அனுவசியவமான பெரிய தோரணையிலாவது ஆரம்பிக்கப் படக்கூடாது.

166. பங்குதனமும், க்ஷேமநிதிகளும் சேர்ந்து வெளியிற் கடன் வாங்கப்பட்ட மொத்த தொகைக்கு பத்திலொன்றுக்குக் குறையாமலிருக்கவேண்டும்.



167. ஓர் ராஜதானி பாங்கியின் நிர்வாகத்தில், சங்கங்களினதும், ஸெண்ட்ரல் பாங்கிகளினதும் பிரதிநிதிகளிருக்கவேண்டும். மஹாசபை கூடும்பொழுது உயர்ந்த வோட்டுகள் நியாயமான காலத்திற்குள் கிடைக்கும்படி யேற்பாடெடுத்துக் கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் தனி நபர் பங்குக்காரர்களின் செல்வாக்கு அதிக மாயிருக்கலாம்.

168. ஆனாலும் ராஜதானி பாங்கியின் நிர்வாகத்தில் சங்கங்களும் ஸெண்ட்ரல் பாங்கிகளும் அதிக அதிகாரத்தை யுடைத்தா யிருக்கவேண்டியது அசியமல்ல.

169. பங்குகள் சாதாரணமாய் ஒரே வகையாயிருக்கவேண்டும். தனி நபர்கள் பங்குத் தொகையில் பாக்கி வைத்துக் கொள்ளக்கூடாது. பங்குக்காரர் சங்கமாயிருந்தால் பாக்கி வைப்பதில் ஆக்ஷேபணை யில்லை.

170, எல்லா ஸெண்ட்ரல் பாங்கிகளும் ராஜதானி பாங்கியிற் சேர்ந்து பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். ஸெண்ட்ரல் பாங்குகளில்லா விடங்களில் ராஜதானி பாங்கியானது பிரைமரிச் சங்கங்களுக்கு நேராகவே கடன் கொடுக்கலாம்.

171. கூடிய வரையில் நீண்டகால கெடுக்களுக்கு ஸ்திர டிபாஸிட்டுகளைப் பெறவேண்டும்.

172. நினைத்த மாத்திரத்தில் கேட்கக்கூடிய டிபாஸிட்டுகளிருந்தால், அதில் முக்காற் பங்கு பணம் எளிதிற் கிடைக்கும் மார்க்கங்களைப் பிரத்தியேகப் பந்திக் கொள்ளவேண்டும்.

173. ஸேவிங்கிஸ் டிபாஸிட்டு அக்கவுண்டுகள் வைப்பதில் யாதொரு யிடையூறு மிருகக்கூடாது.

174. ராஜதானி பாங்கிகள் நாணயக்கடன்களில் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. சுயர்ச்சியாய் இருப்பதை யுத்தேசித்து தகுந்தபடி க்ஷேமநிதிகளை வரவரச் சேர்த்து, நினைத்த மாத்திரத்தில் பணம் கிடைக்கக்கூடிய உறுதியான சொத்துகள் வாங்குவதிற் திரவியத்தை யுபயோகப்படுத்தியும் வரவேண்டும்.

175. நிகழும் வருஷத்தில் நான்கு மாத காலத்திற்குள் தங்களுக்குத் தேவையான தொகைக்கும், ஸெண்ட்ரல் பாங்கிகளின் பொருட்டு அக்காலத்திற்குள் கொடுப்பதா யொப்புக் கொண்ட தொகைக்கும் ஈடு பண்ணும்படி சரியான திரவியம் புறளும் மார்க்கத்தை, ராஜதானி பாங்கிகளுடையத்தா யிருக்கவேண்டும். ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கு இவ்வித முதவி செய்வதற்கு, ராஜதானி பாங்கி கம்மிஷனாவது அல்லது வட்டி வீதமதிகமாயாவது அவைகளிடம் வாங்கவேண்டும். பணமெளிதிற்

கிடைக்கக்கூடிய மார்க்கங்களை ஒன்று சேர்த்து வைத்தல் மிகவும் சௌகரியமாயிருக்கும்.

176. ராஜதானி பாங்கிகள் வெளிலேவாதேவி விஷயங்களை யொப்புக்கொள்ளக்கூடாது. ஆனால் மீதியாகும் நிதிகளை குறுகிய காலத்திற்கு வெளி ஸ்தாபனங்களில் டிபாஸிட்டு செய்யலாம்.

177. ஒரு ராஜதானி பாங்கியானது கடன் வாங்கும் மற்றொரு ராஜதானி பாங்கியினது நாணயத்தையும் யோக்கிதையையும் தானே பரிசோதனை செய்து யறியமுடியுமானாலொழிய தன்னுடைய மீதியான பணத்தை அதற்குக் கடன் கொடுக்காமல் மறுப்பது நியாயமே!

178. ரெஜிஸ்ட்ராரால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் சார்ட்டேர்டு அல்லது இன்கார்போரேடெட் அக்கவுண்டெண்டால் கணக்குகள் பிரத்தியேகமாய் தணிக்கை செய்யப்படவேண்டும். அதினாலேற்படும் செலவு முழுமையும் அப்பாங்கியே பொறுக்கவேண்டும். மற்ற பரிசோதனை, மேல் விஜாரணை முதலிய கடமைகள் ரெஜிஸ்ட்ராருடையதாகும்; இவைகளின் செலவை கவர்ன்மெண்டார் வகிப்பார்கள்.

179. ராஜதானி பாங்கிகள், ஸென்ட்ரல் பாங்கிகளைப்போல் வருஷ ஸ்டேட்டுமெண்டுகளை பிரசுரப்படுத்தவேண்டும். ரெஜிஸ்ட்ரார் இவைகளைச் சேர்ந்த ஸென்ட்ரல் பாங்கிகளின் வருஷக் கணக்குகளின் காப்பிகளை இவைகளுக்குக் கொடுக்கவேண்டும். இவைகள், வருஷ ஆஸ்திக் கடன் ஸ்டேட்மெண்டுகளையும், ரிபோர்ட்டுகளையும் பிரசுரித்து, பங்குக்காரர்களுக்கும், டிபாஸிட்டர்களுக்கும் கொடுக்கவேண்டும்.

## 1. பொது வுதவி.

180. பத்திரங்கள் ரெஜிஸ்ட்டர்செய்யும் சப்ரெஜிஸ்ட்ரார்கள் பீஸை சம்பளமாய்ப் பெறுவதால், ஐக்கியமுயற்சிச் சங்கங்களுக்கு ரெஜிஸ்ட்டர் பீஸைத் தள்ளுபடி செய்ததினாலேற்படும் அவர்கள் நஷ்டத்திற்கு கவர்ன்மெண்டார் ஈடுகொடுக்கவேண்டும்.

181. கராண்டு அக்கவுண்டுகள் வைத்திருக்கும் தனி நபர் மெம்பர்களின் செக்குகளுக்கு (Cheques) ஸ்டாம்புவரி தள்ளுபடி செய்தல் அனுவசியம்.

182. ஐக்கியமுயற்சி அபிவிருத்தியின் விஷயமாய், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் அதிகச்செல்வாக்கு இல்லாமற் பாதுகாக்கவேண்டுமேயல்லாமல், அவர்களினுதவி எவ்விதத்திலும் இம்முயற்சிக்கு வேண்டும்.

183. கவர்ன்மெண்டுத்தியோகஸ்தர்கள் ராஜதானி பாங்கிகளிலும் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும் டிபாஸிட்டு செய்வதில் யாதொரு தடையுமிரு



க்கக்கூடாது. ஆனால் இண்டியன் ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்கள் வேலை செய்துவரும் ஜில்லாக்களிலுள்ள ஸெண்ட்ரல் பாங்கிகளில் தங்களால் போடப்பட்ட டிபாஸிட்டுகளைத் தெரியப்படுத்தி, சமயம் நேர்ந்தவிடத்து அவைகளை யெடுத்துவிடவேண்டும்.

184. கவர்ன்மெண்டுத்தியோக வேலைக்காரர்களுக்கென்றேற்படும், விபசாயிகளுக் கல்லாதமற்றச் சங்கங்களில் மெம்பராகும் உரிமை எல்லா கவர்ன்மெண்டு வேலைக்காரர்களுக்கு மிருக்கவேண்டும்.

185. மற்ற உத்தியோகஸ்தர் விஷயங்களில் ஸ்தலத்திற்குத் தகுந்தபடி தீர்மானிக்கவேண்டும்; ஆனால் 186, 187, பாராக்களில் சுட்டிக்காட்டிருப்பவைகளைத் தவிர, பிரத்தியேக வுத்திரவன்னியில் இண்டியன் ஸிவில் ஸர்விஸ், பிரோவின்ஷியல் ஸர்விஸ், சபார்டினேட்டு ஸிவில் ஸர்விஸ், இவைகளிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஓர் கூட்டு முயற்சிச் சங்கத்தின் அல்லது பாங்கியின் நிர்வாக கம்மிட்டியிலாவது அல்லது சிப்பந்தியாயாவது யிருக்கக்கூடாது.

186. ரெஜிஸ்ட்ராருடைய அதிகாரத்தை ஜில்லா வுத்தியோகஸ்தர்களின் வசம் மெள்ள மெள்ள ஒப்புவிக்கக்கூடாது.

187. ஜில்லா ஆபீசர்களும், சப்டிவிஷனல் ஆபீசர்களும் ஸெண்ட்ரல் பாங்கிகளின் நிர்வாக கம்மிட்டியில் மெம்பராயிருந்தாலும், இல்லாவிட்டாலும், சேர்மனாயிருக்கலாம். ஆனால் வேலை யொன்றுமில்லாதிருக்கும்படி கௌரவத்திற்கு ஒப்புக்கொள்ளக்கூடாது. பங்குக்காரர்கள் அல்லது டைரெக்டர்கள் மீட்டிங்குகளை இவர்கள் பார்ப்பதற்கு அதிகாரமிருக்கவேண்டும். ஸ்தல கவர்ன்மெண்டார் இவ்வித யேற்பாடு செய்யும் விதத்தை தீர்மானிப்பார்கள்.

188. ரெஜிஸ்ட்ராரின் உத்தியோகம் காயமாயிருக்கவேண்டும்.

189. ரெஜிஸ்ட்ரார் முழுநாள் உத்தியோகஸ்தராயும், மகாண கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் கலெகட்டர் கிரேட்டில் அவரைச் சேர்த்து மிருக்கவேண்டும். மாதந்தோறும் ஸ்தல அலவென்ஸ் ரூ 250 பெற வேண்டும். சம்பளப் பிரமோஷன் அடைந்து வருவதுடன், பிரயாணஞ் செய்யாக் காலங்களில் ஸ்தல கவர்ன்மெண்டாருடன் ஒட்டியிருக்கும் பொருட்டு மலை ஸ்டேஷனொன்றில் தன் ஹெட்குவார்டேர்ஸை வைத்தக் கொள்ளும்படியா யிருக்கவேண்டும்.

190. ஜில்லா கலெக்ட்டர்களுடையும் உயர்ந்த பிரயாண அலவன்ஸின் வீதத்திற்குக் குறையாமல் இவர் பெற வேண்டும். வேறு யேற்பாடுகளை யறியும் பொருட்டு மற்ற மகாணங்களைப் பார்ப்பதில் யாதொரு ஆக்ஷேபணையு மிருக்கக் கூடாது.

191. ஓர் டெபுட்டி ரெஜிஸ்ட்ராரின் சம்பளம் டெபுட்டி கலெக்டர் ஆபீசரின் சம்பளத்திற்கு சமதியாய் ஜாயிண்டு ரெஜிஸ்ட்ராரின் சம்பள மிருக்கவேண்டும். மூன்று வருஷத்தி லிருந்து 6 வருஷ வரையில் உத்தியோகத்திலிருந்திருக்கும் அஸிஸ்டெண்டு கலெக்டராவது, அல்லது ஜாயிண்டு ரெஜிஸ்ட்ரார் வேலைக்கு ரித்தான டிப்டி கலெக்டராவது, ஜாயிண்டு ரெஜிஸ்ட்ரார் வேலையை ஒப்புக்கொள்ளுவதற்குமுன்பு ஒரு வருஷம் பழகவேண்டும்.

192. அஸிஸ்டெண்டு கலெக்டர்கள் ஸர்வே முதலியவைகளிற் பழகும் பொழுது தகுந்த போதனாசிரியர்களின் உதவியைக் கொண்டு சில ஐக்கிய முயற்சி மாதிரிச் சங்கங்களைப் பார்வை யிடும்படி செய்ய வேண்டும். கலெக்டர் தான் வெளிப் பிரயாணத்தில் ஐக்கிய முயற்சிச் சங்கங்களைப் பார்வை யிடும் பொழுது தன் உதவி யுத்தியோகஸ்தர்களையும் தன்னுடன் கூட்டுக் கொண்டு போகவேண்டும். ரெஜிஸ்ட்ரார், தான் சோதனைப் பிரயாணஞ் செய்யும் பொழுது, ஜில்லாவுத்தியோகஸ்தர்களை தன்னுடன் வரும்படியாக அழைக்கவேண்டும்.

193. ஜில்லா, தாலூக்கா, கான்பரென்ஸ்கள் கலெக்டர்கள் அல்லது கமிஷனர்கள் கீழ் நடைபெறுவது நல்லது. பெரிய கான்பரென்ஸுகள் அடிக்கடி நடைபெறுவதால் அவைகளின் பிரயோஜனம் குறைந்துபோய் இலகுவாய் கருதப்படும். இவ் விலாகாவுக்கு சம்பந்தமுள்ள விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும், மற்ற யிலாகா உத்தியோகஸ்தர்களும் எல்லா கான்பரென்ஸுகளுக்கும், வருவது நல்லது.

194. ஐக்கிய முயற்சிச்சங்கங்கள் ரெஜிஸ்ட்ரார், விவசாய இலாகா டைரெக்டர், தொழில் இலாகா டைரெக்டர், மச்சங்கள் இலாகா டைரெக்டர் (அவ்வுத்தியோகம் தொழிலபிவிருத்தியைப்பற்றி யிருந்தால்), ஆகிய இவர்கள் ஒரே மேலான அதிகாரத்தின் கீழிருக்கவேண்டும்.

195. அம்மேலதிகாரத்தை சமயம் நேர்ந்த காலத்து, முழுநாளுத்தியோகஞ்செய்யும், டெவலெப்மெண்டு கம்மிஷனர் என்று சொல்லும்படியான ஓர் உத்தியோகஸ்தரிடம் ஒப்புவிக்கவேண்டும்.

196. கவர்ன்மெண்டு விஷயமாயாவது அல்லது மதவிஷயமாயாவது, கம்மிட்டி அல்லது சங்கம் தீர்மானிக்கும் அபிப்பிராயம் ஆக்ஷேபிக்கும்படியா யிருந்தால், அத்தீர்மானத்தை ரத்துபண்ணும்படி ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். ரப்பீஸன் சங்கங்களி லேற்பட்டிருப்பதைப்போல், சங்கங்களின் நோக்கங்கள் இன்னவை யென ஓர் பிரத்தியேக விதியால் குறிக்கப்படவேண்டும்.

197. இந்தியா கவர்ன்மெண்டாருடன் ஐக்கிய முயற்சியில் மிகவும் பயிற்சியுற்ற ஓர் உத்தியோகஸ்தர் இருக்கவேண்டும்.

198. ஸெகூரிடியிற் போடும்படியான நிதிகள் பொறுப்பு நிதிகளல்லவானாலும், கோர்ட் ஆப் வார்ட்ஸ் தங்கள் வார்ட்ஸ் எஸ்டேட்களின் பொருட்டாவது அல்லது குடிகளுக்காவது யேற்படும்சங்கங்களில் தங்கள் நிதியை டிபாஸிட்டுசெய்து அவைகளுக்கு வுதவுதல் சிறந்தது.



199. ஐக்கிய முயற்சியின் விஷயமாய்ப் பார்க்குமிடத்து, கோர்ட்டு ஆப் வார்ட்ஸ், லோகல் ஸ்தாபனங்கள், இவைகளின் டிபாஸிட்டுகள் போடப்படுமானால் சந்தோஷமாய் அங்கீகரிக்கப்படும். அம்மாதிரி டிபாஸிட்டுகளுக்கு கவர்ன்மெண்டாரும் உத்திரவாதமா யிருக்குமிடங்களில், அவைகளுக்குச் சம்பந்தமான கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் ஐக்கிய முயற்சிச் சங்கங்களில் அவைகளை டிபாஸிட்டு செய்வது நியாயமே!

200. பாற்சாலைகள், கால்நடைகளை யபிவிருத்தி பண்ணும் சங்கங்கள், முதலிய நூதனமா யேற்படும் ஐக்கிய முயற்சிச் சங்கங்களுக்கு கனவான்களாவது அல்லது வேறு ஸ்தல ஸ்பானங்களாவது கொடையளிப்பது நல்லது. ஆனால் இவைகள் அக்கொடைகளின்மீது முற்றிலும் சார்ந்திருப்பின், அவ்விதம் உதவி செய்யத் தகுந்தவைகளல்ல.

201. விவசாய விஷயமான கடன்கள் சங்கங்களுக்குக் நேரில் கொடுக்கும்படி 1884வருஷத்திய 11-ஆக்டை திருத்தவேண்டும்: ஸென்ட்ரல் பாங்கிகள் மூலமாயும் சங்கங்களுக்கு அவ்விதக்கடன்களை கொடுக்கலாம்.

202. அநேக குடிகள் ஒன்று சேர்ந்து நில சீர்திருத்தம் செய்ய வேண்டிய பொழுது கவர்ன்மெண்டார் கொடுக்கும் நில சீர்திருத்தக் கடன்களை (Land Improvement Loan) மேற்கூறியபடி சங்கங்களுக்குக் கொடுத்துதவலாம். ஆனால் இவ்விதமாய்க் கிடைக்கும் தொகையை சங்கமானது குறைந்த வட்டிக்கு விடவேண்டியது.

203. பஞ்சகாலங்களில் சங்கமெம்பர்களுக்குப் பணமுதவுதல் நல்லது. ஆனால், க்ஷாமகாலங்களை முன்னிட்டே தகுந்தபடி நல்ல காலங்களில் யேற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

204. கவர்ன்மெண்டார் ஆரம்பத்தில் கொடுக்கும் அட்வான்ஸு தொகையை லோகல் கவர்ன்மெண்டாரும், ரெஜிஸ்ட்ராரும் உபயோகப்படுத்தும்படி உத்திரவு செய்யவேண்டும். அவ்விதம் கொடுபடும் அட்வான்ஸ் நாணயச் சங்கங்களுக்கு மாத்திரமில்லை; ஆனால் இன்ஷியூரென்ஸ் சங்கக்களுக்குக் கொடுத்தால், 11-வது பாராவிற் சுட்டிக் காட்டியபடி கொடுக்க வேண்டும்.

205. பணவுதவி செய்வதில் யாதொரு பொறுப்பும் யெடுத்துக் கொள்ளாமலிருக்கும் கவர்ன் மெண்டாரின் நிலமை, ஐக்கிய முயற்சியின் இயக்கமானது, வெளியுதவியை நாடாமல், சுயர்ச்சியாய்த் தன்னைக்கொண்டே காப்பாற்றிக் கொள்ளக்கூடியதாய் வுபிவிருத்தி செய்வதில் சிறந்ததாகும்.

206. இப்பொழுதிருக்கும் ஐக்கிய முயற்சி நாணய வகையில் உறுதியாயும், பாதுகாப்புடனிருப்பதற்கு வேண்டுமானபடி திரவியம் கிடைக்கக்கூடிய வழிகளிருப்பது சந்தேகம்.

207. சாதாரண லேவாதேவியும் ஐக்கிய முறை லேவாதேவியும், ஒரேவிதச் சட்டங்களை அஸ்திவாரமாயுடையன. மற்ற லேவாதேவியைப் போலல்லாமல் ஐக்கிய முறை லேவாதேவியில் சங்கங்களின் பிராமிசரி நோட்டுகளை டிஸ்க்கவுண்டு செய்து பணம் புரளச் செய்ய முடியாது. வியாபார பாங்கிகளும் இவ்விதம் டிஸ்க்கவுண்டு செய்யும் தொழிலை யேற்றுக் கொள்ளுமென் றெதிர்பார்க்கக் கூடாது. ராஜதானி பாங்கிகளும் கவர்ன்மெண்டின் காரண்டியில்லாமல் குறைந்த வட்டி வீதத்திற்குக் கடனெடுக்க முடியாது.

208. ஏராளமாய்ப் புரள வேண்டுமானால், பாண்டுகள் அடிக்கடி டிஸ்க் கவுண்டாக வேண்டும். ஆனால் இந்தியாவில் அதைச் செய்வதற்குத் தகுந்த ஸ்தாபன மொன்றுமில்லை.

209. வியாபார பாங்கிகளும், பிரசிடென்ஸி பாங்கிகளும் இதைச் செய்ய முடியாததானால், ஸ்டேட் கோவாப் ரேடிவ் பாங்கி யொன்று யேற்பட வேண்டிய தவசியம்.

---

# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி

## இத்தாலி தேசத்தில் ஓர் கால் நடை இன்ஷியூரென்ஸ் சங்கம்.

ஸர் ஜேம்ஸ் வில்ஸன் என்பவர் இத்தாலி தேசத்து கால்நடைகளின் இன்ஷியூரென்ஸ சங்கமொன்றின் நடவடிக்கைகளின் வரலாற்றைப்பற்றி ஓர் பத்திரிகைக்கு வியாசமெழுதியிருக்கிறார். அதின் சுருக்கம் பின்வருமாறு:—கால்நடைகளின் இன்ஷியூரென்ஸ் சங்கங்கள் இத்தாலியில் 812 இருக்கின்றன. இவைகள் ஒழுங்காய் வேலைசெய்து வருவதையறிய, உதாரணமாக ஓர் சங்கத்தை யெடுத்துக்கொள்வோம். 1907 ௵த்தில் பொன்டினோ என்னு மிடத்தில் இம்மாதிரிச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அவ்வூர் சிறுவிவசாயிகள் வசித்து வருமிடமாயும், மிகவும் செழிப்புள்ள விவசாயபூமிகளின் மத்தியிலு மிருக்கிறது. அவ்விடத்தில் விவசாய வேலைகளை விசேஷமாய் எருதுகள் செய்யவேண்டி யிருத்தலாலும், ஒரு பசு அல்லது எருது இறந்துபோதலினாலேற்படும் நஷ்டங்கள் அதிகமாயிருத்தலாலும், நுட்பபுத்தியுள்ள நிலசொந்தக்காரர்கள் ஒன்றுசேர்ந்து அவ்விடத்தில் ஓர் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். சங்கமேற்பட்டு 4 வருஷத்திற்குள் மிகவும் பிரபலமாகிக்கொண்டு வருகிறது; மெம்பர்கள் எல்லோரும் விவசாயிகள்; அவர்களின் சங்கியை 336. அவ்வூரெல்லைக்குள்ளிருக்கும் கால்நடைகளின் சொந்தக்காரர்கள் அதில் மெம்பராகலாம்.



அதின் பிரவேசக்கட்டணம் ரூ. 3 ஒவ்வொரு மெம்பரும் கொடுக்கவேண்டும். நிர்வாக கம்மிட்டியார் பிரசிடெண்டு, வைஸ்பிரசிடெண்டு, இவர்களைச்சேர்த்து, 7 பெயர் யேற்பட்டிருக்கிறார்கள். விதிகள் சரிவா அனுஷ்டிக்கப்பட்டுவருவதையும், கணக்குப் புஸ்தகங்கள் ஒழுங்காய் எழுதப்பட்டுவருவதையும, கவனிக்க மூன்று மெம்பர்களடங்கிய ஓர் கவுன்ஸில் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஓர் காரியதரிசியும், இன்ஷியூர் செய்யப்பட்ட கால் நடைகளை அடிக்கடிப் பார்வையிடுவதற்கு மூன்று இன்ஸ்பெக்டர்களும் அதிலிருக்கிறார்கள். எல்லா உத்தியோகஸ்தர்களும் இப்பொழுது கௌரவத்திற் குழைத்துவருகிறார்கள்.

சங்கமானது நான்குமாத வயதுக்குக்குறையாத கொம்புகளுடைய கால்நடைகளைத்தான் இன்ஷியூரென்ஸுக்கு ஒப்புக் கொள்ளும். இன்ஷியூர்செய்த பிராணி இறக்குங்காலத்து, இன்ஷியூரெ செய்யப்பட்ட தொகையில், 5-ல் 4 பங்கு, சங்கமானது கொடுக்கிறது. பின்பு அக்கால் நடை சங்கத்தின்பொருளாகும். உற்பத்தி செய்யும், அல்லது பால் கொடுக்கும் அல்லது வேலைசெய்யும் பிராணியாயிருந்தால் அவைகளுக்கு இன்ஷியூரென்ஸ்செய்யப்பட்டரூ.300வரையில் 100க்கு 2 1/10 வீதமும், ரூ300லிருந்து ரூ450வரையில் 100-க்கு 3 வீதமும், கன்றுகளுக்கும் வேறுபிராணிகளுக்கும் $1\frac{3}{4}$ வீதத்திலிருந்து 2 வீதம் வரையிலும், இன்ஷியூரென்ஸ் ரேட்டு யேற்பட்டிருக்கிறது. வியாதியுள்ள கால் நடைகளுக்கு இன்ஷியூரென்ஸ் மறுக்கப்படும்.

1913௵த்தில் சுமார் ரூ $1\frac{1}{2}$ லக்ஷத்திற்கு 587 பிராணிகள் இன்ஷியூர் செய்யப்பட்டு, 286 பாலிஸிகள் கொடுக்கப்பட்டன. முதல் மூன்று வருஷங்களில், இன்ஷியூர் பண்ணப்பட்ட பிராணிகளின் சங்கியை 426; அவைகளில் 18 பிராணிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. முதல் மூன்றுவருஷங்களில் இன்ஷியூரென்ஸ் கட்டணம் ரூ 8000 சங்கமடைந்திருக்கிறது. அழிவடைந்த பிராணிகளை விற்பதினால் ரூ 3000 கிடைத்தது. சங்கமானது இன்ஷியூர் செய்தவர்களுக்கு ரூ 3,400 நஷ்ட ஈடு கொடுத்தது. அதிகவிலையுள்ள கால்நடைகளுக்கு அதிக இன்ஷியூர் வீதமும், குறைவாயுள்ளவைகளுக்குக்குறைந்த வீதமும் இச்சங்க மேற்படுத்தியிருக்கிறது. உயர்ந்த வகையில்அதிகமாய் உறந்துபோனால் இவ்விதம் விதிப்பது நியாயமாகும். ஆனால் இந்தியாவில் குறைந்த விலையுள்ள கால்நடைகள் அதிகமாய் கவனிக்கப்படாததினால், இறப்பது அதிகமாயிருக்கிறது. அச்சங்க அனுபோகத்தை கவனித்தால் இன்ஷியூர் வீதத்தைக் கொஞ்சம் உயர்த்தி, வேலை செய்யும் கால்நடைகளின் வீதத்தை நியாயப்படி சீர்திருத்தஞ்செய்ய வேண்டியது அவசியம். குடிகள் அச்சங்கத்தால் மிகுந்த நன்மையடைந்து வருகின்றன.

## டிபார்ட்டுமெண்டு ஸர்க்குலர்கள்.

### திருச்சினாப்பள்ளி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரின் ஸர்க்குலர்

1915ஆ No. D. Dis. 867.

நகர்ப்பிராந்தங்களிருக்கும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்கள், ஸ்தல திரவியத்தைக குறைந்த வட்டி வீதத்திற்கு தங்களிடத்தில் டிபாஸிட்டு செய்யக் கவரும்படி சக்தியுடையனவா யிருக்கவேண்டுமென்பது அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராருடைய அபிப்பிராயம். ஆரம்பிக்கப்பட்ட இரண்டுவருஷ காலத்திற்குள் தங்கள் சுய வுதவியைச் சார்ந்துகொண்டு ஸ்தலக்கடன்களையும், டிபாஸிட்டுகளையும் சேகரித்து வேலை செய்யமுடியாத பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களுக்கு ஸெண்ட்ரல் பாங்கிகள் பணவுதவுதல் பிரயோஜனமில்லை. ஸ்தாபிக்கப்பட்டு இரண்டுவருஷ காலமாயினும் மெம்பர்களாற் செலுத்தப்பட்ட பங்குத்தொகையளவுதான் ஸெண்ட்ரல் பாங்கிகள் தங்களுக்குக் கடன் கொடுக்குமென்று, பொறுப்பு வரையறுத்த சங்கங்க ளறியவேண்டும்.

2. மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கங்களுக்கு அவைகளிற் செலுத்தப்பட்ட பங்குத்தொகை யளவுதான் கடன் கொடுத்துவருகிறது.

---

### ரெஜிஸ்ட்ராரவர்களின் ஸர்க்குலர்

1915ஆ R. C. No. 472.

இந்த இராஜதானியிலுள்ள ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் காரியதரிசிக்கு இதனால் அறிவிப்பது யாதெனில், தாங்கள் தங்கள் சங்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றிய ஓர் வியாசத்தையாவது அல்லது குறிப்பையாவது பொது ஜனங்களடங்கிய சபையில் வாசிக்கும் முன்பு தங்கள் சங்கத்தின் நிர்வாககம்மிட்டியாரின் சம்மதத்தைக் பெற்றுக்கொள்ளவேண்டும். அந்நிர்வாக கம்மிட்டியார் அதற்கு உத்திரவாதமாயிருக்க வேண்டும். இந்த நிபந்தனைப்படி வாசிக்கப்படாத வியாசமாவது அல்லது குறிப்பாவது, கான்பரென்ஸ் கூட்டுபவர்களாலும், பத்திராதிபதிபர்களாலும் ரிபோர்ட்டென்று மதிக்கப்பபமாட்டாது.

---

### வேலூர் ஸெக்ஷன் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் ஸர்க்குலர்

1915ஆ. GL. C. No. 1912

மதராஸ் சென்ட்ரல் பாங்கியிலிருந்து அல்லது கோயமுத்தூர், சேலம்ஜில்லா பாங்கிகளிலிருந்து நாணயச்சங்கங்கள் வாங்கும் நீடித்த



காலகடன்களை திருப்பி கொடுப்பதற்கு 2-வது வருஷகடசியில் முதல் வாயிதா 10ல் ஒரு பங்கு வருவதாக இப்போது கணக்கிடப்பட்டு நடந்து வருகிறது. இந்த ஏற்பாடு மாற்றிவிடப்பட்டது. ஒவ்வொரு கடன் துகையிலும் 10-ல் ஒரு பாகம் துகையை முதல் வருஷத்திலேயே நாணயச் சங்கங்கள் ஜில்லா பாங்குகளுக்கு செலுத்தவேண்டும். ஒவ்வொரு வருஷமும் பாங்கு வாயிதா பத்திரப்படி யேற்பட்டது முதல் 3 மாதத்திற்குள் பாக்கியில்லாமல் செலுத்திவிடவேண்டும்.

2. குறுகிய காலகடன்களை ஒரு வருஷம் வரையில் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை யென்று தப்பாய் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். குறுகிய காலக்கடன்கள் கொடுப்பதெல்லாம் விதை, பயிர்செலவு, சாப்பாட்டிற்கு, கிஸ்து முதலியவைகளுக்கும் விவசாயம் நடந்தேறவேண்டிய விஷயங்களுக்குதான். இதற்கு பேர்கைக் கடன். இந்தகடன் விவசாய ஆரம்பம் முதல் வேண்டியபோது விவசாயம் முடியும்வரை வாங்கிக்கொள்ளத்தக்கது. விவசாயம் முடிந்த பிறகு இந்த கடன் கிஸ்து தவிர மற்றவைகளுக்குக் கொடுக்ககூடாது. ஜூலை மாதம் முதல் செப்டம்பர் வரைக்கும்தான் விவசாயத்திற்காக சாங்கிஷன் செய்யப்படும். இத் விஷயமாய் மனுக்கள் அனுப்பும்போது ஒவ்வொரு மெம்பரும் வாங்கியிருக்கும் நீடித்த கடனையும் இப்போது வேண்டிய குறுகிய காலக்கடனையும் தாக்கல் செய்து ஸ்டேட்மெண்டு தயார் செய்து பஞ்சாயித்து தீர்மானம் செய்யவேணும். இந்த குறுகிய காலகடன் முழுவதையும் ஏப்ரல் மாதம் 30தேதி அல்லது மேமாதம் 31 தேதிக்குள்ளாக திருப்பிக் கொடுக்கும்படி ஷரா கண்டு கடன் கொடுக்கவேணும். சங்கங்கள் ஷை கடனை ஜூன் மாதம் 30 தேதிக்குள்ளாக வட்டி சகிதம் பூராவும் ஜில்லா பாங்கிக்கு அனுப்பிவிடவேணும். அப்படி அனுப்பதவறினால் மறு வருஷம் குறுகிய கால கடன் சாங்கிஷன் செய்யப்படமாட்டாது. இரண்டு போகம் விளையும் நஞ்சையுள்ள கிராமங்களில் செப்டம்பர் மாதத்தில் கடன் வாங்கி மறுபடி செப்டம்பர் மாதத்தில் கடன் திருப்பிகொடுத்துவிடலாம். கிஸ்துக்கு வாங்கும் கடன்களெல்லாம் 5-வது கிஸ்தாக செலுத்தவேண்டும். வந்த மாசூலை குறைந்த விலைக்கு போடாதிருக்கிறதற்காகத்தான் கிஸ்துக்கு கடன் கொடுக்க வேண்டியது.

3. மெம்பர்கள் கடன் திருப்பிக் கொடுக்கும் வாயிதா 10வருஷமாக வாங்கியிருக்கும் சங்கங்கள் பாக்கி வசூலாவதை முழுவதும் ஜில்லாபாங்கிக்கு வட்டிக்காகவும் அசலுக்காகவும் அனுப்பிக் கொண்டு வரவேண்டியது. வசூல் தொகையிலிருந்து கடன்கள் மெம்பருக்கு

கொடுக்கக்கூடாது. மெம்பர்களுக்கு அதிககடன் வேணுமானாலும் புதுமெம்பர்களுக்கு கடன் வேணுமானாலும் ஆஸ்தி . பொறுப்பு ஜாபிதா பூர்த்திசெய்து எந்த மெம்பர்களுக்கு கடன் கொடுக்கப் போகிறீர்களோ அதற்கு பஞ்சாயித்தார் தீர்மானம் செய்தனுப்ப வேணும். அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் சாங்கிஷன் வந்தவுடனே அல்லது ஜில்லா பாங்கிக்காரர் பாண்டு பாரம் அனுப்பினவுடனே மெம்பர்கள் யெழுதிக் கொடுக்கவேண்டிய பத்திரங்களை தயார் செய்வித்து ஜில்லா பாங்கியிலிருந்து தொகை வந்த 3 தினத்திற்குள் பட்டுவாடா செய்யவேணும். எந்த சங்கமும் கடன் வேண்டியிருந்தால் ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டு பூர்த்தி செய்து யாருக்கு கடன் எவ்வளவு தொகை கொடுக்கப்போகிறதோ அதை குறையாமல் அனுப்பினால் கடன் சாங்கிஷன் செய்யப்படமாட்டாது. இது விஷயங்களை யூனியனும் சூபர்வைசர்களும், இன்ஸ்பெக்டர்களும் கவனிக்க வேண்டும்.

161417
REGISTRAR
MADRAS

மதராஸ் புல்லெடின் ஆப் கோவாப்ரேஷன்

என்னும்

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் VII] 1915ஆ டிசம்பர்மீ [இலக்கம் 2.

# ஐக்கிய முயற்சி கட்டிடச் சங்கங்கள் அவைகளின் நோக்கங்களும், வழிகளும், உபயோகங்களும்.

கோயமுத்தூர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஸ்ணஸாமி அய்யரவர்கள் எழுதியது.

யூனியன் டவுன்களிலும், முனிஸிபல் டவுன்களிலும், நகரங்களிலும், விசேஷமாய் ஜனங்களுக்கு கட்டிடச் சங்கங்கள் மிகவும் அவசியமா யிருக்கின்றன. இவ்விடங்கள் அர்பன் ஸ்தலங்களென வழங்கப்படும். மனிதர்களுக்கு, உணவு, உடை, வீடு, ஆகியமூன்றும் இன்றியமையாத பொருளாகும். இம்மூன்றில் குடியிருப்புக்கு மாத்திரம் செலவுசெய்ய வேண்டுவததிகமா யிருத்தலால், பாக்கி இரண்டு தேவைகளும் சரியாய் கவனிக்கப்படாமற் போகின்றன. வீட்டு சொந்தக்காரர்கள் தாங்கள் வீட்டு விஷயத்தில் செலவழிக்கப்பட்ட பணத்திற்குத் தகுந்த வட்டி வருகிறதா யென்பதை யோஜித்து வாடகையை உயர்த்திக்கொண்டு வருகிறார்களே யொழிய, குடியிருப்பவரின் முக்கிய சௌகரியமாகிய, சுகாதாரம், நெருக்கமின்மை, முதலியவைகளை கவனிக்கிறதில்லை.

டவுன்களிலும், நகரங்களிலும் கட்டிடங்கள் கட்டத்தகுந்த பூமிகள் கிடைப்பதில் சிரமமிருக்கின்றது. சிலவேளைகளில் கவர்ன்மெண்டாராவது அல்லது லோகல் போர்டார்களாவது அல்லது முனிஸிபாலிட்டியாராவது டவுன்களை விசாலப்படுத்த பூமிகளை வாங்குகிறார்கள். ஆனால் எவ்வழிகளில் வேலை செய்கிறார்களென இன்னும் தெரியவில்லை. பூமிகள் மிகவும் குறைந்த கிரயத்துக்காவது அல்லது கிரயமல்லாமலாவது கிடைத்தபோதிலும் அர்பன் ஸ்தலங்களில் வசிக்கும ஏழைகள் தங்கள் வருமையின் கொடுமையா[illegible] வாங்

XMm 211, N09
N09:6—7.

கிக்கட்ட சக்தியற்றவரா யிருக்கின்றார்கள். இம்மாதிரி திரவிய கஷ்டத்தை நிவர்த்தி செய்வதை யுத்தேசித்தே கட்டிடசங்கங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனியாராலும் கட்டிடம் கட்டுவதில் பணவுதவிபெறலாம். ஆனால் அவ்வித ஸகாயம் விடுகட்டும் ஏழைகளுக்கு யாதொரு நன்மையையும் விளைவிக்காது. அக்கம்பெனியார்கள் தங்கள் சொந்த வட்டிப் பெருக்கை பார்ப்பார்களே யொழிய இவர்களின் சௌகரியத்தை கவனிக்க மாட்டார்கள்.

ஆகையால் இவ்வித யேழைகளுக்கு அனுகூலம் செய்யும்படியானது கூட்டுமுயற்சி கட்டிடச் சங்கங்களே! அதாவது, கட்டிடம் கட்டுகிறவர்களும் அல்லது கட்டப் போகிறவர்களும் ஓர் சங்கமாகச் சேர்ந்து கொண்டு, மொத்தமாய் சுலபமான வட்டிக்கு வெளியிற் கடனெடுத்து மெம்பர்கள் தங்கள் தங்களின் அவசியத்திற்கு தகுந்தபடி வாங்கின கடன்களைப் பிரித்துக் கொண்டு, இதினாற் கிடைக்கும் லாபத்தையும் மெம்பர்களுக்குள்ளேயே பகர்ந்துகொண்டு வேலை செய்வதாம். வாங்கும் கடனுக்கு மெம்பர்கள் ஜாவாப்தாரியாகிறார்கள். சரியான வட்டி வீதத்திற்கு தங்களுக்குள் கடன் பிரிக்கப்படும் அதிகாரம் தங்களிடத்திலேயே யிருக்கிறது. கட்டிடச் சங்கங்கள் இன்னும் அதிகமாய் யேற்பட்டிராததினால், திரவிய ஸகாயம் செய்பவர்களுடன் கலந்து வேலை செய்ய முகாந்திரங்களுண்டாகவில்லை. இப்பொழுதிருக்கும் நிலைமையில் இவைகளுக்கு எளிதான வட்டியில் கடன் கிடைப்பது அரிது. ஏழைகள் விசேஷமாய் 100-க்கு 6 அல்லது $6\frac{3}{4}$ விதத்திற்கு மேல் வட்டி கொடுக்க முடியாது; அம்மாதிரி காலங்களிற்தான் கட்டிடச் சங்கங்கள் மெம்பர்களுக்குதவிசெய்ய முடியவில்லை. இதையறிந்துதான் கவர்ன்மெண்டாரும் மிகவும் கருணையுடன் குறைந்த வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பதா யொப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் சங்கங்கள் 4 அல்லது $4\frac{1}{2}$ விதத்திற்குப் பணமெடுத்து, $6\frac{1}{4}$ அல்லது $6\frac{3}{4}$வீதத்திற்கு மெம்பர்களுக்குக் கொடுக்க யுத்தேசிக்கலாம். இதினாற் கிடைக்கும் லாபத்தைப பின்பு மெம்பர்களே அந்தந்த காலங்களிலடைவார்கள்.

புதிதாய் விடு கட்டுபவர்களுக்கு மாத்திரமல்ல,விடு வாங்குகிறவர்களுக்கும் அல்லது இடித்துக் கட்டுபவர்களுக்கும், அல்லது பழுதுபார்ப்பவர்களுக்கும் கடன் கொடுக்கலாம். மூன்னீடு யேதாவதிருந்தால் அதைத் தீர்ப்பதற்கும் கடன் கொடுக்கலாம்; ஏனென்றால் மெம்பர்கள் தங்கள் விட்டை சொந்தமாகச் செய்து கொள்வதில், சங்கமானது உதவுகின்றது.



கட்டிடச் சங்கங்களிலிருந்து கடன் வாங்கும் மெம்பர்கள் காலக்கிரமப்படி கொஞ்சமும் கஷ்டமில்லாமல் அதைத் திருப்பிக் கொடுத்து விடுகளையும் காலக் கிரமத்தில் தங்களதாக்கிக் கொள்ளவேண்டும்.

அசலும் வட்டியும் 20 அல்லது 30 கெடுக்களில் கொடுபடவேண்டும்; அதாவது, வீட்டுவாடகைகொடுத்து வருவதைப்போல் செலுத்தி வந்தால் தவணைகள் யெளிதிற் சென்றுவிடும். ஒவ்வொரு கெடுக்களில் பணம் செலுத்துந்தோறும் தனது விட்டினுரிமை நெருங்குகிறதென ஓர் திருப்தியுண்டாகின்றது; ஆகையால் பணம் செலுத்துவதை துரிதப்படுத்துகிறது,

இவ்விதம் கடன்கொடுத் துதவிசெய்வதுதான் கட்டிடச் சங்கங்களின் முதற்காரியமாகும். சங்கமானது பின்பு அபிவிருத்தியடைந்து மாதம் சுமார் ரூ 500 வரும்படி யடைய வாரம்பித்தால் மெம்பர்களுக்கு வேறுவழிகளில் அது ஸகாயம் செய்ய நினைக்கலாம். அதாவது:—விடுகட்டும் விவகார விஷயங்களில், வக்கீல்கள், சர்வேயர்கள், டிராவ்ட்ஸ்மென்கள், முதலியவர்களின் உதவியை மெம்பர்கள் பெறச்செயலாம்.

சங்கமானது ஓங்கிவளர்ந்த பிறகு தன் மெம்பர்களுக்குக் கட்டிட ஸாமான்களை இலகுவான கிரயத்துக்கு வாங்கிக் கொடுக்கலாம். இப்பொழுது ஜனங்கள் ஸமான்களின் கிரயமும் கூலியாட்களின் சம்பளமும் அதிகமாய்விட்டதென முறையிடுகிறார்கள். ஒன்றுசேர்ந்து கொண்டு, மரஸாமான்களை மலையாளத்திலிருந்து மொத்தமாய் வரவழைத்தால், சரசமான விலை விழும். இம்மாதிரியே செங்கல், முதலியவைகளையும் வாங்கிக்கொள்ளலாம். எப்படியிருந்தபோதிலும், சங்கத்தின் துவாராய் வேலைசெய்தால், மெம்பர்கள் 100-க்கு 15-லிருந்து 25 வீதம் வரையில் சராசரி லாபமடைவதிற் சந்தேகமில்லை.

சங்கமானது தானாகவே வெளியிற் கடன்வாங்கும் சக்தியும், வீடு கட்டும் விஷயமாய் ஆலோசனை சொல்லக்கூடும் கைதேர்ந்தவர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய சக்தியும் பெற்றுவிட்டால், தன் பெயரிலேயே கட்டிடங்கள் வாங்கலாம். இக்காரியமாய் தன் மெம்பர்களின் நிமித்தமாவது அல்லது முனிஸிபாலிட்டியாருக்காவது உபயோகமற்ற வசதிகளைத் திருத்தவும் குடியிருப்புவசதிகளை விசாலப்படுத்தவும் யேற்படலாம்: இம்மாதிரி கட்டிக்கொண்டே வந்தால், சராசரி 60 வருஷங்களுக்கு ஒருதரம் பழுதுபார்த்துப் பிரித்துக் கட்டினாற் போதும். வளரும் பட்டணங்களில், கட்டிடச்சங்கங்களின் உதவியானது, எப்பொழுதும் தேவையாயிருக்கும். தற்காலத்தில் பணம்

இலகுவாய்க் கிடைக்காததினால், கவர்ன்மெண்டாரின் உதவியை நாடவேண்டியிருக்கிறது; ஆனால் இத்தொழிலில் பணம் போடுவதில் தங்கள் பணத்திற் கழிவில்லையென்று ஜனங்கள் நன்றாயறிந்துவிட்டால், வெளியிலிருந்து பணவுதவி யேராளமாய் வந்து விழும். சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு முக்கியமாயறியவேண்டிய அம்சங்களாவன:—

(*a*) சங்கமேற்படும் பட்டணமானது ஓங்கிவளரும்படியானதா, அதாவது, தொழில் முதலானவைகளை யுத்தேசித்து, நாளடைவில் ஜனங்கள் நிரம்ப குடியேறுவார்களா? (*b*) சொந்தவீடுகளில்லாமல் பிறர்மனைகளில் வசித்துக்கொண்டு கஷ்டப்படுகிறவர்கள் சொந்த வீடுகள் கட்டிக்கொள்ள ஆவலுடைத்தாயிருக்கிறார்களா? என்ற விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். உதாரணமாக, கோயமுத்தூர் ஜில்லாவில், கோயமுத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய டவுன்கள் வளரும்படியான வைகள்; மதுரை திருச்சினாப்பள்ளி, முதலிய பட்டணங்கள் அபிவிருத்தியடையும் ஸ்தலங்களாயிருப்பதால் நல்ல க்கட்டிடச்சங்கங்களை ஸ்தாபித்துக்கொள்ளலாம்.

சமீபத்தில் வீடு கட்டக்கூடிய 10 அல்லது 20 நபர்களடங்கிய சுமார் 50 மெம்பர்கள் சேர்ந்து ஓர் சங்கத்தை ஆரம்பிக்கலாம். வேண்டிய குறிப்பு பைலாக்களை யெழுதி ரெஜிஸ்ட்டர் செய்து கொள்ளலாம். பங்கு மூலதனமானது ஏராளமாயும் தனிகர்களைக்கவரத்தகுந்ததாயுமிருக்கவேண்டும். ஒவ்வொரு பங்கின் விலையானது சாமானியப்பட்டவர்களும், யேழைகளும் இதிற் சேர்ந்து நன்மையடையும்படி குறைவாயும், அதை அநேக தவணைகளில் கொடுக்கும்படியாயுமிருக்கவேண்டும்.

வீடு கட்டுகிறவர்களுக்குக்கடன் கொடுப்பதற்கு முன்பு அநேக காரியங்கள் நடைபெறவேண்டியிருக்கின்றன. வீட்டுரிமை தஸ்தாவேஜுகளை சங்க வக்கீல்கள் சோதித்தலும், பின்பு சங்க நிர்வாக கம்மிட்டி மெம்பரில் ஒருவராவது அல்லது அதிகமாவது வீடு கட்டப்படும் ஸ்தலம் தகுந்ததாயென்பதையும் அவ்விடத்தில் கட்டிடமுயர்த்தப்பட்டால் கொடுக்கும் கடனுக்கு அது தகுந்த ஜாமீனாயிருக்குமா யென்பதையும் நன்கறிதலும், முதலிற் செய்யவேண்டிய விஷயங்கள். இச்சங்கங்களின் நன்மையை யுத்தேசித்தால், இவ்வித ஐக்கிய முறையில் ஜனங்களடையும் சௌகரியங்கள் பலவுள.



# ஐக்கிய முயற்ச்சி நாணயச் சங்கமொன்றை ஸ்தாபிப்பது எப்படி.

ம-ா-ா-ஸ்ரீ V. வெங்கடசுப்பய்யா அவர்களெழுதியது.

ஐக்கிய முறையைப்பற்றிய புஸ்தகங்களிற் பயின்றும், அதி
நோக்கங்களை நன்கு அறிந்துள்ளவருமான சங்கஸ்தாபனர் ஒருவ
நாணயச் சங்கத்தை யேற்படுத்தும்வழிகளை எனக்குத் தெரிந்தவ
யிற் கூறுகிறேன்.

அவர் முதல் முதலில் மனமிரக்கம், பொருமை, சாமர்த்தியப்
இவைகளையுடைத்தாயிருக்கவேண்டும்: சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்
டிய ஸ்தலத்தை அநேக தடவைகளிற் பார்வையிட்டு அது தகுந்
இடந்தானா யென்பதை ஊகித்தறியவேண்டும். அவ்விடங்களிலுள்ள
ஜனங்கள் தீங்கள் அறியாத்தன்மையால் அடிக்கடிபார்வையிடும் சு
நலம்பாராத இவரை முனிஸீபாலிட்டியார் புதிதாய் வரிபோடுகி
தற்கு அவ்விடத்திற்கு அனுப்பினார்களோ, அல்லது பணலேவாதே
செய்யும் சாவகாரின் ஏஜெண்டோ, அல்லது தங்கள் மதத்தைக் கெடு
கவந்த பாதிரிமாரோ, யென்று சந்தேகிக்கக்கூடும்.

இதற்கெல்லாம் பொருமையாயிருந்து அவர்களின் மதிப்பை
பெறவேண்டும். பிறகு, ஸ்தலம் நன்றாயிருந்தால் ஸ்தாபித்த பிற
அதற்கு சமீபத்தில் ஜாகைவைத்துக்கொண்டு அடிக்கடிப்பார்வையிடு
படியாயிருக்கவேண்டும். 50-லிருந்து 400 அல்லது 500 வீடுகளட
கிய ஓர் குறிய விஸ்தீரணத்தை யுடைத்தாயிருத்தல் நல்லது அ
பொழுதுதான் ஜனங்கள் பரஸ்பரயோக்கிதைகளைத் தெரிந்தவர்கள
யும், இவரும் அவர்களின் குணாதிசயங்களை அறிவதற்கு எளிதா
மிருக்கும். வெகு நாள் வேலை யில்லாமலிருப்பவர்களை சங்கத்தின் மெ
பர்களாகச் சேர்க்கக்கூடாது. அவர்களுக்கு ஸ்திரமான ஓர் தொ
லிருக்கவேண்டும். தொழில் யாதொன்று மில்லாதிருப்பர்வர்களுக்
நாணயமொன்றுமில்லை யாதலால், அவர்களைச் சேர்ப்பதில் சங்க
திற்கு அபாயந்தான். எல்லா மெம்பர்களும்; ஓரே தொழிலாளிகள
யிருந்தால் மிகவும் நல்லது. ஜனங்கள் ஒருவருக்கொருவர் நன்றாய
வார்கள்; பஞ்சாயத்து மெம்பர்களின் ஆதினத்திற்குள்படுவார்கள்
அவ்விடங்களில் கக்ஷிகளும், சண்டை சச்சிரவுகளுமிருந்தால், ஒரு கக்ஷி
யாராலேற்படுத்தப்பட்ட சங்கத்தை மற்றொரு கக்ஷியார் முறிக்கப்பி
யத்தனம் செய்வாராதலால், சங்கங்களை ஸ்தாபிக்கக்கூடாது.

அம்மாதிரி கலகமுள்ள கிராமங்களில் டிபார்ட்டுமெண்டுத்தியோகஸ்தர்கள் சங்கஸ்தபானம் செய்கிறதில்லை. அடிக்கடி வியாஜ்யம் செய்துகொள்ளும் கிராமத்தார்கள் நடுவிலும் அவர்கள் சங்கமேற படுத்துகிறதில்லை. ஆனால் நகரங்களில் வசிக்கும் கீழ் ஜாதிக்காரர்களுள் அவ்வளவு வியாஜ்யமிராது. மார்வாரி அல்லது பணம் லேவாதேவி செய்யும் தொழிலாளிகள் எவ்விடங்களில் தங்கள் கடைகளை வைத்திருக்கிறார்களோ, அவ்விடங்களில் ஐக்கிய முயற்சிச் சங்கங்களையேற்படுத்துவது மிகவும் நல்லது.

மேற்கூறிய விஷயங்களையெல்லாம் 3 அல்லது 4 தரம் பார்வையிடுவதில் அறிந்து கொள்ளலாம். அனுகூலமாயிருந்தால் பிறகு அவர்களின் சொத்துவிபரங்களை தந்திரமாய் அறியவேண்டும். ஜனங்கள் விசேஷமாய் ஏழையாயும் படிப்பில்லாமலுமிருக்கிறதினால் செலவு செய்வதை யதிகமாயும் கிடைக்கும் வரும்படியைக் குறைத்தும் மதிப்பார்கள். படித்த ஜனங்களே பெரும்பாலும் தங்கள் வரவுசெலவுக் கணக்குகளை ஒழுங்காய் வைத்துக்கொள்ள அப்பியாசப்படுத்தாமலிருக்க, மிகவும் தாழ்ந்த வகுப்பினர்களான இவ்வேழைகளிடமிருந்து கணக்குகளின் ஒழுங்கை யெதிர்பார்க்கக்கூடாது. இவர்களுள் சிலர் கடனாளிகளாகயிருந்தால், ஒற்றுமையுடன் சங்கமேற்படுவதற்கு ஓர் சௌகரியமுண்டு; ஆனாலும் எல்லாரும் கடனாளியாயிருக்கக்கூடாது. சாவகாரிடம் கடன் வாங்கின ஒருவன் இம்மாதிரிச் சங்கமொன்றிற் சேர்ந்து அதில் குறைந்த வட்டிக்குக் கடனெடுத்து சாவகார் கடனையொழித்து விடுவான். இவன் தன்வீட்டுக்கு அவசியம் செலவுசெய்ய வேண்டியதைத்தவிர பாக்கியிருக்கும் வரும்படியை கொஞ்சமும் தனக்கு சிரமில்லாமல் வட்டிக்கும் அசலுக்கும் மாதந்தோறும் அல்லது மூன்று மாதத்திற்கொருமுறையாக 5 வருஷத்திற்குள் செல்லுவைப்பான். விவசாயிகளாயிருந்தால் 10 வருஷம் வரையில் கெடுக்களை தள்ளி போடுவார்கள். டிபாஸிட்டுகள் வந்து விழுவதற்கும், சங்கமானது வெளியிலிருந்து கடன்களை யெளிதாய்ப் பெறுதற்கும் பிணையம்கொடுப்பதற்கு சொத்துள்ளமெம்பர்கள் சிலரிருக்க வேண்டும். மெம்பர்கள் விசேஷமாய் முனிஸிபாலிட்டியிலாவது அல்லது யந்திரசாலையிலாவது உத்தியோகத்திலிருந்தால், அவைகளினுதவியையும் இவ்விஷயமாய் கிரகிப்பது நல்லது.

கிராமச் சங்கங்களை பொறுப்பு வரையறுக்கா முறையில் ஸ்தாபிக்கவேண்டும். ஓரே ஜாதியையாவது அல்லது தொழிலையாவது சேர்ந்திருந்து, ஒருவருக்கொருவர் வெகு நாள் தெரிந்து அல்லது பந்துக்



களாயிருந்தால், அவ்விடங்களில் பொறுப்பு வரையறுக்கபடாத சங்கங்கள் தானேற்படவேண்டும்.

சங்கஸ்தாபனத்திற்கு சௌகரியமான யிடங்களில், ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் நோக்கங்களையும், நற்பயன்களையும், மற்ற தேசங்களில் இம்முறையினால் எவ்விதம் க்ஷேமமடைந்ததென்பதையும், அங்கு வசித்து வரும் பிரபலமான ஜனங்களுக்கு வற்புறுத்த வேண்டும். கூட்டம் கூடும் ஜனங்களுக்கு திருப்பித் திருப்பி அவைகளைச் சொல்லுதல் நல்லது. பிறகு, தங்களுக்கு சங்க உண்டாக் வேண்டுமா என்பதை ஆலோஜித்து சொல்லும்படி அவர்களைக் கேட்கவேண்டும். அப்படி வேண்டுமென்றால், பைலாக்களை ஒப்புக்கொள்வதற்கும், ரெஜிஸ்ட்ராரால் குறிக்கப்பட்ட ஸ்டேட்மெண்டுகளை கையொப்பத்துடன் பூர்த்திசெய்வதற்கும். மீட்டிங்க் ஒன்றைக்கூட்டிச் சொல்லி அவ்விஷயத்தை எல்லாருக்கும் முன்னதாகவே தெரியப்படுத்தவேண்டும். ஸதல ஜனங்களுக்குத் தகுந்தபடி பைலாக்களைத் திருத்துவதசியம். ரெஜிஸ்ட்ராரால் சங்கஸ்தாபனம் செய்ய அதிகாரம் பெற்ற டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர் ஒருவரை மீட்டிங்குக்கு அழைத்தால் அவருடைய ரிபோர்ட்டின்பேரில் சீக்கிரம் அச்சங்கம் ரெஜிஸ்ட்டராகிவிடும். மெம்பர்களின் பெயர்கள் ரெஜிஸ்ட்டரில் எழுதப்படும். அப்பொழுது முதல் சங்கம் வேலை செய்ய ஆரம்பிப்பதாகும்.

அவருடைய வேலையானது இத்துடன் நிற்காது; அச்சங்கத்தை அடிக்கடி பார்வையிட்டுக்கொண்டும், அதின் அபிவிருத்தியில் அதிக ஆவல் கொண்டுமிருக்கவெண்டும். முடியுமானால் சங்கமெம்பர் ஒவ்வொருவருடனும் இவர் பழக்கஞ் செய்து கொண்டால் மிக்க நன்மையைவிளக்கும். அவர்கள் எல்லாரும் பிராவிடெண்டு டிபாஸிட்டுகளைச் செய்யச்சொல்லுதல் தகுந்ததாகும். அதற்கு 6 வீத வட்டி அல்லது ரூ. 1க்கு மாத ஒன்றுக்கு பைசா ஒன்றுவீதம் கொடுக்கவேண்டும். 4 அணாவிலிருந்து 8 அணா வரையில் ஏழை மெம்பர் கூட டிபாஸிட்டு செய்வது உரித்ததாகும். ஆனால் இத்தொகையானது குறைவான எல்லையாயிருக்கவேண்டும். சில மெம்பர்களை நீண்டகாலத்திற்கு பெரிய டிபாஸிட்டுகள் செய்யும்படி தூண்டுதல் செய்யவேண்டும். கிராமங்களுக்கென ஸ்தாபிக்கப்படும் சங்கங்களெல்லாம் பணவுதவியில்லாமல் தவிக்கின்றன. மெம்பர்களுக்கு ஸ்திரமான சொத்துகள் ஏதொன்றும் யில்லாததினால், பாங்கிகள் கடன் கொடுக்க சந்தேகப்படுகின்றன. ஆகை

யால் மெம்பர்கள் தாங்களே திரவிய உதவிக்கு யேற்பாடு செய்து கொள்ளவேண்டும். பங்கு தனத்தை சுமாராய் உயந்த துகையாக்கி, மெம்பர்கள் கொஞ்சமும் சிரமமில்லாமல் வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் கெடுக்களுக்காக பிரித்துக்கொடுக்கும்படி செய்தல் மிகவும் நலம். கொடையாளிகளாகிய பிரப்புக்களிடமிருந்து டிபாஸிட்டுகள் விழும்படிப் பிரயத்தனப்படுதல் ஐக்கிய முயற்சியை அபிவிருத்தி செய்வதாகும். விசேஷமாய் பாங்கிகள் கடன் மறுக்கக்கூடுமிடங்களில், மேற்கூறிய உதாரகுணமுள்ள கனவான்கள் உதவிசெய்யவேண்டியது தகுதியாகும். முதலில் கொஞ்சம் கஷ்டமாயிருந்தபோதிலும், வரவர மெம்பர்களின் திரவியமும், லாபதிரவியமும். அதிகரித்தலால் பின்பு அவ்வளவு சிரமமிருப்பதற்கு நியாயமில்லை.

பிறகு காரியதரிசியும் பஞ்சாயத்தாரும் செய்யவேண்டியதை அவர்களுக்கு நன்கு காட்டி ஒழுங்கான வழியில் வைக்கவேண்டும். கடன்கள் என்ன காரியங்களுக்குக் கொடுக்கப்பட்டதென்பதை நன்றாய் தானே கவனிக்கவேண்டும். உண்மையில், பஞ்சாயத்தார்வேலைகளை இவரே பார்த்துவரவேண்டும். அவர்கள் தவறிப் போகுமிடங்களை அப்பொழுதுக்கப்பொழுது இவர் அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும். பாக்கி வசூலாகாமலிருந்தால் மெம்பர்களிடம் இவரே பேசி வசூல் செய்யவேண்டும். இன்ஸ்பெக்டர் செய்யும் வேலைகளை இவர் கொஞ்சகாலம்வரையிற் அச்சங்கத்து விஷயமாய்ச் செய்துவந்தால் அதின் வளர்ச்சியைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. பஞ்சாயத்தார்கள் சங்கங்கள் வேலைகளை முற்றுமறிகிறவரையில் இவர் அடிக்கடி சங்கத்தை பார்வையிட்டு வரவேண்டும். சுமார் ஒரு வருஷகாலம் இவ்விதம் வேலைசெய்தபிறகு அதைவிட்டுப் பிரிதல் ஒழுங்கான வேலையாகும்.



# ஓர் ஜில்லாவில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் அபிவிருத்தியடைவது எப்படி ?

ம-ள-ள-ஸ்ரீ O. M. வேங்கிடனாத அய்யங்கார் எழுதியது.

இந்த ராஜதானியில் நாணயச்சங்கம் தவிர மற்ற விதச்சங்கங்கள் இன்னும் முன்னுக்குவரவில்லை. நாணயச்சங்கங்களும்கூட அதிகமாய் விருத்தியாகிவிட்டதென்று சொல்லமுடியாது. நாணயவகையில் விருத்தியான பிறகுதான் மற்றவிதமான ஐக்கிய சங்கங்களுக்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டும். ஆனால் மற்ற வேறுவிதமான சங்கங்களைக் குறித்து பிரயத்தனப்படக் கூடாதென்பது என் கருத்து அல்ல. நாணயவகையை யின்னும் சில ஏற்பாடுகளுடன் ஒரு சங்கலித்தொடராக ஒரு ஜில்லாவில் ஏற்படுத்தி அதை தகுந்தபடி பாதுகாக்க ராஜதானி சங்கத்துடன் சேர்த்து ஒழுங்குபடுத்த வேண்டும்.

முதலில் ஒரு கிராமத்தில் சங்கம் ஆரம்பித்தவுடன் ஊக்கமும் சுறுசுறுப்பும் இருப்பது போல் நாளடைவில் இல்லாமல் சங்கத்தின் அலுவல்கள் குன்றிப்போக வழிகள் உண்டாகின்றன. தவிரவும் சங்கத்திற் சேர்ந்தவர்களை ஊக்கம் குறையாமல் உற்சாகத்துடன் நடத்திவரவேண்டும். இவைகளை செய்ய ஒருவர் இருவரால் முடியாது. இதை கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்றும் நாம் கோரக்கூடாது.

சில விஷயங்கள் கவர்ன்மெண்டாராலும், அநேக விஷயங்கள் ஜனங்களாலும் தான் இந்த ஐக்கிய பத்தியத்தின் தாத்பரியம் விருத்தியாக வேண்டியிருக்கிறது.

இந்த ஐக்கிய நாணயச்சங்கத்தில் விருப்பம் உடையவர்கள் தம் சிரமத்தையும், பொருளையும் பொருட்டாக கொஞ்சகாலத்திற்கு பாராமல் பொது நலத்திற்காகவே உழைக்க வேண்டும். அப்படி உழைக்க ஒரு ஜில்லாவில் குறைந்தது அரை டஜன் நபர்கள் ஏற்படாவிட்டால் ஐக்கிய நாணயச்சங்கம் விர்த்தியாவதற்கு சாதகம் உண்டென்று துணிவுடன் சொல்லலாகாது. இரண்டு மூன்று பெயர்கள் இருந்தாலும் சற்று மெதுவாக விருத்திக்கு வரலாமென நினைக்கலாம். முதலில் ஒரு கிராமத்திலேயாவது பட்டணங்களிலேயாவது ஐக்கிய நாணயச்சங்கம் பரவ மனிதர்கள் ஏற்படுவது கஷ்டம். இந்த விஷயத்தில் ஊக்கமுள்ள ஒருவர் இருவர்கள் தம்மைப்போல் இந்த சங்கங்களில் தம்முடன் ஒத்துழைக்கும்படி தூண்டியும் தம்மைப்போல்

ஊக்கம் உண்டாகும்படி செய்யவேண்டும். அம்மாதிரிச்செய்தால்தான் சங்கங்களை விருத்திசெய்யவேண்டுமென்கிற கருத்துடையவர்களுக்கு சித்தி பெரும்.

இரண்டாவது, தம்மைப்போல் ஒருவர் இருவர் தம் ஜில்லாவில் சங்கங்களை ஸ்தாபிக்க முயலவேண்டும். இந்த ஐக்கிய நாணயச் சங்கத்தின் வாசனை அறியாதவர்களுக்கு இதமான நற்போதனைகள் செய்து ஒரு கிராமத்தில் குறைந்தது 10 அல்லது 12 பெயர்களை தம் வசமாகச் செய்துகொண்டு தாம் சொல்லியபடி செய்ய சிநேகிதர்களாக்கிக் கொள்ளவேண்டும். அவர்களைக் கொண்டு அந்த கிராமத்தில் சங்கம் ஸ்தாபித்து அநேகரைசேரச் செய்யவேண்டும். அந்த சங்கத்தை அடிக்கடி பார்த்து சில நாள் வரையில் வேலைகளை கற்பித்து கொடுத்து அவர்களைக் கொண்டு தம் காரியத்தை சரிவர செய்ய வேண்டும். அப்படிச்செய்கிறவர்களைக் கொண்டு அவர்களுக்கும் உற்சாகம் ஊட்டி தங்கள் கிராமத்து அக்கம் பக்கத்து கிராமவாசிகளுக்கு சொல்லும்படியாகச் செய்தும் சங்கம் ஏற்படுத்தின கிராமங்களின் அடுத்த கிராமங்களுக்குப்போய் ஜனங்களுக்கு நாம் போதிக்கவேண்டும். அந்த அனுபவத்தையும் பார்க்கும்படி செய்யவேண்டும். இம்மாதிரியாகச் சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களில் இச்சங்கங்களை ஸ்தாபித்து வேலை செய்யும் படியாக செய்யவேண்டும்.

மூன்றாவது, 5 அல்லது 6-மயில் சுற்றியுள்ள கிராமங்களில் இம்மாதிரி சங்கங்கள் குறைந்தது 10 அல்லது 12 ஏற்பட்ட உடன் ஒரு பெரிய கிராமத்தை மத்தியமாக கொண்டு அதன் சுற்று புறம் 7 அல்லது 8-மயில் சுற்றளவில் ஒரு எல்லையொன்று வைத்து மேற்பார்வை பார்க்கும் யூனியனாக ஏற்படுத்தவேண்டும். அந்த யூனியனைக் கொண்டு சங்கங்களின் மேற்பார்வையும் சங்கங்களுக்கு வேண்டிய விஷயங்களையும் தானாகவே பார்க்கும்படி இந்த யூனியனைக் கொண்டு ஏற்பாடு செய்யவேண்டும். இந்த யூனியன் தன் எல்லைக்குள்ளிருக்கும் மற்ற கிராமங்களிலொவ்வொன்றிலாவது அல்லது 2 கிராமங்களுக்கு சேர்ந்தாவது ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்தவும் அவைகளை தணிக்கை செய்யவும் அவைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் வேண்டும்.

நான்காவது, இம்மாதிரியாகவே ஒரு ஜில்லாவில் மூன்று அல்லது நான்கு யூனியன்கள் ஏற்படுத்த முயலவேண்டும். சாதாரணமாய் யூனியன்களை ஏற்படுத்துவது சாத்தியமில்லை. இது கஷ்டமான காரியம்தான். இதற்குப் பொருளுதவியும் மனிதகட்டுபாடும் பொது நலத்திற்கு உழைப்பவர்களும் வேண்டும். ஒரு யூனியனிற் சேர்ந்த



மெம்பர்களும் யூனியன் பஞ்சாயத்து அல்லது கவர்னிங்பாடிகளும் ஊக்கத்துடன் உழைப்பதோடு பொது நலத்திற்கென்றே நாம் தினந்தோறும் சில்நேரம் செலவுசெய்யவேண்டும். ஒவ்வொருகிராமத்திலும் சங்கம் ஒன்று இவ்விதமாய் யேற்பட்டால் அப்போதுதான் ஐக்கிய சங்கங்களுக்குவிதைபோட ஆரம்பித்ததாகும்; தவிரவும் யூனியனை ஸ்தாபித்ததில் மாத்திரம் பெருமையாகாது. அவைகளை நடத்தி குறைவு வரவொட்டாமலும் விருத்தியடையும் மாதிரியாகவும் செய்ய வேண்டும். இப்படி யூனிய்ன் செய்வதால் கொஞ்சம் பணச்செலவும் மனிதகட்டும் ஏற்படும். எவ்விதத்திலாவது பல வழிகளில் முபன்று யூனியன் அலுவல்கள் நடக்க சிரமப்படவேண்டும்.

ஐந்தாவது, இந்த யூனியன்களைச் சேர்ந்த சங்கங்கள் சுமார் 100 சங்கங்கள் அளவு ஏற்படும் தருணத்திலேயே ஒரு ஜில்லா பாங்கிங் யூனியனை ஸ்தாபிக்க முயலவேண்டும். ஜில்லா பாங்கிங் யூனியனானது அந்தந்த ஜில்லாவிலுள்ள சங்கங்களுக்குப் பண உதவி செய்யவும் அந்த யூனியன்களை மேற்பார்வை செய்வதுமாக இருக்க வேண்டும். இஜ்ஜில்லா பாங்கிங் யூனியன் ஒரு ஜில்லாவில் ஏற்படும் அல்லது ஏற்படப்போகும் சங்கங்களுக்கு பணஉதவி செய்ய டிபாஸிட வாங்கவேண்டும். அந்த ஜில்லாவிலுள்ள பொது ஸ்தாபனங்களின் பணங்களையும் தனிகர்களின் பணங்களையும் டிபாஸிட்டாக பெறுவதற்கு வேண்டியப் பிரயத்தினம் செய்து ஜில்லாவிற்கு வேண்டிய பணத்தை சம்பாதித்து தன் கீழ் இருக்கும் சங்கங்களுக்குக் கொடுத்து அதினால் வரப்பட்ட லாபங்களில் ஓர் பாகம் சங்கங்களுக்கு கொடுத்தும், யூனியனுக்கு பிடிக்கும் செலவுகளையும் கொடுத்தும், அந்த ஜில்லா பாங்கியும் நிலைக்கும்படியான மூலதிரவியத்தையும் உண்டாக்கி ஜில்லாவை கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். இம்மாதிரி செய்யும் காலத்தில் பொது நலத்திற்கு ஐக்கிய விஷயத்தில் உழைக்க சிலர் வெளிக்கிளம்புவார்கள். அவர்களையும் சேர்த்து ஆங்காங்கு நல் போதனைகள் சங்கங்களுக்குச் செய்து நல் வழிக்கு வரும்படியான ஏற்பாடு செய்தும், குறைவுகள் நேராதபடி தடுத்தும், குறைவுகள் நேர்ந்தால் அதைப் போக்கியும் வேலை செய்ய வேண்டும். இப்படிச்செய்ய ஆரம்பிக்கும்போது முதலில் உண்டாகும் கஷ்டங்களைகாட்டிலும் பின்பு அதிகமாகக்கூடும்; அப்படி உண்டானாலும் விடா முயற்சியாக வேலை செய்யவேண்டும். இம்மாதிரிச்செய்வது வாய்க்கு லேசாக இருந்தபோதிலும் அனுபவத்திற் கொண்டுவருவது வெகு கஷ்டம். ஒரு ஜில்லாவில் ஜில்லா பாங்கியொன்றை ஏற்படுத்துவது இலேசாக முடியாது. இந்த விஷயங்களுக்கு கவர்ன்மெண்டாரு

டைய உதவி ஆதிமுதலாக நம்முடன் இருந்துவந்தாலன்றி ஒருவேலையுஞ்செய்யமுடியாது. தவிரவும் அவர்களுடைய மேற்பார்வையும் போதனையும் வழி காட்டுதலும் வேண்டும். இம்மாதிரி செய்வதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. இம்மாதிரியாகவே காருண்ய கவர்ண்மெண்டாரும் செய்துகொண்டு வருவதை நாம் அனுபவித்துக்கொண்டு வருகிறோம். இதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்விதம் இல்லாவிட்டால் இந்த ராஜதானியில் இதுவரையில் 1,630 சங்கங்களுக்குக் குறையாமல் ஸ்தாபித்து விர்த்திசெய்யமுடியுமா? ஆனதால் இந்த விஷயத்தில் நமக்கு யாதொரு குறைவுமில்லை.

இதன் பிறகு இந்த ஜில்லா சங்கத்தைப்போலவே 5 அல்லது 6 ஜில்லாக்களில் ஜில்லாச சங்கம் ஏற்பட்டவுடன் ஜில்லாச் சங்கங்களனைத்தும் சேர்த்து ஒரு ராஜதானி யூனியனாக ஏற்படுத்தி ஜில்லா சங்கங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்தும் ஜில்லாச் சங்கங்களை ஏற்படுத்த வழிகளையும் ராஜதானி யூனியன் செய்ய வேண்டும். அப்படிச்செய்ய முயன்றாற் தான் ஐக்கிய நாணயச்சங்கங்கள் விருத்தியாவதுடன் நாணய வகையல்லாத வேறு வகைகளிலும் ஐக்கிய சங்கங்கள் ஏற்பட ஏது உண்டாகும்.

ஆதலால் இப்போது ராஜதானியிலுள்ள எல்லா கிராமச்சங்கங்களும் நகரங்களிலுள்ள சங்கங்களும் ஒன்றுகூடி யூனியன்களையும் ஜில்லா யூனியன்களையும் ஸ்தாபிக்க முயலவேண்டும். அப்படி செய்தாலொழிய நாம் ஐக்கிய பத்ய விஷயமாய் ஊன்றிய விதை முளைத்து விருத்தியாக ஆரம்பித்ததென்று நினைக்க வொண்ணாது.

ஆகையால் நம் தேசம் முன்னுக்கு வரவேண்டுமென்று கோரும் பொதுநலப்பிரியர்கள் இந்த சமயத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் முன்னுக்கு வந்து ஒவ்வொருகிராமத்திலும் ஒரு ஐக்கிய சங்கம் ஸ்தாபிக்க முயலவேண்டும். இப்போதிய காலசந்தர்பங்களை யோஜிக்குமளவில் நம் இந்தியாவின் பூர்வ ஸ்திதியின் கைதொழில் வியாபாரம் முதலியவைகள் விர்த்தியவாதற்கு இப்பொழுது தருணம் வாய்த்திக்கிறதென்று சொல்லாமலே தெரியுமாதலால், இதில் உட்புகுந்து நுட்பமாக வேலை செய்யவேண்டும். எல்லாவித கைத்தொழிலும் வியாபரமும் இந்த ஐக்கிய வகையிலேயே முடிய வேண்டும். இம்மாதிரி முடிவு பெரும்படி நாம் பிரயத்தினப்பட்டால் ஒரு காலத்திலும் அழியும்படியான வழிக்கு வராது. நாமும் டென்மார்க்கு தேசத்தைப் போலவே எல்லா வித வியாபரங்களையும் கைத்தொழில்களையும் ஐக்கிய பத்தியத்தின் வழியாகக்கொண்டு செய்யவேண்டும். இந்த வழியில்



ஆரம்பிப்போமானால் இவைகளுக்கு வேண்டிய பணவுதவி இம்மூலத்தில் சம்பாதிப்பதோடு ஜனங்களுக்கு ஊக்கமும் பொதுநலப்பிரியமும் ஊட்ட சாதகமாக இருக்கும் என்பதிற் தடையில்லை.

---

## வடமலைபுரத்தில் சுகாதார வேலை

வடமலைபுரம் ம-ள-ள-ஸ்ரீ R. ஆனந்தராவ் அவர்கள் எழுதியது.

நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் கிராம சுகாதார வேலைகளை அபிவிர்த்தி செய்வதற்காக சங்கங்களினிடமாய் சில தொகைகளைக் கொடுத்து நடத்தச் செய்கிறார்களென்று முன்னமே நமது கூட்டுத்தொழில் வர்த்தமானியில் பிரசுரமாயிருக்கிறது. அவ்விதம் சாங்க்ஷன் செய்ததொகைகளைப்பெற்று வேலைசெய்யும் சங்கங்களில் இந்த வடமலைபுரம் நாணயச் சங்கமும் ஒன்றாகும். சென்ற 1913-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் இம்மாதிரி சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள் என்று அப்போதிய திரிச்சினாப்பள்ளி ஐக்கிய சங்கங்களின் அசிஸ்டண்டு ரிஜிஸ்ட்ராரான ம-ள-ள-ஸ்ரீ ராவ்சாகெப் K. விஜயராகவாச்சாரியாரவர்கள் மூலமாகத் தெரியவந்தது. உடனே இச்சங்கத்தார் சில வேலைகளை குறிப்பிட்டு அதற்கு உத்தேசமாய் செல்லக்கூடிய செலவைக்கண்டு இவர்கள் மூலமாய் ஒரு ஜாப்தாவை அனுப்பினோம்.

1914-ம் வருஷ கடைசியில் புதுக்கிணறு வெட்டவும், பழயகிணறுகள் ரிபேர் செய்யவும், தெருக்காலில் வாருகால் கட்டவும், ரூ 1,750 சாங்ஷன் செய்திருப்பதாய் தகவல் கிடைத்தது. அப்பால் அவ்வேலைகளுக்கு ரிவினியூ டிபார்டுமெண்டார் யெஸ்டிமேட்டுகளை தயார் செய்து யெஸ்டிமேட்டுடன் ரூ 1,750-க்கு ஒரு பில்லும் சாத்தூர் தாலூக்காபோர்டு பிரசிடெண்டிடமிருந்து கிடைத்தது. மேற்கூறிய வேலைகளைச்செய்ய இச்சங்கத்தின் மெம்பர்களின் சிற்சில பேர்களை சிற்சில வேலைகளை மேற்பார்வை செய்யும்படி யேற்படுத்தியிருந்தது. அதாவது சுண்ணாம்பு சப்ளை செய்வதில் நல்ல சுண்ணாம்புதானா என்றும் பிறகு அதை சரியானபடி மணலுடன் சேர்க்கபட்டு ரோதையில் போட்டு சரியானபடி அறைக்கப் படுகிறதாயென்றும், கட்டடம் கட்டுவதில் சரியானபடி சாமான்களை சப்ளை செய்யப்பட்டு சரியாய் வேலை நடந்துவருவதா யென்று பார்ப்பதற்கும் இன்னும் அதேமாதிரியான வேலைகளுக்கு சிற்சில பேர்களை யேற்படுத்தி ஏப்ரல்மீ 30உ-க்குள் வேலையை முடித்து கம்பிளீஷன் ரிபோர்ட்டையும் அனுப்பினோம். இதில் ஏற்படும் நன்மைகள் யாதெனில், இந்தவேலையை

கண்டிருக்ட்டர் வசம் ஒப்புவித்திருந்தால் இவ்வளவு உறுதியாயும் திருப்தியாயும் செய்யாததுடன் இத்தொகை முழுவதையும் செலவு செய்யாமல் அதில் ஒருபாகத்தை தன் சொந்த உபயோகத்துக்கு மீதி பிடிப்பார். இச்சங்கத்தின் வசமொப்புவித்ததால் பூராத்தொகையை செலவு செய்வதுடன், ரூ 435-14-0 கிராமத்தார்கள் அதிகமாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆகையால் கவர்ன்மெண்டார் கிராமாந்திரங்களில் செய்யவேண்டிய வேலையை இச்சங்கங்களின் மூலமாய்ச் செய்ய ஏற்படுத்துவது யாவரும் விரும்பும்படியான விஷயம். கவர்ண்மெண்டார் தெருக்களில் வாருகால் கட்டுவதற்கு உதவி செய்ததால் கிராமத்தார்கள் ஷை வாருகாலுக்குச் சரியாய் தெருவைச்சுற்றி உருதியான ரோட்டையும் யேற்படுத் திருக்கிறார்கள். மேற்படி வேலைகளை பரிசோதனை பார்க்கவந்த இராமநாதபுரம் ஜில்லாக்கலெக்டர் துரையின் வருமாறு எழுதியிருக்கிறார்:—இச்சங்கமானது சுயற்சியாயேற்றுக்கொண்டு சில தெருக்களில் சாலைகள் போட்டு அபிவிருத்தி செய்தது மிகவும் திருப்திகரமாகவும் சந்தோஷத்தைத் தரும்படியாயுமிருக்கின்றது.

---

# 1914-15வருஷத்தில் இந்தியாவில் ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி

## 1. பங்காளம்.

பங்காள தேசத்துக்கூட்டு முயற்சியின் அபிவிருத்தி பின்வரும் ஸ்டேட்மெண்டால் நன்கு விளங்கும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸெண்ட்ரல் சங்கங்கள் ... | 40 | 46 | 4,729 | 5,061 | 32,52,550 | 40,93,136 |
| விவசாயச் சங்கங்கள் ... | 1,513 | 1,862 | 71,282 | 85,717 | 44,11,493 | 52,95,099 |
| விவசாய மல்லாத மற்ற சங்கங்கள்... | 87 | 84 | 14,317 | 16,340 | 12,74,222 | 16,13,372 |
| மொத்தம். | 1,661 | 1,992 | 90,328 | 107,118 | 89,38,265 | 110,01,617 |



### ஸெண்ட்ரல் சங்கங்கள்

இப்பொழுது 38 ஸெண்ட்ரல் சங்கங்களும், 8 சூபர் வைஸிங் யூனியன்களும் பெங்காளத்திலிருக்கின்றன. ஸெண்ட்ரல் பாங்கிகளின் பங்கு முதல் ரூ. 3,83,555-லிருந்து ரூ. 4,89,548-க்கும், அவைகளின் க்ஷேமநிதி ரூ. 35,658-லிருந்து ரூ. 75,072-க்கும் அதிகரித்திருக்கின்றன. பங்கு முதலும் க்ஷேமநிதியும் சேர்ந்து மொத்த கடன் தொகையில் 100-க்கு 13 விதமாகும். இப்பாங்கிகள் தங்களைச் சேர்ந்துள்ள சங்கங்களை மேல் விஜாரணை செய்தும் பரிசோதித்தும் வருகின்றன. சங்கங்களுக்கு 100-க்கு வட்டி $9\frac{3}{8}$ விதத்திலிருந்து $10\frac{15}{16}$ விதம் வரையில் கடன் கொடுக்கப்படுகின்றது.

### விவசாயச்சங்கங்கள்

1,862 சங்கங்களில், 1582 சங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கிகளில் சேர்ந்துள்ளன. பங்கு தனம் ரூ. 57,564-லிருந்து ரூ. 50, 482-க்குக் குறைந்துவிட்டது; ஆனால் சங்கங்களினதும் மெம்பர்களினதும் சங்கியையும், தொழில் தனமும் 100-க்கு 20 விதம் அதிகரித்திருக்கின்றன. சங்க மெம்பர்களின் சராசரியான சங்கியை முன் வருஷத்தைப்போல் 46,03-யாயிருக்கிறது; சங்கங்களின் சராசரி முதலும், ஒவ்வொரு மெம்பரின் சராசரி முதலும், முறையே, ரூ 2,843,75, ரூ 61,77 ஆகும். தானிய பாங்கிகளும் ஸ்டோர்ஸும் முன்போல் ஒழுங்காய் வேலை செய்து வரவில்லை. டெக்காவிலுள்ள கூட்டு முயற்சித்தொழில் பாற்சாலையானது திருப்திகரமாய் வேலை செய்கின்றது. பால் வியாபாரம் செய்வதில் அதின் சென்ற வருஷத்திய நிகர்லாபம் ரூ. 414—9—9; ஸ்தலங்களிலுள்ள சங்கங்களின் மூலமாய், எலும்பு எரு, உருளைக்கிழங்கு விதை முதலியவைகளை விவசாயிகளுக்குக் கொடுத்துதவவேண்டி மெயிமென்ஸிங்கில் ஓர் சங்கமேற்பட்டிருக்கிறது. நெய், கடுகு எண்ணெய், துணிகள், முதலானவைகளை வியாபாரம் செய்வதற்காக ஓர் சங்கம் கேலாரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

### விவசாயிகளுக்கல்லாத மற்ற சங்கங்கள்

விவசாயிகளல்லா மற்றவர்களுக்கேற்பட்ட 84 சங்கங்களில், பொறுப்பு வரையறுக்காத நெசவுக்காரர்களின் சங்கங்கள் 5-ம், நாணயத்தைச் சாராத 3 சங்கங்களுமிருக்கின்றன. சங்கங்களின் பங்கு முதல் ரூ. 5,61,204-யிலிருந்து ரூ. 6,65,242-க்கும், அவைகளின் க்ஷேமநிதி ரூ. 46,195-லிருந்து ரூ 57,996-க்கும் உயர்ந்திருக்கின்றன. இச்சங்கங்கள் வெளியுதவியை நாடாமல் வேண்டிய தொழில்தனத்தை தாங்களே உயர்த்திக்கொள்ளமுடியும்.

### தணிக்கை, பரிசோதனை முதலியவைகள்

தணிக்கையும் பரிசோதனையும் ரெஜிஸ்ட்ராராலும் அவர் சிப்பந்திகளாலும் நடை பெற்று வருகின்றன. ஸெண்ட்ரல் பாங்கிகளின் ஆதீனத்தில் வேலை செய்தும், கவர்ன்மெண்டாரால் சம்பளம் கொடுக்கப்பட்டும் பரிசோதனை சிப்பந்திகள் 24 பெயர்களிருக்கின்றார்கள். ஸெண்ட்ரல் பாங்கிகள் தங்களைச் சேர்ந்துள்ள சங்கங்களை மேல் விஜாரணை செய்வதற்குப் பிரத்தியேக சிப்பந்திகளை போஷித்து வருகின்றன.

---

## 2. பர்மா.

### பொது அபிவிருத்தி

பின்வரும் ஸ்டேட்மெண்டு, 1913—14, 1914—15, வருஷங்களில் பர்மாவில் கூட்டு முயற்சியின் அபிவிருத்தியைக் காட்டும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸெண்டிரல் சங்கங்கள் ... | 96 | 117 | 2,748 | 3,162 | 26,5,7113 | 34,34,133 |
| விவசாயச் சங்கங்கள் ... | 1,214 | 1,329 | 29,889 | 32,375 | 22,65,893 | 41,62,560 |
| விவசாய மல்லாத மற்ற சங்கங்கள் ... | 49 | 43 | 3,414 | 3,574 | 6,14,107 | 6,03,119 |
| மொத்தம் ... | 1,359 | 1,489 | 36,051 | 39,111 | 65,37,113 | 81,99,812 |

### ஸெண்ட்ரல் சங்கங்கள்

பர்மாவில், அப்பர்பர்மா ராஜதானி பாங்கியொன்றும், 3 ஜில்லா பாங்கிகளும், உத்திரவாதம் செய்து கொடுக்கும் 112 யூனியன்களுமிருக்கின்றன. ராஜதானி பாங்கியிற் சேர்ந்துள்ள சங்கங்கள் தனி நபர் மெம்பர்களைக் காட்டிலும் அதில் அதிக பங்குகளும் வோட்டுகளுமுடைத்தாயிருக்கின்றன. அந்த பாங்கியானது தன்னிடத்தில் போடப்பட்ட டிபாஸிட்டுகளுக்கு 100-க்கு 60 விதம் கொடுத்தும், சங்கங்



வட்டி வாங்கியும் வருகின்றன. சங்கங்கள் மெம்பர்களுக்கு 15-வீத வட்டிக்கு கடன் கொடுத்து மிகுந்த லாபமடைகின்றன. ஜில்லா பாங்கிகள் பணமுதவிக்கு விசேஷமாய் இராஜதானி பாங்கியைச் சார்ந்திருக்கவில்லை. 1,117 சங்கங்கள் யூனியன்களிற் சேர்ந்திருக்கின்றன.

### விவசாயச் சங்கங்கள்

1,252 விவசாயச் சங்கங்களில், 606 சங்கங்கள் ஹாஸட்டியேற்படுத்திய முறையிலும், 646 சங்கங்கள் ரப்பீஸன் முறையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மொத்த பங்கு முதல் ரூ. 7-லக்ஷம்; அவைகளின் வேஷமநிதி ரூ. 6½ லக்ஷம். இவ்விரண்டும் சேர்ந்து சங்கங்களின் கடன்களுக்கு 100-க்கு 45-வீதமும் மொத்த கடன்களுக்கு 100-க்கு 33 விதமுமாகின்றன. சங்கங்கள் கடன் வாங்கக்கூடிய உயர்ந்த யெல்லையையும் ஒவ்வொரு மெம்பருக்கும் கடன் கொடுக்கக்கூடிய யெல்லையையும் சங்க மஹாசபையார்நிர்ணயிக்கும்படி பைலாக்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சங்கத்துக்கு மெம்பரின் சராசரி சங்கியை 27, ஒவ்வொரு மெம்பருக்கும் சராசரி கடன்கொடுக்கப்பட்ட தொகை ரூ 136.

நூதனமாய் ஜனங்கள் குடியேறும் மூன்று ஸ்தலங்களாகிய மான் வாய்க்கால் பிரதேசம், மான்யின் பள்ளத்தாக்கு, காடொன்பா நாடு, ஆகிய இவ்விடங்களில் ஐக்கிய முயற்சியானது குடியேற்றத்துடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. குடியேற்றத்தில் முக்கியமான குறிப்பு என்னவென்றால், குடியேறும் விவசாயிகள் சேர்ந்த ஐக்கிய முயற்சிச் சங்கங்களிடம் சாகுபடி செய்யப்படும் நிலங்களை ஒப்புவித்து, அச்சங்கங்கள் வேண்டும் திரவியத்தை கவர்ன்மெண்டாரிடம் முன் கடனாக வாங்கிக் கொள்ளுவதாகும். அம்மாதிரிச் சங்கங்களின் மெம்பர் கூட்டு முறையில் குடிவாரமாய் சாகுபடி செய்வார்கள். பங்கு முதல் யாதொன்றுமில்லை. கால் நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்கள் புதிதாய் 4 ஸ்தாபிக்கப்பட்டன. விற்பனைச் சங்கங்களின் சங்கியை மிகவும் குறைந்து விட்டது.

### விவசாயமல்லாத மற்றச் சங்கங்கள்.

விவசாயிகளுக்கல்லாத சங்கங்களின் சங்கியை 49-லிருந்து 43-க்கு குறைந்து விட்டது. அமராபுரத்திலிருக்கும் நெசவுக்காரர்களின் சங்கமானது புதிது புதிதான முறையில் நெய்து வருகின்றது.

### தணிக்கை, பரிசோதனை முதலியன.

தனித்தனி முறையே உத்திரவாதம் முழுவதையும் வகிக்க வேண்டி தணிக்கையையும் மேல்விஜாரணை செய்வதையும் பிரிக்க யோ

ஜனை செய்கிறார்கள். சம்பளம் ரூ 70-லிருந்து ரூ 120 வரையில் 100 சங்கங்களுக்கு ஓர் ஆடிட்டர் வீதம் நியமிக்கப்படுவார்கள். தணிக்கை வரி வசூல் செய்யப்படும். யூனியன் உத்தியோகஸ்தர்களும், கௌரவத்திற்கு வேலை செய்யும் சங்கஸ்தாபனர்களும் மேல் விஜாரணையும் செய்து வருவார்கள்.

———

## 3. ஐக்கிய மகாணங்களாகிய ஆக்ராவும், அயோத்தியும்.

### பொது அபிவிருத்தி.

பின்வரும் ஸ்டேட்மெண்டானது ஐக்கியமாகாணங்களில் சென்ற இரண்டு வருஷங்களிலேற்பட்ட ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தியைக்காட்டும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸெண்டிரல் சங்கங்கள் ... | 55 | 58 | 12,959 | 11,250 | 59,09,745 | 62,99,749 |
| விவசாயச் சங்கங்கள் ... | 2,560 | 2,716 | 99,891 | 1,01,753 | 50,71,014 | 49,88,282 |
| விவசாயமல்லாத மற்ற சங்கங்கள் ... | 185 | 188 | 5,755 | 6,270 | 4,37,428 | 4,61,112 |
| மொத்தம் ... | 2,800 | 2,962 | 118605 | 1,19,273 | 114,18,17 | 117,49,143 |

### ஸேண்ட்ரல் சங்கங்கள்.

சென்ற வருஷக்கடைசியில் 23 ஜில்லா பாங்கிகளும், 24 ஸெண்ட்ரல் பாங்கிகளும், 11 ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியன்களுமிருந்தன. பின் கூறப்பட்ட 85 பாங்கிகளில், 26 பாங்கிகள் ஓர் தாய் பாங்கியுடன் சேர்ந்து அதினால் பணமுதவப்பட்டு வருகின்றன. மற்றவைகள் பிரவுதவியை நாடாமல் சுயற்சியாயிருக்கின்றன. யுத்தத்தின் கொடுமையாலும், விளைபொருள்கள் குறைவடைந்ததினாலும்,



தொழில் தனம் முன்வருஷம்போல் அபிவிருத்தியடையவில்லை. பங்குதனம் ரூ. 6,30,631லிருந்து ரூ. 7,56,147க்கும், க்ஷேமநிதி ரூ. 3,11,477 லிருந்து ரூ. 3,86,449க்கும் அதிகரித்திருக்கின்றன. இவ்விரண்டும் சேர்ந்து மொத்ததொழில் தனத்தில் முன்வருஷம் 100க்கு 1509 வீதமும், இப்பொழுது 18·1 வீதமுமாகின்றன. பங்குதனமும், க்ஷேமநிதியும் சேர்ந்து பாங்கிகளின் கடன்களுக்கும் டிபாஸிட்டுகளுக்கும் 100-க்கு 26 8 வீதமாகின்றன. க்ஷேமநிதிகளை வெளியில் டிபாஸிட்டு செய்கிறார்கள்; பாங்கிகளின் மொத்த நிகர்லாபம் ரூ. 1,51,517

### விவசாயச் சங்கங்கள்.

விவசாயிகளுக்குக் கஷ்டம் தரும் காலமாயிருந்த போதிலும், மெம்பர்களால் பங்குதன மூலமாயாவது அல்லது டிபாஸிட்டுகள் மூலமாயாவது தொழில் தனத்திற்கு கொடுக்கப்பட்ட தொகையானது 100க்கு 19·2 வீதத்திலிருந்து 26 வீதனத்திற்கு அதிகரித்தது. மெம்பர்கள் வாங்குகடன் தொகைக்கு 15 வீதத்திலிருந்து 15⅝ வீதம் வரையில் வட்டிகொடுக்கிறார்கள். ஸெண்ட்ரல் சங்கங்கள் பெரும்பாலும் சங்கங்களிலிருந்து 12 வீதவட்டி வாங்குகின்றன. ஆனால் இவ்வட்டி வீதமானது, மேல்விஜாரணை, தணிக்கை முதலிய வரிகளைச் சேர்ந்துள்ளது.

### விவசாயிகளுக்கல்லாத சங்கங்கள்.

விவசாயிகளுக்கல்லாத சங்கங்கள் 188-இல், 8 நாணயத்தைச் சேராத ஸ்தாபனங்கள்; 9பொறுப்பு வரையறுத்த நாணயச்சங்கங்கள் பாக்கி 171 சங்கங்கள் பொறு வரையறுக்கா நாணயச்சங்கங்களாகும். இவைகளெல்லாம் ஸெண்ட்ரல் சங்கங்களில் சேர்ந்துள்ளன.

ஆக்ராவிலுள்ள தந்தி வேலைக்காரர்களின் சங்கமானது மிகவும் திருப்திகரமாய் வேலை செய்து வருகின்றது. தந்தி இலாகா டைரெக்டர் ஜெனரலும் மெம்பர்களது சம்பளப்பட்டியிலேயே அவர்கள் கடனுக்குச் செலுத்தவேண்டிய கெடுத்தொகையை பிடித்துக்கொள்ளும்படி யேற்பாடு செய்திருக்கிறார். பட்டு நெசவுக்காரர்களின் சங்கங்கள் யுத்தத்தினால் க்ஷீணமாகிக்கொண்டு வருகின்றன.

நாணயத்தைக் சாராத சங்கங்கள் 20-இல், 12 சங்கங்கள் விவசாயிகளுக்கும், 8 மற்றவர்களுக்கும் யேற்பட்டிருக்கின்றன. முன் கூறப்பட்டவைகளில், அல்லஹாபாதிலிருக்கும் 3 பாற்சாலைகளும், காசியிலிருக்கும் பாற்சாலை யொன்றும், இவ்விடங்களிலுள்ள நெய்ச் சங்கங்கள் மூன்றும், விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளையும் சாமான்களையும் வாங்கிக்கொடுத்துதவும் மணிப்பூரிலுள்ள சங்

மொன்றும் முக்கியமானவைகள். பின் கூறப்பட்டவைகளில் முக்கியமானது பேரிலியில் ஸ்தாபிக்கப்பட்ட தச்சர்களின் வேலைக்கூடம். இது மிகவும் திருப்திகரமாய் வேலைசெய்து வருகின்றது.

### தணிக்கையும் பரிசோதனையும்.

கவர்ன்மெண்டு இன்ஸ்பெக்டர்களாலும், பிரத்தியேகமாய்ப் பழக்கப்பட்ட தொழிலாளி ஆடிட்டர்களாலும், ஸென்ட்ரல் பாங்கிகளால் சம்பளம் கொடுக்கப்பட்டு, ஆனால் ரெஜிஸ்ட்ராருத்திரவின்படி முழுநாள் வேலை செய்து வரும் ஆடிட்டர்களாலும், கௌரவத்திற்கு வேலை செய்பவர்களாலும், ஸென்ட்ரல் பாங்கிகளின் சப்பளசிப்பந்திகளாலும், தணிக்கை செய்யப்பட்டுவருகின்றன. ரெஜிஸ்ட்ராரும் அவர் சிப்பந்திகளும் ஸென்ட்ரல் பாங்கிகளை அடிக்கடி பரிசோதித்து வருகின்றார்கள்.

———

## 4-மத்திய மகாணங்களும் பேராரும்.

### பொது அபிவிருத்தி.

மத்திய மாகாணங்களிலும் பேராரிலும் சென்றவருஷத்தில் ஐக்கிய முயற்சி இயக்கத்தின் அபிவிருத்தி பின்வரும் ஸ்டேட்மெண்டால் நன்கு விளங்கும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸெண்டிரல் சங்கங்கள் ... | 38 | 46 | 6,131 | 7,074 | 38,37,411 | 43,22,056 |
| விவசாயச் சங்கங்கள் ... | 2,087 | 2,158 | 34,313 | 37,053 | 25,76,238 | 28,21,670 |
| விவசாயமல்லாத மற்ற சங்கங்கள் ... | 88 | 93 | 1,778 | 2,023 | 96,284 | 1,17,595 |
| மொத்தம் ... | 2,213 | 2,297 | 42,222 | 46,150 | 63,09,933 | 72,61,321 |



### ஸென்ட்ரல் சங்கங்கள்.

வருஷக்கடைசியில் ராஜதானிபாங்கி ஒன்றும், 29 ஸென்ட்ரல் பாங்கிகளும், 15 விவசாயயூனியன்களும், கோவாப்ரேடிவ் பாங்கிகள் சேர்ந்த மத்திய மாகாணயூனியன் ஒன்றுமிருந்தன. ராஜதானி பாங்கியின் தொழில் தனம். ரூ. 12,22,450 லிருந்து ரூ. 13,44,315 க்கும், டிபாஸிட்டுகள் ரூ. 5,35,933 லிருந்து ரூ. 9,86, 696க்கும் அதிகரித்தன. ஸென்ட்ரல் பாங்கிகளின் தொழில் தனம் ரூ. 25,86,613 லிருந்து ரூ. 29,37,640க்கு உயர்ந்திருக்கின்றது; அதில் பங்கு தனம் 100க்கு 21விதம், மெம்பர்களின் டிபாஸிட்டுகள் 13விதம், மெம்பரல்லாதவரகளின் டிபாஸிட்டுகள் 27 விதமும், ராஜதானி பாங்கி கடன் கொடுத்தது 37 விதமும் ஸென்ட்ரல் பாங்கிகள் விசேஷமாய் டிபாஸிட்டுகளுக்கு 6 வித வட்டி கொடுத்தும் கடன் தொகைகளுக்கு 9 வித வட்டிவாங்கியும் வருகின்றன. ராஜதானிபாங்கியானது சங்கங்களுக்கு 7 வித வட்டிக்குப்பணமுதவுகின்றது.

### விவசாயச் சங்கங்கள்.

பொறுப்பு வரையறுக்கா விவசாய நாணச்சங்கங்களின் சங்கியை 2,083லிருந்து 2,154க்கு உயரந்திருக்கன்றது. அவைகளில் 127 சங்கங்கள் சென்றவருஷத்தில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன. 2,013 சங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கிகளிற் சேர்ந்திருக்கின்றன. கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் சங்கங்கள் இரண்டு, ஒன்று நாவகாளிலும், மற்றொன்று காண்டுவாயிலும் யேற்பட்டிருக்கின்றன.

### மற்ற சங்கங்கள்.

சென்ற வருஷக்கடைசியில் 55 நெசவுக்காரர்களின் சங்கங்களும், 5 சாயம் போடுகிறவர்களின் சங்கங்களும், 2 தட்டார்களின் சங்கங்களும், பித்தளை தாம்பிரவேலை செய்பவர்களது சங்கங்கள் இரண்டும், கூடை பின்னுவோர்களது சங்கங்கள் ஏழும், குயவர்களது சங்கங்கள் இரண்டும், தோல் வேலை செய்பவர்களது சங்கமொன்றும், கிராம சிறு வியாபாரிகளது சங்கங்கள் ஒன்பதுமிருந்தன.

### தணிக்கையும் பரிசோதனையும்.

சங்கங்களின் தணிக்கையும் பரிசோதனையும், ரெஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்டார், சிப் ஆடிட்டர், அவர் சிப்பந்திகள், ஆகிய இவர்களால் நடைபெறுகின்றன. யூனியன் இவ்வேலைகளில் மிகவும் உதவி செய்து வருகின்றது.

———

## 5-ஆஜ்மீரும் மேர்வாராவும்.

### பொது அபிவிருத்தி.

பின்வரும் ஸ்டேட்மெண்டு ஆஜ்மீர் மேர்வாராவில் சென்ற இரண்டு வருஷங்களில் ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தியைக் காட்டும்:—

| சங்கங்களின் வகுப்பு. | சங்கங்களின் சங்கியை. | | மெம்பர்களின் சங்கியை. | | தொழில் தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 |
| | | | | | ரூ. | ரூ. |
| ஸெண்டிரல் சங்கங்கள் ... | 5 | 5 | 774 | 841 | 7,50,322 | 8,15,242 |
| விவசாயச் சங்கங்கள் ... | 352 | 355 | 10,387 | 11,264 | 7,35,509 | 7,03,016 |
| விவசாய மல்லாத மற்ற சங்கங்கள் ... | ... | ... | ... | ... | ... | ... |
| மொத்தம் ... | 357 | 360 | 11,161 | 12,105 | 14,85,831 | 15,18,258 |

### ஸெண்ட்ரல் சங்கங்கள்.

ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியன்கள் 5-யிருக்கின்றன. 344 சங்கங்கள் பாங்கிங் யூனியன்களிற் சேர்ந்து அவைகளால் 10-வீத வட்டிக்குப் பணவுதவிபெற்று வருகின்றன. பாங்கிகளின் நிகர் லாபம் சென்ற வருஷத்தில் ரூ. 21,885-யும், அதற்கு முன் வருஷத்தில் ரூ. 23,026ம் கிடைத்தது. க்ஷேம நிதியில் தொகை ரூ. 14,320 யாயிருக்கிறது.

### விவசாய சங்கங்கள்.

சென்ற வருஷத்தில் இரண்டு சங்கங்கள், ஒன்று ஆஜமீர் ஜில்லாவிலும், மற்றொன்று மேர்வாராயிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. சங்கங்களின் பங்கு தனம் ரூ. 1,22,039 லிருந்து ரூ. 1,68,809க்கு அதிகரித்தது; கவர்ன்மெண்டாரிடமிருந்து கடன் வாங்கின தொகை ரூ. 31,667 லிருந்து ரூ. 21,067க்குக் குறைந்து விட்டது.

க்ஷேமநிதியானது சங்கங்களாலுபயோகப் படுத்தப்பட்டு வருகின்றது ரெஜிஸ்ட்ராரும், அவர் சிப்பந்திகளும் கங்கதணிக்கையும் பரிசோதனையும் செய்து வருகிறார்கள்.



## 6- குடகு.

### பொது அபிவிருத்தி.

சென்ற வருஷத்தில் நாணயச்சங்கம் புதிதாய் ஒன்றும் ஸ்தாபிக்கப்படவில்லை. தொழில் தனத்தின் தொகையானது ரூ 10,6,020 ரூ 11,5,400க்கும், க்ஷேமநிதியின் தொகையானது ரூ. 18, 106 லிருந்து ரூ 23,514-க்கும் உயர்ந்திருக்கின்றன. கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்களின் சங்கியை 9 லிருந்து 10க்கு அதிகரித்திருக்கின்றது. 434 கால் நடைகள் இன்ஷியூர் செய்யப்பட்டன. இச்சங்கங்களின் க்ஷேமநிதி ரூ188 லிருந்து ரூ 590க்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது.

5 நாணயச்சங்கங்கள், தங்கள் பங்கு முதலின்மேல் கிடைக்கும் டிவிடெண்டு தொகையை தங்கள் கால் நடைகளை இன்ஷியூர் செய்வதில் உபயோகப்படுத்த வேண்டுமென தீர்மானித்திருக்கின்றன. தானிய பாங்கியானது திருப்திகரமாய்வேலை செய்கின்றது; அதின் சென்ற வருஷத்திய நிகர்லாபம் ரூ 594—12—5. டிபாஸிட்டுகளுக்கு 5 லிருந்து $6\frac{1}{4}$ வரையில் வட்டி வீதமும், கடன் கொடுக்கும் தொகைகளுக்கு $12\frac{1}{2}$ வீதமும் யேற்பட்டிருக்கின்றன.

கம்மிட்டியாரும் கண்டிரோலர்களும் சங்கங்களை திருப்திகரமாய் நிர்வகித்து வருகிறார்கள். ரெஜிஸ்ட்ரார் தானாகவே எல்லா கணக்குகளையும் தணிக்கை செய்து வருகிறார்.

---

## பம்பாய் கடன் மீட்டும் கம்மிட்டியார்

பம்பாயில் கடன் மீட்டுகிற கம்மிடியார் செய்த வேலையைப்பற்றி சமீபத்தில் வெளியான சங்கதிகளில் சிலவற்றை இப்பொழுது கூறுவோம்.

ஸர்வன்ட்ஸ் ஆப் இந்தியா ஹோமில் சென்ற 1915ஞு ஏப்ரல்மீ 8உயில் பட்டாணி என்பவரின் அக்கிராசனாதிபத்தியங் கீழ் கடன் மீட்டுகிற கம்மிட்டியாருக்கு உள்பட்ட ஐக்கிய சங்கங்களைச்சேர்ந்த சுமார் 300 மெம்பர்கள் வருஷாந்தர சபை கூடினார்கள்.

கடன் மீட்டுகிற கம்மிடி மெம்பர்களும் பரிசோதனை பண்டுக்கு டிபாசிட்டினாலும், பொருளுதவியாலும், இந்த சங்கத்தில் அபிமானங் கொண்ட பெருமாட்டிகளும், பிரபுக்களும், மருந்து இனமாய்க் கொடுப்பவர்களும், இந்தத் தொழிலில் அபிவிர்த்தியை மிகக் கருதிய மற்றும் சில பான்மரும் இந்தக் கூட்டத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

பிறகு ஜி. கே. தேவதார் என்பவர் இந்தச்சபை கூடியதின் காரணத்தை பின்வருமாறு விவரித்துக்காட்டினார். முதலாவது, சொல்ப நிபந்தனைக்குள்பட்ட ஆயுளை இன்ஷியூர் செய்கிற கொள்கையையும் இன்ஷூரன்ஸ் தொழிலாளிகளிடமிருந்தும், ரீராஜாராம் துகாராம் என்பவர் தன்னுடைய காலஞ்சென்ற தகப்பனாரின் நாமத்தை பரிபாலித்து வரும்படி ஏற்படுத்திய மாதந்தோறும் கட்டி வரும் ரூபாய் 100-லிருந்தும் இனாமாய் மருந்துதவி செய்தலாகிய இரண்டு ஏற்பாடுகளை முதல் முதல் ஸ்தாபிக்கும் பொருட்டு ஆனரபில் மிஸ்டர் மில்லைக் கேட்டுக்கொள்வது. இரண்டாவது ஸர்வன்ட்ங் ஆப் இந்தியா சங்கத்தாரால் நிருபணஞ் செய்யப்பட்ட ஐக்கிய சங்கத்து அபிவிர்த்தியில் மிக்க அபிமானங்கொண்ட ஆனரபில் மிஸ்டர் மில்லுக்கு வந்தனம் அளிப்பது. தேசாபிவிர்த்தி நெடுநாள் நிலை நிற்கும் பொருட்டு நீண்ட ஆயுளும், மேன்மேல் பொங்கி பிரகாசிக்கும்படியான சிறந்த வாணாட்களை பிரசாதிக்கும்படி கடவுளை வேண்டுவது. இராஜப்பிரதிநிதி மந்திராலோசனை சபை மெம்பர் ஆகிய உன்னத பதவியை அவர் ஏற்றுக்கொள்ளும் தருவாயில், நல்வாழ்த்து கொடுப்பதுமாம்.

பிறகு தேவதார் என்பவர் இந்த சங்கத்தால் நிருபணஞ் செய்யப்பட்ட ஓங்கி வளரும் ஐக்கிய சங்கத்தார் செய்த வேலையின் சில குறிப்பான பாகங்களை எடுத்துக்காட்டினார்.

மொத்தம் 353 மெம்பர்கள் அடங்கிய வெவ்வேறு காலங்களில் உண்டான 12 சங்கங்கள் முதன் முதலின் இருந்தன. சென்ற மார்ச்சுமீ இரண்டு சங்கங்கள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு கூடிய சீக்கிரத்தில் தொழிலை நடத்துவார்கள். பிறகு பொருளுதவிபெற்றும், கைம்மாறு எதிர் பாருததுமான தொழிலாளிகளைக் கொண்டு, மேற்பார்வை செய்தும், நல்வழியில் நடாத்தி கடன் மீட்டுகிற கம்மிட்டியார் கூறிய நிபந்தனைகள் முற்றிலும் தழுவியுள்ள தொழில் வன்மையைக் குறித்து, பிரசிங்கித்தார்.

கம்மீட்டியார் வேலைகளில் நவீனத்தில் நடைபெறுகிற முக்கிய குணாதிசயத்தை விசாரிக்குமிடத்து, மெம்பர்களுக்கு உண்டான அசாத்தியமானதும், 100-க்கு 75-லிருந்து 150 வரையான மிகக்கடின வட்டியால் உண்டான கடன்களைத் தீர்ப்பதாகும். இதை அநுஸரித்து 235 மெம்பர்களுடைய கடன் முற்றிலும் தீர்க்கப்பட்டது. நாளாவர்த்தியில் வேறு சிலர் கடன்களை மீட்க சக்தியுள்ளவர்களாகியிருக்கிறார்கள். சுமார் ரூ 60,000 வரை, வளர்ந்த கடனைமீட்கும் பொருட்டு 100-க்கு 18¾ விதம் வட்டி போட்டு. ரூ 46,811 வரையில் கடனாக மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் 3-வருஷத்துக்குள் பிரதி



மாதமும் மாதக்கட்டணமாய் பணஞ்செலுத்தி தங்களுக்குச் சேர்ந்துள்ள தொகை பூராவும் கட்டிவிட வேண்டியது. இதற்காக இந்தக் கொள்கையில் அபிமானமுள்ளவர்களிடமிருந்து 100-க்கு 6 முதல் 9 வட்டிக்கு மேலாகாமல் 3 வருஷங்களில் அடைபடும் படியாய் சர்க்கார் துவாராவாக ரூ 500-உம், 6 மெம்பர்களிடமிருந்தே தலைக்கு ரூ 454 வீதம் தொகை உள்பட ரூ 28,566 வரை பணம் வாங்கப்பட்டது. செலவு சுருக்கத்தைக் குறித்து மெம்பர்கள் தாங்களே ரூ 2,175-8-வரைக்கும் ரூபாய் 1 அல்லது 8 அணா மாதச்சந்தா வீதம், பங்குகள் எடுத்துக்கொண்டும், சுதன்மையாய் டிபாசிட் செய்தும், 10 வருஷம் வரை கொடுப்பதாக கொடுத்து வந்தார்கள். மேலும் பிறவேச கட்டணத்திற்காகவும் இதர சில்லறைச் செலவுக்காகவுமாக ரூ523 கொடுத்தார்கள். தொகைகட்டிவந்ததின் ஒழுங்கை தேவதார் என்பவர் புகழ்ந்து பேசி, ரிபோர்ட்டில் 6 கேஸ்கள் கூட வேணும் என்று நிறுத்தியதாகக் காணப்படவில்லை என்று எடுத்துச்சொன்னார். மொத்தகடன் தொகையில் வட்டி ரூ4,235 உள்பட சுமார் ரூ16597-8-0 வரையிலும் அதாவது மூன்றில் ஒரு பாகம் செலுத்தி வந்தார்கள். இந்தத் தொகை கடன் தீர்க்கப்புது முதலாக நின்றது. டிபாசிடருக்கு ரூ 5,008 முதலும் வட்டி ரூ 1,146 உம் செல்லாகி விட்டது. இந்தச் சிறிய சங்கல் ரூ 63,808 வரையில் வசூல் செய்யப்பட்டது. இது வரையிலும் இந்தச் சங்கத்தை நடத்தும் விஷயமாய் வசூலித்த தொகையில் 100க்கு 1க்கு அதிகப்படாமல் ரூ 809 வரைசில்லறைச்செலவு செய்யப்பட்டது. சங்கத்தாரிடம் இப்பொழுது ரொக்கமாக ரூ 1,380 வரை இருக்கிறது. கவர்மெண்டு ஆடிடர்கள் கணக்குகளை பரிசோதனை செய்து விகித்த வண்ணம் சமீபத்தில் கணக்கு முடித்து பாக்கி கூறியபடி மொத்தம் செலவுபோக பாக்கிநின்றது ரூ 2,276. பிறகு தேவதார் என்பவர் இந்த வேலையின் மற்றும் சில குணாதிசயங்களை பின்வருமாறு வெளியிட்டார். (1) 100 ஐக்கிய முயற்சிக்காரராலும், அவர்கள் சிநேகிதர்கள் பிள்ளைகள் முதலானவர்களாலும் 3 இராப்பள்ளிக்கூடங்கள் தாக்கர் என்பவர் விசாரணையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் 50 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். (2) பிரிவினை ஐக்கிய சங்கங்கள் நூதனமாய் ஏற்படுத்தப்பட்டன. (3) குறைந்தது ரூ 500க்கு ஒவ்வொருவரும் தத்தம் ஆயுளை நிச்சயப்படுத்தவேண்டும் என்று சங்கத்தாரால் நிச்சியஞ் செய்யப்பட்டது. (4) மெம்பர்கள் குடும்பத்துக்கு இனாமாய்வைத்தியம் செய்வது. பிறகு, தேவதார் இந்தச் சிறிய வேலையில் இல் என்பவர் கொண்ட ஊக்கத்தைப்புகழ்ந்து பேசினார். அவர் கம்மிடியர் வேலையில் ஒவ்வொரு பாகங்களிலும் எடுத்துக் கொண்ட சிரமத்தைப்பற்றியும் சொன்னார். இப்பேர்பட்ட நுண்ணிய

கருமத்தில் மெய்யன்புடன் உழைக்கிறவர்களுள் இல் என்பவர் முதன்மையாயிருக்கிறார்.

தேவதார் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இல் என்பவர் தேசத்தின் அபிவிர்த்திக்காக உத்தியோகஸ்தர்களும், சுகவாசிகளும் கூடிய சர்வன்ட்ங் ஆப் இந்தியா சங்கத்தில், புனாவில் ஐக்கிய சங்கத்தைப்பற்றி பிரசங்கித்தார். இச்செய்கையினால் ஐக்கிய சங்கத்தில் அவர் கொண்ட சிரத்தை நன்கு விளங்குகிறது. ஐக்கிய வேலையின்கண் அவர் தானே ஏற்படுத்திய கொள்கைகளை முறை பிறழாது மெய்யன்புடன் ஆதரித்து வந்தார். இராஜாங்கத்தில் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவர்கள் சுகவாசிகளுடன் ஒன்றுசேர்ந்து ஐக்கிய சங்கத்தில் உண்மையான ஊக்கத்துடன் வேலை செய்வது, பம்பாய் ராஜதானிக்கு ஒரு முக்கிய அதிர்ஷ்டமாம். ஆனரபில் மில் என்பவர் தன் செய்கையினாலேயே ஐக்கிய சங்கமானது, மற்றும் பல உபயோகமான தொழில்களுக்கு சாதனமாகும் என்று தெளியப் படுத்தியிருக்கிறார். பிறகு தேவதார் என்பவர் மற்றுமுள்ள ஐக்கிய சங்கத்தாருக்காக, மில் என்பவர் வகிக்கப்புகும் உத்தியோகத்தில் யாதொரு இடையூறு வாராவண்ணம் நீடுழி வாழ்த்தினார். மிஸ்டர் வாஸ் என்பவரும் மிஸ்டர் தாக்கர் என்பவரும் மராதி பாஷையிலும், குஜராதி பாஷையிலும் கடன் மீட்டுகிற கம்மிடியார் இனிமேல் நடத்தப்புகும் கல்வியபிவிர்த்திக்கும் ஐக்கிய சங்கத்துவத்துக்கும் சாதனமான எண்ணங்களை தெளிவாய் எடுத்துக்காட்டினார்கள். பிறகு மார்வாதி என்பவர் குஜராத்தி பாஷையிலும், காதர் என்பவர் மராத்தி பாஷையிலும் ஐக்கிய சங்கத்தார் சந்தாதார்களை முன்னிட்டு கடன் மீட்டுகிற கம்மிட்டியில் தீர்ந்த ஊக்கத்துடன் ஆனரபில் மிஸ்டர் இல் என்பவர் ஏற்றுக்கொண்ட நுண்ணிய முயற்சிக்காக வந்தனம் அளித்து உன்னதபதவி மேன்மேலும் கிடைக்குமாறுவேண்டினார்.

---

# கவர்ன்மெண்டாரின் பிரசுரம்.

## கோவாப்ரேடிவ் ஸொஸைடீஸ் ஆக்ட்டுபடி திருத்தப் பட்ட நவீன சட்ட நிர்ணயங்கள்.

1915-ம் ௵ அக்டோபர் ௴ 2உ

கவர்னரின் கவுன்ஸிலர்களால் இதுவரையில் வெளியிட்ட 1904-ம் ௵த்தில் செய்யப்பட்ட கோவாப்ரேடிவ் கிரெடிட் ஸொஸைடீஸ் ஆக்ட்டுக்கு பதிலாக, 1912-ம் ௵த்தில் கோவாப்ரேடிவ் ஸொஸைடீஸ் ஆக்டின் 43-வது ஸெக்ஷனிற் கண்ட அதிகாரத்தின்படி பின்வருமாறு சட்ட நிருபணங்கள் செய்யப்பட்டுள்ளன—அதாவது.



(a) இந்த நிருபணங்களில் சொல்லப்பட்ட "இந்த ஆக்டு" என்ற மொழியானது 1910-ம் ௵த்தில் செய்த கோவாப்ரேடிவ் ஸொஸைடீஸ் ஆக்டையே குறிக்கிறது.

(b) அந்த ஆக்டில் சொல்லப்பட்ட ஒவ்வொரு மொழியும் அதற்கேற்பட்ட தாத்பர்யங்களைக் கொள்ளுமே தவிர வேறல்ல.

## சட்டங்கள்.

I அந்த ஆக்டின் 8-வது ஸெக்ஷன்படி எந்த சங்கத்தார் கோவாப்ரேடிவ் ஸொஸைடியாக ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று ஆஸ்தை கொண்டால் அந்த சட்டங்களின் கடைசியில் சொல்லப்பட்ட ஷெடியூல் பாரத்தில் ஐக்கிய சங்க ரிஜிஸ்ட்ராருக்கு எழுதித் தெரிவிக்கவேண்டும்.

II ரிஜிஸ்டர் செய்வதற்காக அனுப்பும் அப்ளிகேஷனோடு, அந்த மனுதாரர்கள் தங்களுக்குள் நடத்தவேண்டியவைகளைப் பற்றி ஏற்படுத்துவதாக உத்தேசித்திருக்கும் பைலாக்களின் நகல் ஒன்றை அனுப்பவேண்டியது. அப்படி ஏற்படுத்தும் நிர்ணயங்கள் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட ஆக்டிற்கு விரோதமன்னியில் அதற்கு ஒத்து இருக்கவேண்டியது; கீழே சொல்லப்படும் (a) முதல் (v) வரையிலுள்ள பிரிவினைகளில் சொல்லியபடிக்கும் இன்னும் ஸொஸைடி ஆரம்ப சமயத்தில் ஏற்படும் விஷயங்களைப் பற்றியும், அதின் செய்யப்போகும் வியாபாரத்தின் நிர்வாகத்தைப்பற்றியும் சொல்லவேண்டியது:—

(a) ஸொஸைடியின் பெயரும் விலாஸமும்.

(b) அது எந்த எல்லைக்குள் தன் வியாபாரத்தை நடத்தப் போகிறது.

(c) ஸொஸைடியின் முக்கிய நோக்கங்கள்.

(d) அதின் திரவியங்கள் எந்த விஷயத்தில் உபயோகப்படப் போகிறது.

(e) மெம்பர்களாகச் சேருகிறவர்கள் எப்படிப் பட்டவர்களாயிருக்கவேண்டும்; மெம்பராகவேண்டியதற்கு திரவியம் கொடுத்தல் அல்லது சங்கம் பொறுப்பை வகுத்தல்.

(f) ஸொஸைடி வாங்கும் கடன்களுக்கு மெம்பர்கள் எவ்விதம் பொறுப்பை யுடையவர்கள், எவ்வளவு தூரம்.

(g) எந்தக் காரணங்களைக் கொண்டு ஒருவர் மெம்பராயிருத்தலிலிருந்து விலகி விடலாம்.

(h) அப்படி விட்டு விடுதல், அதற்கு அருகாமையாயிருத்தல், மெம்பர்கள் இறந்து போதல், முதலிய காலங்களில் நடத்த வேண்டிய வழிகள்.

(i) எந்தெந்த காரணங்களைக் கொண்டு ஒரு மெம்பர் தன் பங்கையாவது தனக்கு அதிலிருக்கும் ஒரு பிரயோஜனத்தை யாவது மற்றவர் பேரில் மாற்றலாம்.

(j) ஸொஸைடிக்கு ஏற்படும் மூலதனத்தில் எவ்விதமான பங்கு, எவ்வளவு திரவியம், அப்படி பங்குதனமாயிருந்தால் ஒரு மெம்பர் எவ்வளவு பங்கு எடுத்துக்கொள்ளலாம்.

(k) எந்தெந்தக் காலங்களில் ஸொஸைடியானது கடன் வாங்கலாம்; அப்படி கடன் வாங்குவதில் என்னென்ன நடவடிக்கைகள் வேண்டும்.

(l) மெம்பர்கள் சேருவதற்குக் கட்டவேண்டிய பிரவேச கட்டணம் அல்லது மற்ற ஏதாவது கட்டணங்கள் அல்லது ஏதாவது அபராதங்கள்.

(m) ஒரு மெம்பருக்கு எவ்வளவு வரை கடன் கொடுக்கலாம்; அப்படிக் கடன் கொடுப்பதிலும் அதற்குக் குறிப்பிடும் வாய்தாகாலத்தை மறுபடி தள்ளிப்போடுவது, பத்திரங்களைத் திருப்பி எழுதிக்கொடுப்பது, அல்லது அவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்வது இவைகளைப்பற்றின நடவடிக்கைகள்.

(n) எந்தெந்த நிர்ணயங்களின்பேரில் மெம்பர்களுக்கு கடன் கொடுக்கலாம்.

(o) மெம்பர் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தாவிடில் உண்டாகும் விபத்துக்கள்.

(p) மெம்பர்கள் போட்டிருக்கும் மூலதனத்திற்கு எவ்வளவு டிவிடெண்டு விகிதத்திற்குமேல் அவர்களுக்கு கொடுக்கக்கூடாது.

(q) ஸொஸைடி வாங்கும் கடன்களுக்கு எவ்வளவு வட்டி வரையில் கொடுக்கலாம், மெம்பர்கள் தங்கள் ஸொஸைடியிலிருந்து வாங்கும் கடன்களுக்கு எவ்வளவு வட்டி வரையில் கொடுக்க வேண்டும்.

(r) உற்பத்தி, விற்பனை ஸொஸைடிகளில் பக்குவப்படுத்தாத ஸாமான்களையும் பக்குவப்படுத்தின ஸாமான்களையும் என்ன விலைக்கு வாங்கி என்ன விலைக்கு விற்கவேண்டும் என்ற நடவடிக்கைகள்.

(s) மீடிங்குகள் ஏற்படுத்தும் விதம், யாரார் வோட்டு கொடுக்கலாமென்பது, III-வது ரூலை ஒத்து சட்டங்களைச் செய்வதிலும், அவைகளை மாற்றுவதிலும், அல்லது ரத்துசெய்வதிலும், செய்ய வேண்டிய முறைகள்.



(t) மானேஜிங் கம்மிடியை ஏற்படுத்துவதாயிருந்தால், அந்தக் கம்மிடியாரையும், இன்னும் வேறு உத்தியோகஸ்தர்கள் ஏற்படுவதாயிருந்தால் அவர்களையும் எப்படி நியமிக்கிறது, அவர்களை எப்படி நீக்குவது, அப்படி நியமிக்கப்பட்ட கம்மிட்டியார் அல்லது இதர உத்தியோகஸ்தர்கள் செய்ய வேண்டியகடமைகள், அவர்களுக்கேற்படும் அதிகாரங்கள்.'

(u) அதற்கு ஏற்படும் தனத்தை வைக்கப்பட்ட இடமும், அதை டிபாஸிட்டு செய்யும் வழிகளும். V, VII ரூல்களுக்கு ஒத்து கணக்குகள் ஒழுங்காய் வைக்கும் வழி.

(v) எவ்விதச்செலவும் போக பாக்கியமிருந்திருக்கும் நிகர் லாபத்தைப் பங்கிடுவதின் விதம்.

III அப்படி ஏற்படும் ஸொஸைடியானது ஆக்டில் சொல்லியிருக்கும் சட்ட நிர்ணயங்களுக்கு விரோதமன்னியில் இருக்கிறதாவென்றும் அந்த ஸொஸைடியின் சட்டங்கள் ஜனஸமூகத்துக்கு ஒத்திருக்கிறதாவென்றும், அது ஏற்படும் எல்லைக்குள் அது விருத்தியாகுமாவென்றும் ரிஜிஸ்ட்ரார் நிச்சயஞ்செய்துகொள்ள வேண்டியது. ரிஜிஸ்ட்ரார்முடிவானபதில் சொல்வதற்குள் தனக்குவேண்டிய எந்த ஸங்கதிகளையும் கேட்டுக் கொள்ளலாம், எவ்விதவிசாரணையும் செய்துகொள்ளலாம். ஸொஸைடியை ரிஜிஸ்டர் செய்வதற்கு முன், அவசியமாயுமிருந்தால் அந்த நபர்களின் இஷ்டங்களின் பேரில் அப்ளிகேஷனுடன் கொடுத்திருக்கும் பைலாக்களின் நகலில் மாறுதல்கள் செய்யலாம். ஒரு ஸொஸைடியை ரிஜிஸ்ட்ரார் ரிஜிஸ்டர்செய்தவுடன், கட்டணங்கள் ஒன்றும் பெறாமல் தான் கையெழுத்துப் போட்டு உத்தியோகமுறை முத்திரையும் போடப்பட்ட ஒரு ஸர்டிபிகேட் அதற்குக் கொடுக்கவேண்டும். அந்த ஸர்டிபிகேட்டுடன், தன் அங்கீகாரத்துடன் ரிஜிஸ்ட்டர் செய்த பைலாக்களின் நகல் ஒன்றும் கொடுக்கவேண்டும். அந்த சட்டங்கள் VI ரூல்படி ரிவினியூபோர்டாராலாவது கவர்ன்மெண்டாராலாவது மாற்றப்படுமாகில் அப்படிமாற்றப்பட்ட பைலாக்களே ஸொஸைடிகளின் சட்டங்களாகும். ரிஜிஸ்ட்ரார் ஒருஸொஸைடியை ரிஜிஸ்டர்செய்ய மறுத்துவிட்டால், அப்படி மறுப்பதற்குண்டான காரணங்களைச் சுருக்கமாக ஆபீஸ் ரிகார்டுகளில் பதிவுசெய்தலோடு அந்தநபர்களுக்கு யாதொரு கட்டணமுமன்னியில் ஒரு நகல் கொடுக்கவேண்டும். ரிஜிஸ்ட்ராருக்குக் கீழ்ப்பட்டவர்கள் யாரேனும் மேற்சொன்னவைகளைச் செய்ய உத்திரவு பெற்றிருந்தால் அப்படிச்

செய்பவைகளை ரிஜிஸ்ட்ரார் மாற்றலாம். அவைகளையும் ரிவினியூ போர்டார் அல்லது கவர்மெண்டார் மாற்றலாம்.

IV ரிஜிஸ்ட்ரார் ஏதாவது ஸொஸைடியை ரிஜிஸ்டர் செய்வதற்காவது அல்லது பைலாக்களின் நகலையாவது அல்லது திருத்தப்பட்ட பைலாக்களையாவது ரிஜிஸ்டர் செய்ய மறுத்தால் அந்தஸொஸைடி நபர்களுக்கு அது தெரிந்ததுமுதல் இரண்டு மாஸத்திற்குள் ரிவினியூ போர்டுக்கு அப்பீல் செய்யலாம். ரிவினியூபோர்டார் ஸொஸைடியையாவது பைலா நகலையாவது திருத்தப்பட்ட பைலாக்களையாவது அல்லது வேறு எது யுக்தமாய்த் தோன்றுகிறதோ அதை ரிஜிஸ்டர் செய்யும்படி ரிஜிஸ்ட்ராருக்கு உத்திரவு செய்யலாம்.

V எந்த ஸொஸைடியும் ஜூலைமீ 15தேதிக்கு முன்பாகவாவது அல்லது ரிஜிஸ்ட்ரார் குறிப்பிடும் தேதிக்கு முன்பாகவாவது:—

(a) அந்த ஜூலைமீத்திற்கு முந்தின ஜூன்மீ 30 தேதி வரையில் வருஷகாலத்தில் அதன்வரவுசெலவுகளுக்கு முடியும் ஒரு ஸ்டேட்மெண்டும்.

(b) அந்த ஜூன்மீ 30 தேதியன்று அதற்கேற்பட்ட ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டும்.

(c) அந்த ஜூன்மீ 30 தேதியில் அதற்கு ஏற்பட்டிருக்கும் லாப நஷ்டங்களுக்கு ஒரு ஸ்டேட்மெண்டும்.

தயார் செய்யவேண்டியது. இந்தமூன்று ஸ்டேட்மெண்டுகளையும் ரிஜிஸ்ட்ராரிடம் தாமதமன்னியிற் சேர்ப்பிக்க வேண்டியது.

ரிஜிஸ்ட்ரார் அந்த ஸ்டேட்மெண்டுகளை சரி பார்த்து ஸர்ட்டிபிகேட்டு கொடுத்த பிறகு அதை ரிஜிஸ்ட்ரார் அங்கீகாரம் செய்தபடி அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டியது. மேலே சொன்ன ஜூன்மீ 30டைக்குப்பதிலாக ரிஜிஸ்ட்ரார் தனக்குஸௌகரயமான நாளைக்குறிப்பிடலாம்.

VI ஆக்டின் 26வது ஸெக்ஷன்படி தேவையான ஸொஸைடியின் புஸ்தகங்களிலுள்ள பதிவுகளின் காபிகள் அந்த ஸொஸைடியின் பிரெஸிடெண்டு அல்லது ஸெக்ரெடரியால்கையெழுத்து செய்யப்பட்டும், அந்தபிரெஸிடெண்டு அல்லது ஸெக்ரிடெரியைச் சேர்த்து மானேஜிங் கம்மிடி மெம்பர்களில் மூன்று பேரால் சரிபார்க்கப்பட்டும் ஸொஸைடியின் முத்திரையும் உடைத்தாயிருக்கவேண்டும்.

VII கோவாப்ரேடிவ் ஸொஸைடிகள் தாங்கள் செய்யும் வியாபாரங்களைப் பதிவுசெய்ய பின்சொல்லப்படும் கணக்குப்புஸ்தகங்களை உபயோகிக்கவேண்டும்;



(a) கிரெடிட்ஸொஸைடீகள் உபயோகிக்கவேண்டிய புஸ்தகங்கள்:—

(1) மினிட்புக்: அதாவது மானேஜிங் கம்மிடியார், மஹாசபை மெம்பர்கள் இவர்களின் மீடிங்குகளில்நடக்கும் விஷயங்களைப்பதிவுசெய்வதற்கேற்பட்ட புஸ்தகம்.

(2) அட்மிஷன்புக்: ஒவ்வொரு மெம்பருடைய பெயர் அட்ரஸ் அவர் சேர்ந்த தேதி அவர் எடுத்துக்கொண்ட பங்குகள் இவைகளைக்காண்பிக்கும்.

(3) காஷ் புக் (ரொக்கக் குறிப்பு).—தினசரிபணவரவுகளையும் சிலவுகளையும் குறித்து அந்த தேதியின் கடைசியில் அன்று பாக்கியையும் தெரிவிக்கும்.

(4) ரசீது புஸ்தகம்: இரண்டிரண்டு பாரங்கள் சேர்ந்துள்ளனவாய் அவைகளில் ஒன்றைப்பணம் ஏற்றுக்கொண்டதற்கு ரசீதுகொடுக்கவும் மற்றொன்றை ஆபீஸ்கணக்கை சரிபார்க்கிறதற்காக உபயோகப்படும்.

(5) லோன் லெட்ஜர் (கடன் கொடுக்கும் பெயரேடு).—மெம்பர்களுக்குக் கடன்கொடுத்த தேதி, நெம்பர், கடன் தொகை, கடன் எதற்காகக்கொடுத்தது, திருப்பிக்கொடுக்கவேண்டிய தேதி, முதல், வட்டி இவைகளைக்காண்பிக்கும்.

(6) கடன் வாங்கும் லெட்ஜர்—ஸொஸைடி வெளியிலிருந்து டிபாஸிட்டுகளாகவும் கடன்களாகவும் வாங்கியிருக்கும் தொகைகளைக் காண்பிக்கும்.

(7) லயபிலிடி ரிஜிஸ்டர்—ஒவ்வொரு மெம்பரும் தானாக வாங்கின கடனுக்காகவோ பிறருக்காக ஜாமின் இருந்ததினால் ஏற்பட்ட கடனுக்காகவோ ஸொஸைடிக்கு கொடுக்க வேண்டிய தொகைகளைக்காட்டும்.

(8) ஒவ்வொரு மாதத்தின்வரவையும் செலவையும் காட்டும் ரிஜிஸ்டர்.

(9) இன்னும் அவசியமானவையும் ரிஜிஸ்ட்ராரால் குறிப்பிடப்படுமான புஸ்தகங்கள்.

(b) ஸென்ட்ரல் பாங்கிகளில் உபயோகிக்கவேண்டிய புஸ்தகங்கள்.—

கிரெடிட் ஸொஸைடிகள் வைக்கவேண்டிய மேலே சொன்ன புஸ்தகங்களுடன் எல்லா ஸென்ட்ரல் (அதாவது மற்ற ஸொஸைடிகளுக்குக் கடன் கொடுக்கும்) பாங்கிகள் பின் சொல்லப்படும் புஸ்தகங்களையும் வைத்துக்கொள்ளவேண்டும்.

(1) வட்டிக்குறிப்பு: கடன் வாங்கும் ஒவ்வொருவரும் கொடுத்ததும் கொடுக்கவேண்டியதுமான வட்டிகளைக்காட்டுவது.

(2) ரிஸர்வ்பண்டு ரிஜிஸ்ட்டர் (க்ஷேமதன ரிஜிஸ்டர்)—இந்த ஸென்ட்ரல் பாங்கியில் மற்ற பாங்கிகள் ரிஸர்வ்பண்டாகப்போட்டிருக்கும் துகைகளைக்காட்டுவது.

(3) கணக்குகளில் அப்போதே பதியக்கூடாத குறிப்புகளைக் காட்டும் கணக்குகள்.

(c) வரையறுக்கப்படாத பொறுப்பையுடைய ஸொஸைடிகள் வைக்கவேண்டிய ஸொத்து விபர ஸ்டேட்மெண்டு.

வரையறுக்கப்படாமல் கடன் கொடுக்கும் ஸொஸைடிகள் அப்படி அதனிடம் கடன் வாங்கும் மெம்பரின் அன்று தேதிய சொத்து விபரமும், அதற்கப்பால் ஒருவருஷத்திற்கெல்லாம் இருக்கும் விபரமும் காட்டும்.

(d) ஸாமான்கள் உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் ஸொஸைடிகள் வைத்துக்கொள்ள வேண்டிய புஸ்தகங்கள்.

ஷை ஸொஸைடிகளில் கிரெடிட் பிராஞ்சு இதர கிரெடிட் ஸொஸைடிகளுக்கு ஏற்பட்ட புஸ்தகங்களுடன் பின் வருமாறு புஸ்தகங்களும் உபயோகிக்கவேண்டும்.

(1) குட்ஸ்லெட்ஜர் (ஸாமான்களின் பெயரேடு)—ஒவ்வொரு ஸாமானும் எவ்வளவு வாங்கப்பட்டு எவ்வளவு விற்கப்பட்டிருக்கிறதென்றதைக்குறிக்கும்.

(2) ஸ்டாக் பர்சேஸ் புஸ்தகம் (ஸாமான்கள் வாங்குகிற கணக்கு)—தினசரி வாங்குகிற ஸாமான்களின் விபரக்கணக்கு.

(e) ஒவ்வொரு கோவாப்ரேடிவ் ஸொஸைடியும் பின்வரும் கணக்குகளை ரிஜிஸ்ட்ராருக்கு ஒவ்வொருவருஷத்தின் முடிவிலும் அனுப்பவேண்டியது.

(1) வரவு சில்வுக்கணக்கு.

(2) அதின் முழு சொத்தும் அது கொடுக்கவேண்டிய கடன்களும்.

(3) லாப நஷ்டக்கணக்கு.

(f) உற்பத்தி, விற்பனை ஸொஸைடிகள் மாத்திரம் பின் வரும் ஸ்டேட்மெண்டுகளை ஒவ்வொரு வருஷமும் ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்ப வேண்டும்.



அந்தந்த வருஷத்தின் முடிவில் கையிருப்பு ஸாமான்களை ஸரி பார்த்ததின் ஸ்டேட்மெண்டு.

VIII ரிஜிஸ்ட்ரார் பின்வருபவண புஸ்தகங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்:—

(1) எல்லா ஸொஸைடிகளின் பெயர்களையும் விலாஸங்களையும் காட்டும் ரிஜிஸ்ட்டர்.

(2) ரிஜிஸ்டர் செய்யும் வரிசைப்படி ஸொஸைடிகளின் பைலாக்களும் அவைகள் இதர பாஷைகளிலிருந்தால் அவைகளுக்கு ஸரியான இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளும் எழுதப்படும் ரிஜிஸ்ட்டர்.

(3) அந்த பைலாக்களில் திருத்துதல்கள் அல்லது மாறுதல்களிருந்தால் அவைகளை தான் ரிஜிஸ்ட்டர் செய்து அங்கிகரித்த வரிசைப்படிக்கும் அவைகள் இதர பாஷைகளிலிருந்தால் அதற்கு ஸரியான இங்கிலீஷ் மொழி பெயர்ப்புகளும் எழுதப்படும் ரிஜிஸ்ட்டர்.

IX (a) பங்குகளோடு வரையறுக்கப்படாத பொறுப்பையுடைய ஸொஸைடிகளில் ரிஸர்வ் பண்டின் துகையும் பங்குகளின் மூலதனமும் தவிர இதர கடன்களின் துகையில் பாதித்துகை வரும்வரையில், எல்லாச் சில்வும் போகபாக்கிலாபத்தில் பாதியைத் தனி ரிஸர்வ் பண்டாகச் சேர்த்துவைக்க வேண்டியது. அந்த அளவு வந்தவுடன் நிகர் லாபத்தில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ரிஸர்வ் பண்டில் போடவேண்டியது. ஆனால் ரிஸர்வ் பண்டு, பங்குகளின் மூலதனம், இவைகளைத்தவிர வேறே கடன்கள் வரவர அதிகமாக, ரிஸர்வ் பண்டின் துகை பாதிக்குக் குறையுமாகையால் அது பாதிவருமளவும் மறுபடியும் லாபத்தில் பாதியைப்போடவேண்டும். மேலே சொன்னபிரகாரம் ரிஸரவ் பண்டுக்கு செலுத்தினதுபோக பாக்கி லாபத்தை மெம்பர்களுக்கு தாம் அது வரையிலும் செலுத்தியிருக்கும் பங்குப் பணத்தின் மேல் ஒருவருஷத்திற்கு 100-க்கு $6\frac{1}{4}$-க்கு மேற்படாமல் பிரித்துக்கொடுக்க வேண்டும். அப்படி எந்த லாபமும் ரிஜிஸ்ட்ரார் உத்திரவன்னியில் பிரித்துக்கொடுக்கக்கூடாது.

பங்குகளோடு கூடவரையறுக்கப் பட்ட பொறுப்புகளையுடைய ஸொஸைடிகளில் லாபத்தில் பாதிக்குக் குறையாமல் ரிஸர்வ் பண்டில் போடவேண்டும். பிறகு பாக்கியை ஒவ்வொரு

மெம்பரும் போட்டிருக்கிற பணத்திற்குத் தக்கபடி 100க்கு 9-க்கு அதிகப்படாமல் டிவிடெண்டாகப் பிரித்துக்கொடுக்கலாம்.

(b) 1904-ம் ௵த்திய 10-வது இந்தியா ஆக்டுப்படி அர்பன் ஸொஸைடிகளாக ரிஜிஸ்டர் செய்யப்பட்ட பங்குகளோடும் வரையறுக்கப்படாத பொறுப்பையுடைய ஸொஸைடிகள் அவைகளின் பைலாக்களில் எப்படிச் சொல்லியிருக்கின்றனவோ அப்படியே லாபத்தைப் பங்கிட்டுக் கொடுக்கலாம். ஆனால் மேலே சொல்லியிருக்கும் விதமல்லாது மற்றப்படி நிகர் லாபத்தை அதிகமாகப் பிரித்துக்கொடுக்கப்படாது.

(c) இனாமாயளிக்கும் போனஸ் டிவிடெண்டையும் சேர்த்தால் மேலே (a) (b) பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் அளவுக்கு மிஞ்சிப் போகும்படி விடக்கூடாது. ஆனால் பங்குகளோடுகூட வரையறுக்கப்படாத பொறுப்பையுடைய ஸொஸைடிகளின் விஷயத்தில் ரிஜிஸ்டரார் அந்த ஸொஸைடியின் உத்தியோகஸ்தர்களுக்குப் பரிசாக சுமாராய்ப் பார்த்துக் கொடுக்கலாம்.

(d) பொறுப்பு வரையறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்படாத எதாவது ஒரு ஸொஸைடி இந்த ஆக்ட்டு பிரகாரமாவது அல்லது இப்பொழுதிருக்கும்படியான சட்டங்கள் பிரகாரமாவது அதின் லாபத்தின் ஒரு பாகத்தை மெம்பர்களுக்குப் பிரித்துக்கொடுக்கிறதாயிருந்தாலும் அப்படிப்பட்ட லாபத்தின் பாகத்தையாவது அல்லது அதில் ஒரு பாகத்தையாவது பொதுநன்மை பண்டுக்குப் போடுவதாயிருந்தால், அதின்பைலாக்களால் பொது நன்மை என்னும் பதத்தின் நோக்கத்தை நன்றாய்த் தெரிவிக்கவேண்டியது. அது 1890 ௵த்திய சாரிடபில் எண்டவ்மெண்டு ஆக்டு (தர்மங்களைப்பற்றிய ஆக்டு,) 2-வது செக்ஷனிற் சொல்லியபடி தர்ம காரியத்தைத் தவிர வேறொன்றும் இருக்கக்கூடாது.

X ஒரு ரிஜிஸ்ட்டரான ஸொஸைடியின் ரிஸர்வ் பண்டை இந்த ஆக்டின் செக்ஷன் 32-வது உட்பிரிவு 1. கிளாஸ் a, b, c, d, இவைகளில் சொன்னபடி டிபாஸிட் செய்யவேண்டியது.

XI ஆக்டின் 42-வது செக்ஷன் உட்பிரிவு 1-வது பிரகாரம் லிக்விடேட்டர் ஒருவரை ஏற்படுத்துவதாயிருந்தால் பின்வருமாறு நடத்தவேண்டியது, (a) நியமிப்பதை ரிஜிஸ்ட்-



ரார் போர்ட் ஸெண்ட்ஜார்ஜ் கெஜட்டுமூலமாய் பயிரங்கப்படுத்தவேண்டியது. (b) அந்த லிக்விடேடர் உடனே தனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அப்படி அந்த முறிவடைந்த ஸொஸைடி கொடுக்கவேண்டியவர்களுக்கு அந்த தேதி முதல் 3மாதத்திற்குள் அவரவர்களுடைய கணக்கை தன்னிடம் அனுப்பும்படி நோட்டிஸ் கொடுக்கவேண்டும். ஸொஸைடியின் கணக்குப்புஸ்தகங்களில் குறிப்பிட்டிருக்கிற கடன்களும் ஏற்கனவே அவரவர்களுக்குத் தெரிவித்ததாகவே நம்பவேண்டியது. (c) அந்தலிக்விடேடர் 3 மாஸத்திற்கொருதடவை ரிஜிஸ்ட்ராருக்கு அவர் வேண்டும் விதமாய் ரிபோர்டு அனுப்பவேண்டியது. (d) லிக்டேடர் வசம் இருக்கும் எல்லா திரவியத்தையும் தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கியிலாவது அல்லது ஸெண்டரல் கோஆப்ரேடிவ் பாங்கியிலாவது தன்னுடைய பேரில்கட்டவேண்டியது. (e) லிக்விடேடர் செய்யும் எந்த உத்திரவின் பேரிலும் அப்பீல் இல்லை. (f) கடன்களைத் தீர்த்தபிறகு முறிவடைந்த ஸொஸைடியின் மஹா சபையைக்கூட்டி அதில் தான் செய்த வேலைகளைச் சுருக்கமாகச சொல்லி ஸொஸைடி முறிந்து போனதற்குக் காரணங்களையும் எடுத்துரைத்து தன் கையில் பாக்கிப் பணம் ஏதாவது இருந்தால் அதை உபயோகிக்க வேண்டிய வழியைப்பற்றி அவர்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்து அந்தப்படி செய்யவேண்டியது.

XII (1) அந்த ஸொஸைடியின் அப்போதுள்ள மெம்பர்களுக்குள்ளாவது அல்லது பழயமெம்பர்களுக்குள்ளாவது அல்லது அப்போதுள்ள மெம்பர்களின் துவாராகவாவது அல்லது பழயமெம்பர்களிலிருந்து துவாராகவாவது பாத்தியதை கொண்டாடுகிறவர்களுக்குள்ளாவது அப்படிப்பட்ட நபர்களுக்கும் கமிட்டியாருக்கும் அல்லது உத்தியோகஸ்தர்களுக்கும் ஸொஸைடியின் விவகாரத்தைப்பற்றி சச்சரவு உண்டானால் அவர்களில் யாராவது ஒருவர் ரிஜிஸ்ட்ராருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவிக்கலாம்.

(2) அது கிடைத்தவுடன் ரிஜிஸ்ட்ரார் அந்த சச்சரவை தானாகவாவது தீர்க்கலாம் அல்லது அவர்கள் சம்மதித்தின் பேரில் ஒரு மத்தியஸ்தரை வைத்துத் தீர்க்கும்படி செய்யலாம். அல்லது ஒரு மத்தியஸ்தர் தன்னால் நியமிக்கப்பட்டும், சச்ச

ரவு செய்யும் ஒவ்வொரு நபர்களாலும் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு மத்தியஸ்தருமாகிய, 3 பேர்களைக்கொண்டு தீர்க்கலாம்.

(3) பிரமாண வாக்குமூலம் வாங்கும் படிக்கும், அந்த சச்சரவில் சம்மந்தப்பட்ட எல்லா நபர்களும் தாங்கள் குறிப்பிடும் காலத்தில் தன் முன்பாக ஆஜராகும்படிக்கும், சாக்ஷிகள் ஆஜராகும்படிக்கும், அந்த வியாபார சம்மந்தமான புஸ்தகங்கள் தஸ்தவேஜிகள் முதலியவற்றை தங்களிடம் கொண்டுவரும்படிக்கும், ரிஜிஸ்ட்ரார், மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் உத்திரவு செய்ய அதிகாரமிருக்கவேண்டும்.

(4) அந்த சச்சரவுகளைப்பற்றி நபர்கள் சொல்லும் வாக்கு வாதங்களையும், சாக்ஷிகள் சொல்லுகிறவைகளையும், தஸ்தவேஜிகளின் ருஜுக்களையும் கேட்டுத்தெரிந்துகொண்டு ரிஜிஸ்ட்ரார் அல்லது மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் ஒரு தீர்மானத்தைச் செய்யவேண்டியது. மத்தியஸ்தர்கள் அநேகம் பேர்கள் இருந்தால், மெஜாரிடியின் அபிப்பிராயமே மேலாகும்.

(5) அப்படிச் செய்யப்பட்ட தீர்மானத்தின்மேல் அதின் எல்லைக்குள்ளிருக்கும் ஸிவில் கோர்டுக்கு மனு செய்து கொண்டால் அந்த கோர்டார் அதை ஒரு டிகிரி போல் பாவித்து நிறைவேற்றவேண்டும்.

XIII. ஒரு ஸொஸைட்டியின் ஒவ்வொரு மெம்பரும் இந்த ஆக்டின் 22-வது செக்ஷன் பிரகாரம் வேறொரு மனிதரை தனக்கு வார்ஸாய் நியமித்து அவருடன் தன் பங்கையாவது அல்லது பாத்தியத்தையாவது கொடுக்கும்படி செய்யலாம். அப்படிச் செய்யும் மெம்பர்கள் அடிக்கடி தன் கையால் எழுதி தெரிவித்து அப்பொழுதுக்கப்பொழுது அந்த நியமனத்தை மாற்றிக்கொள்ளலாம். அப்படிச்செய்யும் நியமனம் அவர் இறந்துபோய்விட்டால் பின்வருமாறு எழுதியிருந்தாலொழிய ஸொஸைட்டிக்கு பிரயோஜனப்படாது.

(1) அந்த வார்சு உரிமை தஸ்தவேஜை இறந்துபோனவன் இரண்டு சாக்ஷிகளோடு கையெழுத்துச்செய்திருக்கவேண்டும்.

(2) ஸொஸைடியில் ரிஜிஸ்டர் செய்வதற்கு ஏற்பட்ட புஸ்தகத்தில் வார்சு உரிமையை ரெஜிஸ்டர் செய்திருத்தல்.



(3) அப்படி நியமனம் செய்யப்பட்டவர் நிர்வாக சபையார்களால் வார்சுதாராகச் சேர்க்கப்பட்டு மெம்பராக வேண்டும்.

இறந்துபோனவருடைய பங்கையாவது அல்லது பாத்தியத்தையாவது குறிக்கும் தொகையை வரையறுக்கப்படாத பொறுப்பையுடைய ஸொஸைடியில் ஸெக்ஷன் 22 உட்பிரிவு 1-ல் கண்டபடி அவர் எடுத்திருந்த பங்கு அல்லது பங்குகளுடைய தொகைக்காக செலுத்தியிருப்பதென்று வைத்துக்கொள்ளவேண்டும்.

---

## ஷெடியூல்.

1912-ம் வருஷத்திய இந்தியா ஆக்டு III-ல் சொன்னபடி கோஆப்ரேடிவ் ஸொஸைடியை ரிஜிஸ்டர் செய்வதற்கு எழுதவேண்டிய பாரம்:

1. ஏற்படுத்தப் போகும் ஸொஸைட்டியின் பெயர்

2. ஸொஸைடி எந்த இடத்தில் ஸ்தாபிக்கப்படுகிறதோ அந்த கிராமம் அல்லது நகரத்திலுடைய (இருப்பிடம் ஜில்லா; தாலுகா அடுத்துள்ள ரயில்வே ஸ்டேஷன் அல்லது எல்லோருக்கும் தெரிந்துள்ள எதாவது ஒரு பெரிய இடத்திலிருந்து இவ்வளவு தூரம் என்பது).

3. ஸொஸைடியின் மேல் விலாசமும் (அதற்கு சமீபித்த தபாலாபீசுள்பட).

4. மெம்பர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாததா அல்லது வரையறுக்கப்பட்டதா.

5. மேற் கண்ட பெயரோடுகூடிய ஒரு ஸொஸைடியை ரிஜிஸ்டர் செய்வதற்காக அவரவர்களுடைய கையெழுத்தும் வயதும் தொழிலும் இருப்பிடமும் கீழே கூறப்பட்ட மனுதார்கள் கொடுத்த விண்ணப்பம்.

6. மனுதார்கள் ஒத்துக்கொண்டு கையெழுத்து செய்த பைலாக்களின் நகல் ஒன்றை மனுவோடு அனுப்பவேண்டியது.

குறிப்பு. சாதாரணமாக குறைந்தபக்ஷம் 10 மனுதார்களாவது இந்த மனுவிலும் பைலாக்களின் நகலிலும் கையெழுத்துப் போடவேண்டியது. அல்லது ஒரு ரிஜிஸ்தரான ஸொஸைடி மனுப் போடும் பக்ஷத்தில் அந்த ஸொஸைடிக்காக அதினால் நியமிக்கப்பட்ட யாராவதொருவர் அந்தமனுவிலும் நகலிலும் கையெழுத்துப் போடவேண்டியது.

(1)

குறிப்பு பைலாக்கள்

(2)

| நம்பர் | மனுதாரின் பெயர் | தகப்பனர் பெயர் | வயது | ஜாதி வகுப்பு | தொழில் | இருக்குமிடம் | மனுதார் பிரத்தியேக பாத்தியமுள்ள சொத்துக்கள் | அவரின் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

## திருநெல்வேலியில் ஐக்கிய முயற்சி

திருநெல்வேலி ஜில்லாவில், முதல் முதலில் அர்பன் சங்கமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது பாளையங்கோட்டை நகர நாணயச் சங்கமே! சில தாலுக்காக்களைப் பிரித்து இஜ்ஜில்லாவுடன் சேர்த்த வழியில் 5 சங்கங்கள் கோவில்பட்டி தாலுக்காவுடன் சேர்ந்தன. விளாத்திக்குளம் கிராம நாணயச் சங்கம் முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. அது முன்புபோல் அவ்வளவு நன்மையைத் தரும்படியாய் வேலை செய்யாமலிருந்தபோதிலும் திருப்திகரமாய் வேலை செய்து வருகின்றது. இப்பொழுது இந்த ஜில்லாவில் சுமார் 46 சங்கங்களேற்பட்டிருக்கின்றன. இவைகள் ஒதுங்கி ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலிருப்பதினால், ஓர் சங்கமானது மற்றொன்றின் நடவடிக்கைப்பற்றித் தெரியாமலிருக்கிறது. இவைகளைச் சேர்த்து ஐக்கிய முயற்சியின் நோக்கங்களை ஜனங்களுக்குள் பரவச் செய்வது ஜில்லா கரங்களில் வசிக்கும் படிப்பினர்களை பொறுத்ததாகும்.

பாளையங் கோட்டை அர்பன் நாணயச்சங்கத்தின் சென்ற வருஷ ரிபோர்ட்டிலிருந்து அஜ்ஜில்லாவின் ஐக்கியமுயற்சி அபிவிருத்தியை நன்கு அறியலாம். அந்த சங்கத்திற்கு ரூ.1,000 பொருமான சொந்தக் கட்டிடமொன்றும், ரூ100 மதிக்கப்பட்ட இரும்புப்பெட்டி ஒன்றுமிருக்கின்றன. அதில் 361 மெம்பர்களிருக்கிறார்கள்; அதின் சேர்ந்துள்ள பங்குதனம் ரூ5,879; மெம்பர்களல்லாதவர்களிடமிருந்து ரூ11,435—14—11, டிபாஸிட்டாகப் போடப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில், ரூ 23,969-ம் அதற்கு முந்தின வருஷத்தில் ரூ 16,568-ம் மெம்



பர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டன. எல்லாவகுப்பினர்களும் சங்கத்திற்சேர்ந்து கடன் பெறுகிறார்கள். நிர்வாக கமிட்டியார் கடன் கொடுப்பதில் கடனின் அவசியத்தை நன்கு விசாரித்தபிறகு உத்திரவு செய்கிறார்கள். சங்கத்தை அபிவிருத்திசெய்வதில் அவர்கள் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டுவருகிறார்கள். ஜில்லாவிலுள்ள ஐக்கிய முயற்சிக்காரர்கள் ஒன்றுகூடி முதல் ஜில்லா கோவாப்ரேடிவ் கான்பரென்ஸை நடத்துவதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

---

## ஹிஸ் எக்ஸலென்ஸி சென்னை கவர்னரும் தஞ்சாவூர் ஐக்கிய முயற்சிக்காரர்களும்.

மெஸ்ஸர்ஸ் ராவ்பகதூர் A. அண்ணுஸாமித்தேவர், V. A. வாண்டையார், ரெய் ஸாகிப் A. சேதுராமய்யர், S. G. கிருஷ்ண பிள்ளை, V. R. ஸ்ரீனிவாச அய்யங்கார், T. R. ஸ்ரீனிவாச அய்யங்கார், ஆகிய கனவான்களடங்கிய தஞ்சை ஐக்கிய முயற்சிக்காரர்களின் டெபுடேஷன் ஒன்று, ஹிஸ் எக்ஸலென்ஸி தஞ்சாவூரில் விஜயஞ்செய்யும் சமயத்தில், அவருடைய பேட்டியைக்காணக் காத்திருந்து, வல்லத்தில் கலெக்டர் பங்களாவில் கலெக்டர் துவாரராகப் பார்த்தார்கள். அப்பொழுது டெபுடேஷன் மெம்பர்களின் நிமித்தம், ம-ள-ள-ஸ்ரீ T. R. ஸ்ரீநிவாச அய்யங்காரவர்கள் குறைவுகளைத்தீர்ப்பதற்கான நற்பத்திரமொன்றை அவருக்கு வாசித்து, எலும்புகளை தூளாக்கி வயலெருவுக் குபயோகப்படும்படி கூட்டுமுயற்சிச் சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அதற்கு கவர்ன்மெண்டாரின் பூரணவுதவி வேண்டுமென்றும், இம்மாதிரி சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டிய காரணங்களுடன், எக்ஸலென்ஸி அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

கவர்னரவர்கள் இவைகளைப் பொறுமையுடன் கேட்டு, அவ்வித ஆலோசனை அநுபோகத்தில் சரிவர நடக்கமுடியுமா என்பதைப்பற்றி எல்லாருடன் கலந்து பேசினார். டெபுடேஷனின் நோக்கத்தைப்பற்றி மிகவு மிரக்கப்பட்டு, ஐக்கியக்கத்தின் அபிவிருத்தியின்பொருட்டு அநேகவித அசௌகரியங்களுடன் உழைத்துவரும் கனவான்களின் வேலைகளை மிகவும் புகழ்ந்தார்; ஆனால் இம்மாதிரி யோஜனை சித்திபெருவதில் அநேக யிடையூறுகளிருக்கின்றனவென்றும், ஐக்கிய முயற்சிக்காரர்கள், யெந்த விதத்திலும் கவர்ன்மெண்டாரினுதவியை நாடுதலைக்காட்டிலும் தங்களுதவியையும் தொழில் நடத்தும் விதத்திலேயும் சார்ந்திருப்பது நல்லதென்றும், எலும்புகள் யேற்றுமதி செய்யப்படுவதை இப்பொழுது நிறுத்துவது முடியாத காரியமென்றும், எலும்புகள் விற்கப்பட்டவர்களை மார்க்கட்டு விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்கும்படி கட்டாயப்படுத்துவது நியாயமல்லவென்றும், அவர் மறுமொழி கூறினார். அதினால் ஐக்கிய முயற்சிக்காரர்கள் அதைரியப்படாமல் தங்கள்காரியசித்திக்கு இன்னும் பிரயாசையுட னுழைக்கும்படி வற்புறுத்தினார்.

## மதராஸின் ஸெண்ட்ரல் பாங்கிகள்

### 1914-15௵த்தில் அவைகளின் அபிவிருத்தி

பின்வரும் ஸ்டேட்மெண்டு 30—6—1915-ல் மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கிகளின் அபிவிருத்தியை காட்டும்:—

| வரிசை நெ. | பாங்கியின் பெயர். | மெம்பர்களின் சங்கியை. | | பங்கு தனம். | கடன்களும், டிபாஸிட்டுகளும். | | | க்ஷேம நிதி. | வருஷ நிகரலாபம். | தொழில் தனம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தனி நபர்கள். | சங்கங்கள். | | மெம்பர்களால் | சங்கங்களால். | மற்றவர்களால். | | | |
| | | | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி ... | 305 | ... | 2,00,000 | 11,71,053 | 2,50,490 | 12,41,567 | 90,217 | 56,867 | 28,63,110 |
| 2 | திருச்சிருப்பள்ளி ஜில்லா ஸெண்டரல் பாங்கி ... | 48 | ... | 50,000 | 3,17,731 | 41,073 | 4,37,307 | 12,000, | 16,800 | 4,46,111 |
| 3 | மதுரை ராமனதபுரம் ஜில்லா ஸெண்டரல் பாங்கி | 70 | 154 | 43,458 | 1,19,028 | 1,78,100 | 3,25,199 | 4,110 | 7,579 | 6,69,815 |
| 4 | கோயமுத்தூர் ஜில்லா ஸெண்டரல் பாங்கி ... | 147 | 5 | 64,920 | 35,153 | 69,499 | 2,83,265 | 5,338 | 8,444 | 4,52,837 |
| 5 | தஞ்சாவூர் ஜில்லா ஸெண்டரல் பாங்கி ... | 136 | 73 | 23,875 | 83,343 | 27,649 | 1,64,926 | 1,315 | 3,144 | 2,99,793 |
| 6 | தென்கன்னடம் ஜில்லா ஸெண்டரல் பாங்கி ... | 85 | 50 | 9,570 | *1,44,768 | ... | ... | 578 | 1,951 | 1,54,338 |
| 7 | தேனுலி ஜில்லா ஸெண்டரல் பாங்கி ... | ... | ... | 6,120 | 2,950 | 59,000 | 27,889 | 483 | 414 | 1,05,959 |
| | மொத்தம். | 791 | 282 | 3,97,973 | 18,74,026 | 6,25,811 | 24,80,153 | 1,14,041 | 1,95,199 | 49,91,963 |

* சங்கங்களின் டிபாஸிட்டுகளும் சேர்ந்துள்ளன.



# மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியன், லிமிடெட்

## திருத்தப்பட்ட பைலாக்கள்

மதராஸ் பிரொவின்ஷியல் யூனியனது பின்வரும் திருத்தப்பட்ட பைலாக்கள் கூட்டுத்தொழில் முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரா ரால் அங்கீகரிக்கப்பட்டன:--

பைலா 7 (a):—பங்குகளெடுத்துக் கொண்ட 30 நாள்களுக்குள் பங்குதனத்திற்குச் செல்லவேண்டிய முதல் கெடுவைச் செலுத்த வேண்டும். மறுகெடுக்கள்களை அந்தந்த கோவாப்ரேடிவ்வருஷத்திற் குள் செலுத்தவேண்டும். மெம்பர்கள் அப்படி செலுத்தத் தவறி னால் மூன்றுமாத தவணைக்குள் ரூபாய் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு பைசா ஒன்று வீதம் வட்டி சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

பைலா 7 (e):—எந்த மெம்பரும் தான் சேர்ந்த 5 வருஷக்காலத் திற்குள் மெம்பரினின்றும் நீங்கமுடியாது.

பைலா 8:—மெம்பருரிமை நீங்குதல்.

ஏழாவது பைலா (e)க்கு உட்பட்டு, ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கமாயிருந்தால், அச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி, காரியதரிசி, கையொப்பத்துடன் யூனியன் காரிய தரிசிக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகுதான்.

பைலா 18.—நிர்வாக கம்மிட்டியாருக்கு, ஒன்று அல்லது அதிக மான காரியதரிசிகளை நியமிக்கவாவது அல்லது நீக்கவாவது அதிகார முண்டு. அவர்களின் வேலையும் வெகுமானமும் கம்மிட்டியாரால் அப் பொழுதுக் கப்பொழுது நிர்ணயிக்கப் படவேண்டும்.

பைலா 21.—யூனியன் நிகர்லாபத்தில் காலில் ஓர்பாகத்தை க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டியது. மெம்பர்களாற் கட்டப்பட்ட பங்கு முதலுக்கு 100-க்கு $3\frac{1}{8}$ வீதத்திற் கதிகப்படாமல் மீதியாகும் நிகர்லாபத்தில் டிவிடெண்டு கொடுக்கவேண்டும். அப்படி யும் நிகர்லாபத்தில் பாக்கி யெதாவதிருந்தால், அதை 20-வது ரூல்ப் படி, யூனியனது பண்டுகளாக கருதப்படும்.

# தணிக்கை யுத்திரவுகள்.

## திருச்சினாப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கியின் சென்ற வருஷத்திய தணிக்கை யுத்திரவு.

---

திருச்சினாப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கியின் சென்ற ஜூன் மாதத்துடன் முடிவுபெறும் வருஷத்தியக் கணக்குகளை சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தணிக்கை செய்தார். வரவு செலவு, லாபநஷ்டம், ஆஸ்திக்கடன், ஸ்டேட்மெண்டுகள் இவரால் கொடுக்கப்பட்டன:

2. சென்ற வருஷத்தில், அப்பாங்கியானது ரூ 16,799—15—8 நிகர்லாபத்தை யடைந்தது. அது பைலா 17—இன்படி பின்வருமாறு பிரிக்கப்படவேண்டும்:—

| | | | ரூ. அ. பை. |
|---|---|---|---|
| i. | க்ஷேமநிதி | ... | 4,199—15—10 |
| ii. | காரியதரிசிக்கு வெகுமானம் | ... | 2,099—15—11 |
| iii. | டிவிடெண்டு, போனஸ் இவைகளுக்குக் கொடுபடவேண்டிய தொகை. | } | 10,499—15—9 |

இந்த க்ஷேமநிதியை மதுராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் டிபாஸ்ட்டு செய்யும்படியாய் இப்பாங்கியைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. பாங்கியானது ஏற்பட்ட 6 வருஷகாலமாய் திருப்தியாய் வேலை செய்து வருகின்றது. பாங்கியின் அக்கிரா சனாதிபதியாகிய ம-ா-ா-ஸ்ரீ R. K. பிரசன்ன வெங்கிடேசராவ் அவர்களும், காரியதரிசியாய் இப்பொழுதும் முழுநாள் வேலை செய்து வரும் ம-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் Y. நாராயணராவ் அவர்களும் மிகவும் சிரத்தை யுடனும் ஊக்கத்துடனும் உழைத்து வருதல் இப்பாங்கியின் அபிவிருத்திக்கு முக்கிய காரணமாகும்.

சென்ற வருஷத்தில் நிர்வாக கம்மிட்டியாரின் மீட்டிங்குகள் மூன்று மாத்திரம் நடைபெற்றதினால், இனிமேல் பாங்கியானது அதிக மீட்டிங்குகளைக்கூட்ட முயலுமென்று அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார் நம்புகிறார்

4. பாங்கியானது வரவரப்பிரபலமாயும், டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்து விழும்படி கவர்ந்தும் வருகின்றது.

---



## மதுரை ராமனாதபுரம் ஸெண்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின் தணிக்கை யுத்திரவு.

மதுரை ராமனாதபுரம் ஸெண்ட்ரல் பாங்கியின் 30—6—1915 தேதியுடன் முடிவுபெற்ற கோவாப்ரேடிவ் வருஷத்தியக் கணக்குகள், சீப் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ணஸாமி அய்யரவர்களால் தணிக்கை செய்யப்பட்டன. வரவு செலவு, லாபநஷ்டம், ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டுகள் வழக்கம்போல் அவரால் கொடுக்கப்பட்டன.

2. பிரஸ்தாபிக்கும் வருஷத்தில், பாங்கியானது ரூ. 7,578-14-6 நிகர்லாபத்தை யடைந்தது. அது பின்வருமாறு பகுக்கப்படவேண்டும்:—

| | | | |
|---|---|---|---|
| (a) | க்ஷேமநிதி | ... | 1,894—11—8 |
| (b) | காரியதரிசிக்கு வெகுமானம் | ... | 947—5—10 |
| (c) | சங்கபரிசோதனை செய்வதற்கு வேண்டிய தொகை | } | 947—5—10 |
| (d) | டிவிடெண்டு, போனஸ், இவைகளுக்குக் கொடுபடவேண்டிய தொகை | } | 3,789—7—2 |

3. பங்குக்காரர்களுக்கு 9 விதமாக டிவிடெண்டு கொடுக்கும்படி பாங்கிக்கு யோஜனை சொல்லப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப வருஷத்தில் ரூ.1,82,940-13-7-ம், அதற்கு முந்தின வருஷத்தில் ரூ 2,57,575-3-5-ம், சங்கங்களுக்குக்கடன் கொடுக்கப்பட்டன. வசூலாகாத கடன் தொகைகள் பிரஸ்தாப வருஷத்தில் ரூ 36,318-ம், அதற்கு முன் வருஷத்தில் ரூ 70,050-ம், ஆகும். பிரஸ்தாப வருஷத்தில் நிர்வாக கம்மிட்டியாரின் மீட்டிங்குகள் ஐந்து கூட்ட முயன்றார்கள். ஆனால் கோரமென்று சொல்லக்கூடிய கம்மிட்டி மெம்பர்களின் சங்கியையில்லாததினால் மூன்று மீட்டிங்கள் தான் நிறைவேறப்பட்டன.

4. பாங்கியானது ஒழுங்காய் அபிவிருத்தியடைந்து வருகிறது. காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ ரேய் ஸாகிப் K. இராமஸ்வாமி அய்யர் அவர்களின் மனப்பூர்வமான உழைப்பானது இப்பாங்கியின் நற்பயன்களுக்குக் காரணமாகும். இவர் சில கிராம நாணயச்சங்கங்களை பரிசோதனையும் செய்திருக்கிறார். இக்காரியதரிசி உடம்பு அசௌக்கியமாயிருக்கும் காலத்து வேலை செய்த ம-ா-ா-ஸ்ரீ C. ஸ்ரீனிவாச ராவ் ஸாகிப் அவர்களின் ஊக்கமும் வேலையிலுள்ள சிரத்தையும் மிகவும் புகழத்தக்கதே.

---

## தென்கன்னடம் ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கியின் தணிக்கை *யுத்திரவு

தென்கன்னடம் ஜில்லா கோவாப்ரேடிவ் பாங்கியின் சென்ற ஜுன் 30 தேதியுடன் முடிவுபெற்ற கோவாப் ரேடிவ் வருஷத்தியக் கணக்குகளை சீப் இன்ஸ்பெக்ட்டர் ம-ா-ா-ஸ்ரீ C. N. கிருஷ்ஸ்வாமிணஅய்யரவர்கள் தணிக்கை செய்தார். வரவு செலவு, லாபநஷ்டம், ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. பிரஸ்தாப வருஷம் அப்பாங்கி வேலைசெய்யும் இரண்டாவது வருஷமாகும். பங்கு யெடுத்துக்கொண்ட சங்கங்களின் சங்கியை 33-லிருந்து 50-க்கு அதிகரித்தது. புதிதாக 4 நபர்கள் மெம்பர்களானார்கள். இதுவரையிற் செலுத்தப்பட்ட பங்குதனம், சங்கங்களால் ரூ. 2,450-ம், தனி நபர்களால் ரூ. 7,120-ம் ஆகமொத்தம் ரூ. 9570க்கு சேர்ந்திருக்கிறது. மெம்பர்களின் டிபாஸிட்டுத் தொகை ரூ. 8,774 லிருந்து ரூ. 13,036க்கும், மெம்பர்களல்லாதவர்களின் டிபாஸிட்டுத் தொகை ரூ. 46,937-லிருந்து ரூ. 1,2,3,167-க்கும் அதிகரித்தன. பிரஸ்தாப வருஷத்தில் கடன் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 1,23,167 ஆகும். அதில், ரூ.80,990 சங்கங்களுக்கும் ரூ. 2,227 மெம்பர்களுக்கும் ரூ 31,950 ஸெண்ட்ரல் பாங்கிகளுக்கும் கடன் கொடுக்கப்பட்டன. வருஷக் கடைசியில் பாக்கியாய் நிற்கும் கடன் தொகை மெம்பர்களிடமிருந்து வரவேண்டியது ரூ.1,497, சங்கங்களிடமிருந்து வரவேண்டியது ரூ. 1,16,854, ஸெண்ட்ரல் பாங்கிகளிடமிருந்து கொடுபடவேண்டியது ரூ. 31,950.

3. பிரஸ்தாப வருஷத்தில் பாங்கியானது ரூ. 1950—15—6. நிகர் லாபத்தைப் பெற்றது. அது பைலா 26-ன்படி பின்வருமாறு பிரிக்கப்படவேண்டும்:—

| | ரூ. அ. பை. |
|---|---|
| க்ஷேமநிதி | ... 487—11—11 |
| காரியதரிசிக்கு வெகுமானம் | ... 243—13—10 |
| சங்க மேல் விஜாரணை செய்வதற்கு வேண்டிய நிதி | ... 243—14—0 |
| மெம்பர்களுக்கு டிவிடெண்டாகக் கொடுபட வேண்டிய பாக்கித்தொகை | ... 975—7—9 |

மதுராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கியில் இதுவரையிற் கட்டப்பட்ட க்ஷேமநிதிக்கு வரவேண்டிய வட்டியாகிய ரூ. 2—14—3 போக பாக்கித்தொகையாகிய ரூ. 484—13—8 வை, மேற் கூறிய பாங்கிலேயே டிபாஸிட்டு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்பொழுதிருக்கும் அதின் மொத்த க்ஷேமநிதி ரூ. 578—2—3 ஆகும்.



4. மெம்பர்கள் தங்களுக்குள் பிரிக்கப்படும் தொகையின்படி 9-வீத டிவிடெண்டைப் பெறுவார்கள். ஆனால் இப்பொழுதிருக்கும் பாங்கியின் நிதியை யுத்தேசித்து 7-வீத டிவிடெண்டைக்கொடுக்கும்படியும், பின்பு நிதிகள் அதிகரிக்குந்தோறும் அவ்வீதத்தை யுயர்த்தலாமென்றும் அப்பாங்கிக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

5. பிரஸ்தாப வருஷத்தில் பாங்கியானது தன்செலவில் சூப்ரவைசர் ஒருவரை நியமித்துக் கொண்டது: சூப்ரவைசர் மற்றுமொருவரை ஏற்படுத்திக்கொள்ள மேலுத்திரவை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. சூப்ரவைசர் சங்கபரிசோதனைசெய்வதைத் தவிர, வைஸ்பிரசிடெண்டும் காரியதரிசியும் பிரஸ்தாப வருஷத்தில் 32 சங்கங்களை மேற்பார்வையிட்டார்கள். பாங்கியின் டைரெக்ட்டர்களினதும், விசேஷமாய் ம-ா-ா-ஸ்ரீ M. ஷிவராவ், ம-ா-ா-ஸ்ரீ M. ஆனந்த ராவ், இவர்களினதும் ஒழுங்கான நிர்வாகத்தினால் பாங்கியானது மிகவும் திருப்திகரமாய் வேலை செய்து வருகின்றது. பாங்கியிற் சேர்ந்துள்ள சங்கங்களை மிகவும் ஜாக்கிரதையுடன் மேல் விஜாரணை செய்ததற்கு அவர்களுக்கு வந்தனமளிக்கவேண்டும். விவசாயச்சங்கங்கள் வாங்கப்பட்ட கடன் தொகையில், 100-க்கு 2 வீதந்தான் வருஷக் கடைசியில் பாக்கியிருந்தது. அந்த ஜில்லாவில் நடைபெறும் கூட்டுமுயற்சி முறையின் ஒழுங்கைப்பற்றி ரெஜிஸ்ட்ராரவர்கள் மிகவும் சந்தோஷிக்கிறார்.

---

## ரெஜிஸ்ட்ராரின் ஸர்க்குலர்

17-3-15-தேதியில் பிரசுரிக்கப்பட்ட இந்த ஆபீஸ் ஸர்க்குலர் 1915ஆடுத்திய நம்பர் 334-க்குத் தொடர்ச்சியாக, ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்டுமெண்டு இன்ஸ்பெக்ட்டர் ஜெனரலால் 29-3-15-தேதியில் வெளியிடப்பட்ட 144 நம்பரின் பின் வரும் குறிப்பை எல்லாக் கோவாப்ரேடிவ் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்ட புத்திமதிகள் பத்திரங்களை அச்சடிக்கும் பொழுதும் ரெஜிஸ்ட்டர் செய்யும் பொழுதும் உபயோகப்படும்.

இன்ஸ்பெக்ட்டர் ஜெனரல் ஆனரபில் மிஸ்ட்டர்
C. M. ஷிமிட்ஸ் அவர்களின் பிரொஸீடிங்ஸ்.

144-வது நம்பர் உத்திரவு 1915ஆடு மார்ச்சு மாதம் 29-தேதி

2. 114-வது விதியின்படி பத்திரங்களை ரெஜிஸ்ட்டர் செய்வதற்கு சங்கங்கள் உபயோகப் படுத்தும் பாரங்கள் விஷேமாய் கூட்டுத்

தொழில் முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராவர்களைக் கலந்து கொண்டு பின்வருபவனபடி தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன:—

i. லெங்காஷயர் லெட்ஜர் (பேரேடு புஸ்தகம்) கடிதத்தை யாவது அல்லது அதற்கு சமமாய் நாள் தாங்கக்கூடிய கடிதத்தையாவது உபயோகப் படுத்தவேண்டும்.

ii. கடிதத்தின் ஓர் பக்கத்தில் மாத்திரம் பத்திரங்களை யெழுதவேண்டும், ஏனென்றால் மறு பக்கத்தில் எண்டார்ஸ்மெண்டுகள் எழுதவேண்டியிருக்கும்.

iii. ஒவ்வொரு அச்சடிக்கப்பட்ட காகிதத்திலும் இடது பக்கத்தில் 2 அங்குல்மும், தலப்பில் $1\frac{1}{4}$ அங்குலமும், அடியில் $\frac{3}{4}$ அங்குலமும், மார்ஜின் விடவேண்டும்.

iv பத்திரமெழுதும் பொழுது நபர்களின் பெயர்கள், சொத்தின் விபரங்கள், முதலியவைகளைத் தெளிவாய் குறிப்பிடவேண்டி விசாலமாய் இடங்கள் விடவேண்டும்.

3. எந்த ஐக்கிய முயற்சிச் சங்கமானது 114-வது விதியின் நிபந்தனைகளை உபயோகப்படுத்தவேண்டுமென்று ஸ்தல ஸப் ரெஜிஸ்ட்ராருக்குத் தெரியப் படுத்தினால், அவர் அந்த ரூல் தன் ஆபீஸிலும் அமுலுக்கு வரும்படி ஜில்லா ரெஜிஸ்டாரின் மூலமாவாய் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்திரவை உடனே கோருவதுடன், ஒன்று, நான்கு, புஸ்தகங்களில் அப்பொழுதேயும் அவ்வருஷ காலத்திற்குள்ளேயும் ரெஜிஸ்டர் செய்யப்படும் பத்திரங்களின் சங்கியைகளை விவரமா யெழுதவேண்டும். இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்திரவு கிடைத்தவுடன் ஜில்லா ரெஜிஸ்ட்ரார் அந்த ஸப்ரெஜிஸ்ட்ராரபீஸுக்கு வேண்டிய புஸ்தகங்களை அனுப்புவார். சங்கங்கள் தங்கள் பத்திரங்களை தாகல் செய்யலாமென்று உடனே ஸப்ரெஜிஸ்ட்ரார் அவைகளுக்குத் தெரிவிக்கவேண்டும்.

4. ரெஜிஸ்ட்டர் செய்யும் உத்தியோகஸ்தர்கள் அந்த ரூலின் 2-வது பிரிவினையிற் கூறபட்டுள்ளவைகளை கவனித்து ஆபிஸில் ரிகார்டு செய்யவேண்டிய காபியிலுள்ள காலியிடங்கள் ஆபிஸ் சிப்பந்திகளால் பூர்த்தி செய்யப்படும். ரெஜிஸ்ட்டர் செய்பவரவது அல்லது அவர் பிரதிநிதியினது கையொப்பத்தையாவது அல்லது கைக்குறியையாவது ஒவ்வொரு பக்கத்திலும் வாங்குகிறதைப்பார்த்தும் வரவேண்டும். மேற் கூறப்பட்ட காலியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டாலொழிய ரெஜிஸ்ட்டர் செய்பவர்கள் கையொப்பம்போட மாட்டார்களாகையால் அவர்களை அதிக நேரம் கார்க்க வைக்காமல் மற்றப் பத்திரங்களுக்கு முன்னதாக யிவைகளை ரெஜிஸ்ட்டர் செய்ய



வேண்டியது. காபியில் கையொப்பம் போடும்பொழுதும், எண்டார்ஸ் செய்யும் காலத்திலும், காலியிடங்களை பூர்த்தி செய்யும் பொழுதும் ரெஜிஸ்ட்டர் பண்ணுவதற் கேற்பட்ட பிரத்தியேக மையைத் தவிர வேறு மையை யுபயோகப்படுத்தக்கூடாது.

---

## திருவாங்கூரில் ஐக்கிய முயற்சி.

ம-ள-ள-ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் அவர்கள் திருவாங்கூர் திவான் வேலையை விட்டுவிடுவதற்கு முன்பு ஏற்படுத்தின சட்டங்களுள் ஒன்றாவது, ஐக்கிய முயற்சிச் சங்கங்களைப் பற்றியதாகும். சென்னை ராஜதானியிலுள்ள கோவாப்ரேடிவ் சங்கங்களின் முதல் ரெஜிஸ்ட்ராரும், தென்னிந்தியா பெருமையடையும்படியான மிகவும் வைராக்கியமுள்ள ஐக்கிய முயற்சிக்காரருமான ம-ள-ள-ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் அவர்கள், இந்தியா ஜனங்களின் நன்மையின் பொருட்டு யேற்படுத்தப்பட்ட ஐக்கிய முயற்சி இயக்கத்தில் தமக்குள்ள நுண்ணிய அநுபோகங்களைக்கொண்டு, மேற்குக் கடற்கரையில் வசிக்கும் ஜனங்களது மருமக்கள் தாயம் சட்டத்தினாலும், அவர்கள் தனித்தனியாய் குடியிருந்துவரும் தன்மையினாலும் திருவாங்கூரில் ஐக்கிய முயற்சிக்கு யேற்படும் இடையூறுகள் காலக்கிரமங்களில் நிவர்த்தியாகுமென்று எண்ணி அச்சட்டத்தை யேற்படுத்தினார். 1912ஸ்ரீ வருஷத்திய இந்தியா ஆக்டு 2-வதுக்கு சரியாக, ஆகட்டு ஒன்று திருவாங்கூரில் உண்டாக்கப்பட்டு 1914ஸ்ரீ வருஷம் ஏப்ரல் 4 தேதியில் சட்ட புஸ்தகத்திற் சேர்க்கப்பட்டது. அடுத்த மார்ச்சு மாதத்தில், ஸ்டேட் உத்தியோகஸ்தர் ஒருவர் சென்னை ரெஜிஸ்ட்ராரிடம் பழகும்படி அனுப்பப்பட்டு, அவர் சென்ற ஆகஸ்டில் திரும்பி வந்து, சப்டெம்பர் கடைசியில் வேலையை ஆரம்பித்தார்.

திருவாங்கூர் ரெஜிஸ்ட்ரார் முதல் முதலில் வேலை செய்ததாவது.—ஆரம்ப முதலிலிருந்து கவர்ன்மெண்டாரின் பணமுதவியை யெதிர்பாராமலிருக்கும் வண்ணம், திருவனந்தபுரத்திலேயே ஸெண்ட்ரல் பாங்கி யொன்றை ஸ்தாபித்தார். அப்பாங்கியில் தனி நபர்களும், கிராமச்சங்கங்களும் மெம்பர்களாகலாம். பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம், 1,000 பங்குகளடங்கிய ரூ 1,00,000 அதின் மூலதனமாகும். அது இப்பொழுது தனி நபர் மெம்பர்களின் நிர்வாகத்திலிருந்து வருகிறது. இது ஸ்தாபிக்கப்பட்ட 15 நாள்களுக்குள் ஓர் நாணயச்சங்கமேற்படுத்தப்பட்டது. இவ்விதம் வேலை நடந்து வந்தால் திருவாங்கூரில் ஐக்கிய முயற்சி சீக்கிரம் அபிவிருத்தியடைவதில் ஆஷேபணையில்லை.

## விளம்பர விகிதங்கள்.

---

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

### மற்றவர்களுக்கு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

---

## சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

---

சந்தாதார்கள் தயைகூர்ந்து இச்சம்புடம் ஏழுக்குள்ள சந்தாவை பாக்கியுடன் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தா செலுத்தப்படாமலிருந்தால் அடுத்த பிரதியின் புஸ்தகமானது வி. பி. மூலமாயனுப்பப்படும்.

இப்படிக்கு,
காரியதரிசி,
மதராஸ் பிரோவின்ஷியல் கோவாப்ரேடிவ்
யூனியன் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி.

OFFIC... -JUL 1916 ... MADRAS.


# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாப்ரேஷன்

என்னும்

## சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

சம்புடம் VII] 1916௵ மார்ச்சு௴ [இலக்கம் 3


காலஞ்சென்ற திவான் பகதூர்

## M. ஆதிநாராயணய்யா காரு.

சென்ற மார்ச்சுமாதம் 17தேதியில், தண்டியார்பேட்டை தமது கிரகத்தில், 69-ம் வயதில், திவான் பகதூர் M. ஆதிநாராயணய்யா அவர்கள் இறந்துபோனதைப்பற்றி நாம் மிகவும் விசனிக்கிறோம். சிறு பிராயத்தில் கவர்ன்மெண்டு உத்தியோகத்திற் புகுந்து, தம்முடைய ஊக்கத்தினால் பெரிய உத்தியோகத்தையடைந்து, பிறகு பின்சின் வாங்கிக்கொண்டவுடன், நம் தேசத்து பொதுஜன நன்மைக்கு உழைத்துவந்தார். ஐக்கிய முயற்சி விஷயமாய் அவர் சிரமப்பட்டதை நாம் இங்கே விரிவாய்க்கூறுவோம். இந்த ராஜதானியில் கூட்டுமுயற்சிச் சங்கம் முதல்முதலில் யேற்படுத்தப்பட்டது அவர் கிராமத்தில். அச்சங்கமானது இன்னும் 1-வது நம்பரை வகித்துவருகின்றது. அவருதவியால் அச்சங்கம் யேற்பட்டு, அதற்கு பிரஸிடெண்டானார். அதுமுதல் அவர் இறந்துபோகும் தருணம் வரையில், கூட்டு முயற்சி விஷயத்தில் தம் ஆவல் குறையாமல் வேலைசெய்து வந்தார். எந்த ஐக்கியமுயற்சி கான்பரென்ஸிலும் அவர் ஐக்கிய முயற்சிக்காரர்களுக்கு முக்கிய விஷயங்களில் ஆலோசனை சொல்வதையும், அதை ஒழுங்காய் முடிவதில் பிரயத்தனப்படுவதையும் நன்றாய்ப் பார்க்கலாம். ஐக்கியமுயற்சி மூலமாய் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பது அவருடைய கோரிக்கை. 1914௵த்தில் இவர் மற்ற கனவான்களுடன் தென் ஜில்லாக்களில் சுற்றிப்பிரயாணம் செய்து, விவசாய விஷயமாய்ப் பிரசங்கம் செய்து, விவசாய கூட்டுமுயற்சிச் சங்கங்களை யேற்படுத்தினார். ஸெண்ட்ரல் அக்ரிகல்சரல் கம்மிட்டி முடிவடைந்தவுடன், இவர்

சிரமப்பட்டு அதின் சொத்துக்களை மதராஸ் பிரொவின்ஷியல் யூனியனுக்குக் கொடுக்கும்படி செய்தார். பிரொவின்ஷியல் யூனியன் ஏற்பட்டதுமுதல் இவர் பிரசிடெண்டாயிருந்தார். இவ்யூனியனைத் தகுந்த ஸ்திதியில் வைக்கவேண்டுமென யெண்ணியிருந்தார். அவருடைய சுயநலம் பாராத செய்கையை எல்லா ஐக்கியமுயற்சிக் காரர்களும் உதாரணமாக வைத்துக்கொண்டு, பொதுநன்மைக் குழைப்பார்களென நம்புகிறோம்.

---

### காலஞ்சென்ற ராவ்ஸாகிப்

## K. விஜயராகவாசாரியர் M.A.

மற்றுமொரு விசனகரமான காரியம்,—ராவ்சாகிப் K. விஜயராகவாசாரியார் இறந்துபோனது. இவர் கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டு ஏற்பட்டதுமுதல், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராராய் வேலை செய்துவந்து, பின்பு இறந்துபோகும்பொழுது நிஜாம் ராஜியத்தில் கூட்டுமுயற்சிச் சங்கங்களுக்கு ரெஜிஸ்டிராரா யிருந்தார். இவர் யாதொரு சங்கமும் முறிவடையும்படி விடவில்லை யென சொல்வது வழக்கம்.

---

## ஐம்பது வீத க்ஷேமநிதி சட்டம்.

ம-ள-ள-ஸ்ரீ ஆனரபில் V. S. ஸ்ரீனிவாசசாஸ்திரி
அவர்கள் எழுதியது.

லேவாதேவி செய்யும் பாங்கிகளின் பங்குக்காரர்கள் தாங்கள் செலுத்தியிருக்கும் பங்குமுதலுக்கு வருஷ டிவிடெண்டை அதிகமாய்ப் பெற நினைப்பது ஸகஜமான தவறு என்பதிற் சந்தேகமில்லை. இத்தவறு ஓர்வித கட்டுப்பாட்டுள் இல்லையாகையில், பணமுதவும் ஸ்தாபனங்களுக்கு அநேகவிதங்களில் கஷ்டங்கள் நேரிடும். அவைகளில் முக்கியமானது க்ஷேமநிதியை ஒழுங்காய் சேர்க்காமையே! பணம் டிபாஸிட்டு செய்பவர்கள், க்ஷேமநிதியின் தொகையினுற்றான் பாங்கியின் சக்தியை விசேஷமாய் யறிகிறார்கள். பங்கு முதலானது, டிபாஸிட்டுத்தொகைக்குக் குறைவாயிருந்தபோதிலும், க்ஷேமநிதியைப் போல் மிகவும் முக்கியமானதாகும். இது ஸ்தாபனங்களுக்கு ஜீவனைக் கொடுத்தும்; அவைகள் வெவ்வேறு வழியில் அபிவிருத்தியுடையும் பொழுது தானும் அதிகரித்துக்கொண்டும் வரும். பங்குதனமானது அச்சாணிபோற் ஸ்தாபனங்களைத் தாங்கிக்கொண்டு வருதலால், டிபாஸிட்டுகளுக்காட்டிலும் பங்கு தனத்திற்கு 2-அல்லது 3-வீதம் ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்கிகளில் அதிக வட்டி கொடுக்கப்



படுகிறது. இந்நோக்கத்தைக் குறித்தே, கூட்டு முயற்சிச் சங்கங்களில் டிவிடெண்டுகள் 9-வீதம் வரையிற் போகலாமென்றும், ஆனால் டிபாஸிட்டின் வட்டியானது 6-லிருந்து 7 வீதத்திற்கு மேற் போகக்கூடாதென்றும் கவர்ன்மெண்டார் உத்திரவிட்டிருக்கிறார்கள். 9 வீத டிவிடெண்டை நிலை நிறுத்த நியாய வழிகள் தேடுவது சரியே. ஆனால் எல்லாச் சங்கங்களிலும் தற்காலத்தில் இம்மாதிரி செய்வது சாத்தியமல்ல; ஆனால் ஐக்கிய முயற்சிக்காரர்கள் தங்களாலியன்றமட்டும் இவ்விஷயத்தில் உதவி செய்ய வேண்டியது அவர்களின் கடமையாகும்.

நாம் ஓர் நல்ல செய்கையை உத்தேசித்தால், ஏற்கனவே யிருந்து வரும் நல்ல காரியத்தை யழித்தாவது அதை முடிக்க ஓர் வித ஆவலுண்டாகும். இம்மாதிரி விஷயங்களில் முடிவில் ஏற்படும் நற்பயன் ஒன்றுமிராது; சில வேளையில் கடைசியில் உண்டாக்கப்பட்டது மிகவும் பிரதிகூலமா யிருக்கலாம். நல்ல செய்கைகள் ஒன்றுக்கொன்று அழித்து விடாமல் நடு நிலைமையில் நிற்க செய்வதாயிருந்தால் மிகவும் யோஜனையும் அநுபோகமும் வேண்டும். க்ஷேமநிதியைச் சேர்த்துவருதல் நல்லதுதான்; இந்நன்மைக்காக சில சௌகரியங்களை விட்டுவிடலாம். ஆனால் எல்லாவற்றையும் விடமுடியாது. பங்குதனம் வரும் மார்க்கத்திற்கு யாதொரு தடங்கலுமிருக்கக் கூடாது. பொறுப்பு வரையறுத்த சங்கங்கள் தங்கள் வருஷ நிகர்லாபத்தில் சரிபாதி க்ஷேமநிதிக்குக் கொண்டுபோகவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்திரவுசெய்வதால், நியாயமான டிவிடெண்டுகூட பங்கு முதலுக்குக் கொடுபடாமற் போகின்றது. மதிராஸ் ஸெண்ட்ரல் பாங்கியையும், திருச்சினுப்பள்ளி ஸெண்ட்ரல் பாங்கியையும் தவிர, மற்றெந்த ஸெண்ட்ரல் பாங்கியிலும் பங்குக்காரர்களுக்கு 9 வீத டிவிடெண்டு கூட கொடுக்கமுடியாது. சிற்சில பாங்கிகள் 6 வீத டிவிடெண்டை யேற்படுத்தக்கூட கஷ்டமடைகின்றன. திருவல்லிக்கேணி ஸ்டோர்ஸானது, மெம்பர்களுள் வாங்கும் ஸாமான்களுக்கு டிவிடெண்டு கொடுப்பதாயிருந்தால், அதின் ஊழியருக்கு தவறும்படி சிப்பந்திகளைக் குறைத்து, பொது நன்மை நிதி சேர்ப்பதை விட்டு விடவேண்டியதா யிருக்கும். மற்ற நகரச் சங்கங்களில், சுமார் பாதி இதுவரையில் டிவிடெண்டை யேற்படுத்தவில்லை, மற்ற பாதி சங்கங்கள் 25 வீத க்ஷேமநிதி விதிப்படி சராசரி 8 வீத டிவிடெண்டை வெளியிட்டிருக்கின்றன. இனிமேல் இவைகளிற் பெரும்பாலும் டிவிடெண்டு குறைந்துவிடும்; சிலவைகளில் டிவிடெண்டே யிராது. ஏன் இவ்விதக் கடுமையான செய்கையை உண்டாக்க வேண்டும்? டிவிடெண்டு ஆசையைத் தடுப்பதற்கா? 9 வீதத்திற்குமேல் டிவிடெண்டு கொடுக்கக் கூடாதென்பதால் இந்நோக்கம்

கைகூடி விட்டதே. தீமையைத்தரும் மற்ற சட்டத்தை யேன் யேற்படுத்த வேண்டும்?

சட்ட நிரூபண சபையில் இவ்விஷயத்தைப்பற்றி தர்க்கிக்கும் பொழுதுதகுந்த மறுமொழி கொடுக்கவில்லை. கவர்ன்மெண்டார் சட்ட விதிகள் செய்யும்பொழுது ஓர்வித சகாயம் யேற்படுத்துவதாகத் தெரிய வருகிறது. அதாவது, ஓர் குறிக்கப்பட்ட டிவிடெண்டு வீதத்திற்குக் குறைந்த யிடங்களில், ரெஜிஸ்ட்ரார் இந்தப்புது விதியை ரத்துசெய்யலாமென்பதே! இதிற் சொல்லப்படும்வீதம் இவ்வளவெனத் தெரியவில்லை. ஆனால் 6¼ வீதமென்று அறிவதற்குக் காரணமிருக்கின்றன. கவர்ன்மெண்டார் ஸென்ட்ரல் பாங்கிகள் விஷயத்தை மாத்திரம் கருதுவதால் பங்கு முதலுக்கு 6¼ வீதம் அதிகமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். பங்கு தனத்திற்கும், டிபாஸிட்டுக்கும் யாதொரு வித்தியாசமும் காட்டாததாலும், இவைகளில் டிபாஸிட்டுகளுக்குமாத்திரம் தகுந்த ஜாமீன் யிருப்பதாலும், இவ்வித யேற்பாடு அங்கீகரிக்கத்தகுந்ததல்ல. ஐக்கிய முயற்சிக்காரர்கள் டிவிடெண்டையெதிர்பார்க்கக் கூடாதென சொல்லப்படுகிறது. இது, ஐக்கிய யியக்கத்தின் தன்மை நன்கறியாமையே! எளியவர்களை முன்னுக்குக் கொண்டுவருதல் இதின் நோக்கம். ஆனால் இது நடத்தப்படும் முறைகள் லேவாதேவி வியாபார வழிகளாகும். மதராஸ் கவர்ன்மெண்டார், இவ்வயிக்கிய இயக்கமானது தானே தன்னைக்காப்பாற்றிக் கொள்ளும்படி கூடிய சீக்கிரத்தில் வைக்க வேண்டுமென்று சொல்லுவதில் தளர்ச்சியடையவில்லை. சில கொடையாளிகளான தனிகர்கள் ஊதியத்தை கவனியாமல் பணமுதவலாம்; ஆனால் எப்பொழுதும் எல்லாவிடத்தும் யிருக்கமுடியாது. லேவாதேவி விஷயங்களில், பங்குக்காரர்களுக்கு டிபாஸிட்டர்களைக் காட்டிலும் கவரும்படியான லாபமிருக்கவேண்டும்.

கவர்ன்மெண்டார் இவ்விதியை ஊர்ஜிதப்படுத்தினால்,சில ஸென்ட்ரல் பாங்கிகள் தவிர, பாக்கியெல்லா விடங்களிலும், ரெஜிஸ்ட்ரார் இதை ரத்து செய்யும்படியாக யிருக்கும். சட்டத்தை உண்டு பண்ணி, ஏன் விசேஷமாய்த் தள்ளி வைக்கவேண்டுமென, சாமான்னிய ஜனங்கள் கேட்பார்கள். நினைப்பதற்கு மாறுபாடாக, கவர்ன்மெண்டார் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அறிய யாதொரு சிரமும் யெடுப்பதற்கு முன், அவசரமாய் இவ்விதியை யேற்படுத்திவிட்டார்கள். ஆனாலும் டிவிடெண்டானது 9 வீதத்திற்குக் குறைந்த யிடங்களில், இந்த சட்டத்தை நீக்கிவைக்கும்படி ரெஜிஸ்ட்ராருக்கு கவர்ன்மெண்டார் ஆலோஜனை சொல்லுவது சரியாகும்.



# கூட்டுறவு முறையும் சர்க்கரையும்.

ம-ள-ள-ஸ்ரீ T. S. சுப்பிரமணி அய்யர் B. B.A., B.L.L.T.
அவர்களெழுதியது.

அயல் தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு சர்க்கரை ஏராளமாக கப்பலேற்றப்படுகிறது. இது வருஷாவருஷம் நடந்து கொண்டு வருகிறபடியால் இறக்குமதி செய்கிறவர்களுக்கு லாபம் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதில் சிலவு எவ்வளவு ஆகியிருக்கவேண்டும்? கப்பல் சார்ஜு, இன்ஷ்யூரன்ஸ் சிலவுகள், ஏற்றுமதி செய்து கடல்கள் கடந்து இந்தியன் துறை முகங்களில் இறக்கி கிரயம் செய்து பணம் திரும்பி ஏற்றுமதி செய்த வியாபாரியின் கைக்குப்போய்ச் சேருகிறவரையிலுள்ள வட்டிவாசி சேதம் முதலிய நஷ்டங்கள் கூட ஈடாகும்படி அவ்வளவு மலிவாக அந்த அயல் தேசத்தில் சர்க்கரை செய்யமுடிய வேண்டும் என்பது திண்ணம். அங்கே அநுஸரிக்கப்படும் முறைகளில் முக்கியமானவை யாவை? ஜாவாத்தீவில் முக்கியமாய் கருப்பஞ்சர்க்கரை யுண்டாக்குகிறார்கள். அங்கே அவர்கள் செய்கிறதென்னவென்று பார்ப்போம்.

(1) கரும்புசாகுபடி செய்யவேண்டிய புலன்களை ஒரே இடத்தில் இருக்கும்படியாக பகுதிக்கு வாங்கி ஒன்றுசேர்க்கிறார்கள்.

(2) கரும்பைப் பிழிந்து சர்க்கரைகாச்ச கட்டிடங்களையும் யந்திரங்களையும் ஏராளமான முதல்போட்டு கட்டுகிறார்கள். கரும்பு சாகுபடியாகும் புலன்கள் இதைச்சுற்றி இருக்கும்படி செய்கிறார்கள்.

(3) தண்ணிபாச்ச துறவு, யந்திரங்கள் முதலியவற்றை தாராளமாக முதல்போட்டு ஸ்தாபித்து, தாமாஷாவில் தண்ணீர் பாச்ச புல்ன்களுக்கு சிலவுவீதம் குறைவாகும்படி பார்க்கிறார்கள்.

(4) கரும்புக்கு நோய்வராத வண்ணமும், வந்தால் நிவர்த்தி செய்யவும், கரும்பு செழிமையாய் ஸாராம்சத்துடன் வளரும்படி செய்யவும், கற்று அநுபோகமுள்ள சாஸ்திரிகளை தாராளமாக சம்பளங்கொடுத்து நியமிக்கிறார்கள்.

(5) கரும்பை அறுவடை செய்யுங்காலத்தில் துண்டாடி அந்தத் துண்டுகளை சர்க்கரை செய்யும் கட்டிடங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்க ஆகாசமார்க்கமாய் பெருமனுள்ள தந்திக்

கம்பிகளை ஏற்றிட்டு தொங்குக் கூடைகளையை தொங்கவிட்டு அதன்மூலமாய் இக்காரியத்தை நடத்துகிறார்கள்.

மேலே சொல்லியவாறு செய்யும் பட்சத்தில் முதல் அதிகமாகப் பிடிக்கும்—லட்சக் கணக்காக வேண்டியிருக்கும்—ஆனால் ஈவில் சிலவு விதம் நிரம்பக்குறையும். இதனால் நமது தேசத்தில் என்ன பிரயோஜனம்? வேண்டியமுதல் கரும்பு சாகுபடி செய்யக்கூடியவருக்குக் கிடையாதே—என்றாலோ, அதைப்பற்றித் தான் இப்பொழுது எழுதலானோம். கோவாபரேட்டிவ் முறைகளால் மேற்கூறிய காரியங்கள் இலகுவாக சாத்தியமாகும். பலதுளி பெருவள்ளம்.

கரும்பு சாகுபடியைப் பொறுத்திருக்கும் நிர்ப்பந்தங்கள் என்னவென்றால்:—

(1) விஸ்தீர்ணம் குறைவாக இருக்கக்கூடாது. ஒரு கிராமத்தில் குறைந்தபக்ஷம் நூறு ஏக்கராவுக்குக் குறையாமலிருந்தால் அதுபோதுமான கவனத்தைப்பெறும். மேலும் அப்பொழுதுதான் சிலவு மட்டுக்கட்டும். தண்ணீர் இறைக்க வேண்டியிருந்தால் 20—ஏக்கராவுக்கு என்ன செலவழியுமோ சற்றேறக்குறைய அவ்வளவுதான் 50—ஏக்கருக்கும் ஆகும். இன்ஜின்பூட்டி பம்பால் இறைக்க 50—ஏக்கராவாக இருந்தால் தாமாஷாவில் சிலவுமட்டுக்கட்டும்; 10 ஏக்கராவாக இருந்தால் தாமாஷாவில் ஏக்கருக்கு சிலவு விதம் ஜாஸ்தியாகிவிடும். கரும்பை அறுவடை செய்வதிலும், அதேமாதிரிதான். அறுவடை செய்யுங்காலத்தில் வெட்டி துண்டாடின கரும்பைக்கொண்டுவந்து சர்க்கரை காய்ச்சும்இடத்திற்குசேர்ப்பதற்குகட்டைவண்டிகள், ஜோடிமாடுகள் இவையெல்லாம் சித்தமாக இருக்கவேண்டியது. இந்தவிஷமான சிலவு விதம் விஸ்தீர்ணம் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக தாமாஷாவில் குறையும். கருப்பஞ்சாற்றைக் காய்ச்சி வெல்லம் அல்லது சர்க்கரையாக ஆக்குவதிலும் இதேகணக்குத்தான். ஒரு ஏக்கர் நிலத்தின் கரும்பாயிருந்தாலும் சர்க்கரைகாய்ச்சப் பணிக்கன் தான் வேண்டும், 10 ஏக்கர் இருந்தாலும் பணிக்கன் தான் வேண்டியது. சர்க்கரையோ வெல்லமோ காய்ச்சினபிறகு விற்பனை ஏற்பாடு செய்ய வேண்டிய சிலவுகள், தேகசிரமம் முதலியவை ஏக்கர் 10—ஆனாலும் ஒன்றுதான், 2—ஆனாலும் ஒன்றுதான். சொல்லப்போனால் சரக்கு ஏராளமாகஇருக்



கிறது என்றால் பெரிய வியாபாரிகள் லக்ஷியம் செய்துவருவார்கள்: சரக்குக்கு ஓர் மோகம் உண்டாகும்.

(2) விஸ்தீர்ணம் ஜாஸ்தியாக இருப்பதுடன் அது சில்லரையாக அங்கும் இங்கும் இறைந்திராமல் ஒரே இடத்தில் இருக்கவேண்டியது. இல்லாவிட்டால், தண்ணீர்பாய்ச்சவோ அறுவடைசெய்துகாய்ச்சுகிறவிடம் கொண்டுவரவோ, காவக்கார்க்கவோ, இவற்றுக்கெல்லாம் சிலவு அநேகமடங்கு அதிகரிக்கும். அதிலும் கோடைகாலத்தில் கரும்புக்குத் தண்ணீர்பாய்ச்சுகிறதென்றால் அதின்சிரமம் அனுபவித்தால்தான் தெரியும்.

(3) பூச்சி விழுவதாலும், நோய் வருவதாலும் வளருகிற கரும்புக்கு அநேக சத்துருக்களும் இடையூறுகளும் உண்டு. அவைகளை நிவர்த்தி செய்யவேண்டியதும், வராமல் கூடியமட்டில் தடுப்பதும் அவசியம். மேலும் கரும்பு நன்றாய் வளரும் பொருட்டும், சாற்றில் ஸாராம்சம் ஜாஸ்தியாக இருக்கும் பொருட்டும், காலமறிந்து பதமறிந்து எருவிடவேண்டும். சேதமாகாமல் சாறைப்பிழிந்து, கெட்டுப் போகாமல் வைத்திருந்து சர்க்கரையோ வெல்லமோ காய்ச்சத் தெரிந்தவரும் அந்நூலைக் கற்றவரும்வேண்டும். இவைகளில் எதிலாகிலும் சுஷ்க்கம் பண்ணினால் முதலுக்கே கேடுவந்துவிடும். "காணி ஆசை கோடி நஷ்டம்" என்பது நிஜமாகும். ஜாவா முதலிய சர்க்கரையுண்டாக்கும் இடங்களில் இதற்கு ஜாக்கிரதை செய்துவிட்டுத்தான் பிறகு கரும்பு சாகுபடி செய்ய யத்தனிக்கிறார்கள். ஜாவாவிலிருந்து சமீபத்தில் நமது தேசத்துக்கு வந்த ஐரோப்பிய கரும்பு சாகுபடி செய்பவர் ஒருவர் இப்பொழுது மேலே சொல்லப்பட்ட விஷயத்தைப்பற்றி கவனிப்பதாற்தான் தன்னூரில் சர்க்கரையுற்பத்தி முன்னுக்குவந்து கொண்டிருக்கிறது என்று கூறினார்.

(4) சர்க்கரைகாய்ச்சும் யந்திரங்கள் புதுயேற்பாட்டைச் சேர்ந்தவையாயிருக்கவேண்டும். இதிற் சோம்பி பழய வழிகளை விடமாட்டேனென்று அனுசரித்தால் நஷ்டத்துக்கே ஹேதுவாகும். விழக்கூடிய சாற்றில் பாதிதான் விழும்; கிடைக்கக்கூடிய சர்க்கரையில் பாதிதான் கிடைக்கும். போதுமா? லாபம்வந்து கடைத்தேறி விடலாமா?

(5) சர்க்கரைகாய்ச்சும் இடம் கரும்பு பயிரேறியிருக்கும் புலங்களுக்கு மத்தியில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வெட்டின புலத்திலிருந்து காய்ச்சுமிடம் கொண்டுவந்து சேர்க்கச் சிலவு ஜாஸ்தியாவதுடன், வெட்டி வெகுநேரம் புழியாமற் கடந்தால் புளிப்பேறிப்போய் சாற்றின் ஸாராம்சம் கெட்டுப்போகும்.

மேற்சொன்ன நிர்பந்தங்களைப் பார்த்தால் நமது தேசத்தில் குடிகள் எளியவர்களாதலால், கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை காய்ச்சுவது அசாத்தியம் போற்தோன்றும். ஆனால் இந்தகஷ்டங்கள் மலைபோலிருந்தாலும் கடுகுபோலாக்க ஒரு மகாமந்திரமிருக்கிறது: அதாவது கூட்டுறவு முறையேயாம்: ஒன்றொன்றாய் பார்ப்போம்.

(1) நிலவிஸ்த்தீர்ணம்: ஒருகிராமத்தில் நூறு குடிகள்சேர்ந்து தலைக்கு ஒரு ஏக்கராவைக் கொடுத்தால் காரியம் கைகூடும்,

(2) புலங்கள் சேர்ந்து ஒரே இடத்தில் இருத்தல்: இதுவும் குடிகள் ஒன்றுசேர்ந்தால் எளிதில்ஆகக் கூடியதுதான். தண்ணீர் பாய்ச்சவேண்டுமானால்நடுவில்ஏராளமாகத்தண்ணீர்ஊறும் தாவில் பெரிய கிணறு இறக்கி ஒன்று அல்லது இரண்டு எஞ்சின் பம்புபூட்ட வேண்டியதுதான். ரூபாய் பதினாயிரம் ஆனாலும் நூறுபெயர் களிருந்தால் தலைக்கு ரூபாய் நூறாகும்.

(3) பணிக்கருடையவும் சாஸ்திரியுடையவும் நியமனம்: இது அவசியம் வருஷத்துச் சிலவு ரூபா இரண்டாயிரம் ஆனாலும் அது தலைக்கு ரூபாய் இருபதுதானாகும்.

(4) இதற்கும் ஒருவிதமான கஷ்டமு மிருக்காது. இதில் முதலில் தான் சிலவு ஏராளமாகச் செய்யவேண்டி வரும். வருஷாந்திரச் சிலவு ஜாஸத்தியாக இராது. முதலில் செய்யவேண்டிய சிலவுகளுக்குக் கூடவாங்கும் இடத்தில் கடனாக வாங்கி நாளடைவில் கரைத்துவிட ஏற்பாடு செய்துவிடலாம். கவர்மெண்டைக் கேட்டாலும் இலகு வட்டிக்குக் கடன்கொடுக்க ஏற்பாடு செய்வார்கள். இல்லாவிட்டால் சென்ட்ரல் பாங்குகளில் வேண்டியபொருளுதவிக்கு ஏற்பாடு செய்யலாம்.

(5) இதுவும் (2)—ப்போல் இலகு வாகிவிடும்.

மேலே காட்டியபடி நாளைக்கே நாம் செய்து விடுவோமென்று சொல்லவில்லை. ஆனாலும் அந்தலயனில் ஆரம்பம் இப்போதே செய்யலாம். இப்போது நடைபெற்றுவரும் நம்முடைய சில வழக்கங்களை ஏன் மாற்றக்கூடாது. இவ்விடத்தில் சிறிய குடிகள் தலைக்கு அரை ஏக்கரா கரும்புசாகுபடிசெய்து, தன்னுடைய கரும்பை தானே ஆலையி



லடித்து தனியாக அடுப்புகட்டும் பணிக்கனைநியமித்து வெல்லங்காய்ச்சுகிறார்கள். அதினால் சிரமமும், அனாவசியமான சிலவுகளும் அஸாத்தியமாக இருக்கிறது. இப்படிசெய்யாமல் பின்வருமாறு செய்தாலோ? ஒரு கிராமத்தில் கரும்பு சாகுபடி செய்த பெயர்களெல்லாரும் தலைக்கு பத்து இருபது மூன்றுபோட்டு புலன்களுக்கு மத்தியில் ஒரு இடத்தில் ஆலையைப்போட்டு அடுப்பைக்கட்ட பணிக்கர்களை பொதுவில் நியமித்து, அவர் அவர் கரும்பை வெட்டிக்கொண்டுவந்துவெல்லம் காய்ச்சுமிடத்தில் போட்டு; கடைசியாக கிடைத்த வெல்லக்கணக்கின் பேரில் கிரயத்தை வாங்கிக்கொள்ளுவது நல்லது. இவ்விதம் ஆலையடித்துவெல்லம் காய்ச்சுவது முழுதலும் பொதுவாக குடிகளுடைய ஆழ்ச்சியிலேயே இருக்கும். ஆதலால் அதன் லாபத்திலும் குடிகளுக்கு பாகம் வரும்.

காய்ச்சின வெல்லத்தை கிரயம் செய்யவேண்டியபொறுப்பையும் அந்தக்குடிகளே கோவாப்ரேட்டிவ் முறைகளை அனுசரித்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதைப்பற்றி எழுத தனியே ஒரு வியாஸம் பிடிக்கும்.

## கிராமச் சங்கங்களின் பஞ்சாயத்து சபை.

திருவண்ணாமலை ம-ள-ள-ஸ்ரீ M. S சேஷாசலமய்யரவர்களெழுதியது.

நமது ராஜதானியிலுள்ள கிராமச்சங்கங்களும் நகரச்சங்கங்களும் சங்கங்களைச் சேர்ந்த எல்லா மெம்பர்களுக்கும் பிரதிநிதிகளாய் நியமிக்கப்பெற்ற நிர்வாக சபையர்களாக பஞ்சாயத்தாராலேயே நடைபெறுகிறது சங்கங்களின் அபிவிர்த்திக்கும் க்ஷீணதிசைக்கும் இச்சபையாரே உத்திரவாதிகள். ஆகவே இச்சபைகள் நியமித்தலும் பராமரித்தலுமே ஐக்கிய பான்மையை விர்த்திசெய்ய முயல்வோரின் நோக்கமாவதுடன் உத்திரவாதத்துடன் தெரிந்தெடுக்கப்பெற்ற பஞ்சாயத்தார்கள் தங்கள் பொறுப்புமித்தகைத்தென்பதையும் ஐக்கிய பாவம் பரவதாம்பின்னது செய்ய வேண்டுமென்பதையும் அறியவேண்டியாதலின் சிறிது விஸ்தரித்தல் நன்மையுடைத்து.

கிராமச்சங்கங்கள் பொறுப்புவரையறுக்கப்படாதவை, அதாவது சங்கத்திலுண்டாகும் நஷ்டங்களுக்கு சங்கத்தைச் சேர்ந்த எல்லா மெம்பர்களின் ஆஸ்திகளும் கூட்டும் தனிமையாயும் [illegible]தமாகிறது. இப்படி சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களின் [illegible]யெல்லாம் சங்கப்பொருளின் பொறுப்புக் கோக்கியும், சங்க நிர்வாக [illegible] பஞ்சாயத்தார் செய்யும் ஏற்பாடுகளின் பிரதிப்பிரயோசன[illegible] காங்களே செய்ததாக ஒப்புக்கொள்ளும் சங்கங்கள் தங்களுக்குப் பொறுப்பை

யேற்கும்படி நியமிக்கும் நிர்வாகிகர்கள் இத்தன்மையராயிருக்கவேண்டுமென நன்கறிய வேண்டியதவசியம்:—

பஞ்சாயத்தார்களை தெரிந்தெடுக்கும்பொழுது மற்றமெம்பர்கள் அடியிற்கண்ட விஷயங்களை கவனிக்கவேண்டும்:—

(1) தேர்ந்தெடுக்கப்படுபவன சங்கத்திலுள்ள எல்லா மெம்பர்களையும் சமமாக நடத்துபவராயும், பட்சபாதம், சுயநன்மை, மதத்வேஷம் முதலிய நடத்தைகளில்லாதவராயு மிருக்கவேண்டும்.

(2) மற்ற மெம்பர்கள் மரியாதையுடன் அவர் வார்த்தையை யேற்கக்கூடிய நிலைமையை யுடையவராயும் சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உண்டாகும் லாபநஷ்டங்கள் தனக்கே நேர்ந்ததுபோல் பாவித்து நடத்தக்கூடியவராயு மிருக்கவேண்டும்.

(3) வரையறுக்கப்படாத பொறுப்பை அவரிடம் பரிபாலிக்க ஒப்புக்கொடுத்திருக்க, அத்தகைய பெரு நம்பிக்கைக்கு நன்றியறிதலும் அப்பொறுப்புக்கெவ்விதமும் ஒரு கெடுதியும் நேராவண்ணம் காக்கக்கூடியவராயு மிருக்கவேண்டும்.

(4) மெம்பர்களிடம் தயாளமும் அன்பும் மனப்பூர்வமாயுள்ளவராயும் சங்கவிதிகளை வற்புறுத்துவதிலும் மெம்பர்களை நன்னடக்கைக்கு சீர்திருத்துவதிலும் கடின சித்தமும் கலங்கா தீர்மானமுடையவரா யிருக்கவேண்டும்.

(5) சங்கவிதிகளை அனுசரிப்பதினால் தனக்கு எதிர்பாராத கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் சலியாததிட சித்தமுடையவராயும் சத்தியந் தவராதவராயு மிருக்கவேண்டும்.

இத்தகையோர் ஒருவரிருவராவது ஒவ்வொரு கிராமங்களிலுமில்லாமலில்லை. ஆனால் சங்கங்கள் ஏற்படுங்காலங்களில் ஏற்படுத்துவர் இவைகளையறிய யியலாமலும் பஞ்சாயத்தாரா யிருக்கத்தகுந்தவர்கள் தங்களுக்கியற்கையாயுள்ள அடக்கம் என்னும் குணத்தினால் சங்கத்திற் சேரமனமில்லாமையாலும் சில சமயங்களில் சங்கங்களின் பராமரிப்பு பொறுப்பற்றவர்களிடம் கொடுபடப்படுகிறது. எந்த சங்கத்தில் பஞ்சாயத்தார் பொறுப்பற்றவர்களாய் நேரிடுகிறதோ அச்சங்கம் சில நாட்களில் இலாசா அதிகாரிகளுடையவும்பொதுஜனங்களுடையவும் மனதைக்கவரும்.

சங்கங்கள் ஏற்படும் காலங்களில் கடன்கோருபவர்கள் மாத்திரம் மெம்பராகச் சேருகிறார்கள். அவர்களுக்குள்ளேயே பஞ்சாயத்



தார்களை நியமிக்கவேண்டியிருக்கிறது. கிராமத்தில் பஞ்சாயத்தாராகயிருந்து நடத்துந் திறனுளோர் வெகுவாய் முதலில் சேருவதில்லை. பஞ்சாயத்தார் கிராமப் பொதுஜனப்பிரதிநிதிகளாக நன்கு மதிக்கப்படும்வரையில் கிராம சங்கங்களின் பஞ்சாயத்தார்கள் அவ்வளவு சிலாக்கிய முள்ளவர்களை யுடையது பெரும்பாலுமரிது. ஆகவே படிப்பினர்களை லகுவில் ஏற்கக்கூடாதவும் பொறுப்பை யுணருஞ் சக்தியற்றவருமான அங்கத்தினர்களே சாதாரணமாய் பஞ்சாயத்தார்களாய் ஏற்கப்படுகிறார்கள். ஆனால் இத்தகையோர்களுக்கு அடிக்கடி ஐக்கிய அம்சங்களைப் போதித்து சீர்திருத்தவேண்டுமென்பது இச்சங்கங்களின் நோக்கம்.

சங்கங்களின் பஞ்சாயத்தார்களுக்கு ஐக்கிய பிரபாவங்களை போதித்து அப்பொழுதுக்கப்பொழுது சங்கங்களை பரிசோதித்து பொது ஜனங்களுக்கும் பணம்போட்டு வைப்பவர்களுக்கும் நம்பிக்கை பூட்டுவதற்காக காருண்ய கவர்ன்மெண்டார் ஐக்கிய யிலாகாவை ஏற்படுத்தி பராமரித்து வருகிறார்கள். இவ்விலாகா உத்தியோகஸ்தர்களின் பிரேரேபணையினாலும் விடாமுயற்சியினாலுமே நம் ராஜதானியில் ஐக்கிய பிரபாவம் இவ்வளவு மேம்பாடடைந்திருக்கிறது. ஆயினும் பஞ்சாயத்தார்களுக்கும் மற்ற அங்கத்தினர்களும் தங்கள் தங்களின்பொறுப்புகளையும் அலுவல்களையும் நன்கறியாமையால் சில அசந்தர்ப்பங்கள் நேரிட்டதென்பதையும் குறிக்கவேண்டியதவசியமாயிருக்கிறது. இவ்விஷயங்களை அங்கத்தினர்கள் நன்கறிந்து பொறுப்புடன் வகிக்கும்வரையில் ராஜாங்கத்தாராவது அல்லது யூனியன் சங்கத்தாராவது உட்புகுந்து சங்க காரியங்களைச் சரிவர கையாளவேண்டும். போதுமான திறனில்லாத பஞ்சாயத்தை நம்பி "சுயவுதவி" செய்துகொள்ளவேண்டுமென எதிர்பார்த்தல் சாத்தியம். இதற்காகவே 1881-ம் வருஷத்திய 3353 நெ. தீர்மானத்தில் மதராஸ் கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு நகரபரிபாலன மசோதாவிஷயமாய் எழுதுங்காலத்தில் "ராஜங்கத்தாரின் மேல்பார்வையும் கண்டிப்பும் ஆரம்பத்தில் வரிசெலுத்துவோரின் நன்மையைநாடி வெகுகாலம்வரையில் வேண்டியிருக்கும்" என்றார்கள். சுமார் 30வருஷங்கள் கழித்துஇப்பொழுதுதான் உத்தியோகமல்லாதவர்களை பரிபாலகராக நியமித்தபோதிலும் இன்னும் பலவிதத்திலும் தங்கள் மேன்பார்வையிலேயே நடந்துவருகிறது. ஆனால் ஐக்கிய சங்கங்களை நகரபரிபாலனத்துடன் ஒத்திடுதல் யியலாதென நம்புவாருமுளர். நகரபரிபாலனத்தில் வரி வசூலித்து வரிசெலுத்துவோரின் நன்மைக்காக செலவிடுகிறார்கள்.

ஐக்கிய சங்கங்களிலோ வரிவசூலித்தும் அதனுடன் பெருந்தொகைகளை கடன்வாங்கியும் அங்கத்தினர்களுக்கு கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாய் வசூலிக்கிறார்கள். நகரபரிபாலனத்தைவிட ஐக்கிய சங்கங்கள் மிகவும் முக்கியமானவைகளென்றும் பரிபாலிக்க அதிக நம்பிக்கையுள்ளவர்கள் தேவையென்றும் சற்று யோசித்தால் தெரியும். சொல்பவரிகளை, செலவிடுவதற்காகவே கொடுக்கும் வரிசெலுத்துவோருக்காக, ராஜாங்க மேற்பார்வை வேண்டுமென்றால் ஆயிரக்கணக்கான பெருந்தொகைகளை கடனாகவாங்கி அங்கத்தினர்களுக்கு கொடுத்து அதற்கு சங்கத்தைச் சேர்ந்த எல்லா அங்கத்தினர்களின் சகல பொறுப்பும் ஈடென்றால் இதில் பொதுஜன சமூகம் எவ்வளவு சம்பந்தப்பட்டிருக்கிறது. பிசகு நேர்ந்தால் எவ்வளவு அபாயமாய் முடியும். மேலும் நகரபரிபாலனம்படிப்புள்ள நாகரீகமான பட்டணத்து ஜனங்களுக்கே சேர்ந்தது. ஐக்கிய சட்டமோ நாட்டுப்புறங்களில் படிப்பில்லாதவும் விவஹாரம் கபடுசூது முதலிய பிரயாசமறியாதவுமான குடியானவர்களைப் பொறுத்தது. ஆதலின் ஐக்கிய சங்க அங்கத்தினர்களும் பஞ்சாயத்தார்களும் வேண்டிய படிப்பினையை பெற்று தங்கள் காரியங்களை தாங்களே சமாளிக்கும் சக்தியை யடையும்வரையில் ராஜாங்கத்தாருடையவும் அல்லது சட்டப்படி அதிகாரம் பெற்ற மற்றோரும் பூராவும் உட்புகுந்து பார்த்தலும் வேண்டியபடி சீர்திருத்தலும் அவசியம்.

ஆகவே அங்கத்தினர்கள் தங்கள் பொறுப்புகளை நன்கறிய வேண்டும். அவையாவன:—

(1) சங்கம் வாங்கும் கடன்களுக்கும் டிபாசிட்டுகளுக்கும் ஒவ்வொரு மெம்பர்களுடைய சகலசொத்துக்களும் நஷ்டமேரிடும் காலங்களில் ஜவாப்தாரியாகும்.

(2) பஞ்சாயத்தார்கள் செய்யும் சகல நடவடிக்கைகளும் ஆட்சேபிக்காதவரையில் மற்றெல்லா அங்கத்தினர்களும் சுயமாய் செய்ததுபோல் பொறுப்புடையன.

(3) பஞ்சாயத்தார்கள் தாங்கள் செய்யும் நடவடிக்கைகளனைத்தையும் குறித்த தினத்தில்எல்லா மெம்பர்களுக்கும் தெரிவிக்கும்படி கேட்க அதிகாரமுண்டு.

(4) பஞ்சாயத்தார் நடவடிக்கைகளை கண்டிக்கவும், மாற்றவும் பஞ்சாயத்தாரை நிவர்த்திசெய்யவும் மற்ற அங்கத்தினர்களுக்கதிகாரமுண்டு.



(5) பஞ்சாயத்தார்களுக்கு சங்க நிர்வாகத்தில் வேண்டிய காலங்களில் தங்களாலியன்ற உதவிசெய்ய யெல்லா அங்கத்தினர்களும் கடமைப்பட்டவர்கள்.

இவைகளை ஒவ்வொருவரும் ஞாபகத்திலிறுத்தி சரிவர கவனித்து வந்தால் சங்கங்கள் விர்த்தியாவதில் தடையிராது.

சங்கங்களின் பஞ்சாயத்தார்கள், தங்கள் கடமைகளை நன்கறிந்து நடத்துவரின், ஐக்கியவிர்த்தி சீக்கிரத்திலுண்டாகும்.

(1) பஞ்சாயத்தார்கள் இதர ஏழை முதலியோருக்கு தக்க காலங்களில் உதவிசெய்து அவர்களை முன்னுக்குகொண்டுவரவே சங்கம் ஏற்படுத்தப்பட்டதென்றும், சுயலாபத்துக்காக சங்கத்தில் யிடமில்லை யென்றும் நன்கறியவேண்டும்.

(2) சங்கத்துக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை தெளிவாயறிந்து அவைகளினின்று கொஞ்சமும் பிறழாது நடக்கவேண்டும். தவிர ராஜாங்க இலாகா உத்தியோகஸ்தர்களும் மேன்பார்வைக்கென்று நியமிக்கப்பட்ட இதர உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கு அப்பொழுதுக்கப்பொழுது சொல்லும் புத்திமதிகளையும் செவ்வனே ஏற்று அதின்படி திருத்தம்செய்துகொள்ளவேண்டும். பிடிவாதம், முரட்டுத்தனம், அதிகாரிகளை எதிர்த்தல் இந்த துர்குணங்களை பஞ்சாயத்தார்கள் அடியோடு நிவர்த்திசெய்தல் வேண்டும்.

(3) சங்கபராமரிப்பில் சீர்திருத்தம் செய்யவேண்டிய பாகங்களை குற்றஞ்சொல்வதாய் பாராட்டாமல் குணமாகப் பாவித்து சீர்திருத்த வேண்டும். மேற்பார்வை அதிகாரிகளுக்கு சங்க பஞ்சாயித்துக்களின் பொறுப்பு யிருப்பதாலும் சங்கங்கள் சீர்திருத்தமடைவது அவர்களுக்கு பெருமையை யளிக்குமாதலின் அவர்கள் போதனைகளவ்வளவும் சங்கங்களின் விர்த்திக்கே யென்பதைபஞ்சாயத்தார் அறியவேண்டியது.

(4) கொஞ்சமேனும் பட்சபாதம், தாக்ஷண்யம், அதைரியம், முதலியவைகளால் சங்க நடவடிக்கைகளை பாதிக்காமலும், கண்டிப்பாயிருப்பதால் யியற்கையாயுண்டாகக்கூடிய சில அசந்தர்ப்பங்களை ஏற்க எக்காலமும் தயாராயிருக்கவேண்டியது. தெரியாத்தன்மையால் பழிசொல்பவர்களும் விரோத நடவடிக்கை செய்பவர்களும் நாளடைவில் திருத்தப்படுவார்களாதலின் மனஞ்சலியாது தைரியமாய் ஓர் அணுவளவேனும் நியாயம் பிசகாமல் நடப்பதே பஞ்சாயத்தாருக்கேற்ற குணமாகும்.

(5) சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்க்கும்பொழுது பஞ்சாயத்தார் அடியிற்கண்ட விஷயங்களைக்கவனிக்கவேண்டும்:-

(a) சேர விரும்புபவர் நல்நடத்தையுள்ளவராயிருக்கவேண்டும் குடியர்கள், வழக்காளிகள், அசத்தியக்காரர்கள், சுயநன்மைக்கருதாதவர்கள், இவர்களைபஞ்சாயத்தார் புத்திமதி சொல்லி திருத்த முடியுமென நம்பினாலொழிய சேர்க்கப்படாது.

(b) உண்மையில் அதிகவட்டிகொடுத்து கஷ்டப்படுகிறவர்களா? அவர்களுக்கு இப்போது வரும்படி சங்கத்தில் கடன் பகுதி கட்டப்போதுமானதா? பகுதிகட்ட வரும்படியில்லாதவர்களுக்கு முதலில் பஞ்சாயத்தார் தக்கவரும்படி வரும்வழிகளை அனுசரிக்கச்செய்து பிறகு கடன் கொடுக்கவேண்டும்.

(c) பெருங்கடனாளிகளுக்குசங்கம்பூராகடனும்கொடுத்துமீட்க முடியாதாதலின் சொல்பகடனை மேல்கடன் கொடுப்பதால் வீண்செலவு செய்து அதிக கடனாகுமேதவிர அந்த கடனாளிக்கு எவ்விதமும் பயன் பெறதக்கதல்ல. ஆனால் தன் கடன்களை முடிவு கட்டத்தக்க ஏற்பாடுசெய்து சங்க கடனைத்தீர்க்க பகுதி கட்ட சக்தியிருந்தால் சேர்த்துக்கொள்ளலாம்.

(d) அதிக செலவு செய்வதினால் பழக்கம்கொண்டவர்கள் கடன்கிடைக்குமளவும் வாங்கவிரும்புவார்கள். இத்தகையோரிடம் பஞ்சாயத்தார்இரக்கங்கொண்டு வீண்செலவுகளை நிறுத்தும்படி போதித்தால் வெகு சீக்கிரத்தில் திருந்தி சுகமடைவார்கள்.

(e) தக்க ஆஸ்தியுள்ளவர்களாயினும் வரும்படிக்கு மார்க்கமில்லாமல்ஆஸ்தியையேவிற்று ஜீவித்துவருபவர்களையும் தன்செலவுபோக சங்கப்பகுதிகட்டப் பொதுமான வரும்படியில்லாதவர்களையும்சேர்த்தால் காலக்கெடுவில் பணம் திருப்பிக்கொடுக்கயியலாமல் வேறுகடன் வாங்கவாவது ஆஸ்தியை விற்கவாவது நேரிடுமாதலின் இப்படிப்பட்டவர்களை சேர்க்கலாகாது.

(f) ரொக்கலாவாதேவி செய்பவர்கள் தங்கள் முதல்களை அதிகவட்டிக்கு விட்டு விட்டு வேறு பலகாரியங்களுக்கென்றுகடன் கேட்டபோதிலும் சங்கங்களில் சேர்த்துக்கொள்வது ஐக்கிய நன்மையன்று.

(6) அங்கத்தினர்களுக்கு கடன் கொடுக்கும் காலங்களில் பஞ்சாயத்தார்கள் கீழ்க்கண்டவைகளைக் கவனிக்கவேண்டும்:—

(a) கேட்கும் கடன் கொடுப்பதால் கடன்வாங்குபவருக்கு ஆதாய முண்டாகிறதாவென யோசிக்கவேண்டும். "வியவ



சாய காரியங்களுக்காகவும் வியாபாரத்துக்கும் கடன் கொடுத்து உண்மையில் அவ்விஷயங்களுக்கே செலவழிக்கப்பட்டால் கண்டிப்பாய் லாபமுண்டாகும். முன்கடன் பைசல் செய்வதில் வட்டிஅதிகமாயிருந்து கடன்காரரும் நிர்பந்தம் செய்தால்மாத்திரம் கடன் கொடுக்கப்படவேண்டுமேதவிர வீணில் பொது ஜனங்களுக்கு இதர முக்கியமான காரியங்களுக்கு பிரயோஜனப்படக் கூடிய திரவியத்தை பெருந்தொகைகளாகநெடுங்காலம் முடக்கி வைப்பது சரியல்ல.

(b) கடன் திருப்ப வேண்டிய கெடுவும் வட்டி கட்டவேண்டிய கிரமமும் கடன் வாங்குபவருக்கு நேரில் சொல்லி விவரமாய் தஸ்தாவேஜில் எழுதப்படவேண்டும்.

(c) நீண்ட காலக்கடன்களுக்கு நபர் ஜாமீன் போதாதென்று தோன்றினால் வில்லங்கமில்லாத பொறுமான சொத்துக்களையும் அடமானம்வைத்து தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்தர் செய்து கொடுத்தபிறகு கடன் கொடுக்கப் படவேண்டும். முன்னடமானமில்லையா யென்பதையறியாமல் கடன் பட்வாடா செய்வதால் சங்கத்துக்கு நஷ்டமும் கடன்வாங்கியவருக்கு கஷ்டமும் உண்டாவதால் கடன் வாங்குபவருக்கு கண்டித்து சொல்லப்படவேண்டும். (மேலடமானம் போடுவது சாதாரணமாய் நம்மவர்களில் வழக்கமாதலின் முன்னடமானமிருந்தால் உண்டாகக்கூடிய கெடுதிகளை விவரமாய் சொல்லவேண்டும்.)

(d) முன்னடமானம் பைசல்செய்ய கடன்கொடுக்கப்பட்டால் பஞ்சாயத்தாரே நேரில் பைசல்செய்யவேண்டுமேதவிர கடன்வாங்குவரிடம் கொடுக்கக்கூடாது. ஏனெனில் கடன் வாங்குபவரிடம் கணக்கு பைசல் செய்யுங்காலங்களில் முன்கடன்காரர்கள், கணக்கு பிசகாய் வாங்குவதும் வந்த வரையில் வரவுவைத்துக்கொண்டு அடமானம் ரத்துசெய்யாமலிருப்பதும் வழக்கமாதலின் பஞ்சாயத்தார் நேரில்பைசல்செய்ய வேண்டியதவசியம்.

(e) கடன் எந்த காரியத்துக்காக கொடுக்கப்பட்டதோ அதற்கே செலவழிக்கப்பட்டதாவென வெகு சிரத்தையுடன் கவனிக்கவேண்டியது பஞ்சாயத்தார் முக்கியகடமை.

(7) சங்கத்துக்கு வேண்டிய செலவுகளையும் புதுமெம்பர்கள் சேர்ப்பதையும் கடன் கொடுப்பதையும் பஞ்சாயத்தார் கலந்து தீர்மானம் செய்யவேண்டியதுடன் மற்ற அங்கத்தினர்களுக்கும் மாதமொரு முறையாவது விவரமாய் தெரிவிக்கவேண்டும். கூடியவரையில் சிக்கனமாய் சங்கத்தைப்பரிபாலிப்பது நன்மையைத்தரும்.

(8) சங்கத்துக்கு வரவேண்டிய பாக்கிகளை அங்கத்தினர்களுக்கு சௌகரியமான காலத்திலேயே சுலபமாய் வசூல் செய்வது பஞ்சாயத்தாரின் சிரத்தையைக்காட்டும். சாதாரணமாய் குடித்தனக்காரர்கள் கடன் வாங்குவதில் பிரியமும் திருப்பிகொடுப்பதில் கொஞ்சம் சஞ்சலமும் உள்ளவர்கள். இதினாலேயே கடன் கொடுப்பவர்கள் சொல்ப கடன்களை பெருந்தொகையாக்கி பாழ்செய்துவந்ததை நீக்க ஏற்பட்ட இச்சங்கங்களில் குடிகளுக்கு நிர்ப்பந்தமெனத்தோன்றியபோதிலும் பின்வாங்காது அவர்களுடைய ஷேமத்தையே கருதிகட்டவேண்டிய தொகைகளை காலாகாலங்களில் வசூலிக்கும் சங்கமே உண்மையில் குடிகளுக்கென்றேற்பட்டதாகும். அல்லாமல் வசூலில் கவனிப்பின்றி தப்புவழிகளுக்கிடங்கொடுத்து கடன்கள் குறையுமார்க்கத்தைக் கைக்கொள்ளாமல் குடிகளுக்கு தயவுடன் பரிதாபம் காட்டுவதாய் எச்சங்கம் நினைக்கிறதோ அது "குளிக்கப்போய் சேற்றைப்பூசிக்கொள்வது போல்" அச்சங்கத்தைச்சேர்ந்தோரைக்கெடுத்து துக்ககரமான நிலைமைக்கு கொண்டுவருவதுடன் ஐக்கிய மத்தியத்துக்கும் ஓர் அபகீர்த்தியையும் உண்டாக்கும்.

(9) சங்கத்தைச்சேர்ந்தவர்கள் ஒரு குடும்பத்தார்களாகவும் ஒரு குடும்பத்தில் உண்டாகும் லாப நஷ்டங்கள் மற்றெல்லோரையும் எப்படி பாதிக்கிறதோ அப்படியே பஞ்சாயத்தார் குடும்ப தலைவர்களாயிருந்து அங்கத்தினர்கள் சத்திய வழி தவறாமலும் நல் நடத்தையுள்ளோர்களாயும் சிக்கனத்துடன் மேம்பாடடைய அப்பொழுதுக்கப்பொழுது போதித்து நல்வழிப்படுத்தவேண்டியதுடன் ஐக்கிய பத்தியத்தில் தெரிந்தவர்களிடம் மேல் மேலும் தெரிந்துகொண்டு தங்களுக்குத்தெரிந்தது தான் முடிவென்றும் அகம்பாவத்தைவிட்டு அடக்கத்துடன் சங்கங்களை மனப்பூர்வமாய் ஜனசமூக நன்மைக்காகவே நடத்திவந்தால் இகபரசாதகமுண்டாவதுடன் சதா மனோதிருப்தியுடன் சர்வமங்களமும் சர்வேஸ்வரனாணையால் கிடைக்குமென்பது நிச்சயம்.



# கூட்டுரவினால் ஆயில் இஞ்சினைக்கொண்டு நீர்ப்பாசனம் செய்வது.

நீடாமங்கலம் ம-ா-ா-ஸ்ரீ ரேய் ஸாகிப் A. சேதுராமய்ய ரவர்களெழுதியது

ஜலாதாரப்பயிர்கள் அதாவது வெற்றிலை, கரும்பு, வாழை, மஞ்சள், முதலிய பயிர்களுக்கு, வாரம் ஒரு அங்குலமழை அல்லது 100.டன் தண்ணீர்வேண்டும். அதாவது 22,600 காலன் தண்ணீர் வேண்டும். இப்பயிர்களில் கொடிக்கால் அல்லது வெற்றிலைப்பயிர் சாகுபடி கூட்டுரவினால் செய்யப்படுகிறது. அநேகமாய், கொடிக்கால்பயிர் தஞ்சாவூர் ஜில்லாவில் மகம்மதியர்களால் கூட்டுரவின் மேல் சாகுபடி செய்யப்படுகிறது. இவர்கள் ஒரு ஏகர் பூமியை அநேக பட்டாங்களாகப் பிரித்துக்கொண்டு, செய்கோர்த்தி, பின்செய்கோர்த்தி முதலியவைகளை கூட்டுறவால் செய்து தைமாதம்முதல் ஆனிமாதம் வரையில் வாய்க்கால், கண்ணி, கிணறு முதலானவைகளை வெட்டி வெகு சிரமப்பட்டு தண்ணீர்பாய்ச்சி வெகுகஷ்டப்படுகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் ஆனிமாதம்முதல் தைமாதம் வரையில் தண்ணீர்வருவதால் கொடிக்கால் பாசனம் வெகு சுலபம். ஏகர் 1க்கு கொடிக்கால் சாகுபடியில் சகல சிலவும்போக நிகரலாபம் ரூபா 160 வருவதாக சர் F. A. நிக்கல்சன் கோயம்பத்தூர் ஜில்லா மானியூலில் கணக்கிட்டு இருக்கிறார். கொடிக்கால் சாகுபடிக்காரர்களாகிய மகம்மதியர்களிடம் கூட்டுரவு இயற்கையிலேயே அமைந்திருப்பதாலும், கொடிக்கால் சாகுபடியில் நல்ல லாபமிருப்பதாலும், 6 மாதகாலம் வரையில் தண்ணீர்பாச்ச வெகு கஷ்டமாயிருப்பதாலும், பாசன கஷ்டத்தை நிவர்த்திபண்ண கூட்டுறவின் மேல் ஒரு கிணறுவெட்டி ஆயில் இஞ்சின்வாங்கி தண்ணீர் பாய்ச்சினால் நல்ல லாபம் அடைவார்களென்பதை பின் நிரூபிக்கிறேன். ஆயில் இஞ்சின்கள் சுமார் 25 ஏகராவுக்குக் குறையாத நில விஸ்திரணத்தில் வைத்து பாசனம் பண்ணினால்தான், நல்லலாபம் உண்டு. இதற்கு 9 குதிரை பவர் இஞ்சினும் முப்பதடி ஆழத்துக்குக் குறையாத எப்போதும் ஜலமூற்றமுள்ள கிணறும்வேண்டும். சிறிய விஸ்தீர்ணத்துக்கு 5 குதிரைபவர் இஞ்சின்களையும் உபயோகிக்கலாம். கொடிக்கால் சாகுபடிக்காரர்கள் ஏற்றத்தினால் ஒரு ஏகராநிலத்தை ஒரு அங்குலம ஈரப்படுத்த சுமார் ரூபா $2\frac{1}{2}$ இப்பொழுது சிலவுசெய்கிறார்கள். 9 குதிரை இஞ்சினைக்கொண்டு $2\frac{1}{2}$ அங்குல குழாய் பம்புனால் 8 மணி நேரம் வேலைசெய்தால் சுமார் 2 ஏகர்பாயும். இதற்கு சுமார் ரூபா 2 சிலவாகும். அதாவது 1 அங்குலம் ஈரப்படுத்த ஏகர் 1க்கு ரூபா 1 சில

வாகிறது. இதினால் பாசனத்துக்கு லாபமிருப்பதும் அன்றியில் தேக சிரமம் நீங்குகிறது. எனக்கு சுமார் 7 ஏகராவுள்ள ஒருதோட்டம் இருக்கிறது. அதில் ஒருகிணறில் தண்ணீர் ஊற்றத்துக்காக 100 அடி வரையில் போரிங்கு குழாய் இறக்கியிருக்கிறேன். 9 குதிரை ஆயில் இஞ்சின் $2\frac{1}{4}$ அங்குல பம்பினால் தண்ணீர் இறைக்கிறது. ஒருமினிட்டுக்கு சுமார் 90 காலன் தண்ணீர் இறைக்கிறது. இப்படி தைமாதம் முதல் ஆனிமாதம்வரையில் பாசனம் பண்ணப்படுகிறது. பிற்பாடு ஆற்றில் தண்ணீர்வருவதால் ஜாஸ்திபாக பாசனம் செய்யப்படுவதில்லை. அந்த காலத்தில் 3 நெ. அல்லரைக்கொண்டு நெல்லு அறைக்கப்படுகிறது. நெல்லு அறைப்பதில் சிலவுகளெல்லாம் போக தினம் ரூபா 1 கிடைக்கும். போட்டமுதல் ஆயில் இஞ்சின் ரூபா 1,800; $2\frac{1}{2}$ அங்குலபம்பு ரூபா 700; 3 நெ. அல்லர் ரூபா 500; கட்டடம்வகைரா சிலவு ரூபா 1000; ஆக சுமார் 4000–ரூபாய் முதலுக்கு சகல சிலவும் போக 9 வீத வட்டி கட்டுகிறது. இதில்பாசனம் லாபம். என்னுடைய அனுபோகத்தைக்கொண்டு 7 ஏகரா விஸ்தீர்ணத்தையுள்ள கொடிக்கால் சாகுபடிக்காரர்கள் 10 பேர்களுக்குக் குறையாமல் ஒரு ஐக்கியசங்கம் ஒன்று யேற்படுத்திக்கொண்டு 4,000 ரூபாய் பங்குகளாக முதல் சேர்த்து கொடிக்கால் சாகுபடிக்கு கிணறுவெட்டி ஆயில் இஞ்சினைக் கொண்டு பாசனம்செய்யும்பக்ஷத்தில் நல்லலாபமடைவார்களென்பது திண்ணம். கரும்புக்கு ஒருவருஷத்தில் சுமார் 40 தடவை தண்ணீர் இறைக்கும்படியாய் நேரிடும். தற்சமயம் சண்டைகாலமானதாலும் 1916 — 17 வருஷத்துக்காக 100 க்கு 10வீதம் இறக்குமதிவரி யேற்படுத்தி யிருப்பதாலும் சர்க்கரைக்கு கிராக்கி ஜாஸ்தியிருப்பதாலும் கரும்பு சாகுபடி விஸ்தீர்ணம் இப்போது அதிகரிப்பது நமக்கு நல்ல லாபமுண்டு. 25 ஏகருக்கு குறையாத கரும்பு சாகுபடி விஸ்தீர்ணத்தில் கூட்டுறவின் மேல் ஐக்கியசங்கம் ஏற்படுத்தி ஆயில் இஞ்சினைக் கொண்டு தண்ணீர் பாசனம்செய்து வருவார்களானால் இப்போது பாசனத்துக்கு ஆகும் சிலவில் பாதியாவதுடன் ஆயில்இஞ்சின் சக்தியாலே மூன்றுரோலை இரும்பு ஆலைகளைக்கொண்டு கருப்பஞ்சாறும் உண்டாக்கி வெல்லம் காய்ச்சலாம். 1 ஏகர் கருப்பங்கழியிலிருந்து சுமார் 200 முதல் 300 மணங்குவரையில் வெல்லம் காய்ச்சப்படுகிறது. ஒரு பொதி 10 மணங்கு; 1 மணங்கு 8 வீசை; 1 வீசை வெல்லம் 5 அணா விற்கிறது. அதாவது ஒரு மணங்கு விலை ரூபா $2\frac{1}{2}$; அதாவது ஒரு ஏகராவுக்கு 500 முதல் 700 ரூபாய்வரையில் வெல்லம் கிடைக்கிறது. இதற்கு சாகுபடிச்சிலவு ஏகர் 1 க்கு ரூபா 100; வெல்லம் காய்ச்சசிலவு ரூபா 50; ஆக ரூபா 150 போனால் ஏகர் 1க்கு சுமார் 300ரூபா நிகர



லாபம் கிடைக்கிறது. ஆயில் இஞ்சினைக்கொண்டு தண்ணீர்பாசனம் பண்ணி கருப்பஞ்சாறு புழிந்து வெல்லம் காய்ச்சினால் ரூபா 400 லாபம் தற்சமயம் கிடைக்கும். ஆகையால் கரும்புசாகுபடி விஸ்தீர்ணம் ஐக்கியச்சங்க ளிருக்கப்பட்ட ஊர்களில் எங்கே சாத்தியமோ அங்கே அதிகரிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மேலும் இம்மாதிரி லாபம் தரக்கூடிய பயிர்களுக்கு கூட்டுரவின் மேல் ஆயில் இஞ்சினைவைத்து, தண்ணீர்இறைப்பதும் அதோடு ஒரு சிறு கைத்தொழிலும் ஐக்கிய பத்தியத்தின்பேரில் செய்வதும் மிகவும் விரும்பத்தக்க தாகும்.

---

## ஸ்விட்ஜர் லாண்டுதேசத்தில் ஆடுமாடுகளை வளர்க்கும் கூட்டுரவு சங்கங்கள்.

கிருஹ கிருத்ய ஜனஸமூகவர்த்தமானமென்றமாதாந்தரப்பத்திரிகை(TheMonthly Bulletin of Economic and social Intelligence) யின் ஜனவரி மாஸத்து நெம்பரில் மேல்கண்ட விஷயத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதப் பட்டிருக்கிறது. அதைப்பின் வருமாறு சுருக்கி எழுதுவோம்.—

அநாதிகாலமாய் சுவிட் ஜர்லாண்டில் ஆடுமாடுகளின் வளர்மைக்கும், மலைபிரதேசங்களிலுள்ள ஏராளமான புல்தரைகளுக்கும் பசும்புல் ஏராளமான மைதானங்களுக்கும் பெயர்போனது. நல்ல ஜாதி கன்றுகளுக்கு அதுவே தகுந்த இடமாய் ஏற்பட்டு விட்டது. அவைகளில் வெகு முக்கியமானவை பிரௌன்ஸ்விஸ்,புள்ளிகள் வாய்ந்த சிம்மந்தால் என்றவையே. அவைகள் ஜாதிக்கலப் பில்லாமல் சுவச்சமென்றும் மிகுந்த பலமுடையவை யென்றும் பெயர் போனவை.

1911–ம் வருஷத்தில் சுவிட்ஜர்லாந்தில் இருந்த ஆடுமாடுகளின் முழுத்தொகை 1,443,483; அவைகளில் பசுக்கள் 796.999; எருதுகளும் சிறுகன்றுகளும் 352,255; தீனிபோட்டு வளர்த்துக் காப்பாற்றப்பட்ட காளைகள் 26,207. இப்பொழுது ஆடுமாடுகள் வைத்திருக்கும் சொந்தக்காரர்கள் 205,944. சுவிஸ் விவசாயக்காரர்களுக்கு மாட்டு வளர்மையிலேயே அதிகலாபம் கிடைப்பதாலும் அதையே அவர்கள் தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறபடியாலும், இந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவர உத்தேசித்து, கவர்ன்மெண்டார் அவர்களுள் கூட்டுரவு சங்கங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

அந்தத் தேசம் சின்னச்சின்ன கிராமங்களால் ஆகியதா யிருப்பதால் அப்படி யிருப்பதினால் உண்டாகும் அஸௌக்கியங்களைப் போக்குவதற்கு இம்மாதிரி சங்கங்களை ஏற்படுத்துவது அவசியமாய் விட்டது. இப்பொழுது அங்கே 850 சங்கக்களிருக்கின்றன.

அவைகளின் உத்தேசமாவது—

(1) உயர்ந்த ஜாதிகாளைகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை ஸரிவரபோஷித்தல்.

(2) மேலானபசுக்களையும் கன்றுகளையும் பொறுக்கி யெடுத்து அவைகளுக்கு அடையாளங்களிட்டுக் கணக்கிடுதல்.

(3) ஈனும் பசுக்களையும் அவைகளின் கன்றுகளையும் நிதானமாயும் ஒழுங்காயும் வளர்த்தல்.

(4) மந்தைபுஸ்தகம் ஒன்று ஏற்படுத்தி, அதில் வரிசையாயும் தவறாமலும் அவைகளின் வம்சத்தைப்பற்றின வரையில் முழு வர்த்தமானத்துடன் வைத்திருப்பது.

(5) அவைகளின் ஈனும் சக்தியைப்பற்றி விசாரித்தல்.

(6) மாடுகளை விக்ரயம் செய்வதிலும் அவைகளின் போஷணை முதலியவிஷயங்களில் அதிக கவலை எடுத்துக்கொண்டு அவைகளை விருத்திக்குக் கொணர்தல்.

(7) மாடுகளை வளர்த்தல், அவைகளை போஷித்தல் முதலிய விஷயங்களில் ஏற்படும் ஸந்தேஹங்களையோ கேள்விகளையோமெம்பர்கள் ஒருவரையொருவர் கேட்டுந்தெரிந்து கொள்ளுதல் என்ற முதலியவையாம்.

ஓரே பக்கத்திலிருக்கும் சில விவசாயிகள் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தி அதற்கு சட்டங்கள் நிர்ணயிப்பார்கள். அந்த சங்கத்தில் மெம்பர்களா யிருப்பதைத்தவிர, 3 முதல் 7 மெம்பர்கள் அடங்கிய ஒரு அக்கிராஸனாதிபதியின் கம்மிட்டியும், 3 மெம்பர்களடங்கிய விலை மதிப்புகளில் தேர்ந்தவர்களின் கம்மிட்டியும், கணக்குகளைப் பரிசோதனை செய்வதற்கு ஒருகம்மிட்டியும் உண்டு. மந்தைப் புஸ்தகம் அந்த சங்கத்தின் ஸெகிரிடெரி யிடத்திலேயே இருக்கும். அவர் அக்கிராஸனாதிபதியின் கம்மிட்டியில் ஒருமெம்பராகவு மிருப்பார். ஒருகாளை வாங்குவதற்கு வேண்டிய துகையை ஸாதாரணமாய் மெம்பர்கள் ஒவ்வொருவரிடத்திலிருந்து 20 முதல் 100 பிரான்க் சுமார் அரை ரூபாய்க்குச் சரியான வெள்ளிநாணயம்) வரையிலும் வஸூல் செய்வது வழக்கம். மூலதனம் சேகரிக்கும் வழி மெம்பர்கள் கொடுக்கும் மாதாந்தர சந்தாக்கள், பின்னால் சங்கத்தில் 'சேருவதற்கு உத்தேசித்தவர்கள் முகட்டியதுகைகள், மாட்டுப்புஸ்தகத்தில் எழுதப்படும் மாடுகளுக்காக வாங்கும் கட்டணங்கள், சங்கத்தின் மாடுகளுக்குக் கொடுக்கப்படும் இனாம்கள், கவர்ன்மெண்டாரிடத்திலிருந்தும் பொது ஜனங்களிடத்திலிருந்தும் கிடைக்கும் வெகுமானங்கள் இவைகளே. பணத்தை ஏராளமாய்ச் சேர்த்து லாபத்தையடைய வேண்டுமென்பது இந்த சங்கங்களின் ஆசையல்ல. ஆனால் எதிர்பார்க்கக் கூடாத செலவுகள் வருமாகில் அவைகளை ஒப்பேற்றுவதற்காக ரிஸர்வ் பண்டு ஏற்படுத்துவதுதான் அவர்களின் எண்ணம். ஸ்விஸ் ராஜதானி இப்படிப்பட்டசங்கங்களை ஏற்படுத்த சிலவுக்காக 100 பிராங்ஸ்முதல் 300 வரையில்கொடுக்கிறார்கள். ஒவ்வொரு சங்கத்திலும் 10 முதல் 100 மெம்பர்கள் வரையிலிருக்கலாம். ஒவ்வொரு புஸ்தகத்திலும் 30 முதல் 200 வரையிலாவது அதிகமாவது மாடுகள் பதியலாம்.



நிபுணர்களின் கம்மிடியாருக்கு வேலையென்ன வென்றால், மெம்பர்களின் மாடுகளிலிருந்து காளைகளைப்பொறுக்கி யெடுக்கவும், சங்கத்திற்காக காளைகள் வாங்கவும், மந்தைப்புஸ்தகத்தில் பசுக்கள், கன்றுகள் எழுதுவதைப் பற்றி அபிப்பிராயங்களைத் தெரிவித்தலுமே. மிருகங்களுடைய பெயர்கள் எழுதப்பட்டவுடன் அவைகளின் இடது கொம்புகளில் சங்கத்தின் அடையாளமும் வரிசை நெம்பரும் எழுதப்படும். சங்கத்தார்கள் வெகுமேன்மையான காளைகளையே வாங்குவதால், சில ஸமயங்களில், 4000, 5000 பிராங்ஸ் கொடுக்கும்படி நேரிடுகிறது. அப்படி சங்கம வாங்கும் காளையை அந்தச்சங்கத்தின் மெம்பர்களுள் யாராவது ஒருவரிடம் ஒப்புவித்து, அதற்குச் செலவாகும் பணத்தை மாத்திரம் வாங்கிக்கொண்டு அதை நன்றாய்ப்பாது காக்கும் படி உடன்படிக்கை வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார்கள். சங்கத்தின் நிர்வாஹத்தையும் காளைகளைப்போஷிப்பதையும், அவைகளை வாடகைக்கு விடுவதையும்பற்றி விசேஷ விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. பசுக்களுக்கும் கிடாரிக்கன்றுகளுக்கும் பொதுவில் மேயுமிடங்களிருக்கின்றன. கன்றுகள் சாஸ்த்ரோக்தமாய் வெகுநாள் வரையில் பால் நிறைய ஊட்டிவரும். பிறகு முத்தமுத்த கெட்டியான தீனிகளும் கொடுக்கப்படுகின்றன.

இந்தமாதிரி ஆடுமாடு போஷணைசங்கங்களின் சேர்க்கை,அதிகரிக்க அவைகள் இரண்டுபிரிவினையாக ஏற்படுத்தப்பட்டன (1) சிம்மந்தால் மாடுகளைப்போஷிக்கும் சங்கங்களின் ஸமூஹம். (2) பழுப்பு நிறமான மாடுகளைப்போஷிக்கும் சங்கங்களின் ஸமூஹம். 1வதில், 340 கூட்டுறவு சங்கங்களும், 10,371 மெம்பர்களும், 26,519 ரிஜிஸ்டர் செய்

யப்பட்ட மாடுகளுமிருக்கின்றன; 2வதில்,190 சங்கங்களும்,6,347மெம்பர்களும், 21,900 மாடுகளும் இருக்கின்றன. இவைகளின் உத்தேசம் என்னவெனில், கூட்டுரவு சங்கங்களின் ஆரம்பத்தையும் மாடுகளைப் போஷிப்பதையும் பலப்படுத்துவதும், காளைகளை மாத்திக்கொள்வதும், மாடுகளைப்பரிசோதித்து, அவைகளை மதிப்பதில் தேர்ச்சியை விருத்தி செய்வதும், கன்றுகள் போட்டபிறகு அந்தந்தகாளைகளின் வளர்ப்பைப்பரீக்ஷைசெய்து அவைகளுக்கு இனும் கொடுப்பதற்காக ஜட்ஜிகள் ஏற்படுத்துவதும், காக்ஷிசாலைகளில் வேலை செய்வதும், ஈனும் பசுக்களின் வ்யாபாரத்தை விருத்திசெய்வதுமேயாம்.

## கூட்டுரவும் சண்டைக்குதவாத சிப்பாய்களும்

சில நாளுக்குமுன் இங்கிலாந்தில் விவசாய போர்ட்டார் ஒரு கம்மிட்டியைநியமித்து 'வேலையிலிருந்து நீங்கின சிப்பாய்களும் மாலுமிகளும் நிலங்களை சாகுபடி செய்வதில் எப்படி உதவுவார்களென விசாரிக்கச் செய்தார்களாம். கோவாபரேடிவ் நியூஸ் என்னும் பத்திரிகையில் இப்பொழுது வந்தநெம்பரில் அந்தகம்மிடியின் அக்கிராஸனாதிபதி மிஸ்டர் ஹென்ரி ஹாப்ஹௌஸ் என்பவர் பின்வருமாறு நிச்சயித்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

"சாகுபடிசெய்யக்கூடிய நிலங்களை சொந்தக்காரர்கள் கொடுக்காவிட்டால் சட்டப்படி கவர்ன்மெண்டாரே வாங்கி அதில் சிறுசிறு கிராமங்கள் ஏற்படுத்தி, எல்லாரும் சேர்ந்து வாங்குதல், கொடுத்தல், பாங்கிகள் ஏற்படுத்துதல் முதலிய கூட்டுரவு விஷயங்களைச் செய்யும்படி விடுத்து, இப்படிச்செய்வதற்கு வேண்டிய பணஉதவி ஸர்க்காரிலேயே கொடுக்கவேண்டுமென்பதே."

கிராமத்தார்கள் நெருங்கியிருப்பதால் மாத்திரம் மேற்சொன்னவைகள் எல்லா விதத்திலும் ஜயிக்குமேயாதலால் நிலங்களைவாங்கி குடியேற்றம் ஏற்படுத்துவது முடிவில் நடக்குமென்று தோன்றுகிறது. அந்தவிஷயத்தில் ஸர்க்கார் ஏறக்குறைய 30 லக்ஷம் பவுன் முதலில் செலவிடவேண்டியிருக்குமென்றும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும் தெரிகிறது. அப்படி ஸர்க்காரால் கொடுக்கப்படுகிற திரவியத்தை ஸரிவர செலவுசெய்வதற்காக நிலத்தை அதில் குடியிருப்பவர் போராலேயே வாங்கி, அப்படி அவர்களுக்குப் பணஉதவி செய்வதற்காக கோவாபரேடிவ் கிரெடிட் ஸொஸைடிகள் ஏற்படுத்துவதுதான் நல்லதென்றும், அவசியமென்றும் சொல்லப்படுகிறது.



## ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

ஸர்க்கார் விளம்பரம்

ரிவினியூ ஆர்டர் நெம்பர் 233, பிப்ரவரி 2, 1916.

### தணிக்கையும் மேற்பார்வையும்.

தற்காலத்தில் கூட்டுரவு சங்கங்களின்பேரில் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் செலுத்திவரும் அதிகாரங்களை ஜாக்கிரதையாயும் தந்திரமாயும் கூடியவரையில்குறைத்து, அந்தச்சங்கங்களுக்கு சுதந்தரத்தையும் உத்தரவாதத்தையும் அதிகப்படுத்தவேண்டுமென்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் வெகுகாலம் யோசித்திருந்தனர். கூட்டுரவு சங்கங்களுக்கு ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் ஸஹாயம் அதிகமாகக் கூடாதென்ற எண்ணத்தினால் மஹாகனம்பொருந்திய நமது கவர்னர் அவர்கள் உத்யோகஸ்தர்களின்மேற்பார்வையை இப்போதிருப்பதைவிட சில விஷயங்களில குறைக்கவேண்டுமென்றார். மற்றொரு விதத்தில் நோக்குங்கால், கூட்டுரவின் விருத்தியினால் ஏற்படும் அதிகச் சிலவுகளை, அப்படி ஏற்பட்டதனால் பிரயோஜனத்தை அடையும் அந்தச்சங்கங்களையே பொறுக்கும்படி செய்வது நியாயமாகும். ஸர்க்கார்செய்யும் கணக்குவழக்குப்பரிசோதனைகளின் சிலவுகளுக்காக தணிக்கை வரி விதிப்பது ஒரு முறையாகும். ஆனால் இப்படிச்செய்வதில், சங்கங்கள் ஆக்ஷேபணை சொல்லக்கூடியவிஷயம் என்னவெனில், சங்கத்தின் அதிகாரத்திற் குட்படாமல், கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட உத்யோகஸ்தர்களுக்கு சம்பளம் முதலியவை கொடுப்பதில் சங்கத்தார்களைப் பணம் கேட்க கவர்ன்மெண்டார் சில விஷயங்களில் இதுவரையில் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் வகித்துவந்த அதிகாரத்தை இப்போது சங்கங்களுக்கே கொடுத்துவிடுவதுதான் தகுந்த ஏற்பாடாகும். ஆனால், கோவாபரேடிவ் ஸொஸைடீஸ் ஆக்டின்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் கணக்குகளை இப்போதும். இன்னும் வெகுகாலம் வரையிலும் கூடகவர்ன்மெண்டாரே தணிக்கை செய்யவேண்டியது அவசியமென்று சொல்லுகிறார்கள். ஆனால், தணிக்கையென்பதில் சேராத மேற்பார்வையென்னும் காரியத்தை ஜில்லாபாங்கிகளைக் கொண்டாவது அல்லது சங்கங்களால் கூட்டப்பட்ட மேற்பார்வை ஸொஸைடிகளைக் கொண்டாவது நடத்திக் கொள்ளுவதுநல்லது என்று கவர்னர்அபிப்பிராயப்படுகிறார். தணிக்கையினின்றும் மேற்பார்வை தனியென்று விரிவாய் வரையறுக்கப்படமுடியாது; மேற்பார்வை ஸொஸைடிகள் ஏற்படவும் வெகுகாலம்பிடிக்கும். ஆனால், திடீரென்று யாதொரு மாறுதல் செய்ய

முடியாதபோதிலும், இந்த விதத்தில்தான் மேன்மேலும் விருத்திக்கு வழி தேடவேண்டுமென்றும் மகாகனம் கவர்னர் அவர்கள் நிச்சயம் செய்திருக்கிறார்.

(2) கவர்ன்மெண்டார், இப்போது செய்திருக்கும் முடிவுகள் ஏற்கனவே ஸ்வல்ப காலத்திற்குமுன் ஸர் எட்வர்ட் மக்ளகன் என்றவர் அக்கிராஸனம் வஹித்த ஒரு கம்மிடியார் இந்தியாவில் கூட்டுறவு என்றதைப்பற்றி எழுதின விருத்தாந்தத்திற்கு ஒத்ததாகவேயிருக்கிறது. அந்த அநுபந்தத்தின் இரண்டாவது அத்தியாயத்தில், கம்மிடியார் அந்த விஷயத்தைப்பற்றி சட்டங்களால் ஏற்படும் ஷரத்துக்களைக் கூறியபிறகு, தங்களுடைய அபிப்பிராய ரூபமாக, ஓங்கி வளரக்கூடிய இந்த ஆரம்பதசையில் ஸர்க்கார் அதிகாரத்திற்குட்பட்ட தணிக்கை அந்த ஆக்ட்டில் சொல்லியிருப்பதை நிறைவேற்ற வழியென்று வெளியிட்டிருக்கிறார். கம்மிடியார், பின்னும், தணிக்கை செய்பவர்களை இரண்டு வகுப்பாய்ப் பிரித்து, ஒரு வகுப்பினர் ஸர்க்காராலும் மற்றொரு வகுப்பினர் கூட்டுறவு சங்கங்களாலும் நியமிக்கப்படவேண்டுமென்றும் தெரிவிக்கிறார்கள். அந்தந்த வருஷத்திய கணக்குகளைப் பின் சொல்லப்பட்டவர்கள் (சங்கங்கள்) தணிக்கை செய்யவேண்டுமென்றும், முன் சொல்லப்பட்டவர்கள் முழுகணக்குகளையும் ஒருவருஷத்திற்கு மேல்பட்ட காலக்கிரமத்தில் பரிசோதிக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. மேற்பார்வையைப்பற்றி, கம்மிடியார் கூட்டுறவுச் சங்கங்களுக்கே அந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அநேக ராஜதானிகளில் அந்தப்படியே நடக்கிறதென்றும் கூறியிருக்கிறார்கள். ஸென்ட்ரல் மாகாண பாங்கிகள் விஷயத்தில், தணிக்கையானது அதில் தேர்ந்தவர்களாலாவது அல்லது ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாலாவது செய்யப்படலாமென்றும், ஆனால் மேற்சொன்ன பாங்கிகளின் மேற்பார்வை பின்சொல்லப்பட்ட ஸர்க்கார் உத்யோகஸ்தர்களாலேயே செய்யப்படலாமென்றும் எழுதியிருக்கிறார்கள்.

(3) கோவாபரேடிவ் ஸொஸைடிகளின் ரிஜிஸ்ட்ரார் 1915௵ செப்டம்பர்௴ 24௳ எழுதியலெட்டர் நெம்பர் 2089-ல் மேற்பார்வையை நிர்வஹிக்கும் விஷயத்திலும் இந்தராஜதானியில் கணக்கு தணிக்கையைப் பற்றியும் தம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார். ம-ள-ள-ஸ்ரீ திவான் பகதூர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளையவர்கள் முதல்தணிக்கையும், பணவரவு சிலவுஸ்டேட்மெண்டுகள் தயார் செய்வதையும் ஸென்ட்ரல் பாங்கிகளாலும் ஸ்தல யூனியன்களாலும் நியமிக்கப்படும் அதிகாரிகளாலே செய்யப்படவேண்டுமென்றும், கடைசி தணிக்கைப் பரிசோதனையில் ஒருவருஷத்துக்கொருமுறையாவது எல்லா ஸொஸைடிகளுடைய கணக்குகளும் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களால் பார்க்கப்பட வேண்டுமென்றும் சொல்லுகிறார். கவர்ன்மெண்டார் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். முதல் தணிக்கை, கடைசி தணிக்கையென்பது இன்னவையென அநுபவத்தினால்மட்டும் தெரியுமே தவிர இப்பொழுது திடீரென்று தெரியாது. ஆனால், அடக்கியாளும் அதிகாரத்தை கவர்ன்மெண்டிடத்திலிருந்து சிற்சில விஷயங்களில் குறைத்து அதை ஸென்ட்ரல் பாங்கிகளும் ஸ்தல யூனியன்களும் நியமிக்கும் உத்யோகஸ்தர்களிடத்தில் வைப்பது மாத்திரம் தற்காலத்தில் ஒப்புக்கொள்ளப்படலாம். மேற்சொன்ன உத்யோகஸ்தர்கள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி பாங்கிகளுடனும் யூனியன்களுடனும் அவைகள் ஸம்பந்தப்பட்டவரையில் கலந்து பேசி பின்பு ரிஜிஸ்டரார் சட்டங்களை ஏற்படுத்த வேண்டும். ஸென்ட்ரல் பாங்கிகளில் ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அதிகாரிகளின் சிலவுகளுக்கு ஸொஸைடிகளுக்குக் கடன்கொடுக்கும் வட்டி விதத்தை 100-க்கு ½-விதம் உயர்த்தியும் மற்ற வரும்படிகளையும் யேற்படுத்தி வைப்பதே சரியென்று கோவாபரேடிவ் ஸொஸைடீஸ் ரிஜிஸ்ட்ரார் சொன்ன அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி அந்த அதிகாரிகளுக்குக் கொடுக்கவேண்டிய செலவுகளுக்கு இப்படி வாங்கும் பணமே போதுமென்பதும் அது ஸம்பந்தமான பாங்கிகளும் இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளுகிறார்களென்பதும் கவர்ன்மெண்டார்கள் அறிந்த விஷயமே. ஆகையால், ராஜாங்கத்திலிருந்து கூட்டுறவு சங்கங்களுக்குச் செய்யும் உதவியைக் குறைக்காமலும் சங்கங்களுக்கு அதிகமாய் ஸ்வதந்தரத்தைக் கொடுக்க முயலும் ம-ள-ள-ஸ்ரீ திவான் பகதூர் ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்கள் 1915௵ செப்டம்பர்௴ 24௳ எழுதிய நிருபத்தில் சொல்லியிருக்கும் ஏற்பாடுகளை மஹாகனம் பொருந்திய கவர்னர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பது கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்திக்காக கஷ்டப்படும் அபிமானிகளுக்கு ஏற்குமென்று நம்பப்படுகிறது.

## பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், கூட்டுறவுச் சங்கங்களும்.

ரிஜிஸ்ட்ராருடைய அறிக்கை 1916௵த்திய (R.O. C. 6313-3-1916.)

கோவாபரேடிவ் ஸொஸைடிகளின் நிர்வாஹத்தில் முயற்சியெடுத்துக்கொள்ளும் உபாத்தியாயர்களைப்பற்றி மதராஸ் கோவாபரேடிவ் ஸொஸைடிகளின் ரிஜிஸ்ட்ராருக்கும் டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனுக்கும் நடந்த வர்த்தமானத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

தென்கன்னடம் ஜில்லாவில் கல்நாடு என்ற கிராமத்தில் லோகல் பண்டு ஸ்கூல் உபாத்தியாயர் ஒருவர் அவ்விடத்திலுள்ள கோவாபரேடிவ் ஸொஸைடி ஒன்றின் கார்யதரிசியாயிருந்ததை யறிந்து தென்கன்னட ஜில்லா ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ஒருவர், அந்த உபாத்தியாருக்கு கார்யதரிசி வேலையையாவது அல்லது ஸ்கூல் உபாத்தியாயத் தொழிலையாவது ராஜினமா கொடுத்துவிடும்படி நோடீஸ் கொடுத்ததைப்பற்றி புத்தூர் ம-ா-ா-ஸ்ரீ சிவராவ் அவர்கள் 1915௵ செப்டம்பர்மீ 13௳ ரிஜிஸ்ட்ராருக்கு எழுதினர். ரிஜிஸ்ட்ரார் உடனே வித்யாவிசாரணைத் தலைவருக்கு, கூட்டுறவு சங்கங்களின் வேலைகளில் உபாத்யாயர்களின் உதவியானது அவசியமென்பதை எடுத்துக்காட்டி எழுதினர். வித்யா விசாரணைத் தலைவரும் அதற்கு ஸம்மதித்து விசாரணைசெய்து பின்வருமாறு 1916௵ ஜனவரி 4-ல் ரிஜிஸ்ட்ராருக்கு பதில் எழுதலானர்.—லோகல்பண்டு பள்ளிக்கூட உபாத்யாயர், யாவரும் தான் செய்யும் வேலைகளுக்காக மாறுதவி பெருமலும், ஜில்லா போர்டு அக்கிராஸனாதிபதியிடம் உத்திரவு பெற்றும், தாம் ஏற்றுக்கொண்ட வேலையானது தம்முடைய பள்ளிக்கூட வேலையைக்கெடுக்காதென்று அவரிடத்திலிருந்து ஒரு நிதர்சனப் பத்திரமும் பெற்றிருந்தால் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாஹத்தில் வேலை செய்வதில் ஆக்ஷேபணையில்லை யென்பதாகும்.

---

## சூபர்வைஸர்களையும், இன்ஸ்பெகடர்களையும் தயார்செய்தல்.

ஸர்க்கார் உத்திரவு, 1916௵ பிப்ரவரிமீ 9-தேதி ரிவினியூ நெ. 285.

கூட்டுறவு சங்கங்களுக்கு நிர்வாஹ அதிகாரத்தை அதிகப்படுத்தும்படி உத்திரவுகள் அளித்தபிறகு, ஸொஸைடிகளின்கீழ் நியமிக்கப்



படும் சூபர்வைஸர்களையும், டிபார்டுமெண்டில் இனி இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கவேண்டியவர்களையும் தயார்செய்வதைப்பற்றி கவர்ன்மெண்டார் பின்வருமாறு கூறுகிறார்:—

ஸ்கூல் பைனல் (அதாவது மெட்ரிகுலேஷன்) என்னும் பரீக்ஷையில் தேறி, தங்களுடைய செலவுகளைத் தாங்களே செய்துகொண்டு ரிஜிஸ்ட்ராரிடம் வேலைகற்றுக்கொள்ள இஷ்டமுள்ளவர்கள் தவிர மற்றயாவரும் சூபர்வைஸர் அல்லது இன்ஸ்பெக்டர் வேலைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். அப்படி கற்பித்தலில் ரிஜிஸ்ட்ராரும் அவருடைய உதவி உத்தியோகஸ்தர்கள் சொல்லிக்கொடுக்கும் வித்தையைக் கேட்பதுடன், பூர்ண அனுபவமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் ஒருவரின்கீழ் கொஞ்சகாலமிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அப்படி கற்பிக்கவேண்டியவர்கள் 50 முதல் 80 வரையில் தேவையென்றும் ரிஜிஸ்ட்ரார் சொல்வதை கவர்ன்மெண்டார் ஒப்புக் கொள்ளுகிறார்கள். கற்ற மனிதர்களின் ஜாப்தா ஒன்று ரிஜிஸ்ட்ராரிடம் இருக்கவேண்டியது. அவர்கள் ஸர்க்கார் இன்ஸ்பெக்டர்களாயாவது, சங்கங்கள் வேண்டும்போது அவைகளின் அதிகாரத்திற்குட்பட்ட இன்ஸ்பெக்டர்களாயாவது நியமிக்கப்பட வேண்டும்.

---

## 1916 - ௵த்திய B. & G. விளம்பரம் நெம்பர் 42.

எல்லா ஸொஸைடிகளுக்கும் தணிக்கை உத்யோகஸ்தர்களுக்கும்.

இம்பீரியல் கம்மிடியார் கூட்டுறவைப்பற்றி பின்வருமாறு அவர்களுடைய அறிக்கையின் 160-வது பாராவில் சொல்லியிருக்கிறார்:—

"ஸெண்ட்ரல் பாங்கிகள் அநேகம் ஸொஸைடிகளிலிருந்து தங்களுக்குக் கிடைக்க வேண்டியதும் அப்போது கொடுபடாததுமான வட்டியைக்கூட லாபத்திற்சேர்த்து கணக்குப்பார்த்து,மெம்பர்களுக்கு லாபப்பங்காக கொடுத்து விடுகிறார்கள். வட்டி கொடுக்கவேண்டிய கெடுவு தாண்டியும் கடன் வாங்கின ஸொஸைடி யானது பிறகும் கொடுக்காமலிருக்கும் விஷயங்களில் மேற்சொன்ன ஏற்பாடு பிசகே".

கம்மிடியார், போர்ட், கவர்ன்மெண்டார் எல்லாருடைய ஸம்மதத்தின் பேரில், எந்த விதமான ஸொஸைடியாயிருந்தாலும ஸரி; வருஷக்கடைசியில் மெம்பர்களிடமிருந்தாவது வட்டி கெடுவு கடந்து பிறகும் வராமலிருப்பின், அதை லாபத்திற் சேர்க்காமலிருக்க வேண்டியதென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. மேலும், கிராம ஸொஸைடிகளின் விஷயத்தில், மெம்பர்களுக்காவது, ஸொஸைடிகளுக்காவது கடன் கொடுத்த தொகைகளுக்கு வட்டி சேராமலிருப்

பின், (அதாவது, 12 மாஸங்களுக்கு வட்டி செலுத்த வேண்டியிருந்து, அதில் கணக்குகள் முடிக்கும் ஸமயத்தில் 9 மாஸங்களுக்குச்செலுத்த வேண்டியிருந்தால்) அவைகளையும் லாபத்திலிருந்து கழித்து விடவேண்டியது. இந்த மார்க்கம் ஒரு ஸொஸைடியின் நிஜமான நிலைமையை அறிவதற்கு வழியாகும். ஆனால் கொடுக்க வேண்டிய வட்டியைப் பற்றி, கொடுத்ததையும் கொடுபட வேண்டிய பாக்கியையும் சேர்த்து கணக்கில் பதிவதென்பதை இப்போது நடந்து கொண்டிருக்கும் வழக்கமானது இன்னும் இருந்து கொண்டிருக்கலாம்.

(2) லாபத்தைக் கணக்கிடும் இந்தப் புதுவழி அதிகமாகவே ஸொஸைடிகளின் லாபங்களைக் குறைத்துவிடுமாகையால் அந்தந்த வருஷக் கடைசியில் அந்தந்த வருஷ வட்டி பாக்கிகளை விடாமல் வஸூல் செய்து விடவேண்டியது.

(3) தணிக்கைப் பத்திரங்களில் இதுவரையில் செய்திருக்கும் மாறுபாடுகளை ஆடிடர்கள் கவனிக்கவேண்டியது.

---

## விளம்பரம் Gl நெம்பர் 717 (1916). தேதி-6-3-1916

விவசாய மில்லாச் சங்கங்களுக்கு:—சென்னை ராஜதானியிலுள்ள (கோவாப்ரேடிவ் ஸொஸைடிகள்) கூட்டுறவு சங்கங்களின் மேன்பார்வை மாறுதலைப்பற்றி கவர்ன்மெண்டார் 2 வருஷங்களுக்கு முன்னால் ஆரம்பஞ்செய்து, கூட்டுறவை விசாரிக்கும் இம்பீரியல் கம்மிடியாரால் பூர்ணமாய் ஒப்புக்கொள்ளப்பட்டு, இப்போது அந்தப்படி நடத்தும் விஷயத்தை பொது பத்திரிகைகளிலிருந்து நீங்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். 1913ம் வருஷத்தில், கவர்ன்மெண்டார் அதுவரையில் தாங்களே ஏற்று வந்த மேன்பார்வை பரிசோதனைச் சிலவுகளை இனிபொறுப்பதற்காக ஸொஸைடிகள்பேரில் தணிக்கை வரி ஏற்படுத்த உத்தேசித்தபொழுது கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாதமற்ற ஜனங்கள் அந்த மேல்விசாரணையை ஸொஸைடிகளிடமே விட்டுவிட்டால் அவர்கள் செய்து கொள்வார்களென்று அபிப்பிராயப்பட்டார்கள். இந்த உடன்பாடு நடக்குமென்ற நம்பிக்கை கொண்டு கவர்ன்மெண்டார் ஆக்டின்கீழ் பொறுக்கக்கூடிய ஸொஸைடிகளுக்கு மாத்திரம் விதிக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மற்றவைகளுக்கு விதிக்காமல் நிறுத்திவிட்டார்கள். இம்பீரியல் கம்மிடியாரின் ரிபோர்ட்டின்பேரில் இந்தியா கவர்ன்மெண்டார் முடிவு உத்தரவுகளைச் செய்ததினால் பட்டணத்து பாங்கிகளிலும் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும் தணிக்கை வரி [illegible] அவர்களிடமிருந்தே கவர்ன்மெண்டார் [illegible] ர்கள். இதன் மத்தியில், இனி மேன்



பார்வைக்கு ஸொஸைடிகளை ஏற்படுத்தி அதின் செலவையும் அவைகளை பொறுக்கவேண்டுமென்றும், மேன்பார்வை யென்பதில் முதல் தணிக்கை, அதாவது வருஷத்திற்கொருமுறை அல்லது அப்போதப்போது தங்களுடைய பண நிலைமையைக் காட்டக்கூடிய கணக்குகளைத் தயார் செய்வது என்பதும் அடங்கியிருக்கிறதென்றும், அந்தக் கணக்குகளை ஆடிட்டர் ஸரி பார்க்கவேண்டும்.

கூட்டுறவைப்பற்றி விசாரித்த கம்மிடியாரும், எங்கெங்கே கூடுமோ அந்தந்த விடங்களில் ஸொஸைடிகளே இரண்டு ஆள் மாகாணங்களை நியமித்து, ஒரு ஸ்தாபனம் ராஜதானி ஆடிட் யூனியனின் ஆளுகைக்குள்ளும், மற்றொன்று ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியனின் ஆளுகையின் கீழ் மேன்பார்வைக்கும் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மேலும், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் தணிக்கை சிப்பந்திகள் வருஷத்திற் கொருமுறை ஒவ்வொரு பாங்கியின் கணக்குகளைப் பரிசீலனை செய்வதைவிட இரண்டு மூன்று வருஷத்திற் கொருமுறை செய்வதே நலமென்றும் ஷை கம்மிடியார் சொல்லுகிறார்கள். ஏனெனில், பெரிய அர்பன் அல்லது, பிரிவினை அல்லது, இன்ஷ்யூரென்ஸ் ஸொஸைடிகளில் கணக்குகள் வெகு சிக்காயிருக்குமானதால், ரிஜிஸ்ட்ராரே ஏற்பாடுகள் செய்து யூனியன்களிடமிருந்து செலவை வஸூலிக்கவேண்டியிருக்கும்.

இந்த ராஜதானியைப்பற்றின வரையில், கவர்ன்மெண்டார் முதல் தணிக்கையும் மேன்பார்வையும் ஸொஸைடிகளால் ஏற்படுத்தப்படும் சிப்பந்திகளாலே சரிபார்க்கப்படவேண்டுமென்றும், ஸர்க்காரால் நியமிக்கப்படும் பரிசோதகரால் வருஷத்திற் கொருமுறை கணக்குகள் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். முதல் பரிசோதனைக்கும் கடைசிப்பரிசோதனைக்கும் வித்தியாஸம் கொஞ்சகாலம் அனுபோகத்தில் வந்தபிறகுதான் தெரியுமென்பது அவர்களுடைய கொள்கை.

மேன்பார்வையூனியன்களை ஏற்படுத்தி ஸொஸைடிகளின் மேன்பார்வை, யென்ற அதிகாரத்தை அவைகளிடம் ஒப்புவிக்கும்படி ரிஜிஸ்ட்ரார் செய்த ஏற்பாட்டை எல்லா ஸொஸைடிகளும் பூர்ணமாய் ஒப்புக்கொண்டிருக்கின்றன. அநேக காரணங்களை உத்தேசித்தும் பட்டிணங்களின் பாங்கிகள் கவர்ன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒழுங்கைவிட்டு தனியாயிருக்கக்கூடாதென்று வெளிபடையாய் ஏற்படுகிறது. நாட்டுக்குறிய ஸொஸைடிகளைப்போல் அவ்வளவு அடிக்கடி மேன்பார்வை அவைகளுக்கு வேண்டியதில்லையாயி

னும் அந்தச் சிப்பந்திகளை அந்த வேளைகளில் அவைகளின் கணக்குகளை முதல் தணிக்கை செய்யும்படி நியமிப்பது பொருந்தும்.

கோவாப்பரேடிவ் ஸொஸைடிகளின் கணக்குகளையும் பரிசோதனை செய்யக்கூடிய சக்தியை யுடைய கற்ற ஸூபர்வைஸர்களை நியமித்து மேற்சொன்ன பட்டணத்து பாங்கிகளின் கணக்குகளையும் நன்றாய் முழுதும் தணிக்கை செய்யும்படி ஏற்படுத்தினால் கவர்ன்மெண்டு பரிசோதகரால் தணிக்கை செய்யப்படுவதற்குக்கூட அவைகள் தனியாய் வரிசெலுத்தவேண்டிய அவசியமிராது.

மேற்சொன்ன காரணங்களினால், எல்லா பட்டணத்து பாங்கிகளும், அவைகளின் எல்லைகளுக்குள் ஏற்பட்ட ஜில்லா பாங்கிங் யூனியன்கள், ஜில்லா மேன்பார்வை யூனியன்கள் அல்லது தாலுக்கா யூனியன்களோடு சேர்ந்து, மற்ற கிராம ஸொஸைடிகளைப் போலவே கட்டணங்களும் செலுத்த ஒப்புக்கொள்ளுமென்று ரிஜிஸ்ட்ரார் நம்புகிறார். அப்படி செலுத்தப்பட்ட கட்டணத்தை பிரதம தணிக்கைக்கும் மேன்பார்வைக்கும் செலவு செய்யப்படும்.

ஐக்கிய இயக்கத்தில் பட்டணத்து பாங்கிகளே பூர்ண அங்கங்கள். அந்த பாங்கிகளின் மேன்மேலும் வளர்ச்சியானது கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்திருப்பதால் அந்த சங்கங்களை நிலைநிறுத்த வேண்டிய செலவுகளை பாங்கிகள் செய்வதுந்தவிர அவைகளின் வியாபார அனுபோகத்தை அந்த சங்கங்களுக்குத் தெரிவிக்கவும் வேண்டும். கடைசியாக, கவர்ன்மெண்டார் சட்டத்தை உபயோகப்படுத்தி அவைகளிடமிருந்து பணவஸூல் செய்வதற்குமுன் பிரதம பரிசோதனைக்காக ஏற்படும் கட்டணங்களை முன்னதாகவே செலுத்தி விடுவது நலமேயாகும்.

## 1916-ம் வருஷத்திய விளம்பரம் R.O.C. 832.

(1) மதராஸ் செங்கல்பட்டு ஜில்லாக்களிலுள்ள எல்லா கோவாப்ரேடிவ் ஸொஸைடிகளுக்கும் சொல்வது யாதெனில் :—

கவர்ன்மெண்டார் 1916-௵ பிப்ரவரி௴ 23உயில் செய்த ரிவினியூ உத்திரவு நெம்பர் P. 425 பிரகாரம், தஞ்சாவூர், தென் ஆற்காடு, மதராஸ், செங்கல்பட்டு இந்த ஜில்லாக்களின் பொறுப்பை பட்டணத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஒரு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரிடம் ஒப்புவித்திருப்பதால், அவர் இனி, 1912-ம் ௵த்திய ஆக்டு 2-ன் கீழ் சொல்லப்பட்ட ரிஜிஸ்ட்ராருக்குள்ள அதிகாரங்களை உபயோகப்படுத்தி அந்தந்த ஜில்லாக்களில் கூட்டுறவு சங்கங்களை ஏற்



முறிப்பதைப்பற்றி ஷை ஆக்டில் 39 முதல் 42 வரை ஸெக்ஷன்களில் சொல்லப்பட்ட அதிகாரத்தை மாத்திரம் செலுத்தமாட்டார். மேற்சொன்ன ஜில்லாக்களிலுள்ள ஸொஸைடிகள் இனி தங்களுடைய தபால்கள் முதலிய அறிக்கைகளை, மதராஸ், சேபாக்கிலிருக்கும் கோவாப்ரேடிவ் ஸொஸைடீஸ் அஸிஸ்டெண்ட ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டியது.

(2) தென் கன்னடம், மலையாளம் முதலிய ஜில்லாக்களில் இருக்கும் கோவாபரேடிவ் ஸொஸைடிகளுக்குத் தெரிவிப்பது யாதெனில் :—

கவர்ன்மெண்டார் 1916௵ பிப்ரவரி௴ 23உயில் செய்த ரிவினியூ உத்திரவு நெம்பர். P. 425 பிரகாரம், கோயம்புத்தூர், மலையாளம், தென்கன்னடம், நிலகிரி ஜில்லாக்களின் பொறுப்பை கள்ளிக்கோட்டையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு அஸிஸ்டெண்ட ரிஜிஸ்ட்ராரிடம் ஒப்புவித்திருப்பதால், அவர் இனி 1912-ம் ௵த்திய 2-வது ஆக்டின் கீழ் சொல்லப்பட்ட ரிஜிஸ்ட்ராருக்குள்ள அதிகாரங்களை உபயோகப்படுத்தி அந்தந்த ஜில்லாக்களில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி மேன்பார்வை பார்த்துவருவார். ஆனால், ஸொஸைடிகளை முறிப்பதைப்பற்றி ஷை ஆக்டில் 39 முதல் 42 வரை ஸெக்ஷன்களில் சொல்லப்பட்ட அதிகாரத்தைமாத்திரம் செலுத்த மாட்டார். மேற்சொன்ன ஜில்லாக்களிலுள்ள ஸொஸைடிகள் இனி, தங்களுடைய தபால்கள் முதலிய அறிக்கைகளை, கள்ளிக்கோட்டையிலிருக்கும் கோவாப்ரேடிவ் ஸொஸைடீஸ் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டியது.

## பம்பாயில் ஐக்கிய முயற்சி கிரஹச் சங்கம்

பம்பாயில் மெம்பர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்துவரும், ஸரஸ்வத் கோவாப்ரேடிவ் ஹௌஸிங் ஸொஸைடீ என்று சொல்லும்படியான ஓர் ஐக்கிய முயற்சிச் சங்கம் வேலை செய்துவருகின்றது. இச்சங்கத்தால் கட்டப்பட்ட குடியிருப்பு மனைகட்டுகளை சென்ற டிஸம்பர் மாதத்தில் ஆனரபில் மிஸ்டர் J. P. ஆர் அவர்கள் திறக்கும்படியான வைபவம் நேர்ந்தது. அப்பொழுது பிரமுகர்களும் கனவான்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். அப்பொழுது மிஸ்டர் ஆர் கூறியதாவது:— குடியிருப்பு மனைகளில்லாமற் திண்டாடுபவர்கள் முக்கியமாய் மத்திய வகுப்புக்காரர்களே; இந்தியாவில் இம்மாதிரி வேலை செய்துவரும் சங்கங்களில் இது முதல் முதலில் யேற்பட்டதாகும். இந்த சங்கத்தின் மெம்பர்கள் நாளடைவில் மெம்பர்கள் தாங்கள் குடியிருக்கும் மனைகளுக்கு சொந்தக்காரராகிறார்கள். ஸர் பரபாசங்கர் பட்டாணி என்

னும் தனிகர் இச்சங்கத்திற்கு ரூ. 24,000 மிகவும் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்திருப்பதால், சங்கமானது திருப்திகரமாய் வேலை செய்து வருகிறது. இதில் மெம்பர்களாகச் சேர்ந்தவர்கள் விசேஷமாய் ரூ. 100-லிருந்து ரூ. 200 வரையில் சம்பளம் வாங்கும் குமாஸ்தாக்கள்.

## ஹிஸ் எக்ஸலென்ஸி கவர்னரும் காஞ்சீபுரம் நெசவுக்காரர்களின் யூனியனும்.

1916௵ ஜனவரி௴ 27௳யில், ஹிஸ் எக்ஸலென்ஸி சென்னை கவர்னரவர்கள் காஞ்சீபுரம் நெசவுக்காரர்களின் யூனியனைப் பார்வையிட்டார். பின்வரும் ஹிஸ் எக்ஸலென்ஸியின் குறிப்பு ஐக்கிய முயற்சிக்காரர்களால் திருப்தியுடன் வாசிக்கப்படும்:—

"காரிய தரிசியாகிய மிஸ்டர் ராமச்சந்திர சாஸ்திரியின் சுய நலம் பாராததும் புகழும்படியான பிரயத்தனமும், அந்த யூனியன் தன்னுடைய மெம்பர்களுக்கும், காஞ்சீபுரத்து நெசவுக்காரர்களுக்கும் செய்துவரும் அருமையான வேலையும் தகுந்தபடி வெளியுதவியை பெறவேண்டும்."

## மதராஸில் ஐக்கிய முயற்சி.

பின் கூறப்பட்ட ஸ்டேட்மெண்டால் சென்னை ராஜதானியில், 1914—15 ௵த்தில் ஐக்கிய இயக்கத்தின் அபிவிருத்தியை நன்கறியலாம்:—

| வகுப்பு. | சங்கத்தின் சங்கியை | | மெம்பர்களின் சங்கியை | | தொழில தனம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15 | 1913-14 | 1914-15. |
| ஸெண்ட்ரல் ... | 16 | 30 | 941+232 சங்கங்கள் | 1,035+735 சங்கங்கள் | ரூ. 52,19,370 | ரூ. 69,34,614 |
| விவசாயச் சங்கங்கள் ... | 1,253 | 1,446 | 77,902 | 90,086 | 55,79,926 | 64,56,589 |
| மற்ற சங்கங்கள் | 64 | 124 | 21,694 | 27,603* | 15,21,889 | 18,19,944 |
| மொத்தம். | 1,333 | 1,600 | 100,537 +232 சங்கங்கள் | 118,726 +735 சங்கங்கள் | 1,23,21,185 | 1,42,10,14 |

* 129 சங்கங்கள் சேர்ந்துள்ளன.



### ஸெண்ட்ரல் சங்கங்கள்.

ஸெண்ட்ரல் சங்கங்களின் சங்கியை 15லிருந்து 30-க்கு அதிகரித்திருக்கிறது; அவைகளில் 10 ஜில்லா பாங்கிகள், 20 மேற்பார்வை செய்யும் யூனியன்கள். பிரஸ்தாப வருஷத்தில் 2 ஜில்லா பாங்கிங் யூனியன்கள் (செங்கற்பட்டு ஜில்லாவிலும், கிருஷ்ணா ஜில்லாவிலும்) ஸ்தாபிக்கப்பட்டன. செங்கற்பட்டு ஜில்லா பாங்கிங் யூனியனின் விசேஷக் குறிப்பானது, அச்சங்கம் இம்பீரியல் கம்மிடியார் ரிபோர்ட்டில் கூறியப்பிரகாரம் யேற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஜில்லாவிலுள்ள தொழிலாளிகளும், உயர்ந்த வகுப்பினர்களும், அதற்கு உழைத்து வருதலால், "இம்மாதிரி பாங்கிகள் மத்திய வகுப்பினர்களின் உதவியைக்கவரா்து" என்று இம்பீரியல் கம்மிட்டியார் சொன்ன வார்த்தைகள் இதற்குப்பொருந்தாது. சென்ற இரண்டு வருஷங்களாய், ரெஜிஸ்ட்ராரவர்கள் ஜில்லா பாங்கிகளை பாங்கிங்யூனியன் மாதிரியில் நிர்மாணஞ்செய்து வருகிறார். பிரஸ்தாப வருஷத்தில் ஸெண்ட்ரல் பாங்கிகளின் பங்குமுதல் சுமார் ரூ. 465 லக்ஷமும், கடனும், டிபாஸிட்டும் ரூ. 4,500 லக்ஷமுமாயிருந்தன; இப்பாங்கிகளின் வருஷ நிகர் லாபம் ரூ. 1,03,574. இப்பொழுதிருக்கும் 20 யூனியன்களில், 12 பிரஸ்தாப வருஷத்தில் யேற்பட்டன. அவைகளுடன் சுமார் 400 சங்கங்கள் சேர்ந்திருக்கின்றன. மதராஸ் பிரோவின்ஷியல் யூனியனானது, 1914௵ ஜனவரி மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, இப்பொழுது 124 சங்கங்கள் சேர்ந்துள்ளன. தனிநபர் மெம்பர்கள் சுமார் 100 பேர்களிருக்கிறார்கள். அதின் பார்வையின் கீழ் மூன்றாவது மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸானது நடைபெற்றது. சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி பிரசுரிப்பதை இதின் வசத்தில் கவர்ன்மெண்டார் ஒப்பிவித்திருக்கிறார்கள்.

---

### விவசாயச் சங்கங்கள்

பிரஸ்தாப வருஷத்தில் 200 கிராமச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன; 9 முறிவடைந்தன. இச்சங்கங்களின் பங்கு முதலானது ரூ. 3,71,781லிருந்து ரூ 4,07,480க்கும், நிகர்லாபம் ரூ. 1,17,740லிருந்து ரூ. 1,42,515க்கும் அதிகரித்தன. கடன்கள் சரியான தவணைகளிற் கொடுபடாமல், அநேக பாங்கிகளில் பாக்கி விழுந்தது விசனிக்கத்தகுந்ததே. நாணய லேவாதேவி செய்யாதிருக்கும் விவசாயச்சங்கங்கள் 8 இருக்கின்றன.

---

### மற்றச் சங்கங்கள்

விவசாய மல்லாத மற்ற சங்கங்களின் சங்கியை 80 லிருந்து 103-க்கும், அவைகளின் பங்குமுதல் ரூ. 3.36 லக்ஷத்திலிருந்து ரூ. 4.19 லக்ஷத்திற்கும் உயர்ந்திருக்கிறது. புதிதாய் 3கோவாப் ரேடிவ் ஸ்டோர்ஸ்கள் யேற்பட்டிருக்கின்றன. கட்டிடச்சங்கங்கள் 4 ரெஜிஸ்டடர் செய்யப்பட்டன. இவ்விதச்சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் பிரொவின்ஷியல் பண்டிலிருந்து கடன்கொடுப்பதாய் தீர்மானத்திருப்பதால், இச்சங்கங்கள் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

OFFICE OF THE ... 11 NOV 1916

# மதராஸ் புல்லெடீன் ஆப் கோவாபரேஷன்

என்னும்

# சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி

சம்புடம் VII] 1916ஞு ஜூன்மீ [இலக்கம் 4

## பத்திராதிபர் குறிப்புகள்.

இதுவரைக்கும் இப்பத்திரிகையில் பத்திராதிபரின் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டதில்லை. இப்பொழுதோ வென்றால் நாட்டில் கூட்டு முயற்சித்தொழில் ஸ்திரப்பட்டு விட்டது. ஜனங்களுக்கு இது விஷயத்தில் வெகு அக்கரை உண்டாகியிருக்கிறது. ஹிந்து, நியூ இந்தியா, மதறாஸ் மெயில், மதறாஸ் டயிம்ஸ், இன்னும் முதலிய மற்றப் பத்திரிகைகளில் கூட்டு முயற்சியைப்பற்றி அடிக்கடி எழுதுகிறார்கள். இன்னும் ஜில்லாக்கூட்டு முயற்சிக் கான்பரன்சுகளும், ஸர்க்கில் கான்பரன்சுகளும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. சென்னைச் சட்டநிருபண சபையிலும்கூட இப்பொழுது அடிக்கடி கூட்டு முயற்சியைப் பற்றிப் பேச்சு உண்டாகிறது. இச்சென்னை மாகாண முழுவதிலும் கூட்டு முயற்சியைப் பற்றிய பத்திரிகை இது ஒன்றுதான். ஆகையால் இனிமேலும் இதின் மூலமாய்ப் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளாமல் இருப்பது நல்லதல்ல என்பதை உத்தேசித்து இது முதற்கொண்டு கூட்டு முயற்சியைப் பொறுத்த சகல விஷயங்களிலும் ஜனங்களின் அபிப்பிராயம் இன்னதென்பதை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லி வரப்போகிறோம். இப்பொழுது இரண்டொரு நபர்கள் பிரத்தியேகமாக கவர்ன்மெண்டாருக்கு இது விஷயங்களைப் பற்றித் தனிக் கடிதம் எழுதினாலொழிய் அல்லது கான்பரன்சுகளில் கூடிப் பேசினாலொழிய கவர்ன்மெண்டார் நமது அபிப்பிராயங்களை அறிய விரும்பின போதிலும், அறிந்துகொள்ள மார்க்கமில்லாமலிருக்கிறார்கள் என்பதை உத்தேசித்து இப்பத்திரிகை மூலமாய் கவர்ன்மெண்டாருக்கு ஜன விருப்பங்களைத் தெரிவித்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம். இப்படியே சென்ற 1915ஞு மேமீ த்தில்கூட்டப்பட்ட மதராஸ்பிரொவின்ஷியல்

கோஆபரேடிவ் யூனியன் மீட்டிங்கில் பேசி முடிவுசெய்யப்பட்டு இனிமேல் இந்தக் கூட்டு வர்த்தமானியில் அபிப்பிராயங்களையும் குறிப்புகளையும் ஒழுங்காயும் கிரமமாயும் எழுதிக்கொண்டு வரவேண்டுமென்று இதன் பத்திராதிபர்களான ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்களையும், புரொபஸர் கே. பி. ராமநாதய்யர் அவர்களையும், மிஸ்டர் வி. எஸ். ராமசாமி சாஸ்திரி அவிர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இனிமேல் வெளிவரும் இந்தப் பத்திரிகையின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் முக்கியமாயுள்ள கூட்டு முயற்சி விஷயங்களைப் பற்றிப் பத்திராதிபர் அபிப்பிராயங்களையும், குறிப்புகளையும் கண்டு கொள்ளலாம்.

* * *

ஒவ்வொரு சபையின் நிகர் லாபத்தில் 100-க்கு 50 ரூபாய் வீதம் ரிஸர்வ்பண்டு என்று சொல்லும் க்ஷேமநிதியில் சேர்த்துவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருப்பது யாவரும் அங்கீகரிக்கப்படாமலிருத்தலால் அந்த உத்தரவை ரத்துச்செய்து விட வேண்டுமென்று சென்ற 8 அல்லது 9 மாதகாலமாய்ச் சகல கூட்டு முயற்சிச் சங்கங்களும், முக்கியமாய் சகல அர்பன், சென்ட்றல் பாங்கிகளும் வாதாடிக்கொண்டு வருகின்றன. கவர்ன்மெண்டார் ஜன அபிப்பிராயத்தைக் கேட்டு இச்சட்டத்தை யேற்படுத்தவில்லை. அவர்கள் இப்படி உத்தரவு செய்தது சகலருக்கும் துக்கத்தையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இதைப்பற்றி ஒவ்வொரு சபையும் முக்கியமாக ஒவ்வொரு சென்ட்றல் பாங்கியும் ஆக்ஷேபித்திருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாக் கூட்டுக் கான்பரன்சிலும் மாகாணக்கூட்டுக் கான்பரன்சிலும் இதைப் பற்றிப் பலமாய்க் கண்டனம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு பத்திரிகையிலும் இந்த கவர்ன்மெண்டு உத்தரவைப் பற்றிப்பலமாய்க் கண்டித்து எழுதியிருக்கிறார்கள். மார்ச்சுமீ வெளியான இந்தக் கூட்டு வர்த்தமானியில் ஆனரபில். மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்கள் இதைப் பற்றி வெகு பலமாய் ஆக்ஷேபித்து எழுதியிருக்கிறார். மேலும் சென்ற 1915-ம் ௵ ஏப்ரல்மீ சென்னை மாகாணச் சட்ட சபையில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்தார்:—அத்தீர்மானமாவது :—

1915௵ அக்டோபர்மீ 2௳ மாகாண கவர்ன்மெண்டார் செய்த உத்தரவுப்படி கூட்டுச்சங்கங்கள் தங்கள் நிகர் இலாபத்தில் 100-க்கு 50-வீதம் க்ஷேமநிதியில் சேர்த்து விடவேண்டுமென்ற உத்தரவை ரத்துச்செய்து ஆதியில் இருந்தபடி 100-க்கு 25-ரூபாய் க்ஷேமநிதியில் சேர்ப்பிக்கும்படி செய்யவேண்டுமென இச்சபை கேட்டுக் கொள்ளுகிறது.



ஆனரபில் மிஸ்டர் பி. வி. நரசிம்ம அய்யர் அவர்களும் இதைப் போலவே மற்றொரு தீர்மானங் கொண்டுவர உத்தேசமாயிருந்தார். ஆனால் சாஸ்திரி அவர்கள் மேற்சொன்ன தீர்மானத்தைக்கொண்டு வந்த பிறகு தமது தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டு சாஸ்திரி அவர்களின் தீர்மானத்தைத் தாங்கிப் பேசினார்.

கனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் இந்தக் கூட்டு வர்த்தமானியின் மார்ச்சுமாதப் பிரதியில் என்ன நியாயங்களை எடுத்துக் கூறினாரோ அந்த நியாயங்களையே சட்டசபையிலும் மறுபடியும் எடுத்துச் சொன்னார். ஆகையால் அவைகளை இங்கே விபரிக்க வேண்டியதில்லை. நிகர்லாபத்தில் 100-க்கு 50 வீதம், அதாவது பாதிக்குப்பாதி க்ஷேமநிதியில் சேர்ந்து போனால் பிறகு நபர் ஒன்றுக்கு என்ன டிவிடெண்டு கிடைக்கும், அப்புறம் யார் கூட்டுச் சபைகளிற் சேருவார்கள். இருக்கிற கூட்டுச்சபைகளிலுமிருந்து மல்லவா விட்டு நீங்கிவிடுவார்கள். பிறகு கூட்டு முயற்சி க்ஷீணித்துப் போகாதா என்பதாகப் பேசினார். கனம் மிஸ்டர் நரசிம்பமய்யர் அவர்கள் இது சண்டைக்காலமென்றும் பணத்துக்கு நெருக்கிடையாயிருக்கும் இந்தச் சண்டைக்காலத்தில் கவர்ன்மெண்டார் இவ்வளவு நிர்ப்பந்தமான உத்தரவு செய்திருக்கக் கூடாதென்றும் க்ஷேமநிதி பலமாகத்தானிருக்க வேண்டுமென்றும், ஆனால் பிற்காலநன்மையை உத்தேசித்து தற்காலத்தில் நஷ்ட மடையும்படி செய்யக்கூடாதென்றும் பேசினார். ஐரோப்பிய மெம்பர்களில் ஒருவரான ஆனரபில் மிஸ்டர் மூர்ஹெட் அவர்கள் கூட இதை ஆதரித்துப் பேசினார்.

இருந்த போதிலும் கவர்ன்மெண்டாருக்கு அப்பொழுது இத்தீர்மானத்தை அங்கீகரித்துக்கொள்ளத் தயவில்லாமற் போய்விட்டது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிருஷ்ணாஜில்லா பாங்கியை ஒத்த புதிய சபைகளில் மாத்திரம் இந்த உத்தரவைக் கொண்டு செலுத்த மாட்டோமென்று உறுதிகொடுத்தார்கள். அதைப் போலவே ஒரு சபையில் 4 ரூ. அல்லது 5 ரூபாய் கூட நபர் ஒன்றுக்கு இலாபம் கிடைக்காமலிருந்தால் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் கோஆப் ரேடிவ் ரெஜிஸ்ட்ரார் அவர்களோடு கலந்து யோசனைபண்ணிக் கூடுமானால் அந்தச் சங்கங்களிலும் ஷை உத்தரவை அமுல்செய்ய மாட்டார்களென்றும் உறுதி கொடுத்தார்கள். ஆனால் கனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரிகளின் தீர்மானத்தை அங்கீகரித்துக் கொள்ளவில்லை.

கவர்ன்மெண்டார் முன் சொன்னபடி உறுதிப்பாட்டின்படி ஒவ்வொரு சங்கத்தையும் நுண்ணிய ஆராய்ச்சிசெய்து கொண்டிருக்

தால் கவர்ன்மெண்டாருக்கு எவ்வளவு கஷ்டமும் தொந்தரவும் நேரிடும். கவர்ன்மெண்டார் ஏன் வீணாக இவ்வளவு வேலைகளைத் தலையிற்போட்டுக் கொள்ளவேண்டும்? அதனால் கவர்ன்மெண்டாருக்கு வீண் சிரமம் உண்டாவது மல்லாமல், சபைகளின் வேலைக்கும் சுணக்கம் நேரிடும். ஆகையால் அநேக மெம்பர்கள் தங்கள் பங்குப்பணத்தை வாபீஸ் வாங்கிக்கொண்டு சங்கங்களை விட்டு விடுவார்கள். இதனால் பல சபைகள் வீணாய்க் கெட்டுப்போக நேரிடுமல்லவா? பேராசையால் அதிக லாபத்தைவிரும்பிச் சபைகள் கெட்டுப் போகாதபடி இந்த ஏற்பாடு செய்திருப்பதாக கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். ஆனால் இப்பொழுது இருக்கிற நிலைமையில் எந்தக் கூட்டுச்சபையிலும் தன் நியாயத்துக்குமேல் அதிகமான இலாபம் கிடையாது. மேலும் எந்தச் சங்கத்திலாவது 100-க்கு 9 ரூபாய்க்குமேல் தலை யொன்றுக்கு இலாபம் கொடுக்கக் கூடாதென்பதாகக் கவர்ன்மெண்டார் ஏற்கனவே உத்தரவு செய்திருக்கிறார்களே. இப்படி ஒவ்வொரு சபையிலும் கிடைக்கக்கூடிய இலாபத்தை ஏற்கனவே மட்டுப்படுத்திவிட்டு அதிகமான லாபம் கிடைக்குமென்று பயப்பட்டால் நியாயமா? இன்னும் லாபவீதத்தைக் குறைப்பதற்காக 100-க்கு 50 வீதம் க்ஷேமநிதியில் போய்ச் சேர வேண்டுமென்று உத்தரவு செய்வது யாருக்காகிலும் ஒப்புமா? இந்த உத்தரவு அநாவசியமல்லவா. இதனால் கெடுதல் உண்டாகக் காணவில்லையா—ஆனால் இந்த வருஷம் கூட்டுமுயற்சி சங்கங்கள் கணக்கு வழக்குகளைப் பார்த்து முடிக்கும்போது மறுபடியும் இதைப் பற்றிப் பலமாய் ஆக்ஷேபித்தால், அப்பொழுதாவது கவர்ன்மெண்டார் இந்தநிர்ப்பந்தமான உத்தரவை ரத்து செய்துவிடுவார்களென்று நம்புகிறோம்.

* * * *

அதே சட்டசபை மீட்டிங்கில் கனம் நரசிம்மஅய்யர் அவர்கள் கூட்டு முயற்சியைப்பற்றி மற்றொரு தீர்மானங் கொண்டுவந்தார். அது பின்வருமாறு :—

“இம்பீரியல் கூட்டுமுயற்சிக் கமிட்டியார் செய்திருக்கும் சிபாரிசுகளை அனுசரித்துக் கவர்ன்மெண்டார் கூட்டுமுயற்சி சம்பந்தமான சட்டதிட்டங்களிலும் உத்தரவுகளிலும் ஏதாவது மாறுதல்களைச் செய்ய உத்தேசமாயிருக்கும் பக்ஷத்தில் அந்த மாறுதல்களைச் செய்யுமுன் அவைகள் கூட்டு முயற்சிக் காரருக்குப் பொதுவாக நன்மையுண்டாவென்றும் கூட்டுமுயற்சிக் காரர்களின் பொது நோக்கத்தையும் அபிப்பிராயங்களையும் அறிந்து கொண்டாலொழிய எவ்விதமான மாறுதலும் செய்யக்கூடாதென்று இச்சபை கேட்டுக் கொள்ளுகிறது.”



ஆனால் கவர்ன்மெண்டார் இந்தத் தீர்மானத்தையும் அங்கீகரித்துகொள்ளவில்லை. இம்பீரியல் கூட்டுமுயற்சிக் கமிட்டியாரின் ரிபோர்ட் ஏற்கெனவே அநேக மாதக் கணக்காக வெளியிடப்பட்டிருக்கிறதென்றும், யார் வேண்டுமானாலும் அதைப்பற்றித் தன் அபிப்பிராயத்தைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக் கொள்ளலாமென்றும், இந்தியா கவர்ன்மெண்டார் இதைப்பற்றி ஜூன்மீ 30உ-க்குள் சென்னை மாகாண கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்களென்றும்,’ ஆகையால் இன்னும் தாமதம் செய்ய முடியாதென்றும் கவர்ன்மெண்டு மெம்பர்களாகிய ஆன்ரபில் கார்டியூ’ அவர்கள் வாதித்தார்.

* * * * *

அதன்மேல் ஆனரபில் மிஸ்டர் ராமசந்திரராவ் அவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்:—

“ஆன்ரபில் கார்டியூ அவர்கள் ஆன்ரபில் மிஸ்டர் நரசிம்மய்யருடைய தீர்மானத்தைச் சரியாய்க் கண்டு பிடிக்கவில்லையென்று எனக்குத் தோன்றுகிறது. இம்பீரியல் கமிட்டியின் ரிபோர்ட்டைப்பற்றி மிஸ்டர் நரசிம்மய்யர் யாதொன்றும் சொல்லவில்லையே. அந்த ரிபோர்ட்டை அனுசரித்து சட்டதிட்டங்களில் ஏதாவது மாறுதல் செய்ய யோசித்தால் அதைப் பொதுஜனங்களுக்கு அறிவித்துப் பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றல்லவோ அவர் கேட்டார்.

அவர் ஏன் அப்படிக் கேட்டாரென்றால்:—கவர்ன்மெண்டார் ஏதாவது ஒரு மாறுதலைச்செய்துவிட்டால் அப்புறம் அந்த மாறுதலை இலேசில் விடமாட்டார்கள். ஆகையினாலேயே ஏதாவது மாறுதல் செய்யுமுன் எங்களைக் கலந்துகொண்டு செய்யவேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். கூட்டுமுயற்சியைப்பற்றிய யோசனைகளை வெளியிடுவதால் இராஜிய நிர்வாகத்துக்கு எவ்விதமான மோசமும் நேரிடப்போகிறதில்லையே.”

ஆகிலும் ஆன்ரபில் ஸர் கார்டியூ இந்தியா கவர்ன்மெண்டாருக்கு க்ஷேமநிதி, தணிக்கை வரி முதலிய காரியங்களைக் குறித்து எழுதியிருக்கும் கடிதத்தை பகிரங்கப்படுத்த முடியாதென்றும் இந்தத் தீர்மானத்தை அங்கீகரித்துக்கொள்ள முடியாதென்றும் முடிவில் ஒரே பேச்சாகச் சொல்லிவிட்டார். கவர்ன்மெண்டார் இப்படி இந்தத் தீர்மானத்தையும் தள்ளிவிட்டதைப்பற்றி நமக்கு மிகவும் வருத்தமாகிறது. கூட்டுமுயற்சியைப் பொறுத்த சகல காரியங்களிலும் கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் ஒருவரை யொருவர் பூரணமாகக் கலந்து கொள்ள வேண்டுமென்பதே நமது விருப்பம். ஏறக்குறைய மற்

றெல்லா விஷயங்களிலும் இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்பிராயம் பொதுஜன அபிப்பிராயத்துக்கு ஒத்திருக்கிறது. இதில் அதிகாரிகளின் அபிப்பிராயமும் ஜன அபிப்பிராயமும் அநேகமாய் ஒன்று போலவே யிருக்கவேண்டும். ஆகையால் இது விஷயத்தில் கவர்ன்மெண்டார் கவலை யெடுத்துக்கொண்டு இச்சட்டத்தை ரத்துசெய்வார்களென்று நம்புகிறோம்.

* * * * *

கிருஷ்ணாஜில்லா கூட்டுகான்பரன்சின் நடவடிக்கைகளை யெல்லாம் விஸ்தாரமாக மற்றொருபக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். நண்பர்களைக் கவனமாக வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். செல்லப்பள்ளி ஜமீந்தாரின் புத்திரராகிய குமாரராஜா அவர்கள் அக்கான்பரன்சின் வரவேற்பு கமிட்டியின் தலைவராயிருந்தார். அவர் நல்ல படிப்பாளி, விவேகி, பொதுநலப் பிரியர். அவ்வளவு கல்வியும் பொதுநல நாட்டமும் ஜமீன்தார்களுக்குள் அபூர்வமேயாகும். அவர் தெலுங்குப் பாஷையில் கூட்டுமுயற்சியின் நன்மைகளைப்பற்றி ஒரு துண்டுப் பத்திரிகைப்போட்டு அதை இலவசமாக எல்லோருக்கும் கொடுத்துவருகிறார். ஜமீந்தாரி கிராமங்களில் கூட்டுச் சங்கங்கள் வெகு அபூர்வமாய் இருக்கின்றன வென்றும், ஜமீந்தார்கள் இதில் அக்கரையில்லாமலிருக்கிறார்களென்றும், இனிமேலாவது ஜமீந்தார்கள் இப்படியிராமல் தங்கள் தங்கள் இடங்களில் கூடுமான மட்டும் கூட்டுச்சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவர் மேற்சொன்ன கான்பரன்சுக் கூட்டத்தில் விண்ணப்பம் செய்திருக்கிறார். அவர் சொல்வதை மற்ற ஜமீந்தார்கள் கவனித்து இனிமேலாவது அவர்களும் கூட்டுமுயற்சியை அபிவிருத்தி செய்வார்களாக. முக்கியமாக நமது தமிழ் ஜமீந்தார்கள் இதைக் கவனிக்கவேண்டும். ஷை கான்பரன்சில் அக்கிராசனம் வகித்த மதுரை ரேய்சாகேப் கே. ராமசாமி அய்யர் அவர்கள் காலஞ்சென்ற திவான்பகதூர் ஆதிநாராயணய்யா அவர்களுக்குப் பிறகுக் கவர்ன்மெண்டு தொடர்பில்லாத கூட்டுமுயற்சிக்காரர்களுக்குள் முதன்மையா யிருக்கிறார் எனலாம். அவருடையபிரசங்கம் அகத்தியம் படிக்க வேண்டியது. ஸ்ரீமான் கே. நாகேஸ்வரராவ் பந்துலுகாரு அவர்களின் முயற்சியால் தெலுங்கு ஜில்லாக்களில் கூட்டுமுயற்சி வெகுவிரைவாய் விருத்தியடைந்துகொண்டு வருவது மிகவும் சந்தோஷம். இப்பொழுது தெலுங்கு ஜில்லாக்களில் கூட்டுச்சங்கங்கள் ஏராளமாய் அதிகரித்து விட்டதோடு சிறு ஊர்களிலும் கிராமங்களிலும் கூட்டுமுயற்சியானது பிரபலமாகிவிட்டது. நல்ல தேசாபிமான வாலிபர்கள் ஊர் ஊராய்ச் சென்று கூட்டுமுயற்சியின் நன்மைகளை போதித்து வர வேண்டிய தவசியம்.

## கூட்டுத்தொழிற் சங்கங்கள் விவசாயக் கருவிகளை சப்ளை செய்தல்.

லக்னௌ நகரத்தில் கூடிய கூட்டுமுயற்சிக் கான்பரன்சில் மிஸ்டர் பி. ஸி. பார்ட் என்னும் கனவான் கீழ்க்கண்ட சாராம்ச மடங்கிய வியாசத்தை ஆங்கிலேயத்தில் படித்தார் :—

இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் உள்ள கூட்டுத்தொழில் சங்கங்கள் அநேகமாய் மெம்பர்களுக்கு விவசாயக் கருவிகளைச் சப்ளை செய்கின்றன. இப்படி விவசாயக் கருவிகளைச் சப்ளை செய்வதற்காகவே அநேக கூட்டுச் சபைகள் அத்தேசங்களில் ஏற்பட்டிருக்கின்றன. மூலதனத்திலிருந்து கொஞ்சம் பணத்தை யெடுத்து உழு கருவிகளைக் கிரயத்துக்கு வாங்கி அவைகளை மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுவது அச்சபைகளின் வழக்கம். அந்த வாடகைப் பணத்திலிருந்து வாங்கின விலையை வெகுசீக்கிரத்தில் எடுத்துவிடலாம். அதுவுமன்றி மீந்த வாடகைப் பணத்தைப் பிரத்தியேக நிதியாக ஏற்படுத்தி இன்னும் வேண்டிய விவசாயக் கருவிகளையெல்லாம் வாங்கிக்கொண்டு, இப்படியாகக் காலக்கிரமத்தில் சாஸ்திர முறைப்படி சாகுபடி செய்வதற்கு என்னென்ன ஆயுதங்களும் இயந்திரங்களும் தேவையோ அவைகளையெல்லாம் சீக்கிரத்தில் சேர்த்துவிடலாம். இதனால் மெம்பர்கள் முன்னை விடக்குறைவான செலவில் முன்னைவிட அதிகமான நிலங்களை முன்னிலும் பலமடங்கு எளிதாகப்பயிரிட்டு அதிகமான விளைவுகளை அடைந்து ஆஸ்தியிலும், அந்தஸ்திலும், உயர்ந்து மொத்தத்தில் முன்னை பார்க்கிலும் வெகு க்ஷேமமாகவும் சுகமாகவும் வாழ ஏதுவாகிறது.

இந்த நாட்டில் பெரிய நிலச்சுவான்தார்களின் தொகை வெகு சொற்பம். விசேஷமாய் எல்லாரும் சிறு சமுசாரிகளாயிருக்கிறார்கள். ஆகையால் விலையுயர்ந்த இயந்திரங்களை வாங்க வேண்டுமென்று அவர்கள் விரும்புவதில்லை. அப்படி விரும்பினபோதிலும் அவர்களால் முடியாது. ஆகையால் அதிக விலை இல்லாத கலப்பை முதலிய சாமானிய உழுகருவிகளையே அவர்கள் நாடுகிறார்கள். அதில் இந்த நாட்டில் செய்யப்படும் உழுகருவிகள் அவ்வளவு நன்றாயில்லையென்பதையும், சாஸ்திர முறைப்படி செய்த நவீன ஆயுதங்களை உபயோகித்தால் இன்னும் நன்றாய்ச் சாகுபடி செய்யலாமென்பதையும், அவர்கள் நன்றாய் கண்டுகொண்டார்களானபடியால் அவர்கள் சாஸ்திர ரீதியான சாமான்களையே வாங்கவேண்டுமென்று ஆவலா

யிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் சொந்தமாக இந்த சாமான்களைவாங்கிக் கொள்ளக்கூடிய பணக்காரர்களல்ல. அப்படிக் கொஞ்சம் பணச்செலவைப் பார்க்காமல் வாங்கிவிட்டாலும், அது நஷ்டமேயாகும். ஆனால் ஒவ்வொருவரும் தனித்தனியாக் வாங்கிக்கொள்ள முடியாத இந்த சாமான்களை 40 அல்லது 50 பேர் ஒன்றாகச்சேர்ந்து சுளுவாக வாங்கிவிடலாம். பிறகு பொதுவாக அனுபவிக்கலாம். இதில் யாருக்கும் நஷ்டமில்லாமல் எல்லாருக்கும் இலாபமாக முடியும். இதனாலேயே பொதுவான கூட்டுச்சங்கங்களை இதற்காக ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லுவது.

உதாரணமாகக் கருப்பட்டி காய்ச்சும் அண்டாக்களையும், கரும்பு பிழியும் இயந்திரங்களையும் எடுத்துக் கொள்ளுவோம். இப்பொழுது இந்த இயந்திரங்களெல்லாம் கண்டிராக்டர்கள் கையிலிருக்கிறது. வேண்டுமானவர்கள் கண்டிராக்டர்களை அன்பு அனுசரித்து அவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆகையால் கண்டிராக்டர்கள் இஷ்டம்போல வாடகை கேட்கிறார்கள். இப்பொழுது கரும்பு பிழியும் யந்திரம் ஒன்றுக்கு 25 ரூ. வாடகை கேட்கிறார்கள். பல சமயங்களில் 40 ரூ. கூடக் கேட்கிறார்கள். 'சில கண்டிராக்டர்கள் ஒரு ஏக்கரா கரும்பு பிழிவதற்கு 5 ரூபாய் வீதம் ஏக்ரா கணக்கு வீதம் விழுக்காடு வாங்குகிறார்கள். எப்படியாவது யந்திரம் அவசியமாக வேண்டியிருப்பதால் ஜனங்கள் அவர்கள் என்ன கேட்டபோதிலும் அதைக்கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. ஆனால் ஏன் இந்தக் கஷ்டம்? ஏனிவ்வளவு நஷ்டம்? சுமார் 86 ரூ. போட்டால் முதல்தரமான நவீன மூன்று ரோலர்மில் (யந்திரம்) ஒன்று வாங்கினால் அது 10 வருஷத்துக்குச் குறைவில்லாமல் உழைக்கும். இப்பொழுது ஒவ்வொரு தடவையிலும் கண்டிராக்டருக்கு முப்பது நாற்பது ரூபாய்வீதம் விழுக்காடு கொடுத்து வாங்கிக்கொண்டே போனால் 10 வருஷத்தில் வாடகை எவ்வளவு ஓடிப்போகும்! நூற்றுக்கணக்காய்ச் செலவழிவதுமல்லாமல் நம்முடைய யந்திரம் என்றுசொல்லிக்கொள்ள முடியுமா? அப்படியானால் ரூ. 86 போட்டு முன் சொன்ன ரோலர் மில் ஒன்று வாங்கிக் கொண்டால் அத்துடன் வேறு செலவுயில்லாமற் போகுமல்லவா! அது எவ்வளவு லாபம். முதலில் கொஞ்சம் பணச்செலவைப் பார்த்துப் பிறகு ஏராளமாக நஷ்டமடையலாமா? இன்னும், இப்பொழுது கண்டிராக்டர்கள் வாடகைக்கு விடும் மில்லுகள் கரும்புகளின் சாறு அவ்வளவையும் சரியாகப் பிழியக் கூடியவைகளல்ல. அரை குறையாகவே பிழியும். மூன்றில் ஒரு பாகம் சாறு கரும்புகளிலேயே தங்கி இருந்து விடுகிறதென்று பரிசோதித்



துக்கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் புத்திசாலியான எந்த வியாபாரியாவது இந்த மில்லுகளை உபயோகிப்பனா? முன் சொன்ன ரோலர் மில்லுகளோ அப்படியல்ல. ஒரு துளி சாறு கூட நிற்காமல் எல்லாவற்றையும் நன்றாய்ப்பிழிந்து விடும். மேலும்கண்டிராக்டர்கள் கொடுக்கும் மில்லுகளை அடிக்கடி ரிப்பேர் செய்யவேண்டும். ரோலர் மில்லுகள் அப்படியல்ல; 10-வருஷத்துக்கு குறைவல்லாமல் நன்றாய் உழைக்கும்.

இவ்வளவு இலாபமான ரோலர் மில் ஒன்று ரூ. 86 போட்டு வாங்கிக்கொள்வது கஷ்டமல்ல. அப்படியே ஒவ்வொருவரும் ரூ 86 போட முடியாதென்ற போதிலும், கூட்டு சபைகள் பொதுவாக இப்படிப்பட்ட இயந்திரங்களை வாங்கி வாடகைக்கு விட்டால் விலையை எடுத்து விடுவதுமல்லாமல் இலாபமும் அடையலாம். அப்படியே ஒவ்வொரு சபையிலும் வாங்கிக்கொள்ள இயலாதென்ற போதிலும் சென்ட்ரல் பாங்கிகளென்று சொல்லும் பெரிய சபைகளில் இவ்விதமான இயந்திரங்களில் 10 அல்லது 20 உஜிதம் போல் வாங்கி அவைகளைச் சிறிய கிராமச்சபைகளுக்கு வாடகைகளுக்குக் கொடுக்கலாமல்லவா.— அப்படியே கருப்புக் கட்டி (கருப்பட்டி) வெல்லம் இவைகளைக் காய்ச்சக்கூடிய பெரிய அண்டாக்களையும் சங்கங்களில் வாங்கி சப்ளை செய்தால் ஒவ்வொருவரும் தனித்தனியாக வாங்குவதைவிட லாபமாக முடியும்.

இன்னும் புல் அறுக்கும் ஊளை யந்திரத்தை எடுத்துக்கொள்வோம். இதின் விலை 40அல்லது 50ரூபாய் இருக்கும். இது ஒன்றுஇருந்தால் ஒரு நாளில் 80 மாடுகளுக்குப் போதுமான புல் அறுத்துப்போடும். ஆகையால் ஒருகிராமச்சபையில் இரண்டொரு யந்திரங்கள் இருந்தாற்போதும். ஊரிலுள்ள மாடுகளுக்கெல்லாம் எளிதாய்ப்புல்லறுத்துப்போடும்; ஆகையால் கிராமக்கூட்டு முயற்சிச்சங்கம் ஒவ்வொன்றிலும் இந்தமிஷின் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். விலை சொற்பமாகவேயிருப்பதால் இதை வாங்குவதுகஷ்டமல்ல. ஒரு விவசாயக் கூட்டு சபையில் 20 மெம்பர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு ஜதை மாடுகள் உண்டு. அப்படியானால் மாதவாரியாக ஆளுக்கு 4 அணா வீதம் வசூலித்தால் 1 வருஷத்துக்குள் ஒரு புல் அறுக்கும் யந்திரம் வாங்கிவிடலாம். இப்பொழுது எவ்வளவோ கஷ்டப்பட்டு எத்தனையோ ஆள்களைக்கொண்டு அறுக்கும் புல்லைவிட அதிகமாய் அறுக்கலாம்.

அப்படியே ஒவ்வொரு சபையிலும் ஏர்களையும் வாங்கி மெம்பர்களுக்கு சப்ளை செய்யலாம். ஏரில் பலவிதங்கள் உண்டு. சாமா

னியமான சிறிய ஏர்களை மெம்பர்களே எளிதாக ஆள் ஆளுக்கு வாங்கிக்கொள்ளலாம். ஆனால் இந்த சாமானிய ஏர்களையும்கூட எளிய ஜனங்களின் சபைகளில் பொதுவாகவாங்கி உபயோகித்துக்கொள்வது மிகவும் நல்லது. ஆனால் பெரிய ஏர்களையும் சாஸ்திர முறைப்படிசெய்த புதுமாதிரி ஏர்களையும், ஒவ்வொருவரும் வாங்கிக்கொள்ள முடியாது. இந்த ஏர்களின் விலை ரூபா 25-முதல் 50-ரூபா வரையில் உண்டு. ஆகையால் புல் அறுக்கும் யந்திரத்தை வாங்கிக்கொள்வதைப்போலவே தலைக்கு 4 அணு வசூல்செய்து இந்த ஏர்களையும் இலேசாக வாங்கிக்கொள்ளக்கூடும். சில நிலங்களில் ஆழமாய் முளைக்கும் களைகளை சாமானியமான சிறு ஏர்களைக்கொண்டு பிடுங்கி யெறிய முடியவில்லை. குடியானவர்கள் வெகுநாளாக வெகுகஷ்டப்பட்டுக் கையால் தோண்டி அவைகளைப் பிடுங்கவேண்டியிருக்கிறது. ஆனால் சாஸ்திரமுறைப்படி செய்த பெரிய ஏர்களை உபயோகித்தால் எவ்வளவு ஆழமாய்வளரும் களை யென்றாலும் ஒரு நிமிஷத்தில் வேரோடு தூரோடு பிடுங்கி யெறிந்துவிடும். அப்புறம் நிலத்தில் களை அண்டாது. இன்னும் தண்ணீர் பாய்ச்சாமல் எவ்வளவு கெட்டியான நிலத்தையும் உழுது போடக்கூடிய உருக்கு ஏர் இருக்கிறதே அது ஒரு துளி தண்ணீர் கூடப்பாய்ச்சாமல் பாறைபோன்ற நிலத்தையும் பிளந்துவிடக் கூடியது. அது இருந்தால் மழையில்லாத காலத்திலும், எந்தகாலத்தில் வேண்டுமானாலும் பருத்திவயல்களையும் சோளம் முதலிய தானியம் வளரும் எந்த வயலை வேண்டுமானாலும் வெகு சுலபமாக உழுதுவிடலாம். மழைக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. தண்ணீர் பாய்ச்சவேண்டியதில்லை. ஆனால் இந்த ஏரின் விலைகொஞ்சம் அதிகம் ஆகையால் கூட்டுச் சபைகளே இவைகளை வாங்கி சப்ளை செய்ய வேண்டும். இன்னும் உழுவதற்கு வேண்டிய சாமான்களையும் எரு, விதை முதலியவைகளையும் சபைகள் சப்ளை செய்தால் சபைகளுக்கும் மெம்பர்களுக்கும் லாபமாக முடியும்.

ஆனால் ஒரு விஷயத்தை ஒவ்வொரு மெம்பரும் முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சபையில் ரொக்கமாக ரூபாய் கடன் வாங்கியிருந்தால் அதைத் தவணை தவறுமுன் திருப்பிக் கொடுத்து விடுவிதில் எவ்வளவுகருராகஇருக்கவேண்டுமோ அப்படியே எரு, விதை, கலப்பை, ஏர், வேறு எந்தச்சாமானையாவது, வஸ்துவையாவது கடன்வாங்கி யிருந்தபோதிலும் அதற்கான வாடகையை அல்லது விலையை உடனுக்குடனே தவறாமல் கண்டிப்பாகச் செலுத்தி விடவேண்டியது அவசியம். அப்படிச் செலுத்தா விட்டால் சபைக்கு நஷ்டமாய் முடிவதுடன் அப்புறம் இப்படிப்பட்ட சாமான்களைச்



சப்ளை செய்யமுடியாமலும் போகும். அதனால் கடைசியில் மெம்பர்களுக்கே கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகின்றன. இது வரையில், மெம்பர்களும், சபைகளும், சென்ட்ரல் பாங்கிகளுங்கூட இதுவிஷயத்தில் அஜாக்கிரதையாய் இருந்திருக்கின்றன. கவர்ன்மெண்டார் கூடன் கொடுத்த சாமான்களுக்கு வேண்டிய வாடகை, விலை முதலியவைகளை அப்போதைக்கப்போது கொடுக்கவில்லை. இப்படியிருந்தால் எப்படி வேலை நடக்கிறது? இனிமேல் அவ்விதம் இருப்பது தவறு.

---

## மறுகடன்

திருவண்ணாமலை ம-ா-ா-ஸ்ரீ. M. S. சேஷாசலமய்யரவர்கள் எழுதிய
ஆங்கிலேய வாசத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

ஐக்கிய சங்கங்களிலே மறுகடன் என்பது சாதாரணமாய் பல பொருள் கொடுக்கக் கூடுமானாலும் விசேஷமாய் (Reloaning) மறு கடன் கொடுப்பதென்பது "கடனுக்காக திருப்பி செலுத்தப்பட்ட தொகையை மறுபடி கடன் கொடுக்கும் வகைக்கே" சொல்லப்படுகிறது; அதாவது சங்கங்களில் கடனுக்காக வசூலாகும் அசல் வட்டிகளிலிருந்து மெம்பர்களுக்குச் சங்கங்கள் வேறு கடன் கொடுப்பது. இம்முறை சரியாவென இவ்வியாசத்தில் ஆலோசிக்குமுன் சிற்சிலவிஷயங்கள் கவனிப்பதவசியம். ஐக்கிய சங்கங்களை சாதாரண பாங்கிகளுக்கு ஒப்பிட்டு பாங்கிக்குள்ள நடவடிக்கைகளை ஐக்கியசங்கங்கள் அனுசரிக்க வேண்டுமென நாம் முயலுதல் இயலாது. பாங்கிகள் தனி மனிதர்களாலோ அல்லது பணக்காரரான சிலராலோ தங்களின் முதல் தொகைகளுக்கு தக்க லாபம் கிடைக்க வேண்டுமென்னும் ஒரு முக்கிய எண்ணத்தைக் கொண்டு ஸ்தாபிக்கப்படுகின்றன. ஐக்கிய சங்கங்களோவென்றால் ஏககாலத்தில் சுலபமாய் கடனெடுக்கச் சக்தியற்ற பல நடுத்தர மனிதர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பொதுப் பொறுப்பின் பேரில் கடன்வாங்கி தாங்களே உபயோகப்படுத்திக் கொண்டு நாளடைவில் தங்கள் வரும்படியில் சிக்கனஞ் செய்ததைக் கொண்டு பைசல் செய்வதற்காக ஏற்படுத்தப் படுவதால் இச்சங்கங்களிலே பெரு முதலுங்கிடையாது, லாப எண்ணமும் கிடையாது. பாங்கிகளில் பணமுள்ளவர்கள் யாராயினும் சேரலாம். கடன்கள் வட்டி விதாசாரத்தைப் பொறுத்ததேயன்றி இன்னவிஷயத்துக்கென்று வரையறை யில்லை. கடன் வாங்குபவர்க்கு கடனெடுக்கச்சக்தியில்லையாயினும் கொடுக்கும் கடனுக்குப் போதுமான சொத்திருக்

தால் போதுமானது. பொதுவாய் கடன்களும் வரவேண்டியவட்டியுடன் எவ்விதத்திலாயினும் திருப்பக்கொடுபட வேண்டுமென்னும் ஒரே நோக்கமன்றி கடன்வாங்குபவர் இந்தக் கடனைக்கொண்டு விர்த்தியாகிறாரா வென்றும் விசாரமில்லை. ஐக்கிய சங்கங்களோ அப்படியன்றி பற்பல விதங்களிலும் அதில்சேரும் மெம்பர்களுக்கு நன்மையுண்டாக்கவே ஏற்படுத்தப் படுகின்றன. முதலாவது, மெம்பரில்லாதவர்களுக்கும் சங்கத்திற்கும் நடவடிக்கையில்லை. லாபநஷ்டம் எல்லா மெம்பரையும் சேர்ந்தது. மெம்பருக்கு லௌகிக விஷயங்களில் நன்மை பயக்கக்கூடியதும் சுலபமாய் குறித்த காலத்திற்குள் சிக்கனத்தால் பைசல் செய்யக்கூடியதுமான அளவே கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இன்னின்ன விஷயங்களில் செலவிடப்பட்டதென விசாரிக்கப்படுகிறது. மெம்பர்களுக்கு நன்னடத்தையவசியம். இன்னும் இத்தகைய பல பெரும் வித்தியாசங்கள் உண்டு. இப்படியிருக்க பாங்கிகளைப்போல் இச்சங்கங்களும் வேண்டிய முதலைச்சேகரித்து அதிகலாப ஏதுவான வழிகளைக் கையாடல் வேண்டுமென சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். இச்சங்கங்களுக்கு முதல் வெகு சொல்பமான பங்கு பணமும் மெம்பர்களின் வரையறுக்கப்படாத பொறுப்பும் நாணயமுமேயாம். பாங்கிகளைப்போல் கூடுமானவரையில் கிடைக்கக்கூடிய தொகைகளை முதலாகவும் டிபாசிட்டுகளாகவும் சேகரம் செய்து அதிகவட்டிக்குச் செலவிடுவதென்பதில்லாமல் சிக்கனத்தை மெம்பர்களுக்குள் புகட்டக்கூடிய டிபாசிட்டுகளுடன் வெளிக்கடன் வாங்கி மெம்பர்களுக்கு கொடுக்கப்படுகிறது. ஆகவே இவ்விரண்டு ஸ்தாபனங்களும் ஒன்றிற்கொன்று மாறான விஷயங்களை உடையனவாயிருக்க வசூலாகும் தொகைகளை வாங்கிய கடனுக்கு பூராவும் செலுத்தாமல் மறுகடன் கொடுப்பது சங்கத்துக்கு லாபஹேது வென்றும் அதை நிறுத்துதல் சரியல்ல வெனவும் சிலர் அபிப்பிராயம். இது கொஞ்சமும் சரியல்ல. சங்கங்களில் வசூலாகும் கடன்களை மறுபடி சங்கங்களிலேயே உபயோகப்படும்படி விடுவதால் உண்டாகும் கெடுதிகள் பலவுள. சுமார் முதல் 10 வருஷங்களில் சங்கங்கள் வைக்கப்பட்டு நடவடிக்கைகளை கவனித்துப் பார்த்தக்கால் கனம் ரிஜிஸ்திரார் அவர்கள் 1911-12-ம் வருஷ ரிபோர்ட்டில் சங்கங்களிலே 9 வித ஒழுங்கீனங்களிருக்கின்றன வென்று கண்டிருக்கிறார்கள். அவையாவன 1. பெருந்தொகை கையிருப்பு. 2. பஞ்சாயத்தார் கடன். 3. வேறு இரவல் கடன். 4. ரசீது கொடாமலிருத்தல் 5. நபர்ஜாமீன். 6. பாக்கி நிலுவை 7. மறுகடன். 8. சங்கங்களுக்கு மறுகடன். 9. ஒரு மனிதன் சங்கம்.



மறுவருஷம் ரிபோர்ட்டில் இந்த துரப்பியாசங்காளும் சங்கங்கள் 889 இருப்பதாயும் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் இவ்வொழுங்கீனங்களை நிவர்த்திக்க, தக்க மார்க்கத்தை யோசித்து வந்த சில ஐக்கிய பான்மையோர் மறுகடனை நிறுத்துதலே தக்க வழி யெனத் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். மேலும் ஐக்கிய பாவம் விர்த்தியாக வேண்டுமென விரும்பும் ஒவ்வொருவரும் இத்தகைய ஒழுங்கீனங்கள் நடைபெறக்கூடாதென முயலுகிறார்கள். ஒவ்வொரு மெம்பரிடமும் காலாகாலங்களில்மீதம்செய்யக்கூடியதொகைகள் அவ்வளவையும் வரப்பற்றி கடனை குறித்த காலத்துக்குமுன்னமேயே பைசல்செய்து கடனின்று மீட்பது சங்கங்களின் நோக்கம் போல சங்கத்தின்கடன்களையும் கிடைக்கக்கூடிய தொகையெதுவாயினு மதைக்கொண்டு சீக்கிரத்தில் நிவர்த்திப்பதே யாரும்விரும்பத்தக்கது. மெம்பர்களுக்காயினும் சரி சங்கங்களுக்காயினும் சரி ஏற்பட்ட கடன்களை நாளடைவில் பைசல் செய்து அங்கத்தினரின் பொதுக்கடனைக்குறைப்பதே சங்கங்களின் நோக்கம். இதே விஷயத்தை நமது மதராஸ் கவர்னர் லார்ட் பெண்ட்லாண்ட் பிரபு மதராஸ் மாகாணச்சபையை ஆரம்பித்தகாலத்தில் ஐக்கிய சங்கங்கள் ஏற்பட்ட பிறகு குடிகளின் கடனும் அதிகரித்திருப்பதை நாம் கவனித்து குறைக்க வழிதேட வேண்டுமென்றார்.

மெம்பர்களதும் சங்கத்தினதும் கடனை யெவ்வளவு சீக்கிரத்தில் நிவர்த்தி செய்ய முடியுமோ அவ்வளவே சங்கம் நன்னிலைமைக்கு வருமார்க்கமாகும். இதற்குப் பெருந்தடையாய் மெம்பர்களை யாயினும் பொதுவாய் சங்கத்தையாயினும் மென்மேலும் கடன்காரராக்கும் துணைக்கருவி இந்த "மறுகடன்" என்னும் துர்வழக்கமே.

சங்கங்களிலே வசூலாகும் தொகைகளைக் கொண்டு மறுகடன் கொடுக்கலாமென்றிருப்பதே சகல ஒழுங்கீனங்களுக்கும் அஸ்திவாரமாயிருக்கிறது. இன்னொரு கடனைக் கொண்டு சங்கத்தில் செலுத்த வேண்டிய பாக்கிகளுக்கு முஜீரா செய்யவும், கையிருப்புத் தொகைகளைச் செலவிட காலதாமதமாவதால் வேறு பல கடன்கள் ஏற்படவும், கடன் எடுக்கமுடியாதவிஷயங்களில் இன்னொருவர் பேரால் எழுதும்படியும் இன்னும் பலவித இடையூறுகளுக்கும் இடமாகிறது. இவைகளையே 9வித ஒழுங்கீனங்களாய் கனம் ரெஜிஸ்திரார் அவர்கள் பிரித்திருப்பது. வசூலாகும் தொகைகள் எவையாயினும் அப்போதுக்கப்போது கடன் கொடுத்த பாங்கிக்கு கடன் தீரும் வரையில் அனுப்பும்படியும், கெடுகடந்த கடன்களை கிரமப்படி வசூல் செய்யும் படியும், அதிக தொகையைகையிருப்பு வைக்காமலிருக்கும் படியும் சங்கங்

களை ஒழுங்குபடுத்தினால் பிறகு எவ்வித கிரம விரோதங்களுக்கும் இடமில்லை.

ஆனால், சங்கங்களில் மெம்பர்களை புதிதாய் சேர்ப்பதற்கும், சேர்ந்தவர்களுக்கு அதிகக் கடன் வேண்டுங்காலங்களிலும் கொடுக்க முடியாமல் சங்கம் வருந்துமென்பதும், சங்க பஞ்சாயத்தார்கள் கௌரஸ்தர்களாயிருக்க இவ்வளவு நிர்ப்பந்தமான விதிகளேற் படுத்துவதால் அவர்களுக்கு ஓர் நம்பிக்கைக் குறைவும் ஏற்படுமென்பதும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சாதாரணமாய் மேல் கடன்கள் கொடுக்கும் காலங்களில் பஞ்சாயத்தார்கள் பலவித தாக்ஷணியங்களாலும். பீடிக்கப்பட்டு தகாத கடன்களும் கொடுக்கநேரிடுவதால் பஞ்சாயத்தார் கொடுக்க தீர்மானித்த கடன்களை மேலதிகாரிகள் பரிசீலனை செய்து சாங்கிஷன் செய்வதால் கடன்கள் வெகு கவனிப்புடன் கொடுக்கக் காரணமாகும். இப்படி சாங்கிஷன் செய்யும் கடன்களை புதிய கடன்களாக வாங்கிக் கொடுப்பதில் சங்கங்களுக்கு நேரும் கஷ்டங்கள் இன்னதென புலப்படவில்லை. தவிர அவசரமான கடன்களுக்காக வருஷ ஆரம்பத்திலேயே வேண்டிய அளவு சாங்கிஷன் பெற்று அப்பொழுதுக் க்ப்பொழுது வாங்கிக் கொள்வதிலாவது வசூலில் முஜீரா செய்து கொள்வதிலாவது ஆட்சேபணை காணோம். ஏனெனில் இக்கடன்கள் அறுவடை காலத்தில் பூராவும் திருப்பப்படவேண்டியன. ஆகவே, பின் கடன் கொடுக்க மார்க்கமின்றி சங்கங்கள் வருந்துமென்பது கொஞ்சமும் ஏந்து கொள்ளக்கூடியதல்ல. பதிலாக, சங்கங்கள் மகாஜனங்கள் சம்மதமின்றி ஒரு வரிருவரிட்ட செய்கைகளால் தகாத கடன்கள் கொடுக்க நேர்ந்து பொதுவில் ஏற்கும் அபாயங்களை நிவர்த்தி செய்ய முடியும். பஞ்சாயத்தாரிடம் நம்பிக்கையில்லாமல் இத்தகைய விதிகள் கொணரப்படுகிறதென்பது யாரும் நினைக்கக் கூடியதல்ல. பொதுஜனங்களின் சிரத்தையைக் காக்க கண்டிப்பான விதிகள் ஏற்படுவதால் பஞ்சாயத்தாரும் தாக்ஷணியங்களுக்குட் படாமல் நன்னடக்கையைக் கையாட ஹேதுவாகிறது. உதாரணமாக ஓர் கிராம சங்கத்தில் ஓர் பணக்காரர் பஞ்சாயத்து மெம்பராயும், ஒரு குடியானவன் காரியதரிசியாயும் வைத்துக் கொள்வோம். பணக்காரர் பணம் செலுத்த வேண்டிய காலத்தில் அந்த பாக்கிக்கு சேர்த்து ஏதோ வேறு விஷயத்திற்கென்று ஒரு கடன் கொடுக்கும்படியும், அதில் பாக்கியை முஜீரா செய்யும்படியும் காரிய தரிசியை சொல்லவும் அது ஆட்சேபகர மில்லாத விஷயத்தில் காரியதரிசிக்கு இஷ்டமில்லையாயினும் தாக்ஷணியத்தால் கட்டுண்டு அதன்படி செய்யவும் நேரிடும். ஆனால் மறுகடன் நிறுத்தப்



படாமல் லாபத்தில் பாக்கிகள் செலுத்தப்படும் வரையில் வேறு கடன் கொடுக்கப் படயாட்டாது. மேல் கடனும் அதிகாரிகள் பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதால் உண்மையான விஷயங்களுக்கே வாங்க வேண்டிவரும். ஆதலின் பஞ்சாயத்தார்களில் உண்மையாய் ஐக்கிய பாவத்தை விர்த்தி செய்ய உழைப்போர் யாவரும் மறுகடன் நிறுத்துவதை தங்களுக்கு ஒழுங்குடன் சங்கங்களை நடத்த ஏற்பட்ட ஓர் துணைக்கருவியாய் பாவிப்பார்களே யன்றி தங்களுக்கு வேறுவித கண்ணியக் குறைவு ஏற்பட்டதாய் நினைக்க மாட்டார்கள். அப்படி நினைப்பதனால் அவர்கள் செய்யும் நடவடிக்கைகளை பரிசோதிக்க இன்ஸ்பெக்டர்கள், சூபர்வைசர்கள், ஏற்பட்டிருப்பதும் இவர்கள் மேல் அதிகாரிகளின் உத்திரவுகளுக்கும் சட்டங்களுக்கும் உள்ளடங்கி நடக்கும்படியிருப்பதும் பெரிய கண்ணியக் குறைவே யாகும். ஆதலால் சங்கங்களில் வசூலாகும் தொகைகளை அவ்வப்போது ஸெண்டரல் சங்கங்களுக்கு பாக்கியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அனுப்பிவிடவும், மெம்பர்கள் கட்ட வேண்டிய பாக்கிகளை வசூலிப்பதில் முக்கிய கவனம் செலுத்தவும் ஒழுங்கேற்படுதல் அவசியமானது. இவைகள் சங்கங்களில் ஏற்பட்ட பிறகு தான் சங்கங்களின் உண்மையான நிலைமையும் அறியக்கூடும். அதற்கு முன் சங்கங்களைப் பற்றிய நடவடிக்கைகள் விசேஷமாய் நம்புதலுக்கிட மின்றியிருக்கும்.

1915—16-ம் வருஷத்தில் இந்த திருவண்ணாமலை யூனியனைச் சேர்ந்த 35 சங்கங்களுக்கும் அமலுக்கு கொண்டுவரப்பட்டு அதன்படி நடை பெறுவதால் உண்டான நன்மைகள் மிகவும் மெச்சத் தக்கது. இந்த அனுபவத்தைக் கொண்டு ஐக்கிய பான்மையுள்ளோர் யாவரும் அங்கீகரிப்பார்களென்னும் நோக்கங்கொண்டே இவ்வியாச மெழுதலானேன்.

---

## வங்காளத்தில் ஐக்கியமுயற்சி.

கூட்டுறவுச் சபைகளின் ஆதிகர்த்தாக்களில் ஒருவராகிய ஜெகப் பிரசித்திபெற்ற மிஸ்டர் உல்பு என்வர் 1914-15-ம் வருஷத்துக்குரிய வங்காளக் கூட்டுறவு முயற்சி ரிபோர்ட்டைப் படித்துப்பார்த்து வங்காளக் கூட்டுமுயற்சி ரிஜிஸ்திரார் அவர்களுக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்:—

(1) கூடியசீக்கிரம் காலதாமதமின்றி வாங்கின கடனை அடைக்க வேண்டுமென்று தாங்கள் கூறியிருப்பது சரிதான். இந்த விஷயத்தில் மிதமாயிருக்கக்கூடாது. மிதமாயிருப்பதினால் பல கெடுதல்கள் நேரிடும். ஆகிலும் மற்றக்காரியங்களையும் கவனிக்கவேண்டும். இரண்

டொரு பெயர் பல கஷ்டநஷ்டங்களால் உடனே வாங்கின கடனை அடைக்கமுடியாமலிருக்கலாம். அப்பொழுது அநாவசியமாய் வற்புறுத்த வேண்டியதில்லை. கொஞ்சம் தயவாக நடக்கலாம். இல்லாவிட்டால் கூட்டுச்சபைகளினால் என்ன பிரயோஜனமென்று ஜனங்கள் கேட்க நேரிடும்.

(2) கூட்டுச் சபைகளிலும் சென்ட்ரல் பாங்கிகளிலும் பணக்குறைவு நேரிட்டுக் கொடுக்கவேண்டிய பாக்கிகள் அதிகமாகும்பொழுது என்ன செய்யலாமென்று கேட்கிறீர்கள்; ஒவ்வொருவேளைகளில் இப்படிப்பட்ட நெருக்கிடைகள் நிச்சயம் உண்டாகும். அப்பொழுது மாகாண முழுவதற்கும் ஆதாரமான புரவின்ஷியல் பாங்கிதான் கெடி சபைகளைத் தாங்கிக்கொள்ளவேண்டும். ஆனால் கூட்டுறவுச் சபைகளில் டிபாஸிட்டுதொகைகள் அதிகமாயிருந்தால் அநேகமாய் இப்படிப்பட்ட பணக்கஷ்டங்கள் நேரிடாதாகையால், டிபாஸிட்டுதொகைகளை அதிகரிக்க முயலவேண்டும்.

(3) பொதுவாகவே கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் பிராமிசரி நோட்டுகள் நல்ல தஸ்தாவேஜிகளான படியால், கூட்டுறவுச் சபைகளில் கடன் கொடுக்கும்பொழுது பிராமிசரி நோட்டுகளை எழுதி வாங்கிக்கொள்ளுவது மிகவும் நல்லதென்பது என்னுடைய அபிப்பிராயம்.

(4) மெம்பர்கள் பழையகடன்களை யெல்லாம் உடனே ஒரே அடியாக அடைத்துவிட வேண்டுமென்பது அவ்வளவு சரியல்ல. ஆனால் இந்தவிஷயத்தில் சமயோசிதமாக நடந்து கொள்ளுவதே உசிதம்.

(5) பணம் கொடுக்கல் வாங்கல் செய்யாத கூட்டுச்சபைகளுக்கு மதிப்பு உண்டாக இன்னும் நாள் செல்லும். கைத்தொழில்களை நடத்துகிற கூட்டுச்சபைகளுக்கு தற்சமயம் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பால் சப்ளைசெய்யும் சபைகள் சீக்கிரத்தில் நல்ல வேலை செய்யுமென்று நம்புகிறேன். முக்கியமாக விவசாயம் நடத்தும் கூட்டுச் சபைகள் வருங்காலத்தில் பிரபலியமாக விளங்குமென்பது நிச்சயம். கவர்ன்மெண்டு விவசாய இலாகா இது விஷயத்தில் விவசாயக் கூட்டுச் சபைகளுக்கு வேண்டிய ஒத்தாசை செய்யவேண்டும். கூட்டுமுயற்சி ஸ்டோர்ஸ் (அதாவது கூட்டுப் பண்டகசாலைகள்) முன்னுக்குவர இன்னும் கொஞ்சக்காலம் பிடிக்குமென்று நினைக்கிறேன். ஆகிலும் ராஜதானியென்று உலகமெல்லாம் புகழப்பட்ட சாலமோன் அரசன் சொன்னதுபோல் எத்தனை நிலங்களில் விதைக்கிறோமோ அத்தனை நிலங்களில் விதைப்பது உத்தமமேயாகும். (அதாவது, எல்லாவிதங்களிலும் கூட்டுறவை அபிவிருத்திசெய்து சகல வகைப்பட்ட கூட்டுச் சங்கங்களையும் ஏற்படுத்தவேண்டியது நமது கடமை.)

# ஐக்கிய முயற்சியின் அபிவிருத்தி.

## மைசூரில் கூட்டு முயற்சி அபிவிருத்தி.

1. பொது:—

மைசூரில் கூட்டுமுயற்சி பொதுவாகக் கீழ்க்கண்ட விஷயங்களில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது :—

| | | |
|---|---|---|
| சங்கங்களின் தொகை | ... | 816 |
| மெம்பர்களின் தொகை | ... | 59,910 |
| மூலதனம் | ... | ரூ. 34,73,043 |
| நடவடிக்கைகள் | ... | 1,47,59,163 |
| க்ஷேமநிதி | ... | 100,000 |

2. கூட்டுக் கைத்தொழில்:—

கைத்தொழில் கூட்டு முயற்சியால், வெல்லம் செய்தல், கரும்பு பிழிதல், நெல் குத்துதல் முதலியவைகள் அபிவிருத்தியடையக் கூடியனவாய்த் தோன்றுகின்றன. இவ்விதமான கைத்தொழில் கூட்டு சங்கங்கள் 10 ஏற்பட்டு மைசூர் கவர்ன்மெண்டார் அவைகளுக்கு மொத்தம் ரூ. 45,000 உதவி செய்திருக்கிறார்கள்.

3. விவசாயக் கூட்டு :—

ஐக்கிய நாணயச் சங்கங்களால் எவ்வளவு நன்மைகள் விளைகிறதென்பதைக் குடியானவர்கள் அனுபோகத்தால் நன்றாய் அறிந்துகொண்டார்களாதலால், கூட்டு விவசாயம் இந்நாட்டில் ஓங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்குள் கூட்டு முயற்சி ஸ்திரப்பட்டு விட்டதென்று இதற்குள் சொல்லமுடியாது. ஒவ்வொரு இடங்களில் விவசாயிகள் இப்பொழுது கூட்டாகச்சேர்ந்து, எரு வாங்குவதும், விதை வாங்குவதும், நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொள்ளுவதும் உண்டு. நாளாவட்டத்தில் விவசாயக் கூட்டு முயற்சி வெகு அபிவிருத்தி அடையுமென்று நன்றாய் எதிர் பார்க்கலாம்.

4. கூட்டுக் கட்டிட முயற்சி:—

பங்களூரில் கூட்டுக் கட்டிடச் சங்கமொன்று இயங்கி வருகிறது. அதற்குப் புரொவின்ஷியல் கோ ஆபரேடிவ் பாங்கி ரூ. 32,250 அட்வான்சாகக் கடன் கொடுத்திருக்கிறது. அதைக் கொண்டு கெடி சபையைச் சேர்ந்தவர்கள் பங்களூரைச்சேர்ந்த கவிபுரத்தில் நடக்கும் கட்டிட வேலைகளுக்குக் கடன் கொடுத்தும், ஆலோசனை சொல்லியும், மேல்பார்த்தும், இன்னும் பலவழிகளில் சகாயம்

செய்தும் வருவதுடன், கட்டிட வேலைகளுக்கு வேண்டிய சமான்களை வாங்கி அவைகளைக் கடையில் விற்பதைவிடக் குறைந்த விலைக்கு சரசமாக மெம்பர்களுக்கு விற்றுவருவதன்னியில், வேண்டுமானால், மெம்பர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துக்கொண்டும் வருகிறார்கள். கூட்டுக் கட்டிடச் சங்க வகையில் இது சிறந்து விளங்குமென்பது நிச்சயம். இதைவிடக் கொஞ்சம் நாள்ப்பட்ட மற்றொரு சபையும் இதே விஷயத்தில் கொஞ்சம் வேலை செய்து கொண்டுவருகிறது.

5 தாலுகா, ஜில்லா கூட்டு முயற்சிச் சங்கங்கள்:—

தாலுக்காக்களிலும், ஜில்லாக்களிலும் கூட்டு முயற்சி கான்பரன்சுகள் கூடுவது நிரம்பவும் நன்மையென்று ஸ்திரமாக விளங்குகிறது. ஹஸன் ஜில்லாவிலும்,சிக்கமகபுரம் ஜில்லாவிலும்,இன்னும் 16 தாலுகாக்களிலும் கான்பரன்சுகள் கூடின. அதனால் யாதொரு செலவும் நேரிடவில்லை. ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு கூட்டு முயற்சி சபைகளின் நிலைமையும் நன்றாய்ப் பரிசோதிக்கப்பட்டு அவைகள் நன்றாய் உழைக்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

6. தானியக் கூட்டுச் சங்கங்கள்:—

தற்பொழுது மைசூரிலுள்ள சில தானியக் கூட்டுச் சபைகளைக் கூட்டுத்தொழில் முயற்சிச் சங்கங்களின் சட்டதிட்டங்களுக்கு உள்படுத்திப் புதிதான தானியக்கூட்டுச் சங்கங்களைச் சேர்க்கும்படி திர ஆலோசனை செய்து அதற்கு வேண்டிய ஒழுங்குகளும் பைலாக்களும் நிறைவேறிச் சில தானியக்கூட்டுச் சங்கங்களை ரெஜிஸ்டர் செய்யும்படி ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

7. கூட்டு முயற்சி கமிட்டி:—

ஏற்கனவே உள்ள மூன்றுமுக்கிய கமிட்டிகளையும் தவிர்த்துக் கூட்டு முயற்சியைப் பொறுத்த காரியங்களை மட்டும் ஆலோசிப்பதற்காகப் பிரத்தியேகமாய் ஓர் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று மைசூர் கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துகொண்டு வருகிறார்கள். ஜில்லா பொருளாதார கமிட்டிகளின் பிரஸிடெண்டுகள் பிரத்தியேகமாய்க் கூட்டு முயற்சி சம்பந்தமான சப்கமிட்டிகளை ஸ்தாபிக்கும்படி கவர்ன்மெண்டார் அவர்களைக் கேட்டிருக்கிறார்கள்.

8. புரோவின்ஷியல் கோ ஆப்ரேடிவ்பாங்கி லிமிடெட்:—

பிரிட்டிஷ் இம்பீரியல் கமிட்டியார் கோ ஆபேரஷன் விஷயமாகச் சிபாரிசு செய்த பிரகாரம் மைசூரில் ஒரு புரோவின்ஷியல் கோ ஆப்ரேடிவ் பாங்க் சென்ற நவம்பர்மீ ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



மைசூர் முழுவதும் கூட்டுமுயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும், மேல்விசாரணை நடத்துவதற்காகவும், புதியகூட்டுமுயற்சி சங்கங்களை ஸ்தாபிப்பதற்காகவும் மேற்படி பாங்க் வேலை செய்துவருகிறது. கொஞ்சகாலமே தான் மேற்படி பாங்கி நடைபெறுகிறதென்றபோதிலும், ஏற்கனவே பொது ஜனங்கள் இதை எவ்வளவு ஆதரித்து வருகிறார்களென்றால், சீக்கிரம், அது பூரணதசை அடைந்து மைசூரில் கூட்டு முயற்சிகள் அதிக விரைவாக அபிவிருத்தி அடைவதற்கு ஏதுவாகுமென்பது திண்ணம். ஹிஸ் ஹைனஸ் மைசூர் மகராஜா அவர்களும் அவர்களுடைய சகோதரராகிய யுவராஜாவும் அதை வெகுவாக ஆதரித்து வருகிறார்கள்.

---

## பம்பாயில் ஓர் கூட்டுக் கட்டிடச் சங்கம்.

பட்டணங்களில் குடியிருப்புக்குத் தக்க வீடுகள் கிடைப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறதென்பது சகலருமறிந்த விஷயம். இந்தக் கஷ்டத்தைக் கூடுமான மட்டும் நிவர்த்தி செய்யும்பொருட்டுஆங்காங்கு கூட்டுக்கட்டிடச்சபைகளை ஸ்தாபிக்கவேண்டியது மகா அவசியம். இது விஷயத்தில் பம்பாய் மற்ற மாகாணங்களுக்கு நல்லவழி காட்டியிருக்கிறது. அவ்விடத்தில் "கோ ஆபரேடிவ் பில்டிங் அசோஸியேஷன்" அதாவது, கூட்டுக்கட்டிடச் சங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அச்சபையைச் சேர்ந்தவர்கள் கூட்டாகச்சேர்ந்து வீடு கட்டிக்கொண்டு வசிப்பது இலாபமான காரியமென்பதை ஜனங்களுக்குப் போதனை செய்துக்கொண்டு வருகிறார்கள். மேலும், அவர்களுடைய முயற்சியால் சாரஸ்வத் என்ற ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சாரஸ்வத் கூட்டுக் கட்டிடச்சபையென்று ஒருசபையை இப்பொழுது ஸ்தாபித்திருக்கிறார்கள். அதைப்பற்றிய சில விருத்தாந்தங்களை நண்பர்கள் தெரிந்துகொள்ள விரும்புவார்களாதலால் அவைகளைச்சுருக்கமாக இங்கே யெடுத்துக் கூறுவோம்:—

பம்பாயில் சாரஸ்வத் என்று ஒரு ஜாதி உண்டு. அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் வெகு ஐக்கியமாயிருக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிவினை கிடையாது. அந்நியோன்னியம் அதிகம். அவர்களுடைய குடியிருப்பு நிலைமை எப்படி யிருக்கிறதென்று ஆராய்வதற்காகப் பம்பாய் கூட்டுக்கட்டிடச் சபையார் ஓர் கமிட்டியை ஸ்தாபித்தார்கள் அக்கம்மிட்டியார் முதல் முதல் சாரஸ்வத் ஜாதியார்களை வேலைக்கும் தரத்துக்கும் தக்கபடி பிரித்துப்பிறகு அவர்களில் யார் யார் கூட்டாகச் சேர்ந்து வீடுகட்டப் பணவுதவி செய்ய முடியுமென்பதையும்,யார் யார்

வேலைக்குத் தடங்கலன்னியில் பழைய விடுகளை விட்டுப் புதிய இடத்துக்குப் போகக்கூடுமென்பதையும் நிர்ணயித்தார்கள். பிறகு இப்படி நிர்ணயிக்கப்பட்டவர்கள் எல்லோரும் சேர்ந்து மொத்தம் இவ்வளவு வீட்டுவாடகையாகக் கொடுக்கிறார்களென்பது தீர்மானிக்கப்பட்டது. அதன்மேல் அவர்கள் உடன் கூட்டுப்பங்காளிகளாகச்சேர்ந்து தங்களுக்குத் தாங்களே புதிதாகவும்,சுகமாகவும்,சௌகரியமான இடத்தில் வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. 1914-ம் வருஷத்தில் இதற்கான பை-லாக்கள் ஏற்படுத்தப்பட்டு சாரஸ்வத் கூட்டுக்கட்டிடச் சபை ரெஜிஸ்தர் செய்யப்பட்டது. ஆனால் இது நூதனமான ஏற்பாடு. ஆகையால், ஆரம்பத்தில் பணவிஷயமாகச் சில தடங்கல்கள் நேரிட்டன. ஆனால் ஸர் பிரபா சங்கர்பட்டணி அவர்கள் இது விஷயமாக 24,000-ரூபாய் கடன்கொடுத்து உதவினார். அதை 100-க்கு 4-வீதம் வெகு குறைந்த வட்டிக்குக் கொடுத்திருக்கிறார். மேலும் அதை ஷை கூட்டுக் கட்டிடச் சபையார் 10-வருஷத்துக்குள் திரும்பச் செலுத்திவிடலாமென்று தவணை கொடுத்திருக்கிறார். அவருடைய உதவியில்லாவிட்டால் அநேகமாய் இந்த ஏற்பாடுகள் ஆரம்பத்திலேயே தடைப்பட்டிருக்கும்.

ஏற்கனவே சொன்ன பிர்காரம், இந்த சபை உடன் கூட்டுப் பங்கர்களே நடைபெறுகிறது. அதின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு 20 ரூபா பங்கு எடுத்திருப்பதுடன் அதற்குமேல் ஆளொன்றுக்கு 30 ரூபா சபைக்கு கடன்கொடுக்கவேண்டும், அக்கடனை பூராவும் உடனே கொடுக்கலாம். அல்லது கொஞ்சங் கொஞ்சமாகப் பத்து மாசத்தில் செலுத்தலாம். இதுவே சபையின் ஸ்திரமான மூலதனம். இக்கடனுக்கு சபைப்பணத்திலிருந்து 100-க்கு 4-வீதம் வட்டி கொடுக்கப்படும். அப்படியே மூல தனத்தின் மேல் கிடைக்கும் லாபப் பங்கீட்டுக்கும் 100-க்கு 5 வீதமே வட்டி கொடுக்கப்படும். மெம்பர்கள் கடனாகக் கொடுக்கும் 30-ரூபாய் திருப்பிக் கொடுக்கப்படலா மென்றபோதிலும், பங்குவீதங்கள் வாபீஸ் செய்யப்படமாட்டாது. மொத்த லாபத்தில் இந்தப் பங்குத்தொகைகளுக்கு வட்டி கிடைப்பதால் மெம்பர்களுக்கு நல்ல இலாபம் கிடைப்பதற்கு இது ஏதுவாயிருக்கிறது. பங்குத்தொகைகளை வாபீஸ் செய்வதாயிருந்தால் இப்படி லாபங்கிடைப்பது கெட்டுப் போகும். தற்பொழுது சாரஸ்வத் கூட்டுக் கட்டிடச் சபையின் மூலதனமாவது:—

மெம்பர்களின் பங்குக்கட்டணம்: ரூ. 32,600, ஸர் பிரபாசங்கர் பட்டணி அவர்கள் கொடுத்தகடன் தொகை ரூ. 24,000, எஸ். வி.



ஐக்கிய நாணயச்சபையார் கொடுத்த கடன் ரூ. 7,566. 100-க்கு
4½ ரூ. வீதம் மெம்பர்களும் இதரர்களும், டிபாஸிட் செய்த
தொகை ரூ. 7,815. சபையார் மூலதனத்திலிருந்து பம்பாய்
கவர்ன்மெண்டு நில அபிவிருத்தி இலாகாவில் 999-வருஷத்
துக்கு ஒத்திக்கிரயமாக ஒரு நிலம் வாங்கினார்கள். ஒரு சதுர
கெஜத்துக்கு ஏற்பட்டகிரயம் ரூ. 18-12-0 என்றபோதிலும்,
ஷை இலாகாவின் தலைவராகிய ஆனரபில் மிஸ்டர் ஜே. பி. ஆர் அவர்
கள் வெகு தயவாக ஒருசதுர கஜம் ரூ. 15-வீதம் கொடுத்ததுமன்னி
யில் வேறு சில சகாயங்களும் செய்தார். அதற்குப்பிறகு, ஷை நிலத்
தில் மிகவும் சுகமான ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. அக்கட்டிடம் பல
விடுகளை அடக்கியது. ஒவ்வொரு மெபர்களுக்கும் ஒவ்வொரு வீடு
தாராளமாய்க் குடியிருப்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்
வொரு வீட்டுக்கும் வாடகை ரூ. 25. எந்த வீட்டுக்கும் வாடகை 33
ரூபாய்க்குமேல் போவதில்லை. பம்பாயில் மற்ற இடங்களில் 30-அல்
லது 40 ரூ. கொடுத்தாலும் வெகு சிறிய வீடுகள் தான் கிடைக்கும்.
அப்படிக்கிடைத்தாலும் சரியான சௌகரியங்கள் இராது இந்த வீடு
கள் ஒரு குடும்பம் வசிப்பதற்குத் தாராளமாயிருப்பதுடன், வெகு சுக
மான இடத்தில் கேர்த்தியாக அமைக்கப்பட்டு எல்லாச் சௌகரியங்
களோடும் கூடி விளங்குகின்றன. எல்லோரும் கொடுக்கும் வாடகை
வீட்டுச் செலவுக்குச் சரியாயிருப்பதுமில்லாமல், மிச்சப்பட்டு விடுகிறது.
அப்படி மிச்சப்படும் தொகை பங்காளிகளுக்குள் பகிர்ந்து கொடுக்கப்
படுகிறது. வீடு ரிப்பேர் முதலிய செலவுகளைப் பங்காளிகள் கூடிய
மட்டும் மிதமாகவே செய்து வருகிறார்கள். ஏனென்றால், இந்தச்
செலவுகளை எவ்வளவுக் கெவ்வளவு சுருக்குகிறார்களோ, அவ்வளவுக்
கவ்வளவு அவர்களுக்குத்தான் லாபம். மீச்சப்படும் தொகைகளைப்
பங்கிட்டுக்கொள்ளலாம். இப்படிக் குறைந்த வாடகைக்கு அவர்கள்
சிறந்த வீடுகளில் குடியிருப்பதுமல்லாமல் அவர்களுக்கு மாதவாரி
வட்டியும், லாபமும் கிடைத்துவரவும் ஏதுவாய் இருக்கிறது. மேலும்,
அவர்களே வீட்டுக்குச் சொந்தக்காரர்களாகவும் இருக்கிறார்கள். ஆகை
யால் உடன் கூட்டுக் கட்டிடச்சபைகளை ஏற்படுத்துவதனால் எவ்வளவு
நன்மை யென்பதைச் சொல்லவும் வேண்டுமா ?

# மசூலிபட்டணம் முனிசிபல் சிப்பந்திகளின் கூட்டுறவுச் சங்கம்.

"நிகழும் 1916௵ ஏப்ரல்௴ 29௳ மசூலிபட்டணம் கூட்டு கான்பரென்சில் படித்த ரிபோர்ட்.

இச்சங்கம் சென்ற 1914௵ செப்டம்பர்௴ 15௳ ஏற்பாடாயிற்று. இதின் மெம்பர்கள் எல்லோரும் மசூலிபட்டணம் முனிஸிபாலிட்டியில் வேலைசெய்கிறவர்கள். இவர்கள் அநேகமாய் சொத்துச் சுதந்தரமில்லாதவர்கள். அன்றன்றுள் ஜீவனம் செய்கிறவர்கள். கலியாணம், சாவு முதலிய நன்மை தின்மைகளுக்கு ஏராளமான வட்டி கொடுத்துக் கடன்வாங்கிச் செலவழித்துப் பிறகு கஷ்டப்படுவது இவர்கள் வழக்கம். ரூபாய்க்கு மாதவாரி 9 பைசா முதல் 2 அணா வரையில் வட்டி கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது, 100-க்கு 54 ரூ. அல்லது 100-க்கு 150 ரூ. வட்டிகொடுத்து வந்திருக்கிறார்கள். இது என்ன அநியாயம்! மாதம், மாதம், தங்களுக்குக் கிடைக்கும் சொற்பச் சம்பளத்தில் வட்டி கொடுத்து அழவேண்டும். சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லாமற்போனாலும், வட்டி கொடுத்தே தீரவேண்டும். கடனையோ அடைக்க முடியாது. கடைசியில் கடன் வாங்கின தொகையைவிட வட்டி அதிகமாய் ஓடிவிடுவதுண்டு. இப்படி இவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்தார்கள். அதிலும் முனிசிபல் தோட்டிகளின்பாடு இன்னும் வெகு கஷ்டமாயிருந்தது. இவர்களின் நன்மையை உத்தேசித்து முனிசிபல் சிப்பந்திகளின் கூட்டுறவுச்சங்கமென்று ௸ சபையை யேற்படுத்தும்படி மசூலிபட்டணம் முனிசிபல் சபையார் தீர்மானித்து அப்படியே ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஏற்படுத்தும்பொழுது ஆதியில் 81 மெம்பர்களிருந்தார்கள். பிற்பாடு சீக்கிரத்தில் 143 மெம்பர்கள் சேர்ந்துவிட்டார்கள். இதில் 3 மெம்பர்கள் இறந்துபோயினர். இன்னும் 3 பேர் தள்ளுபடியானார்கள். இப்பொழுது மொத்தம் 137 மெம்பர்கள் இருக்கிறார்கள். இதில் 11 பேர் பிராமணர்கள், 15 பேர் இதர இந்துக்கள், 3 மகமதியர்கள், 1 கிறிஸ்தவர், 107 தோட்டிகள். இந்த 137 பேரும் சேர்ந்து 211 பங்கு (ஷேர்) எடுத்திருக்கிறார்கள். ஷேர் அதாவது பங்கு ஒன்றுக்கு ரூ. 2-0-0. ஆகையால் ஷேர் வகையில் 418 ரூ. சேர்ந்திருக்கிறது. பிரவேசக்கட்டணம் ஆளொன்றுக்கு அணா 2. 15 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளமுள்ள சிப்பந்திகள் தங்கள் சம்பளத்தில் ரூபாய்க்கு 6 பைசாவிதம் சபையின் பிராவிடெண்டு பண்டு நிதி



யில் டிபாஸிட் செய்யவேண்டும். (அதாவது, அவர்கள் ஏற்கனவே முனிஸிபல் பிராவிடெண்டு பண்டு நிதியில் அப்படி டிபாஸிட் செய்யாமலிருந்தால்.) சபைப்பணத்திலிருந்து 100-க்கு 12 வட்டிவிதம் தோட்டிகளுக்கும் 100-க்கு 9 வட்டிவிதம் மற்ற மெம்பர்களுக்கும் கடன் கொடுக்கப்படும். 12 மாதத்துக்குள் வட்டி உள்படக்கடனை அடைத்துவிடவேண்டியது. அதற்காக, மாதம், மாதம், 12 மாதத்துக்குக் கடன்வாங்கியவர்களுடைய சம்பளத்தில் கடன் தொகையில் 12-ல் ஒருபாகம் பிடித்துக்கொள்ளப்படும். ஒரு மெம்பருடைய சம்பளம் எவ்வளவோ அதைப்போல் 4 பங்கு கடன் கொடுக்கப்படலாம். அதற்குமேல் கொடுக்கப்படமாட்டாது. ௸ சபை ஏற்பாடானபொழுது மெம்பர்களாகச் சேர்ந்த தோட்டிகள் வெளியில் 1,200 ரூ. வரைக்கும் கடன்பட்டிருந்தார்களென்று தெரியவந்தது. உடனே 5 முனிசிபல் கவுன்சிலர்கள் 1,200 ரூபா கடன் கொடுத்து உபகரித்தார்கள். அதைக்கொண்டு ௸ தோட்டிகளின் கடன் அடைக்கப்பட்டது. சில கனவான்கள் 900 ரூ. சபையில் டிபாசிட் செய்தார்கள். இந்தத் தொகையைக்கொண்டு சபை நடந்துவருகிறது. பிறகு ௸ தோட்டிகளுக்கு இன்னும் 500 அல்லது 600 ரூபாய்க்குமேல் கடனிருப்பதாகத் தெரியவந்து அந்தக்கடனையும்சபையாரே அடைக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 5 மெம்பர்களடங்கிய ஒரு பஞ்சாயத்தார் சபையின் காரியாதிகளை நடத்திவருகின்றனர். அவர்களில் 2 மெம்பர்கள் தோட்டிகளால் தெரிந்துகொண்ட தோட்டிகள், மற்ற 3 மெம்பர்களும் இதர மெம்பர்களால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இதுவரைக்கும் சபையின் வரவு செல்வுகளாவன:—

| வரவு. | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| கடன் வாங்கினது | ... | 1,200 | 0 | 0 |
| ,, | ... | 750 | 0 | 0 |
| ,, | ... | 150 | 0 | 0 |
| ,, (அரிசியின்பொருட்டு) | ... | 300 | 0 | 0 |
| பங்குத்தொகை | ... | 418 | 0 | 0 |
| பிராவிடெண்டுபண்டு | ... | 478 | 13 | 0 |
| பிரவேசக் கட்டணம் | ... | 17 | 14 | 0 |
| கடன் தொகைகள் திருப்பப்பட்டது | ... | 4,517 | 12 | 3 |
| அதற்கு வட்டி | ... | 253 | 7 | 4 |
| அரிசி வட்டி | ... | 5 | 0 | 2 |
| ஆகமொத்தம் | ...... | 8,090 | 14 | 9 |

| செலவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கடன் அடைக்கக் கொடுத்த தொகை | 1,200 | 0 | 0 |
| ” | 150 | 0 | 0 |
| அதற்கு வட்டி | 25 | 0 | 0 |
| ” | 5 | 0 | 4 |
| புஸ்தகங்கள் வாங்கினது | 20 | 0 | 0 |
| கடன்கொடுத்தது | 6,310 | 6 | 0 |
| அரிசிவாங்கினது | 370 | 0 | 0 |
| கையிருப்பு | 10 | 4 | 9 |
| ஆகமொத்தம்... | 8,090 | 14 | 9 |

தோட்டிகள் வெளியில் பட்டிருந்த கடன்களெல்லாம் அடைத்தாகிவிட்டது. ஆனால் அரிசிக்காரர்களுக்கு அவர்கள் இன்னும் பாக்கி கொடுக்கவேண்டியிருக்கிறது. அரிசிக்காரர்கள் தோட்டிகளை வெகுவாய் மோசம் செய்துவிடுகிறார்கள். அநியாயவிலை சொல்வதுடன், கள்ளப்படிகளை உபயோகித்து ஒன்றுந்தெரியாத இந்தப் பேதைகளை ஏமாற்றிவிடுகிறார்கள். ஆகையால் 1915௵ ஆகஸ்டு௴ முதற்கொண்டு, சபையார் நம்பிக்கையுள்ள ஒரு அரிசி வியாபாரியை அமர்த்தி அரிசி சப்ளை செய்யும்படி ஏற்பாடு செய்ததால் தோட்டிகளுக்கு நன்மையாக முடிந்தது. மேலும் 1916௵ பெப்ரவரி மாதத்திலிருந்து சபையாரே அரிசிவாங்கித் தோட்டிகளுக்கு வாங்கினவிலையில் சகாயமாக விற்றுவருகிறார்கள். மூட்டை ஒன்றுக்கு 4 அணா கூலி செலவுகளை உத்தேசித்து அதிகப்படுத்தியிருக்கிறார்களேயொழிய மற்றப்படி இலாபம் வைத்து விற்பதில்லை. தோட்டிகளும், இதர மெம்பர்களனேகரும் இது இலாபமென்று கண்டுகொண்டதால் இப்பொழுதும் சபையிலிருந்தே அரிசி வாங்குகிறார்கள்.

தோட்டிகள் தங்கள் ஜாதி வழக்கங்களை விடவில்லை. அவர்கள் பிரத்தியேகமாக ஒரு பஞ்சாயத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குள் கிளம்பும் சகலவிதமான சிவில், கிரிமினல் வழக்குகளையெல்லாம் இந்தப் பஞ்சாயத்து மூலமாகவே தீர்த்துக்கொள்ளுகிறார்கள். கோர்ட்டுக்குப் போவதில்லை. மெம்பர்களாயிருக்கும் தோட்டிகளுக்குக் கடன் கொடுக்குமுன், அவர்கள் யோக்கியர்களா என்று இந்தப் பஞ்சாயத்தார்களை ஆலோசனை கேட்டுக்கொண்டுதான் கடன் கொடுக்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவுச் சபை ஏற்பட்ட காலத்தில் தோட்டிகளுக்குள் கக்ஷிப்பிரதிகக்ஷியும் அடிபிடியுமாய்க் கிடந்தது. இப்பொழுது அப்படி ஒன்றுமில்லை. அந்நியோந்நியமாய் வாழ்ந்து வருகிறார்கள்.



கலியாணச் செலவுகளுக்காகச் சபையார் அவர்களுக்கு தாராளமாகக் கடன் கொடுக்கிறார்கள். கலியாணம் பண்ணிக்கொள்ளாத வாலிபர்கள் தோட்டிகளுக்குள் அதிகமாயில்லை. இப்பொழுது ஒவ்வொரு தோட்டியும் சொந்தமாக விடுகட்டிக்கொண்டு இருக்கிறான். இந்தக் கூட்டுறவுச் சபை ஏற்பட்டதினால் தோட்டிகள் முன்னிருந்ததைவிடப் பலமடங்கு அதிக சுகமாயும், சந்தோஷமாயும் வாழ்கிறார்கள். அவர்களுக்குள் “குடி” யென்னும் கொடிய வழக்கம் இன்னும் இருந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் இப்பொழுது தோட்டிச்சிகள் குடிப்பதில்லை. இந்தக் கெட்ட வழக்கத்தை ஒழிப்பதற்கு இன்னும் வெகு பிரயாசைப்படவேண்டும். மசூலிபட்டணத்தில் இந்த கூட்டுறவுச் சபையை ஸ்தாபிப்பதற்கும் நடத்துவதற்கும் முனிஸிபல் கவுன்சிலர்கள் வெகு உதவிசெய்திருக்கிறார்கள். அவர்களுக்குள், முக்கியமாக, எப்பொழுதும் அவர்களுக்கு ஆலோசனைசொல்லி உற்சாகமூட்டிய கனம் பி. பட்டாபி சீதாராமய்யா அவர்களுக்கும், பணம் வேண்டிய பொழுதெல்லாம், பணம் கொடுத்து உதவிய கனம் உ. கோபாலரத்னம் அவர்களுக்கும், சங்கத்தார்கள் நன்றி பாராட்டுகிறார்கள்.

---

## டிபாஸிட்டுக்களின் அவசியம்

இது கோ ஆபரேடிவ் சொஸைடிகளின் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார் ஆகிய ம-அ-அ-ஸ்ரீ கே. நாகேஸ்வரராவ் பந்துலுகாரு, அவர்கள் சென்ற ஏப்ரல்௴ மசூலிபட்டணத்தில் கூடிய கூட்டுமுயற்சிக் கான்பரன்சில் வாசித்த வியாசத்தின் சாராம்சம்:—

கூட்டு நாணயச் சபைகள் கடன் கொடுக்கும் சிறு பாங்கிகளென்பது பலருடைய அபிப்பிராயம். அது சுத்தப் பிசகு. ஆதியில் பரம ஏழைகளான சில குடியானவர்கள் ஒன்று சேர்ந்து வாரத்துக்கு வாரம், அல்லது இரண்டு வாரத்துக்கு ஒருதடவை வரும்படியில் அல்லது கூலியில் கொஞ்சம் பாகத்தை மீத்துவைத்து அப்படி வசூலான மொத்தத் தொகையை யாருக்குக் கடன் அதிகமாயிருந்ததோ, அவருக்கு கொடுத்துக் கடனை அடைக்கும்படி உதவி செய்துவந்தார்கள். இப்படி உதவிசெய்யப்பெற்றவர் கொஞ்சங்கொஞ்சமாக ஷெ தொகையைத் திரும்பவும் சபைக்குச் செலுத்தி விடுவது வழக்கம். இந்தத் தொகையையும், மேலும் வாரத்துக்கு வாரம், மற்றவர்கள் செலுத்தும் கட்டணத்தொகையையும்வைத்துக்கொண்டு சபையார் ஒவ்வொரு மெம்பர்களுடைய கடனையும் அடைக்க உதவிசெய்துகொண்டுவந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஏழைகளானபடியால், எல்லோருக்கும் பணம் வெகு அவசரமாகஇருந்தபோதிலும், இந்த வாரம்இன்னாருக்கு

என்று ஒரு முறையை வைத்துக்கொண்டு அந்த முறைப்படிக்கு ஒவ்வொரு மெம்பர்களுக்கும் உதவிசெய்துவந்தார்கள். இப்படி அவர்கள் தங்களுக்குள் வசூலித்த தொகையைக் கொண்டு தங்களுக்குத்தாங்களே உதவி செய்துகொள்ள வேண்டுமேயொழிய அவர்களுக்குக் கடன் கொடுப்பார் யாருமில்லை. அவர்களுக்கு வேண்டிய தொகையைக் கொடுத்து உதவ அப்பொழுது ஸெண்ட்ரல் பாங்கிகள் இல்லை. இப்படி ஆதியில் ஏற்பட்ட கூட்டு நாணயச் சபைகள் வெகுகஷ்டப்பட்டுக் கொஞ்சம் மூலதனம் சேர்க்கவேண்டியிருந்தது. தங்களுடையசொற்பச்சம்பளத்தில் அல்லது வருமானத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் மீத்து சொற்ப மூலதனத்தைச் சேர்த்து அதைக்கொண்டு காரியாதிகளை நடத்த வேண்டியிருந்தது. ஆகையால் அவர்கள் சவுக்கார்களுக்கும், மார்வாடிகளுக்கும் பட்டிருந்த கடனை அடைப்பது மகா கஷ்டமாயிருந்தது. சில சமயங்களில் அசாத்தியமாகவே யிருந்தது. ஆனால் அவர்கள் தங்கள் பணத்தைப்பற்றி வெகு ஜாக்கிரதையாயும் செட்டாயும் இருந்தார்கள். வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிச் சேர்த்ததொகை ஆதலால், அவர்கள் அக்காலத்தில் அவ்வளவு கருராகவும் உஷாராகவும் இருந்தார்கள். மேலும் இதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் அன்னியோன்னிய உறவாகவும், ஒற்றுமையாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்போல் ஏகோபித்து வாழ்ந்து வந்தார்கள். இப்படி வெகு கஷ்டப்பட்டுக் கடைசியில் அவர்களுக்குக் கொஞ்சம்மூலதனம் கூடினது. இதிலிருந்து, ஆதியில் கூட்டு நாணயச் சபைகள் வெறும் பாங்கிகளாயிருக்கவில்லை யென்பதும், எல்லாம் மெம்பர்களுடைய பிரயாசையினாலேயே நடக்கவேண்டியிருந்த தென்பதும், அவைகளுக்குப் பணம் கடன்கொடுக்க வேறுயாருமில்லையென்பதும், தெளிவாக விளங்கும். இப்பொழுதோவென்றால் கூட்டுநாணயச்சபைமெம்பர்களுக்கு அவ்விதமான கஷ்டங்கள் யாதொன்றுமில்லை. அவர்கள் ஒரு சபையை ஏற்படுத்தின இரண்டொருவாரத்துக்குள் கவர்ன்மெண்டிலிருந்தும், ஸெண்ட்ரல் கோ ஆப்ரேடிவ் பாங்கிகளிலிருந்தும் அவைகளுக்குப் போதுமான பணம் கிடைக்கிறது. மெம்பர்கள் ஒருதடவைசெலுத்தும் கட்டணத்தையும் பங்குப்பணத்தையும் தவிர மேலே ஒரு காசுகொடுப்பதில்லை. மற்றவர்களுடைய உதவி யில்லாமல் சபைக்குப் போதுமான நிதியை தாங்களே சேர்த்து வைக்கவேண்டுமென்று மெம்பர்கள் நினைப்பதில்லை. முன்காலத்தில் ஒருவர் மெம்பராகச் சேருவதென்றால் வெகு கஷ்டம். பலவிசாரணைகளெல்லாம் செய்து பலநிபந்தனைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு நிறைவேற்றின பிறகுதான் மெம்பர்களாகச்சேர்த்துக் கொள்ளுவது வழக்கம். இப்பொழுதோவென்றால் கேட்டமாத்திரல் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளுகிறார்



கள். சில சமயங்களில் கேளாமலிருக்கும்பொழுதே மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளுவதுமுண்டு. இப்படி யெல்லாம் சுலுவாய் முடிவதால் மெம்பர்கள் முன் போல் சிக்கனமாகவும் செட்டாகவும் இல்லை. அவ்வளவு கவனமும் கருத்தும் கிடையாது. தன்னம்பிக்கை யென்பது அற்றுப்போய்விட்டது. எல்லாவற்றிற்கும் புறத்தியார் உதவியையே எதிர்பார்க்கிறார்கள். முன்காலத்து மெம்பர்களைப் போல், அவ்வளவு சுயமதிப்புக்கிடையாது. சுய உதவி செய்துகொள்ளும் சக்தியுமில்லை. சபையின் க்ஷேமத்தை அவ்வளவு பாராட்டுவதில்லை. தன் தன் பாட்டையே முக்கியமாகப் பார்த்துக்கொள்ளுகிறார்கள். எவ்வளவு பணம் வாங்கிக்கொள்ள முடியுமோ அவ்வளவு பணத்தை வாங்கிக்கொள்ளுவதிலேயும் அதை யெல்வளவு காலத்துக்குத் தங்கள் கையிருப்பிலேயே வைத்துக்கொள்ளலாமோ அவ்வளவு காலத்துக்கு வைத்துக்கொள்ளுவதிலேயுமே இக்காலத்து மெம்பர்கள் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். இக்காலத்துக் கூட்டு நாணயச் சபைகளின் ஒழுங்கீனங்களுக்கும் சீர் கேடுகளுக்கும் அநேகமாய் இவைகளே காரணம்.

ஆதியில் ஒருசபைக்குத் தகுந்த மூலதனம் இருந்தாலொழிய கவர்ன்மெண்டார் அதற்குப் பணங்கொடுப்பதில்லை. அப்படியே கொடுத்தாலும், சபையில் எவ்வளவு மூலதனமுண்டோ அதற்குமேல் ஒரு தம்பிடி அதிகமாய்க்கொடுப்பதில்லை. உதாரணமாக ஓர் சபையில் ரூ. 200 இருந்தால் 200 ரூபாய்க்குமேல் கவர்ன்மெண்டார் கடன் கொடுக்கமாட்டார்கள். ஒரு சபை ரூ. 2,000 கடன்கேட்டால், முதலில் ரூ. 2,000 மூலதனம் கைமேல் காட்டவேண்டும். இக்காலத்தில் இப்படிப்பட்ட நிபந்தனைகளைக் கண்டிதமாகக் கொண்டு செலுத்தும்பக்ஷத்தில், புதிதாய் ஏற்படும் சபைகளுக்குக் கஷ்டமாய் முடியுமென்பதும் ஆகையால் கவர்ன்மெண்டாரும், சென்ட்ரல் பாங்கிகளும், கடன் கொடுக்க விரும்பும் இதராளும், மூலதனம் கடன் தொகைக்குச் சரிக்குச் சரியாக இருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடாதென்பதும் வாஸ்தவமேயென்றாலும், கடன்தொகையில் இன்ன பாகமாவது கண்டிப்பாய்ச் சபையின் கையிருப்பிலிருக்கவேண்டியது அவசியமென்று அவர்கள் கட்டாயப்படுத்தவேண்டும். அப்படியே ஒருசபை ரூ. 2,000 கடன்கேட்டால் கடன் கொடுக்கிறவர்கள் சபையில் குறைந்த பக்ஷம் 1,000 ரூபாயாவது 5-வருஷத்தில் மூலதனமாயிருக்கவேண்டுமென்று நிபந்தனைசெய்து பிறகுதான் ரூ. 2,000 கொடுக்கவேண்டும், நிபந்தனைப்படிக்கு 5-வருஷத்துக்குள் ரூ. 1,000 மூலதனம் கூடிவராவிட்டால், கொடுத்த கடனை வாங்கிக்கொள்ளவேண்டும். அல்லது, அதுவரையில் எவ்வளவு மூலதனம் கூடியிருக்கிறதோ அதற்கு

சரியான ஒரு தொகையைக் கடனாக விட்டு மற்றதை வாங்கிக்கொள்ளலாம். இப்படிச்செய்வதால் கடன் கொடுக்கிறவர்களுக்கும் சபையாருக்கும் ஆகிய இருதரப்புக்கும் சகாயமாகமுடியும். ஆகையால் இப்படிச்செய்வது அத்தியாவசியமாகும். இப்படிச்செய்தால்தான் தற்காலத்து கூட்டுறவுச் சபைகளில் காணப்படும் சீர்கேடுகளும், ஒழுங்கீனங்களும், நிவர்த்தியாகும். கூட்டுறவுச் சபைகளின் பணக்குறைவை அதாவது கையிருப்புக் குறைவை நிவர்த்திசெய்வதற்கும் இதைத்தவிர வேறு வழியில்லை. இப்பொழுது ஒருசபையில் 100 ரூ. கடன் இருந்தால் அதற்கு 9 ரூபாய் தான் கையிருப்பிலிருக்கிறது. இது எவ்வளவு ஆபத்தான காரியம்! எப்பொழுதும் இப்படியே இருந்துகொண்டிருக்கும்படி விடலாமா? இது சபைமெம்பர்களுக்கும், கடன் கொடுக்கிறவர்களுக்கும் ஆபத்தல்லவா? சென்னையைப்போல் மற்ற இடங்களில் அவ்வளவு மோசமில்லை. பம்பாயில் ஒரு கூட்டுச் சபைக்கு ரூ. 100 கடனிருந்தால், அதற்கு ரூ. 30 கையிலிருக்கிறது. வங்காளத்தில் 100-க்கு ரூ. 20-ம், பஞ்சாபில் 100-க்கு ரூ. 28-ம், பீகார் ஒரிஸா மாகாணங்களில் 100-க்கு ரூ. 34-ம், சபைகளில் கையிருப்பிலிருக்கிறது. சென்னையில் ஒரு சபைக்கு 100 ரூபாய் கடனிருந்தால் 10 ரூபாய்கூடக் கையிருப்பு இல்லை. ஆகையால் இந்த ஆபத்தை நீக்குவதற்கு முன்சொன்னபடி கடன் கொடுக்கும் விஷயமாய்க் கண்டிப்பான சில நிபந்தனைகளை ஏற்படுத்தினாலொழிய மற்றப்படி ஒன்றும் சரிக்குவராது. மேற்படி நிபந்தனைகளை ஏற்படுத்துவதினால் கூட்டுறவுச் சபைகளின் கையிருப்பு பலப்படுவதுடன் கடன் கொடுக்கிறவர்களுக்கும் ஒரு உறுதி ஏற்படும். ஆகையால் உடனே அப்படிச் செய்துவிடவேண்டும். ஆனால் படிப்பில்லாத குடியானவர்கள் இலேசில் இதின் பிரயோஜனத்தைக் கண்டுகொள்ளமாட்டார்கள். இப்பொழுது பங்குப்பணத்தைச் செலுத்துவதற்கே முக்கால் அழுதுகொண்டு கொடுக்கிறவர்கள் அதிகப் பணம்போடுவதென்றால் எப்படி அழமாட்டார்கள்! ஆனால் காலக்கிரமத்தில் கூட்டுறவத்தைப்பற்றிச் சரியான அறிவு பரவப்பரவ அவர்களுடைய அறியாமை, அகலும். வெறும் அபராதம் போடுவதாலும், கடன் கொடுப்பதை நிறுத்திவைப்பதாலும், மெம்பர்கள் பயந்து வாங்கின கடனை உடனுக்குடனே செலுத்தி விடுவார்களென்பது தவறு. மெம்பர்களும் சபைகளும் வாங்கின கடனைத் திரும்பவும் சீக்கிரத்தில் செலுத்திவிடும்படி செய்வதற்கும் மற்றக்குறைகளைப் பரிகரிப்பதற்கும் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, மெம்பர்களின் டிபாஸிட்டுகளை அதிகப்படுத்தவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு மெம்பர்கள் பணம் டிபாஸிட் செய்திருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் அக்கறையாய்



வாங்கின கடனை அடைக்கவும் மற்றப்படி யாதொரு குறைவில்லாமலும் நடக்கவும் முயற்சி செய்வார்கள். இல்லாவிட்டால் இப்பொழுது போல் எல்லாம் வழவழத்தனமாய் நடக்கும். இவ்வளவு கண்டிதமாய் புதிதாகக் கூட்டுச்சபைகளை ஏற்படுத்துவது கஷ்டமென்பதையும், அதனால் கூட்டுமுயற்சி சீக்கிரம் பரவிவிடமாட்டாதென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அரைகுறையாக நடக்கும் அநேக சபைகளிருப்பதைவிடச் சரியாகவும் குறைவில்லாமலும் நடக்கும் சில சபைகளிருப்பதே நல்லது. ஆனால் கூட்டுச்சபைகளில் ஜனங்களுக்கு ஸ்திரமான நம்பிக்கை உண்டானபிறகு அவர்கள் தங்கள் சம்பாத்தியங்களில் மீந்ததுகளை அந்த சபைகளில் போட்டுவைக்கப்பயப்படமாட்டார்களென்று பூரணமாய் நம்பியிருக்கிறேன். மேலும் லேவாதிக்காரர்களும் தங்கள் பணத்தைக் கூட்டுசபைகளில் இனிப் போடுவார்களென்று எதிர்பார்க்கிறேன். கூட்டுமுயற்சி சபைகள் வருஷமொன்றுக்கு 100-க்கு 6 முதல் 7½-ரூபாய் வரையில் வட்டி கொடுக்கின்றன. பேராசைக்குணமுடையவர்களைத் தவிர மற்ற லேவாதேவிக் காரர்கள் இதுநியாயமான வட்டியென்று ஒப்புக்கொள்ளுவார்கள். இதற்குமேல் வெளியில் கடன் கொடுத்தாற்கூடக் கொஞ்சம் அதிக வட்டி கிடைக்கலாமென்றபோதிலும், கூட்டுச்சபைகளை உறுதியாக நம்பிக் கொடுக்கலாம். மற்றவைகளை அவ்வளவு நம்பமுடியுமா? நம்பத்தகாதவர்களை நம்பி லேவாதேவிக்காரர்கள் பணம் வட்டிக்கு கொடுத்துப் பிறகு முதலுக்கே மோசமாகிக் கோர்ட்டுகளுக்குப்போய் ஏராளமாகச் செலவழித்துப் பிறகு முதலை வாங்கவேண்டியிருக்கிறது. இந்தக்கோர்ட்டு செலவு முதலிய செலவுகளையெல்லாம் கழித்துவிட்டுப் பார்த்தால் லேவாதிக்காரர்களுக்கு கூட்டுச்சபைகளால் கிடைக்கக்கூடிய வட்டிக்கும் புறத்தியில் கிடைக்கிற வட்டிக்கும் அவ்வளவு வித்தியாசமில்லை. இந்தபாகங்களில் பேர்போன பல லேவாதேவிக்காரர்களைக் கேட்டதில் அவர்கள் புறத்தியில்கிடைக்கிற வட்டியைவிடக் கூட்டுச்சபைகளிலேயே அதிகமான வட்டி கிடைக்கிறதென்றும், 100-க்கு 4 ரூபாய்க்குமேல் அப்படி அதிகமாய்க் கிடைக்கிறதென்றும் கூறுகிறார்கள்.

இன்னுமொருவார்த்தை. இந்த நாட்டில் மற்றக் காரியங்களில் எப்படியோ அப்படித்தான் லேவாதேவி விஷயத்திலும் யாதொரு கிரமம் ஒழுங்கு என்பதில்லாமல் இருக்கிறது. யார் லேவாதேவி செய்யலாம், யார் செய்யக்கூடாது என்ற திட்டமும் கிடையாது. இங்கிலாந்து தேசத்தில் வேறு வேலைசெய்கிறவர்கள் லேவாதேவி செய்வது கிடையாது. கையில் பணம் மீந்திருந்தால் அதை

வியாபாரத்தில் அல்லது கைத்தொழிலில் அல்லது நல்ல நேர்த்திவாய்ந்த பாங்கிகளில் போட்டு விடுவார்கள். இதனால் அந்தேசங்களில் வியாபாரம், கைத்தொழில் முதலியவைகள் ஓங்குவதற்கு வழி உண்டாகிறது. இந்தியாவிலேயோ வென்றால் கண்டபேர்களெல்லாம் கடன் கொடுக்கல் வாங்கல் செய்யத் துவக்கிவிடுகிறார்கள். கையில் ஒருகாசு மீந்து விட்டால் லேவாதேவி செய்யப் புகுந்து விடுகிறார்கள். ஒரு குடியானவன் கையில் இரண்டு துட்டு மீந்து இருந்தால் அவன் லேவாதிக்காரனாகிறான். ஒரு கைம்பெண்டாட்டி கையில் கொஞ்சம் காசு கூடி விட்டால் அவளும் லேவாதேவி செய்கிறாள். வக்கீல், வியாபாரி, குமாஸ்தா, என்ன வேலை செய்தாலும், லேவாதேவி செய்யாமல் இருப்பதில்லை இப்படி நினைத்தவர்களெல்லாம் இத்தேசத்தில் லேவாதேவி செய்வதினாலுண்டாகும் தீமைகளை எண்ண முடியாது. அவற்றில் சிலவற்றை மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறோம். இப்படி எல்லோரும் லேவாதேவி செய்வதால் வியாபாரம், கைத்தொழில் முதலிய துறைகளில் இறங்க ஆள் இல்லாமல் நமது சுதேச வியாபாரங்களும் கைத்தொழில்களும் சீரழிந்து கெட்டுப் போய் விட்டது சகலரும் அறிந்த விஷயம். இரண்டாவது, லேவாதேவி அதிகரிக்க அதிகரிக்க நாட்டில் வியாச்சியமும் அதினால் ஏற்படும் செலவுகளும் ஏராளமாக அதிகரித்துப் போய் விட்டதுமன்றி இன்னும் நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து கொண்டு வருகின்றது. இன்னும் இந்நாட்டில் விவகாரம் எவ்வளவு அதிகரிக்குமோ. இதெல்லாம் போக எல்லோரும் லேவாதேவி செய்வதனால் உண்டாகும் முக்கியமான கெடுதி என்னவென்றால்:—வட்டி அகாதமாய் உயர்ந்துபோய் விட்டது. இன்னும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டும் வருகிறது. கண்டவர்களெல்லாம் ஒருவரோடொருவர் போட்டா போட்டியாக லேவாதேவி செய்தால் வட்டி வர வர உயருவதற்கு யாரைக் கேட்கவேண்டும்? அயோக்கியர்களான லேவாதேவிக்காரர்கள் 100-க்கு 100-வட்டியும், 100-க்கு 150 வட்டியும் கூடக் கேட்கிறார்களென்றால் அதில் என்ன ஆச்சரியம்? இன்னும் இந்த விதமான ஏகதேச லேவாதேவியாலுண்டாகும் தீங்குகள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் இந்தப் பணத்தையெல்லாம் கூட்டுச் சபைகளிலும், சென்ட்ரல் பாங்கிகளிலும் இதர நாணயமான பாங்கிகளிலும்போட்டு வைத்தால் எவ்வளவு நன்மைகளுண்டாகும்; விவசாயம் சிறக்கும், வியாபாரம் ஓங்கும், கைத்தொழில் தழைக்கும். நாட்டில் வியாச்சிய வழக்குகள் குறையும். அதில் செலவாகும் ஏராளமான பணமவ்வளவும் நல் விஷயங்களில் உபயோகப்படும். வட்டி



வரவரக் குறையும். இன்னும் எத்தனையோ நன்மைகளுண்டாகும். இவைகளையெல்லாம் ஆலோசித்து புத்திமான்களாயிருப்பவர்கள் தங்கள் பணத்தைக் கூட்டுச் சபைகளிலும், சென்ட்ரல் பாங்கிகளிலும் டிபாஸிட்செய்து தாங்களும் லாபமடைந்து மற்றவர்களும் லாபமடையும்படி நடந்து கொள்ளுவார்களென்று நம்புகிறேன். படிப்பாளிகளும் புத்திமான்களும் இதில் வழிகாட்டினாற் தான். படிப்பில்லாத மானிட ஜனங்கள் அவர்களைப்பின் பற்றுவார்கள்.

## கூட்டுநாணயமும், அதை விருத்தி செய்யும் வழியும்.

சொத்து உள்ளவர்களை நாணயஸ்தர்களாகவும் அது இல்லாதவர்களை நாணயமில்லாதவர்களாவும் நினைப்பது உலக வழக்கம். ஆகையால் அதிகச் சொத்து உள்ளவர்களை அதிக நாணயஸ்தர்களாகவும், சிறிது சொத்துள்ளவர்களை சொற்ப நாணசஸ்தர்களாகவும் நினைப்பது சகஜம். ஆகையால் தன்னுடைய நாணயத்தை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிற ஒவ்வொருவரும் தங்களுடைய பொருளை முதல் முதல் விருத்தி செய்துகொள்ள வேண்டியது முக்கியம். பொருள் விருத்தியானால் நாணயம் வளரும்; பொருள் குன்றினால் நாணயமும் குன்றும். நாணயமும் என்பது ஒருவருடைய கையிருப்பைப் பொறுத்திருக்கிறது. அப்படியே அது கைராசியைப் பொறுத்ததும் இருக்கிறது. அதாவது, விவசாயம், வியாபாரம், கைத்தொழில், முதலிய வேலைகளில் அனுகூலமடைகிறவர்களுக்கு நல்ல கியாதி ஏற்படும். அனுகூலமில்லாதவர்களுக்கு செல்வாக்கும் இல்லை. ஆகையால் ஒவ்வொருவரும் நியாயமான வழிகளில் தங்கள் பொருளை விருத்திசெய்து கொள்ளவும், எடுத்த காரியங்களில் அனுகூலமடையவும் முயலவேண்டியது அவசியம். இப்பொழுது கூட்டு நாணயச் சபைகள் ஏற்பட்டிருப்பதால் என்ன நன்மைகள் விளைகின்றன என்றால்:—முதலாவது, சபை மெம்பர்களில் ஒவ்வொருவர்களும் தங்கள் தங்கள் பொருளை விருத்தி செய்து கொள்ளுவதற்கு சபைகள் உதவி செய்வதோடு கூட, ஒவ்வொரு மெம்பர்களும் எடுத்த வேலைகளில் அனுகூலமடைவதற்கும் உதவி செய்கின்றன. ஏனென்றால் ஒரு மெம்பருடைய இலாபம் எல்லா மெம்பர்களுக்கும் இலாபம். ஒரு மெம்பருடைய நஷ்டம் எல்லா மெம்பர்களுக்கும் அதாவது சபைமுழுவதுக்கும் நஷ்டம். ஆன

படியால், கூட்டு நாணயச் சபைகள் ஒவ்வொரு மெம்பர்களுடைய இலாபத்துக்காகவும் பாடுபட்டு உழைக்கின்றன. இதுவே கூட்டு நாணயச் சபைகளின் மகத்துவம்.

இப்படி ஒருமெம்பருடைய இலாபம் எல்லோருக்கும் இலாபமாகவும், ஒருவருடைய நஷ்டம் சபையைச்சேர்ந்த எல்லோருக்கும் நஷ்டமாகவும் இருக்கிறபடியால், ஒவ்வொரு மெம்பர்களும், தங்கள் தங்கள் பாட்டைமாத்திரம் கவனித்துகொண்டிராமல் மற்ற மெம்பர்களுடைய நாணயத்தையும் விருத்திசெய்ய முயலவேண்டியது கடமை. இப்படிச் செய்வதனால் மற்றவர்களுக்கு நன்மை உண்டாவதோடு, தங்களுக்கும் நன்மையாக முடிகிறது.

ஒவ்வொரு மெம்பரும் இதர மெம்பர்களின் நன்மைக்காகப் பாடுபடுவதற்குப் பல மார்க்கங்கள் உண்டு. அவைகளில் சிலவற்றை இதன்கீழ் எடுத்துக்கூறுவோம்.

1-வது:—நிலபலங்களையும், உழுமாடுகளையும், வண்டிமாடு முதலிய கால்நடைகளையும், ஏர் முதலிய உழுவதற்குரிய சாமான்களையும், கருவிகளையும், சபைமெம்பர்கள் கூட்டாகச் சேர்ந்து அதிகப்படுத்திக் கொள்ளலாம். ஏர் முதலிய உழுகருவிகளை நூதன முறைப்படி சீர்திருத்தஞ்செய்து கொள்ளலாம். வேலி போடுவதாலும், கழிநீர் கழிப்பதற்கு சாக்கடைகளை வெட்டுவதாலும் நிலங்களை விருத்தி செய்து கொள்ளலாம். சாஸ்திர ரீதியாக உயர்வான எருவை ஒன்றாகச்சேர்த்து வாங்கி உபயோகிக்கலாம். இன்னும் விவசாயத்துக்கு அவசியமான சகல பொருள்களையும் அதிகப் படுத்திக்கொள்ளுவதோடு நல்ல தரமான பொருள்களையே வாங்கிக்கொள்ள ஒருவருக்கொருவர் உதவி செய்யலாம். இந்தக் காரியங்களை யெல்லாம் தனியாகவாவது கூட்டாகச் சேர்ந்தாவது செய்துகொள்ளலாம் இதனால் எல்லோருக்கும் நன்மையாக முடியும்.

2-வது:—இதைவிட முக்கியமான ஒரு உபாயம் உண்டு. என்னவென்றால்:—உழவும் முறைகள், பயிரிடும் முறைகள், சாகுபடி செய்கிற முறைகள், முதலியவைகளை யெல்லாம் நவீன சாஸ்திர முறைப்படிக்குச் சீர்திருத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு மெம்பர்களும் இது விஷயத்தில் வெகு கருத்தாயிருக்க வேண்டியது. கர்நாட்கமுறைகளையே கைப்பற்றிக்கொண்டு போகாமல் ஒவ்வொரு மெம்பர்களும் புதிய விவசாய முறைகளைப் பின்பற்றவேண்டும். மெம்பர்கள் எல்லோரும் சாஸ்திர முறைப்படிக்கு விவசாயம் செய்யும்படி கட்டாயப்படுத்தவேண்டும். இது மகா அவசியம் இப்படிச் செய்தால் இரண்டு மூன்று மடங்கு அதிகமாய் தானியம் விளையும் ஒவ்வொரு



மெம்பர்களுக்கும் பொருள் விருத்தியாகும்; நாணயம் வளரும். சபை முழுவதும் இதனால் அனுகூலமடையும்.

3-:—ஜமீந்தாரி நிலங்களில் அனுபோகப் பாத்தியம் முதலிய சுதந்தரங்கள் ஸ்திரமான நாணயத்துக்கு முக்கியமான ஆதாரங்களாகையால் ஏற்கனவே மெம்பர் அனுபவிக்கும் சுதந்தரங்களைக்காத்துக்கொள்ளுவது ஒவ்வொருசபையையும் பொருத்த கடமையாகும். ஒரு மெம்பருடைய அனுபோகப் பாத்தியத்துக்கு இடையூறு விளையும்படி இலேசில் விடக்கூடாது. அப்படி ஏதாவது இமிசை ஏற்படுவதாயிருந்தால் எல்லோரும் ஏகோபித்து அந்த மெம்பரைப் பாதுகாத்துகொள்ள வேண்டியது கடமை. அப்படிச் செய்தால் அந்த மெம்பருக்கு நன்மை யுண்டாவதல்லாமல் மற்ற மெம்பர்களின் சுதந்தரப் பாத்தியங்களும் ஸ்திரப்படும். அப்படிச் செய்யாத போனால் எல்லா மெம்பர்களுக்கும் கடைசியில் இமிசை விளையுமென்பதில் சந்தேகமில்லை. அப்படியே அனுபோகப் பாத்தியமில்லாதவர்களுக்கு அனுபோகப்பாத்தியம் கிடைக்கும்படிக்கும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது சில சபைகளில் அனுபோகப் பாத்தியமுள்ளவர்களைத் தவிர மற்றவர்களை மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. இதனால் சில குடியானவர்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும் இது மொத்தத்தில் நல்ல உபாயம். ஆனால் குடிகளை உபத்திரவிக்காத ஜமீன்தார்களாயிருந்தால், அங்கே அனுபோகப் பாத்திய மில்லாதவர்களையுங்கூட அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதில் பாதகமில்லை.

4-வது:—ஒத்தி யெடுத்துக் கொள்ளுவதில், ஒருவருக் கொருவர் உதவி செய்யலாம். நல்ல நிலம் குறைந்த தொகைக்கு நீடித்தகாலம் ஒத்தியாகக் கிடைக்கும்படிக்கு ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.

நல்ல ஒத்தியும், குறைவில்லாத அனுபோகப் பாத்தியமும், கூட்டு நாணயத்துக்கு முக்கியமான ஆதரவுகள் என்ற போதிலும் தற்பொழுது விவசாய முறைகளை அதிகப்படுத்திக்கொள்வதும் நிலங்களை அதிகப்படுத்திக் கொள்ளுவதும், பொருளை விருத்தி செய்து கொள்ளுவதுமே அத்தியாவசியமான காரியங்களாகும். இவைகளையே கூட்டுநாணயத்துக்கு மூலாதாரமாகவும் அஸ்திவாரமாகவும் யிருக்கவேண்டும். இது விஷயத்தால் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதென்னவென்றால்:—கலப்பை, ஏர் முதலிய சொற்பப்பொருள்களை மெம்பர்கள் தனித் தனியாகவும் சொந்தமாகவும் வைத்துக்

கொள்ளவேண்டும். ஆனால், எரு, விதை, உழுமாடுகள், நவீன உழு இயந்திரங்கள், கிணறுகள், முதலியவைகளைக் கூட்டாகவே வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, இவைகள் சபை முழுவதுக்கும் அதாவது, சகல மெம்பர்களுக்கும் சர்வ மானியமாயிருக்கவேண்டும்; ஒரு வரிசைப்படி ஒவ்வொரு மெம்பரும் அவைகளை உபயோகித்துக் கொள்ளவேண்டும். க்ஷேமநிதியில் (அதாவது ரிசர்வ் பண்டில்) ஒரு பங்கைப் புது யந்திரங்களை வாங்குவதிலும், ஜலம்பாய்ச்சுவதற்குக் கண்மாய் கால்வாய், கிணறு முதலியவைகளை வெட்டிப் போடுவதிலும், சாக்கடைகள் கட்டுவதிலும், செலவு செய்தால் அனுகூலமுண்டாகும் ஆனால், கண்மாய், கால்வாய், கிணறு முதலியவைகளை வெட்டுவதற்கு (ஜமீந்தாரி நிலங்களில்) எப்படியாவது ஜமீன்தாரிடம் அனுமதி பெற்றுக்கொள்ள முயலவேண்டும்

இத்தனை விதங்களிலும், கூட்டு நாணயச் சபைகள் தங்கள் பொருளையும் நாணயத்தையும் ஒவ்வொரு மெம்பர்களுடைய பொருளையும் நாணயத்தையும் இலேசாகப் பல மடங்கு விருத்தி செய்து கொள்ள முடியும். இப்படிச் செய்வதனால் இன்னொரு நன்மை உண்டு. சபைகளுக்கு இதனால் மூலதனம் அதிகப்படுவது நிச்சயமாகையால், மெம்பர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைக்கும்.

---

## கூட்டுறவு சபைகளின் கிராம சுகாதார வேலை.

கிராமங்களில் குடியிருக்கிறவர்கள் அசுத்தமான தண்ணீரைக் குடித்துக் காலரா முதலிய கொள்ளை வியாதிகளுக்கு இடங் கொடுப்பதைத் தடுப்பதற்காகக் கிராமங்களில் நல்ல தண்ணீர்க் கிணறுகளை வெட்டுவது நல்லதென்றும், இந்த வேலையைக் கிராமங்களில் ஏற்பட்டிருக்கிற கூட்டுறவுச் சபைகள் நன்றாய்ச் செய்யலாமென்றும், அப்படிச் செய்வதற்கு கவர்ன்மெண்டு, லோகல் போர்டுகளிலிருந்து வேண்டிய பணம் கொடுக்கப்படுமென்றும் கூட்டுறவு சபைகளின் ரெஜிஸ்திரார் இன்னின்ன கிராமங்களுக்கு இப்படிப்பணம் கொடுக்கலாமென்று சிபார்சு செய்யவேண்டுமென்றும் சென்னை கவர்ன்மெண்டார் தெரிவித்துக் கொண்டதின் பேரில் ரிஜிஸ்திரார் அவர்கள் சில கிரமங்களில் கூட்டுறவுச்சபைகள் இந்தப் பொதுக்காரியத்தை மேற்கொண்டு நடத்தத் தயாராயிருப்பதாகக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தார். அதன்மேல் கவர்ன்மெண்டார் சென்னை ராஜதானி முழுவதிலும் தேடிப்பார்த்து இந்த விதமான வேலைகளைச் செய்யக்கூடிய 20 கூட்டுறவுச் சபைகளைப் பொறுக்கி யெடுத்துச் சொல்லும்படி உத்தரவு செய்தபடியே ரிஜிஸ்திரார் அவர்கள் பல ஜில்லாக்களிலும் பார்த்து 13 சபைகள் இந்த வேலைக்கு தயாராயிருப்பதாகச் சிபார்சு செய்தார். கவர்ன்மெண்டார் அவருடைய சிபார்சுகளை அங்கிகரித்துக் கொண்டு ஷே 13 சபைகளுக்கும் வேண்டிய



பணவுதவி செய்தார்கள். அப்படிப்பணவுதவிபெற்ற சபைகளும், அவைகள் செய்து முடித்திருக்கிற வேலைகளும் பின்வருமாறு:—

| நெ. | சபையின் பேர்; நம்பர். | வேலையின் தன்மை | கிராண்டு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நேரூர், திருச்சிறுப்பள்ளி தாலுக்கா 879 நெ. சபை. | கிணறு வெட்ட, | 1000 |
| 2 | மணப்பாறை, திருச்சிறுப்பள்ளி ஜில்லா 197 நெ. சபை | 7 கிணறுகளை ரிப்பேர்செய்யவும் ஒருரோடு ரிப்பேருக்காகவும். | 950 |
| 3 | செங்காலிபுரம், தஞ்சாவூர்ஜில்லா 76 நெ. சபை | நல்ல தண்ணீர்க் கிணறுகள் 3 ரிப்பேர். | 100 |
| 4 | புண்டரீகபுரம், தஞ்சாவூர், 82 நெ. சபை | 5 கிணறுவெட்டவும் குளம் ரிப்பேர் செய்யவும், | 800 |
| 5 | சிலுக்கார்பட்டி, மதுரை ஜில்லா 755 நெ. சபை | கிணறுகள் வெட்டவும் ரிப்பேர் செய்யவும். | 1050 |
| 6 | உழக்கூர், தென் ஆர்க்காடு ஜில்லா 717 நெ. சபை | வீதி ரிப்பேர். | 350 |
| | அம்சவரம், கோதாவரி ஜில்லா 245 நெ சபை | பஞ்சமர்களுக்கு கிணறு வெட்டவும், குளம் ரிப்பேர் செய்யவும் | 421 |
| 8 | துகிராலா, குண்டூர் ஜில்லா 367 நெ. சபை | ஒரு நல்ல தண்ணீர்க் கிணற்றை சுற்றிச் சுவர் எடுக்க. | 260 |
| 9 | விண்டூர், நெல்லூர் ஜில்லா, 982 | ஷே | 150 |
| 10 | மலையனூர், அனந்தபுரம் ஜில்லா, 219 நெ. | ஒரு கிணறு ரிப்பேர்செய்து சுவர் எழுப்பிக் கபிலைபோட | 42 |
| 11 | ஏரியா மங்கலம், செங்கற்பட்டு, 356. | நல்ல தண்ணீர்க் குளத்தை ஆழமாய் வெட்ட | 560 |
| 12 | கமலம் பூண்டி, செங்கற்பட்டு 134 நெ. | ஒருகுளம் ரிப்பேரிக்கும் ஒரு கிணறு வெட்டுதலுக்கும் | 400 |
| 13 | கிளச்சேரி, செங்கற்பட்டு விவசாய பாங்கி 2 நெ. | ஒரு புதுகுளம் வெட்டவும், பறைச்சேரி குளத்தைப் பழுதுபார்க்கவும் | 635 |
| 14 | மங்களம், ராமநாதபுரம் ஜில்லா 443 நெ. | 5 கிணறுகளை ரிப்பேர் செய்து 4 கிணறுகள் வெட்ட | 2000 |
| 15 | வடமலைபுரம், ராமநாதபுரம் 147 நெ. | பஞ்சமர்களுக்கு கிணறுகள், தெருக்களில் சாக்கடைகள், ஒரு கிணறு ரிப்பேர். | 1750 |
| 16 | வையப்பாடி, கோயம்புத்தூர், 186 நெ. | ஒருகிணறுவெட்ட | 750 |
| 17 | கம்பிளியம்பட்டி, கோயம்புத்தூர், 184 நெ. | ஷே | 750 |
| 18 | மேட்டுப் புதூர், கோயம்புத்தூர், 409 நெ. | ஷே | 750 |
| 19 | கலயம்பூண்டி, செங்கற்பட்டு, 42 நெ. | பறைச்சேரியில் ஒரு கிணறுவெட்ட | 300 |
| 20 | கிளச்சேரி செங்கற்பட்டு நெ. 2 | ஏற்கனவே உள்ள குளத்தைச் சீர்ப்படுத்த | 4100 |
| | | ஆகமொத்தம் ரூ. | 17,618 |

கவர்ன்மெண்டார் எந்த வேலைகளை நடத்தும்படியாக இந்தப் பணத் தொகைகளைக் கொடுத்தார்களோ அந்தப் பொதுவேலைகளுக்காக பணம் கொடுக்கப் பெற்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சபைகளும் பணத்தைத் துர்விநியோகப் படுத்தாமல் சரியாய்ச் செய்து முடித்திருக்கிறதா என்று பார்த்து கவர்ன்மெண்டாருக்குத் தெரியப் படுத்த வேண்டியது அந்தந்த ஊரைச் சேர்ந்த தாலுகாபோர்டு பிரசிடெண்டுகளின் கடமை. இதற்குள், மேற்சொல்லப்பட்ட வேலைகளில் 15 வேலைகள் முடிந்துவிட்டன. இந்த வேலைகள் சரியாக நடத்தப்பட்டிருப்பதாகவும், கூட்டுறவுச்சபைகள் பணத்தைத் துர்விநியோகப் படுத்தவில்லை யென்பதாகவும், சில இடங்களில் கவர்ன்மெண்டார் கொடுத்த பணம் போராமல் சிலதர்மிஷ்டர்கள் தங்கள் கைப்பணத்திலிருந்தும் வேலைகளுக்காக வேண்டிய செலவுகளைச் செய்திருக்கிறார்களென்றும் அந்தந்த தாலுகாபோர்டுகளின் பிரசிடெண்டுகள் ரிபோர்ட் செய்திருக்கிறார்கள். சிறுக்குவாரபட்டி, கமலம் பூண்டி, மங்கலம் என்னும் கிராமங்களில் ஆரம்பித்த வேலைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை யென்றாலும் சீக்கிரத்தில் முடிந்துவிடும்.

இந்தக் கிராண்டுத் தொகைகளில் அதிகம் ரூபா. 4100 இளச்சேரி கூட்டு விவசாய பாங்கிவசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இளச்சேரியில் ஏற்கனவே இருக்கும் நல்ல தண்ணீர்க் கண்மாயைச் சீர்ப்படுத்தும் பொருட்டு இது கொடுக்கப்பட்டது. ஆனால் சுகாதார இலாகாவின் திட்டங்களுக்குத் தவறுதலில்லாமல் சரியாக இந்த வேலையைச்செய்து முடிப்பதற்கு வேண்டிய பல உபகாரணங்கள் இல்லாமையினால் தற்பொழுது இந்தவேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுச் சபைகள் இந்தப்பொது வேலைகளை நடத்துவதில் ஒரு முக்கியமான நன்மை யென்னவென்றால், மற்றவர்கள் நடத்துவதை விடக்குறைந்த செலவுக்குள் வேலைநடத்த முடியும். உதாரணமாக ஒரு வேலைக்குக் குறைந்தது 741ரூ பிடிக்குமென்று கண்டிராக்டர் மதிப்புப் போட்டார்கள். ஆனால் ஒரு கூட்டுறவுச்சபை அதேவேலையை 560 ரூபாய்க்குள் செய்து முடித்திருக்கிறது.

கடைசியாய் இந்தக் கூட்டுறவுச் சபைகளின் பஞ்சாயத்தார்கள் யாதொரு சுயபிரயோஜனமும் இல்லாமல் தங்கள் தங்கள் கிராமங்களில் இவ்விதமான பொதுவேலைகளை நடத்துவதற்காக எல்லோரும் அவர்களுக்கு நன்றி பாராட்டவேண்டும். மற்றக் கூட்டுச்சபைகளும் இவர்களைப் பின்பற்ற வேண்டுமென்பதே நமது கோரிக்கை:—



# பர்மாதேசத்தில் உழுமாடுகளின் மரணசகாய (லைப் இன்ஷியூரன்ஸ்) கூட்டுச்சங்கம்.

நண்பர்கள் லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளைப்பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். அதாவது ஒரு லைப் இன்ஷியூரன்ஸ். (அதாவது மரணசகாயக்) கம்பெனியில் ஒரு ஆளுடைய ஆயுளை இன்ஷியூர்செய்து அந்த ஆள் உயிரோடிருக்கும் பரியந்தம் வருஷாவருஷம் ஏற்பட்ட சந்தாவைச் செலுத்திக்கொண்டு வந்தால் அந்த ஆள் இறந்துபோனவுடன் அந்த ஆளுடைய வாரசுக்கு 500 அல்லது 1000 அவர் போட்டதொகைக்கு மேல்கொண்ட தொகை ரொக்கமாகக் கிடைக்குமென்பது சகலருமறிந்த விஷயம். மனிதர்களுடைய ஆயுளை இன்ஷியூர் செய்வதற்குஇப்படி இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் ஏற்பட்டிருப்பதைப்போலவே கால் நடைகளின் ஆயுளை இன்ஷியூர் செய்வதற்கும் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட அநேக கால்நடை இன்ஷியூரன்ஸ் சபைகள் சமீபத்தில் பர்மாவில் உண்டாகியிருக்கின்றன. கால்நடைகளை நம்பியிருக்கிற சமுசாரிகளுக்கு இது முக்கியமான விஷயமாகையால் அச்சபைகளைப்பற்றிய விருத்தாந்தங்களையும், சட்டதிட்டங்களையும், வேலை விமரிசைகளையும், அதனாலுண்டாகிற லாப நன்மைகளையும் இவ்விடத்தில் சுருக்கமாய் எடுத்துக் கூறப்போகிறோம்.

## சங்கத்தின் நோக்கங்கள்

இந்த சங்கத்தின் மெம்பர்கள் எல்லோரும் விவசாயிகள் வேளாண்மை செய்கிறவர்கள். அடிக்கடி விஷந்தீண்டுவதாலும், பல விதமான ரோகங்களினாலும் அவர்களுடைய கால்நடைகள் இறந்துபோவதால் அவர்களுக்கு வெகு நஷ்டமுண்டாகிறது. பலசமயங்களில் புதிதாய் வாங்கின உழுமாடுகள் வாங்கின கொஞ்சநாளைக்குள் செத்துப்போவது சகலருமறிந்த விஷயம். இது குடியானவர்களுக்கு எத்தனைப்பெரிய நஷ்டம் பாருங்கள். கால்நடைகளே குடியானவர்களின் முக்கிய ஆதரவு. கால்நடைகள் சீக்கிரம் சீக்கிரமாக இறந்துபோனால் குடியானவன் கதி என்னவாகும்? ஆகையால் கால்நடைகளின் ஆயுளை இன்ஷியூர் செய்வதற்காகவும், மனிதர்களுடைய ஆயுளை இன்ஷியூர்செய்து அவர்கள் இறந்தபிறகு அவர்களுடைய வாரசுக்குப்பண உதவி செய்வதைப்போல் இறந்துபோகும் இன்ஷியூர் செய்த உழுமாடுகளின் சொந்தக்காரர்களுக்குப் பணவுதவி செய்வதற்காகவுமே இந்தவிதமான சபை ஏற்பாடாகியிருக்கிறது. நல்ல புஷ்டியான காளைகளையும், எருமைகளையும்தான் இந்தச் சபையில் இன்ஷியூர் செய்யு

லாம். மற்ற எவ்விதமான கால் நடைகளையும் இன்ஷியூர்செய்ய முடியாது. அதிலும் ஷை காளைகளும் எருமைகளும் 4 வயதுக்குக் குறையாமலும், 12-வயதுக்குக் மேற்படாமலும் இருக்கவேண்டும். 100-க்கு ரூ. மேல் எந்த மிருகத்தின் உயிரையும் இன்ஷியூர் செய்யப்படாது. மேலும் தானாகவே வயோதிபத்தாலும், முதிர்ந்த சீக்காலும் அல்லது விஷந்தீண்டுதல் முதலிய அசந்தர்ப்பங்களாலும் சாகிற கால்நடைகளுக்குத்தான் இன்ஷியூரன்ஸ் பணம் கொடுக்கப்படுமே யொழிய மற்றப்படி யுத்தத்திலாவது அடிபிடி கலகங்களிலாவது சாகிற மிருகங்களுக்கும், காணாமல்போகிற மிருகங்களுக்கும், களவுபோகிற மிருகங்களுக்கும், ரயில்பிரயாணத்தில் ஜீவன் போகிற மிருகங்களுக்கும், பணம் கொடுக்கப்படமாட்டாது. அப்படியே தொத்துவியாதி கண்ட மிருகங்களை அதன் சொந்தக்காரன் கால்நடைச் சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி சிகிச்சை செய்யாவிட்டாலும், அல்லது கொள்ளைநோய் கண்டிருக்கிற செய்தியைச் சபையின் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டாலும், அந்த மிருகம் இறந்துபோனால் அதற்குப் பணம்கொடுக்கப்படமாட்டாது. அப்படியே அடித்து உபத்திரவப்படுத்தி அதனால் சாகிற மாடுகளுக்கும், மற்றவர்கள் விரோதத்தால் கொல்லப்படுகிற மாடுகளுக்கும், கொடுக்கப்படமாட்டாது.

### மெம்பர்கள்.

இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒரு சபை யிருக்கமுடியாது. ஒரு கிராமத்துக்கு ஒரு சபைதானிருக்கலாம். அந்தக் கிராமத்தில் கூட்டுறவுச்சபைகளில் மெம்பர்களாயிருக்கிற சகலரும் இந்தக் கால்நடை இன்ஷியூரன்ஸ் சபையிலும் மெம்பர்களாய்ச் சேரலாம். ஆனால் 18-வயதுக்கு உள்பட்டவர்கள் மெம்பர்களாக முடியாது. ஒவ்வொரு மெம்பரும் குறைந்தது 1 வருஷம் சபையில் மெம்பராயிருக்கவேண்டும். அப்படியே கால்நடையிறந்து பணம் கிடைத்தபிறகு 3 வருஷம் மெம்பராயிருக்கவேண்டும். அதற்குப்பிறகு சபையை விடுவதாயிருந்தால் 2 மாதத்துக்கு முன்னாடியே எழுத்துமூலமாய்ச் சபை அதிகாரிக்கு இதைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். யாராவது ஒரு மெம்பர் தன்னுடைய கால் நடைகளை அதிக வேலை வாங்கினாலாவது கஷ்டநிஷ்டூரப் படுத்தினாலாவது, மோசடியா நடவடிக்கைகளை நடத்தினாலாவது சபையின் சட்ட திட்டங்களை மீறினாலாவது அல்லது சபையின் உத்தரவுகளை அசட்டை செய்தாலாவது சபை அதிகாரிகள் அந்த மெம்பரைச் சபையை விட்டுத்தள்ளி விடலாம். அப்படித் தள்ளுபடியான மெம்பருக்குப் பிறகு சபையில் எவ்விதப் பாத்தி



யதையுமே கிடையாது. ஆனால் சபைக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிகளை யெல்லாம் தீர்த்துவிட வேண்டும்.

### விலைமதிப்பு.

ஒவ்வொரு மெம்பரும், தான் இன்ஷியூர் செய்ய உத்தேசித்திருக்கிற கால் நடையின் வயசு, அதன் விலை முதலிய சகல விவரங்களையும் தெளிவாக சபை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். சபை அதிகாரிகள் தங்களுக்குள் மூன்றுபேரைத் தெரிந்தெடுத்து ஷை கால் நடையைப் பரிசோதிக்கவும், வயது, விலைமதிப்பு முதலியவைகளை ஆராயவும் செய்வார்கள். அதில் ஏதாவது பிசகு அல்லது மோசடி யிருந்தால் அந்தக் கால் நடையை அங்கீகரித்துக் கொள்ள மாட்டார்கள். அப்படியே சீக்குமாடுகளையும் அங்கீகரித்துக் கொள்ள மாட்டார்கள். புதிதாய் வாங்கின மாடுகளை 15 நாளைக்குள் இன்ஷியூர் செய்துவிட வேண்டும். 15 தினத்துக்கு மிஞ்சினால் ஒப்புக்கொள்ளப் படமாட்டாது. இன்ஷியூர் செய்த 15 தினத்துக்குள் அது இறந்துபோனால் அதற்குப் பணம் கொடுக்கப்பட மாட்டாது. 15-ம் தினத்துக்குப் பிறகு இறந்தால்தான் பணம் கிடைக்கும். இன்ஷியூர் செய்த கால்நடையை விற்கிரயம் செய்தால் பணம்கிடையாது. அதற்குப் பதிலாய் அதே விலையுள்ள மற்றொரு கால் நடையை வாங்கி இன்ஷியூர் செய்யலாம். கால் நடைக்கு வியாதி கண்டால் உடனேக்குடனே சபைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டும். மேலும் சபையார் சொல்லுகிறபடி சிகிச்சை செய்யவேண்டும். தீராப்பிணி பிடித்த மிருகங்களைச் சபையால் உத்தரவுபடி விற்றுவிடவேண்டியது. இப்படி விற்ற விலையைக் குறைத்துக்கொண்டு அந்த மாட்டுக்குப் பணம் கொடுக்கப்படும். கால் நடைகளைப் பரிசோதிக்கத் தெரிந்து கொள்ளப்படுகிற 3 மெம்பர்களும் தங்களுடைய சொந்தக் கால்நடைகளையும் தங்கள் பந்துக்களுடைய கால் நடைகளையும் பரிசோதிக்கப் படாது. அவைகளைச் சபையின் கமிட்டிமெம்பர்கள் பரிக்ஷை செய்வார்கள்.

### சந்தா—க்ஷேமநிதி.

ஒவ்வொரு மெம்பரும் வருஷமொன்றுக்கு இன்ஷியூர் செய்த மாட்டின் கிரயத்தில் 100-க்கு 5 மேனிசந்தாவாகச் செலுத்தவேண்டும். வருஷ முதலில் பாதியும் ஆறு மாதத்துக்குப் பிறகு பாக்கியான சந்தாவையும் செலுத்தவேண்டும். ஒரு மெம்பர் தன் சபை யிருக்கிற ஊருக்கு வெளியே மாட்டைக் கொண்டுபோகும் பக்ஷத்தில் சபையாருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். சபையார் அப்பொழுது அதிகமான சந்தா கேட்பார்கள். ஆனால் 100-க்கு 8 ரூ-க்குமேல் அவர்கள் சந்தாவை ஒருபோதும் உயர்த்தமாட்டார்கள்.

ஆனால் மெம்பர்கள் செலுத்தும் சந்தா குறைவாயிருந்தால் ஜெனரல் மீட்டிங்கில் அது உயர்த்தப் படலாம். சபை ஏற்படுத்திய முதல் வருஷமே மெம்பர்களாய்ச் சேருகிறவர்கள் சந்தாவைத்தவிர வேறு பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் இரண்டாம் வருஷத்துக்குப் பிறகு சேருகிறவர்கள் பிரவேசக் கட்டணம் செலுத்தும்படி உத்தரவாகலாம். ஒவ்வொரு சபைக்கும் ஜெனரல்பண்டு (அதாவது பொதுநிதி) ரிசர்வ்பண்டு (அதாவது க்ஷேமநிதி) யென்று இரண்டு விதமான நிதிகளுண்டு. சந்தாத்தொகைகளெல்லாம் சேர்த்து ஜெனரல் பண்டு ஆக ஏற்படுத்தப்படும். ஆனால் பஞ்சம் முதலிய காலங்களில் மெம்பர்களுக்கு உதவிசெய்யும்படி பிரவேசக்கட்டணம், நன்கொடை, அபராதம் முதலிய தொகைகளைச் சேர்த்து ஒரு ரிசர்வ் பண்டு ஏற்படுத்தப்படும். இன்ஷியூர் செய்த மொத்தத் தொகைகளில் 100-க்கு 5 ரிசர்வ் பண்டில் சேர்த்துவிட்டால் பிறகு டிவிடெண்டுகளும் (அதாவது லாபப்பங்கீடுகளும்) பிரித்துக் கொடுக்கப்படும்.

### சாவுகளும் மரணசகாயமும்.

இன்ஷியூர் செய்யப்பட்ட ஒருகால்நடை செத்துப்போனால் அதை இன்ஷியூர் செய்தவர் உடனே அதைத் தெரியப்படுத்துவதோடு வேறு இரண்டு சபை மெம்பர்களைக்கொண்டு அதை ரூபகாரப்படுத்த வேண்டும். பிறகு அது எப்படி இறந்தது என்பது முதலிய விருத்தாந்தங்களையெல்லாம் சபை அதிகாரிகளுக்கு விவரமாகவும் சவிஸ்தாரமாகவும் அறிவிக்க வேண்டும். அதன் தோலையும் மாமிசத்தையும் லாபத்தோடு விற்கும்படி சபை அதிகாரிகள் ஏற்பாடுசெய்து கொடுப்பார்கள். இறந்துபோன மிருகத்தின் கிரயத்தை 3 பங்கு வைத்து அதில் 2 பங்கு மரணசகாயமாகக் கொடுப்பார்கள்.

ஆனால் தோலும்மாமிசமும் விற்கப்பட்ட பணத்தைப் பிடித்துக் கொள்ளுவார்கள். உதாரணமாக:- 45-ரூபா விலையுள்ள ஒருமாடு செத்துப்போகிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அதன் இறைச்சியும் தோலும் 10 ரூபாவிலை போகிறது. இந்த 10ரூபாயும் மாட்டின் சொந்தகாரனுக்கே சேருகிறது. இப்பொழுது 45 ரூபாயை 3-பங்கு வைத்தால் பங்குஒன்றுக்கு 15 ரூபாய். இரண்டு பதினைந்து 30 ஆகையால் சபையார் 30ரூபா சகாயம் செய்யவேண்டியது. ஆனால் தோலும் தசையும் விற்ற 10ரூபாயைக் கழித்துக்கொண்டு 20ரூபா கொடுப்பார்கள். மாடுசீக்காயிருக்கும்பொழுது வைத்தியம் செய்யவேண்டியிருந்தால் மருந்துச்செலவில் பாதியை சபையார் பெற்றுக் கொள்ளுவார்கள்.



### மானேஜ்மெண்டு

5-மெம்பர்களுக்கு மேல்பட்டதும், 9-மெம்பர்களுக்குட்பட்டதுமான ஒருகமிட்டி சபையை மானேஜ்மெண்டு என்றுசொல்லுவார்கள். ஆனால்இரண்டு வருஷத்துக் கொருதடவை புதிதாகத் தெரிந்து கொள்ளப்படுவார்கள். கமிட்டி மெம்பர்களுக்கு சேர்மனையும், காரியதரிசி முதலியவர்களையும் நியமிப்பார்கள். சேர்மன் (அதாவது சபைத்தலைவரே) பொக்கிஷதாரராகவும் வேலை பார்ப்பார். சேர்மனுக்கும், காரியதரிசிக்கும், கமிட்டி மெம்பர்களுக்கும் எவ்விதமான சம்பளமும் இல்லை. தர்மமாகவே வேலை செய்யவேண்டும் ஆறுமாதத்துக் கொருதடவை ஒரு ஜெனரல் பொதுமீட்டிங் நடைபெறும். ஒவ்வொரு மெம்பரும் அவசியம் ஆஜராகவேண்டியது. மெம்பர்களில் மெஜாரிட்டி அதாவதுபெரும் பான்மையோர் என்ன தீர்மானஞ் செய்கிறார்களோ அதன்படியே காரியாதிகள் நடத்தப்படும். மற்றமெம்பர்கள் அதன்படியே நடக்கவேண்டும். ஜெனரல் பொது மீட்டிங்கில் ஆஜராகாத மெம்பர்கள் ஆளுக்கு 1ரூபா அபாராதம் செலுத்தவேண்டும்.

### விவகாரம்.

சபை மெம்பர்களுக்குள் எதாவது விவகாரம் நேரிட்டால் கூட்டுறவுச் சபைகளின் ரிஜிஸ்திரார் அதை பைசல் செய்வார். அல்லது அதைப்பைசல் செய்யும்படி 3 பஞ்சாயத்தார்களை ஏற்படுத்துவார். அதில் ஒருவர் ரிஜிஸ்திராரினால் நியமிக்கப் படுவார். ஒருவர் சபையாரால் தெரிந்து கொள்ளப்படுவார். மற்றொருவர் வழக்காடுகிற மெம்பரினால் தெரிந்துகொள்ளப்படுவார். ஒவ்வொரு வழிகளிலும் ரிஜிஸ்திரார் அல்லது பஞ்சாயத்தார் செய்கிற தீர்ப்புக்குமேல் அப்பீல் இல்லை. அந்தத் தீர்ப்பை ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்குமேல் கோர்ட்டுக்குப் போகக்கூடாது. சபையின் சட்ட திட்டங்களை ரிஜிஸ்திராருடைய அனுமதியில்லாமல் மாற்றமுடியாது. சபையை நிறுத்த வேண்டுமானால் கோ ஆபரேடிவ் ஆக்டு அதாவது கூட்டுறவுச் சட்டத்தின் 39—42-வது பிரிவுகளின் பிரகாரம்தான் நிறுத்தக்கூடும். அப்படி நிறுத்திய பிறகும் சபைப்பணம் எதாவது பாக்கியிருந்தால் அது உள்ளூரில் எதாவது தருமத்துக்குக் கொடுத்துவிடப்படும். அல்லது உள்ளூரில் ஒரு கூட்டு நாணயச்சங்கம் இருந்தால் அதன் க்ஷேமநிதியில் சேர்த்து விடப்படும். இல்லாத பக்ஷத்தில் சென்ட்றல் பாங்கியின் க்ஷேம நிதியில் சேர்த்து விடப்படும்.

### முடிவுரை

நண்பர்களே ! இவ்விதமான கால் நடை மரணசகாய சங்கங்களினால் விளையக்கூடிய நன்மைகளைப்பற்றி இன்று என்ன சொல்ல வேண்டும். யானை இருந்தும் ஆயிரம்பொன், இறந்தும் ஆயிரம் பொன் என்று பழமொழி சொல்லுவார்கள். ஆனால் யானைகளைவிட நமக்கு அதிக அவசியமான உழுமாடுகள் இறந்துபோனால் எவ்வளவோ நஷ்டமாக முடிகிறது. ஆனால் மேற்சொன்ன கால் நடைச் சபைகளை ஏற்படுத்தினால்இறந்துபோன மாடும் பணம்தரும். மாடு செத்துப்போனாலும் வாங்கின விலையில் பாதிக்குமேல் எடுத்துவிடலாம். புதுமாடு வாங்கலாம். சுகமாயிருக்கலாம். பர்மாக்காரர்கள் நெடுங்காலமாக இப்படிப்பட்ட சபைகளை ஏற்படுத்தியிருக்க, நம்முடைய நாட்டில் மாத்திரம் விவசாயிகள் வீணாக நஷ்டமடையலாமா? இனியாவது அவர்

கள் கால் நடைச்சபைகளை ஏற்படுத்தி லாபமடைவார்களென்று நம்புகிறோம்.

## பர்மா ஐக்கிய முயற்சி யூனியன்.

பலபேர் சேர்ந்து நடத்தும் ஒரு சபைகளால் எப்படிக் கூட்டுச்சபையென்று பேரோ, அப்படியே பல கூட்டுச் சபைகள் சேர்ந்தால் அதற்கு ஐக்கிய கூட்டுச்சபை (அதாவது ஆங்கிலத்தில் மாடல் யூனியன்) என்று பெயர். இப்படிப்பட்ட ஐக்கியக் கூட்டுச்சபைகள் பர்மாவில் அதிகமாகையால் அதற்கு பர்மா ஐக்கிய கூட்டுச்சபையென்று வழங்குகிறது. அதன் விவரம் எப்படியென்றால்:—சுமார் 8 மைல் விஸ்தீரணத்துக்கு உள்பட்ட பல கூட்டுச்சபைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு (யூனியன்) அதாவது ஐக்கியக் கமிட்டியை ஏற்படுத்துகின்றன. அந்தக் கமிட்டியில் ஷை கூட்டுச்சபைகளின் அக்கிராசனாதிபதிகளைத் தவிர வேறு யாவரும் மெம்பராயிருக்க முடியாது. இப்படி அக்கிராசனாதிபதிகளாகக் கூட அந்த ஐக்கியக் கமிட்டியின் வேலையென்னவென்றால் முறைப்படி இரண்டு இரண்டு பேராகத் தங்களுள் தெரிந்தெடுத்து அவர்களை அடிக்கடி ஐக்கியக் கூட்டில் சேர்ந்த ஒவ்வொரு கூட்டுச் சபைகளும் கிரமப்படி அனுப்பி ஒவ்வொரு சபையின் நிலைமையையும் கணக்கு வழக்கு காரியாதி நடவடிக்கைகளையும் கவனமாய்ப் பரிசோதித்து வரும்படி செய்வதேயாகும். மேலும் பிரதிவருஷமும் ஒவ்வொரு சபையிடத்திலும் கையிருப்பு எவ்வளவு இருக்கிறதென்று திட்டமாகத் தெரியப்படுத்துவார்கள். இப்படிச் செய்வதனால் இந்த ஐக்கியக்கூட்டில் சேர்ந்த ஒவ்வொரு சபையும் கணக்கு வழக்குகளில் வெகு கருராகவும் உஷாராகவும் இருந்து கொள்ள ஏதுவாயிருக்கிறது. மேலும், ஷை சபைகளில் ஏதாவது ஒரு சபை ஒரு சென்ட்ரல் பாங்கியிலிருந்து கடன் வாங்க விரும்பினால் முன்சொன்ன ஐக்கியக்கமிட்டி மூலமாகவே போகவேண்டும். ஐக்கியக் கமிட்டியார் சிபார்சு செய்தால்தான் சென்ட்ரல் பாங்கி கடன் கொடுக்கும். இல்லாவிட்டால் கொடுக்க மாட்டார்கள். இது மாத்திரமல்ல. ஷை ஐக்கியக் கூட்டில் சேர்ந்த ஒரு சபை வாங்குகிற கடனுக்கு அதில் சேர்ந்த எல்லாசபைகளும் உத்தரவாதமாக வேண்டும். ஆகையால் ஒரு சபை வாங்குகிற கடனைக் கொடுக்கக் கூடிய சக்தியிருந்தாலன்னியில் மற்ற சபைகள் அதைக்கடன் வாங்கவிடாது. ஐக்கியக் கமிட்டியார் கடன் கொடுக்கும்படி சிபாரசு செய்யமாட்டார்கள். இதனால் சென்ட்ரல் பாங்கிகளுக்கும் பெரிய அனுகூலம். இப்பொழுது இந்த மாதிரி ஒரு ஐக்கியக் கூட்டுறவுச் யூனியன் பம்பாயில் தார்வார்ஜில்லாவில் நவல்குண்டு தாலுகாவில் அணிகிரியென்னும் ஊரிலும் ஏற்படுத்தபட்டிருக்கிறது. அந்த ஊரைச்சுற்றி 11 கூட்டுச்சபைகள் உண்டு. அவைகள் சேர்ந்து ஐக்கியக் கூட்டுயூனியனை ஸ்தாபித்திருக்கின்றன. சதாரா ஜில்லாவிலுள்ள வலுவா தாலுக்காவிலும் இப்படிப்பட்ட ஒரு ஐக்கியக் கூட்டுச்சபையை ஏற்படுத்த முயற்சி நடக்கிறது. இப்படிப்பட்ட ஐக்கிய கூட்டுச்சபைகளினால் ஏராளமான நன்மைகள் விளையக் கூடியதாயிருப்பதால் நமது சென்னையிலும் பல இடங்களில் இம்மாதிரி யூனியன்களை ஸ்தாபிக்க நமது ஜனங்கள் சீக்கிரம் முயற்சி செய்ய வேண்டும்.

அநுபந்தம்

## மூன்றாவது பர்மா மாகாண விவசாய கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

1915௵ ஆகஸ்டு மாதம் 25-ம் தேதியில் மூன்றாவது பர்மா மகாண விவசாய கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ் மண்டலேயில் நடைபெற்றது. அப்பொழுது சங்கங்களின் டெலிகேட்டுகளும், கவர்ன்மெண்டுத்தியோகஸ்தர்களும், பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

லெப்டினெண்டு கவர்னர், ஸர், ஆடம்ஸன் துரையவர்கள் அக்கான்பரன்ஸைத் திறக்கும் பொழுது பேசின பிரசங்கத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

இக்கான்பரென்ஸுக்கு உங்கள் வரவை யேற்க நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். பெரிய யுத்தம் நடைபெற்று வருகையில் நாம் இங்கே கூடியிருக்கிறோம். இதற்கு முன்னமே பர்மா தேசத்தின் முக்கிய விளைபொருள்களை ஜர்மனி வாங்கி வந்ததினால், யுத்த ஆரம்பத்தில், அவைகளுக்குத் தகுந்த மார்க்கெட்டில்லாமல் முதல் முதலில் கஷ்டமாயிருந்தது; ஆனால் இந்தியாவில் இவைகளதிகத் தேவையாயிருந்ததினாலும், இதற்கு முந்தின வருஷங்களின் விளைபொருள்களை அதிக விலைக்கு யேற்றுமதி செய்யப்பட்டு வந்ததினாலும், வெளி வியாபாரக் குறைவினால் ஜனங்கள் அதிக கஷ்டமடையவில்லை. கூட்டுமுயற்சிச் சங்கங்களின் மெம்பர்களிருக்குமிடங்களில் இதினுண்மை நன்கு விளங்கும்.

சென்ற வருஷத்தில் வியவசாய இலாகாவில், அஸிஸ்டெண்டுகளையும் சிப்பந்திகளையும் அதிகமா யேற்படுத்தி, பஞ்சு, கோதுமை, கரும்பு, முதலியவைகளை சாகுபடி செய்ய பரீக்ஷார்த்த ஸ்டேஷன்களையு முண்டாக்கியும், இன்னும் வேறு யேற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஐக்கிய முயற்சி இலாகாவில் 1,1 7 சங்கங்கடங்கிய 115 யூனியன்களிருக்கின்றன. இந்தியா கோவாப்ரேடிவ் கமிட்டியார், பர்மா தேசத்தில் ஐக்கிய முயற்சி நன்றாயபிவிருத்தி

யடைந்திருப்பதைக் கண்டும், அப்பர் பர்மா ஸெண்ட்ரல் பாங்கியினதும் யூனியன்களினதும் யேற்பாட்டைப் பார்த்தும் மிகவும் திருப்தி யடைந்ததை இங்கு கூறுவதில் நான் சந்தோஷப்படுகிறேன். இங்கே நடைபெறும் கால் நடைகளின் இன்ஷியூரென்ஸ்ஸின் முறையை கம்மிட்டியார் அங்கீகரித்திருக்கிறார்கள். இப்பொழுது 63 சங்கங்களிருக்கின்றன. இன்ஷியூரென்ஸ் மறுபடி செய்யக்கூடிய ஸெண்ட்ரல் சங்கமொன்றை ஸ்தாபிக்கும் வரையில் மாதிரி சங்கங்கள் விரைவாய் ஸ்தாபிக்கப்படமாட்டாது. ஸெண்ட்ரல் இன்ஷியூரென்ஸ் சங்கத்துக்குத் தேவையாயிருந்தால் வருஷந் தோறும் ரூ 25000 வட்டி யில்லாமல் 5 வருஷத்திற்கு கவர்ன்மெண்டார் கடன் கொடுப்பதாய் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு மிக்க வுதவியாயிருத்தலை நான் இங்கு பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை. விற்பனைச் சங்கங்களும், விவசாயிகளைச் சேராத நாணயச் சங்கங்களும் திருப்திகரமாய் அபிவிருத்தி யடையவில்லை. ஜனங்கள் அபிமானிக்கும்படியான பாங்கி யொன்றை யேற்படுத்தி விட்டால், இம்முறை இயக்கம் பரவுதல் மிகவும் எளிதாயிருக்கும்.

பின்பு கூட்டுத் தொழில் முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ரார், மிஸ்டர் இங்கிலீஷ், என்பர் பர்மா தேசத்தில் ஐக்கிய முயற்சி அபிவிருத்தி யடைந்த விதத்தையும், இப்பொழுது நடந்து வரும் யுத்தத்தினால் முதலிலேற்பட்ட சில இடையூறுகளையு மெடுத்துக் கூறினார். இந்தியா கோவாப் ரேடிவ் கம்மிட்டியார், அம்மாகாணத்திற்குப் பிரத்தியேகமாயுள்ள கால் நடைகளின் இன்ஷியூரென்ஸ், யூனியன் ஏற்பாடுகள், ஐக்கிய முறையில் வியாபாரம் செய்ய வேண்டுமென்றும் வாங்கி, கைகடன்களை தவணைகள் தவறாமற் கொடுபட வேண்டுமென்று உண்டாக்கிய ரெஜிஸ்டாரின் யேற்பாடுகள், ரெஜிஸ்ட்ராரால் பிரசுரிக்கப்பட்ட ஐக்கிய முறை இலக்ஷணங்கள் 10 அடங்கிய துண்டுப் பத்திரிகைகள்; ஸெண்ட்ரல் பாங்கிகள் தங்கள் திரவியத்தை பணமெளிதிற் கிடைக்கக் கூடிய கவர்ன்மெண்டு பேப்பர்களிற் போட்டும் நீண்ட காலடிபாஸிட்டுகளைப் பெற வேண்டிய வுத்திரவுகள், ஆகிய இவைகளையு பார்த்து மிகவும் திருப்தி யடைந்தார்கள். பிரைமரிச் சங்கங்களுக்கு வுதவும்படி ஸெண்ட்ரல் பாங்கிகளிடத்தில் பணமதிகமில்லாததினால், அநேக சங்கங்கள் ரெஜிஸ்ட்டர் செய்யப்படவில்லை. விவசாய நாணயச் சங்கங்கள் 1286-லிருந்து-1254 க்கு அதிகரித்தன. ஐக்கிய முயற்சி ஸ்திரமாய் உன்றிவிட்ட ஜில்லாக்களில் 200 அல்லது 300 சங்கங்கள் சீக்கிரம் ஸ்தாபிக்கப் படலாம். ஸெண்ட்ரல் கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்க மொன்று யேற்படுத்துவதாய் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டாரும் அதற்கு



உதவி செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய முறையை உண்மையில் அப்பியாசத்திற்குக் கொண்டு வரவேண்டுமானால், ஒவ்வொருகூட்டு முயற்சிக்காரரும் அதின் முக்கியமான இலக்ஷணங்களை அநுஷ்டிக்க வேண்டும். நீங்கள் மீதி பிடிப்பதில் மிகவும் பிரயத்தனப்படவேண்டும். மற்றவர்களின் மீதித்திரவியத்தை சங்கங்களில் டிபாஸிட்டுபண்ணும்படி செய்யவேண்டும். பணம் அவசியமாயும், உற்பத்தி விஷயமாயுமிருந்தாலொழிய கடன் வாங்கும் தொகையை குறித்த காரியங்களில் உண்மையாய் உபயோகப்படுத்தி, தவணைகள் தோறும்தவறாமல் கடனைத்திருப்பிக்கொடுக்க வேண்டும். மற்ற மாகாணங்களைக் காட்டிலும் பர்மா தேசத்தில் ஐக்கியமுயற்சி மிகவும் அபிவிருத்தி யடைந்து வருவதைக் கேட்க நான் விரும்புகிறேன்.

பின் வரும் தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கீகரிக்கப் பட்டன:—

(1) அப்பர்பர்மா தேசத்தில், சில ஜில்லாக்கள் நீங்கலாக, ரூ 50 லிருந்து ரூ 100 வரையிற் சம்பளம் வாங்கும் ஆடிட்டர்கள் 100 சங்கங்களுக்கு ஒருவர் விதம் சங்கங்கள் தணிக்கை சிப்பந்திகளை வைத்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு சம்பளங் கொடுக்கவேண்டி தணிக்கைவரி பின் கூறும் விதம் விதிக்கப்பட வேண்டும்:—

ரூ 10,000—த்துக்கு குறைவான தொழில் தனத்தையுடைய சங்கங்களுக்கு ரூ 8; ரூ20,000-த்துக்குக் குறைவான தொழில்தனத்தையுடைய வைகளுக்கு ரூ 12; இத்தொகைக்கு அதிகமாயுடைய சங்கங்களுக்கு ரூ 18. இவ்வரியைக் குறைப்பதற்கு ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரமிருக்கவேண்டும்.

2. சங்கங்களின் தணிக்கை ரிபோர்ட்டுகளை அவைகளைச் சேர்ந்த யூனியன் மூலமாய் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும்.

3. கால் நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்கள் நாணயச்சங்கங்களை யொட்டி யிருத்தலால், யூனியனிற் சேர்க்கப்படுவதில் யாதொரு ஆக்ஷேபணையு மிருக்கக்கூடாது.

4. குறிக்கப்பட்ட ஜில்லாக்களிலுள்ள ஒவ்வொரு சங்கமும் கால் நடைகளின் இன்ஷியூரென்ஸ் சங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும்.

5. ஐக்கிய முயற்சிக்கு உதவிபுரிவது தன் கடமைகளிலொன்று என்று கிராமத்தலைவன் கருதவேண்டும்.

6. காடுகளுக்கு அருகிலுள்ள கிராமங்களுக்கு மரசாமான்கள், விறகு, முதலானவைகள் கொடுக்கும் வண்ணம் கிராம ரிசர்வுகள் யேற்படுத்துவதாய் காட்டிலாகா சீப் கான்ஸர்வேட்டர் உத்தேசித்திருப்பதை இக்கான்பரென்ஸானது அங்கீகரிக்கிறது.

---

# மூன்றாவது மதுரை ராமனாதபுரம் ஜில்லா கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

மூன்றாவது மதுரை ராமனாதபுரம் ஜில்லா கோவாப்ரேடிவ் கான்பரென்ஸானது 19 5௵ செப்டம்பர்மாதம் 18 தேதியில் மதுரை ஜில்லாகலெக்டராகிய மிஸ்டர் G. F. பாடிஸன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மதுரை காலேஜ் ஹாலில் நடைபெற்றது, இரண்டு ஜில்லாக்களிலிருந்தும் 150 டெலிகேட்டுகளுக்கு அதிகமாய் விஜயஞ்செய்திருந்தார்கள்.

கான்பரென்ஸ் கூடினவுடன் வரவேற்புக் கம்மிட்டியின் சேர்மென் மிஸ்டர் A. ரெங்கஸ்வாமி அய்யர் விஜயஞ்செய்திருக்கும் கனவான்களின் வரவை யேற்றினார். அப்பொழுது அவர் கூறிதாவது. மதுரை ஜில்லாவில் 60 விவசாயச் சங்கங்களும், மற்றச் சங்கங்கள் 5-ம், ராமனாதபுரம் ஜில்லாவில் விவசாயிகளது சங்கம் 79-ம், விவசாயிகளுக்கல்லாதவைகள் இரண்டும், ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு ஜில்லாக்களுக்கும் ஒரே ஸெண்ட்ரல் பாங்கிதானிருக்கிறது. சங்கங்களின் சங்கியை குறைவாயிருந்தபோதிலும் அவைகளிற் சேர்ந்த மெம்பர்கள் ஏராளமாயிருப்பதால் கிராமவாசிகளுக்குள் ஐக்கிய முயற்சி, சிக்கனம் முதலியவைகளைப் பரவச் செய்வதில் மிகவும் உதவியாயிருக்கும். மதுரை ஜில்லாவில் 5,147 மெம்பர்களும், ராமனாதபுரம் ஜில்லாவில் 4,653 மெம்பர்களும் இப்பொழுதிருக்கிறார்கள்.

பின்பு கான்பரென்ஸ் அக்கிராசனாதிபதியாக மிஸ்டர் G. F. பாடிஸன் துரையவர்கள் ஐக்கிய முறையிற் தேர்ச்சிபெற்ற கனவான்களிருக்கும் அம்மஹாசபையில், அம்முறையில் பழகாதவரான தான் ஆலோசனை சொல்வதற்குஅங்குவரவில்லையென்றும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தராய் நீக்கக்கூடிய கஷ்டங்கள் யாதேனும் உள்ளனவாயென்பதை அறியும் பொருட்டு வந்ததாயும் கூறினார். கான்பரென்ஸுக்கு வந்து கவனிப்பதினால் மாத்திரம், ஐக்கிமுயற்சி விஷயமாய் நன்மைகள் பலவுண்டாகாது. வந்த ஐக்கியமுயற்சிக்காரர் ஒருவருக்கொருவர் சம்பாஷித்து தங்கள் தங்கள் அநுபோகங்களைக்கலந்து ஏற்படும் கஷ்டங்களை நீக்கும் வழிகளை அறியவேண்டியது அவசியம். இவ்விதத்தினாற்தான் நன்மைகளை உண்மையாய் பெறுவார்கள். ஜனங்கள் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு வேறுவேலைகள் மிகவும் கடுமையாயிருப்பதால், இம்முயற்சியில் இவர்கள் உழைப்பதற்கு அவகாசமில்லை. ஆகையால் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரல்லாத கனவான்கள் சேர்ந்த ஸ்தாபனங்களால் ஐக்கிய முயற்சி பரவேண்டியதவசியம். இதின் அபிவிருத்தின் பொருட்டு இரண்டு அம்சங்கள் கவனிக்கப்படவேண்டியவைகள். முதலாவது, வாங்கின கடன்கள் தவணைகள் தவறாமல் கொடுக்கப்படவேண்டியது. இரண்டாவது, கடன்களைத் திருப்பிக்கொடுக்கும் கெடுக்கள் நீண்ட காலமாயிருக்கக்கூடாது. பஞ்சாயத்தார்கள் நல்ல குணங்களுடையவர்களாயிருத்தல் சிறந்தது. சங்க மேல்விஜாரணை செய்வதில் அதிகக்கவனம் வைக்கவேண்டும்.



ராவ்ஸாகிப் K. ராமஸ்வாமி அய்யர் கட்டிடச் சங்கங்களைப் பற்றிப் பேசினார். இந்தியா ஊழியர்கள் சங்கத்தின் மெம்பராகிய மிஸ்டர் வெங்கிட சுப்பய்யா அவர்கள் மதராஸ் பிராவின்ஷியல் கோவாப்ரேடிவ் யூனியனது வேலையைப்பற்றி விரிவாய்க்கூறி, அங்கே கூடிய கனவான்களையும் சங்கப் பிரதிநிதிகளையும் யூனியனிற்பங்குகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுகொண்டார். 'கூட்டுத்தொழில் வர்த்தமானிக்கு' ஐக்கிய முயற்சி விஷயமாய் வியாசங்களெழுதி; யூனியனுக்கு வேறு வகைகளில் உதவிபுரியவேண்டுமென விஜயஞ்செய்திருக்கும் படிப்பினர்களை கேட்டுக்கொண்டார்.

மிஸ்டர் R. ஸ்ரீனிவாச அய்யங்கார் கைக்கடன் கொடுப்பதைப் பற்றி ஓர் வியாசம் வாசித்தார். நபர் ஜாமின் பேரில் கொடுபடும் கடன்களால், நல்ல நடத்தையுடைய சிறுவர்கள் தனத்தையும் பொறுப்பையும் அடைகிறார்கள். தொழிலாளி வகுப்பினர்களும், வியாபாரிகளும், குடியானவர்களும், தங்கள் தொழில்களை இலகுவாய் நடத்துவதில் இவ்விதக் கடன்கள் மிகவும் உதவுகின்றன. நாணயக் கடன்களால் ஜனங்களின் நடத்தையும், வழக்கங்களும் ஒழுங்கு பட்டு, தாங்கள் சம்பாதிக்கும் திரவியத்தில்,. மீதி பிடித்து பாங்கியிற் போடுகிறார்கள்.

ராவ்பகதூர் G. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் ஐக்கிய முயற்சியானது இந்தியாவுக்குப் புதிதல்லவென்றும், முன்னமே வளர்ந்துவந்ததென்றும் கூறினார். இந்தியா சரித்திரத்தை வாசித்துப்பார்த்தால, முன்.

காலத்தில் கிராமப் பஞ்சாயத்துக்கள் எவ்வளவு ஒழுங்காய் வேலை செய்து வந்தன என்பதை நன்கறியலாம். ஒற்றுமைக்குறைவால் அம்முறை சீர்குலைந்து போயிற்று. இப்பொழுது அவ்வழியில் சரி வரத்திரும்பிவிட்டால் உத்தேசிக்கப்பட்ட நன்மைகள் எளிதில் கைகூடும். இதற்கு கவர்ன்மெண்டாரின் உதவியை எதிர்பார்க்கக்கூடாது. இம் முயற்சியின் அபிவிருத்தியின் பொருட்டு ஜனங்கள் தங்கள் உதவியை மாத்திரம் சார்ந்திருந்தால், பல நன்மைகளை சுலபமாய் யெதிர் பார்க்கலாம்.

பின்வரும் தீர்மானங்கள் கான்பரென்ஸால் அங்கிகரிக்கப்பட்டின:—

1. கிராமச் சங்கங்களிலுள்ள மெம்பர்கள் டிபாஸிட்டு செய்யப் பிரியப்படும்படி பின்கூறப்படும் சௌகரியங்களை உண்டாக்கவேண்டும்.—(a) மாதந்தோறும், அறுப்புக்காலங்களிலும் போட்டுக்கொண்டு வரும்படியான டிபாஸிட்டுகளை யேற்படுத்துதல்; (b) ஸேவிங்கிஸ் பாங்கி அக்கவுண்டுகளை வைத்துக்கொள்ளுதல்; (c) கரண்டு அக்கவுண்டுகளை உண்டாக்குதல்; (d) ஸெண்ட்ரல் பாங்கியுடன் கைக்கடன் வைத்துக்கொள்ளுதல்.

2. பஞ்சாயத்தார்களும், மெம்பர்களும் ஐக்கிய முயற்சி இலக்ஷணங்களை நன்கு யறியும்பொருட்டு, ஒவ்வொரு சூபர்வைசரின் எல்லைக்குள்ளிருக்கும், சங்கங்களின் பஞ்சாயத்தார்களை அடிக்கடிக் கூட்டி, அம்மீட்டிங்குகளில், ரெஜிஸ்ட்ரார், அஸிஸ்டெண்டுரெஜிஸ்ட்ரார், இன்ஸ்பெக்டர்கள், முக்கியமான கோவாப்ரேடர்கள், ஆகிய இவர்கள் விஜயஞ்செய்து அவைகளை நன்கு நடைபெறச் செய்ய வேண்டிய தவசியமென்று இககான்பரென்ஸு அபிப்பிராயப்படுகிறது.

3. மெம்பர்கள் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகைகளை எளிதாய் வசூல் செல்வதற்கும், வராத தொகைகளின் நிமித்தம் ஸிவில் கோர்ட்டில் வழக்காடும் சிரமத்தை நீக்கும் பொருட்டும், புதிதா யேற்படுத்தப்பட்ட காஞ்சீபுரம் ஸெண்ட்ரல் பாங்கியில் குறிக்கப்பட்ட மத்தியஸ்த சபையின் விதிகளை யனுஷ்டிக்க மதுரை ராமனுதபுரம் ஸெண்ட்ரல் பாங்கிக்கு உத்திரவு கொடுக்கும்படி ரெஜிஸ்ட்ராரை மனுசெய்துகொள்ள இக்கான்பரென்ஸ் தீர்மானித்திருக்கிறது.



4. மதுரை ராமனுதபுரம் ஸெண்ட்ரல் பாங்கியிற் போடப்பட்ட சங்கங்களின் க்ஷேமநிதியின் வட்டிவிகிதம் 5லிருந்து 6க்கு உயர்த்தப் படவேண்டுமென்று இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

5. மதுரை அரபன் கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸுக்கும், கிராமச் சங்கங்களுக்கும் வியாபாரஞ் செய்ய சௌகரியங்களேற்படுத்த வேண்டிய தவசியமென இக்கான்பரென்ஸ் நம்புகிறது.

6. மேல் விஜாரணை செய்வதற்கு மதுரை ராமனுதபுரம் ஜில்லா பாங்கியானது, ரூ 12-லிருந்து ரூ 25 வரையில் ஏற்படுத்திய வரியானது புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களுக்கும், பொறுப்பு வரை யறுத்த சங்கங்களும் அதிக மென்று இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

பின்பு அக்கிராசனதிபதியின் முடிவுப் பிரசங்கத்துடன், கான்பரென்ஸ் குதூகலத்துடன் முடிவு பெற்றது.

## விளம்பர விகிதங்கள்,

---

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

### மற்றவர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

---

## சந்தாதார்களுக்கு, விண்ணப்பம்.

---

சந்தாதார்கள் தயைகூர்ந்து இச்சஞ்சிகையுடன் ஏழுக்குள்ள சந்தாவை அட்வான்ஸாய்க் கொடுத்துதவும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
காரியதரிசி,

மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ்
யூனியன் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி.

அநுபந்தம்

## நான்காவது மதராஸ் மாகாண கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்

1916ஹு ஜன்வரிமாதம் 22, 23, தேதிகளில் நான்காவது மதராஸ் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸானது பச்சையப்பன் ஹாலில் ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியு அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. கூட்டு முயற்சிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரும், அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ரார்களும், கவர்ன்மெண்டு பட்டதாரிகளும், பிரமுகர்களும் ஏராளமாய் விஜயஞ் செய்திருந்தார்கள். சுமார் 180 டெலிகேட்டுகள் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் வந்திருந்தார்கள். விவசாய இலாகா டைரெக்டர், ரெஜிஸ்ட்ரார், இவர்களின் உதவியால் விவசாயக் கண்காக்ஷிசாலையானது ஐக்கியமுயற்சிக்காரர்கள் பார்க்கும்படி திறந்து வைத்திருந்தது.

மதராஸ் பிரொவின்ஷியல் யூனியனுக்குப் பிரசிடெண்டாகிய திவான் பகதூர் M. ஆதிநாராயணய்யாகாரு, கான்பரென்ஸ் டெலிகேட்டுகளின் வரவையேற்கும் பொழுது இந்த ராஜதானியில் ஐக்கிய முயற்சியின் இயக்கம் எவ்விதம் பரவியிருக்கிறதென்பதையும், இம்பீரியல் கம்மிட்டியார் ரிபோர்ட்டில் சொல்லப்பட்ட சிற்சில அம்சங்களைப் பற்றியும், ஐக்கிய முயற்சியானது இனி அபிவிருத்தியடைய வேண்டிய வழிகளையும், மதராஸ் பிரொவின்ஷியில் கோவாப்ரேடிவ் யூனியன் ஐக்கியமுயற்சிக்காரர்களின் உதவியையடையவேண்டிய காரணத்தையும் நன்கு விளங்கும்படி அருமையாய் பிரசங்கித்தார்.

பிறகு ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியு அவர்கள் அக்கிராசனம் வகித்துப் பிரசங்கிக்கலானார். கவர்ன்மெண்டார் இவ்வியக்கத்தை மிகவும் கருணையுடன் பார்த்து வருவதாயும், கவர்ன்மெண்டாரின் உதவியை நாடாமல் பொது ஜனங்கள் ஒன்று சேர்ந்துகொண்டு ஐக்கிய முயற்சித் தொழிலை வியாபிக்கச் செய்வது இதின் முக்கிய நோக்கமென்றும், ஒருவன் தன் தாய் தேசத்திற்கு மிகவும் அபிமானத்துடன் உழைக்க வேண்டியது இதுவேயென்றும், இம்பீரியல் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டில் கூறிய கவர்ன்மெண்டார், பொது ஜனங்கள், ஆகிய இவர்கள் தம் தம் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும், இந்த ராஜதானியில் ஐக்கியமுயற்சி யேற்பட்டு இன்றுவரையில் எவ்விதம் வளர்ச்சி யடைந்த விஷயத்தையும் கூறினார்.

அக்கிராசனாதிபதி பிரசங்கம் முடிந்தவுடன், குறிப்பிட்ட ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் ரிபோர்ட்டுகள் வாசிக்கப்பட்டன.

கான்பரேன்ஸால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் பின் வருமாறு.—

1. தகுந்த ஸ்தலங்களில் கூட்டுமுறையில் பிரத்தியேகமான குடிசைத் தொழில்களை யேற்படுத்துவதை யுத்தேசித்து இந்த ராஜதானியின் வெவ்வேறு ஜில்லாக்களில் இது விஷயமாய் முதல் முதலில் வேண்டிய விசாரணைகளைச் செய்யும்பொருட்டு பிரத்தியேக சிப்பந்திகளை நியமிக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. சென்ற வருஷத்தில் நடந்த கான்பரன்ஸில் ஒப்புக்கொள்ளப்பட்ட முதலாவது தீர்மானத்தையே இந்தக் கான்பரன்ஸிலும் ஊர்ஜிதப்படுத்துகிறார்கள். அதாவது, ஆரம்பம் முதல் கடைசி வரையில் கணக்குப் பரிசோதனைகள் கவர்ன்மெண்டாரால் அவர்களுடைய சிலவிலேயே நடக்கவேண்டுமென்பதும், ஸொஸைடிகளின் மேற்பார்வையை மாத்திரம் யூனியன்கள் மூலமாய்ச்செய்து, மற்றப் பரிசோதனைகளை வருஷத்துக்கொருமுறை கொஞ்சமும் விடாமல் செய்யவேண்டுமென்பதாம்.

3. ஒவ்வொரு சங்கமும் தன் நிகர் லாபத்தில் 100-க்கு 50 வீதம் க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டுமென்று 1912௵த்திய கோவாபரேடிவ் சங்கங்களின் ஆக்டின் கீழ் 9-வது ரூல் ஏ. 2-ல் ஏற்படுத்திய கவர்ன்மெண்டாரின் சட்டமானது மிகவும் கஷ்டத்தைக் கொடுக்குமென்றும், முன்னமேயுள்ள 100-க்கு 25வீத தாரதம்மியத்தை ஊர்ஜிதப்படுத்த கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. இப்பொழுது தனி நபர்களை பங்குக்காரர்களாய் முழுமையுமாவது அல்லது விசேஷமாயாவது உடைய ஸெண்டரல் அல்லது ஜில்லா பாங்கிகள் சங்கங்களை அதிமாய்ச் சேர்த்துக்கொண்டும் அவைகளுக்கு தனி நபர்களைக்காட்டிலும் அதிக வோட்டு கிடைக்கும்படிக்கும் அவைகளின் நிர்மாணத்தை மாற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. இம்பீரியல் கோவாபரேடிவ் கம்மிடியார் அவர்களுடைய ரிபோர்ட்டின் 129-வது பாராவில் சொன்னபடி கீழ்க்கண்டவைகளைக் கவனிக்க, கவர்ன்மெண்டார் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களையும், பாங்கிங் தொழிலில் தேர்ச்சியடைந்த கனவான்களையும், ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கிகள் புதியதாய் ஏற்பட்ட ஸொஸைடிகள்



அவைகளினுடைய பிரதிநிதிகளையும் சேர்த்து கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதாவது (1) பணம் உதவும் அநேக ஸ்தாபனங்களுக்குள் இருக்கவேண்டிய ஸம்பந்தங்களும், எவ்வளவு தூரமான இடங்களுக்குள் டிபாஸிட் வாங்கலாமென்பதும், வட்டி எவ்வளவு வரையில் வாங்கலாமென்பதும் (2) அபெக்ஸ் பாங்கிக்கும் அதற்குக் கீழ்ப்பட்ட பணம் உதவும் ஸ்தாபனங்களுக்கும் இருக்கவேண்டிய நடவடிக்கைகளும் (3) அபெக்ஸ் பாங்கியும் மற்ற கீழ்ப்பட்ட பணம் உதவும் ஸ்தாபனங்களும் தங்களிடம் கடன் வாங்கப்பட்ட பொறுப்பு வரையறுத்த சங்கங்களுக்கு எவ்வளவு வரையில் கடன் கொடுக்கலாமென்பதும் (4) அபெக்ஸ் பாங்கியின் நிர்மாணமுமாம்.

6. வருஷகாலத்திற்குள் கொடுபடவேண்டிய டிபாஸிட்டு தொகையில், ஸெண்ட்ரல் பாங்கிகள் பாதியும், அபெக்ஸ் பாங்கியானது மூன்றில் ஓர் பங்கும் பணம் கிடைக்கக்கூடிய வழிகளை எப்பொழுதும் தாங்கள் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கம்மிட்டியார் 155 176-வது பாராக்களில் சிபார்சு செய்ததானது, இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விதியாய் 100-க்கு 50 வீதம் நிகர் லாபத்தை க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டுவதை உத்தேசித்து, இந்த ராஜதானியிலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் திரவிய சகாயமடைவதற்கு இடையூறு இருப்பதாலும், இந்த ராஜதானியின் க்ஷேமநிதியை தங்கள் சொந்தப் பணமா யுபயோகப்படுத்துவதாலும், இம்பீரியல் கம்மிடியாரின் இது விஷயமான சிபார்சை இப்பொழுது நிறுத்திவைப்பது நல்லது.

7. 1912௵த்திய கோவாபரேடிவ் சங்கங்களின் ஆக்டால் ஏற்படும் நன்மைகளை சில வகுப்பினர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகப்படுத்தி கம்மிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டின் 10-வது, பாராவில் சிபார்சு செய்வதை இக்கான்பரென்ஸ் அங்கீகரிக்கவில்லை.

8. பர்மாவில் போல் ஜில்லா பாங்கிகளின் கீழுள்ள ஸ்தல யூனியன்கள் உத்திரவாதஞ் செய்யும் யூனியனா (Guaranteeing Unions) யிருக்கவேண்டுமென்று இம்பீரியல் கம்மிட்டியார் தங்கள் ரிபோர்ட்டின் 101-ம் பாராவில் சிபார்சு செய்த விஷயத்தை நன்கறிவதில், ஸ்தல யூனியன்கள் இந்த நாணயலேவாதேவி செய்யாமல் மேல் விசாரணையை மாத்திரம் கைக்கொண்டு வருதலால், உத்திரவாதத்தை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்தக்கூடாதென்று இக்கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

9. இம்பீரியல் கம்மிட்டியார் சிபார்சு செய்திருக்கிறபடி, பங்கு தனத்தை அதிகப்படுத்த வேண்டி தவணைகள் தோறும் சிறு தொகையாய்க் கொடுப்பதை ஏற்படுத்தினாலொழிய, க்ஷேமத்தை நாடும் பிராவிடெண்டு டிபாஸிட்டுகள் போடுவதைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

10. இப்பொழுது நடந்துவரும் ஐக்கிய முயற்சிச் சங்கங்களின் வழக்கங்களையும் நடவடிக்கைகளையும் மாறுதல் ஏதாவது செய்வதாயிருந்தால் அதற்கு முன்னமே கவர்ன்மெண்டாரல்லாத பொறுப்புள்ள பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கலந்துகொள்ளவேண்டுமென கவர்ன்மெண்டாரை இக்கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

---

## குண்டூர் ஜில்லா முதல் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்.

முதல் முதல் குண்டூர் ஜில்லா கூட்டுறவு கான்பரென்ஸ் 1916-ம் ௵ பிப்ரவரி௴ 19-தேதி தெனாலியிலிருந்து 6-மைல் தூரத்திலிருக்கும் சினகடெலவாரு என்ற ஊரில் கூட்டப்பட்டது. அப்பொழுது ஆனரபில் ராவ்பகதூர். எம். ராமசந்திரராவ் பந்துலு அக்கிராஸனம் வஹித்தார்.

ஷை கான்பரென்ஸில் சிரத்தையெடுத்துக்கொண்ட அநேகர்களால் அது பரிமளிக்கப்பட்டது. அவர்களில் முக்யஸ்தர்கள் ஆனரபில் திவான் பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை, மிஸ்டர். K. நாகேச்வரராவ் பந்துலு, மிஸ்டர். ஜனப். J. ஹுஸெயின் கான் சாகிபு, பஹதூர், மிஸ்டர். P. A. ஸுப்ரஹ்மண்ய அய்யர், மிஸ்டர். K. ஸ்ரீநிவாஸய்யங்கார், மிஸ்டர். K. ரத்தய்யா, உத்திரமேரூர் மிஸ்டர். O. M. வெங்கடநாத அய்யங்கார், பீமாவரம், K. நரஸிம்ஹம் பந்துலு, மிஸ்டர் S. ராமஸ்வாமி குப்தா என்பவர்கள்.

வரவேற்கும் கம்மிடியின் சேர்மன், தெனாலி யு. வெங்கடப்பய்யா. B. A., B. L., என்பவர் கான்பரென்ஸுக்கு வந்த கருமதுரைவர்களையும் பார்க்கவந்தவர்களையும் சில வாக்யங்களால் ஸந்தோஷப்படுத்தினார். அவைகளில் முக்யமாய் அவர் எடுத்துக்கூறினது, வட ஸர்க்கார் மாகாணங்களின் கான்பரென்ஸ் தெனாலியில் வைத்த பிறகு தலைக்கிளப்பவில்லை, இப்பொழுது பெஜ்வாடாவில் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் ஆந்த்ரர் ஒருவர் ஏற்பட்ட பிறகு அது துரிதப்பட்டுவருகிறது. இந்த கான்பரென்ஸின் அக்கிராஸனாதிபதியாய் ஏற்பட்டவர் ஜனங்களுடன் கலந்து பழகி, அவர்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லும் சட்டநிரூபண ஸபையில் ஒருமெம்பராயிருப்பவர்.



ஆந்த்ர தேசங்களில் அநேக விடங்களில் நெசவு செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இன்னும் பல விடங்களில் கரும்பு வளர்த்தல், வெல்லம், சர்க்கரை முதலியவை செய்வது, பழத்தோட்டங்கள், பயிரிடுதல் முதலிய தொழில்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்விதமான ஊர்களில், கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார். மேலும் கடலைக்கொட்டை பயிரிடுதலும் மாடுகள் வளர்த்தலும் முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டியது. அதற்காக ஸொஸைடிகள் ஏற்படுத்த வேண்டியதென்றும், அந்தந்த தேச பாஷையில் பிரசங்கங்களும், சிறு புஸ்தகங்களும் போட்டு ஜனங்களுக்கு இனாமாகக் கொடுத்து இவ்வியக்கத்தை விருத்திசெய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

அக்கிராஸனாதிபதி ஆனரபில் ராவ் பகதூர் ராமச்சந்திர ராவ் அவர்கள், கிராமங்களில் ஏழைக் குடியானவர்கள் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொள்ளும்படிக்கும் அதன் கிரயத்தை கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களே கொடுக்கும்படிக்கும் பஞ்சமர்களுக்கும் அப்படியே செய்விக்கவேண்டுமென்றும், நிலங்களின் சொந்தக்காரர்கள் அல்லது மிராசுதாரர்கள் தங்கள் நிலத்தில் விளையும் பயிர்களை இப்பொழுது சேரிகளாகக்கட்டி வைத்து, விலை அதிகமாய் ஏறும் சமயம் வரையில் காத்திருந்து விற்பதும், அல்லது தங்களுக்கு வாயிதா சமயத்தில் முடையாயிருந்தால் மதராஸ் பாங்கியில் ஈடு வைத்துப் பணம் வாங்குவதும் கூடாதென்றும், அதற்குப் பதிலாக கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி மேற்கூறிய விஷயங்களுக்கெல்லாம் ஜனங்களுக்கு ஸாதகம் செய்யவேண்டியது அவசியமென்றும் வற்புறுத்தினார்.

பின்பு அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் K. நாகேச்வர ராவ் பந்துலு குண்டூர் ஜில்லாவின் ஐக்கியமுயற்சி விருத்தியைப் பற்றியும் அதற்கு முன் ஏழுமாதங்களாக கடன்கள் வாங்கியும் கொடுத்தும் இன்னும் சங்கங்கள் செய்த இதரவேலைகளைப் பற்றியும் வியசம் படித்தார். இந்த கான்பரென்ஸில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள்:—

1. விவசாயச்சங்கங்கள் விதைகள், தவிடு, எருமுதலியவைகளை எங்கெங்கே அவசியமாயிருக்கின்றனவோ அந்தந்த விடங்களில் வாங்கவோ, விற்கவோ, வேண்டிய முயற்சிகளைச் செய்ய உதவி செய்ய வேண்டும்.

2. டெல்டா ஸ்தலங்களில் ஜனங்கள் நிறைந்த ஜில்லாக்களில் கிராம மனைக்கட்டுகளை வாங்குவதற்காக கூட்டுரவு கட்டட சங்கங்கள் படுத்தும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

3. பரீக்ஷார்த்தமாக சில ஆடுமாடுகளின் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடிகளும் கூட்டுரவு கைத்தொழில் ஸொஸைடிகளும் ஏற்படுத்தப்படவேண்டும்.

4. டிரஸ்டு பண்டுகளினுடையவும் டிஸ்டிரிக்டு போர்டு, முனிசிபாலிட்டி முதலியவைகளிலுள்ள பண்டுகளினுடையவும் பணங்களை கூட்டுரவு சங்கங்களில் டிபாஸிட்டு வைக்கும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்யும்படிக்கும் இடங்கொடுக்கும்படி இந்தியன் டிரஸ்டு ஆக்டைத் திருத்தும்படி கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறது.

5. இந்த ஜில்லாக்களில் இப்பொழுது இருக்கும் கடன் கொடுக்கும் ஸொஸைடிகள் போதாதென்றும் வேறு விதமான புது ஸொஸைடிகளை ஏராளமான அளவில் நிலங்களின்பேரிலும், அவைகளின் வருமானங்களின் ஜாமீன்பேரிலும் பணங்களைக் குடியானவர்களுக்குக்கொடுத்துதவும்படிக்குச் செய்யவேண்டுமென்பதும் இந்த கான்பரென்ஸின் அபிப்பிராயம்.

கனம் திவான் பகதூர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் மேற்சொன்ன தீர்மானங்களைப்பற்றிப் பேசினதில், ஷை 5-வது பாராவில் சொன்னது மிகவும் அவசிய மென்றும், அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு பணத்தைக்கொடுத்து, கோர்ட்டுவ்யவஹாரங்களில் செலவழிக்கும் பணத்தைக்காட்டிலும் அதிகமாகவே கூட்டுரவு சங்கங்ளிலிருந்து வட்டி பெறலாமென்றும் ஒவ்வொருவரும் உண்மையை சீக்கிரத்தில் அறிந்து ஸொஸைடிகளில் பணத்தைக்கொடுக்கும் காலமும் சீக்கிரம் நெருங்கிவிடும் என்பதாகவும் சொன்னார்.

(6) மேலும், இப்படிப்பட்ட கூட்டுரவு சங்கங்கள் சென்னை கூட்டுரவு மாகாண யூனியன் லிமிடெட் என்றதில் பங்குகளெடுத்துக் கொண்டோ அல்லது எந்தவிதத்தினாலோ, அது தன் காரியத்தை நன்றாய்ச் செய்யும்படி உதவிசெய்ய வேண்டிய தவசியமென்று வற்புறுத்துகிறது.

(7) 1912ம்-௵த்திய கூட்டுரவு சங்கங்களின் ஆக்டில், கவர்மெண்டாரால் கொஞ்சகாலத்திற்குமுன் அறிவிக்கப்பட்ட சட்டம் IX (a) 2-ல் சொல்லியபடி, கடன் வாங்கும் ஸொஸைடிகள் தங்களுடைய நிகர் லாபத்தில் பாதியை ரிஸவர்பண்டில் சேர்த்துவிடவேண்டுமென்ற சட்டத்தால் மிகவும் கஷ்டமேற்படுமென்று கவர்ன்மெண்டாருக்கு அறிவிக்கின்றது.



(8) எங்கெங்கே முடியுமோ அந்தந்த விடங்களில் மேன்பார்வை யூனியன்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த கான்பரென்ஸின் அபிப்பிராயம்.

(9) ஸொஸைடிகளுக்கும் அவைகளின் மெம்பர்களுக்கும் உள்ள விவஹாரங்களை பஞ்சாயத்து மூலமாக தீர்த்துக்கொள்ளும் விஷயத்தில் ஷை ஆக்டின் சட்டம் XII ஆல் கொடுக்கப்பட்ட சுதந்தரங்களை முற்றிலும் உபயோகப்படுத்தும்படியாக ஸொஸைடிகளுக்குத் தெரிவிக்கவேண்டும்.

(10) இந்தியா கம்மிட்டியார் சொன்னபிரகாரம் பங்குகளின் மூலதனத்தை சிறுதவணைகளாகக் கொடுக்கும்படியாக ஏற்படுத்தினாலொழிய பிராவிடெண்டு டிபாஸிட்டுகள் போடும்படி கட்டாயப்படுத்தக்கூடாதென்று இந்த கான்பரென்ஸின் அபிப்பிராயம்.

இத்துடன் சேர்மெனுக்கு வந்தனங்களளித்து கான்பரென்ஸ் கலைந்தது.

---

# கோயம்புத்தூர் ஸர்க்கில் கோவாப்ரேடிவ் கான்பரென்ஸ்.

இந்தக் கூட்டுரவு கான்பரென்ஸ் 1916-ம்௵ மார்ச்சுமீ 4உ ஈரோடில் கூடிற்று. அங்கு வந்த அநேககருமத்துணைவர்களுள் முக்கியமாக பின்வருபவர்கள் வந்திருந்தார்கள்:—திவான்பகதூர் மிஸ்டர் L.D. ஸ்வாமிகண்ணுபிள்ளை, ஆனரபில் மிஸ்டர் B.V. நரஸிம்மையர், ராவ்பகதூர் M. G. ஆரோக்கியஸாமிபிள்ளை, ராவ்பகதூர் T. S. பாலகிருஷ்ணஅய்யர், மிஸ்டர் C. N. கிருஷ்ணஸ்வாமி அய்யர், பரமேச்வரநம்புத்ரிபாத், நாரயண நம்புத்ரிபாத், மிஸ்டர் வேதாசலய்யர் முதலியவர்கள்.

கான்பரென்ஸில் சிரத்தையோடு வேலைசெய்யும் ஸெகிரெடரி மிஸ்டர் S. R. ரங்கஸாமி அய்யங்கார் அவர்கள் நல்வரவுப் பிரசங்கம். பிறகு ராவ்பகதூர் M. G. ஆரோக்கியஸாமிபிள்ளை பி. எ., கனம் ராவ் பகுதூர் V. K. ராமாநுஜாசாரிய அவர்களை சேர்மேனாக இருக்கும்படி வேண்டிக்கொண்டதின்மேல் அவரும் ஒப்புக்கொண்டு ஒரு நிரூபத்தைத் தமிழில் படித்தார் அதன் சுருக்கமாவது:—

சில தினங்களுக்கு முன்பாக ஒரு ஆர்டர் வந்தது. அதில், கூட்டுரவு சங்கங்களின் மேன்பார்வை, முதல் தணிக்கை

இவைகளுக்குள்ள செலவை அந்த சங்கங்களே கொடுக்கவேண்டுமென்றும் அப்படி அவைகளுக்கு நிதி இல்லாவிட்டால், அவைகள் வெளியில் கடன்கொடுக்கும் தொகைகளின் பேரில் 100-க்கு ½ விதம் வட்டியை உயர்த்தவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. அப்படிச் கவர்ன்மெண்டாரின் மேன்பார்வையிலிருக்கிறதென்ற நம்பிக்கையினால் அநேக சங்கங்கள் ஏற்படும். ஆனால் கவர்ன்மெண்டார் திடீரென்று தங்களுடைய மேன்பார்வையை நிறுத்தி விட்டால், மணலினால் கட்டின வீடுபோல் எல்லாம் போய்விடும். ஆகையால் கவர்ன்மெண்டார் பேரில் முழு நம்பிக்கையும் வைக்காமல், சங்கங்கள் எல்லாம் தாங்களே செய்து கொள்ளும்படியான ஸ்திதிக்கு ஒரே நாளில் வராவிட்டாலும் மெதுவாய் கொஞ்ச காலத்திற்குள் வந்தால் அதுவே நலமாகும்.

பொறுப்பு வரையறுக்கப்படாத கடன் என்பதின் அர்த்தம்.—இப்படி அநேக கூட்டுறவு சங்கங்கள் ஏற்பட்டுவிட்டால் அவைகளின் பொறுப்பு உங்கள் பேரில் வந்திறங்கும். உங்களுடைய ஸொஸைடியை மற்றவைகளுக்கு மாதிரியாக யிருக்கச் செய்யவேண்டும். முதலில், பொறுப்பு வரையறுக்கப்படாத ஸொஸைடிகள் என்றால் என்ன? ஸொஸைடிக்காக வாங்கும் கடன்கள் நீங்கள் ஸொஸைடியில் பங்குப் பணமாகப் போட்டிருக்கும் தொகையைத் தொடருவதுடன் உங்கள்பேரிலும் தொடரும். உங்களுடைய இதர ஸொத்துக்களையும் கட்டுப்படுத்தும். வாங்கின கடன்களை ஏதோ துர் அதிர்ஷ்டத்தினால் ஸொஸைடிகள் கொடுக்கத் தவறினால், அதில் சேர்ந்தவர்கள் தங்களுடைய இதர ஸொத்துக்களிலிருந்து கொடுக்கும்படி நேரிடும். மெம்பர்களில் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை மனதில் நன்றாய் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படியிருந்தால் நீங்கள் ஒவ்வொருவரும் அந்த ஸொஸைடியைத் தங்களுடைய ஸொந்ததாகவே பாவித்து, தன்னை நஷ்டப்படுத்தாமலிருக்கும்படி அதற்குவேண்டிய வேலைகளைச் செய்வீர்கள். மற்றவர்கள் எதற்காகக் கடன்வாங்குகிறார்களோ அவர்கள் அந்தப்பணத்தை அதற்கே உபயோகப் படுத்துகிறார்களா வென்று கவனிப்பீர்கள். அப்படியே செய்யும்படி செய்து நாணயத்தையும் யோக்கியதையையும் நிலைநிறுத்துவீர்கள். ஒரு கடனைக் கொடுப்பதற்காக மற்றொரு இடத்தில் கடன்வாங்கும் சில சோம்பேரிகளுக்குப் பணம் கொடுக்கத் தலைப்படமாட்டீர்கள். வாங்கின பணத்தைத் திருப்பிக்கொடுக்க வாங்குபவன் சிரமப்பட்டு வேலை செய்கிறானா இல்லையாவென்று நீங்கள் பார்ப்பீர்கள். செட்டாயிருத்தல் என்பதைக் கற்பிக்கிறீர்கள்.



வாங்கும் கடன்கள் மறுபடி வட்டியுடன் திரும்பவும் குறிப்பிட்ட காலங்களில் கொடுபடுகிறதா வென்றும் பார்ப்பீர்கள். அதை வாங்காமற் சேரவிடும் பக்ஷத்தில் பிறகு வாங்குவதற்குக் கஷ்டமாய்விடும். பிறகு தவறாமலிருத்த லென்னும் குணத்தையும் விருத்தி செய்கிறீர்கள். சில ஸொஸைடிகளின் பஞ்சாயத்தார்கள் அகப்பட்ட பணங்களைத் தங்களுக்குக் கடனாகப் பங்கிட்டுக் கொண்டும், ஸரிவர பணங்களை குறிப்பிட்ட கெடுக்களில் வஸூல் செய்யாமலும், கணக்குகளை எழுதாமலு மிருக்கிறார்களென்று அநேக புகார்கள் என் காதில் விழுகின்றன. இதனால், மெம்பர்கள் தங்கள் ஸொஸைடிகளில் கவலையெடுத்துக் கொள்ளவில்லை யென்று தெரிகிறது. மீட்டிங்குகளை ஸரிவர கவனித்து, அதில் பேசும் நடவடிக்கைகளைத் தெரிந்துகொண்டு, நல்ல ஞானம், திறமை, தன்னயம பாராட்டாமை, முதலிய குணங்களை யுடையவர்களை பஞ்சாயத்தார்களாய் நியமித்தால் இந்தப் புகார்கள் வராது. ஸொஸைடிகளை உங்களுடைய சொந்த ஸொஸைடியாகவே பாவிக்க வேண்டுகிறேன். "உங்களுடையது," "என்னுடையது" என்று சொல்லப்பட்ட வார்த்தைகளுள் மிகுந்த நல்லர்த்த மிருக்கிறது. ஒரு பதார்த்தத்தை உங்களுடையதென்றே பாவிக்கத் தொடங்கினால், அதை மென்மேலும் விரும்பி, அதை விட்டுப்பிரிய மனமில்லாமலிருப்பீர். உம்முடையதென்று நினையாதிருக்கும் பக்ஷத்தில் அதைப்பற்றிக் கவலைப் படமாட்டீர். இது மானிட ஸ்வபாவம். ஆகையால், ஸொஸைடிகளை உங்களுடையதாகவே பாவியுங்கள். உங்களிடம் பணமிருந்தால் அதில் போடும்படிக்கும், பணமில்லாவிட்டால் அதிலிருந்தே கடன் வாங்கும்படிக்கும் மனதில் தூண்டுதலேற்படும். எவ்வளவு தேவையோ அவ்வளவு பணம் கடன் வாங்கிக்கொண்டு அதை சிறு தவணைகளில் செலுத்தலாம். வட்டியும் குறைச்சலாகும். இப்படிச் செய்வதால் ஸொஸைடியை பூர்ண ஸொஸைடியாகச் செய்து விடுவீர்கள்.

---

# விளம்பர விகிதங்கள்.

### கூட்டுறவு சங்கங்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 7 | 0 | 0 | ,, ,, |

### மற்றவர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... | ... | ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குப் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... | ... | ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... | ... | ,, | 8 | 0 | 0 | ,, ,, |

# சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

சந்தாதார்கள் தயைகூர்ந்து இச்சம்புடம் ஏழுக்குள்ள சந்தாவை பாக்கியுடன் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தா செலுத்தப்படாமலிருந்தால் அடுத்த பிரதியின் புஸ்தகமானது வி. பி. மூலமாயனுப்பப்படும்.

இப்படிக்கு,
காரியதரிசி,
மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ்
யூனியன் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி.

அநுபந்தம்

# ஐந்தாவது தஞ்சாவூர் ஜில்லா கோவாப்ரேடிவ் கான்பரன்ஸ்.

நிகழும் வருஷம் ஏப்ரல்மீ 9உ தஞ்சை ஜில்லாவின் 5-வதுவருஷக் கூட்டு முயற்சி கான்பரன்ஸ் ராவ் பகதூர் டி. விஜயராகவாசாரியார் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் திருவாலூரில் கூடிற்று. திவான் பகதூர் ஆதிநாரயணய்யா அவர்களும், ராவ்சாகேப் விஜயராகவாசாரியார் அவர்களும் இறந்துபோனதால் நேரிட்டிருக்கும் நஷ்டத்தைப்பற்றிப் பேசிவிட்டுப் பிறகு அக்கிராசனாதிபதி கூறியதாவது:—

### இம்பீரியல் கமிட்டி ரிபோர்ட்.

சென்றவருஷம் இந்தக் கான்பரன்சு கூடியதற்குப்பிறகு இரண்டு முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஒன்று இம்பீரியல் கோ ஆபரேஷன் கமிட்டியார் தங்கள் ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கிறார்கள். இரண்டாவது, சென்னை கவர்ன்மெண்டார் கோ ஆபரேடிவ் ஆக்டின்கீழ் புதிதாகச் சில ரூல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தியாவில் கூட்டு முயற்சி சபைகள் அநேகமாய் அதிருப்தியான நிலைமையிலிருப்பதாக ஷை இம்பீரியல் கமிட்டியார் தெரிவித்திருப்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். ஒன்றிரண்டு சபைகள் அப்படி அதிருப்தியான நிலைமையிலிருந்து மற்றப் பெரும்பான்மையான சபைகள் திருப்தியாக நடந்துவந்தால் பரவாயில்லை. ஆனால் பெரும்பான்மையான சபைகள் அதிருப்திகரமான நிலைமையிலிருப்பது அழகல்ல. கூட்டுத்தொழிலைப்பற்றிய விவகாரங்களை ஷை ரிப்போர்ட்டில் விரிவாக எடுத்து விளக்கிக் காட்டியிருப்பதால் நீங்கள் அந்த ரிப்போர்ட்டை நன்றாய்ப் படிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

### இரண்டு உத்தரவுகள்.

சென்னை கவர்ன்மெண்டார் சமீபத்தில் செய்திருக்கும் உத்தரவுகளில் இரண்டு பெரிய ஆக்ஷேபணைக்கு இடமாயிருக்கின்றன. டிவிடெண்டு அதாவது இலாபப் பிரிவினை ஒருபோதும் 100-ல் 9-ரூபாய்க்குமேல் போகக்கூடாதென்பது ஒரு உத்தரவு. இந்த ஜில்லாவைப் பொறுத்தமட்டில் இந்த உத்தரவு தஞ்சை நிக்கொல்சன் அர்பன் பாங்க் ஒன்றை மட்டுமே கட்டுப்படுத்தும். அந்த பாங்கியை நடத்துகிறவர்கள் அதற்கு ஆக்ஷேபிக்கவில்லை. இரண்டாவது மொத்த

லாபத்தில் 100-க்கு 50-ரூபாயை ரிசர்வ் பண்டில் அதாவது க்ஷேமநிதியில் சேர்த்து விடவேண்டும் என்று உத்தரவு செய்திருக்கிறார்கள். அப்படி சேர்த்துவிட்டால் சபைகளின் க்ஷேமநிதி பலப்படுமென்றும் கைமேலே நல்லாபம் கிடைப்பதைப் பார்க்கக் கூடாதென்றும் சபை பலப்பட்டு விருத்தியடைவதையே முக்கியமாகப்பார்க்க வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் சமாதானம் சொல்லுகிறார்கள். ஆனால் இப்படி இலாபம் அடைவதைக குறைத்தால் சபைகளில் மெம்பர்கள் சேரமாட்டார்களென்றும் ஏற்கனவே சேர்ந்திருக்கிறவர்கள் விலகிக்கொள்ளக் கூடுமென்றும் புதிய கூட்டுச் சபைகள் உண்டாவதற்கு விக்கினம் நேரிடுமென்றும் கூட்டுமுயற்சிக்காரர்கள் வாதிக்கிறார்கள். இதைச் சீர்தூக்கி ஆலோசித்து அபிப்பிராயங்கூறவேண்டியது இந்தக் காண்பரன்சின் கடமைகளில் ஒன்றாகும்.

கூட்டுமுயற்சியின் அபிவிருத்தி

இந்தத் தஞ்சை ஜில்லாவில் கூட்டுத்தொழில் முயற்சி நல்ல விருத்திக்கு வந்திருப்பதைப் பற்றிச் சந்தோஷம். 1904-ம் வருஷத்தில் முதல்முதல் 2 விவசாயக் கூட்டு சபைகளும் 1 கைத்தொழில் கூட்டுச் சங்கமும் ஒரு சென்ட்றல் பாங்கியும் ஏற்பாடாயின. இப்பொழுது 59 விவசாயச் சபைகளும் 17 கைத்தொழில் சங்கங்களும் 1 சென்ட்றல் பாங்கியும்இருக்கின்றன. ஆதியில் இந்த விவசாயச்சபைகளுக்கு 8,600 ரூ. மூலதனம் இருந்தது. இப்பொழுது 3,80,000 ரூ. மூலதனம் இருக்கிறது. இதில் மெம்பர்கள் டிபாஸிட்செய்திருக்கும் தொகை ரூ. 12,000. மெம்பர்கள் அல்லாதவர்கள் டிபாஸிட் செய்திருப்பது ரூ. 32,000. விவசாயச்சார்பில்லாத இதர சபைகளின் மூலதனம் ஆதியில் 7,700ரூ. இப்பொழுது 1,58,000ரூ. இதில் மெம்பர்கள் 26,000 ரூ. டிபாஸிட்டு செய்திருக்கிறார்கள்.

முடிவுரை

ஆகிலும் நாம் இவ்வளவுபோதுமென்று இருந்துவிடக் கூடாது. இன்னும் அதிக அபிவிருத்தி அடைய முயற்சி செய்யவேண்டும். பல வழிகளில் இப்படி விருத்தியடைய முயலக்கூடும். முதலாவது, இந்த ஜில்லாவில் இன்னும் விவசாயச் கூட்டுச் சபைகள் வெகு குறைவாகவேயிருக்கின்றன. மேலும் இரண்டு தாலுக்காக்களில் ஒரு கூட்டுச சபைகூடக் கிடையாது. வேறு இரண்டு தாலுக்காக்களில் ஒரே ஒரு கூட்டுச்சபை தான் இருக்கிறது. ஒரு தாலுக்காவிலாவது இன்னும் 11 சபைகளுக்குமேல் ஏற்படவில்லை. ஜனத்தொகையிலும் கல்வியிலும் நாகரீகத்திலும் தஞ்சாவூர் சென்னை ராஜதானியின் முக்கியமான ஜில்லாக்களில் ஒன்றாயிருக்கிறது. விவசாயத்திலோவெனில் தஞ்சாவூ



ருக்குச் சமானமில்லை யென்றுகூடச் சொல்லலாம். விவசாயத்துக்கு அவ்வளவு பேர்போன இந்த ஜில்லாவில் கூட்டு முயற்சியும் இவ்வளவு தாமதமாய் நடப்பது எனக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது. இதற்கு என்ன காரணமென்று எனக்கு விளங்கவில்லை மற்ற ஜில்லாக்களை விடத் தஞ்சை ஜில்லாரயித்துக்களுக்குக் குறைவான வட்டிகளுக்குப் பணம் கடன் கிடைக்கிறதென்பது வாஸ்தவந்தான். அவர்கள் சாதாரணமாய் 100 க்கு 12 அல்லது 15க்குமேல் வட்டி கொடுப்பதில்லை என்றாலும் 12 அல்லது 15 வட்டி யென்றால் சாமானியமல்லவே. கூட்டு முயற்சி சபைகளில் இதைவிடக் குறைந்த வட்டிக்குக்கடன் வாங்கலாமே. அப்படியிருக்க குடியானவர்களும் ரயித்துக்களும் ஏன் கூட்டுச்சபைகளை ஸ்தாபிக்க மனமில்லாதிருக்கிறார்கள்? இது அறியாமைதானே, தஞ்சாவூர் குடிகள் சரியாய் உழைப்பதில்லை யென்றும், செட்டாகப் பிழைப்பதில்லை யென்றும், எளிய நிலைமையிலிருக்கிறார்களென்றும் எனக்குத் தெரிகிறது. அதிகமாகக் கூட்டுச்சபைகளை ஏற்படுத்தினாலொழிய அவர்களுடைய கஷ்டம் தீராது என்பதே என்னுடைய தீர்க்கமான அபிப்பிராயம். பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி முதலிய தாலுக்காக்களில் உள்ள சில கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் கூட்டுச்சபைகள் வெகு சீர் கேடான நிலைமை யிலிப்பதாக ரிஜிஸ்திரார் அவர்கள் முறையிட்டிருக்கிறார். ஆகையால் ஜனங்களுக்குள் கூட்டுத்தொழிலின் இயக்கத்தை பரவச்செய்வதற்கு ஆள்கள் தேவை. இப்படிப்பட்ட உத்தமமான வேலையைச் செய்வதற்கு ஜனங்கள் முன்வரவேண்டும் எத்தனைபேர் முன் வந்தாலும் அத்தனை பேருக்கும் வேலையிருக்கிறது.

---

# இரண்டாவது கிருஷ்ணாஜில்லா கோவாப்ரேடிவ் காண்பரன்ஸ்.

சென்ற எப்ரல் மாதம் 29உ கிருஷ்ணாஜில்லா கூட்டுமுயற்சி காண்பரன்ஸ்ரேய் சாகேப் கே. ராமசாமி அய்யர் பி.ஏ. பி. எல். அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. ஜில்லாவின் சகலபாகங்களிலிருந்தும் 80 டெலிகேடுகள் (பிரதிநிதிகள்) விஜயம் செய்திருந்தார்கள். வரவேற்பு கமிட்டியின் சேர்மனாகிய செல்லப்பள்ளி குமாரராஜா அவர்கள் பின் வருமாறு பேசினார்:—

பத்து வருஷத்துக்குள் சென்னை ராஜதானியில் 1600 கூட்டுமுயற்சி சபைகள் 1,18,726 மெம்பர்களுடன் 1,42,10,117 ரூ மூலதனத்துடனும் ஏற்பட்டு விட்டன. மொத்தத்தில் இது வெகு திருப்திதான். ஆனால் தெலுங்கு ஜில்லாக்களில் கூட்டு முயற்சி இன்னும் அவ்வளவு அபிவிருத்தி அடையவில்லை. இந்தக் குறையைத்தீர்க்கவேண்டிய முயற்சிகளைச் செய்வது நமது கடமை.

## விவசாயக் கூட்டு.

இத்தேசத்தில் விவசாயிகளே அதிகமானபடியால் விவசாயக் கூட்டு முயற்சியின் அவசியத்தை இவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆகிலும் இந்த விவசாயக்கூட்டு முயற்சி இன்னும் அதிகமாய்த் தலையெடுக்காமலிருப்பது மிகவும் விசனிக்கத் தகுந்த காரியமேயாகும். விளைவுகளை அதிகப்படுத்துவதற்கும், சாஸ்திரரீதியான இயந்திரங்களை வாங்கிக்கொள்ளுவதற்கும், சாஸ்திர முறைப்படி எருக்களை உபயோகித்து சரியானபடி சாகுபடி செய்வதற்கும். இன்னும் இது போன்ற பல காரியங்களுக்கும் கூட்டு விவசாயச் சபைகள் அவசியமாக ஏற்படவேண்டியது. தற்பொழுது சென்னை ராஜதானி முழுவதிலும் எட்டே எட்டு விவசாயக் கூட்டுமுயற்சி சங்கங்கள் தான் இருக்கின்றன. இது போராது. விவசாயக் கூட்டின் பிரயோஜனம் குடியானவர்களுக்குத் தெரிந்து அவர்கள் இன்னும் ஏராளமான சபைகளை ஸ்தாபிப்பார்களென்று நம்புகிறேன்.

## ஜமீந்தார்களும் கூட்டுமுயற்சியும்

ஜமீந்தாரி இடங்களில் கூட்டு விவசாயம் என்ற நாமதேயமேயில்லாமலிருக்கிறது. ஜமீந்தார்கள் இது விஷயத்தில் அக்கரையெடுத்துக் கொள்ளுவார்களென்று ஸர் பி. எஸ். சிவசாமி அய்யர் நம்பியிருப்பதாகச் சொன்னார். ஆகிலும் ஜமீந்தார்கள் இன்னும் சம்பந்தமில்லாமலிருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். நிலச்சுவான்தார்களின் சங்கம் கூடி ஜமீன்களில் கூட்டுமுயற்சி பரவும்படி ஜமீந்தார்கள் சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருப்பது கொஞ்சம் ஆறுதலைக் கொடுக்கிறது. இனிமேலாவது ஜமீந்தார்கள் அப்படியே செய்வார்களென்று நம்புகிறேன்.

ஜமீந்தார்களும் நிலச்சுவான்தார்களும் கூட்டுமுயற்சியை வளர்ப்பதற்கு எத்தனையோ வழிகளிருக்கின்றன. அவர்கள் தாங்கள் வசிக்குமிடங்களில் கூட்டுமுயற்சி சபைகளை ஏற்படுத்தலாம் அல்லது ஏற்பட்டு உள்ள சபைகளுக்குப் பணவுதவி செய்யலாம். பணவுதவி செய்



வதற்கு இரண்டு வழிகளுண்டு. பணம் கடனாகக் கொடுக்கலாம். அல்லது டிபாஸிட்டாகப்போட்டுவைக்கலாம். கடனுக்கு சபை மெம்பர்கள் எல்லோரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புள்ளவர்களாகையாலும், சபைகளின் கணக்குவழக்குகளை கவர்ன்மெண்டாரே நேரில் மேல்பார்த்துக் கொள்ளுகிற படியாலும், ஜமீந்தார்களுடைய பணத்துக்கு மோசம் வராது. மேலும் ஜமீந்தார்கள் நன்றாய்ப் பிரசங்கம் செய்யக்கூடியவர்களை ஊர் ஊராய் அனுப்பிக் கூட்டு முயற்சியினால் விளையக்கூடிய நன்மைகளை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லும்படி செய்யவேண்டும். இதைப்பற்றித் துண்டுப் பத்திரிகைகளை அச்சிட்டுப்பரப்பவேண்டும்.

## புரோவின்ஷியல் பாங்கி.

சென்னைமாகாண முழுவதிலுமுள்ள சகல கூட்டுசாலைகளுக்கும் பணவுதவி செய்யும்பொருட்டு மாகாண கோ ஆபரேடிவ் பாங்கி ஒன்றை ஏற்படுத்துவது அவசியம். இதை எல்லோரும் அவசியமென்றே ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்த மாதிரி ஒரு பாங்கி ஏற்பட்டால் அதில் கூட்டுமுயற்சி சபைகளே ஷேர்ஹோல்டர்களாக (பங்காளிகளாக) இருக்கவேண்டும். அப்படி எல்லாம் கூட்டுமுயற்சி சபைகளே பங்கு எடுத்துக்கொள்ள முடியாமல் போனபோதிலும், ஷை பாங்கியின் மானேஜ்மெண்டு நடவடிக்கை பூராவும் கூட்டுமுயற்சி சபைகளின் கையிலேயே இருக்கவேண்டும். இப்படி இரண்டு அல்லது மூன்று லக்ஷ ரூபாய் மூலதனத்தோடு ஒரு மாகாண பாங்கியை ஏற்படுத்துவது சுலபமான காரியமென்பதே யென்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மதராஸ் சென்ட்றல் அர்பன்பாங்கி ஷேர்ஹோல்டர்களுக்கு அதிகமான லாபம்கிடைப்பதை கவனிக்கிறதேயொழியக் கூட்டுமுயற்சி சபைகளின் நன்மையை அவ்வளவாகக் கவனிப்பதில்லை அவர்கள் கூட்டுசபைகளின் நன்மையைப் பிரதானமாகக் கவனித்தாலொழிய உடனே மேற்சொன்ன மாதிரி ஒரு மாகாண பாங்கியை ஏற்படுத்தவேண்டியது அத்தியாவசியம்.

## கிருஷ்ணாஜில்லாவில் கூட்டுமுயற்சி.

கிருஷ்ணாஜில்லாவைப் பொறுத்தமட்டில் சென்ற 10 மாதத்திற்குள் கூட்டுமுயற்சி சபைகள் பல ஏற்பட்டிருக்கின்றன. இது மிகவும் திருப்திகரமான விஷயம். இந்த வருஷம் ஆரம்பத்தில் கிருஷ்ணாஜில்லாவில் 49 சபைகள் இருந்தன. சென்ற மார்ச்சுமீ முடிவுக்குள் 85 சபைகள் ஏற்பட்டுவிட்டன. விவசாயக் கூட்டுசபைகளில் 1714

மெம்பர்கள் இருந்தார்கள். மார்ச்சு முடிவுக்குள் 2335 மெம்பர்களாய்விட்டது. அவர்களின் மூலதனம் 1,95,977 ரூபாயாக இருந்தது. 2,76,528 ரூ. ஆகிவிட்டது மொத்தம் 85 சபைகளில் குடிவாடா தாலூக்காவிலும், கைக்கலூர் தாலூக்காவிலும், பீமாவரம் தாலூக்காவிலும் 66 சபைகள் இருக்கின்றன. பந்தர், திவி, தனுக்கு, எல்லூர், நந்திகாமா, பெஜவாடா ஆகிய மற்ற 6 தாலூக்காக்களிலும் சேர்த்து எல்லாம் 19 சபைகள்தான் இருக்கின்றன. ஆகையால் பிந்திச்சொன்ன இந்த 6 தாலூக்காக்களிலும் மற்றத் தாலூக்காக்களைப் போலக் கூட்டுமுயற்சி அவ்வளவு விருத்தி யடையவில்லை. ஆகையால் இந்தத் தாலூக்கா வாசிகள் இக்குறையைக்கூடிய சீக்கிரம் தீர்த்துக் கொள்ளுவார்களென்று நம்புகிறேன்.

இந்த 85 சபைகளில் 3 கோ ஆபரேடிவ் பாங்கிகள் குடிவாடாவிலும், எல்லூரிலும், ஜகய்யாபேட்டையிலும் ஐந்து தொழிலாளிகளின் சங்கங்கள் இருக்கின்றன. குடிவாடாவில் ஒரு கோ ஆபரேடிவ் ஸ்டோர்ஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குடிவாடாவில் ஒரு கோ ஆபரேடிவ் டிஸ்டிரிக்ட் பாங்கியும், ஒரு கோ ஆபரேடிவ் யூனியனும் உண்டு. இந்த சபைகளெல்லாம் மொத்தத்தில் திருப்தியாகவே வேலைசெய்துகொண்டு வருகின்றன. மெம்பர்கள் வாங்கின கடனைக் கொடுப்பதில் கொஞ்சம் சுறக்கம் ஏற்படுகிறது. என்றாலும் மற்றப்படி பாதகமில்லை. காலக்கிரமத்தில் கடனை அடைப்பதிலும் அவர்கள் மிதமாயிருக்காமல் உடனுக்குடனே அடைத்து விடுவார்களென்று நம்புகிறேன். அப்படிச்செய்தால் அவர்களுக்குத்தான் நல்லது. இதுகாலபரியந்தம் கிருஷ்ணாஜில்லாவில் ஒரு விவசாயக் கூட்டுசபை கூடக் கிடையாது. இது மிகவும் விசனிக்கத்தக்கது. மற்றச்சபைகளைவிட விவசாயக் கூட்டுசபைகளே முக்கியம். கூடிய சீக்கிரம் நமது குடியானவர்கள் இதின் பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்டு பல விவசாயச் சபைகளை ஏற்படுத்தி நன்மை அடைவார்களென்று நம்புகிறேன்.

மொத்தத்தில் கிருஷ்ணாஜில்லா முழுவதையும் எடுத்துக் கொண்டால் சென்ற $1\frac{1}{2}$ வருஷத்திற்குள் கூட்டுமுயற்சி வெகு அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இதற்கு நம்முடைய அஸிஸ்டெண்ட் கோ ஆபரேடிவ் ரெஜிஸ்திரார் ஆகிய கனம் கே நாகேஸ்வரராவ் அவர்களுடைய முயற்சிகளே முக்கியகாரணம். அவர் கிருஷ்ணா ஜில்லாவிலும், மேலும் அவருடைய அதிகாரத்திலுள்ள இத்தெலுங்கு ஜில்லாக்களிலும் கூட்டு முயற்சி விருத்தி பண்ணுவதற்காக அரிய பெரிய முயற்சிகளைச் செய்திருக்கிறார். அதற்காக நாமெல்லோரும் அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அவர் இனிமேலும் அப்படியே



ஊக்கமாய் முயற்சி செய்து ஒரு கிராமமாவது பாக்கியில்லாமல் எல்லாக் கிராமங்களிலும் ஊர்களிலும் கூட்டு சபைகள் ஏற்படும்படி செய்வாரென்று நம்புகிறோம்.

### சபாநாயகரின் பிரசங்கம்.

செல்லப்பள்ளி குமார ராஜா அவர்கள் பேசி முடிந்ததும், அக்கிராசனாதிபதியாகிய ரேய் சாகேப் கே. ராமசாமி அய்யர் பி. ஏ. பி. எல்., பேசியதாவது.

கனவான்களே! என்னை இச்சபைக்கு அக்கிராசனாதிபதியாக நியமித்து என்னை யிவ்வளவு தூரம் கௌரவப்படுத்தியதற்காக நான் பெரிதும் உங்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். இந்த வருஷம் கனம் கே. விஜயராகவாசாரியார் அவர்களும் திவான் பகதூர் ஆதி நாராயணய்யா அவர்களும் இறந்து போனதால் நம்மெல்லோருக்கும் பெருத்த நஷ்டமே ஏற்பட்டிருக்கிறது. கனம் ஆதி நாராயணய்யா அவர்கள் தான் சென்னை ராஜதானியில் முதல் முதல் கூட்டுமுயற்சி சபைகளை ஸ்தாபித்தவர். அவர் தான் விவசாயக் கூட்டு முயற்சியை ஆரம்பித்தார். மாகாண கோ ஆபரேடிவ் யூனியனை ஏற்படுத்தி அதின் அக்கிராசனாதிபதியாயிருந்தார்.

### கவர்ன்மெண்டாரின் ஆர்டர்.

கூட்டுமுயற்சி அபிவிருத்தி சம்பந்தமாக கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவில் இரண்டு விஷயங்கள் கவனிக்கத்தக்கவைகள். எந்த சென்ட்றல்பாங்கிகள் சபைகளுக்குக் கடன்கொடுக்கின்றனவோ, அந்த சென்ட்றல் பாங்கிகளைக்கொண்டே கூடுமான பொழுதெல்லாம் சபைகளின் கணக்கு வழக்குகளைப் பரிசோதிக்க வேண்டுமென்றும், தவிரவும், சபைகளைக் பிரித்துக் குறிப்பிட்ட சபைகளின் கணக்கு வழக்குகளை மேல்பார்த்துக் கொள்ளுவதற்கு சூப்பர் வைசிங் யூனியன் (அதாவது, மேல் பார்க்கும் சபைகள்) என்ற சபைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள். இதில் முதலாவது சொன்ன வழியே அதாவது, சென்ட்றல்பாங்கிகளின் மூலமாக மேல்பார்த்துக்கொள்ளுவதே—சிறந்தது. இதனால் கடன்கொடுக்கும் சென்ட்றல் பாங்கிகளுக்கும் அவைகளிடமிருந்து கடன் வாங்கும் சபைகளுக்கும் இன்னுமதிக நெருக்க முண்டாகும். ஆனால் பிந்திச்சொன்ன சூப்பர் வைசிங் யூனியன்களின் வேலையை இனிமேல்தான் பார்க்கவேண்டும். இவைகள் கடன்வாங்கும் சபைகளுக்கும் கடன் கொடுக்கும் சென்ட்றல் பாங்கிகளுக்கும் நடுவுள்ள தரகர்களைப்போ

விருப்பதால், யாருக்கு அனுகூலமுண்டாகுமோ தெரியவில்லை. இதனால் கூட்டுமுயற்சியெப்படி விருத்தியடையுமென்பதும் விளங்கவில்லை.

சூப்பர்வைசிங் யூனியன்கள் கடனுக்குப்பொறுப்பு ஏற்றுக்கொள்ளப் போகிறதில்லை. அப்படியிருப்பதால் கடன் கொடுக்கும் சென்ட்ரல் பாங்கிகள் அவைகளின் வார்த்தையைக் கேட்குமோ இல்லையோவென்பது சந்தேகந்தான். கூட்டு சபைகளின் கையிருப்பையும் நாணயத்தையும் பற்றி ஷெ யூனியன்கள் சொல்லும் பாகத்தை சென்ட்றல் பாங்கிகள் ஏற்குமோவென்பதும் சந்தேகமாகவேயிருக்கிறது. ஆகிலும் இந்த ஏற்பாடுகளைப்பற்றிக் கோ ஆபரேடிவ் ரெஜிஸ்திரார் அவர்கள் விஸ்தாரமாக சகல ஏற்பாடுகளையும் தெரிவிக்கிறவரையில் இது விஷயங்களைப்பற்றி ஒன்றும் தீர்க்கமாகச் சொல்ல முடியாது. கூட்டு முயற்சி சபைகளுக்கு இந்த ஏற்பாடுகளில்எந்த ஏற்பாடு நல்லதென்று தீர்மானிக்க வேண்டியது உங்களுடைய கடமை.

## கோ ஆபரேடிவ் இன்ஸ்பெக்டர்கள்.

மேற்சொன்ன சூப்பர் வைசிங் யூனியன்கள் சம்பந்தமாக மேல் பார்க்கும் இன்ஸ்பெக்டர்களைப் பழக்க வேண்டிய விதங்களைப்பற்றி ரிஜிஸ்திரார் அவர்கள் சில ஒழுங்குகளைச் செய்திருக்கிறார். அந்த ஒழுங்குகள் சரிதானாவென்று தீர்மானிக்க வேண்டியது உங்கள் கடமை.

## க்ஷேமநிதி.

மூன்றாவது நீங்கள் தீர்மானிக்கவேண்டியவிஷயமென்னவென்றால் இது வரையில் கூட்டுச் சங்கங்கள் மொத்தலாபப்பணத்தில் 100-க்கு 25 ரூ. விதம் க்ஷேம நிதியில் (அதாவது ரிஸர்வ் பண்டில்) சேர்த்துவிடுவது வழக்கமாயிருந்துவருகிறது. ஆனால் கவர்ன்மெண்டார் சமீபத்தில் 100-க்கு 50 விதம் ரிஸர்வ் பண்டில் சேர்த்து விட வேண்டுமென்பதாக உத்தரவு செய்திருக்கிறார்கள். இப்படி உத்தரவு செய்திருப்பதால் சபைக்குப் பெருத்த கஷ்ட நஷ்டங்களுக்கு இடமாயிருப்பதால் சகல கூட்டுச் சபைகளும் இதைப்பற்றி ஆக்ஷேபித்திருக்கின்றன. மேலும் மாகாணக்கூட்டுக் கான்பரன்சிலும் ஒவ்வொரு ஜில்லாக் கூட்டுக் கான்பரன்சுகளிலும் இதைப்பற்றி வெகு பலமாய்க் கண்டித்துப் பேசப்பட்டு கவர்ன்மெண்டார் இந்த நூதன உத்தரவை ரத்துச் செய்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியே நாமும் இந்தக் கான்பரன்சில் கேட்டுக் கொள்ள வேண்டியது.



ஒரு சபையின் மொத்த லாபத்தைக் கணக்குப் பார்க்கும் பொழுது வசூலாயிருக்கும் வட்டியைத் தவிர நிலுவையில் நிற்கும் வட்டியைச் சேர்த்துக் கொள்ளக்கூடாதென்பதாக ரிஜிஸ்திரார் உத்தரவு செய்திருக்கிறார். இதனால் சென்ட்ரல் பாங்கிகளுக்குப் பெரிய நஷ்டமாக முடியும். ஆகையால் நடப்பிலிருக்கும் வருஷம் முடிகிறவரையிலாவது இந்த உத்தரவு அமுல் செய்யப்பட மாட்டாதென்று நம்புகிறேன்.

## சென்ட்ரல் பாங்கிகள்.

இன்னும் சென்ட்ரல் பாங்கிளுக்குச் சரியான கணக்கு வழக்குகளைப் பார்க்கக்கூடிய அதிகாரிகள் இல்லை. இப்பொழுது கவர்ன்மெண்டு ஆபீஸர்களே நிலுவை முதலியவைகளை வசூல் செய்து கொண்டு வருகிறார்கள். நிலுவை லிஸ்டுகளை சென்ட்ரல் பாங்கிகள் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்திராருக்கு அனுப்புகின்றன. அவர் இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு அவைகளை வசூலிக்கிறார். ஆகையினால் முன் சொன்ன உத்தரவை இந்த வருஷம் அமுல் செய்யக்கூடாது. சென்ட்ரல் பாங்கிகளுக்கு வருஷா வருஷம் நல்ல லாபம் கிடைத்தாலொழிய மற்றப்படி அவைகள் முன்னுக்கு வரமாட்டா. ஆகையால் லாபவிதம் குறைவதாயிருந்தால் ஷேர் ஹோல்டர்களின் தொகையும் குறைந்துபோகுமென்பதிற் சந்தேகமில்லை. இலாபடிவிடெண்டு 100-க்கு 9 விதத்துக்குமேல் கொண்டுபோகக் கூடாதென்ற உத்தரவை அநேக பாங்கிகள் ஏற்கெனவே அனுசரித்து வருகின்றன. அப்படியிருக்கும் பொழுது இன்னும்அவ்விதத்தைக் குறைக்கப்பார்ப்பது நல்லதல்ல. அதனால் கெடுதலே ஏற்படும்.

## கூட்டு முயற்சிக்காரரின் பொறுப்பு.

இதுவரையில் கூட்டுமுயற்சி அநேகமாய் கவர்ன்மெண்டின் கையிலிருந்துகொண்டு வந்திருக்கிறது. ஆனால் இனிமேல கூட்டுமுயற்சி சபைகளே சகல காரியங்களையும் நடவடிக்கைகளையும் நடத்திக்கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. சபைகளின் மேலேயே சகல பொறுப்புக்களையும் போட்டு விடலாமென்று கவர்ன்மெண்டுக்கும் நோக்கமாயிருக்கிறது. ஆகையால் கூட்டுச்சபைகளில் சேர்ந்திருப்பவர்கள் இனிமேல் கவலையற்று இருக்கமுடியாது. காரியத்தில் கண்ணாயிருக்கவேண்டும். சபைகள் இதுவரைக்கும் இருந்ததுபோலத் தனித்தனியாய் வேலை நடத்தினால் ஒன்றும் மாளாது. பல சபைகள் ஒன்றாய்க்கூடி உழைப்பதே இலாபம். அல்லது, ஏதாவது ஒரு சென்ட்ரல் பாங்கியின் கீழ்கூடி வேலைசெய்வது நல்லது. சென்ட்ரல்பாங்கிகளின்

உதவியினாலேயே கூட்டுசபைகள் இதுவரைக்கும் நிலைத்திருக்கின்றன, சென்ட்ரல்பாங்கிகளுக்கும் இனிமேல் பல பொறுப்புக்கள் உண்டாகும். ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற கூட்டுச் சபைகளைக்கொண்டு செலுத்தவேண்டிய கடனும், புதிதாய்க் கூட்டுச்சபைகளை ஏற்படுத்தவேண்டிய பாரமும், சென்ட்றல் பாங்கிகளைப் பொறுத்தவைகளே யாகும். மேலும், ஒவ்வொரு சபைகளின் கணக்குவழக்குகளையும் சட்டதிட்டங்களையும் மேல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் அவைகளின் கடனாகும். இதற்கு நல்ல லாயக்கும் யோக்கியதையுமுடைய சிப்பந்திகளும் உத்தியோகஸ்தர்களும் ஒவ்வொரு சென்ட்றல் பாங்கிகளிலுமிருக்க வேண்டியது.

## விவசாயக் கூட்டு.

கடைசியாய் நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுஉண்டு. இப்பொழுது கூட்டுச்சபைகள் அநேகமாய்க் கடன் கொடுக்கும் நாணயச் சபைகளாயிருந்து கொண்டிருக்கின்றன. மற்ற விஷயங்களை பெரும்பாலும் கவனிப்பதில்லை. ஆனால் அவைகளில் மெம்பர்களாயிருப்பவர்கள் அநேகமாய் விவசாயிகள் ஆனபடியால் விவசாயிகளுக்கு வேண்டிய எரு, உழுவதற்குரிய கருவிகள் முதலியவைகளைக் கூட்டாக வாங்கிக்கொள்ளுதல், கூட்டாக விளைவுப் பொருள்கள் விற்கிரயம் செய்தல், முதலியவேலைகளை மேற்கொண்டு நடத்தினால் அதனால் மெம்பர்களுக்கு அதிக நன்மைவிளையும். தற்பொழுது சிற்சில சபைகளிற்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு நடத்துகிறார்கள். மற்றச்சபைகளும் அப்படியே செய்வது மிகவும் நல்லது. சகல கூட்டுநாணயச் சபைகளும் இப்படி நடவடிக்கை நடத்துவதாயிருந்தால் சென்ட்றல் பாங்கிகள் எரு, விதை, உழக்கருவி முதலியவைகளை மொத்தக் கிரயத்துக்கு வாங்கிக் கூட்டுச்சபைகளுக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்யவேண்டி நேரிடும். அதுவுந்தவிர, விளைவுப் பொருள்களைத் தரகர்களுடைய தயவை எதிர்பார்க்காமல் நல்ல இலாபம் வைத்து மொத்தக்கிரயத்துக்கு விற்பனை செய்துகொடுக்கக்கூடும்.

## முடிவுரை.

நல்ல கூட்டுச்சபையென்று எதைச் சொல்லலாம் என்றால் எந்தச் சபையில் மெம்பர்கள் எல்லோரும் சேர்ந்து சபையின் காரியாதிகளைச் செவ்வையாய் நடத்துகிறார்களோ அதையே நல்ல கூட்டுச்சபையென்று சொல்லவேண்டும். ஒவ்வொரு சபைகளில் சிற்சில குறைவுகள் இருப்பதினால் சபை ஒன்றுக்கும் உதவாதென்று சொல்லுவது சரியல்ல. எப்பேர்ப்பட்ட சபையானாலும் அதிலும் ஏதாவது ஒரு



குறைவு இல்லாமல் போகாது. களைகள் இருப்பதால், நிலங்கள் பிரயோஜனமில்லையென்று சொல்லுவார் இல்லையே. குறைகள் இருப்பதால் சபைகள் வீண் என்று சொல்லுவது பொருந்துமா? சபையோர் எல்லோரும் சபைக்காரியாதிகளைச் சரியாக நடத்தினால் ஏன் குறைவுகள் இருக்கும்? களையெடுத்தபிறகு நிலத்தில் களைகள் அற்றுப்போகுமன்றோ? ஆகையால் சபையோர் சகலரும் உஷாராக மேல்பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் முக்கியம். அநேக கூட்டுச்சபைகள் கிளம்பிவிட்டால் அதனால் கூட்டுமுயற்சி பலப்பட்டுவிட்டதாக ஒருவரும் நினைக்கக்கூடாது. ஒன்றுக்கும் உதவாத பலசபைகள் அதிவிரைவாய் ஏற்படுவதைவிட நல்ல சபைகள் கொஞ்சமாக ஏற்பட்டாலும் அதுவேபோதும். ஆகையால் புதிது, புதிதாய்க்கூட்டுச்சபைகளை ஏற்படுத்துவதை விட ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற ஒவ்வொரு கூட்டுச் சபைகளையும் சீர்திருத்தி பலப்படுத்தி பக்குவமாக்கி உதவாக்கரையான சபைகளை யெல்லாம் ஒழித்துவிட வேண்டியதே நமது கடமை. என்னை இந்தக் கான்பரன்சில் அக்கிராசனம் வகிக்கும்படி நீங்கள் தெரிந்துகொண்டதற்காக மறுபடியும் நான் உங்களெல்லோருக்கும் மனப்பூர்வமாக வந்தனமளிக்கிறேன்.

## தீர்மானங்கள்.

பிறகு நிறைவேற்றப்பட்ட முக்கியமான தீர்மானங்களாவன:—

1. கூட்டுச்சபைகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுக்காமலிருக்கும் நபர்களிடமிருந்தும் ஷை கடன்களை வியாச்சியம்போட்டு வாங்கிக்கொள்ளுவதற்குக் கவர்ன்மெண்டார் சில விசேஷ சௌகரியங்களைச் செய்யவேண்டும். அதற்கு முதலாவது கூட்டு சபைகள் கொண்டுவருகிற கேசுகளில் சிவில் புரசீஜர் கோடு 37-வது செக்ஷனில்கண்ட திட்டங்களின்படி பிராது நடத்தும்படி விடவேண்டும். இரண்டாவது கோர்ட்டாருடைய டிக்கிரியை (அதாவது தீர்ப்பை) பிரதிவாதிகளின் மேல்கொண்டு செலுத்துமுன் நோட்டிஸ் கொடுக்கவேண்டியது அவசியமில்லையென்று உத்தரவு செய்யவேண்டும். மூன்றாவது, வியாச்சியம் போட்ட நாளிலிருந்து எப்பொழுது பணம் மீளுகிறதோ அந்த நாள் வரைக்கும் ஆதியில் பேசின வட்டிப்படிக்குக் கணக்குப்போட்டு வாங்கிக்கொள்ளும்படி தீர்ப்பு செய்யவேண்டும்.

2. இந்தியா கவர்ன்மெண்டாரின் நிலவிருத்திச் சட்டம் என்ற (லாண்டு இம்புருவ்மெண்டு ஆக்டுப்படிக்கும்) விவசாயிகளின் சட்டம் என்ற அகிரிகல்சரிஸ்ட் ஆக்டுப்படிக்கும், கவர்மெண்டார் கிராமக் கூட்டுச் சபைகளுக்கும் கடன் கொடுக்கவேண்டும்.

3. கூட்டுச் சபைகளைத் தவிர்த்துத் தனிப்பட்ட நபர்களை சென்ட்ரல் பாங்கிகளில் ஷேர்ஹோல்டர்களாகச் சேர்த்துக்கொள்ளும் பட்சத்தில் இன்ன விதத்துக்குக் குறையாமல் அவர்களுக்கு டிவிடெண்டு கொடுக்கவேண்டு மென்பதைக் கவர்மெண்டார் தீர்மானிக்க வேண்டும்.

4. இந்த (கிருஷ்ணா) ஜில்லாவில் ஈரப்பரிங்கான அசௌகரியங்களை உத்தேசித்து டெல்டா கிராமங்களில் கூட்டுச்சபை செய்வதற்கும், கூட்டுச்சபைகளை ஸ்தாபிப்பதற்கும் கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தவேண்டும்.

5. கிருஷ்ணாஜில்லாவிலுள்ள சகல கூட்டுச்சபைகளும் பாங்கிகளும், கிருஷ்ணா டிஸ்டிரிக்டு கோ ஆபரேடிவ் பாங்கியில் மெம்பர்களாய்ச் சேர்ந்துகொள்ள வேண்டும்.

6. நெசவு, சாயம், பொம்மை வேலை முதலிய நாட்டுக் கைத்தொழில்கள் நசித்துப்போய் விட்டபடியால் இம்பீரியல் கோ ஆபரேஷன் கமிட்டியாரின் சிபாரிசுப்படிக்கு அந்தக் கைத்தொழில்களை மறுபடியும் விருத்திக்குக் கொண்டுவருவதற்குக் கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமிக்கவேண்டும்.

7. கூட்டுமுயற்சியைப்பற்றிப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளும் படிக்கவேண்டிய காலம் வந்துவிட்டபடியால், கல்வி இலாகா அதிகாரிகள் ஸெக்கண்டரி ஸ்கூல்களில் மற்றப் பாடங்களோடும் கோ ஆபரேஷனிலும் கல்வி கற்பிக்கவேண்டும.

8. கடன் கொடுக்கும் சபைகளுக்கிடையிலுள்ள சம்பந்தத்தையும், டிபாசிடு பெறக்கூடிய இடங்களையும் டிபாஸிட்டுகளுக்குரிய வட்டி விகிதங்களையும், மாகாணபாங்கி ஏற்படுத்தவேண்டிய விஷயத்தையும், க்ஷேமநிதியைப்பற்றிய விஷயங்களையும் தெளிவாக நிர்ணயிப்பதற்கு உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும் கலந்த ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டும்.

9. கூட்டுச்சபைகளின் சட்டதிட்டங்களையும் நடவடிக்கைகளையும் ஒழுங்குகளையும் மாற்ற ஆலோசிக்குமுன் கவர்ன்மெண்டார் கூட்டுச்சபைகளின் யோசனையைக் கேட்க வேண்டும்.

161417.

# விளம்பர விகிதங்கள்.


கூட்டுறவு சங்கங்களுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... ரூ. | 15 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குட் பிரதி ஒன்றுக்கு. |
| அரைப்பக்கம் | ... ... ,, | 10 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... ,, | 7 | 0 | 0 | ,, ,, |

மற்றவர்களுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ... ... ரூ. | 20 | 0 | 0 | வருஷம் ஒன்றுக்குட் பிரதி ஒன்றுக்கு |
| அரைப்பக்கம் | ... ... ,, | 12 | 0 | 0 | ,, ,, |
| கால்பக்கம் | ... ... ,, | 8 | 9 | 0 | ,, ,, |


# சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

சந்தாதார்கள் தயைகூர்ந்து இச்சம்புடன் ஏழுக்குள்ள சந்தாவை பாக்கியுடன் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தா செலுத்தப்படாமலிருந்தால் அடுத்த பிரதியின் புஸ்தகமானது வி. பி. மூலமாயனுப்பப்படும்.

இப்படிக்கு,
காரியதரிசி,
மதராஸ் பிரொவின்ஷியல் கோவாப்ரேடிவ்
யூனியன் ஆபீஸ்,